அரசியலமைப்புச்சட்டம் - I

Constitutional Law - I

பி.ஆர்.சேனாதிராஜன்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்

அரசியலமைப்புச் சட்டம் - I

[பின்னணி, தத்துவம், அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள்]

Constitutional Law - I

[Background, Philosophy, Fundamental Rights & Duties]

தமிழக அரசு

தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசை

மும்முறை வென்றெடுத்த சட்டத்தமிழாய்வு அறிஞர்

பி.ஆர்.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

4-ஆம் பதிப்பு

அரசியலமைப்புச்சட்டம் I - பாடத்திட்டம்
அரசியலமைப்பின் பின்னணி, தத்துவம் மற்றும் அடிப்படை உரிமைகள்
அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் மற்றும் அடிப்படைக்கடமைகள்
பிரச்சனைகளும் தீர்வுகளும்
தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள்
அரசியலமைப்புச்சட்டம் I தேர்வை எப்படி எழுத வேண்டும் ? – சில குறிப்புகள்
தேர்வில் வினாக்கள் அதிகம் கேட்கப்படும் பகுதிகள் – ஒரு கண்ணோட்டம்
புதிய நாடாளுமன்றம் – வரலாறு, கட்டமைப்பு மற்றும் படக்காட்சிகள்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழக அரசின் பரிசு பெற்ற சிறந்த சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636007.

இயங்கலையில் (ஆன்லைன்)

நூல்கள் வாங்க : www.shripathirajanpublishers.com

நான்காம் பதிப்பு : செப்டம்பர், 2023
பதிப்புரிமை © : பி.ஆர்.ஜெயராஜன்

இது ஒரு ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ் தயாரிப்பு

விலை : ரூ. 495-00 ISBN : 978-81-953292-1-2

- ☐ **Title** : **Arasiyalamaippu Sattam I [Constitutional Law I]**
- ☐ **Author** : P.R.Jayarajan, Advocate
- ☐ **Language** : TAMIL
- ☐ **Edition** : First Edition, February 2011
  Second Edition, April 2014
  Third Edition, June 2018
  Fourth Edition, September 2023
- ☐ **Pages** : 514
- ☐ **Size** : 22 x 14 c.m. (Demy)
- ☐ **Fonts** : 11 pts.
- ☐ **Paper used** : 18.1 Kg.
- ☐ **Binding** : PB
- ☐ **Published by** : **Shri Pathi Rajan Publishers,**
  69/42-C, Meenakshi Nagar,
  Hasthampatty, **SALEM - 636 007.**
- ☐ **Price** : **₹ 495-00**
- ☐ **Shop online at :** **www.shripathirajanpublishers.com**

அச்சுப்பணி:

எழுத்தாக்கம் : ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்,
69/42-சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி,
சேலம் - 636 007. தொலைப்பேசி : 0427-2403402

நூலாக்கம் : ஸ்ரீ அபிராமி ஆஃப்செட்,
6/1ஏ, துரைசாமி நகர், பள்ளப்பட்டி, சேலம் 636 009.

பொருளடக்கம்

பகுதி 1

அத்தியாயம் 1

அரசியலமைப்பு - வரையறை - அரசியலமைப்பு சட்டம் - அரசியலமைப்புகளின் வகைப்பாடு - அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகமுறைச் சட்டத்திற்கிடையிலான வேறுபாடுகள்
[Constitution – Definition – Constitutional Law – Classification of Constitutions – Difference between Constitutional Law and Administrative Law]

(i) அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்புச் சட்டம் – வரையறை 1
[Definition of Constitution and Constitutional Law]
- அரசியலமைப்பு – வரையறை 2
  - அறிஞர் ஆஸ்டின் 2
  - அறிஞர் வேட் மற்றும் பிலிப்ஸ் 2
  - சர் ஜேம்ஸ் மக்கின்டோஷ் 2
  - அறிஞர் லீவிஸ் 3
  - அறிஞர் கில்கிறைஸ்ட் 3
  - அறிஞர் சி.எஃப்.ஸ்டிராங் 3
- அரசியலமைப்புச்சட்டம் – வரையறை 4
  - அறிஞர் டைசி 4
  - அறிஞர் ஹிப்பெர்ட் 4
- அரசியலமைப்பு, அரசியலமைப்புச்சட்டத்திலிருந்து வேறுபடும் விதம் 5

(ii) அரசியலமைப்புகளின் வகைப்பாடுகள் 7
[Classification of Constitutions]
- எழுதப்பெற்ற அரசியலமைப்பு (Written Constitution) 8
- எழுதப்பெறாத அரசியலமைப்பு (Unwritten Constitution) 10
- நெகிழ்வற்ற அரசியலமைப்பு (Rigid Constitution) 16
- நெகிழ்வுடைய அரசியலமைப்பு (Flexible Constitution) 18
- ஒற்றையாட்சி அரசியலமைப்பு (Unitary Constitution) 20
- கூட்டாட்சி அரசியலமைப்பு (Federal Constitution) 22

(iii) அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகமுறைச் சட்டத்திற்கிடையிலான வேறுபாடு 24
[Difference between Constitutional Law and Administrative Law]

அத்தியாயம் 2

வரலாற்றுப் பின்னணி - இந்திய அரசியலமைப்பை உருவாக்குதல்
[Historical Background - Framing of the Constitution of India]

– வரலாற்றுப் பின்னணி மற்றும் உருவாக்குதல் 27

அத்தியாயம் 3

இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள் - இந்திய அரசியலமைப்பின் தன்மை
[Outstanding features of the Indian Constitution - Nature of the Indian Constitution]

(i) இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள் 37
[Outstanding features of the Indian Constitution]
– உலகிலேயே மிக நீளமான அரசியலமைப்பு 37
– பல நாட்டு அரசியலமைப்புகளின் கலப்பு 38
– இறையாண்மை வாய்ந்த நாடு 38
– மக்களாட்சி கொள்கை 38
– நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய தன்மையின் கலப்பு 38
– கூட்டாட்சிப்போல்வு 39
– அடிப்படை உரிமைகள் 39
– அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் 39
– நாடாளுமன்ற முறை அரசாங்கம் 39
– சுதந்திரமான நீதித்துறை 39
– சமயச்சார்பற்ற நாடு 40
– உரிய வயதடைந்தோருக்கு ஒட்டுரிமை 40
– ஒற்றைக்குடியுரிமை 40
– சில வகுப்பினருக்கு தனிப்பட்ட சட்ட வகைமுறைகள் 40
– அடிப்படைக்கடமைகள் 40

(ii) இந்திய அரசியலமைப்பின் தன்மை 41
[Nature of Indian Constitution]

அத்தியாயம் 4

அரசியலமைப்பின் தத்துவம் -
முகப்புரை மற்றும் நோக்கம்
[The Philosophy of the Constitution - Preamble and the Objective Resolution]

(i) அரசியலமைப்பின் தத்துவம் **57**
[The Philosophy of the Constitution]

- (அ) நாடாளுமன்ற இறையாண்மை 57
[Parliamentary Sovereignty]
- (ஆ) அரசியலமைப்பின் மேலமை நிலை 61
[Constitutional Supremacy]
- (இ) நீதித்துறையின் உச்ச நிலை 63
[Judicial Supremacy]
- (ஈ) அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு 66
[Theory of Separation of Powers]
- (உ) சட்டத்தின் ஆட்சி மற்றும் ஆட்சித்துறைச் சட்டம் 74
[Rule of Law and Droit Administratif]
- (ஊ) அரசியலமைப்புகளின் மரபுகள் 82
[Conventions of the Constitutions]
- (எ) அரசியலமைப்புகளுக்கு பொருந்தக் கூடிய தனிச்சிறப்பு பொருள் விளக்க விதிகள் 89
[Special Rules of Interpretation applicable to Constitutions]
- (ஏ) அரசியலமைப்பை திருத்தும் நடைமுறை 96
[Amending Process of Constitution]

(ii) முகப்புரை மற்றும் நோக்கம் **100**
[Preamble and the Objective Resolution]

- முகப்புரையின் பொருள் 101
- முகப்புரையின் முக்கியத்துவம் 102
- முகப்புரையின் நோக்கங்கள் 102
- இந்திய அரசியலமைப்புச்சட்டத்தின் முகப்புரை 103
- முகப்புரையின் சட்டத்தன்மை 104

- In Re Berubari Case 104
- Kesavanand Bharathi v. State of Kerala 105
- S.R.Bommai v. Union of India 105

– முகப்புரையை திருத்தம் செய்ய இயலுமா? 105
– 42–வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்திற்கு பிறகு முகப்புரை 106
– முகப்புரையின் நோக்கங்கள் இந்திய அரசியலமைப்பில் இடம் பெற்றுள்ள விதம் 107

அத்தியாயம் 5

ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும்
[The Union and its Territory]

– இந்தியாவின் ஆட்சி எல்லை – 35 மற்றும் 36–வது சட்டத்திருத்தம் – புதிய மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் எல்லைகளை மாற்றுதல் முதலியன – மாநிலங்களை மறுசீரமைப்பு செய்யும் நடைமுறை – எல்லையை மாற்றிக் கொடுத்தல் 110

[Territory of India - 35th, 36th Amendment - Formation of New States and Alteration of Boundaries, etc. - Procedure for reorganisation of States - Cession of Territory]

– இந்திய எல்லையின் அளாவுகையும் பரப்பும் 112
– இந்திய ஒன்றியத்தில் ஒரு புதிய மாநிலத்தைச் சேர்க்க அல்லது நிறுவ முடியுமா? 113
– 35–வது அரசியலமைப்பு திருத்தம் 114
– 36–வது அரசியலமைப்பு திருத்தம் 115
– இந்திய ஒன்றியத்தில் இருக்கும் மாநிலங்களின் பரப்புகள், எல்லைகள் மற்றும் பெயரை மாற்ற முடியுமா? 115
– இந்திய எல்லையின் ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்கு மாற்றலாமா? 115

அத்தியாயம் 6

குடியுரிமை (அல்லது) குடிமை
[Citizenship]

– பொருள் – இந்தியக் குடியுரிமை – 1955–ஆம் ஆண்டின் இந்திய குடியுரிமை சட்டத்தின் கீழ் குடியுரிமை – இந்தியக் குடியுரிமையை இழத்தல் 120

[Meaning - Citizenship of India - Citizenship under the Citizenship Act, 1955 - Loss of Indian Citizenship]

- குடியுரிமை என்பது யாது? குடிமகன் என்பவன் யார்? 122
- இந்தியக்குடியுரிமையை அடையும் முறைகள் 123
  - இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடங்கும் பொழுது 124
  - இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடங்கிய பின்னர் 128
- ஒரு நிறுவனம் ஒரு குடிமகனாக ஷரத்து 19–இன் கீழான பலன்களைப்பெற முடியுமா? 132

அத்தியாயம் 7

அடிப்படை உரிமைகள்
[Fundamental Rights]

- பொதுவான தனி நபர் உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் – அடிப்படை உரிமைகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சி – அடிப்படை உரிமைகளுக்கும் அரசியலமைப்பின் பிற வகைமுறைகளால் பெறப்பட்ட உரிமைகளுக்குமிடையிலான வேறுபாடு – அடிப்படை உரிமைகளின் வகைப்பாடு 135
  [General Individual Rights and Fundamental Rights - Origin and Development of Fundamental Rights - Difference between Fundamental Rights and Rights secured by other provisions of the Constitution - Classification of Fundamental Rights]
- இங்கிலாந்து மற்றும் அமெரிக்க அய்க்கிய நாடுகளில் அடிப்படை உரிமைகள் 142
  [Fundamental Rights in England and in the U.S.A.]
- அடிப்படை உரிமைகளின் இடை நிறுத்தம் 144
  [Suspension of Fundamental Rights]
- 'அரசு' என்பதன் வரையறை 146
  [Definition of 'State']
  - 'அரசு' என்ற சொல்லில் எவை அடங்கும்? – சரத்து 12 கூறும் வரையறை 148
  - 'அரசு' – விளக்கம் 149
  - அதிகார அமைப்புகள் – விளக்கம் 149
  - 'அரசு' என்ற சொல்லில் நீதித்துறை சேர்க்கப்பட்டுள்ளதா? 158

– அடிப்படை உரிமைகளுடன் முரண்படும் சட்டங்கள் 161
[Laws inconsistent with of Fundamental Rights]

- சரத்து 13(1) – அரசியலமைப்புச்சட்டம் தொடங்குவதற்கு முன்னால் இயற்றப்பட்ட சட்டங்களின் விளைவு 162
- சரத்து 13(2) – அரசியலமைப்புச்சட்டம் தொடங்கப்பட்ட பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களின் விளைவு 162
- சரத்து 13(3) – 'சட்டம்' மற்றும் 'அமலில் உள்ள சட்டம்' ஆகிய பதங்களுக்குண்டான வரையறை 163
- சரத்து 13(4) – அரசியலமைப்பு சட்ட திருத்தத்திற்குப் பொருந்தாது 163
- ஒளிமறைப்புக்கோட்பாடு (Doctrine of Eclipse) 164
- பிரிக்கத்தக்கதன்மைக்கோட்பாடு (Doctrine of Severability) 167
- வரம்பு மீறல் கோட்பாடு (Doctrine of Ultravires) 169
- தளர்த்தீடு கோட்பாடு (Doctrine of Waiver) 170

– நீதிமுறை மறுசீராய்வு கோட்பாடு 171
[Doctrine of Judicial Review]

- நீதிமுறை மறுசீராய்வு கோட்பாட்டின் விளக்கம் 172
- நீதிமுறை மறுசீராய்வு கோட்பாடு தோன்றிய விதம் 173
  - அமெரிக்க ஐக்கிய நாடுகளில் 173
  - பிரிட்டனில் 174
  - இந்தியாவில் 174
- நீதிமுறை மறுசீராய்வு கோட்பாட்டின் மீதான தடை 176
- அரசியலமைப்பு சட்டதிருத்தங்களை உச்ச நீதிமன்றம் மறுசீராய்வு செய்ய முடியுமா? 177

அத்தியாயம் 8

அடிப்படை உரிமைகள் - இந்திய அரசியலமைப்பின் பகுதி III
[Fundamental Rights - Part III of the Constitution of India]

– சமத்துவ உரிமை **181**
[Right to Equality]

- (அ) சட்டத்தின் முன் சமம் 181
  [Equality before Law]
- (ஆ) மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டலாகாது 193
  [No Discrimination on grounds of Religion, Race, Caste, Sex, Place of birth etc.]

- (இ) பொதுப்பணியில் சம வாய்ப்பு [Equality of Opportunity in Public Employment] 205
- (ஈ) தீண்டாமை ஒழிப்பு [Abolition of Untouchability] 217
- (உ) பட்டங்கள் ஒழிப்பு [Abolition of Titles] 218

- **சுதந்திரத்திற்கான உரிமை [Right to Freedom]** **220**
  - (அ) ஆறு வகையான சுதந்திர உரிமைகள் [The Six Freedoms] 220
    - பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் (Freedom of Speech and Expression) 229
    - ஆயுதமின்றி அமைதியாக கூடும் சுதந்திரம் (Freedom of Assembly) 245
    - கழகங்கள் அல்லது சங்கங்கள் அமைக்க சுதந்திரம் (Freedom to form Associations or Unions) 246
    - இந்தியா முழுவதும் சென்றுவரும் சுதந்திரம் (சுதந்திரமாக நடமாடும் உரிமை) (Freedom of Movement) 246
    - வசிக்கும் சுதந்திரம் (நாட்டில் தங்கி வாழும் உரிமை) (Freedom of Residence) 248
    - தொழிலாற்றும் மற்றும் வணிகம் செய்யும் சுதந்திரம் (Freedom of Profession, Trade or Business) 248
  - (ஆ) குற்றங்களுக்கான குற்றத்தீர்ப்பளித்தல் குறித்த பாதுகாப்பு [Protection in respect of Conviction for Offences] 252
  - (இ) வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான பாதுகாப்பு [Protection of Life and Personal Liberty] 261
  - (ஈ) சில சூழ்நிலைகளில் கைது செய்தல் மற்றும் சிறை வைத்தலுக்கு எதிரான பாதுகாப்பு 278

[Protection against Arrest and Detention in certain cases]

– (உ) சுரண்டப்படுதலுக்கெதிரான உரிமை 289
[Right against Exploitation]

– (ஊ) சமய (அல்லது) மத சுதந்திர உரிமை 290
[Right to Freedom of Religion]

– (எ) கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமைகள் 299
[Cultural and Educational Rights]

– (ஏ) சில சட்டங்களுக்கு விலக்குகள் 308
[Saving to Certain Laws]

– (ஐ) அரசியலமைப்புரீதியான தீர்வழிகளுக்கு உரிமை 313
[Right to Constitutional Remedies]

– முனைவர் அம்பேத்கர் அவர்களின் கூற்று 314

– ஷரத்து 32 மற்றும் 226–இன் முக்கியத்துவம் 314

– உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பு [Writ Jurisdiction of Supreme Court] 314

– உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பு [Writ Jurisdiction of High Court] 316

– நீதிப்பேராணையின் 5 வகைகள் 325

– ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை [Writ of Habeas Corpus] 325

– செயலுறுத்தும் நீதிப்பேராணை [Writ of Mandamus] 325

– தடையுறுத்தும் நீதிப்பேராணை [Writ of Prohibition] 329

– நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை [Writ of Certiorari] 330

– தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை [Writ of *Quo-warranto*] 330

– பொது நல வழக்கு 335
[Public Interest Litigation - PIL]

அத்தியாயம் 9

அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் [Directive Principles of State Policy]

(i) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளின் நோக்கம் – பரவெல்லை – அவற்றை அடிப்படை உரிமைகளுடன் ஒப்பிடல் – நீதிமுறை விசாரணைக்கு உட்படாத தன்மை – அடிப்படை உரிமைகளுடன் கொண்டுள்ள முரண்பாடு 339
[Object of the Directive - Scope of the Directive - Directive compared with Fundamental Rights - Non-justiciability - Conflict between Fundamental Rights and Directive Principles]

– அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் – வேறுபாடு அல்லது தொடர்பு 343

(ii) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளின் வகைப்பாடு – சமூகப் பொருளாதாரம் – சமூகப் பாதுகாப்பு – சமூக நலம் 348
[Classification of the Directives - Social and Economic Charter - Social Security Charter - Community Welfare Charter] 343

– சமூகம் மற்றும் பொருளாதாரம் 343
– சமூகப்பாதுகாப்பு 343
– சமூக நலம் 344

(iii) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை செயற்படுத்தல் 353
[Implementation of Directives]

அத்தியாயம் 10

அடிப்படைக்கடமைகள் [Fundamental Duties]

– அடிப்படைக் கடமைகளின் தேவை – மூலம் – நிறைவேற்றுதல் 355
[Need for Fundamental Duties - Source of Fundamental Duties - Enforcement of Fundamental Duties]

– அடிப்படைக்கடமைகள் – ஷரத்து 51–A 355
– அடிப்படைக்கடமைகளின் தேவை 357
– அடிப்படைக்கடமைகளின் மூலம் 357
– அடிப்படைக்கடமைகளை நிறைவேற்றுதல் 358
– M.C.Mehta (2) v. Union of India 359

பகுதி 2

பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

360 முதல் 417 வரையிலான பக்கங்களில் 45 பிரச்சனைகளுக்கு தீர்வுகள்

பகுதி 3

வினாத்தாள்கள் [Question Papers]

மூன்றாண்டு சட்டக்கல்வி

1. B.L. Degree Examination, May 2018 419
2. B.L. Degree Examination, November 2018 421
3. B.L. Degree Examination, May 2019 423
4. B.L. Degree Examination, November 2019 426
5. B.L. Degree Examination, January 2019 428
6. B.L. Degree Examination, February 2022 430
7. B.L. Degree Examination, June 2022 433
8. B.L. Degree Examination, December 2022 435
9. B.L. Degree Examination, May 2023 437

ஐந்தாண்டு சட்டக்கல்வி

1. B.L. Degree Examination, May 2018 440
2. B.L. Degree Examination, November 2018 443
3. B.L. Degree Examination, May 2019 445
4. B.L. Degree Examination, November 2019 448
5. B.L. Degree Examination, January 2019 450
6. B.L. Degree Examination, February 2022 453
7. B.L. Degree Examination, June 2022 455
8. B.L. Degree Examination, December 2022 457
9. B.L. Degree Examination, May 2023 460

- அரசியலமைப்புச்சட்டம் I தேர்வை எப்படி எழுத வேண்டும் ? 463
- தேர்வில் வினாக்கள் அதிகம் கேட்கப்படும் மற்றும் கேட்கப்பட அதிகமுள்ள பகுதிகள் – ஒரு கண்ணோட்டம் 465
- புதிய நாடாளுமன்றம் – வரலாறு, கட்டமைப்பு மற்றும் படக்காட்சிகள் 466

சிறு குறிப்புகள்

1.	எழுதப் பெற்ற மற்றும் எழுதப் பெறாத அரசியலமைப்பு [Written and Unwritten Constitution]	8
2.	ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி அரசியலமைப்புகள் [Unitary and Federal Constitutions]	20
3.	நாடாளுமன்ற இறையாண்மை [Parliamentary Sovereignty]	57
4.	அரசியலமைப்பு உச்ச நிலை [Constitutional Supremacy]	61
5.	நீதித்துறையின் உச்ச நிலை [Judicial Supremacy]	63
6.	அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு [Doctrine of Separation of Powers]	66
7.	ஆட்சித்துறைச் சட்டம் [Droit Administratif]	81
8.	அரசியலமைப்பு மரபுகள் [Coventions of the Constitution]	82
9.	அரசியலமைப்பில் முற்போக்கான பொருள் விளக்கம் [Progressive interpretation in Constitution]	89
10.	முகப்புரை [Preamble]	101
11.	அரசமைப்பு சட்ட முகப்புரை [Preamble of the Indian Constitution]	101
12.	புதிய மாநிலங்களை உருவாக்குதல் [Formation of new States]	112
13.	குடியுரிமை [Citizenship]	121
14.	அரசமைப்பு சட்டம் துவங்கியபோது குடியுரிமை [Citizenship at the commencement of the Constitution]	121
15.	உறைவிடம் மூலம் குடியுரிமை [Citizenship by domicile]	122

16.	பிறப்பினால் குடியுரிமை [Citizenship by birth]	122
17.	இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் அடிப்படை உரிமைகள் [Fundamental Rights in England and U.S.A.]	142
18.	அடிப்படை உரிமைகளின் இடை நிறுத்தம் [Suspension of Fundamental Rights]	144
19.	'அரசின்' வரையறை [Definition of 'State']	148
20.	'அரசு' வரையறு [Define 'State']	148
21.	பிரிவு 12–ன்படி 'பிற அதிகாரஅமைப்புகள்' ['Other authority' under Art. 12]	148
22.	ஒளிமறைப்புக் கோட்பாடு [Doctrine of Eclipse]	162
23.	பிரிக்கத்தக்க தன்மைக் கோட்பாடு [Doctrine of Severability]	167
24.	வரம்பு மீறல் கோட்பாடு [Doctrine of Ultravires]	169
25.	நீதிமுறை மறு ஆய்வு [Judicial Review]	171
26.	அரசு வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்டவைகளில் சம உரிமை [Equality of opportunity in matters of public employment]	206
27.	இந்திரா சாவனி எதிர் இந்திய யூனியன் (மண்டல் கமிஷன் வழக்கு) [Indira Sawhney v. Union of India (Mandal Commission Case)]	212
28.	தீண்டாமை ஒழிப்பு [Abolition of untouchability]	217
29.	பட்டங்கள் ஒழிப்பு [Abolition of Titles]	218
30.	தேசிய விருது வழங்குவதில் அரசமைப்புச் சட்டத்தின் செல்லும் தன்மை [Constitutional validity of national awards]	219

31.	நியாயமான கட்டுப்பாடுகள் [Reasonable restrictions]	223
32.	பத்திரிக்கைச் சுதந்திரம் [Freedom of Press]	229
33.	பத்திரிக்கைச் சுதந்திரம் ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும் [Freedom of Press is the back-bone of democracy]	229
34.	தகவல் அறியும் உரிமை [Right to Information]	243
35.	சுதந்திரமாக சென்று வரும் உரிமை [Freedom of Movement]	246
36.	சுதந்திரமாக தங்கி வாழும் உரிமை [Freedom of Residence]	248
37.	பின்நோக்கிச் சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டம் [Expost facto law]	252
38.	இரட்டை இடர் [Double Jeopardy]	255
39.	தன்னைத்தானே குற்றஞ்சாட்டல் [Self-incrimination]	258
40.	சட்டத்தின் உரிய செயல்முறையில் [Due process of law]	262
41.	சட்டத்தால் அமைக்கப்பட்ட வழிவகைகள் [Procedure established by law]	262
42.	தனித்திருப்பு உரிமை [Right to Privacy]	275
43.	கல்விக்கான உரிமை [Right to Education]	276
44.	தடுப்புக் காவல் [Preventive detention]	279
45.	சுரண்டப்படுதலுக்கெதிரான உரிமை [Right against exploitation]	289
46.	மத சுதந்திரம் [Freedom of Religion]	291

47.	சமயச்சார்பின்மை [Secularism]	292
50.	சிறுபான்மையினரின் உரிமைகள் [Minorities rights]	300
51.	சொத்துரிமை [Right to Property]	308
52.	சொத்தெடுப்பு முறை [Eminent Domine]	312
53.	ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை வழக்கு [Habeas Corpus case]	324
54.	செயலுறுத்தும் நீதிப்பேராணை [Writ of Mandamus]	324
55.	தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை [Writ of Quo warranto]	324
56.	இயற்கை நீதிக் கொள்கைகள் [Principles of Natural Justice]	331
57.	பொது நலனுக்கான வழக்கு [Public Interest Litigation]	335
58.	நீதிமன்றம் விறுவிறுப்பாக செயலாற்றும் முறை [Judicial Activism]	338
59.	அரசுக்கு அறிவுறுத்தும் வழிகாட்டு நெறிமுறைகள் [Directive principles of State Policies]	342
60.	வழிகாட்டும் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தல் [Implementation of the directive principles]	353
61.	அடிப்படைக் கடமைகள் [Fundamental Duties]	355
62.	அடிப்படைக் கடமைகளின் மூலம் [Source of Fundamental Duties]	355
63.	அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுதல் [Enforcement o Fundamental Duties]	355

-oOo-

வேறுபடுத்திக்காட்டல்

1.	எழுதப்பெற்ற மற்றும் எழுதப்பெறாத அரசியலமைப்பு [Written and Unwritten Constitution]	8
2.	நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய அரசியலமைப்பு [Rigid constitution and Flexible constitution]	15
3.	அதிகாரப் பிரிவு மற்றும் அதிகாரப்பகிர்ந்தளிப்பு [Separation of Powers and Division of Powers]	73
4.	அடிப்படை உரிமைகள் மற்றும் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் [Fundamental Rights and Directive Principles of State Policy]	346

-o0o-

சுட்டிக்காட்டப்பட்ட வழக்குகளின் பட்டியல்

'A'

A.A.Mulla v. State of Maharashtra 256, 387
A.B.S.K.Sangh (Rly.) v. Union of India 412
A.D.M., Jabalpur v. Shivakant Shukla 327
A.K.Gopalan v. State of Madras 168,175, 221, 263
A.K.Kraipak v. Union of India 78, 333
A.K.Roy v. Union of India 283
A.Periakaruppan v. State of Tamil Nadu 200
A.R.Antulay v. R.S.Nayak 160
A.Raja v. P.Srinivasan 236
Abdul Samad v. State of West Bengal 126, 364
Acharya Jagdishwaranand Avadhuta v. Commissioner of Police, Calcutta 404
Air India v. Nargesh Meerza 190, 372
Ajay Hasia v. Khalid Mujib 153
All Bihar Christian School Association v. State of Bihar 305
All India Station Master's Association v. General Manager, Central Railway 210
Amrit Singh v. State of Punjab 259
Aneeroonisa v. Mahboob 186
Anjali Roy v. State of West Bengal 196
Aruna Roy v. Union of India 107
Arvindar Singh Bagga v. State of U.P. 335
Ashok Kumar Thakur v. Union of India 204, 376
Assam Small Scale Industries Development Corporation Ltd. v. J.D.Pharmaceuticals 155
Atam Prakash v. State of Haryana and others 95

'B'

B.C.P.P. Mazdoor Sangh v. N.T.P.C. 192
Balaji Raghvan v. Union of India 219
Balchand Chorasia v. Union of India 282, 403
BALCO Employees Union (Regd.) v. Union of India 192
Banarsidas v. State of U.P. 207
Bandhu Mukti Morcha v. Union of India 336
Bandu Mukti Morcha v. Union of India 270
Bashesher Nath v. Income Tax Commissioner 170
Basudev v. Mittal 290
Bennet and Coleman & Co. v. Union of India 232
Bennett Coleman and Co. v. Union of India 134, 377

Bhikaji v. State of M.P. 164
Bijoe Emmanuel v. State of Kerala (or) National Anthem Case 230, 378
Bishambhar Dayal Chandra Mohan v. State of U.P. 311
Board of High School and Intermediate Education v. Km. Chitra 78
Bobby Art International v. Om Pal Singh Hoon 238
Brij Bhushan v. State of Delhi 237
Budhan Chaudhary v. State of Bihar 186

'C'

Chameli Singh v. State of U.P. 271
Chief Inspector of Mines v. K.C.Thapper 253
Chintaman Rao v. State of M.P. 250
Chairman, Railway Board v. Chandrima Das 413
Chiranjit Lal v. Union of India 186, 188, 368, 371
Christian Medical College Hospital Employees Union v. Christian Medical College Vellore Association 304
Commissioner, Hindu Religious Endowment v. L.T.Swamiar 298

'D'

D.A.V. College, Bhatinda v. State of Punjab 408
D.C. & G.M. v. Union of India 134
D.K.Basu v. State of West Bengal 285
D.P.Joshi v. State of M.P. 195, 374
D.S.Nakara v. Union of India 106
Deepchand v. State of U.P. 166
Devarajjah v. Padmana 217
Dr. Neelima v. Dean P.G. Studies, A.P. Agriculture University, Hyderabad 203
Dr. Priti Srivasthava v. State of Madhya Pradesh 203

'E'

E.P.Royappa v. Tamil Nadu 189
Electricity Board, Rajasthan v. Mohan Lal 150, 366
Excel Wear v. Union of India 106
Excel Wear v. Union of India 251
Express News Papers v. Union of India 232

'F'

Francis Coralie v. Union Territory of Delhi 269
Frank Anthony Public School Employees Association v. Union of India 304

'G'

G.Bassi Reddy v. International Crops Research Institute 154
Gayathri Devi Bansari v. State of Orissa 197

General Manager, Kisan Sahkari Chini Mills Ltd., Sultanpur, U.P. v. Satrughan Nishad 154
Gian Kaur v. State of Punjab 395
Golak Nath vs. State of Punjab 9, 108, 177
Gulam Sarvar v. Union of India 319

'I'

In Re Berubari Case (or) In Re Berubari Union and Exchange of Enclaves Case 104, 109, 117, 362
In re Delhi Laws Act, 1950 72
In re Kerala Education Bill 78, 85, 175, 178, 302, 347
Indira Sawhney v. Union of India (or) Mandal Commission Case 202, 204, 208, 212

'J'

Javed v. State of Maharashtra 394
Jitendra Panchal v. Intelligence Officer, N.C.B. 257
Jogindar Kumar v. State of U.P. 284

'K'

K.A.Abbas v. Union of India 237
K.K.Kochuni v. State of Madras 322
K.S.Jayasree v. State of Kerala 201
Kamaladevi v. State of Punjab 327
Kedar Nath v. State of West Bengal 253
Kesavanand Bharathi v. State of Kerala 92, 105, 164, 175, 177
Kharak Singh v. State of Madhya Pradesh 270, 392
Khatri v. State of Bihar 78
Kishori v. Union of India 210

'L'

Leo Roy v. Superintendent, District Jail 256
Lingappa v. State of Maharashtra 108
Lowell v. Griffin 229
Lt. Governor of Delhi v. K.Sodlu 157

'M'

M.C.Mehta (2) v. Union of India 359
M.C.Metha v. Union of India 271, 334, 337, 417
M.H.Quarashi v. State of Bihar 249, 294, 347
M.K.Acharaya v. C.M.D.W.B.S.E. Distribution Co. Ltd., 274
M.P.Sharma v. Satish Chandra 259

M.R.Balaji v. State of Mysore 199
Madras City Wine Merchants Assn. v. State of T.N. 372
Magbhool Husain v. State of Bombay 256, 386, 389
Mahendra Lal Jain v. State of U.P. 166
Marbury v. Madison 173
Meera Kanwaria v. Sunita 203
Menaka Gandhi v. Union of India 190, 265, 311, 401
Minarva Mills v. Union of India 179, 348
Minarva Talkis Banglore v. State of Karnataka 383
Mohd. Dastgir v. State of Madras 390
Mohd. Yakub v. State of J & K 367
Motor General Traders v. State of A.P. 168
Mr. 'X' v. Hospital 'Z' 276
Muthiah v. Income Tax Commissioner 170

'N'

N.Aditya v. Travancore Dewaswom Board 407
N.B.Khare v. State of Delhi 247
Nageshwara Rao v. Principal, Medical College 301
Nainsukhdas v. State of U.P. 196
Nandini Satpathi v. P.L.Dhani 259
Naresh Sridhar Mirjakar v. State of Maharashtra 159
Nashirwan v. State of M.P. 250
Naval v. Union of India 274
Nihal v. Rambai 290

'O'

Odyssy Communication Pvt. Ltd. v. Lokvidayan Sanghatana 233
Olga Tellis v. Bombay Municipal Corporation 270

'P'

P.K.Subramanian v. Secretary to Govt. of Tamil Nadu 251
P.Rathinam v. Union of India 271, 395
Paramanada Katara v. Union of India 273, 400
People's Union for Civil Liberties v. Union of India
(Phone Tapping Case) 236, 276, 335
People's Union for Democratic Rights v. Union of India 218
Prabha Dutt v. Union of India 233
Printers (Mysore) Ltd. v. Asst. Commercial Tax Officer 380
Punjab Water Supply and Sewerage Board v. Ranjodh Singh 156

'R'

R.C.Cooper v. Union of India (or) Bank Nationalisation Case 134, 189, 250, 377

R.Gandhi v. Union of India 311
R.M.D.C. v. Union of India 169
R.Rajagopal v. State of Tamil Nadu 234, 379
Rajasthan v. Pratap Singh 195
Rajneesh Kapoor v. Union of India 247
Ram Jawaya v. State of Punjab 72
Ram Krishna Singh v. State of Mysore 199
Ramana Dayaram Shetty v. The International Airport Authority of India (or) Airport Authority's Case 152
Ramkrishna Dalmia v. Justice Tendolkar 187
Randir Singh v. Union of India 211
Ratanlal v. State of Punjab 254, 384
Romesh Thapper v. State of Madras 169, 229, 231
Rudal Shah v. State of Bihar 335, 416

'S'

S.G.Jaisinghani v. Union of India 78
S.R.Bommai v. Union of India 105, 107
Saifuddin Sahib v. State of Bombay 296
Sareetha v. Venkata Subbaiah 396
Saroj Rani v. Sudarshan Kumar 399
Secretary, Ministry of I & B v. Cricket Association of Bengal (CAB) 235
Sheela Bose v. State of Maharashtra 326
Sher Singh v. State of Pubjab 393
Shiek Hussain v. Shiek Mohammad 195
Sidhrajbhai v. State of Gujarat 303
Smt. Harvinder Kaur v. Harmander Singh 398
Som Prakash v. Union of India 153
Sri Kona Seema Co-operative Central Bank Ltd. v. N.Seetharama Raju 154
St. Stephen's College, etc. v. University of Delhi 302
St. Xavier's College v. State of Gujarat 303, 409
State of A.P. v. U.S.V. Balaram 201
State of Assam v. Barak Upatyaka D.V.Karmchari Sansthan 157
State of Bihar v. Amar Singh 126, 363
State of Bihar v. Kameshwar Singh 346
State of Bombay v. Bombay Educational Society 301, 408
State of Bombay v. F.N.Balsara 168, 188
State of Gujarat v. Sri Ambika Mills 167
State of Haryana v. Rajpal Sharma 208
State of Haryana v. Tilak Raj 208
State of Karnataka v. Appa Balu Ingale 219
State of M.P. v. Mandawara 328
State of Madras v. Chenpakam Durairajan 198, 301, 345, 346

State of Maharashtra v. Man Singh 176
State of Maharashtra v. Manubhai Pragaji Vashi 192
State of Uttar Pradesh v. Kaushalya 247
State of West Bengal v. Union of India 52
State Trading Corporation of India v. Commercial Tax Officer 133
State v. M.Krishna Mohan 260
Sukhdev Singh v. Bhagatram 151
Suneel Jatley v. State of Haryana 191
Suneel Jatley v. State of Haryana 202
Surjit Singh Thind v. Kanwaljit Kaur 272
Swapan Kumar Saha v. South Point Montessory High School and others 274

'T'

T.Baral v. Henry An Hoe 254
T.M.A. Pai Foundation v. State of Karnataka 305, 410
T.V.Vatheeswaran v. State of Tamil Nadu 393
Takraj Vasandi v. Union of India 153
Tata Cellular v. Union of India 64, 176
Tata Engineering and Locomotive Co. v. State of Bihar 133, 377
Tribeniben v. State of Gujarat 394

'U'

Ujjambai v. State of U.P. 150
Umesh v. V.N.Singh 151
Union of India v. Dr. Kohali 207
University of Madras v. Santabai 150
Unni Krishnan v. State of A.P. 277

'V'

V.K.Srivastava v. U.P.Rajya Karmachari Kalyan Nigam 155
Venkataraman v. Union of India 386, 387
Venkata Ramana Devaru v. State of Mysore 294
Venkataramana Devaru v. State of Mysore 297
Venkataramna v. State of Madras 210
Vidadala Hari - Nadhaababu v. N.T.Rama Rao 329
Vincent Parikurlangara v. Union of India 270
Virendra v. State of Punjab 237
Vishaka v. State of Rajasthan 273

'Y'

Y.Srinivasa Rao v. J.Veeraiah 191
Yusuf Abdul Azis v. Bombay 196
Yusufalli v. State of Maharashtra 259

பகுதி 1

அத்தியாயம் 1

அரசியலமைப்பு – வரையறை – அரசியலமைப்பு சட்டம் – அரசியலமைப்புகளின் வகைப்பாடு – அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகமுறைச் சட்டத்திற்கிடையிலான வேறுபாடுகள்

[Constitution – Definition – Constitutional Law – Classification of Constitutions – Difference between Constitutional Law and Administrative Law]

(i) அரசியலமைப்பு மற்றும் அரசியலமைப்புச் சட்டம் – வரையறை [Definition of Constitution and Constitutional Law]

1. Define Constitution. How does it differ from Constitutional Law? (அரசியலமைப்பை வரையறு. அரசியலமைப்பு சட்டத்திலிருந்து இது எவ்வாறு வேறுபடுகிறது?)

முன்னுரை:

'Constitution' எனும் ஆங்கிலச் சொல்லுக்கு 'அமைப்பு' என்பது பொருள். ஆனால் அச்சொல் 'உடல் அமைப்பு', 'அரசு அமைப்பு' (அதாவது அரசியலமைப்பு) இரண்டையும் பொதுவாகக் குறிக்கின்றது.

நம் உடலில் பல உறுப்புகள் உள்ளன. இவ்வுறுப்புகளின் இணைந்த இயக்கமே, நம் உடல் நலனுக்கு உறுதி அளிக்கின்றது. அது

போல், அரசு என்ற அமைப்பிற்கும் பல உறுப்புகள் **(Organs)** உள்ளன. பல்வேறு வகையில் அவை செயல்படுகின்றன. அவற்றின் இணைந்த இயக்கமே அரசு என்ற அமைப்பின் அடிப்படை ஆதார மாகின்றது. இவ்வாறு ஆதாரமாக விளங்கும் அரசியலமைப்பின் வரையறையை கண்டால், அரசியலமைப்பின் நிலைப்பாடு மேலும் தெளிவாகும். அரசிலமைப்பிற்கு பல்வேறு சட்ட வல்லுநர்கள் பலவிதமான வரையறைகளைக் கூறியுள்ளனர். அவற்றை எல்லாம் பின்வருமாறு காண்போமா?

அரசியலமைப்பு (Constitution) - வரையறை:

உலகில் பலவித அரசியலமைப்புகள் இருப்பது போலவே, "அரசியலமைப்பு" எனும் சொல்லுக்கும் பலவிதமான வரையறைகள் கொடுக்கப் பட்டுள்ளன. எனினும், இதுகாறும் கூறப்பட்டுள்ள வரையறைகள் சுருக்கமாகவும், தெளிவாகவும் அரசியலமைப்பின் பொருள் செறிந்த தன்மையைப் பற்றிக் கூறவில்லை. அரசியல மைப்பின் பல உறுப்புகளைப் பற்றிச் சட்ட வல்லுநர்கள் **(Jurists)** பொதுவான கருத்துக்களைக் கொண்டுள்ளார்கள்.

பல பழைய சட்ட வல்லுநர்கள் கொடுத்துள்ள வரையறை களின் முக்கியத்துவம் அளவிட முடியாததாகும்.

அறிஞர் ஆஸ்டின் (Austin) அவர்கள், "எக்கோட்பாடுகள் ஆட்சியின் அமைப்பைப் பற்றி வரையறுத்துக் கூறுகின்றனவோ அவைதாம் அரசியலமைப்பு", என்று கூறுகிறார்.

அறிஞர் வேட் மற்றும் பிலிப்ஸ் (Wade and Philips) அவர்கள், "ஒரு நாட்டு அரசாட்சியின் உறுப்புகளின் அடிப்படைத் திட்ட அமைப்பை யும் தலையாய பணிகளையும் வகுத்துக் கூறுகின்ற மற்றும் அந்த உறுப்புகளின் செயல்பாட்டை வழி நடத்திச் செல் வதற்கான கோட்பாடுகளை விளம்புகின்ற சட்டத்தின் தனிச் சிறப்பு அதிகாரம் பெற்ற ஒரு ஆவணம், ஒரு அரசியலமைப்பு எனப்படும்",[1] என்று கூறுகிறார்கள்.

சர் ஜேம்ஸ் மக்கின்டோஷ் (Sir James Mc-Intosh)

1. A Constitution means a document having a special legal sanctity which sets out the frame-work and the principle functions of the organs of the Government of a State and declares the principles governing the operation of those organs - **Wade and Philips, Constitutional Law, p. 1 (4th edn.)**

அவர்கள், "ஆட்சியாளர்களின் உரிமைகளையும், குடிமக்களின் சிறப்பு உரிமை களையும் பற்றி எடுத்துரைக்கும் எழுதப் பெற்ற அல்லது எழுதப் பெறாத கோட்பாடுகளின் தொகுப்பே அரசியல மைப்பு ஆகும்", என்று கூறுகிறார்.

அரசியல் அறிஞர் லீவிஸ் (Lewis) அவர்கள், "அரசியல மைப்பு என்ற சொல் ஒரு சமுதாயத்தின் அல்லது ஓர் அரசின் இறைமை அல்லது முழு உரிமை எவ்வாறு தொகுக்கப் பெற்று பகிர்ந்து கொடுக்கப்படுகிறது என்பதை விளக்கும் சொல்", என்று கூறுகிறார்.

அறிஞர் கில்கிறைஸ்ட் (Gilchrist) அவர்கள், "எந்த கோட் பாடுகளின் தொகுப்பு, அரசு எவ்வாறு அமைக்கப்பட வேண்டும், அரசின் பல உறுப்புகளின் அதிகாரங்கள் எவ்வாறு பகிர்ந்தளிக்கப் பட்டிருக்க வேண்டும், எம்முறையில் அவை செயல்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றி விளக்குகிறதோ அத்தொகுப்பே அரசியலமைப்பு ஆகும்; அது எழுதப்பட்டோ, எழுதப்படாமலோ இருக்கலாம்", என்று கூறுகிறார்.

அறிஞர் சி.எஃப்.ஸ்டராங் [1] **(C.F.Strong)** அவர்கள், "ஆட்சி யாளரின் அதிகாரங்கள் மற்றும் ஆட்சிக்குட்பட்டவர்களின் (குடிமக்கள்) உரிமைகள் ஆகிய இவை இரண்டிற்குமிடையிலான உறவுகள் எவ்வாறு இணக்கப்படுத்தப்பட்டுள்ளன என்பதை விளக்கும் கோட்பாடுகளின் தொகுப்பே, அரசியலமைப்பு ஆகும்", என்று கூறுகிறார்.

மேற்கண்ட வரையறைகளிலிருந்து ஓர் அரசியலமைப்பு, அரசு நிறுவப்பட வேண்டிய முறைகளைப் பற்றியும், அதன் அதிகாரங்களைப் பற்றியும், குடிமக்களின் உரிமைகளைப் பற்றியும், அரசுக்கும் குடிமக்களுக்கு மிடையே உள்ள உறவை விளக்கியும் கூறுகிறது என்பது புலனாகிறது.

உடலுழைப்பிற்கு எவ்வாறு அனைத்து உறுப்புகளும் இன்றியமையாததோ, அவ்வாறே ஒரு அரசு செயல்படுவதற்கு அரசியலமைப்பும் இன்றியமையாததாகும்.

இனி 'அரசியலமைப்பு' என்பது எவ்வாறு 'அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து' வேறுபடுகிறது என்பதற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் வரையறையை நாம் இங்கு காண வேண்டியுள்ளது.

1. C.F.Strong, Modern Political Constitution, p. 10

அரசியலமைப்புச் சட்டம் (Constitutional Law) - வரையறை:

அரசியலமைப்புச் சட்டத்திற்கு திட்ட வட்டமான வரையறை ஏதும் இதுகாறும் கூறப்படவில்லை. எனினும், பொதுவாக அரசாங்கத்தின் தலையாய உறுப்புகளின் (Principle organs) அமைப்பையும், அது ஒன்றுடன் ஒன்று கொண்டுள்ள உறவுகளையும் ஒழுங்குபடுத்துகிற மற்றும் அதன் முக்கிய பணிகளை நிர்ணயிக்கின்ற விதிகள், அரசியலமைப்புச் சட்டம் எனப்படுகிறது. இவ்விதிகள் சட்ட விதிகளாகவும் இருக்கலாம். அதே சமயத்தில் வழக்காறுகளால் ஏற்பட்ட நெறிகளாகவும் இருக்கலாம்.

சட்ட அறிஞர் டைசி (Dicey) அவர்கள், " ஒரு நாட்டின் இறைமை அதிகாரம் (Sovereign power) எவ்வாறு செலுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுக மாகவோ கூறும் விதிகளின் விளைவே, அரசியலமைப்புச் சட்ட மாகும்", என்று வரையறுக் கிறார்.

சட்டவியல் அறிஞர் ஹிப்பெர்ட் (Hibbert) அவர்கள், "இறைமை அதிகாரம் கொண்டவர்களுக்கும் குடிமக்களுக்கும் இடையேயுள்ள உறவு முறையினைக் கூறும் விதிகளைக் கொண்டது அரசியலமைப்புச் சட்டமாகும்", [1] என்று கூறுகிறார்.

பொதுவாக அரசின் தலையாய உறுப்புகள் மூன்று ஆகும். அவை, நிர்வாகத்துறை, சட்டமியற்றுத்துறை மற்றும் நீதித்துறை ஆகும்.



எனவே, ஓர் அரசின் மேற்படி மூன்று தலையாய உறுப்பு களைப் பற்றியும் அவற்றின் செயற்பாடு பற்றியும் விதிகளை தொகுத்

1. Constitutional Law is the body of rules governing the relation between the sovereign and his subjects and the different parts of the sovereign body - **Hibert in his "Jurisprudence"**

துக் கூறும் ஆதார நெறிமுறைகளையே, அரசியலமைப்புச் சட்டம் என்று கூறலாம். சற்று விளக்கமாகக் கூறினால், ஒரு நாட்டில் அரசைத் தோற்றுவித்து, குடிமக்களுக்கு உரிய அடிப்படை உரிமைகளை கொடுத்து, அவற்றைக் காத்து, அரசியலமைப்பு உறுப்பு களின் அதிகாரங்களை வரையறுத்து, சட்ட மன்றத்தின் பணிகளைத் தொகுத்து, நீதித்துறையின் அமைப்பு மற்றும் அதன் அதிகாரங்களை வகுத்து உரைப்பதே, 'அரசியலமைப்புச் சட்டம்' ஆகிறது.

இனி அரசியலமைப்பிற்கும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைக் காண்போமா?

அரசியலமைப்பு, அரசியலமைப்புச் சட்டத்திலிருந்து வேறுபடும் விதம்:

'அரசியலமைப்பு' என்று ஒன்று தோன்றிய பிறகுதான், அதனை ஒழுங்குபடுத்தி சீரான வழியில் கொண்டு செல்ல 'அரசியல மைப்புச் சட்டம்' என்று ஒன்று பிறந்தது. எனவே 'அரசியலமைப்பு' முதலில் வந்ததா அல்லது 'அரசியலமைப்புச் சட்டம்' முதலில் வந்ததா என்ற வினாவிற்கு, 'அரசியலமைப்பு' தான் முதலில் வந்தது என்று திட்டவட்டமாக கூறலாம்.

ஒரு சமுதாயத்தில் அரசு என்ற ஒரு அமைப்பு ஏற்பட்டு, அரசியல் வாழ்விலே அம்மக்கள் ஓரளவு முன்னேற்றம் அடைந்த பின்னரே அந்த அமைப்பிற்கு வரைமுறைகள் வகுக்கப் பெறுகின்றன; இதனால் அரசியலமைப்புச் சட்டமும் பிறக்கின்றது.

இந்த உண்மையினை **சட்டவியல் அறிஞர் சால்மண்ட் (Salmond)** அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். அதாவது, " அரசு என்ற அமைப்பு அரசியலமைப்பு சட்டத்திற்கு முந்தியது. அதாவது, அரசியலமைப்பு சட்டத்திற்கு முன்னரே அரசியலமைப்பைப் பொறுத்த வழக்காறுகள் செயலில் இருந்தன. . . . . எனவே, அரசு அமைப்பின் இயக்கத்தை தொடர்ந்து தோன்றியதே அரசியலமைப் புச் சட்டமாகும்". [1]

எனவே, அரசும் அதன் இயக்கமும் முந்தியன. அதன் பின்னரே, அரசியலமைப்புச் சட்ட விதிகள் தோன்றின என்பது

1. The Constitution as a matter of fact is logically prior to the constitution as matter of law; in other words, constitutional practice is logically prior to constitutional law .....Constitutional law followed hard upon the heels of constitutional fact - **Salmond.**

தெளிவாகும். சுருங்கக் கூறின், முதலில் மக்கள். பிறகு நாடு. பின் அரசியலமைப்பு. இறுதியாக அரசியலமைப்புச் சட்டம். இவ்வாறாகத் தான் இதன் படிநிலை அமைகிறது.

இப்படிப்பட்ட 'அரசியலமைப்பு', ஆட்சியின் அமைப்பு பற்றி கூறுகிறது. 'அரசியலமைப்புச் சட்டமோ', அவ்வமைப்புகளின் (உறுப்புகளின்) பணிகள் யாவை, அவை எந்தெந்த விதத்தில் செயல் பட வேண்டும் மற்றும் அவைகளின் அதிகாரங்கள் யாவை என்றெல்லாம் விதிகளை வகுத்துக் கூறுகிறது.

'அரசியலமைப்பு', அரசாட்சியின் மையமாக விளங்குகிறது. 'அரசியலமைப்பு சட்டம்', சட்டங்களுக்கெல்லாம் மையமாக விளங்குகிறது. இதுவே நாட்டின் அடிப்படையான சட்டமும் ஆகும். அரசியலமைப்புச் சட்டத்தினை மீறுமாறு இயற்றப்படும் பிற சட்டங்கள், இல்லாநிலையதாகிவிடும். எனவே, இயற்றப்படும் சட்டங்கள் எல்லாம் அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டே இயற்றப்பட வேண்டும்.

'அரசியலமைப்பானது', தீர்வழிகள் எதனையும் தருவ தில்லை. ஆனால் 'அரசியலமைப்பு சட்டம்', குடிமக்களுக்கு சில அடிப்படை உரிமைகளை (fundamental rights) வகுத்துக் கொடுத் துள்ளது. இந்த உரிமைகள் பாதிக்கப்பட்டால், பாதிக்கப்பட்ட குடிமக்களுக்கு தக்க தீர்வழிகளை நீதிப்பேராணைகள் (Writs) வழி யாகத் தருகின்றது.

இறுதியாக 'அரசியலமைப்பு' அஸ்திவாரம் என்றால், 'அரசியலமைப்புச் சட்டம்' அதன் மேல் நிற்கும் மாளிகை ஆகும்.

முடிவுரை:

நாட்டு மக்களின் நல வாழ்விற்கென அடிப்படை உரிமை களுக்கு ஒரு அரணாய், அரசு உறுப்புகளின் இயக்கத்திற்கு ஒரு நெறி முறையாய், நாட்டின் அரசியல் நாகரிகத்திற்கு ஒரு முத்திரையாய் விளங்குகின்றது அரசியலமைப்புச் சட்டம். இயற்றப்படும் சட்டங்களுக்கு எல்லாம் அரசியலமைப்புச் சட்டமே அடிப்படை யானதாக அமைந்து, நமது இந்திய நாட்டின் இறையாண்மைக்கு வலிமையும் எழிலும் சேர்க்கிறது.

(ii) அரசியலமைப்புகளின் வகைப்பாடுகள் [Classification of Constitutions]

உள்ளே நுழைவதற்கு முன்...

நாட்டின் அரசாட்சிக்கு, அரசியலமைப்பு முதுகெலும்பு போன்றது என்று நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். அந்த அரசியலமைப்பு, பின்வரும் மூவகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

1. எழுதப்பெற்ற மற்றும் எழுதப்பெறாத அரசியலமைப்புகள் [Written and Unwritten Constitutions]
2. நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய அரசியலமைப்புகள் [Rigid and Flexible Constitutions]
3. கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி அரசியலமைப்புகள் [Federal and Unitary Constitutions]

மேற்கண்ட மூன்றும் அரசியலமைப்பை பொருத்த வகைப்பாடுகள்தாம் என்றாலும், அவற்றையும் இரண்டு தலைப்புகளின் கீழ் மீண்டும் வகைப்படுத்தலாம். அதாவது மேற்கண்ட வகைப்பாட்டில், முதலிரண்டு அரசியலமைப்பைப் பொறுத்த (According to the Constitution) வகைப்பாடுகள் ஆகும். மூன்றாவது, அரசைப் பொறுத்த (According to the State) வகைப்பாடு ஆகும். இதனை பின்வரும் வரைபடம் எளிதாக விளக்கும்.

அரசியலமைப்புகளின் வகைப்பாடுகள்
(Classification of Constitutions)


அரசியலமைப்புகளைப் பொறுத்தவரை (According to the Constitution)
அரசைப் பொறுத்தவரை (According to the State)
எழுதப்பெற்ற மற்றும் எழுதப்பெறாத அரசியலமைப்புகள்
நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய அரசியலமைப்புகள்
கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சி அரசியலமைப்புகள்

இனி இவற்றின் விளக்கங்களை பின்வருமாறு கவனிப்போமா?

2. Written and Unwritten Constitution - Write Short Notes. (எழுதப் பெற்ற மற்றும் எழுதப் பெறாத அரசியலமைப்பு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Distinguish between Written and Unwritten Constitutional Laws (எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத அரசியலமைப்பு சட்டங்கள் - வேறுபடுத்துக.)

எழுதப்பெற்ற அரசியலமைப்பு (Written Constitution):

பெரும்பாலும் அனைத்து நாடுகளின் அரசியலமைப்புகளும் எழுதப் பெற்றவையே. அரசு அமைக்கப்பட உறுதுணையாக இருக்கும் கோட்பாடுகள், அரசின் பல உறுப்புகளின் அதிகார விளக்கங்கள், குடிமக்களுடைய உரிமைகள் ஆகிய இவைகளைப் பற்றி ஓர் ஆவணத்திலோ அல்லது பல ஆவணங்களிலோ எழுதப் பட்டிருந்தால், அவ்வரசியலமைப்பினை எழுதப்பெற்ற அரசியல மைப்பு என்று கூறுவர். எடுத்துக்காட்டாக, அமெரிக்க அய்க்கிய நாடுகள், ஃபிரான்சு, இந்தியா ஆகிய நாடுகளின் அரசியலமைப்பை குறிப்பிடலாம்.

நமது இந்திய அரசியலமைப்பு, முனைவர் **B.R.அம்பேத்கர்** அவர்களை தலைவராகக் கொண்ட வரைவுக் குழுவினால் (Drafting Committee) எழுதப்பட்டு, அது நமது அரசியலமைப்பு நிர்ணய சபையினால் (Constituent Assembly) 1949-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 26-ஆம் நாளில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

எழுதப்பெற்ற அரசியலமைப்பின் சிறப்புகள் (Merits):

1. மேன்மை வாய்ந்தது (Superiority): மாறுகின்ற வழக்கங் களையும் மரபுகளையும் அடிப்படையாகக் கொண்ட எழுதப் பெறாத அரசியலமைப்பினை விட, ஒரு நாட்டு மக்கள் செவ்வனே வாழ்வதற்காக அந்நாட்டின் அறிஞர் பெருமக்கள் சிந்தித்து வகுக்கும் அரசியலமைப்பு மேம்பட்டதாகும். அரசின் நடவடிக்கைகளில் அய்யம் ஏற்படும் போது, எழுதப்பட்டுள்ள அரசியலமைப்பு கோட்பாடுகளுக்குட்பட்டுள்ள செயல்களா அவை என்று பார்ப்பது எளிதாகும். மேலும் சர்வாதிகாரக் கோட்பாடுகளுக்கு எதிரான ஒரு பாதுகாப்பு அரணாக அது விளங்குகிறது.

2. உறுதித் தன்மை (Stability): சட்டமன்றம் அல்லது பாரளுமன்றம் இயற்றும் சட்டங்களை விடச் சிறப்பான முறையில் மட்டுமே அரசியலமைப்புக் கோட்பாடுகள் மாற்றப்பட முடியு மென்பதால், எழுதப் பெற்ற அரசியலமைப்புகள் உறுதித் தன்மை வாய்ந்ததாக காணப்படுகிறது.

குறைகள் (Demerits):

1. நெகிழாத் தன்மை (Rigidity): பொதுவாக எழுதப் பெற்ற அரசியலமைப்புகளின் நெறிகள் எளிதில் மாற்றியமைக்கப்பட முடியாதவன வாக அமைந்துள்ளன. இதன் விளைவாக மாறுகின்ற சூழல்களிலும் நெருக்கடிக் காலங்களிலும் அரசியலமைப்பினை மாற்ற வழியற்ற நிலை ஏற்படுகிறது. இதைத்தான் **அறிஞர் கெட்டல் (Gettal)** அவர்கள், "உறுதித் தன்மையால் ஏற்படும் நன்மையை நெகிழாத் தன்மையின் தீமை சமன்படுத்தி விடுகிறது", என்று கூறுகிறார்.

2. தெளிவின்மை (Ambiguity): குழப்பின்மையும் தெளிவும் எழுதப்பெற்ற அரசியலமைப்புகட்குத் தேவையான கூறுகளாகும். ஆனால் பெரும்பான்மையான அரசியலமைப்புகளில் இவ்விரு கூறுகளும் காணப்படுவதில்லை. இந்திய அரசியலமைப்பு வழக் குரைஞர்கட்கு சொர்க்கம் போன்றது எனக் கூறுவர்; ஏனெனில், வழக்குகள் தொடுப்பதற்கு எண்ணற்ற வாய்ப்புகள் இதில் உண்டு. அதிலும் குடிமக்களின் அடிப்படை உரிமைகளைப் பற்றி உள்ள சரத்துக்களின் அடிப்படையில் ஏராளமான வழக்குகளைத் தொடுக்கலாம்.

ஆனால் **கோலக்நாத் வழக்கில்**[1], அரசியலமைப்பு பாதுகாப்பு கொடுத்துள்ள அடிப்படை உரிமைகளைப் பாதிக்கும் அல்லது குறைக்கும் வண்ணம் அரசிலமைப்பை இனி பாராளு மன்றம் திருத்த முடியாது என்று தீர்ப்பு வழங்கியது. ஆனால் அரசியலமைப்பின் இருபத்து நான்காவது திருத்தத்தின்படி குடிமக்களின் அடிப்படை உரிமைகள் உட்பட அரசியலமைப்பின் எந்த பகுதியை வேண்டுமானலும் திருத்தி அமைக்க பாராளு மன்றத்திற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. (ஆனால் பின்னர் இந்த அதிகாரத்தின் மீது உச்ச நீதிமன்றம் சில வரம்புகளை விதித்தது)

1. Golak Nath vs. State of Punjab AIR 1967 SC 1643

எழுதப்பெறாத அரசியலமைப்பு (Unwritten Constitution):

அரசின் கோட்பாடுகளோ அல்லது நெறிமுறைகளோ ஆவணங்களில் எழுதப்பெறாமல் இருக்கும் அரசியலமைப்புகள், எழுதப்பெறாத அரசிய லமைப்பு எனப்படும். அதாவது, ஓர் அரசிலமைப்பு அந்நாட்டு வழக்கங் களையும் (Customs) மரபுகளையும் (Conventions) மட்டுமே பின்பற்றி நிற்குமானால், அது எழுதப்பெறாத அரசியலமைப்பு எனப்படும். அந்நாட்டு பழக்க-வழக்கங்கள், மரபுகள், நீதிமன்றத் தீர்ப்புகள், சட்டமன்றம் இயற்றும் நெறிகள் ஆகியவற்றின் தொகுப்பாக விளங் கும். எடுத்துக்காட்டாக, கிரேட் பிரிட்டனின் அரசியலமைப்பு ஒன்றுதான் எழுதப்பெறாத அரசியலமைப்பிற்கு எஞ்கி நிற்கும் சான்றாக விளங்கி வருகிறது.

எழுதப்பெறாத அரசியலமைப்பின் சிறப்புகள் (Merits):

1. நெகிழும் தன்மை மற்றும் புதியனவற்றை ஏற்றும் கொள்ளும் தன்மை (Flexibility and Adaptability): எழுதப்பெறாத அரசியலமைப்பின் அடிப்படையில் அமையும் அரசின் நெறிகள் எளிதில் நெகிழ்ந்து கொடுப்பதோடு காலத்தின் மாறுதலால் விளையும் புதுக் கருத்துக்களை எளிதில் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாகவும் அமைகிறது. நெருக்கடிக் காலங்களில் அல்லது தேவையெனும் பொழுது, அரசியலமைப்பை ஒரு சாதாரண சட்டத்தை மாற்றுவது போல, எளிதில் மாற்றி அமைத்து விடலாம். இதன் விளைவாக சிக்கல்களும் தேவையற்ற விதிமுறைகளும் தவிர்க்கப்படுகிறது. அரசியலமைப்பைத் திருத்துவதற்காக ஒரு தனி முறையைக் கையாள வேண்டியதில்லையாதலால், காலந்தாழ்த்தாமல் நெருக்கடி நிலைமைகளைச் சட்ட மாறுதல்கள் மூலம் சமாளிக்கலாம்.

2. பழமையுடன் உறவு (Link with the past): எழுதப்பெறாத அரசியலமைப்பின் அடிப்படையில் அரசியல் மரபுகள் பழைய நூற்றாண்டு களினின்றும் தொடர்ந்து வருவனவாக இருக்கும். இதன் விளைவாகப் பழமையுடன் உள்ள நெருங்கிய உறவு, இவ்வகை அரசியலமைப்பின் வளர்ச்சிக்கு துணையாக உள்ளது.

குறைகள் (Demerits):

1. நிலையற்ற தன்மை (Lacks stability): இது ஒரு முக்கிய குறை பாடு ஆகும். எழுதப்பெறாத அரசியலமைப்பின் அடிப்படைக் கோட்பாடுகள் - பழக்கங்கள், மரபுகள், நீதிமன்றத் தீர்ப்புகள், பாராளுமன்றச் சட்ட திட்டங்கள் ஆகியவற்றை சார்ந்து விளங்குவ

தால், அரசியலமைப்பிற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் பணியில் நீதிமன்றத்தின் அதிகாரம் மிக உச்ச அளவில் உள்ளது. இக்குறையினைப் பற்றிக் கூறுகையில், **ஜே.ஏ. ஜெனிசன் (J.A.Janeson)** என்னும் அறிஞர், "நீதிமன்றங்களின் கைப்பாவைகளாக எழுதப் பெறாத அரசியலமைப்புகள் இலங்குகின்றன" என்கிறார்.

2. சர்வாதிகார ஆட்சிக்கு வழிவகுத்தல் (Dictatorship Rule): எழுதப் பெறாத அரசியலமைப்பு சர்வாதிகார ஆட்சிக்கு எளிதில் வழி வகுத்து விடும். ஏனெனில், இங்கு நிர்வாகத்துறை தனது அதிகாரங்களை பெருக்கிக் கொள்ள அதிக இடமுள்ளது. அதாவது, தன்விருப்புரிமைப்படி, முறையின்றி அரசியலமைப்பினை மாற்ற நிர்வாகத் துறையினருக்கு எளிதில் சாத்தியமாகிறது.

எழுதப்பெற்ற அரசியலமைப்பு மற்றும் எழுதப்பெறாத அரசியலமைப்பு - வேறுபாடுகள்:

1. எழுதப்பெற்ற அரசியலமைப்பை, ஒரு அரசியல் நிர்ணய சபை (Constituent Assembly) தோற்றுவிக்கிறது. அது ஒன்று அல்லது பல ஆவணங்களில் வரையப்படுகிறது. ஆனால் எழுதப் பெறாத அரசியலமைப்பு அவ்வாறு தோற்றுவிக்கப்படுவதுமில்லை; ஒன்று அல்லது பல ஆவணங்களில் எழுதப்படுவதுமில்லை. இங்கு சம்பந்தப்பட்ட நாட்டின் வழக்கங்கள் மற்றும் மரபுகள் அரசின் கோட்பாடுகளை மற்றும் நெறிகளை வரையறுப் பதற்கு வழி காட்டிகளாக நிற்கின்றன.

2. எழுதப்பெற்ற அரசியலமைப்பு உறுதித் தன்மை (stability) வாய்ததாகும். ஏனெனில் அரசின் கோட்பாடுகளும், உறுப்புகளின் செயல் பாடுகளும் எழுதப் பெற்றவையாக உள்ளன. ஆனால், எழுதப்பெறாத அரசியலமைப்பு நிலையற்ற தன்மை (lacks stability) வாய்ந்ததாகும். ஏனெனில் இங்கு அரசியலமைப்பு மாறக் கூடிய வழக்கங்களையும், மரபு களையும், நீதிமன்றத் தீர்ப்புகளையும் சார்ந்து உள்ளன. எனவே, வழக்கங்களும் மரபுகளும் காலத்தின் சூழலை யொட்டி மாறினால், அரசியலமைப்பும் மாற வேண்டிய கட்டாயத் திற்கு ஆளாகிறது. எனவே, அதற்கொப்ப அரசியலமைப்பிற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் பணி இங்கு நீதிமன்றங்களின் கையில்தான் உள்ளது.

3. ஒரு அரசியலப்பு எழுதப்பெற்றிருந்தால், அது எளிதில் மாற்ற அல்லது திருத்த முடியாதபடிக்கு நெகிழாத் (rigidity)

தன்மையுடையதாகிறது. ஆனால், எழுதப்பெறாத அரசியலமைப்பு, காலத்தின் சூழலை யொட்டி, சமுதாய மாற்றங்களுக்கொப்ப எளிதில் மாற்றி அல்லது திருத்திக் கொள்ளக் கூடிய அளவிற்கு நெகிழும் (flexibility) தன்மையுடையதாக உள்ளது.

முடிவுரை:

எழுதப்பெற்றுள்ள அரசியலமைப்புகள் தற்காலத்தில் தோன்றியனவாகும். முறையோடு அரசியலமைப்புகளை தோற்றுவிக்க வேண்டும் என்ற எண்ணம், அமெரிக்க அய்க்கிய நாட்டு மக்களிடையேயும், புரட்சிக்கு பின்னர் அய்ரோப்பாவில் ஃபிரான்சு மக்களிடையேயும் தோன்றியதாகும். அதன் பின்னர் பல நாடுகளும் தங்களது அரசியலமைப்பை எழுதப் பெற்றவையாக ஏற்படுத்திக் கொண்டன. அந்த வகையில் நமது இந்திய நாடும் தனது அரசியலமைப்பை எழுத்து வடியில் வரைந்து வெளியிட்டது. எழுதப் பெற்றுள்ள அரசியலமைப்புகள் அரசின் அன்றாட அலுவல்களை செயல்படுத்துவதற்கு உரைகற்கள் போல விளங்குகின்றன. அவற்றினை எளிதில் மாற்றியமைக்கக் கூடாது என்பதற்காகவே, அரசியலமைப்பை வரையும் சட்ட அறிஞர்கள் மற்றும் சான்றோர்கள் அதனை நெகிழாத் தன்மையோடு படைக்கின்றனர்.

3. Discuss the following:

(a) A Constitution cannot be wholly written nor wholly unwritten

(b) A Constitution cannot be made but it has to grow.

கீழ்க்கண்டவற்றை விவாதி:

(அ) ஒரு அரசியலமைப்புச் சட்டம் முழுமையாக எழுதப் பட்டதாக இருக்க முடியாது. முழுமையாக எழுதப்படாம லிருக்க முடியாது.

(ஆ) ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை செய்ய முடியாது. அது வளர வேண்டும்.

(அ) ஒரு அரசியலமைப்புச் சட்டம் முழுமையாக எழுதப்பட்டதாக இருக்க முடியாது. முழுமையாக எழுதப்படாமலிருக்க முடியாது - விவாதம்:

அரசியலமைப்பானது, எழுதப்பெற்ற அரசியலமைப்பு

என்றும் எழுதப்பெறாத அரசியலமைப்பு என்றும் வகைப்படுத்தப் பட்டுள்ளதை நாம் சென்ற வினாவில் கண்டோம். ஆனால் உண்மை யில், அனைத்து அரசியலமைப்புகளுமே, எழுதப்பெற்ற மற்றும் எழுதப்பெறாத அரசியலமைப்பின் கூறுகள் கலந்த கலவையே யாகும்.[1] எழுதப்பெற்ற அரசியலமைப்பில் வழக்கங்கள், மரபுகள் ஆகியவற்றின் வடிவில் எழுதப்பெறாத அரசியலமைப்பின் கூறுகள் காணப்படுகின்றன. அதேபோல், எழுதப்பெறாத அரசியலமைப்பில் இயற்றப்பட்ட சட்டங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றின் வடிவில் எழுதப்பெற்ற அரசியலமைப்பின் கூறுகள் காணப்படவே செய்கின்றன.

எழுதப்பெற்ற அரசியலமைப்பைக் கொண்ட அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசியலமைப்புக் கூறுகளை ஆராய்ந்தால், அதில் வழக்கம் மற்றும் மரபு ரீதியான கோட்பாடுகள் பல அங்கம் வகித்துள்ளதை அறியலாம். சான்றுக்கு ஒன்றிரண்டைக் கூற வேண்டுமென்றால், அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசியலமைப் பில், குடியரசுத் தலைவர் மக்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப் பட வேண்டும் என்று விதிக்கப்பட்டுள்ளது. ஆனால் வழக்கத்தில் இது நேரடித் தேர்தல் போல் அமைந்துள்ளது. மேலும், 'அமைச்சர் குழு' (Cabinet) என்ற சொல்லிற்கு அமெரிக்க அரசியலமைப்பில் இடமில்லையென்றாலும், மரபடிப்படையில் அமைச்சர் குழு முறை அமெரிக்க அரசியலில் ஒரு முக்கிய இடம் வகிக்கிறது.

மேலும், எழுதப்பெறாத அரசியலமைப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் கிரேட் பிரிட்டனின் அரசியலமைப் பில் இயற்றப்பட்ட சட்டங்கள், நீதிமன்றத் தீர்ப்புகள், சாசனங்கள் ஆகியவற்றின் வடிவில் எழுதப்பெற்ற அரசியலமைப்பின் கூறுகள் பல அடங்கியுள்ளன. உதாரணமாக கிரேட் பிரிட்டனின் எழுதப் பெறாத அரசியலமைப்பில், மகா சாசனம் (Magna Carta), உரிமைகள் மசோதா (The Bill of Rights), நிர்ணயச் சட்டம் (The Act of Settlement), வாக்குரிமைச் சட்டங்கள் (The Franchise Acts), 1911 மற்றும் 1949-ஆம் ஆண்டின் பாராளுமன்றச் சட்டங்கள் ஆகிய இயற்றப்பட்ட சட்டங்கள் அதன் முக்கிய கூறுகளாக உள்ளன.

எனவே, அனைத்து அரசியலமைப்புகளும் உண்மையில் எழுதப்பட்ட சட்டத்தையும் எழுதப்படாத வழக்கங்களையும்

1. All the Constitutions are a mixture of written and unwritten elements.

கொண்ட கலவையாகவே உள்ளன [1], என்று **எம்.ஸ்டீவார்ட்** எனும் அறிஞர் கூறுகிறார்.

அதுபோல், **சி.எஃப்.ஸ்டிராங் (C.F.Strong)** எனும் அறிஞர், எந்த அரசியலமைப்பும் முழுமையாக எழுதப்பெற்றோ அல்லது முற்றிலும் எழுதப்பெறாமலோ விளங்குவதில்லை. ஆகவே, இம் முறையில் அரசியலமைப்புகளை வகைப்படுத்தல் பொய்மையான முறையாகும் என்று சாடுகிறார். மேலும், **கார்னர் (Garner)** எனும் மற்றொரு அறிஞர், அரசியலமைப்புகளுக்கு எழுதப்பெற்றது, எழுதப் பெறாதது என்று உள்ள தனிச் சிறப்பானது தரத்தால் வேறுபட்ட தேயன்றி இனத்தால் வேறுபட்ட தன்று என்று தெளிவுபடுத்துகிறார்.

முடிவாக, எழுதப்பெற்ற அரசியலமைப்பு மற்றும் எழுதப் பெறாத அரசியலமைப்பு என்ற வகைப்பாடு ஒரு நாட்டின் அரசு கோட்பாட்டை, நெறியை உணர்ந்து கொள்வதற்கு பொதுவான முறையில் உதவி புரிந்தாலும், முழு வேறுபாடுகளைத் தெளிவுபடுத்து வதற்கு இம்முறை பயன்படாததோடு நடைமுறையிலும் பொருள் செறிந்ததாக காணப் படுவதில்லை.

(ஆ) ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை செய்ய முடியாது. அது வளர வேண்டும் - விவாதம்:

ஒரு அரசியலமைப்புச் சட்டத்தை செய்ய முடியாது; மாறாக அது வளர வேண்டும் என்ற கோட்பாடு எழுதப்பெறாக அரசியல மைப்பை பொறுத்து முற்றிலும் பொருந்துகிறது என்று கூறலாம். ஏனெனில், எழுதப்பெறாத அரசியலமைப்பானது, அரசியலமைப் பின் கோட்பாடுகளோ அல்லது அரசின் நெறிகளோ ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஆணங்களில் எழுதப்பெறாமல் விளங்குவன வாகும். அதாவது, ஓர் அரசியலமைப்பு, அந்நாட்டு வழக்கங்களையும் மற்றும் மரபுகளையும் மட்டுமே பின்பற்றி, இயற்றப்பட்ட சட்டங்களை அடிப்படையாகக் கொள்ளாமல் நிற்குமானால், அது எழுதப்பெறாத அரசியலமைப்பு எனப்படுகிறது. அது அந்நாட்டு பழக்க-வழக்கங்கள், மரபுகள், நீதிமன்றத் தீர்ப்புகள், சட்டமன்ற மியற்றும் நெறிகள் ஆகியவற்றின் தொகுப்பாக விளங்கும். அவ்வப் போது தோன்றுகின்ற மாறுதல்களையும் தெளிந்த அறிவின் முடிபுகளையும் அது சுட்டி நிற்கும். ஒரே நாளில் இயற்றப்பட்ட

1. All Constitutions are in fact a mixture of written law and unwritten custom - M.Stewart, Modern Forms of Government, p.10

அமைப்பாக இல்லாமல் சமுதாய வளர்ச்சிக்கேற்ப வளர்ந்த கோட்பாடுகளின் தொகுப்பாக அது விளங்கும்.

மேலும், எளிதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட சிந்திக்கப்படாத கோட்பாடுகள் போலன்றி சுற்றியுள்ள சமுதாயச் சூழ்நிலைகளால் நன்கு பக்குவப்படுத்தப்பட்ட சிந்தனைக் கோவையாக அது இருக்கும். எனவேதான், அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றுவதை விட அது சமுதாய சிந்தனையின் கீழ் அனுதினமும் வளர வேண்டும், என்று கூறப்படுகிறது. அப்பொழுதுதான், மக்களின் நல்வாழ்விற்கு தேவையாக விளங்கும் அரசுக் கொள்கைகள் அதில் பிறக்கும். எழுதப் பெறாத அரசியலமைப்பில் சில குறைபாடுகள் இருந்தாலுமே கூட, அது நாட்டின் நல்லாட்சியை கருத்தில் கொண்டு, ஒரு வளரும் அரசியலமைப்பாக விளங்குகிறது.

4. Discuss the characteristic features of rigid and flexible constitutions. (நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய அரசியலமைப்பின் பண்புக் கூறுகளை விவாதிக்க.)

(அல்லது)

Distinguish between the following:
Rigid constitution and flexible constitution.
பின்வருவனவற்றை வேறுபடுத்துக:
நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய அரசியலமைப்பு.

முன்னுரை:

அரசியலமைப்புகளை எழுதப்பெற்றவையாகவும், எழுதப் பெறாதவையாகவும் வகைப்பாடு செய்தலானது அரசியலமைப்பின் முழு வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துவதற்கு பயன்படாததோடு நடைமுறையிலும் பொருள் செறிந்ததாக காணப்படுவதில்லை, என்று கண்டோம். இவ்வாறு வகைப்படுத்தல் குழப்பத்தில் ஆழ்த்துகின்ற மற்றும் ஆராய்ச்சிக்கு பொருந்தாத வழியாகும் என்று **அறிஞர் ஜே. பிரைஸ் (J.Bryce)** அவர்கள் குறிப்பிடுகிறார்.

இதற்கு மாற்றாக, அவர் ஓர் புதியதோர் வகைப்பாட்டை குறிப்பாக கூறுகிறார். அதாவது, ஓர் அரசியலமைப்பினை திருத்தும் (amendment) அல்லது மாற்றும் (revision) முறையிலிருந்து அது நெகிழ்வுடைய (flexible) தன்மை பெற்றுள்ளதா அல்லது நெகிழ்வற்ற (rigid) தன்மை பெற்றுள்ளதா என்று பகுத்தறியும் முறையே

அவர் கூறியதாகும். ஓர் அரசியலமைப்பினை சாதாரண சட்டங்களை திருத்துவதைப் போலவே திருத்தி அமைக்க முடியுமென்றால், அது நெகிழ்வுடைய அரசியலமைப்பாகும்; அரசியலமைப்பினைத் திருத்துவதற்குச் சாதாரண சட்டத்தை திருத்துவது போலன்றி ஒரு சிறப்பு முறை பயன்படுத்தப்பட்டால், அந்த அரசியலமைப்பு, நெகிழ்வற்ற அரசியலமைப்பு ஆகும். சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

நெகிழ்வற்ற அரசியலமைப்பு (Rigid Constitution) - பண்புக் கூறுகள்:

பொதுவாக எழுதப்பெற்ற அரசியலமைப்புகள் எல்லாமே, நெகிழ்வற்ற தன்மை கொண்டதாக உள்ளன. எனவே, ஒரு எழுதப் பெற்ற அரசியலமைப்பிற்கு உரித்த அம்சமான உறுதித் தன்மையும், அறுதித் தன்மையும் ஒரு நெகிழ்வற்ற அரசியலமைப்பிலும் உள்ளது. பாராளுமன்றம் சாதாரண சட்டங்களை இயற்றுவதை அல்லது திருத்தியமைப்பதைப் போல, இங்கு அரசியலமைப்பினை எளிதில் திருத்த முடியாது. தனிக் குழு ஒன்று கூட்டப்பட்டோ அல்லது சிறப்பு முறையிலோதான் அரசியலமைப்பினை திருத்தவோ அல்லது மாற்றவோ முடியும். இதில் சாதாரண சட்டங்களை விட அரசியலமைப்பு சட்டத்திற்கு மிக உயர்ந்த இடம் அளிக்கப்பட்டுள்ளது. இதன் சிறப்புகளையும் குறைகளையும் பின்வருமாறு காண்போமா?

நெகிழ்வற்ற அரசியலமைப்பு (Rigid constitution) - சிறப்புகள் (Merits):

1. உறுதித் தன்மையும் நிலைத்திருக்கும் தன்மையும் (Stablity and Permanence): ஒரு நெகிழ்வற்ற அரசியலமைப்பில் எளிதில் திருத்தம் செய்ய இயலாது. அதற்கு சிறப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். தெளிவான மற்றும் ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னரே திருத்தங்கள் செய்யப்படவியலும் என்ற பாதுகாப்பு இந்த நெகிழ்வற்ற அரசியலமைப்பினால் விளைகிறது. அதாவது ஆளும் கட்சியினரின் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் அவ்வளவு எளிதில் அரசியலமைப்பை திருத்தி விட முடியாது. எனவே, இது உறுதித் தன்மையும் நிலைத்திருக்கும் தன்மையும் பெற்றதாக உள்ளது.

2. குடிமக்களுடைய அடிப்படை உரிமைகளைக் காத்தல் (Safeguarding the fundamental rights of citizens): பொதுவாக நெகிழ்வற்ற மற்றும் எழுதப்பெற்ற அரசியலமைப்புகளில், குடிமக்களுடைய அடிப்படை உரிமைகள் பற்றி ஒரு பகுதி இருக்கும். அரசின் அல்லது அரசு உறுப்புகளின் செயல்பாடுகள் தனது

அடிப்படை உரிமைகளை பாதிக்கின்றன என்று ஒரு குடிமகன் நினைப்பாரானால், அந்த உரிமைகளை மீறியவர் மீது வழக்குத் தொடுத்து தக்க நிவாரணம் பெறலாம். எனவே, இந்த வகை அரசியலமைப்பு, குடிமக்களின் அடிப்படை உரிமைகளுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தித் தருகிறது.

3. சிறுபான்மையினரின் உரிமைகளைக் காத்தல் (Protection of rights of Minorities): சிறுபான்மையினரின் உரிமைகளைக் காப்பதற்கு தக்க விதிமுறைகள் இந்த நெகிழ்வற்ற அரசியலமைப்பில் வகுக்கப்பட்டிருக்கும்.

4. பாராளுமன்றத்தின் வரம்புமீறலைத் தடுக்கும்: நெகிழ்வற்ற அரசியலமைப்பு, பாராளுமன்றம் வர்ம்பு மீறி **(Ultra virus)** தன்னுடைய அதிகாரங்களை செலுத்தா வண்ணம் தடை செய்யும் தன்மையுடையதாகும். அதாவது, அரசியலமைப்பின் அடிப்படையில் அதிகாரங்களைப் பெற்று விளங்கும் பாராளுமன்றம், அவ்வமைப்பிற்கு எதிரான முறையில் சட்டங்களை இயற்ற முடியாது.

நெகிழ்வற்ற அரசியலமைப்பு (Rigid constitution) - குறைகள் (Demerits):

நெகிழும் மற்றும் புதியவற்றை ஏற்றுக் கொள்ளும் தன்மை இன்மை (Lacks flexibility and Adaptability): நெகிழ்வற்ற அரசியலமைப்பானது, மாறுகின்ற சூழலுக்கேற்பவோ அல்லது நெருக்கடிக் காலங்களிலோ **(during the period of emergencies)** எளிதில் மாற்றவோ அல்லது திருத்தவோ இயலாது, என்பது இதன் மிக முக்கிய குறைபாடாகும். அதாவது சூழ்நிலைக்கேற்ப நெகிழும் தன்மை இதில் கிடையாது. இங்கு அரசியலமைப்பைத் திருத்த தனிவழி முறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்றிருப்பதால், அரசியலமைப்பானது புதிய மாற்றங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமற் போய் விடலாம். ஒரு நல்ல அரசியலமைப்பு கால மாறுதலுக் கேற்ப எளிதில் திருத்தியமைக்கப்படக் கூடிய தன்மை பெற்றிருத்தல் வேண்டும். "சூழ்நிலைக்கேற்ப் மாற்றியமைக்கப்படும் தன்மையும் வளைந்து கொடுக்கக் கூடிய தன்மையும் இருந்தால்தான் முன்னேற்றத்திற்கு வழியுண்டு; நெகிழ்வற்ற அரசியலமைப்பை பெற்றிருக்கும் நாடுகளில் கூட எளிதில் அரசியலமைப்பு திருத்தியமைக்கப்படுகின்ற வழிவகை இருந்தால்தான் முன்னேற்றம் ஏற்படும்" என **அறிஞர் கில்கிறைஸ்ட் (Gilchrist)** அவர்கள் கூறுகிறார்.

நெகிழ்வுடைய அரசியலமைப்பு (Flexible Constitution) - பண்புக் கூறுகள்:

ஓர் அரசியலமைப்பை எளிதில் திருத்த முடியும் என்றால், அது நெகிழ்வுடைய அரசியலமைப்பு எனப்படும். பொதுவாக இவ்வகை அரசியலமைப்புகள் எழுதப்பெறாதவையாக இருக்கும். எடுத்துக்காட்டாக கிரேட் பிரிட்டனின் அரசியலமைப்பை கூறலாம். இந்த வகை அரசியலமைப்பில், அரசியலமைப்புச் சட்டங்களும் சாதாரண சட்டங்களும் வேறுபாடின்றி ஒரே மாதிரியான முறையில் பாராளுமன்றத்தால் இயற்றப் படும். அரசியலமைப்புச் சட்டங்களை, சாதாரண சட்டங்களைப் போலவே திருத்தி அமைக்கலாம் அல்லது நீக்கம் செய்யலாம். சிறப்பு நடைமுறைகள் இங்கு கிடையாது. இயற்றப்படும் சட்டங்கள் அரசியலமைப்பிற்கு உட்பட்டனவா அல்லது அப்பாற்பட்டனாவா என்று கூற இங்கு நீதித்துறைக்கு அதிகாரம் இல்லை.

நெகிழ்வுடைய அரசியலமைப்பு (Flexible Constitution) - சிறப்புகள் (Merits):

நெகிழ்வுடைய அரசியலமைப்பிற்கு இரண்டு சிறப்புகள் உள்ளன. அவை, நீட்டிப்புத் தன்மை மற்றும் சூழ்நிலையையொட்டி மாற்றியமைக்கப்படும் தன்மை (Elasticity and Adaptability) ஆகும். இங்கு, அரசியலமைப்புச் சட்டத்தைச் சாதாரண சட்டத்தைப் போலவே திருத்தியமைக்க முடியுமாதலால், நெகிழ்வுடைய அரசியல மைப்பு நீட்டிப்பு தன்மையுடையதாகும். அது போல சூழ்நிலையை யொட்டி மாற்றியமைக்கலாம். அதாவது கால மாறுதல்களின் விளைவாக மக்களின் தேவைகளும் மாறுபடுகின்றன. அத்தகைய மாற்றங்களுக்கு ஏற்ற விதத்தில் அரசு நெறிக் கொள்கைகளை இந்த நெகிழ்வுடைய அரசியலமைப்பில்தான் எளிதில் மாற்ற இயலும். எடுத்துக்காட்டாக பிரிட்டனின் அரசியலமைப்பு நெகிழ்வுடைய தன்மை கொண்ட அரசியலமைப்பாகும். எனவேதான், இரண்டாவது உலகப் போரின் போது நடக்க வேண்டியிருந்த பொதுத் தேர்தல் களை எளிதில் ஒத்தி வைக்க முடிந்தது. ஆனால் அதே நேரத்தில், நெகிழ்வற்ற அரசியலமைப்பைக் கொண்ட தன் காரணமாக அமெரிக்க அய்க்கிய நாடுகளில் தேர்தல்கள் நடந்தே ஆக வேண்டியதாகிவிட்டது.

நெகிழ்வுடைய அரசியலமைப்பின் சிறப்பை புகழும் வண்ணம் **அறிஞர் ஜே. பிரைஸ் (J.Bryce)** அவர்கள் பின்வருமாறு

கூறுகிறார். அதாவது,

> "நெருக்கடிக் காலங்களில் நீண்டு வளைந்து கொடுக்கும் தன்மையை நெகிழும் அரசியலமைப்பு பெற்றிருப்பதால் அவ்வமைப்பினை முறிக்காமல் மாறுதல்களைச் செய்ய முடிகிறது; நெருக்கடி தீர்ந்தவுடன் எளிதில் பழைய நிலையை அமைத்துவிட முடியும். இஃது, அடர்ந்த கிளைகளையுடைய மரத்தின் ஒரு கிளையை ஊர்தி செல்வதற்காக ஒருபுறம் ஒதுக்குவது போன்றதாகும்," [1]

என்று கூறுகிறார். நெகிழ்வுடைய அரசியலமைப்பில், நெருக்கடிக் காலங்களில் ஏற்படும் புரட்சிகளை அச்சூழ்நிலைக்கொப்ப அரசியலமைப்பை திருத்துவதன் மூலம் தவிர்த்துவிடலாம். மக்களின் தேவைகளுக்கேற்ப எளிதில் அதன் அடிப்படைகளை மாற்றியமைத்து விட முடியும்; ஆனால் நெகிழ்வற்ற தன்மையுடைய அரசியலமைப்பில் அவ்வாறு எளிதில் திருத்தம் செய்ய வியலாது என்பதால், மக்கள் நெருக்கடிக் காலங்களில் நடக்கும் சூழல்களை மனதில் கொண்டு அரசின் செயல்பாடு மீது விரக்தியடைந்து கொதித்தெழ வாய்ப்பு உண்டு.

நெகிழ்வுடைய அரசியலமைப்பு (Flexible Constitution) - குறைகள் (Demerits):

நெகிழ்வுடைய அரசியலமைப்பிற்கு உறுதித்தன்மையோ **(Stability)** அல்லது நிலைத்திருக்கும் தன்மையோ **(Permanence)** கிடையாது. அடிக்கடி அரசியலமைப்பு திருத்தப்படுவதால், உறுதித் தன்மை இயலாத ஒன்றாகிறது. ஆளும் கட்சியினரின் விருப்பப்படி, எந்த நேரத்திலும் நெகிழ்வுடைய அரசியலமைப்பு திருத்தி அல்லது மாற்றியமைக்கப்படலாம். எனவே, அரசியல்வாதிகளின் விளையாட்டுப் பொருளாக நெகிழ்வுடைய அரசியலமைப்பு மாறிவிடக் கூடிய அபாயம் இங்கு உள்ளது.

முடிவுரை:

எழுதப்பெறாத நெகிழ்வுடைய அரசியலமைப்பை விட,

---

1. "They (flexible constitution) can be stretched or bent so as to meet emergencies without breaking their framework; and when the emergency has passed they slip back into their old form like a tree whose outer branches have been pulled aside to let a vehicle pass" - J.Bryce, Essay on Flexible and Rigid Constitutions, p. 22.

எழுதப் பெற்ற நெகிழ்வற்ற அரசியலமைப்புதான் பெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது. ஏனெனில், நெகிழ்வற்ற அரசியலமைப்பில்தான் குடிமக்களின் உரிமைகளுக்கும் நலன்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. அதிகாரப் பகிர்வுகளைக் கொண்டு கூட்டாட்சி செய்ய வேண்டும் என்று விரும்பும் நாடுகள், எழுதப்பெற்ற நெகிழ்வற்ற அரசியலமைப்பையே விரும்புகின்றன. கூட்டாட்சி போல்வி **(Quasi-federal)** முறையில் ஆட்சி செய்து வரும் நமது இந்திய நாடு, எழுதப்பெற்ற நெகிழ்வற்ற அரசியலமைப்பைக் கொண்டதாகும்.

5. Unitary and Federal Constitutions - Write short notes (ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி அரசியலமைப்புகள் - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

ஒரு நாட்டின் ஆட்சி அதிகாரத்தின் அடிப்படையில், அந்நாட்டு அரசியலமைப்பினை ஒற்றையாட்சி அல்லது கூட்டாட்சி அரசிலமைப்பை கொண்ட நாடாக வகைப்படுத்த இயலும். அதாவது, ஒரு அரசியலமைப்பு, ஒற்றையாட்சி முறையிலான அரசாங்க முறையை தோற்றுவித்தால், அங்கு ஒற்றையாட்சி அரசியலமைப்பு (Unitary Constitution) முறை நிலவுவதாக கருதப்படும். அதுபோல், ஒரு அரசியலமைப்பு, கூட்டாட்சி முறையிலான அரசாங்க முறையை ஏற்படுத்தினால், அங்கு கூட்டாட்சி அரசியலமைப்பு (Federal Constitution) முறை நிலவுவதாக கருதப்படும். எனவே, ஒற்றையாட்சி அரசியலமைப்பு, ஒற்றையாட்சி அரசாங்கத்தையும் (Unitary Government), கூட்டாட்சி அரசியலமைப்பு கூட்டாட்சி அரசாங்கத்தையும் (Federal Government) தோற்றுவிக்கிறது. சற்று விரிவாக பின்வருமாறு.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு (Unitary Constitution) - விளக்கம்:

ஒற்றையாட்சி அரசியலமைப்பில், அரசாங்கத்தின் ஒட்டு மொத்த அதிகாரமும் ஒரு மத்திய அரசிடம் (Central Government or organ) இருக்கும். அதன் கீழான வட்டார அரசுகள் (Local Government), தங்களுக்குரிய அதிகாரங்களை அந்த மத்திய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளும். இந்த முறையில் அந்த மத்திய அரசே, தனக்கும் தனது கீழான வட்டார அரசுகளுக்கும் இடையிலான உறவுகள் மற்றும் அதிகாரப் பகிர்வுகள் ஆகியவற்றை நிர்ணயிக்கும்

முழு உரிமையை பெற்றுள்ளது. எனவே, மத்திய அரசு அளித்த அதிகாரங்களை மட்டுமே கொண்டு, வட்டார அரசுகள் இயங்க வேண்டும். மத்திய அரசானது, தாம் வட்டார அரசுகளுக்கு அளித்த அந்த அதிகாரங்களை எப்பொழுது வேண்டுமானாலும் பறித்துக் கொள்ளலாம். எனவே, இங்கு மத்திய அரசானது எப்படி வட்டார அரசுகளை உருவாக்கியதோ அதே போன்று அவற்றை கலைத்து விடவும் அதிகாரம் பெற்றுள்ளது. அந்த வட்டார அரசுகள், தாங்கள் செலுத்த வேண்டிய அதிகாரத்தை மத்திய அரசிடமிருந்து பெறுவ தால், அந்த மத்திய அரசு விதிக்கும் கட்டளைக்குட்பட்டே நடக்க வேண்டும்.

சுருங்கக் கூறின், வட்டார அரசுகள், தாங்கள் கொண்டுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் தன்னுரிமையையும் ஏன் அவைகளின் நீடித்திருக்கக் கூடிய தன்மையையும் மத்திய அரசிடமிருந்துதான் பெறுகின்றன என்றால் அது மிகையன்று. எனவேதான், வட்டார அரசுகள் தங்களது அதிகாரத்தை மத்திய அரசிடமிருந்து பரிசாக பெறுகின்றதே தவிர உரிமையோடு அதைப் பெறுவதில்லை, என்று கூறுவதுண்டு. ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்கு எடுத்துக் காட்டாக, கிரேட் பிரிட்டன், ஃபிரான்சு, பெல்ஜியம், ஹாலந்து, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளின் அரசியலமைப்பினைக் கூறலாம்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு (Unitary Constitution) - சிறப்புகள்:

1. உறுதித் தன்மையும் சீரான நிலையினையும் அளித்தல்: அரசின் அதிகாரங்கள் அனைத்தும் மத்தியில் வைக்கப்பட்டிருப்ப தால், ஆட்சியின் தீர்மானங்கள் அனைத்தும் மத்திய அரசிடமிருந்து தோன்றுகின்றன. இதனால் சட்டங்கள், கொள்கைகள், நெறிகள், ஆட்சி முறைகள் ஆகியவற்றில் ஒரு **உறுதியையும் (Stability)** மற்றும் **ஒரே சீரான நிலையையும் (Uniformity)** ஒற்றையாட்சி அரசியல மைப்பு கொடுக்கின்றது.

2. ஒற்றுமையையும் தோழமையையும் வளர்த்தல்: ஒற்றையாட்சி முறை, நாட்டில் ஒற்றுமையையும் (Unity) நாட்டு மக்களிடையே கருத் தொருமித்த தோழமை உணர்வையும் (Solidarity) வளர்க்கிறது. கூட்டாட்சி நாடுகளில் சாதாரணமாகக் காணப் படும் பிரிந்து செல்கின்ற சக்திகளும், பகைமை மனப்பான்மையும் ஒற்றையாட்சி முறையில் இராது.

3. வளைந்து கொடுக்கும் தன்மை (Flexibility): மத்திய அரசு கொடுக்கும் அதிகாரங்களை மட்டும் வட்டார அரசுகள் பெற்று, அதற்கு வளைந்து கொடுத்து அவை செல்வது, ஒற்றையாட்சி முறையின் முக்கியச் சிறப்பாகும்.

4. எளிமையும் சிக்கனமானதுமான முறை: கூட்டாட்சி நடத்துவதை விட ஒற்றையாட்சி நடத்துவது மிக எளிது (Simple). மேலும் கூட் டாட்சி முறையில் ஒரே அலுவல் மத்திய அரசுக்காகவும், மாநில அரசுகளுக்காகவும் (வட்டார அரசுகளுக்காகவும்) இரு படிகளில் நடத்தப்படுவதால், அதிக பொருட் செலவு ஏற்படுகிறது. ஆனால், ஒற்றையாட்சி முறையில் இத்தகு செலவுகள் தவிர்க்கப் படுகின்றன. ஏனெனில், இங்கு, ஒரு அலுவல், மத்திய அரசை மையமாகக் கொண்டு மட்டுமே செய்யப்படுகிறது. எனவே, சிக்கனமாக (Less expensive) விளங்குகிறது.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு (Unitary Constitution) - குறைகள்:

மத்திய அரசிடமே அனைத்து அதிகாரங்களும் இருப்பதால், அதிகாரக் குவிப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால், சர்வாதிகார ஆட்சி ஏற்படலாம்.

கூட்டாட்சி அரசியலமைப்பு (Federal Constitution) - விளக்கம்:

கூட்டாட்சி எனும் சொல்லே, கூட்டாக ஆட்சி செய்தல் என்ற பொருளைத் தருகிறது. இங்கு இரண்டு அரசாங்கங்கள் செயல் படுகின்றன. மத்தியில் மத்திய அரசாங்கமும், மாநிலங்களில் மாநில அரசாங்கங்களும் ஆட்சி செய்கின்றன. இங்கு மத்திய அரசாங்கத் திற்கும் மற்றும் மாநில அரசாங்கங்களுக்கும் இடையே அதிகாரப் பகிர்வு காணப்படுகிறது. ஒரு அரசியலமைப்பில் பின்வரும் அம்சங் கள் இருந்தால், அது கூட்டாட்சி அரசியலமைப்பு எனப்படும். அவை, 1. இரட்டை அரசாங்க முறை; 2. அதிகாரப்பகிர்வு; 3. அரசியலமைப் பின் மேலாண்மை; 4. எழுதப்பெற்ற அரசியலமைப்பு; 5. நெகிழ்வற்ற அரசியலமைப்பு; 6. நீதிமன்றங்களின் அதிகாரம். **(இந்த ஆறு கூறு களையும் விரிவாக வினா எண் 10-இன் விடையில் காண்போம்.)**

கூட்டாட்சி அரசியலமைப்பு (Federal Constitution) - சிறப்புகள்:

மாநிலங்களின் அல்லது வட்டாரங்களின் நலன்கள் நன்கு பாதுகாக்கப்படுகின்றன மாநில முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் மாநில அரசுகளிடமும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் மத்திய அரசிடமும் ஒப்படைக்கப்படுகின்றன. இதனால், மாநில

அரசுகள் தங்களுக்கு உரித்த விஷயங்களில் தங்களுக்கு தேவைக்கேற்ற விதத்தில், தாங்களாவே சட்டமியற்றிக் கொள்கின்றன. இதனால், மத்திய அரசிடமே அதிகாரங்கள் குவிவது தடுக்கப்படுகிறது. மத்தியில் மற்றும் மாநிலங்களுக்கிடையில் அதிகாரப்பகிர்வு தோன்றுகிறது. இதனால் சர்வாதிகார ஆட்சி தோன்ற வழியில்லை; மாறாக மக்களாட்சி நிலைக்க வழி பிறக்கிறது.

கூட்டாட்சி அரசியலமைப்பு (Federal Constitution) - குறைகள்:

கூட்டாட்சியில் எவ்வாறு சிறப்புகள் பல உள்ளனவோ, அதே போன்று குறைகளும் இல்லாமல் இல்லை. இங்கு மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே அதிகாரங்கள் பகிர்வு செய்யப்பட்டுள்ளதால், மாநில அரசுகளுக்கென ஒதுக்கப்பட்ட விஷயங்களில் மத்திய அரசுக்கு எவ்வித கட்டுப்பாடும் அற்று போய்விடுகிறது. இந்தக் குறை பெரும்பாலும், நெருக்கடிக் காலங்களிலும் வெளிநாட்டு தொடர்புகளின் போதும் தலைதூக்குகிறது. இதனால், மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே அதிகார முரண்பாடுகளும் ஏற்படுகின்றன. மேலும், தேசியத்துவம் மறைந்து மாநிலத்துவம் ஏற்படும் அபாயமும் உள்ளது. ஏதாவது ஒரு பிரச்சனையில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் முரண்பாடு தோன்றும் பொழுது, ஒரு மாநில மக்கள் மத்திய அரசின் நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை விட தங்கள் சார்ந்துள்ள மாநில அரசின் நலனுக்கே அதிக முக்கியத்துவம் கொடுக்கும் சூழலும் தோன்ற வழியுண்டு. இது சில சமயங்களில் மக்களாட்சிக்கு ஓட்டு போட்ட மக்கள் தேசிய ஒருமைப்பாட்டிற்கு வேட்டு வைக்கும் நிகழ்ச்சியாக மாறிவிடவும் வாய்ப்புண்டு. மேலும் மத்திய அரசாங்கமானது, மாநில அரசாங்கம் தம் வசம் கொண்டுள்ள விஷயங்களில் அனாவசியமாக மூக்கை நுழைக்கவும் இந்த வகை அரசியலமைப்பு வழிவகுக்கக் கூடியதாகும். இதனால் குழப்பங்கள் ஏற்படலாம். மேலும் ஒரே அலுவலை மத்திய அரசிற்காகவும் மாநில அரசுகளுக்காகவும் இரண்டு படிகளில் செய்ய வேண்டிய சூழலும் இங்கு உள்ளது. இதனால் அதிகப் பொருட் செலவுகள் ஏற்படுகின்றன. கூட்டாட்சி அரசியலமைப்பு நெகிழ்வற்ற தன்மையுடையதாகும். எனவே, எளிதில் அதைத் திருத்த முடியாது. இதன் விளைவாக மாறி வரும் சமுதாயச் சூழலுக்கேற்ப அரசியல மைப்பை எளிதில் திருத்த முடியாது. கூட்டாட்சி எனப்படும் இந்த இரட்டை அரசாங்க முறையால் (double system of government), அரசுத் திட்டங்களையும் பணிகளையும் நிறைவேற்றுவதில் அனாவசிய கால தாமதங்கள் ஏற்படுகின்றன.

(iii) அரசியலமைப்புச் சட்டம் மற்றும் நிருவாகமுறைச் சட்டத்திற்கிடையிலான வேறுபாடு [Difference between Constitutional Law and Administrative Law]

6. Bring out the differences between constitutional law and administrative law (அரசியலமைப்புச் சட்டத்திற்கும் நிருவாக முறைச் சட்டத்திற்கும் இடையிலான வேறுபாட்டை தெளிவு படுத்துக.)

முன்னுரை:

அரசியலமைப்புச் சட்டம் என்பது ஒரு நாட்டின் அரசு அமைப்பைக் குறிக்கும் சட்டமாகும். **மெயிட்லண்ட் (Maitland)** எனும் அறிஞர், அரசியலமைப்புச் சட்டம், ஒரு நாட்டு அரசிய லமைப்பின் கட்டமைப்பை (structure) விவரிக்கிறது என்றும், நிருவாகமுறைச் சட்டம், அக்கட்டமைப்பின் அலுவல்கள் (functions) பற்றி விவரிக்கிறது[1] என்றும் கூறுகிறார்.

ஒரு அரசின் அங்கங்கள் (1) சட்டமியற்றுத்துறை, (2) நிருவாகத் துறை மற்றும் (3) நீதித்துறை என மூவகைப்படும். **ஹாலண்ட் (Holland)** எனும் சட்டவியல் அறிஞர், ஒரு அரசின் மேற்கண்ட அங்கங்கள் இயங்காமல் இருக்கும் பொழுது, அவற்றின் நிலைப்பாடு யாது என்பது குறித்து விளக்குவதே அரசியலமைப்புச் சட்டம் என்றும், அந்த அங்கங்கள் இயங்கும் பொழுது, அவற்றின் நிலைப்பாடு யாது என்பது குறித்து விளக்குவதே நிருவாகமுறைச் சட்டம்[2] என்றும் வேறுபடுத்திக் காட்டுகிறார்.

ஜே.எஃப். கார்னர் (J.F.Garner) எனும் அறிஞர், மேற்கண்ட இரண்டு சட்டங்களுக்கும் இடையே உள்ளதாக கூறும் வேறுபாடு, வசதி (convenience) மற்றும் வழக்கத்தின்பாற்பட்டுக் (custom) கூறப்பட்டதேயன்றிக் காரண-காரியத் தொடர்புடன் (logic)

1. Constitutional Law deals with structure while Administrative Law deals with function - **Maitland.**
2. The various organs of the government are described by the Constitutional Law as at rest, but Administrative Law describes them in motion - **Holland,** Jurisprudence, p. 506.

கூறப்பட்டதன்று[1] என்று கூறுகிறார்.

வேறுபாடுகள்:

மேற்கண்ட வகையில் நாம் நிருவாகமுறைச் சட்டத்திற்கும், அரசியலமைப்புச் சட்டத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை பின் வருமாறு பட்டியலிட்டுக் காட்டலாம். அவை,

(1) நிருவாகமுறைச் சட்டம், அரசின் மூன்று தலையாய அங்கங்களில் ஒன்றான நிருவாகத்துறையையும் அதன் கிளை அமைப்புகளையும் குறித்து முக்கியமாக தொடர்பு கொண்டுள்ளது. அரசியலமைப்புச் சட்டம் அரசின் அம்மூன்று தலையாய அங்கங் களுடனும் அதாவது சட்டமியற்றுத்துறை, நிருவாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு அவற்றிற்கு சம முக்கியத்துவம் அளிக்கிறது.

(2) அரசின் அங்கங்களுக்குரிய முக்கிய விதிகளையும், விரிவான கொள்கைகளையும் அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. அதே சமயத்தில் அவ்விதிகளின் பயன்பாடு மற்றும் விவாதத்தை நிருவாகமுறைச் சட்டத்தின் வசம் ஒப்படைத்துள்ளது.

(3) அரசின் அங்கங்கள் இயங்காமல் இருக்கையில் அவற்றின் நிலைப்பாடு குறித்து விவரிப்பது அரசியலமைப்புச் சட்டம்; அவை இயங்கும் பொழுது என்ன நடக்கிறது என்பதை விவரிப்பது நிருவாக முறைச் சட்டம்.

(4) அரசியலமைப்புச் சட்டம் மக்களின் அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட பல உரிமைகளைக் குறித்து விளக்குகிறது. அவ்வுரிமைகள் நிருவாகத்துறை அதிகார அமைப்புகளால் மீறப் படும் பொழுது, அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கிடைக்கக் கூடிய தீர்வழிகள் குறித்து விவரிப்பது நிருவாகமுறைச் சட்டம்.

(5) அரசியலமைப்புச் சட்டம், நிருவாகமுறைச் சட்டத்தை விட ஒரு படி மேலான அந்தஸ்த்தைப் பெற்றுள்ளது. இந்தியாவில் அரசியலமைப்புச் சட்டம் நாட்டின் மிக உயர்ந்த மற்றும் அடிப்படையான சட்டமாகும். எனவே, நிருவாகமுறைச் சட்டம் உள்ளிட்ட எந்தச் சட்டமானாலும், அது அரசியலமைப்புச்

1. The distinction between the two laws is one rather of convenience and custom than logic" - J.F.Garner, Law and the Constitution, p. 217.

சட்டத்திற்கு முரணாக இருப்பின், அது வரம்பு மீறியது என்று நீதிமன்றத்தால் இரத்து செய்யப்படும். இந்த அடிப்படையில் நிருவாகத்துறை அதிகாரஅமைப்புகளின் நடவடிக்கைகள் ஏதேனும், அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளை மீறிய வகையில் இருப்பின், அவை வரம்புமீறியதாக (ultra vires) கூறப்பட்டு, இல்லா நிலையதென (void) நீதிமன்றத்தால் விளம்பப்படும்.

(6) அரசியலமைப்புச் சட்டம் தனிநபர்கள் உரிமைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது. நிருவாகமுறைச் சட்டம் தனிநபர் உரிமைகளுக்கும் பொதுமக்களின் தேவைகளுக்கும் சம முக்கியத் துவம் அளிக்கிறது.

முடிவுரை:

சுருங்கக்கூறின், நிருவாகமுறைச் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தோடு ஒட்டி நிற்கிறது; எனினும் அதனுடைய வேகமான வளர்ச்சி காரணமாகப் பிரிந்தும் நிற்கின்றது, என்பதே உண்மை. இந்த வளர்ச்சியின் காரணமாகத்தான் இன்று, நிருவாகமுறைச் சட்டம் தனக்கென ஒரு தனித் தகுநிலையை பெற்றுள்ளது.

-o0o-

அத்தியாயம் 2

வரலாற்றுப் பின்னணி – இந்திய அரசியலமைப்பை உருவாக்குதல் [Historical Background - Framing of the Constitution of India]

7. Examine the historical background of the Constitution of India. (இந்திய அரசியலமைப்பின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்க.)

முன்னுரை:

1950-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 26-ஆம் நாள் நமது நாட்டு வரலாற்றில் ஒரு பொன் நாள். அன்று முழுமையாக செயலுக்கு கொண்டு வரப்பட்ட நமது இந்திய அரசியலமைப்பு நமது நாட்டை ஒரு புதிய குடியரசாக உலகறிய பறை சாற்றியது. இதற்குப் பின்னணியாக எவ்வளவோ போராட்டங்கள், நிகழ்வுகள், கலந்தாய்வுகள் நமது இந்திய அரசியலமைப்பு வரலாற்றில் நடந்துள்ளன. பல்வேறு சட்டங்கள் இந்திய அரசியலமைப்பிற்கு முந்தைய ஆங்கிலேயே நிருவாகத்தை வழி நடத்திச் சென்றுள்ளன. அவற்றை இந்த் அத்தியாயம் சுருக்கமாக படம் பிடித்துக் காட்டவுள்ளது.

வரலாற்றுப் பின்னணி:

(1) 1600 முதல் 1765 - ஆங்கிலேயரின் வருகை:

1600-ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்கள் இந்தியாவில் வணிகர்களாக "கிழக்கிந்தியக் கம்பெனி" என்ற போர்வையில் காலடி எடுத்து வைத்தனர். இந்தியாவில் உள்ள வளங்களைப் பற்றிய

கதைகளால் கவரப்பட்ட ஆங்கிலேய வணிகர்கள், இங்கு வணிக ஒப்பந்தங்களைச் செய்து கொள்ள முனைந்தனர். இதன் பொருட்டு இலண்டன் நகர வணிகப் பெருமக்கள் சிலர், ஒரு நிறுவனத்தை (கம்பெனி) தோற்றுவித்தனர். இதற்கான அதிகாரத்தை இங்கிலாந்து பேரரசி எலிசபெத்திடமிருந்து 1600-ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்களில் ஒரு **சாசனத்தின் (Charter)** வடிவில் பெற்றனர். இச் சாசனம் மேற்படி நிறுவனத்தின் மேலாண்மையை ஒரு ஆளுநர் மற்றும் 24 உறுப்பினர்களின் கையில் ஒப்படைத்தது. அவர்கள் கிழக்கிந்தியாவுடன் வணிகம் செய்ய வணிகக் குழுக்களை அனுப்பி னர். மேலும் இச்சாசனம் இந்தியாவுடன் ஒரு முற்றுரிமை பெற்ற வணிகத்தை மேற்கொள்ள கிழக்கிந்தியக் கம்பெனிக்கு அதிகாரம் வழங்கியது. அத்துடன் நிறுவனத்தின் பாதுகாப்புக்காக ஆயுதந்தாங் கிய ஒரு கப்பற்படையை நிறுவிக் கொள்ளவும் அது வகை செய்தது.

மேற்படி சாசனம் கொடுத்த பல்வேறு அதிகார பலத்தால், கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவின் பல்வேறு இடங்களில் தனது வணிக மையங்களை நிறுவியது. ஆண்டுகள் செல்லச் செல்ல அப்போதைய இந்திய அரசர்களுடன் ஏற்பட்ட பல்வேறு நிர்ணய உடன்படிக்கைகளின் (செட்டில்மெண்ட்) விளைவாக பம்பாய், மெட்ராஸ், கல்கத்தா ஆகிய நகரங்கள் கிழக்கிந்தியாவின் முதன்மை மகாணங்களாக ஆகின. இந்நகரங்களின் நிருவாகமானது தலைவர் மற்றும் கிழக்கிந்திய பணியாட்களைக் கொண்ட ஒரு மன்றத்தால் மேற்கொள்ளப்பட்டது. அச்சமயத்தில் இந்தியாவை ஆண்டு வந்த மன்னர்கள் மற்றும் ஆட்சியர்கள் ஆங்கிலேயர்களுக்கு வழங்கிய அல்லது அவர்களிடமிருந்து வலுவில் பறித்துக் கொள்ளப்பட்ட பல்வேறு ஆட்சிச் சலுகைகள், மெல்ல மெல்ல கிழக்கிந்தியக் கம்பெனியை இந்தியாவின் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களாக்கியது. சுருங்கச் சொன்னால் பிரிட்டிஷ் பேரரசு இந்தியாவை அடிமைப் படுத்தி, அதன் மகாணங்களை தனது இறையாண்மையின் கீழ் கொண்டு வர ஆரம்பித்தது.

கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் தடம் பதித்த 1600-ஆம் ஆண்டில் அதற்கு சட்டமியற்றும் அதிகாரம் ஏதும் வழங்கப்பட வில்லை. ஏனெனில் கிழந்தியக் கம்பெனியின் அப்போதைய நோக்கம் இந்தியாவில் வணிகம் செய்வதே தவிர, தாம் வணிகம் செய்ய வந்த ஒரு அயல்நாட்டின் எல்லையைக் கைப்பற்றி அதை ஆட்சி செய் வதோ, அதற்காக சட்டமியற்றுவதோ அல்ல! எனினும் கிழக்கிந்தியக் கம்பெனியின் நல்ல நிருவாகத்திற்காக தகுந்த சட்ட திட்டங்களை

இயற்றிக் கொள்ளும் அதிகாரத்தை கம்பெனிக்கும் அதன் ஆளுநருக்கும் 1601-ஆம் ஆண்டின் சாசனம் (சார்ட்டர்) வழங்கியது. வேறு வகையில் சொன்னால் இந்த சாசனம் கம்பெனியின் நிருவாகத்தை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கான சட்டங்களை ஒரு சிறிய அளவில் இயற்றிக் கொள்ள அதிகாரம் வழங்கியது எனலாம். இத்தகு அதிகாரங்கள் 1609 மற்றும் 1661-ஆம் ஆண்டு சாசனங்களாலும் வழங்கப்பட்டன.1693-ஆம் ஆண்டு சாசனத்தில் இந்த சட்டமியற்றும் அதிகாரம் பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை.

இதையடுத்து 1726-ஆம் ஆண்டில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஆங்கிலேய அரசு வழங்கிய சாசனம், சட்டமியற்றும் அதிகாரம் குறித்து முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. அதாவது இந்த காலகட்டத்திலிருந்து இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனிக்குத் தேவையான சட்டமியற்றும் அதிகாரம் இங்கிலாந்தின் இயக்குநர்கள் மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டதாகியது. ஆனால் அம்மன்றம் இந்தியாவில் நிலவும் சூழலை அறியாதவர்களாக இருந்தது. எனவே இந்திய நிலையை அறிந்தவர்களிடம் சட்டமியற்றும் அதிகாரத்தை ஒப்படைப்பதே சிறந்தது என்று முடிவெடுக்கப் பட்டது. எனவே கிழக்கிந்தியக் கம்பெனியின் சிறந்த நிருவாகத்திற்கான துணைச் சட்டங்கள், விதிகள், அவசர ஆணைகள் ஆகிய வற்றை இயற்றும் அதிகாரமானது பம்பாய், மெட்ராஸ், கல்கத்தா ஆகிய மூன்று மாகாணங்களின் ஆளுநர் மற்றும் அவரது மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டது. மேலும் இவற்றை மீறுவோரை தண்டிக்கும் அதிகாரமும் வழங்கப்பட்டது. இச்சட்ட திட்டங்கள் கம்பெனியின் இயக்குநர்கள் மன்றத்தின் ஒப்புதல் பெற்று உறுதி செய்யப்பட்ட பிறகுதான் செயலுக்கு வர வேண்டும் என்றும் மேற்படி சாசனத்தில் விதிக்கப்பட்டது. மேலும் பம்பாய், மெட்ராஸ், கல்கத்தா ஆகிய மாகாணங்களில் மேயர் நீதிமன்றங்களை கட்டமைக்கவும் வழிவகை செய்தது. அத்துடன் இந்த மாகாணங்களில் சிறிதுசிறிதாக ஆங்கிலச் சட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டது.

எனினும் 18-ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதி வரை பிரிட்டிஷ் அரசு இந்தியாவின் ஆட்சியாளர்களாக ஆகவில்லை. இதையடுத்து வங்காளத்தின் உட்பகுதிகளில் நடந்த பல்வேறு நிகழ்வுகள் பிரிட்டிஷ் அரசு இந்தியாவின் ஆட்சிக்குள் நுழைய வழி வகுத்தது எனலாம். அப்போதைய மொகலாய பேரரசில் ஏற்பட்ட வேற்றுமைகள் பிரிட்டனுக்கு சாதகமாக அமைந்தன. வலிமை மிக்க மொகலாய பேரரசர் ஔரங்கசீப் மறைந்தவுடன் மொகலாய

ஆட்சியும் சிதைவடைந்தது. இந்த ஆட்சியை கைப்பற்ற நடந்த போர்கள் இந்தியாவில் குழப்பமான சூழலை ஏற்படுத்தின. இதை பிரிட்டிஷ் அரசு தனக்கு அனுகூலமாக முழுமையாக பயன்படுத்திக் கொண்டது. மெல்ல இந்திய துணைக்கண்டத்தின் போட்டியில்லா முதலாளியாக கிழக்கிந்தியக் கம்பெனி மாறியது. 1757-இல் வங்காள நவாப் சிராஜிதுல்லாவை எதிர்த்து நடந்த பிளாசிப் போரில் கிழக்கிந்தியக் கம்பெனி வெற்றி பெற்றது. இதன் மூலமாக இந்தியாவில் பிரிட்டிஷ் பேரரசு தனது ஆட்சிக்கான அடிக்கல்லை உறுதியாக இட்டது. 1765-இல் ஷா ஆலம் என்ற மன்னர் திவானியை அதாவது அரசுக்கு நில வருவாய் வசூலிக்கும் பொறுப்பை கிழக்கிந்தியக் கம்பெனிக்கு வழங்கினார். இது உரிமையியல் நீதி நிருவாகத்தை செய்யும் உரிமையையும் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு தானாகவே வழங்கியதாகியது. இதற்குப் பின்னிட்டும் தங்களுக்கு வணிகர்கள் என்ற முகமூடி அவசியமில்லை என்று கருதி, அதை கழற்றி எறிந்துவிட்டு ஆட்சியாளர்கள் என்ற தங்கள் சுயரூபத்தை கிழக்கிந்தியக் கம்பெனி காட்டியது.

(2) 1765 முதல் 1858 - ஆங்கிலேய ஆட்சியின் தொடக்கம்:

வங்காளம், பீகார் மற்றும் ஒரிஸ்ஸாவில் நில வருவாய் வசூலிக்கும் பொறுப்பை (திவானி) கிழக்கிந்தியக் கம்பெனி பெற்ற தன் மூலமாக அது அப்பகுதிகளின் உண்மையான உரிமையாளராக ஆகியது. இதன் விளைவாக உரிமையியல் நீதி நிருவாகம் செய்யும் பொறுப்பையும் கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்றது. எனினும் பரந்த நில எல்லையுடைய இப்பகுதிகளுக்கான மேற்கண்ட பொறுப்புகளை செவ்வனே ஆற்றுவதில் கிழக்கிந்தியக் கம்பெனிக்கு ஏராளமான இடர்பாடுகள் தோன்றின. இதனால் அப்பொறுப்புகளை உடனடியாக செயல்படுத்த இயலவில்லை. எனவே அவற்றை இந்தியர்களிடமே கிழக்கிந்தியக் கம்பெனி விட்டுவிட்டது. இருந்தாலும் அவற்றை கண்காணிக்க இரண்டு ஆங்கிலேயே அலுவலர்களை கிழக்கிந்தியக் கம்பெனி நியமனம் செய்தது. ஆனால் இது பல்வேறு தீய விளைவுகளுக்கு இட்டுச் சென்றது. கிழக்கிந்தியக் கம்பெனியின் பணியாட்கள் தங்கள் சுயலாபத்திற்காக இந்திய மக்களை பல வகையிலும் துன்புறுத்த ஆரம்பித்தனர். அவர்களது செல்வங்களை சுரண்டிச் சென்றனர். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சி கொடுங்கோன்மை ஆட்சியாக மாறியது. குறிப்பாக வங்காளத்தில் அப்போது கடுமையான வறட்சி நிலவி, இயற்கையும் மக்களை சோதித்தது. கம்பெனியின் பணியாட்களோ இந்திய மக்களிடம் சுரண்டிய

பணத்தால் பெரும் பணக்காரர்களாக ஆகிக் கொண்டிருந்தனர். ஆனால் கம்பெனியோ தன்னிடம் பணம் இல்லை என்று பிரிட்டிஷ் அரசிடம் ஒரு பெருந்தொகையை கடனாகக் கேட்டது. இவை யாவும் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாகத்தின் மீது பிரிட்டிஷ் அரசு அய்யம் கொள்ள வைத்தது. இதனை விசாரணை செய்ய பிரிட்டிஷ் அரசு ஒரு இரகசிய குழுவை நியமனம் செய்தது. அது தனது அறிக்கையில் கிழக்கிந்தியக் கம்பெனியின் பல்வேறு ஒழுங்கற்ற நிருவாகத்தை, குறைபாட்டை வெளிப்படுத்தியது. இவற்றை சீர்படுத்த 1773-ஆம் ஆண்டில் ஒரு **ஒழுங்குமுறைச் சட்டத்தை (Regulating Act, 1773)** பிரிட்டன் நாடாளுமன்றம் கொண்டு வந்தது.

இந்திய அரசியலமைப்பின் வளர்ச்சி இந்தச் சட்டத்திலிருந்து தொடங்கியது எனலாம். அதாவது இந்தியாவில் கிழக்கிந்தியக் கம்பெனியின் நிருவாகத்தை ஒழுங்குபடுத்த இங்கிலாந்து நாடாளுமன்றத்திற்கு இவ்வாறு சட்டமியற்றுவதற்கு உள்ள உரிமையை முதன்முறையாக இச்சட்டம் விளம்பியது. சுருங்கச் சொன்னால், திட்டவட்டமான இந்திய அரசாங்க முறையை கட்டமைக்க முதன்முறையாக பிரிட்டன் நாடாளுமன்றம் கொண்டு வந்ததே மேற்படி ஒழுங்குமுறைச் சட்டம், 1773 ஆகும். இச்சட்டம் பின்வரும் நான்கு விடயங்களை நிறைவேற்றும் முகமாக அமைந்தது. (1) கிழக்கிந்தியக் கம்பெனியின் கட்டமைப்பை இச்சட்டம் இங்கிலாந்தில் மாற்றியமைத்தது; (2) கல்கத்தா அரசாங்க முறையை அங்கீகரித்தது; (3) பம்பாய் மற்றும் மெட்ராஸ் மகாணங்களை ஒரு குறிப்பிட்ட அளவில் வங்காள தலைமை ஆளுநரின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது; மற்றும் (4) கல்கத்தாவில் ஒரு உச்ச நீதிமன்றத்தை கட்டமைத்தது.

இச்சட்டத்திலும் சில குறைகள் தோன்றின. எனவே அவற்றைக் களைய பிரிட்டன் நாடாளுமன்றம் **1781-ஆம் ஆண்டில் நிர்ணயச் சட்டமொன்றை (Act of Settlement, 1781)** இயற்றியது. எனினும் இந்தச் சட்டமும் பெரிய பயன் ஏதும் தரவில்லை. மேலும் கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவின் மீது செய்து வந்த நிருவாகத்தின் மீது தகுந்த கட்டுப்பாடு வேண்டும் என்ற போராட்டமும் தொடர்ந்து வந்தது. இது பிரிட்டன் நாடாளுமன்றத்தின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்ட போது, கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிக மற்றும் அரசியல் செயல்பாடுகளை வேறுபடுத்தி, அதற்கான சட்ட திட்டங்களை வகுத்துரைக்கும் வண்ணமாக அது **பிட் இந்தியச் சட்டத்தை (Pitts India Act, 1784)** 1784-இல் இயற்றியது.

இதையடுத்து 1813, 1833 மற்றும் 1853-இல் **மூன்று பட்டயச் சட்டங்கள் (The Charter Act, 1813, 1833 and 1853)** இயற்றப் பட்டன. இவற்றில் 1833-ஆம் ஆண்டு பட்டயச் சட்டமானது இந்திய சட்டமியற்றும் கட்டமைப்பில் முக்கிய மாற்றங்களை கொண்டு வந்தது. இதன்படி வங்காளத் தலைமை ஆளுநர் இந்தியாவின் தலைமை ஆளுநர் என பெயரிடப்பட்டார். மேலும் சட்டங்களை இயற்றி பிரகடனப்படுத்தும் உரிமையை முதன்முறையாக மன்றத் தமர் தலைமை ஆளுநர் (Governor - General - in - Council) பெற் றார். தலைமை ஆளுநரின் மன்றத்தில் சட்ட உறுப்பினர் ஒருவர் சேர்க்கப்பட்டார். 1853-ஆம் ஆண்டு சாசனச் சட்டப்படி நிருவாகத் துறையும் சட்டமியற்றும் துறையும் தனித்தனியாகப் பிரிக்கப்பட் டன. இந்தியாவிற்காக சட்டமியற்றும் நோக்கத்திற்காக 12 உறுப் பினர்களைக் கொண்ட ஒரு சட்டமியற்றும் மன்றம் அமைக்கப்பட் டது.

(3) 1858 முதல் 1919 - கிழக்கிந்திய கம்பெனி ஆட்சியின் முடிவு:

1858-ஆம் ஆண்டில் இந்திய அரசு சட்டத்தை பிரிட்டன் நாடாளுமன்றம் இயற்றியது. இது பிரிட்டனிலும், இந்தியாவிலுமாக விளங்கிய இரு சட்டமியற்றும் அரசு முறைக்கு சாவு மணி அடித்து கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சிப் பொறுப்பை பிரிட்டிஷ் அரசுக்கு மாற்றியது. ஆங்கில அரசு இந்தியாவை தன் அரசுப் பகராள் மூலமாக ஆட்சி புரிந்து வந்தது.

பின் 1861-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட **இந்திய மன்றச் சட்டமானது (Indian Council Act, 1861)**, தலைமை ஆளுநரின் செயற் குழுவினை மையச் சட்டமியற்றும் குழுவாக விரிவுபடுத்தியது. பம்பாய் மற்றும் மெட்ராஸ் மாகாணங்களுக்கு சட்டமியற்றும் அதிகாரத்தை மீண்டும் வழங்கியது.

தொடர்ந்து 1892-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட **இந்திய மன்றங்கள் சட்டமானது (Indian Councils Act, 1892)**, தலைமை ஆளுநரின் செயற்குழுவை மீண்டும் விரிவுபடுத்தியது. வரவு செலவுத் திட்டத்தை விவாதிக்கும் அதிகாரத்தையும் அது பெற்றது. மாகாணச் சட்டமியற்றும் மன்றங்களின் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் கூடுதலாக்கப்பட்டது.

பின் 1909-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட **இந்திய மன்றங்கள் சட்டமானது (Indian Councils Act, 1909) மார்லி மிண்டோ சீர்திருத்தங்களை (Morley Minto Reforms)** அறிமுகப்படுத்தியது.

மையத்திலும் மாகாணங்களிலும் உள்ள சட்டமியற்றும் மன்றங்கள் விரிவுபடுத்தப்பட்டன. தலைமை ஆளுநரின் மன்றத்தில் உள்ள கூடுதல் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டது.

(4) 1919 முதல் 1947 - சுயாட்சியின் தொடக்கம்:

இது இந்திய அரசியலமைப்பு பிறக்க வழி வகுத்த கால கட்டம் ஆகும். மார்லி மின்டோ சீர்திருத்தங்கள் இந்தியர்களின் எதிர்பார்ப்புகளை பூர்த்தி செய்யத் தவறிவிட்டது. அது இந்தியாவில் நாடாளுமன்ற முறை அரசாங்கத்தை நிறுவவில்லை. முதலாம் உலகப் போரின் போது இந்திய தேசிய காங்கிரஸ் மிகவும் தீவிரமாக இருந்தது. மேலும் பிரிட்டிஷ் அரசிடம் சுயாட்சி குறித்த பல்வேறு சீர்திருத்தங்களை முன் வைத்தது. எனவே 1919-ஆம் ஆண்டில் **மாண்டேகு செம்ஸ்ஃபோர்டு கொடுத்த அறிக்கையின் (Montagu Chelmsford Report)** அடிப்படையில் **இந்திய அரசுச் சட்டம் (Government of India Act, 1919)** இயற்றப்பட்டது. இதன் நோக்கம் இந்தியர்களுக்கு நிருவாகத்தின் ஒவ்வொரு துறையிலும் கூடுதலான பிரதிநிதித்துவம் அளித்து அவர்களை பொறுப்பான சுயாட்சிக்குத் தயார்படுத்த வேண்டும் என்பதேயாகும். பிரிட்டிஷ் அரசின் இந்த நடவடிக்கை இந்தியாவின் விடுதலைக்கு அடிகோலியது என்பதில் மாற்றுக் கருத்தில்லை. எனினும் இச்சட்டமும் இந்தியாவின் முழுமையான விடுதலைக்கு வழி வகுக்கவில்லை.

ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்திற்கு எதிராக இந்திய மக்கள் கிளர்ந்தெழுந்தனர். எனவே இது குறித்து மேலும் விசாரணை நடத்த வேண்டும் என்று கருத்து பிரிட்டன் நாடாளுமன்றத்தில் எதிரொலித்தது. அது 1928-ஆம் ஆண்டில் சர் ஜான் சைமன் என்பவரின் தலைமையில் ஒரு குழுவை **(சைமன் குழு)** நியமனம் செய்து, நிலையை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கக் கோரியது. அக்குழு தனது பரிந்துரையில் மாகாணங்களில் சுயாட்சி என்ற கருத்தினை செயல் படுத்த வேண்டும் என்று வலியுறுத்தியது.

இதன் அடிப்படையில் பிரிட்டன் நாடாளுமன்றம் 1935-ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு சட்டத்தை இயற்றியது. அது **இந்திய அரசுச் சட்டம், 1935 (Government of India Act, 1935)** ஆகும். இச்சட்டம் இந்திய விடுதலையை நோக்கிச் சென்ற இரண்டாவது மைல் கல் ஆகும். இது மைய அரசில் பகுதியளவு பொறுப்பினையும், மாகாணங்களில் சுயாட்சியையும், அனைத்திந்திய கூட்டாட்சியையும் அறிமுகப்படுத்தியது. மேலும் கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) ஒன்றையும் நிறுவியது. அதாவது இச்சட்டமானது இந்தியருக்கு

வரையறுக்கப்பட்ட சுயாட்சி உரிமையை வழங்கியது. மேலும் இச்சட்டம் பிரிட்டிஷ் நிலப்பகுதிகள் மற்றும் கூட்டாட்சியில் வர விழையும் இந்திய மாகாணங்கள் ஆகியவற்றைக் கொண்ட அனைத்திந்திய கூட்டாட்சியை நிறுவுவதற்கு வழிவகை செய்திருந்தது. குறிப்பிட்ட அளவிற்கு மாகாணங்களுக்கு சுயாட்சியையும் வழங்கியிருந்தது. இதன்படி பல மாகாணங்களில் மக்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகள் பதவியேற்று ஆண்டு வந்தன. இந்திய விடுதலையைக் கோரி காங்கிரஸ் தனது போராட்டத்தைத் துரிதப் படுத்தியது.

இந்நிலையில் 1942-ஆம் ஆண்டில் ஆங்கில அரசு **கிரிப்ஸ் மிஷினை (The Cripps Mission)** இந்தியாவிற்கு அனுப்பியிருந்தது. இது பல்வேறு புரிவுரைகளை முன் வைத்தது. ஆனால் இவற்றில் நிறைவு கொள்ளாமல் இந்தியர்கள் அதைப் புறக்கணித்தனர்.

இதற்குப் பின்னர் இங்கிலாந்து நாட்டில் **தொழிலாளர் கட்சி (Labour Party)** அரசமைந்தது. அது இந்தியாவை கனிவுடன் அணுகி இந்தியப் பிரச்சனைகளைத் தீர்த்திட 1946-ஆம் ஆண்டில் **கேபினட் மிஷினை (Cabinet Mission)** இந்தியாவிற்கு அனுப்பி வைத்தது. இந்திய ஒன்றியத்தை (யுனியன்) நிறுவுதல், பிரிட்டிஷ் மன்ன ராட்சியை முடிவுக்கு கொண்டு வருதல், **புதிய அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்குதல் (Framing of New Constitution)** மற்றும் இடைக்கால அரசு ஒன்றை ஏற்படுத்துதல் ஆகியவற்றை இது முன் மொழிந்தது. இவற்றை காங்கிரஸ் ஏற்றது. இதைத் தொடர்ந்து 1946-ஆம் ஆண்டு ஜூலையில் அரசியலமைப்பு அவைக்கான **(Constituent Assembly)** தேர்தல் நடைபெற்றது.

இந்நிலையில் மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியா வந்து நிலைமையைக் கண்டறிந்து தனது பரிந்துரைகளை இங்கிலாந்துக்கு அனுப்பி வைத்தார். இவற்றை ஏற்று ஆங்கில அரசு, 1947-ஆம் ஆண்டு மவுண்ட்பேட்டன் திட்டத்தில் கூறப்பட்ட வாசகங்களைக் கொண்ட 1947-ஆம் ஆண்டின் **இந்திய சுதந்திரச் சட்டத்தினை (The Indian Independence Act, 1947)** இயற்றியது. இது 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாள் முதல் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் தனித்தனியான சுதந்திர டொமினியன்கள் உருவாக வழி வகுத்தது. இது அரசியலமைப்பு அவை அமைய அதிகாரமளித்தது. புதிய அரசியலமைப்புச் சட்டத்தை இயற்றும் வரை 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசுச் சட்டம் தொடர்ந்து செயலில் இருக்க வழி வகை செய்தது. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15 ஆம் நாளிற்குப் பிறகு

டொமினி யனையோ, மகாணங்களையோ ஆங்கில அரசு ஆள முடியாது என்றும் உரைத்தது. 1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 15-ஆம் நாள், 1947-ஆம் ஆண்டின் இந்திய சுதந்திரச் சட்டம் செயலுக்கு வந்தது. ஆங்கில ஆட்சியும் முடிவு பெற்றது.

(5) 1947 முதல் 1950 - இந்திய அரசியலமைப்பை உருவாக்குதல்:

சுதந்திர இந்தியாவின் முதல் தலைமை ஆளுநராக (கவர்னர் ஜெனரல்) மவுண்ட் பேட்டன் பதவியேற்றார். 1935-ஆம் ஆண்டின் இந்தியச் சட்டம் திருத்தப்பட்டு, புதிய அரசியலமைப்புச் சட்டம் வரையப்பட்டு செயலுக்கு வரும் வரை, தற்காலிக அரசியலமைப்புச் சட்டம் ஏற்பட வழி வகை செய்யப்பட்டது. மன்னராட்சி புரிந்த மாகாணங்கள் இந்தியாவுடன் இணைந்தன. இந்நிலையில் அரசியல மைப்பு அவையே தற்காலிக நாடாளுமன்றமாக செயல்பட்டது. மேலும் அரசியலமைப்பை உருவாக்கும் பணியையும் செய்தது.

1947-ஆம் ஆண்டு ஆகஸ்டு 29-ஆம் நாள் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் தலைமையில் ஒரு வரைவுக் குழு **(Drafting Committee)** நியமிக்கப்பட்டது. பல்வேறு பொருள்கள் குறித்து விரிவாக ஆராய குழுக்கள் பல நியமிக்கப்பட்டன. இந்தக் குழுக்கள் தயாரித்த அறிக்கைகள் அரசியலமைப்பு அவையில் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டன. இந்த அறிக்கையின் அடிப்படையில் அரசியலமைப்பு ஆலோசகர் டாக்டர் பி.என்.ராவ் அவர்களால் வரைவு அரசியல மைப்புச் சட்டம் (Draft Constitution) ஒன்று உருவாக்கப்பட்டது.

டாக்டர் அம்பேத்கர் தலைமையின் கீழ், வரைவுக் குழு, இதை ஆராய்ந்து 315 ஷரத்துகள் மற்றும் 8 அட்டவணைகள் கொண்ட அரசியலமைப்பு வரைவு ஒன்றினை உருவாக்கியது. இதனை அரசியலமைப்பு அவை விரிவாகக் கவனத்தில் கொண்டு ஆராய்ந்து விவாதம் செய்தது. இதையடுத்து இறுதியாக 395 ஷரத்துகளும் 8 அட்டவணைகளும் கொண்ட வரைவினை அரசியலமைப்பு அவை ஒப்புக் கொண்டது. இது 1948-ஆம் ஆண்டு ஜனவரியில் வெளியானது. இந்த வரைவினை விவாதிக்கவும், திருத்தங்களை முன்மொழியவும், குடிமக்களுக்கு 8 மாத கால அவகாசம் கொடுக்கப்பட்டது. இறுதியாகப் புதிய அரசியலமைப்புச் சட்டம், அரசியல மைப்பு அவையால் 1949-ஆம் ஆண்டு நவம்பர் 26-ஆம் நாள் ஏற்கப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க எடுக்கப்பட்ட கால

அளவானது இரண்டு ஆண்டுகள் பதினொரு மாதங்கள் 17 நாள்கள் ஆகும். ஷரத்துகள் 5 முதல் 9, 60, 324, 366, 367, 372, 380, 391 முதல் 393 ஆகியன உடனடியாக செயலுக்கு வந்தன. மற்றவை 1950 ஜனவரி 26-ஆம் நாள் முதல் செயலுக்கு வந்தன. அரசியலமைப்பு அவை, அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கியதோடு அல்லாமல் வேறு சில பணிகளையும் ஆற்றியது என்பது குறிப்பிடத்தக்கது.

அரசியலமைப்பு அவை, நாடாளுமன்றமாகவும் செயல்பட்டது. இது பல சட்டங்களை இயற்றியது. தேசியக் கொடி, தேசிய கீதம் ஆகியவற்றை ஏற்றுக் கொண்டது. இந்தியக் குடியரசுத் தலைவருக்கான தேர்தலையும் மேற்கொண்டது.

7A. Framing of the Constitution of India - Write short notes. (இந்திய அரசியலமைப்பை உருவாக்குதல் - குறுகிய விடை தருக.)

[முந்தைய வினாவின் விடையில் இறுதியில் வரும் (5)-ஆம் தலைப்பின் கீழ் உள்ளதை வாசிக்கவும்.]

-o0o-

அத்தியாயம் 3

இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள் – இந்திய அரசியலமைப்பின் தன்மை [Outstanding features of the Indian Constitution - Nature of the Indian Constitution]

(i) இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள் [Outstanding features of the Indian Constitution]

8. Enumerate the outstanding features of the Indian Constitution. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சிறப்பு அம்சங்களை விளக்குக.)

(அல்லது)

Explain the salient features of the Indian Constitution. (இந்திய அரசமைப்பு சட்டத்தின் சிறப்பு தன்மைகளை விளக்குக.)

முன்னுரை:

ஒவ்வொரு அரசியலமைப்பும் தனக்கே உரித்த சில தனிப் பண்புகளையும், சிறப்பு அம்சங்களையும் கொண்டிருக்கும். அதைப் போல இந்திய அரசியலமைப்பும் பின்வரும் சிறப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள்:

1. **உலகிலேயே மிக நீளமான அரசியலமைப்பு (The lengthiest Constitution in the World)** : உலகிலேயே எழுதப் பெற்ற

அரசியலமைப்பில் மிக விரிவானதும், நீளமானதும் நமது இந்திய அரசியலமைப்பே ஆகும். தொடக்க கால கட்டத்தில் இது 22 பகுதிகளின் (Parts) கீழ் 395 ஷரத்துகளையும் (Articles), 10 அட்டவணைகளையும் (Schedules) கொண்டதாக இருந்தது. ஆனால் 2003-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 92-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்குப் (92nd Amendment Act, 2003) பிறகு, இந்திய அரசியலமைப்பு இன்று **26 பகுதிகளின் கீழ் 444 ஷரத்துகளையும், 12 அட்டவணைகளையும்** கொண்டு விளங்குகிறது.

2. **பல நாட்டு அரசியலமைப்புகளின் கலப்பு** : நமது இந்திய அரசியலமைப்பு பல நாடுகளின் அரசியலமைப்பு தன்மைகளை தனதாக எடுத்துக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, அடிப்படை உரிமைகள் பகுதி, அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசியலமைப் பிலிருந்து ஏற்கப்பட்டுள்ளது. நமது பாராளுமன்ற முறை, பிரிட் டனின் அரசியலமைப்பிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அரசு நெறி முறையுறுத்தும் கொள்கைகள் பகுதி, அயர்லாந்து அரசியலமைப் பிலிருந்தும், குடியரசுத் தலைவரின் நெருக்கடிக் கால அதிகாரங்கள் ஜெர்மனி அரசியலமைப்பிலிருந்தும் எடுக்கப்பட்டவையாகும்.

3. மத்திய அரசிற்கு **'பாராளுமன்றம்'** என்ற அமைப்பையும், மாநில அரசுகளுக்கு **'சட்டசபை அல்லது சட்டமன்றம்'** என்ற அமைப்பையும் நமது அரசியலமைப்பு உருவாக்கித் தந்துள்ளது.

4. **இறைமை வாய்ந்த அரசு (A Sovereign State)** : இந்திய அரசிய லமைப்பு இந்தியாவை ஒரு இறைமை வாய்ந்த, சமதர்ம நெறி சார்ந்த, சமயச் சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசாக உருவாக்கி யுள்ளது. இதனால், அது மற்ற எந்த நாட்டின் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட்டதல்ல.

5. **மக்களாட்சி நாடு (Democratic Principle)**: இந்திய அரசிய லமைப்பு, மக்களுக்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, மக்களின் அரசு எனும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

6. **நெகிழ்வற்ற மற்றும் நெகிழ்வுடைய தன்மையின் கலப்பு (Unique blend of rigidity and flexibility)** : அரசியலமைப்புச் சட் டம், சாதாரண தருணங்களில், அது திருத்தப்படுவதற்கு நெகிழ்ந்து கொடுக் காமலும், அசாதாரண தருணங்களாகிய போர், வெளி ஆக்ர மிப்பு அல்லது ஆயுதக் கலகம் போன்ற நெருக்கடியான காலங்களில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்படுவதற்கு ஏதுவாக நெகிழ்ந்தும் கொடுக்கிறது.

7. **கூட்டாட்சிப் போல்வு அரசியலமைப்பு (Quasi-fedral Constitution)** : இந்திய அரசியலமைப்பு சில சமயங்களில் கூட்டாட்சியாகவும் சில சமயங்களில் ஒற்றையாட்சியாகவும் செயல்படுகிறது. எடுத்துக்காட்டாக, நெருக்கடிக் காலங்களில் அல்லது தேச நலன் சார்ந்த விஷயங்களில் இந்தியாவின் ஆட்சி முழுவதும் மத்திய அரசின் கைகளில் வந்து விடுகிறது. இதனால் கூட்டாட்சி மறைந்து ஒற்றையாட்சி ஏற்படுகிறது. எனவே, இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சிப் போல்வாக உள்ளது.

8. **அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)**: இந்திய அரசிய லமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதியில் (Part III), குடிமக்களுடைய அடிப் படை உரிமைகள் விளக்கப்பட்டுள்ளன. இந்த அடிப்படை உரிமைகளை நீக்கும்படியோ அல்லது மீறும்படியோ அரசானது, எந்த சட்டத்தையும் இயற்ற இயலாது. ஒருவேளை அந்த அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால், அதிலிருந்து பாதுகாக்க அய்ந்து வகையான நீதிப்பேராணைகள் (Writs) வழியாக குடி மக்களுக்கு நமது அரசியலமைப்பு நிவாரணம் அளிக்கிறது.

9. **அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் (Directive Principles of State Policy)** : இவை பற்றி, நமது அரசியலமைப்பின் நான்காவது பகுதியில் (Part IV) உள்ள 38 முதல் 51 வரையிலான ஷரத்துகள் குறிப்பிடுகின்றன. இந்திய மக்களுக்கு சமூகம், பொருளா தாரம், அரசியலில் நீதி கிடைக்கும் வகையில், அரசு தனது கொள்கை களை வகுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்நியதிகள் கூறுகின்றன.

10. **பாராளுமன்ற முறை அரசாங்கம் (Parliamentary Form of Government)** : நமது அரசியலமைப்பை உருவாக்கியவர்கள், நமது பாராளுமன்ற முறையை, பிரிட்டன் நாட்டின் அரசியலமைப்பினை அப்படியே அடியொற்றி அமைத்துள்ளார்கள். மேலும் நமது அரசியலமைப்பில் குடியரசுத் தலைவர் முறையும் (Presidential System) உள்ளது. மொத்தத் தில் இந்திய அரசியலமைப்பு பாராளுமன்ற குடியரசுத் தலைவர் முறையாக விளங்குகின்றது.

11. **சுதந்திரமான நீதித்துறை (An Independent Judiciary)** : பல அடிப்படை உரிமைகள் அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப் பட்டிருப்பினும், அவற்றை முறையாகப் பாதுகாப்பதற்கு ஓர் அமைப்பு இல்லையென்றால், அப்படிப்பட்ட அடிப்படை உரிமை களினால் குடிமக்களுக்கு எவ்வித பலனும் விளையாது. இதற்காகவே, ஒரு சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற நீதித்துறையானது நீதிமுறை

மறுஆய்வு அதிகாரத்துடன் (with power of Judicial Revicw), இந்திய அரசியலமைப்பின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

12. **சமயச் சார்பற்ற அரசு (A Secular State)** : இந்தியாவை ஒரு சமயச் சார்பற்ற அரசாக அரசியலமைப்பு உருவாக்கியுள்ளது. அது எல்லா சமயத்தையும் சமமாக பாவிக்கிறது.

13. **வயதடைந்தோர் ஓட்டுரிமை (Adult Sufferage)**: இனம், சமயம், சொத்துரிமை, படிப்பு இவைகளைக் கடந்து, இந்தியக் குடிமகன் ஒருவனுக்கு 18 வயது நிரம்பி விட்டால், அவனுக்கு தேர்தலில் ஓட்டளிக்கும் உரிமையை இந்திய அரசியலமைப்பு வழங்குகிறது. **(ஷரத்து 326)**

14. **ஒற்றைக் குடியுரிமை (Single Citizenship)** : இந்தியாவில் மத்தியில் ஒரு அரசாங்கமும் மாநிலத்தில் ஒரு அரசாங்கமுமாக இரட்டை அரசாங்க முறை இருந்தாலும், இந்திய குடிமக்களுக்கு இந்தியா முழுவதற்கும் பொருந்தக் கூடிய ஒற்றை குடியுரிமைதான் உண்டு. ஆனால், அமெரிக்க அய்க்கிய நாடுகளிலும், சுவிட்சர்லாந்திலும், மத்திய அரசைப் பொறுத்தவரை ஒரு குடியுரிமையும் மாநிலங்களைப் பொறுத்தவரை ஒரு குடியுரிமையுமாக, இரட்டைக் குடியுரிமை (Double Citizenship) உள்ளது.

15. **சில வகுப்பினருக்கு தனிப்பட்ட சட்ட வகைமுறைகள் (Special provisions relating to certain classes)**: இந்திய அரசியலமைப்பு அட்டவணை சாதியினர் (Scheduled Caste) மற்றும் அட்டவணை பழங்குடியினருக்கு (Scheduled Tribes) தனிப்பட்ட சட்ட வகைமுறைகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

16. **அடிப்படைக் கடமைகள் (Fundamental Duties)** : 1976-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு 42-வது திருத்தச் சட்டமானது, நமது அரசியலமைப்பில் குடிமக்களுக்கு பத்து அடிப்படைக் கடமைகளின் தொகுப்பினை புகுத்தியுள்ளது. இந்த அடிப்படைக் கடமைகள், இந்திய அரசியலமைப்பால் சில அடிப்படை உரிமைகள் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதை அடிக்கடி நினைவூட்டி, அவர்கள் மக்களாட்சி உறவின் மற்றும் மக்களாட்சி நடத்தையின் சில நெறிகளை பின்பற்ற வேண்டிய அவசியத்தை உணர்த்துகிறது.

இவ்வாறு இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்கள் அமைந்துள்ளன.

9. Discuss the salient features of the Indian Constitution with reference to its federal characteristics. (இந்திய அரசியலமைப்பின் சிறப்பு அம்சங்களை அதன் கூட்டாட்சிப் பண்புகளுடன் சிறப்பாக சுட்டிக்காட்டி விவாதிக்க.)

[நாம் இதுகாறும் கண்ட சிறப்பு அம்சங்களை, வினா எண் 10-ன் கீழ் நாம் விவாதிக்க இருக்கும் இந்தியாவின் கூட்டாட்சி கூறுகளு டன் தொடர்புபடுத்தி எழுதுக.]

(ii) இந்திய அரசியலமைப்பின் தன்மை [Nature of Indian Constitution]

10. Define "Federalism" and discuss how far this principle is applicable to Indian Constitution. (கூட்டாட்சித்துவம் என்பதை வரையறுத்து, இக்கொள்கை எந்த அளவிற்கு இந்திய அரசியலமைப்பிற்கு பொருந்தும் என்பதை விவாதிக்க.)

(அல்லது)

What are the characteristics of a Federal Constitution ? To what extent Indian Constitution is fedreal in nature? (கூட்டாட்சி அரசமைப்பின் தனிச் சிறப்பியல்புகள் யாவை? இந்திய அரசமைப்பு எந்த அளவிற்கு கூட்டாட்சி தன்மை பெற்றது?)

(அல்லது)

State the essential characteristics of a fedreal constitution and discuss whether the Indian Constitution can be described a federal constitution. Illustrate your answer with leading cases and constitutional practices. (கூட்டாட்சி அரசமைப்பின் முக்கிய சிறப்பியல்புகளை கூறுக. மேலும் இந்திய அரசமைப்பு, கூட்டாட்சி அரசமைப்பென விவரிக்க இயலுமாவென விவாதிக்கவும். உங்களுடைய பதிலுரையை முதன்மையான வழக்கு தீர்ப்புரைகள் மற்றும் அரசமைப்பு நடைமுறைகளைக் கொண்டும் மேற்கோள் காட்டி விளக்குக.)

(அல்லது)

What are the essential features of a Federal Constitution? In the light of decided cases and Constitutional Provisions, dis-

cuss how far the Indian Constitution is federal in nature. (கூட்டாட்சி அரசமைப்பின் இன்றியமையா கூறுகள் யாவை? இந்திய அரசமைப்பு எந்த அளவிற்கு கூட்டாட்சி தன்மையது என்பதை முன் தீர்ப்புகள் மற்றும் அரசமைப்பு சட்ட வகையங்களின் படி விவாதிக்க.)

(அல்லது)

Is India a federation? (இந்தியா ஒரு இணைப்பாட்சியா?)

(அல்லது)

Critically examine the federal features of the Indian Constution. (இந்திய அரசியல் சட்டத்தில் கூட்டாட்சி முறையைப் பற்றி கூறப் பட்டுள்ள முக்கியக் கூறுகளை ஆராய்க.)

கூட்டாட்சித்துவம் (Federalism) - வரையறை:

அறிஞர் ஏ.வி.டைசி (A.V.Dicey) அவர்கள், ,"கூட்டாட்சித் துவம் என்றால், அரசின் அதிகாரங்கள் பல்வேறு ஒருங்கிணைந்த அமைப்புகளுக்கு பகிர்ந்து அளிக்கப்படுதலாகும்; அந்த அமைப்புகள் அரசியலமைப்பினால் எழுகின்றன மற்றும் கட்டுப்படுத்தப்படுகின்றன,"[1] என்று விளக்கமளிக்கிறார்.

அவரே தொடர்ந்து கூட்டாட்சி பற்றி கூறுகையில், "நாட்டின் ஒற்றுமையையும், அதிகாரத்தையும் மாநிலங்களின் உரிமைகளோடு சமன்படுத்தும் அரசியல் கருவியே கூட்டாட்சி யாகும்" என்று கூறுகிறார்.

பேராசிரியர் கே.சி. வெய்ர் (K.C.Wheare) அவர்கள், ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு, அரசின் அதிகாரங்களை மத்திய (அல்லது பொது) அரசாங்கத்திற்கும் மற்றும் மாநில (அல்லது வட்டார) அரசாங்கங்களுக்கும் இடையே பகிர்ந்து கொடுக்கிறது. கூட்டாடசி அரசியலமைப்பின் கீழ் மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் தங்களது ஆட்சிப் பரப்பில் ஒருங்கிணைந்து செயல்

1. Federalism means the distribution of powers of the State among a number of co-ordinate bodies each originating in and controlled by the Constitution. - **A.V.Dicey - The Law of the Constitution, p. 157 (10th edn.)**

படக் கூடியதும் மற்றும் சுதந்திரமானதுமாகுமே தவிர ஒன்று மற்றொன்றின் கீழ் அமைந்ததல்ல," [1] என்று கூறுகிறார்.

கூட்டாட்சி அரசியலமைப்பின் முக்கிய கூறுகள் அல்லது தனிச் சிறப்பியல்புகள் (Essential Characteristics of a Federal Constitution):

1. இரட்டை அரசாங்க முறை (System of Double Government): ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பானது எப்பொழுதும், இரண்டு அரசாங் கங்களை தோற்றுவிக்கிறது. அதாவது மத்திய அரசு மற்றும் மாநில (அல்லது வட்டார) அரசு. எனவே, இரட்டை அரசாங்க (அரசு) முறை இருக்க வேண்டியது, ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பின் முக்கிய கூறுகளுள் ஒன்றாகும்.

2. அதிகாரப் பகிர்வு (Distribution of Powers): கூட்டாட்சி அரசியலமைப்பு முறையென்றாலே, மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கு மிடையே அதிகாரப் பகிர்வு இருக்குமென்பது உள்ளங் கை நெல்லிக் கனியாகும். அதன்படி, கூட்டாட்சி நடைபெறுவதற்கு வசதியாக மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்படுகின்றன. கூட்டாட்சி முறையில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் (விஷயங்களில்) சட்டமிற்றும் அதிகாரம் மத்திய அரசிடமும், மாநில (வட்டார) முக்கியத்துவம் வாய்ந்த துறைகளில் சட்டமியற்றும் அதிகாரம் மாநிலங்களுக்கும் அளிக்கப்படுகிறது. உண்மையான கூட்டாட்சியில் **எஞ்சியுள்ள அதிகாரங்கள் (residuary powers)** மாநிலங்களுக்கு அளிக்கப்பட வேண்டும். அவை யாருக்கு அளிக்கப்பட வேண்டும் என்பது அந்தந்த நாட்டின் கூட்டாட்சி அரசியலமைப்புத் தன்மை யைப் பொறுத்த தாகும். எனவே, மத்திய அரசு தனது ஆட்சிக்குட் பட்ட பகுதியிலும், மாநில அரசுகள் மாநிலங்களிலும், உயர் அதிகாரம் கொண்டு விளங்குகிறது.

3. அரசியலமைப்பின் மேலாண்மை (Supremacy of Constitution): ஒரு கூட்டாட்சி அரசு தனது நிலைத்தன்மையை **(existence)** அதனை உருவாக்கிய அரசியலமைப்பிடமிருந்து பெறுகிறது.

1. A Federal Constitution provides for the distribution of powers of the State between the Central (or *general*) Government and State (or *regional*) Governments. Under the Federal Constitution, the Central and State are coordinate and independent in their sphere and not subordinate to one another. - **K.C.Wheare : Federal Government, . 27.**

அதாவது அரசியலமைப்பு இல்லையென்றால், கூட்டாட்சியும் இருக்க முடியாது. எனவே, நிர்வாகம் (executive), சட்டமியற்றல் (legislative) மற்றும் நீதிநிறுத்தல் (judicial) ஆகிய ஒவ்வொரு அதிகாரமும், அது மத்திய அரசை சேர்ந்ததாக இருந்தாலும் சரி அல்லது ஒரு தனிப்பட்ட மாநில அரசை சேர்ந்ததாக இருந்தாலும் சரி, அது அரசியலமைப்பாலேயே கட்டுப்படுத்தப்படுகிறது. ஒரு கூட்டாட்சி அரசின் அரசியலமைப்பானது, அந்நாட்டின் மேலாண்மை வாய்ந்த சட்டமாக **(Supreme Law of the Land)** உள்ளது. எனவே, அரசியலமைப்பு சட்டத்திற்கு முரணாக சட்டங்கள் ஏதேனும் இயற்றப்பட்டால், அது இல்லா நிலையதாகிறது.

4. எழுதப்பெற்ற அரசியலமைப்பு (Written Constitution): ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு, எழுதப்பெற்ற அரசியலமைப்பாக இருக்க வேண்டும். அரசியலமைப்பின் வகைமுறைகள் எழுத்து வடிவில் இல்லாமால் இருப்பின், அரசியலமைப்பின் மேலாண்மையை நிலைநிறுத்துவது, நடைமுறைரீதியில் கடினமாகும். எனவே, ஒரு அரசு கூட்டாட்சி அரசு என்று கூறப்பட, அதன் அரசியலமைப்பு எழுதப்பெற்றதாக இருக்க வேண்டும்.

5. நெகிழ்வற்ற அரசியலமைப்பு (Rigid Constitution): ஒரு கூட்டாட்சி அரசுக்கு நெகிழ்வற்ற அரசியலமைப்பு இருப்பது இன்றியமையாததாகும். ஒரு அரசியலமைப்பு எழுதப்பெற்றதாக உள்ளதென்றாலே, அது இயற்கையாக நெகிழ்வற்ற தன்மையையும் கொண்டிருக்கும். அரசியலமைப்புச் சட்டம், நாட்டின் மேலாண்மை வாய்ந்த உயர் சட்டமாக கருதப்படுவதால், அது நெகிழ்வுறாமல் இருப்பதுதான் சாலச் சிறந்தது. நெகிழ்வற்ற தன்மையில் அரசியலமைப்பின் சட்ட வகைமுறைகளை திருத்தும் நடைமுறைகள் மிக சிக்கல் வாய்ந்ததாகவும், கடினமாகவும் இருக்கும். ஆனால், இது அரசியலமைப்புச் சட்டத்தை, சட்டரீதியாக திருத்த இயலாது, என்பதைக் குறிப்பிடவில்லை. அரசியலமைப்பினை திருத்தும் அதிகாரம் மத்திய அரசிடமோ அல்லது மாநில அரசுகளிடமோ முற்றிலும் இல்லை, என்பதைத்தான் இது குறிக்கிறது. ஒரு அரசியலமைப்பை திருத்தும் முறை, நெகிழ்வற்ற தன்மை கொண்டிருந்தால்தான் அந்த அரசியலமைப்பின் மேலாண்மை நீடித்தும் நிலைத்தும் இருக்கும்.

6. நீதிமன்றங்களின் அதிகாரம் (Authority of Courts): ஒரு கூட்டாட்சி அரசில், அரசியலமைப்பின் மேலாண்மையானது, கூட்டாட்சி முறை தொடர்ந்து நீடித்து வருவதற்கு இன்றியமையாத

ஒன்றாகும், என்று மேலே கண்டோம். கூட்டாட்சி என்றாலே, மத்திய அரசுக்கும் மாநில அரசு களுக்கும் இடையே அரசியலமைப்பின்படி, அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்பட்டிருக்கும் என்பதையும் நாம் ஏற்கனவே கண்டோம். எனவே, இந்த இரண்டு அரசுகளுக்கும் அளிக் கப்பட்டுள்ள அதிகாரத்தை சமநிலையில் வைத்திருக்க வேண்டியது, முக்கியமாகும். இதனைச் செய்வதற்கு, அரசியலமைப்பின் கீழுள்ள சாதாரண அமைப்புகளுக்கு மேற்பட்டும், அதற்கு அப்பாலும் உள்ள ஒரு சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற அதிகாரம் தேவைப் படுகிறது. அந்த அதிகாரம்தான் நீதித்துறை ஆகும். அதாவது, இரு அரசுகளுக்கு இடையே பூசல்கள் ஏற்படும் பொழுது, அதனை நடுவு நிலை தாங்கி தீர்ப்பதற்கு அமைக்கப்பட்ட ஒரு அமைப்புதான், நீதிமன்றங்கள் ஆகும். இரு அரசுகளுக்கும் இடையே உள்ள ஒப்பந்த உறவுகள் மீறப்படாமல் காப்பது, நீதிமன்றகளின் கடமையாகும். எனவேதான், இப்படிப் பட்ட உயர்ந்த அதிகாரம் நீதிமன்றங்களுக்க வழங்கப்பட்டுள்ளது. நீதி மன்றங்கள் இந்நெறியில் நின்று அரசிய லமைப்பினை சமநிலைப்படுத்தும் ஒரு கருவியாகத் திகழ்கிறது என்றால் அது மிகையாகாது.

இந்திய அரசியலமைப்பு எந்த அளவிற்கு கூட்டாட்சி தன்மை பெற்றது ? (அல்லது) இந்திய அரசியலமைப்பில் கூட்டாட்சியின் கூறுகள் இடம் பெற்றுள்ள விதம்:

நாம் மேலே கண்ட கூட்டாட்சியின் கூறுகள் அனைத்தும் இந்திய அரசியலமைப்பிற்கும் பொருந்துகிறது. அவை எவ்வாறு பொருந்துகிறது என்பதை ஒன்றன் பின் ஒன்றாக பின்வருமாறு காண்போமா?

1. **முதலில்** கூட்டாட்சிக்கு அடிப்படையாக விளங்கும் **இரட்டை அரசாங்க முறையை (System of Double Government)** எடுத்துக்கொள்வோம். இந்திய அரசியலமைப்பானது, மத்திய அரசு என்றும், மாநிலங்களைப் பொறுத்தவரை மாநில அரசுகள் என்றும் இரட்டை அரசாங்க முறைக்கு வழிவகை செய்துள்ளது.

2. **இரண்டாவதாக, அதிகாரப் பகிர்வு (Distribution of Powers)** குறித்து காண்போம். இந்திய அரசியலமைப்பில் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே அதிகாரமானது, மத்திய பட்டியல், மாநில பட்டியல், இணைப்புப் பட்டியல் ஆகிய மூன்று பட்டியல்களின் வாயிலாக பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது. மத்திய பட்டியலில் (Union List) உள்ள துறைகளில் (subjects) சட்ட

மியற்றிக் கொள்ள மத்திய அரசிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதுபோல், மாநில பட்டியலில் (State List) உள்ள துறைகளில் சட்டமியற்றிக் கொள்ள மாநில அரசுகளுக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டுள்ளது. இவை இரண்டு அரசுகளும் சட்டமியற்றிக் கொள்ளக் கூடிய துறைகளைப் பற்றி, இணைப்புப் பட்டியலில் (Concurrent List) குறிப்பிடப்பட்டுள்ளது.

3. **மூன்றாவதாக,** கூட்டாட்சியின் மிக முக்கிய கூறான **அரசியலமைப்பின் மேலாண்மை (Supremacy of Constitution)** எவ்வாறு இந்திய அரசியலமைப்பில் அங்கம் வகித்துள்ளது என்பதைக் காண்போம். இந்திய அரசியலமைப்பும் மேலாண்மை வாய்ந்த ஒன்றாகும். ஏனெனில், அரசியலமைப்பின் மூன்று முக்கிய உறுப்புகளாகிய (Organs) நிருவாகம் (Executive), சட்டமியற்றல் (Legislative) மற்றும் நீதிநிறுத்தல் (Judiciary) ஆகியவை தங்களது அதிகாரங்களை, அரசியலமைப்பிடமிருந்து மட்டுமே பெறுகின்றன மற்றும் செயலாற்றுகின்றன. எனவே, இந்திய அரசியலமைப் புச் சட்டம் மற்ற சட்டங்களை விட மேலாண்மை வாய்ந்த சட்டமாக விளங்குகிறது. அந்த மற்ற சட்டங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை எவ்விதத்தில் மீறினாலும், அச்சட்டங்கள் இல்லா நிலையதாகும். *(மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ள பக்கம் எண். 61 காண்க.)*

4. **நான்காவதாக,** கூட்டாட்சிக்கு வழிவகுக்கும் மற்றொரு கூறான **எழுதப்பெற்ற அரசியலமைப்பை (Written Constitution)** எடுத்துக் கொண்டால், நமது இந்திய அரசியலமைப்பும் ஒரு எழுதப் பெற்ற அரசியலமைப்பே ஆகும். இது 26 பகுதிகளின் (Parts) கீழ் 444 ஷரத்துகளையும் (Articles), 12 அட்டவணைகளையும் (Schedules) கொண்டதொரு மிக நீண்ட அரசியலமைப்பாகும்.

5. **அய்ந்தாவதாக,** நமது இந்திய அரசியலமைப்பும் நெகிழ்வுறா தன்மை கொண்டதாகும். இதனால், கூட்டாட்சி அரசிலமைப்பில் உள்ளது போல், நமது அரசியலைமைப்பிலும் சட்ட வகைமுறைகளைத் திருத்துவது என்பது கடினமானதாக உள்ளது.

6. **இறுதியாக,** கூட்டாட்சியின் இறுதிக் கூறான **நீதிமன்றங்களின் அதிகாரத்தைப் (Authority of Courts)** பொறுத்தவரை, நமது அரசியலமைப்பு இந்திய நீதித்துறைக்கு சுதந்திரமாக செயல்படும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. எனவே, இது இரு அரசுகளுக்கு இடையே ஏற்படும் பூசல்களை நடுவுநிலை தாங்கி பாரபட்சமற்ற முறையில் தீர்த்து வைக்கும் உயர் அதிகாரத்தை பெற்றுள்ளது.

மேலும், இந்தியா உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதி மன்றங்கள், நமது அரசியலமைப்பிற்கு பொருள் விளக்கம் (Interpretation) தரும் மிக உயர்ந்த அதிகாரத்தினை பெற்றுள்ளன. இவற்றின் தீர்ப்புகள் அரசியலமைப்பின் ஷரத்துகளுக்கு நிகரான வலிமையை பெற்றுள்ளன.

முடிவுரை:

இவ்வாறு கூட்டாட்சியின் முக்கியமான அனைத்து கூறுகளையுமே, இந்திய அரசியலமைப்பும் பெற்றுள்ளது. எனவே, இந்திய அரசியலமைப்பை ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு என்று கூறலாம். நமது இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்களின் எண்ணமும், இந்தியாவை ஒரு கூட்டாட்சி அரசியமைப்பை கொண்ட நாடாக உருவாக்க வேண்டும் என்பதாகத்தான் இருந்தது. இது குறித்து இந்திய அரசியலமைப்பு வரைவுக் குழுவின் தலைவரான **டாக்டர் அம்பேத்கர்** அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். அதன்படி, "**இந்திய அரசியலமைப்பில் மத்திய அரசு மாநிலங்களின் மீது தனது அதிகாரத்தை செலுத்தும் வண்ணம் பல வகைமுறைகள் இருந்தாலும், இது ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு என்பது ஒப்புக் கொள்ளப் பட்டுள்ளதாகவே கருதுகிறேன்**,"[1] என்று கூறுகிறார். எனவே, இதிலிருந்து மத்திய அரசு மாநிலங்களின் மீது கோலோச்சும் சில ஒற்றையாட்சி (Unitary) வகைமுறைகளும் இந்திய அரசியலமைப்பில் உள்ளதாக தெளிவாகிறது. ஆகவே, நமது இந்திய அரசியலமைப்பை கூட்டாட்சி அரசியலமைப்பு என்று கூறுவதை விட கூட்டாட்சி-போல்வு அரசியலமைப்பு (Quasi-federal Constitution) என்று கூறுவதுதான் பொருத்தமானதாக இருக்கும் என அரசியலமைப்பு சட்ட வல்லுநர்கள் சிலர் கூறுவர். (இந்நிலை குறித்துதான் நாம் அடுத்து காண உள்ளோம்.)

11. The Indian Constitution is neither federal nor unitary but quasi-federal. Explain. (இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு கூட்டாட்சியுமில்லை. ஒற்றையாட்சியுமில்லை. ஆனால் கூட்டாட்சிப் போல்வு ஆகும். - விவரி.)

---

1. "I think it is agreed that our Constitution notwithstanding the many provisions which are contained in it whereby the Centre has been given powers to override the Provinces (States) nonetheless, is a Federal Constitution" - Dr. Ambedkar, the Chairman of the Drafting Committee - C.A.D., Vol. 4, p. 133. See also C.A.D., Vol. 5, pp. 33-36.

(அல்லது)

Examine Critically the statement that the Indian Constitution is a quasi-federal one. (இந்திய அரசியலமைப்பு கூட்டாட்சி போல்வான ஒன்று என்ற கூற்றை திறனாய்வு செய்க.)

(அல்லது)

"The Constitution of India is neither purely federal nor unitary; but it is a combination of both. It is a union or composite state of a novel type." Illustrate your answer with leading cases and constitutional practices. ("இந்திய அரசமைப்பு நேர்வழி மரபான இணைப் பாட்சியோ அல்லது ஒரு சீர்மை கொண்ட அரசோ அல்ல; ஆனால் அது இரண்டும் சேர்ந்ததாகும். அது ஓர் ஒன்றியம் அல்லது புதுவிதமான இணைப்பு அரசு". உங்களுடைய பதிலுரையை முதன்மையான வழக்கு தீர்ப்புரைகளைக் கொண்டும் மேற்கோள் காட்டி விளக்குக.)

(அல்லது)

The Constitution of India is neither purely federal nor unitary; but it is a combination of both. Do you agree? Illustrate your answer with leading cases and constitutional practices. (இந்திய அரசமைப்பு முழுவதும் ஒரு கூட்டுப் பேராட்சியோ அல்லது ஒரே சீர்மை கொண்ட அரசோ அல்ல; இரண்டையும் உள்ளடக்கியதாகும். நீங்கள் இதை ஏற்றுக் கொள்கிறீர்களா? உங்களுடைய பதிலுரையை முடிவுற்ற வழக்குகளைக் கொண்டும் அரசமைப்பின் நடைமுறையினையும் மேற்கோள் காட்டி விளக்குக.)

(அல்லது)

"The Constitution of India is federal in structure and unitary in character." - Discuss. ("இந்திய அரசியலமைப்பு, அமைப்பில் கூட்டாட்சி யாகவும், பண்பில் ஒற்றையாட்சியாகவும் உள்ளது." - விவாதிக்க.)

(அல்லது)

"The Constitutional system of India is basically federal but of course, with striking unitary features" - Comment. ("இந்திய அரசியலமைப்பு முறையானது அடிப்படையில் கூட்டாட்சியாக இருந்தாலும், முனைப்பான ஒற்றையாட்சிக் குணங்களையும்

கொண்டு உள்ளது." - விமர்சிக்க.)

(அல்லது)

How far Indian Constitution is federal and how far it is unitary? (இந்திய அரசமைப்பு எந்த அளவுக்கு கூட்டாட்சி அமைப்பினையும், ஒருங் கிணைப்பு ஆட்சியையும் கொண்டு விளங்குகிறது?)

(அல்லது)

Critically analyse the federal characteristics of the Indian Constitution. Do you agree with the statement that the Indian Constitution is truly federal? (இந்திய அரசியலமைப்பின் கூட்டாட்சிக் கூறுகளை திறனாய்வு செய்க. இந்திய அரசியலமைப்பு உண்மையில் கூட்டாட்சி என்று கூற்றுடன் நீங்கள் ஒத்துப் போகிறீர்களா?)

(அல்லது)

"All federal systems are placed in a tight mould of federalism. No matter what the circumstances. It cannot change its form and shape. It can never be unitary. On the other hand, the Indian Constitution can be both unitary as well as federal according to the requirements of time and circumstances". Dr. Ambedkar. Discuss. ("அனைத்து கூட்டாட்சி முறைகளும் கூட்டாட்சித்துவம் எனும் ஒரு இறுக்கமான வார்ப்பில் வைக்கப்பட்டுள்ளன. அது, அதன் அமைப்பை யும் வடிவையும் மாற்றாது. அது ஒருபோதும் ஒற்றையாட்சியாகாது. மற்றொரு புறம், இந்திய அரசியலமைப்பு காலம் மற்றும் சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்ப ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி என இரண்டுமாக உள்ளது" - டாக்டர். அம்பேத்கார். விவாதி.)

இந்தியா ஒரு கூட்டாட்சியா? (இணைப்பாட்சியா?):

முனைவர் அம்பேத்கார் அவர்கள், "இந்திய அரசியலமைப் பில் மத்திய அரசு மாநிலங்களின் மீது தனது அதிகாரத்தை செலுத்தும் வண்ணம் பல வகைமுறைகள் இருந்தாலும், இது ஒரு கூட்டாட்சி அரசியலமைப்பு என்பது ஒப்புக் கொள்ளப்பட்டுள் ளதாகவே கருதுகிறேன்," என்று கூறுகிறார். ஒருபுறம் பார்த்தால் இது உண்மைதான் என்று புலனாகும். ஏனெனில், ஒரு கூட்டாட்சிக்கு

தேவையான முக்கிய கூறுகளான **இரட்டை அரசாங்க முறை, அதிகாரப் பகிர்வு, அரசியலமைப்பின் மேலாண்மை, எழுதப்பட்ட மற்றும் நெகிழ்வற்ற அரசியலமைப்பு, நீதிமன்றங்களின் அதிகாரம்** (தேர்வில் இக்கூறுகளை சற்று விவரித்து எழுதவும்) ஆகிய இவைகள் அனைத்தையும் நமது இந்திய அரசியலமைப்பும் ஒருங்கே கொண்டுள்ளது. எனவே, நமது இந்தியா ஒரு கூட்டாட்சி நாடு என்று எளிதில் கூறி விடலாம். ஆனால் அதே சமயத்தில் **முனைவர் அம்பேத்கர்** கூறிய மற்றொரு கூற்றையும் நாம் மறந்து விடக் கூடாது.

அதாவது, **"அனைத்து கூட்டாட்சி முறைகளும் கூட்டாட்சித் துவம் எனும் ஒரு இறுக்கமான வார்ப்பில் வைக்கப்பட்டுள்ளன. அது, அதன் அமைப்பையும் வடிவையும் மாற்றாது. அது ஒரு போதும் ஒற்றையாட்சியாகாது. மற்றொரு புறம், இந்திய அரசியலமைப்பு காலம் மற்றும் சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்ப ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி என இரண்டுமாக உள்ளது"** என்று கூறுகிறார். எனவே, நமது இந்திய அரசியலமைப்பில் சில ஒற்றையாட்சிக் கூறுகளும் காணப்படுகின்றன என்பதில் அய்ய மில்லை. எனவே, இந்தியாவை ஒரு கூட்டாட்சி என்று கூறுவதை விட, கூட்டாட்சிக் கூறுகளும், ஒற்றையாட்சிக் கூறுகளும் உடைய ஒரு புதுவிதமான இணைப்பு அரசு (It is a union or composite state of a novel type) என்று கூறுவதே சாலப் பொருத்தமானதாகும். இங்கு ஒற்றையாட்சியின் விளக்கத்தை சுருக்கமாகப் பார்த்தல் இன்றியமையாததாகும்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு (Unitary Constitution) - விளக்கம்:

ஒற்றையாட்சி என்பதின் விளக்கத்தை நாம் ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ளோம். எனினும் இங்கு மற்றொரு முறை நமது நினைவை புதுப்பித்துக் கொள்ளல் நன்று. அதன்படி, ஒற்றையாட்சி என்பது, மத்திய அரசிடமே அனைத்து அதிகாரங்களும் அடங்கியிருத்தல் ஆகும். கூட்டாட்சி அரசில் உள்ளது போல் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே அதிகாரம் பகிர்ந்து அளிக்கப்படுவதில்லை. மாநில அரசுகள் எந்த ஒரு செயலைச் செய்யவும், மத்திய அரசின் அனுமதி பெற வேண்டும். இத்தகு அரசியலமைப்பைக் கொண்ட அரசு, ஒற்றையாட்சி அரசியலமைப்பு எனப்படுகிறது.

அரசியலமைப்பு சட்ட வல்லுநர்களின் கருத்துக்கள்:

இந்திய அரசியலமைப்பு சட்ட வல்லுநர்கள் இந்திய அரசிய

லமைப்பை திறனாய்வு செய்து, இது கூட்டாட்சி அரசியலமைப்பு அல்ல; **அது போன்று தோற்றமளிக்கும் ஒரு அமைப்பு (Quasi -federal setup)** என்றும், இவ்வரசியலமைப்பில் பெருவாரியான பண்புகள் ஒற்றையாட்சியின் பண்புகளாகவே **(Unitary feature)** காணப்படுகின்றன என்றும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

பேராசிரியர் வெய்ர் அவர்கள், "கிட்டத்தட்ட கூட்டாட்சி போல்வாகக் கூடிய ஒரு அரசாங்க முறையை இந்திய அரசியலமைப்பு ஏற்படுத்தியிருக்கிறது..... .....ஒற்றைாட்சிக் கூறுகளைத் துணையாகக் கொண்ட ஒரு கூட்டாட்சி நாடு என்பதைவிட கூட்டாட்சிக் கூறுகளைத் துணையாகக் கொண்ட ஒரு ஒற்றையாட்சி நாடு எனலாம்[1]" என்று கூறுகிறார்.

அறிஞர் ஜென்னிங்ஸ் அவர்கள் "வலிமையான மத்திய மயமாக்கல் போக்கைக் கொண்ட ஒரு கூட்டாட்சி[2]" என்று இந்திய அரசியலமைப்பை விமர்சிக்கிறார்.

வேறு சிலர், இஃது அடிப்படையில் கூட்டாட்சியமைப்பு தான் என்றாலும், ஒற்றையாட்சியின் குணங்கள் அமைப்பில் இல்லை என்றாலும், செயலில் காணப்படுகின்றன, என்று கூறுகின்றனர்.

மற்றொரு சாரார், கூட்டாட்சி அமைப்பில் ஒற்றையாட்சி யின் பண்பு நலன்கள் பரவிக் காணப்படும் கூட்டாட்சி அமைப்பே இந்திய அரசியலமைப்பாகும் என்றும் கூறுகின்றனர்.

இங்கு நாம் ஒன்றை கவனிப்பது முக்கியமானதாகும். அதாவது நமது இந்திய அரசியலமைப்பில் **"கூட்டாட்சி"** என்ற பதமே எங்கும் இடம் பெறவில்லை. மேம்போக்காக பார்ப்போர் களுக்கு இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாகத் தென்படும். ஆனால், ஆழ்ந்து கவனிக்கும்போதுதான், அதில் சில ஒற்றையாட்சிக் கூறுகளும் இருப்பது உய்த்துணரப்படும்.

மேலும் உச்ச நீதிமன்றத்தில் எழுந்த **State of West Bengal**

---

1. "The Constitution establishes a system of Government which is almost quasi-federal.... ....a unitary State with subsidary federal features rather than a federal State with subsidary unitary features" - **Prof. K.C.Wheare - India's New Constitution Analysed, 1950 ALJ 22.**

2. "a federation with a strong centralising tendency" - **Jennings, Some Characteristics of the Indian Constitution, p. 1.**

v. Union of India[1] என்ற வழக்கில் இந்தியா உண்மையான கூட்டாட்சியல்ல என்று பெரும்பான்மை நீதியரசர்களால் (Majority) தீர்ப்பு வழங்கப் பட்டது. ஆனால், நீதியரசர் சுப்பாராவ் அவர்கள் மட்டும் இந்திய அரசியலமைப்பு அடிப்படையில் கூட்டாட்சி தன்மை வாய்ந்தது என்று தனது மாறுபட்ட (dissent) தீர்ப்பில் கூறினார்.

இந்தியா ஒரு கூட்டாட்சிப் போல்வு (India is Quasi-federal):

சட்ட வல்லுநர்கள், பேராசிரியர்கள் மற்றும் நீதியரசர்கள் ஆகியோர்களின் கருத்துகளும் திறனாய்வு உரைகளும் எவ்வாறு இருப் பினும், உண்மையில் இந்தியாவை ஒரு கூட்டாட்சி (இணைப்பாட்சி) என்றோ அல்லது ஒற்றையாட்சி என்றோ கூறிவிட முடியாது. ஏனெனில், அதில் கூட்டாட்சிக்கே உரித்த கூறுகளும் உள்ளன. அதே சமயத்தில் சில ஒற்றையாட்சி கூறுகளும் உள்ளன. எனவே, இந்திய அரசியலமைப்பினை, ஒரு கூட்டாட்சிப் போல்வு அரசியலமைப்பு என்றே கூற வேண்டும். இதனை பின்வரும் அம்சங்களில் இருந்து தெரிந்து கொள்ளலாம்.

இந்திய கூட்டாட்சி அரசியலமைப்பில் ஒற்றையாட்சிக் கூறுகள் இடம் பெற்றுள்ள விதம்:

1. அதிகாரப் பகிர்வு மூன்று பட்டியல்களின் வாயிலாக தொகுத்து கூறப்பட்டுள்ளதெனினும், மத்திய அரசிற்கு ஆதரவாக அது உள்ளது. மத்திய பட்டியலில் (Union List) 97 துறைகள் ஒதுக்கப்பட்டுள்ள போது, மாநிலப் பட்டியலில் (State List) 66 துறைகள் மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. இணைப்பு பட்டியல் (Concurrent List) 47 துறைகளைக் கொண்டுள்ளது. இதில் மத்திய மற்றும் மாநில அரசுகள் சட்டமியற்றலாம். ஆனால், இந்த துறையில் மத்திய அரசு இயற்றிய சட்டத்திற்கும், ஒரு மாநில அரசு இயற்றிய சட்டத்திற்கும் இடையே முரண்பாடு ஏதும் எழுமானால், மத்திய அரசின் சட்டமே மேலோங்கி நிற்கும். அதாவது, **மத்திய அரசு சட்டமே, மாநிலங்களைக் கட்டுப்படுத்தும்.**

2. இந்திய பாராளுமன்றத்தின் மேல்மன்றமாக விளங்கும் மாநிலங் களவை அல்லது இராஜ்ய சபையின் (Council of Ministers or Rajya Sabha) அமைப்பு ஒற்றையாட்சியின் தன்மையை

1. AIR 1963 SC 1241

மேலும் தெளிவாக்குகிறது. ஒரு சிறந்த கூட்டாட்சியில் **மாநிலங்களுக்கு சம பிரதிநிதித்துவம் எந்த வித வேறுபாடும் இன்றி வழங்கப்பட வேண்டும்.** அமெரிக்க அய்க்கிய நாடுகளின் கூட்டாட்சி மேல்மன்றத்தில் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித் தனியே இரு உறுப்பினர் வீதம் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது. சுவிட்சர்லாந்திலும் இதே நிலைதான். ஆனால் இந்தியாவிலோ விசித்திரமான முறையில் மாநிலங்கட்கு **மக்கட்தொகை அடிப்படையில் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.** மேலும் குடியரசுத் தலைவர் 12 உறுப்பினர்களை நியமனம் செய்கிறார்.

3. மாநிலப் பட்டியலின் துறைகளில் உள்ள எந்த விஷயத்திலாவது, மத்திய பாராளுமன்றம் சட்டமியற்ற வேண்டியது தேசிய நலனுக்கு அவசியமானது (in the national interest) என்று மாநிலங்களவையின் மூன்றில் இரு பங்கு பெரும்பான்மை உறுப்பினர்கள் இசைவு தெரிவித்துவிட்டால், அதில் மத்திய பாராளுமன்றம் சுதந்திரமாக சட்டமியற்றலாம். அதாவது மாநிலப்பட்டியலில் உள்ள துறைகளிலும் சட்டமியற்ற மத்திய பாராளுமன்றத்திற்கு இந்திய அரசியலமைப்பு சட்டம் தனது **ஷரத்து 249-ன்** மூலம் அதிகாரம் வழங்கியுள்ளது.

4. இந்தியாவில் மாநில ஆளுநர்கள், குடியரசுத் தலைவரால் நியமனம் செய்யப்படுகிறார்கள். அவர்கள் குடியரசுத் தலைவருக்கு பதிலளிக்க பொறுப்புடையவர்கள் **(ஷரத்துகள் 155 மற்றும் 156).** ஆனால் அமெரிக்க அய்க்கிய நாடுகளில், மாநில ஆளுநர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

5. மாநில ஆளுநர்கள் மாநிலத்தின் சில சட்டங்களை குடியரசுத் தலைவரின் இசைவிற்காக அனுப்பி வைக்க வேண்டும். குடியரசுத் தலைவர் அந்த சட்டங்களுக்கு தனது இசைவை அளிக்காமல், மறுப்பை தெரிவிக்கலாம். ஆனால் இந்த அதிகாரம் நடைமுறையில் மிக நுண்ணிய அளவிலேயே இதுகாறும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

6. மத்திய அரசு கொடுக்கின்ற அரசு உத்திரவுகளுக்கு மாநிலங்கள் கீழ்ப்படிதல், ஒற்றையாட்சி முறையின் மற்றொரு கூறாகும்.

7. மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட நிதி ஆதாரங்களைத்தாம், மாநில அரசுகள் பெற்றுள்ளன. தேவைகள் பற்றி மத்திய அரசிற்கு குறிப்புகள் அனுப்பப்படும் பொழுது, அவற்றில் ஒரு சிறு

தொகையே மாநிலங்களுக்கு அளிக்கப்படுகிறது. வளர்ந்து வரும் மாநிலங்களின் செலவுகளுக்கு அவை போதுமானதாக இருப்ப தில்லை.

8. இந்திய பாராளுமன்றம், புதிய மாநிலங்களை உருவாக் கலாம்; அது எந்த மாநிலத்தின் பரப்பளவை அதிகரிக்கலாம் அல்லது குறைக்கலாம். மேலும் மாநிலத்தின் எல்லைகளை திருத்தி அமைக் கலாம் மற்றும் மாநிலத்தின் பெயரைக் கூட மாற்றலாம். **(ஷரத்து 3).** எனவே, ஒரு மாநிலம் தொடர்ந்து அதே வடிவில் மற்றும் பெயரில் நீடித்திருப்பதும், மத்திய பாராளுமன்றத்தின் இன்விருப்பத்தை பொருத்ததாகும்.

9. நாடு முழுவதற்கும் ஒருமுகமான நீதியமைப்பிற்கு இந்திய அரசியலமைப்பு வகை செய்துள்ளது. அமெரிக்க அய்க்கிய நாடு களில் கூட்டாட்சி சட்டங்களை (மத்திய சட்டங்கள்) நிலைநிறுத் துவதற்கும், மாநில சட்டங்களை நிலைநிறுத்துவதற்கும் என இரு வகையான நீதிமன்றங்கள் உள்ளன. அதற்கு மாறாக இந்தியாவில் ஒருங்கிணைக்கப்பட்ட ஒரு முறையினைக் கொண்ட நீதிமன்றங்கள் தாம் நாடெங்கிலும் பரவி நின்று உச்ச நீதிமன்றத்தை தலைமையாகக் கொண்டுள்ளன.

10. அரசியலமைப்பினைத் திருத்தக் கையாளப்படும் முறையே ஒற்றையாட்சிக் கூறுபாட்டினைத் தெளிவாக்குகிறது. சில துறைகளைத் தவிர, அரசியலமைப்பின் ஷரத்துகள் மாநிலங்களிடம் கலந்தாலேசிக்கப் படாமலேயே, திருத்தியமைக்கப்படலாம்.

11. நெருக்கடிக் காலங்களில் அதிகாரப்பகிர்வு என்ற பேச்சே அடிபட்டுப் போய்விடுகிறது. மாநிலங்களின் அனைத்து அதிகாரங் களும் குடியரசுத் தலைவரின் கட்டுப்பாட்டில் வந்து விடுகிறது. (விரிவாக அடுத்த வினாவின் விடையில் காண்க.)

முடிவுரை:

மேற்கூறப்பட்டவைகளிலிருந்து இந்திய அரசியலமைப்பு உருவத்தில் கூட்டாட்சியாகவும் உட்பொருளில் ஒற்றையாட்சி யாகவும் இருப்பது புலனாகும். **முனைவர் அம்பேத்கார்** அவர்கள் கூறியதைப் போல, **இந்திய அரசியலமைப்பு காலம் மற்றும் சூழ்நிலைகளின் தேவைகளுக்கேற்ப ஒற்றையாட்சி மற்றும் கூட்டாட்சி என இரண்டுமாக உள்ளது.**

சுருங்கக் கூறின், பரந்த அளவில் கூட்டாட்சிக் கருத்துகளுடன் தொடங்கி, மைய ஒற்றையாட்சி போல் உச்சியில் முடிகின்ற நிலைதான், இந்திய அரசியலமைப்பு பறை சாற்றுகிறது. இந்திய அரசியலமைப்பு அடிப்படையில் கூட்டாட்சியாகவும், தேச ஒற்றுமை மற்றும் வளர்ச்சியை செயல்படுத்து வதற்கு உண்டான பாதுகாப்பிற்காக ஒற்றையாட்சிக் கூறுகளையும் கொண்டு உள்ளது. எனவே, **"கூட்டாட்சி மற்றும் ஒற்றையாட்சியின் இணைப்பு"** எனும் ஒரு புதினமாகவே (novel type) இந்திய அரசியலமைப்பு விளங்குகிறது. முடிவாக, இந்திய அரசியலமைப்பை கூட்டாட்சி என்று கூறுவதை விட, கூட்டாட்சிப் போல்வு (Quasi-federal) என்று கூறுவதே பொருத்தமானதாகும்.

12. How does the federal features of India change during the period of emergency ? Explain. (நெருக்கடிக் காலங்களில் இந்தியாவின் கூட்டாட்சி கூறுகள் எங்ஙனம் மாறுபடுகின்றன? விளக்குக.)

இந்திய ஆட்சி கூட்டாட்சிப் போல்வு ஆகும். கூட்டாட்சியின் கூறுகள் இந்தியாவில் அதிகம் காணப்படினும் சில ஒற்றையாட்சிக் கூறுகளும் காணப்படுகின்றன. இந்த ஒற்றையாட்சிக் கூறுகள் பெரும்பாலும், நெருக்கடிக் காலங்களில், இந்திய அரசியலமைப்பில் அங்கம் வகிக்கின்றன. நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டால், பின்வரும் விளைவுகள் இந்திய அரசியலமைப்பில் ஏற்படும். அப்பொழுது, இந்தியாவின் கூட்டாட்சிக் கூறுகள், ஒற்றையாட்சிக் கூறுகளாக மாறிவிடும் என்று கூறுவதில் தவறு ஏதும் இல்லை.

1. நெருக்கடிக் காலத்தில் மத்திய அரசின் நிர்வாக அதிகாரம், மாநில அரசின் மீதும் ஆக்ரமிக்கும். அப்பொழுது மத்திய அரசு எடுக்கும் நிர்வாக நடவடிக்கைகள் மாநில அரசு எடுத்ததாகவே கருதப்படும். **(ஷரத்து 353).**

2. ஒரு மாநிலம், அரசியலமைப்புச் சட்ட ஷரத்துகளை கடைப் பிடிக்காமல் தனது அரசாங்கத்தை நடத்துவதாக குடியரசுத் தலைவர் திருப்தியுற்றால், அவர் அந்த மாநில அரசையும் சட்ட மன்றத்தையும் கலைத்துவிட்டு அந்த மாநிலத்தில் நெருக்கடி நிலையை பிரகடனப் படுத்தலாம்; மாநிலத்தின் அனைத்து பணிகளையும் தனது பொறுப்பில் ஏற்றுக் கொள்ளலாம். அதாவது மத்திய அரசின் கீழ் கொண்டு வந்துவிடலாம். **(ஷரத்து 356)**

3. பாராளுமன்றம், மாநிலப் பட்டியலில் உள்ள துறைகளில் சட்டமியற்றும் அதிகாரம் பெறுகிறது. **[ஷரத்து 356 (b)]**

4. மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கிடையே உள்ள வருவாய் பங்கீட்டை மாற்ற மத்திய அரசிற்கு அதிகாரம் உண்டாகும் **(ஷரத்து 354).**

5. **268 முதல் 279 வரை உள்ள ஷரத்துகளில்** வகை செய்யப் பட்டுள்ள, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே உள்ள நிதி அமைப்புகளை மாற்ற குடியரசுத் தலைவர் அதிகாரம் படைத்த வராகலாம்.

நெருக்கடிக் காலங்களில் மத்திய அரசு விரைவான தீர்வுகளை எடுக்க வேண்டிய கால கட்டத்தில் உள்ளது. அது ஒற்றையாட்சியாக இருந்தால்தான் முடியும். ஆகவே, மத்திய அரசு மேற்கண்டவற்றின் படி ஒற்றையாட்சிக் கூறுகளைக் கைக் கொள்ளும்.

-oOo-

அத்தியாயம் 4

அரசியலமைப்பின் தத்துவம் – முகப்புரை மற்றும் நோக்கம்
[The Philosophy of the Constitution - Preamble and the Objective Resolution]

(i) அரசியலமைப்பின் தத்துவம்
[The Philosophy of the Constitution]

(அ) நாடாளுமன்ற இறைமை
[(a) Parliamentary Sovereignty]

13. Parliamentary Sovereignty - Write short notes. (நாடாளுமன்ற இறைமை - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

நாடாளுமன்ற இறைமை குறித்து ஆராய நாம் முக்கியமாக மூன்று நாடுகளின் அரசியலமைப்பை ஒப்பு நோக்க வேண்டியுள்ளது. அவை, இந்தியா, கிரேட் பிரிட்டன் மற்றும் அமெரிக்க அய்க்கிய நாடுகள். சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

நாடாளுமன்ற இறைமை - விளக்கம்:

நாடாளுமன்ற இறைமை என்பது, ஒரு நாட்டில் நாடாளுமன்றம் மிக உயர்ந்த அதிகாரத்தை பெற்றிருத்தல் ஆகும். ஆனால், இந்தியாவை பொருத்தவரை, நாடாளுமன்றம் முழுமையான

அளவில் இறைமையுடையதாக இல்லை என்றே கூற வேண்டும். எவ்வாறு?

நமது இந்திய நாட்டின் அரசியலமைப்பு நாடாளுமன்ற அரசாங்க முறையை (Parliamentay form of Government) ஏற்படுத்தியுள்ளது. இதில் மாற்று கருத்து ஏதுமில்லை. நமது அரசியலமைப்பை வடிவமைத்தவர்கள், இம்முறையை நாடாளுமன்ற முழு இறைமையை பெற்றுள்ள கிரேட் பிரிட்டன் அரசியலமைப்பிலிருந்து பின்பற்றியுள்ளனர். இந்த நாடாளுமன்ற அரசாங்க முறையின் சாரம்சமே, அது சட்டமன்றத்திற்கு பொறுப்புடையதாக விளங்குவதில்தான் உள்ளது. குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் அரசியலமைப்புரீதியான தலைவராக (Constitutional Head) உள்ளார். இவரது பதவி பெயரளவில்தான் (nominal). இவர் மக்களால் மறைமுகமாக தேர்ந்தெடுக்கப்படுகிறார். உண்மையான நிர்வாக அதிகாரம் பிரதம மந்திரியை தலைமையாகக் கொண்ட மத்திய அமைச்சரவையின் (Council of Ministers) கைகளில்தான் உள்ளது. மத்திய அமைச்சரவை, லோக் சபை என்றழைக்கப்படும் மக்களவைக்கு (கீழ் சபை) (Lower House or Lok Sabha) அதாவது சட்ட மன்றத்திற்கு கூட்டாக பொறுப்பானதாகும் (Collectively Responsible). மக்களவையின் உறுப்பினர்கள், அய்ந்தாண்டுகளுக்கு ஒருமுறை மக்களால் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். சட்டமன்றத்தின் நம்பிக்கை தொடரும் வரையில் பிரதம மந்திரியும் அவரது அமைச்சர்களும் பதவி வகிக்கலாம். சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்கள் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வந்தால், மேற்படியார்களது பதவி முடிவுக்கு வந்து விடும். எனவே, இந்திய நாடாளுமன்றம் மக்களைவைக்கு பொறுப்புடையதாக உள்ளது. இதனால், நாடாளுமன்றம் முழு இறைமை பெற்றதாக இல்லை என்றே கூற வேண்டும். மேலும் நமது நாடாளுமன்றம் இந்திய அரசியலமைப்பிற்கு உட்பட்டதாகும். நாடாளுமன்றம் அரசியலமைப்பினை திருத்த முழு அதிகாரம் கொண்டதல்ல. எனவே, அரசியலமைப்புதான் உயர்ந்ததே தவிர, நாடாளுமன்றம் அல்ல.

ஆனால் அமெரிக்க அய்க்கிய நாடுகளின் நிலையே வேறு. அங்கு அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் (Principle of Separation of Powers) அடிப்படையில் அமைந்த குடியரசுத் தலைவர் (ஜனாதிபதி) முறை அரசாங்கம் (Presidential type of Government) செயல்படுகிறது. அங்கு குடியரசுத் தலைவர்தான் உண்மையான நிர்வாகத் தலைவர் (real executive) ஆவார். அவர் நான்காண்டு

களுக்கு ஒரு முறை மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அனைத்து நிர்வாக அதிகாரங்களும் அவரிடமே உள்ளன. அவர் **காங்கிரஸ்** எனப்படும் சட்டமன்றத்திற்கு பொறுப்பானவர் அல்ல. அவரது அமைச்சரவையின் உறுப்பினர்கள், சட்டமன்றத்தின் உறுப் பினர்கள் அல்ல. அவர் அமைச்சரவையின் ஆலோசனைக்கு கட்டுப் பட்டவருமல்ல. அமைச்சரவை உறுப்பினர்கள், குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படுகின்றனர். எனவே, அவர்கள் குடியரசுத் தலைவருக்கு பொறுப்புடையவர்கள் ஆவர். ஆகவே, குடியரசுத் தலைவரைத் தலைமையாகக் கொண்ட நிர்வாகத் துறையும் சட்டமன்றமும் ஒன்றையொன்று சார்ந்து இருப்பவையல்ல. இரண்டு துறையின் அதிகாரங்களும் பிரித்து வகுக்கப்பட்டவையாகும். ஆனால், இந்தியாவில், நாடாளுமன்றம் சட்டமன்றத்திற்கு பொறுப் புடையதாகும். எனவே, அமெரிக்க அய்க்கிய நாடுகளில் குடியரசுத் தலைவர் முறை அரசாங்கமே முழு இறைமை பெற்றதாக விளங்கு கிறது.

முடிவுரை:

நாடாளுமன்ற இறைமையை முழுதளவில் பெற்றிருப்பது, கிரேட் பிரிட்டனின் அரசியலமைப்பே ஆகும். இந்தியா அந்த அளவிற்கு நாடாளுமன்ற இறைமையை பெற்றிருக்கவில்லை. அமெரிக்க அய்க்கிய நாடுகளில், குடியரசுத் தலைவர் முறை அரசாங்கமே இறைமை பெற்றதாக உள்ளது.

14. "The Indian Parliament is not sovereign in the sense in which the British Parliament is sovereign" -Discuss. ("பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இறைமையுடமையாய் இருப்பது போல, இந்திய நாடாளுமன்றம் இறைமையுடையதல்ல" விவாதி.)

பிரிட்டன் நாடாளுமன்றம் மற்றும் இந்திய நாடாளுமன்றம் - ஒரு ஒப்புமை:

இந்திய நாடு, நாடாளுமன்ற முறை அரசாங்கத்தை வழி நடத்திச் செல்கின்றது. இம்முறையானது, கிரேட் பிரிட்டனின் அரசியலமைப்பிலிருந்து ஏற்கப்பட்டுள்ளது. பிரிட்டனின் நாடாளுமன்றம் **அரசர் (The King)**, **மக்கள் அவை (House of Commons)**, **உயர்குடியினர் அவை (House of Lords)** என மூன்று அங்கங்களைக் கொண்டதாகும். பிரிட்டன் நாடாளுமன்றத்தின் கீழ் அவையாக மக்களவையும், மேலவையாக உயர் குடியினர் அவையும்

உள்ளது. பிரிட்டன் நாட்டு மக்களின், பிரதிநிதியாக கீழ் அவை, மிகுச் சிறப்புடன் திகழ்கிறது. அதுபோலவே, இந்திய பாராளு மன்றம் **குடியரசுத் தலைவரையும் (The President), மக்களவை (சட்டமன்றம்) (Lok Sabha - Lower House), மாநிலங்களவை (Rajya Sabha - Upper House)** என்ற மூன்று அங்கங்களைக் கொண்டதாகும். மக்களவை என்பது நாடாளுமன்றத்தின் கீழ் பிரிவாகவும், மாநிலங்களவை என்பது மேல் பிரிவாகவும் உள்ளன. நாட்டின் சார்பாக மக்களவையும், மாநிலங்களின் சார்பாக மாநிலங்களவையும் செயல்படுகின்றது. மேலும், பிரிட்டனில் அரசர் அலங்காரத் தலைவராக பெயரளவில் உள்ளார். உண்மையான நிர்வாக அதிகாரம், பிரதம மந்திரியின் தலைமையில் அமைந்த அமைச்சரவையிடம்தான் உள்ளது. இதைப் போலவே, இந்தியாவில் குடியரசுத் தலைவர், பெயரளவில் நாட்டின் தலைவராக உள்ளார். நிர்வாக அதிகாரம், பிரதம மந்திரியிடமும், அவரது அமைச்சரவை யிடமும் உள்ளது.

"பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இறைமையுடமையாய் இருப்பது போல, இந்திய நாடாளுமன்றம் இறைமையுடையதல்ல" - விவாதம்:

மேற்கூறிய அனைத்தும் ஒப்புக் கொள்ளக் கூடிய ஒன்றுதான். ஆனால், பிரிட்டன் நாடாளுமன்றத்தைப் போல, இந்தியப் நாடாளுமன்றம் இறைமை பெற்றதன்று. பிரிட்டன் நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்களை எந்த நீதிமன்றமும் அரசியலமைப்பிற்கு முரண்பட்டது என்று கூற முடியாது, என்ற அளவில் மேற்படி நாடாளுமன்றம் இறைமை பெற்றதாகும். ஆனால், இந்தியப் நாடாளுமன்றம் இயற்றும் சட்டங்களை அரசியலமைப் பிற்கு முரணானது என்று கூறி அவற்றை செல்லாது என அறிவிக்கும் அதிகாரம், இந்திய நீதிமன்றங்களுக்கு உண்டு. ஏனெனில், இந்திய பாராளு மன்றத்தை உருவாக்கியதே இந்திய அரசியலமைப்புதான். அத்தோடு மட்டுமில்லாமல், இந்திய நாடாளுமன்றம் தனக்குண் டான அதிகாரங்கள் அனைத்தையும் அரசியலமைப்பிடமிருந்து தான் பெற்றுக் கொண்டுள்ளது. மேலும் கூட்டாட்சி தன்மையானது, இந்திய நாடாளுமன்றத்தின் மீது சில தடைகளை விதித்துள்ளது. எடுத்துக்காட்டாக, மத்திய அரசிற்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகளில் தான் (Subjects in Union List), மத்திய அரசு சட்டமியற்ற இயலும். மேலும், அரசியலமைப்பிற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் உரிமை உச்ச நீதிமன்றத்திற்குதான் உண்டே தவிர, நாடாளுமன்றத்திற்கு அல்ல. எனவே, இந்தியாவில் அரசியலமைப்புதான் உச்ச நிலையில்

(Constitution is Supreme) உள்ளதே தவிர, நாடாளுமன்றம் அல்ல. நாடாளுமன்றம், அரசிய லமைப்பை முற்றிலும் திருத்துமாறு அல்லது மாற்றுமாறு சட்டமியற்றவும் முடியாது. ஆனால், **"பிரிட்டன் நாடாளுமன்றம், ஒரு ஆணைப் பெண்ணாகவும் ஒரு பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர எதை வேண்டுமானாலும் செய்யலாம்"** என்று நகைச்சுவை ததும்பக் கூறுவதுண்டு. எனவே, பிரிட்டன் நாடாளுமன்றம் இறைமையுடைமையாய் இருப்பதைப் போல, இந்திய நாடாளுமன்றம் இறைமையுடையதல்ல, என்ற கூற்று முற்றிலும் உண்மைதான். [மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ள 'அரசியலமைப்பின் திருத்தம்' எனும் அத்தியாயத்தில் காண்க. அதில் நாடாளுமன்றத்தின் உச்ச நிலைக்கு (Supremacy of Parliament) கிடைத்த அடி குறித்தும், அது குறித்த பல்வேறு சுவையான வழக்குகளும் விளக்கப்பட்டுள்ளன.]

(ஆ) அரசியலமைப்பின் மேலமை நிலை
(அல்லது) உச்ச நிலை
[சுருத்தும் அரசியலமைப்பிற்கு கட்டுப்பட்ட அரசாங்கங்களும்]
[(b) Constitutional Supremacy]
[Concept and Limited Governments]

15. Constitutional Supremacy - Write Short notes (அரசியல மைப்பு உச்ச நிலை - குறுகிய விடை தருக.)

கருத்து:

ஒரு கூட்டாட்சி அரசு (Federal State) தனது நிலைத் தன்மையை (existence) அதனை உருவாக்கிய அரசியலமைப்பிட மிருந்து பெறுகிறது. அதாவது அரசியலமைப்பு இல்லையென்றால், கூட்டாட்சியும் இருக்க முடியாது. எனவே, **நிருவாகம் (executive), சட்டமியற்றல் (legislative)** மற்றும் **நீதிநிறுத்தல் (judicial)** ஆகிய ஒவ்வொரு அதிகாரமும், அது மத்திய அரசை சேர்ந்ததாக இருந்தாலும் சரி அல்லது ஒரு தனிப்பட்ட மாநில அரசை சேர்ந்ததாக இருந்தாலும்சரி, அது அரசியலமைப்பாலேயே கட்டுப்படுத்தப் படுகிறது.

ஒரு கூட்டாட்சி அரசின் அரசியலமைப்பானது, அந்நாட்டின் உச்ச சட்டமாக (Supreme Law of the Land) உள்ளது. எனவே, அரசிய லமைப்பு சட்டத்திற்கு முரணாக சட்டங்கள் ஏதேனும் இயற்றப் பட்டால், அது இல்லா நிலையதாகிறது.

அரசியலமைப்பிற்கு கட்டுப்பட்ட அரசாங்கங்கள்:

இந்தியா நாடு அடிப்படையில் கூட்டாட்சி நாடாகும் என்பதை நாம் அறிந்துள்ளோம். எனவே, இங்கு அரசியலமைப்புச் சட்டமே நாட்டின் உச்ச சட்டமாக திகழ்கிறது. நமது அரசாங்கத்தின் எந்த உறுப்பின் செயலாவது, நமது அரசியலமைப்பிற்கு எதிராக இருப்பின், அச்செயல் செல்லாததாகும் மற்றும் வலிமையற்றதாகும். எனவே, சட்டத் துறை, நிருவாகத் துறை, நீதித்துறை ஆகிய மூன்று உறுப்புகளுமே, அரசியலமைப்பை மீற முடியாது. எனவே, இந்திய அரசாங்கத்தின் உறுப்புகளை, இந்திய அரசியலமைப்பு கட்டுப்படுத்துகிறது. எந்த நபரும் அல்லது எந்த அரசாங்க அதிகாரமும், அரசியலமைப்பிற்கு மேற்பட்டதாகாது; மாறாக உட்பட்டதாகும். அரசியலமைப்பின் உச்ச நிலையானது, அதன் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக உள்ளது. (Supremacy of the Constitution had been held to be a part of the basic structure of the Constitution). எனவே, அரசியலமைப்பின் உச்ச நிலையை குலைக்கும் வண்ணம் அல்லது நீக்கும் வண்ணம் எந்த அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தையும் இந்திய நாடாளுமன்றம் இயற்ற முடியாது. இதிலிருந்து, இந்தியா அரசாங்கத்தை மற்றும் அரசியலமைப்பைப் பொறுத்தவரை, அரசியலமைப்பானது உச்ச நிலையில் உள்ளது என்ற கூற்று தெள்ளத் தெளிவாகிறது. (நமது **'அரசியலமைப்பின் மேலமைநிலை அதாவது உச்ச நிலை'** எவ்வாறு பல வழக்குகளின் வாயிலாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது என்பதை **'அரசியலமைப்பின் திருத்தம்'** எனும் அத்தியாயத்தில் காணலாம்.)

அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசாங்கம், கூட்டாட்சி அரசியலமைப்பின் வழி நின்று நடப்பதாகும். எனவே, அமெரிக்க ஒரு கூட்டாட்சி நாடாகும். இதன் விளைவாக, அமெரிக்காவில் அதன் அரசியலமைப்பே உச்ச நிலையில் உள்ளது. எனவே, இங்கும், எந்த நபரும் அல்லது எந்த அரசாங்க அதிகாரமும், அரசியலமைப்பிற்கு மேற்பட்டதாகாது; மாறாக உட்பட்டதாகும். சட்டத்துறையோ, நிருவாகத்துறையோ அல்லது நீதித்துறையோ, அரசியலமைப்பிலிருந்து தனித்து செயல்பட முடியாது.

ஆனால், **கிரேட் பிரிட்டனில்** நாடாளுமன்றமே முழு இறைமை பெற்று உச்ச நிலையில் உள்ளது. ஏனெனில் இங்கு நடைபெறுவது ஒற்றையாட்சியாகும். எனவே, இங்கு நாடாளுமன்றத்தால் இயற்றப்படும் எந்த சட்டத்தையும் செல்லாதாகவோ

அல்லது இல்லாநிலையதாகவோ அறிவிக்க முடியாது. நிர்வாகத் துறையின் செயல்பாடுகள் சட்டப்படி உள்ளன என்று விளம்பும் பொறுப்பு, பிரிட்டனில் நீதித்துறைக்கே உள்ளது.

(இ) நீதித்துறையின் உச்ச நிலை

[நீதித்துறையின் சுய கட்டுப்பாடு அல்லது வரம்புகளின் கருத்து]

[(c) Judicial Supremacy]

[Concept of Judicial Self Restraint or Limitations]

16. Judicial Supremacy - Write Short notes. (நீதித்துறையின் உச்ச நிலை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Explain the concept of judicial self restraint in Indian Constitution. (இந்திய அரசியலமைப்பில் நீதித்துறையின் சுய கட்டுப்பாட்டுக் கருத்து குறித்து விளக்குக.)

சுதந்திரமான நீதித்துறை (Independent Judiciary):

ஒரு நாட்டில் சீரான நீதி நிர்வாகம் நடைபெற ஒரு சுதந்திரமான நீதித்துறை இருப்பது அவசியமாகும். நீதித்துறையானது, நிருவாகத் துறையினரின் ஏதேச்சதிகாரமான செயல்களை கட்டுப்படுத்துகிறது. நிர்வாகத் துறையினரின் ஏதேச்சதிகாரமான செயல்கள் ஏதும், யாருக்காவது ஊறு விளைவித்தால், அவர்களுக்கு நீதித் துறையானது நிவாரணம் வழங்குகிறது. அரசியலமைப்பின் பாதுகாவலனாக நீதித்துறை விளங்குகிறது. ஒரு நபர், அவர் வறியவரோ அல்லது செல்வந்தரோ, ஆட்சியில் இருப்பவரோ அல்லது ஆட்சிக் குட்பட்டரோ, சட்டத்தின் முன் சமமாக கருதப்படுகிறார். எனவே, அவர் சட்டத்தை மீறினால், நீதிமன்றத்தால் தண்டிக்கப்படுகிறார் அல்லது பொறுப்புக்குள்ளாக்கப்படுகிறார். எனவே, இதற்காக நீதித்துறையானது சுதந்திரமாக விளங்க வேண்டியது இன்றியமையாததாக உள்ளது. இவ்வாறு சுதந்திரமாக இருக்கவில்லையானால், அது அரசின் நிர்வாகத் துறையினரின் சட்டத்தினை மீறிய செயல்பாடுகளைத் தட்டிக் கேட்க முடியாது; அவர்களையும் தண்டிக்க இயலாது.

நீதித்துறையின் உச்ச நிலை (Judicial Supremacy) (அல்லது) நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் (Judicial Review):

நீதித்துறையானது மேலே கண்டவாறு சுதந்திரமாக விளங்குவதால், மேலாண்மை வாய்ந்ததாக விளங்குகிறது. நமது இந்திய அரசியலமைப்பில், அரசியலமைப்பின் உச்ச நிலையை செயல்படுத்த, உயர் நீதிமன்றங்களுக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் (Judicial Review) வழங்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தின் மூலம், சட்ட மன்றம் இயற்றிய சட்டங்களோ அல்லது நிர்வாகத் துறையின் முடிவுகளோ, இந்திய அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளுக்கு முரண்பட்டதாக இருப்பதாக உயர் நீதிமன்றங்களோ அல்லது உச்ச நீதிமன்றமோ கண்டறிந்தால், அவற்றை செல்லாது மற்றும் இல்லா நிலையது என்று அறிவிக்கும் ஆற்றலை பெற்றுள்ளன. நீதிமுறை மறு சீராய்வு அதிகாரமானது, சட்டங்களையும் மற்றும் அரசு செயல்பாடுகளையும் அரசியலமைப்பிற்கு உட்பட்ட தன்மையின் அடிப்படையில் பரிசோதித்தறியும் தன்மை பெற்ற தாகும். அரசாங்கம் சட்டத்திற்கு உட்பட்டதாகுமே தவிர, சட்டத்திற்கு மேற்பட்டதல்ல என்பதை அறிவிப்பதற்காக, அரசியலமைப்பு எனும் தாயின் வயிற்றிலிருந்து பிறந்த ஒரு சிசுவே, நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம். இவ்வாறு பரந்த அதிகாரத்தை இந்திய நீதித்துறை கொண்டு விளங்குவதால், அது உச்ச நிலையுடன் விளங்குகிறது. எனினும், இந்த அதிகாரத்திற்கு சில சுய கட்டுப்பாடுகளை அல்லது வரம்புகளை உச்ச நீதிமன்றம் பின்வரும் வழக்கில் விதித்துள்ளது.

நீதித்துறையின் சுய கட்டுப்பாடு அல்லது வரம்புகளின் கருத்து (Concept of Judicial self restraint or limitations):

நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்தை பயன்படுத்தும் பொழுது, உயர் அல்லது உச்ச நீதிமன்றமானது சுய கட்டுப்பாட்டை பின்பற்ற வேண்டும் என்றும், சம்பந்தப்பட்ட சட்டங்களின் அல்லது செயல்பாடுகளின் சட்டத் தன்மை குறித்து மட்டுமே கருத்தில் கொள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் பின்வரும் வழக்கில் சில வரம்புகளைக் கொடுத்துள்ளது.

Tata Cellular v. Union of India[1]

இவ்வழக்கில், நீதித்துறையானாது, தனக்கு நீதிமுறை மறு சீராய்வு வழங்கப்பட்டுள்ளதே என்று எல்லா விஷயங்களிலும் தனது மூக்கை நுழைத்து, செல்லாது என்று அறிவிக்க இயலாது; அதற்கென

1. AIR 1996 SC 11 at 26

சில சுய கட்டுப்பாடுகளை அல்லது வரம்புகளை பின்பற்ற வேண்டியுள்ளது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அவை,

1. முடிவெடுக்கும் அதிகாரம் ஒன்று, தனது அதிகாரத்தை மீறிச் செயல்பட்டுள்ளதா?
2. சட்டத் தவறு ஏதேனும் புரிந்துள்ளதா?
3. இயற்கை நீதி விதிகள் எதையும் மீறுகை புரிந்துள்ளதா?
4. எந்த நியாயமான தீர்ப்பாயமும் இதுவரை எடுக்காத ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?
5. அதிகார துஷ்பிரயோகம் எதையும் செய்துள்ளதா?

மேற்கண்ட சுயகட்டுப்பாடுகளை அல்லது வரம்புகளை நீதிமன்றம் தனக்குத் தானே விதித்துக் கொண்டுதான், நீதிமுறை மறுசீராய்வு அதிகாரத்தை பயன்படுத்த வேண்டுமேயொழிய, அதன் அதிகாரத்திற்கு வானமே எல்லையாகாது.

எனவே, ஒரு குறிப்பிட்ட அரசுக் கொள்கை அல்லது அந்த கொள்கையை பூர்த்தி செய்வதில் எடுக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட முடிவு, நியாயமானதா அல்லது இல்லையா என்று நிர்ணயிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு கிடையாது. என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பதை விட எந்த முறையில் முடிவு எடுக்கப்பட்டது என்பதைப் பொறுத்தவரை மட்டுமே தீர்மானிக்க நீதிமன்றத்திற்கு அதிகாரம் உண்டு. மேற்கண்ட அதிகாரத்தின் அளாவுகையானது, வழக்கிற்கு வழக்கு மாறுபடக் கூடியதாகும். எனவே, மேற்கண்ட அய்ந்து வரம்புகள், பின்வரும் மூன்று பரந்த வகைகளின் கீழ் பிரிக்கப்பட்டுள்ளது. அவை,

1. சட்ட முரணான தன்மை (Illegality)
2. நியாயமற்ற தன்மை (Irrationality)
3. நடைமுறை முறையின்மை (Procedural impropriety)

எனவே, இதன் அடிப்படையில்தான், நிர்வாகத் துறையினர் எடுக்கும் முடிவுகளை நீதிமன்றம் ஆராய வேண்டும். இங்கு நீதிமன்றம் காண வேண்டியதெல்லாம், நிருவாகத் துறையினர் சட்டத்தை முழுமையாக அறிந்து கொண்டு, தனது அதிகாரத்தை

செயல்படுத்தியுள்ளனரா என்பதுதான்.

முடிவாக, சுதந்திரமான இந்திய நீதித்துறை தனது பரந்த நீதிச் சீராய்வு அதிகாரத்துடன் உச்ச நிலையில் உள்ளது. அரசியலமைப்பு எனும் கட்டிடத்தின் பாதுகாவலனாக விளங்குகிறது. எனினும் அதன் அதிகாரமும் தறி கெட்டு ஏதேச்சதிகாரமாக சென்றுவிடக் கூடாதே என்பதற்காக, சில கட்டுப்பாடுகளை அல்லது வரம்புகளை கடிவாள மாக உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் விதித்துள்ளது.

(ஈ) அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு
[தடைகள் மற்றும் சமநிலைகளின் கோட்பாடு]
[(d) Theory of Separation of Powers]
[Doctrine of Checks and Balances]

17. Doctrine of Separation of Powers- Write short notes. (அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு - குறுகிய விடை தருக.)

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு (Theory of Separation of Powers):

அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை முதலில் எடுத்துக் கூறியவர் அரசியல் அறிஞர் **அரிஸ்டாடில் (Aristotle)** [1] ஆவர். இவர், **ஆராய்ந்து செய்தல் (Deliberative), தண்டலாளர் நெறியிருத்தல் (Magisterial), நீதி வழங்குதல் (Judicial)** என அரசின் அதிகாரங் களை மூவகையாகப் பிரித்துள்ளார். **சிசரோ (Cicero), பொலிபியஸ் (Polybius)** போன்ற உரோமானிய அறிஞர்கள், அந்நாட்டின் அரசிய லமைப்பு **'தடைகளும் சமநிலைகளும்' (checks and balances)** பெற்ற அதிகாரத்தைக் கொண்டு இருப்பதாக கூறியுள்ளனர். பின்னர், இக்கோட்பாட்டிற்கு அறிஞர் **லாக் (Lock)**[2] அவர்களால் சற்று மேம்பட்ட வடிவம் கொடுக்கப்பட்டது.

எனினும் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு சிறப்பு வரையறை கொடுத்து அதை பிரபலமாக்கியவர், ஃபிரெஞ் சட்ட அறிஞர் **மாண்டெஸ்கியூ (Montesquieu)** அவர்கள்தான். இவர், 1748-ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தமது **"சட்டங்களின் உயிர்ப்பு"**

1. Politics, IV 14
2. Civil Government

(L'Espirit Des Lois - Sprit of the Laws) எனும் நூலில் சிறப்பு வாய்ந்த அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டைப் பற்றி எழுதியுள்ளார்.

இவரது கூற்றுப்படி, அரசாங்கமானது **சட்டத்துறை (Legislature), நிருவாகத்துறை (Executive), நீதித்துறை (Judiciary)** என்று மூன்று உறுப்புகளைக் **(Organs)** கொண்டதாகும். சட்டத் துறையின் பணி சட்டங்களை இயற்றுவதாகும்; நிருவாகத் துறையினரின் பணி அச்சட்டங்களை நிறைவேற்றுதலாகும்; நீதித்துறையானது, அச் சட்டங்களை தன் முன்னர் வரும் வழக்குகளில் நிலைநாட்டுகிறது, வலியுறுத்துகிறது மற்றும் பொருள் விளக்கம் கொடுக்கிறது. இம் மூன்று துறைகளும் மேற்கண்ட மூவகை அதிகாரங்களைக் கொண்டுள்ளது. இங்கு ஒரு துறையினரின் அதிகாரம் மற்றொரு துறையினரின் அதிகாரத்தில் தலையிடக் கூடாது. இவை தனித் தனியே பிரிந்திருக்க வேண்டும். மேலும் இவை மூன்றும் ஒன்று சேர ஒரே அமைப்பிடம் இருப்பின், அங்கு கொடுங்கோலாட்சிதான் நிலவும். இதுவே, அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் சாராம்சமாகும்.

அறிஞர் **மாண்டெஸ்கியூ** அவர்கள் மேற்படி கோட்பாட்டை மேலும் விளக்குகையில்,

> "சட்டமியற்றும் அதிகாரமும், நிருவாக அதிகாரமும், ஒரே மனிதனிடம் சேர்ந்து அளிக்கப்பட்டாலோ அல்லது ஒரே குழுவிடம் ஒப்படைக்கப் பட்டாலோ, அங்கு சுதந்திரத்திற்கு இடமில்லாது போய்விடும். ஏனென்றால், ஓரரசன் கொடுமையான சட்டங்களையியற்றி அவற்றைத் தானே கொடுமையான முறையில் நிறைவேற்றலாம். நீதி வழங்கும் அதிகாரம், சட்டமியற்றும் மற்றும் நிருவாக அதிகாரமிடமிருந்து பிரிக்கப்படாவிட்டால், அங்கு மீண்டும் சுதந்திரத்திற்கு இடம் கிடையாது. நீதி வழங்கும் அதிகாரம், சட்டமியற்றும் அதிகாரத்தோடு இணைக்கப்பட்டிருந்தால், அங்கு குடிமக்களுடைய வாழ்வும் உரிமைகளும் ஏதேச்சதிகார கட்டுப்பாட்டிற்கு எளிதில் இலக்காகும்; ஏனெனில், நீதிபதியே சட்டமியற்றுபவராக அப்பொழுது இருப்பர். நீதி வழங்கும் அதிகாரம், நிருவாக அதிகாரத்தோடு இணைக்கப்

பட்டிருந்தால், அங்கு நீதிபதி வன்முறையோடும்
அடக்கு முறையோடும் நடக்கத் தலைப்படுவார்[1],"

என்று கூறுகிறார்.

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடும் (Theory of Separation of Powers) தடைகள் மற்றும் சமநிலைகளின் கோட்பாடும் (Theory of Checks and Balances):

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு அமெரிக்க அய்க்கிய நாடுகளில் பின்பற்றப்படுகிறது. ஆனால் அமெரிக்க அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இக்கோட்பாட்டை முழுதளவில் ஏற்றுக் கொள்ளவில்லை. அதிகாரங்கள் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்ற சூழ்நிலைகளும் அமெரிக்க அரசியலமைப்பில் காணப்படுகிறது. பிரிட்டன் மற்றும் இந்திய அரசியலமைப்புகள் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை முழுமையாகவோ அல்லது கடுமையாகவோ பின்பற்றவில்லை. இங்கு அதிகாரங்கள் பிரிக்கப் பட்டிருந்தாலும் அவற்றிற்கிடையே பிணைப்புகளும் உள்ளன. எனவே, அதிகாரப் பிரிவினைக்குப் பதிலாக **அதிகாரங்களை சமநிலைப்படுத்தலாம் (Balance of Powers)**. அதற்கு அந்த அதிகாரங்கள் ஒன்று மற்றொன்றின் நேரடிச் செயல்பாட்டில் தலையிடாமல் இருக்க தடைகளும், அதே சமயத்தில் அந்த அதிகாரங்கள் ஒன்று மற்றொன்றை விட விஞ்சி விடாதபடி சம நிலைகளுடனும் **(checks and balances)** அமைக்கப்பட வேண்டும். இதன்படிதான் இன்று அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு உலக நாடுகளால் பின்பற்றப்படுகிறது.முடிவாகச் சொன்னால், எந்த நாட்டிலும் முழுமையான அதிகாரப் பிரிவினை கிடையாது, என்பதுதான் உண்மை.

18. Explain the Doctrine of Separation of Powers. Show how

1. "When the legislative and executive powers are united in the same person, or in the same body of magistrates, there can be no liberty; because apprehensions may arise, lest the same monarch or senate should enact tyrannical laws, and execute them in a tyrannical manner. Again there is no liberty if the judiciary power be not separated from the legislative and executive. Were it joined with the legislative, the life of liberty of the subject would be exposed to arbitrary control; for the judge would be then the legislator. Were it joined to the executive power the judge might behave with violence and oppression" - **Montesquieu : Sprit of the Laws - Bk. VI - 6.**

far this is applicable in the Constitution of India. (அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு என்பதை விளக்குக. இது இந்திய அரசியலமைப்பில் எந்த அளவிற்கு பொருந்தியுள்ளது என்பதை எடுத்துக் காட்டுக.)

(அல்லது)

Examine as to what extent the doctrine of separation of powers is incorporated in the Indian Constitution. (அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் எவ்வாறு உட்கிடைப் படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்க)

(அல்லது)

"The Doctrine of Separation of Powers has no place in the Indian Constitution" - Comment. ("அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டிற்கு இந்திய அரசியலமைப்பில் இடம் இல்லை " - விமர்சிக்க.)

அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் விளக்கம்:

சென்ற வினாவின் விடையிலேயே அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் விளக்கத்தை நாம் கண்டுள்ளோம். இருப்பினும் இங்கு மீண்டும் ஒரு முறை சுருக்கமாக காண்பது சாலச் சிறந்தது. அதன்படி, அதிகாரப்பிரிவினை என்பது, ஒரு அரசாங்கத்தின் அதிகாரமானது, சட்டமியற்றும் அதிகாரம் **(Legislature)**, நிருவாக அதிகாரம் **(Executive)** மற்றும் நீதித்துறை அதிகாரம் **(Judiciary)** என மூவகையாகப் பிரிக்கப்பட்டிருத்தலாகும். இவைகளில் ஒரு அதிகாரம், மற்றொரு அதிகாரத்தின் மீது ஆதிக்கம் செலுத்தக் கூடாது. இவ்வதிகாரங்கள் தனித் தனியே பிரிந்திருக்க வேண்டும். இக்கோட்பாட்டினை முறையாக வகுத்தவர், மாண்டெஸ்கியூ ஆவர்.

இந்தியாவில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டின் நிலை:

இந்தியாவில் சட்டமியற்றும் அதிகாரம், நாடாளுமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ளது. நிருவாக அதிகாரம், குடியரசுத் தலைவருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. நீதித்துறை அதிகாரம், உச்ச நீதிமன்றத்திற்கும் அதன் கீழுள்ள நீதிமன்றங்களுக்கும் அளிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு தனித் தனியே அதிகாரங்கள் பிரித்தளிக்கப் பட்டுள்ளதை வைத்து இந்தியாவில் அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு முழுவீச்சில் செயல்படுவதாகக் கருதினால், அது தவறு

என்றே கூற வேண்டும். மேலோட்டமாக இந்திய அரசியலமைப்பை ஆராயும் எவருக்கும், இந்தியாவில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு செயல்படுவதாகவே தெரியும். ஆனால் ஆழ்ந்தும், நுணுகியும் ஆராயும் பொழுதுதான், அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு இந்தியாவில் அப்படியே ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்பது புலனாகும். **இந்தியாவில் எந்தெந்த நிலைகளில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என்பதற்கு சான்றுகள் இதோ,-**

1. சட்டமியற்றும் அதிகாரத்திற்குரிய அமைப்பு நாடாளு மன்றம் ஆகும். ஆனால், அது தானே அனைத்துச் சட்டங்களையும் இயற்றாமல், சில சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை நிர்வாக அமைப்பிடம் ஒப்படைக் கிறது (Delegation of legislative powers to the Executive). மேலும் **ஷரத்து 61-ன்படி,** பாராளுமன்றம் குடியரசுத் தலைவரின் மீது பழிச்சாட்டி அவரை நீக்கம் (Impeachment of President) செய்யலாம். இங்கு பாராளுமன்றம் நீதித்துறை அதிகாரத்தை கைக் கொள்கிறது.

2. நாட்டின் நிருவாக அதிகாரம், பெயரளவில் குடியரசுத் தலைவரிடம் உள்ளது. உண்மையான நிருவாக அதிகாரம் பிரதமரை தலைவராகக் கொண்ட அமைச்சரவையிடம்தான் உள்ளது. அவர்களது உதவி மற்றும் ஆலோசனை யின் பேரில்தான், குடியரசுத் தலைவர் தனது அதிகாரங்களையும் பணிகளையும் செயல்படுத்த வேண்டும். **ஷரத்து 74-ன்படி,** அந்த ஆலோசனை சாதாரணமாக குடியரசுத் தலைவரைக் கட்டுப்படுத்தக் கூடியதாகும். எனினும் அந்த ஆலோசனையை மறு பரிசீலனை செய்ய அவர் கோரலாம். அவ்வாறு மறுபரிசீலனை செய்து அமைச்சரைவையால் வழங்கப் பட்ட ஆலோசனையின்படி, குடியரசுத் தலைவர் செயல்பட வேண்டியுள்ளது. இது ஒருபுறம் என்றால், மறுபுறம் குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்தின் ஒரு பகுதியாகவும் உள்ளார். எனவே, அவர் நிருவாகத்துறை மற்றும் சட்டமியற்றுத் துறை ஆகிய இரண்டு துறைகளின் அங்கமாக விளங்குகிறார். எனவே, அவருக்கு சட்டமியற்றும் அதிகாரமும் உள்ளது. நாடாளுமன்றம் கூட்டத் தொடரில் இல்லாத பொழுது, குடியரசுத் தலைவர் **ஷரத்து 123-ன்படி** அவசரச் சட்டங்களை (Ordinances) பிரகடனப்படுத்தலாம். மேலும் மக்களவையை **ஷரத்து 85-ன்படி** குடியரசுத் தலைவர் கலைக்கவும் செய்யலாம். மேலும் **ஷரத்து 86-ன்படி** நாடாளு மன்றத்தின் இரு அவைகளின் எதில் வேண்டுமானாலும் **அல்லது**

இரண்டு அவைகள் கூடியிருக்கும் பொழுது அந்த இரண்டு அவைகளிலும், குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்தலாம். இவையனைத்திற்கும் மேலாக, ஒரு மசோதா (Bill), சட்டமாக இயற்றப்பட வேண்டுமெனில், குடியரசுத் தலைவர் தனது ஒப்புதலை அளிக்க வேண்டும். **(ஷரத்து 111).** அதுபோல், சில மசோதாக்களை நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்துவதற்கே குடியரசுத் தலைவரின் பரிந்துரை முன்னதாக பெறப்பட வேண்டும். எடுத்துக் காட்டாக, **ஷரத்து 117 (1)**-ன்படி பண மசோதாக்களையோ (Money Bill), அல்லது **ஷரத்து 3-ன்படி** புதிய மாநிலங்களை அமைத்தல் அல்லது இருக்கும் மாநிலங்களின் பரப்பளவை, எல்லைகளை, பெயரை மாற்றுதல் தொடர்பான மசோதாக்களையோ, அறிமுகப்படுத்த முன்னதாக குடியரசுத் தலைவரின் பரிந்துரை பெறப்பட வேண்டும். நெருக்கடிக் காலங்களில், மாநில அரசின் மீது சட்டமியற்றும் அதிகாரத்தை குடியரசுத் தலைவர் பெற்றுள்ளார். ஷரத்து **124(2)-ன்படி** உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் மற்றும் **ஷரத்து 218-ன்படி** உயர் நீதிமன்ற நீதிபதிகளின் பதவி நியமனத்தை செய்யும் அதிகாரம் குடியரசுத் தலைவரிடம்தான் உள்ளது. மேலும் நாடாளுமன்றம் இயற்றும் சட்டத்தால் மேற்படி நீதிபதிகளின் ஊதியம் நிர்ணயம் செய்யப்படுகிறது. **(ஷரத்து 125 மற்றும் 221)**.

3. நீதித்துறை அதிகாரத்தைப் பொறுத்தவரை, உச்ச நீதிமன்றத்திடமும் அதன் கீழுள்ள நீதிமன்றங்களிடமும் நீதியை நிலை நிறுத்தும் அதிகாரம் உள்ளது. **ஷரத்து 227-ன்படி** ஒவ்வொரு உயர் நீதிமன்றமும் தனது அதிகாரவரம்பிற்குள் வருகின்ற அனைத்து நீதிமன்றங்கள் மற்றும் தீர்ப்பாயங்களை மேற்பார்வையிடும் அதிகாரத்தை பெற்றுள்ளன. இது உண்மையில் ஒரு நிர்வாக அதிகாரமாகும். மேலும் உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்கள் தங்களுடைய **நடைமுறை பற்றிய விதிகளை (Rules of Procedure)** தாங்களே இயற்றிக் கொள்வதற்கு அதிகாரம் பெற்றுள்ளன. இது நீதித்துறையின் சட்டமியற்றும் அதிகாரமாகும்.

மேற்கண்டவற்றிலிருந்து, அரசாங்கத்தின் மூன்று அதிகாரங்களாகிய சட்டமியற்றல், நிருவாகம், நீதிநிறுத்தல் ஆகியவை இந்தியாவில் தனித்தனியாக இல்லை; மாறாக ஆங்கங்கே இணைந்தும் பிணைந்தும் காணப்படுகின்றன என்பது புலனாகும். உண்மையில் இந்த மூன்று அதிகாரங்களின் பணிகளை அறுதியாக வரையறுத்துக் கூறுவது என்பது இயலாத செயலாகும். அதிகாரப்பிரிவினைக் கோட்பாட்டினை விரிவாக எடுத்துக் கூறிய மாண்டெஸ்கியூ கூட,

சட்டமியற்றும் அதிகாரம் மற்றும் நிர்வாக அதிகாரம் ஆகியவை ஒன்று மற்றொன்றின் மீது தாக்கமோ அல்லது கட்டுப்பாடோ கொண்டிருக்கக் கூடாது என்று கூறவில்லை; மாறாக, அவைகளில் எதுவும் அனைத்து அதிகாரங்களையும் முழுமையான பிடிவாதத் துடன் கொண்டிருக்கக் கூடாது என்றே அவர் கூறுகிறார். எனினும், அந்த அதிகாரங்களின் பணிகள் போதுமான அளவு வேறுபடுத் தப்பட்டு காண்பிக்கப்பட்டிருக்க வேண்டும், என்றும் கூறுகிறார்.

இந்தியாவில் அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு பரந்த கண் ணோட்டத்துடன் செயல்படுத்தப்படுகிறதே தவிர கண்டிப்பான முறையில் பின்பற்றப்படவில்லை. எடுத்துக்காட்டாக நாடாளு மன்றம் சில சட்டங்களை இயற்றும் அதிகாரத்தை நிர்வாகத் துறையி டம் ஒப்படைக்கிறது என்றால், அது அதற்கான சட்டமியற்றுக் கொள்கைகள் மற்றும் அவ்வாறு ஒப்படைக்கப்பட்டதை கையாளு வதற்குண்டான வழிவகைகள் ஆகியவற்றையும் சேர்த்தே ஒப்படைக் கிறது. இதற்குட்பட்டே நிருவாகத் துறையும் சட்டமியற்ற முடியும். ஆனால், அரசியலமைப்பால், நாடாளுமன்றத்திற்கு வழங்கப் பட்டுள்ள முக்கிய சட்டமியற்றுப் பணிகளை, நிர்வாகத் துறையின்ரி டமோ அல்லது வேறு துறையினரிடமோ ஒப்படைக்க இயலாது[1]. அதாவது, ஒரு அதிகாரம், மற்றொரு அதிகாரத்தை அதன் முழுமைக் கும் எடுத்துக் கொள்ள இயலாது. இவ்வாறுதான் அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை பரந்த பொருளில் (wider sense) எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த வகையில்தான், நமது இந்திய அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களின் (Basic structure of Constitution) ஒரு பகுதியாக அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு விளங்குகிறது.

முடிவுரை:

மேற்கண்டவற்றை கருத்தில் கொண்டு கூர்ந்து ஆராயும் பொழுது, **Ram Jawaya v. State of Punjab**[2] எனும் வழக்கில் **நீதியரசர் முகர்ஜி** அவர்கள், **"இந்திய அரசியலமைப்பு, அதிகாரப் பிரிவினைக் கோட்பாட்டை அப்படியே அங்கீகரிக்கவில்லை"** என்று கூறியது முற்றிலும் பொருந்துவதாகும். "அதிகாரப்பிரி வினைக் கோட்பாட்டிற்கு இந்திய அரசியலமைப்பில் இடமில்லை"

1. In re Delhi Laws Act, 1950, AIR 1951 SC 332
2. AIR 1955 SC 549

என்று கூறுவதை விட, நீதியரசர் முகர்ஜி கூறிய மேற்படி கருத்துதான் ஏற்புடையதாகும்.

19. Distinguish between Separation of Powers and Division of Powers

வேறுபடுத்திக் காட்டுக அதிகாரப் பிரிவு மற்றும் அதிகாரப் பகிர்ந்தளிப்பு

1. **அதிகாரப் பிரிவு** என்பது, அரசின் மூன்று உறுப்புகளாகிய சட்டமியற்றுத்துறை (Legislative), நிருவாகத் துறை (Executive) மற்றும் நீதித்துறை (Judiciary) ஆகிய இவைகளுக்கிடையே அதிகாரத்தினை பிரித்து அளித்தல் ஆகும். ஆனால் **அதிகாரப் பகிர்ந்தளிப்பு** என்பது, சட்டமியற்றும் அதிகாரங்களை மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் இடையே பகிர்ந்தளிப்பதாகும்.

2. **அதிகாரப்பிரிவில்** ஒரு உறுப்பு மற்றொரு உறுப்பு மீது கட்டுப்பாடு கொண்டிருக்கும். எடுத்துக்காட்டாக, சட்டமியற்றுத் துறை தனது பணியை ஆற்றும் பொழுது, அது நீதித்துறைக்கு கட்டுப்பட்டு செயல்பட வேண்டும். ஆனால் **அதிகாரப் பகிர்ந்தளிப்பில்** இவ்வாறு இல்லை. இங்கு மாநிலங்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள மாநிலப் பட்டியலில் (State List) உள்ள துறைகளில் (Subjects) மாநிலங்கள் சட்டமியற்றலாம். அதேபோல், மத்திய அரசு மத்தியப் பட்டியலில் (Union List) உள்ள துறைகளில் சட்டமியற்றலாம்.

3. **அதிகாரப் பிரிவில்** ஒவ்வொரு உறுப்பிற்கும் தனித்தனியான மற்றும் வேறுபாடான அதிகாரம் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், **அதிகாரப் பகிர்ந்தளிப்பில்** ஒரே அதிகாரமானது, அதாவது சட்டமியற்றும் அதிகாரம் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது.

4. **அதிகாரப்பிரிவில்** மேற்கண்ட மூவகை அதிகாரங்களில் ஒரு அதிகாரத்தை மற்றொரு அதிகாரத்துடன் இணைக்கக் கூடிய பொதுவான அதிகாரம் என்று ஒன்றும் கிடையாது. ஆனால், **அதிகாரப் பகிர்ந்தளிப்பில்** இணைப்புப் பட்டியல் (Concurrent List) என்று ஒன்று உள்ளது. அந்தப் பட்டியலில் உள்ள துறைகளில் மத்திய அரசும் சட்டமியற்றலாம்; மாநில அரசுகளும் சட்டமியற்றலாம்.

5. **அதிகாரப் பிரிவினையை,** இந்திய அரசியலமைப்பு அப்படியே ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால், **அதிகாரப் பகிர்ந்**

தளிப்பை இந்திய அரசியலமைப்பு முற்றிலும் அங்கீகரித்துள்ளது. இதனால்தான் கூட்டாட்சித்துவம் இந்திய நாட்டில் நிலவுகிறது.

(உ) சட்டத்தின் ஆட்சி மற்றும் ஆட்சிதுறைச் சட்டம்
[(e) Rule of Law and Droit Administratif]

20. Explain the concept of Rule of Law as enunciated by Dicey. State the Supreme Court's perception of Rule of Law in the Indian context. (டைசி எடுத்துரைத்தவாறு "சட்ட ஆட்சி" தத்துவத்தை விளக்குக. உச்ச நீதிமன்றத்தின் நோக்கில் "சட்ட ஆட்சி" இந்தியாவில் எவ்வாறு நிலவுகிறது என்பதை கூறுக.)

முன்னுரை:

சட்டத்தின் ஆட்சி பிரிட்டன் அரசியலமைப்பில் குறிப்பிடத் தக்க கூறுகளுள் ஒன்றாகும். சட்டத்தின் ஆட்சி எனும் இத்தத்துவம், முதலாம் ஜேம்ஸ் என்ற இங்கிலாந்து அரசரின் நீதிமன்றத்தில் தலைமை நீதிபதியாக இருந்த **சர் எட்வர்ட் கோக் (Sir Edward Coke)** என்பவரால் உருவாக்கப்பட்டதாகும். தலைமை நீதிபதிக்கும் அரசருக்கும் இடையில் ஏற்பட்ட சச்சரவில் தலைமை நீதிபதி, அரசர் கடவுளுக்கும் சட்டத்திற்கும் உட்பட்டவர் என்று வாதிட்டார். இதன் விளைவாக கோக் 1613-ல் தனது தலைமை நீதிபதி பதவியையே இழக்க நேரிட்டது. ஆனால், அவர் கொண்ட கருத்து, சட்டத்தின் ஆட்சி என்ற தத்துவமாகப் படிப்படியாக ஆக்கம் பெற்று 1885-ல் **ஏ.வி.டைசி (A.V.Dicey)** என்ற பேராசிரியரால் உருவகம் பெற்றுச் சட்டக் கோட்பாடாக மாறியது. அவர் சட்டத்தின் ஆட்சியை மூன்று கூறுகளாக பகுத்து பின்வருமாறு விளக்கியுள்ளார்.

பேரா. டைசி அவர்களின் "சட்ட ஆட்சி" தத்துவம் - மூன்று கூறுகள்:

1. **"சட்டத்தை நிலைநிறுத்துகின்ற நீதிமன்றங்கள் முன்னிலையில் ஒருவன் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை மீறிவிட்டான் என்று சட்டப் பூர்வமாக தெளிவாக்கி முடிவெடுக்கும் வரையில் எந்த ஒரு மனிதனும் தண்டிக்கப்பட மாட்டான்; அவனுடைய உடலுக்கோ உடமைகளுக்கோ எந்த ஒரு துன்பமும் இழைக்கப்பட மாட்டாது."** அதாவது மனிதன் சட்டத்தினால் தண்டிக்கப்பட வேண்டுமே தவிர, மற்றொரு மனிதனால் அல்ல. ஆட்சியில் உள்ளவர்களுடைய ஏதேச்சதிகாரத்தினாலோ (Arbitrary Power), பாகுபாடு காட்டுகின்ற அதிகாரத்தினாலோ (Discriminatory

Power) அல்லது அரசின் சிறப்பு அதிகாரத்தினாலோ (Prerogative Power), மனிதன் தண்டிக்கப்படக் கூடாது. மனிதன் மீது செலுத்தப் படும் ஆட்சி சட்டத்தினால் மட்டுமே இருக்க வேண்டும். சட்ட ஆட்சியின் இந்தக் கூறு, சட்டத்தின் உயர்வைக் குறிக்கிறது. அது சட்டத்தை தவிர, வேறு எந்த அரசியல் அதிகாரத்தினாலும், மனிதன் தண்டிக்கப்படக் கூடாது என்று பறை சாற்றுகிறது.

2. **"எந்தக் குடிமகனும் சாதாரணச் சட்ட திட்டங்களை விட உயர்ந்தவனாக மாட்டான்."** அதாவது, ஒவ்வொரு மனிதனும் எவ்வளவு உயர்ந்தவனாக இருந்தாலும் அல்லது எத்தகைய தன்மையுடையவனாக இருந்தாலும், அவன் நாட்டில் நிலவிவரும் சாதாரண சட்டங்களுக்கு உட்பட்டவன். அவன் நாட்டில் உள்ள சாதாரண நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்கு உட்பட்டவன். சட்ட ஆட்சியின் இந்தக் கூறு, சட்டத்தின் முன்பும் நீதிமன்றங்களின் முன்பும் அனைவரும் சமம், என்று சுட்டிக் காட்டுகிறது.

3. பிரிட்டனின் அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பெறாமல் இருப்பதால் தனிநபர் சுதந்திரம் (Individual Liberty), சங்கம் அமைக் கும் உரிமை (Freedom to form Association) மற்றும் பேச்சுரிமை எழுத் துரிமை (Freedom of Speech and Expression) போன்ற அடிப்படை உரிமைகள் அந்த அரசியலமைப்புச் சட்டத்தில் காணப் படுவதில்லை. குடிமக்களுடைய உரிமைகள் அவ்வப்பொழுது மீறப்படும் பொழுது, நீதிமன்றங்கள் அவற்றை விசாரணை செய்து வழங்கும் தீர்ப்புகளிலிருந்து, மேற்படி உரிமைகளின், **மூலம் (Source)** கிடைக்கப் பெறுகின்றது. சுருங்கக் கூறின், பிரிட்டனின் அரசிய லமைப்புச் சட்டம் நீதிபதிகளால் செய்யப்பட்ட சட்டமாகும். எனவே, குடிமக்களின் உரிமைகள், நீதிமன்றத் தீர்ப்புகளின் வாயிலாக பிறக்கின்றன. எனினும், இந்நிலை வேறு நாடுகளுக்கு பொருந்தாத தாக இருக்கலாம். மற்ற நாடுகளில் எழுதப் பெற்ற அரசியலமைப்பு களின் வாயிலாக உரிமைகள் கிடைக்கப் பெற்றிருக்கலாம்.

இவ்வாறாக டைசியின் கருத்துப்படி, சட்டத்தின் ஆட்சி முறை பிரிட்டனில் ஏற்பட்டுள்ளதால், அங்கு தனி மனிதனின் சுதந்திர உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. சட்டம், ஒரு மனிதனை மற்றொருவனின்றும் வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. பொதுவான நீதிமன்றங்களில் எல்லோரும் விசாரிக்கப்பட வேண்டும். ஒரு சிலருக்கே மட்டுமான தனிப்பட்ட நீதிமன்றங்கள் இருத்தல் கூடாது. தண்டனையானது, சட்ட விதிகளின் மூலம் சட்டத்தை மீறியதற்காக

கொடுக்கப்பட வேண்டுமேயொழிய, வேறு எந்தக் காரணத்திற் காகவும் மனிதன் தண்டிக்கப்படல் கூடாது. ஒவ்வொரு மனிதனு டைய உரிமையும் உடைமையும் அடுத்தவனுடைய உரிமை அல்லது உடைமை எந்த அளவிற்கு பாதுகாக்கப்படுமோ அந்த அளவிற்கு பாதுகாக்கப்பட வேண்டும். இதிலிருந்து பிரிட்டனில் ஆட்சித் துறைச் சட்டம் **[Droit Administratif - Administrative Law]** இல்லையென்பது புலனாகிறது. அதாவது தன் அதிகாரத்தை மீற தவறான முறையில் அரசுச் செயல்களை புரிகின்ற ஆட்சியலுவலர் கட்கு தனிக்காப்பு இல்லை. அதாவது சட்டத்தின் ஆட்சியும், ஆட்சித் துறைச் சட்டமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாத் தன்மையுடையன என்று பேரா. டைசி அவர்கள் கூறுகிறார்.

பேரா. டைசி அவர்களின் "சட்ட ஆட்சி" தத்துவத்திற்கெதிரான குறைபாடுகள் - ஒரு திறனாய்வு (Criticisms):

டைசியின் சட்ட ஆட்சித் தத்துவத்தின் மூன்று கூறுகளைப் பற்றி அறிஞர் **ஜென்னிங்ஸ் (Jennings)** அவர்கள் திறனாய்வு செய்து, டைசி சொல்வதை அப்படியே சட்ட ஆட்சியின் குறிக் கோள்களாக ஏற்றுக் கொள்ள இயலாது என்று கூறுகிறார். அவர் கூறும் காரணங்களாவன,-

1. டைசியின் முதற் கூறு, சட்டம் உயர்நிலையில் உள்ளது என்று கூறுகிறது. அச்சட்டத்தை இயற்றுவது பாராளுமன்றமாகும். எனவே, பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டம் உயர்வுடையது என்று கொண்டால், அதன்படி எந்த ஒரு செயலையும் செய்யலாம் என்றால், பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட ஏதேச்சதிகார சட்டங்களையும் உயர்வுடைய சட்டங்களாகவே ஏற்க வேண்டி வரும். எனவே, உண்மையான சட்ட ஆட்சிக்கு பாராளுமன்றமும் சட்ட விதிகளுக்கு கட்டுப்பட்டு இயங்கி ஏதேச்சதிகாரமற்ற முறை யில் உரிய சட்டங்களை இயற்ற வேண்டும். அவ்வாறு இயற்றப் படாவிடில், அச்சட்டங்களை உயர்வுடைய சட்டங்களாக கருத முடியாது. சட்ட ஆட்சி பொய்த்து விடும்.

2. டைசியின் இரண்டாவது கூறு, சட்டத்தின் முன் அனை வரும் சமம் என்று கூறுகிறது. இதனை ஒரு பொதுப்படை யான விதியாக ஏற்கலாமே தவிர, எல்லோருக்கும் எல்லாச் சூழ்நிலைகளிலும் பொருந்தும் விதியாக ஏற்றுக் கொள்ள இயலாது. காவல் துறையினரையும், மற்றவர் களையும் ஒரே சட்டத்தின் கீழ் கொண்டு வர இயலாது. காவல் துறையினர் செம்மையாகச்

செயல்பட, எல்லோருக்கும் பொதுவான சட்டத்திலிருந்து அவர்களுக்கெனச் சில விதிவிலக்குகள் தேவைப்படுகின்றன. ஆட்சியிலுள்ள அதிகாரிகள் திறம்படச் செயல்பட, அவர்களுக்கும் பொதுவான சட்டத்திலிருந்து சில விதிவிலக்குகள் தேவைப்படுகின்றன. குழந்தைகளுக்கும் பெண்டிருக்கும் தனிப் பாதுகாப்புகள் கொடுக்கப்பட வேண்டியுள்ளன. ஆணும் பெண்ணும் சமம்; எனவே, பெண்களுக்கென தனிப் பாதுகாப்பு சிடையாது என்னும் கோட்பாடு சமுதாயத்தைச் சமத்துவத்திற்கு பதிலாக சமத்துவமின்மைக்கே இட்டுச் செல்லும். ஆகவே, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று கூறுவது, சமமான சூழ்நிலைகளில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று பொருள் கொள்ளலாமே தவிர, எல்லாச் சூழ்நிலைகளிலும் எல்லோரும் சமம் என்று பொருள் கொள்ளலாகாது. சமமில்லாத சூழ்நிலைகளில் இருப்பவர்களை சமமாகப் பாவித்தால், அதனால் சமமின்மையே ஏற்படும்; சமத்துவம் தோன்றாது. நீதிக்குப் பதிலாக அநீதியே மிகும். எனவே, ஒத்த சூழ்நிலைகளில் உள்ளவர்களை சமமாகக் கருதலாம். எல்லோரும் எப்பொழுதும் சமமாக மாட்டார்கள். சூழ்நிலைகள் வேறுபடுவதாலும், எல்லோரையும் சட்டத்தின் முன் சமமாக கருத இயலாமையாலும், சில தனிப்பட்ட வழக்குகளை விசாரிக்க, தனிப்பட்ட நீதிமன்றங்கள் தேவைப்படலாம். தனிப்பட்ட நீதிமன்றங்கள் இருப்பதாலோ, சில சலுகைகள் சிலருக்கு காட்டப்படுவதாலோ சட்டத்தின் ஆட்சி நடைபெறவில்லை என்று கொள்ளலாகாது.

3. டைசியின் மூன்றாவது கூறின்படி, பிரிட்டனின் எழுதப்பெறாத அரசியலமைப்புச் சட்டமும், குடிமக்களுக்கு கிடைக்கப் பெற்ற பல உரிமைகளும் தனிப்பட்ட வழக்குகளில், நீதிமன்றங்களினால் கொடுக்கப்பட்ட தீர்ப்புகளின் பலனாக இருக்கலாம். ஆனால், மற்ற நாடுகளில் இவ்வுரிமைகள் மக்களுக்கு எழுதப்பெற்ற அரசியலமைப்புச் சட்டத்தின் வாயிலாகக் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறாக ஜென்னிங்ஸ் திறனாய்வு செய்து, டைசி கொடுத்துள்ள சட்ட ஆட்சியின் மூன்று கூறுகளையும் அப்படியே ஏற்றுக் கொள்ள இயலாது என்று கூறுகிறார்.

மேலும் **கென்னத் கல்ப் டேவிஸ் (Kennath Culp Davis)** எனும் அமெரிக்க எழுத்தாளர் சட்டத்தின் ஆட்சி என்றால், சட்டமும் ஒழுங்கும் (Law and Order) என்றும், நிர்ணயிக்கப்பட்ட விதிகள் (Fixed Laws) என்றும், உரிய சட்ட முறை (Due process

of Law) என்றும், இயற்கைச் சட்டம் (Law of Nature) என்றும், நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு முதன்மை அளிப்பது (Preference to Judicial Decesions) என்றும், நீதிமுறை மறு ஆய்வு (Judicial Review) என்றும் பொருள் கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்.

உச்ச நீதிமன்றத்தின் நோக்கில் "சட்ட ஆட்சி" இந்தியாவில் எவ்வாறு நிலவுகிறது? (அல்லது) இந்திய அரசியலமைப்புச் சட்டமும் சட்டத்தின் ஆட்சியும்:

இந்திய அரசியலமைப்புச் சட்டம் சட்டத்தின் ஆட்சியை மையமாகக் கொண்டே திகழ்கிறது. சட்ட ஆட்சியின் பொருள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் மேலும் விரிவாக்கப் பட்டுள்ளது. இது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக ஆக்கப்பட்டுள்ளது. எனவே, இதனை பாராளுமன்றம் கூட பறிக்கவோ அல்லது அழிக்கவோ முடியாது[1]. மேலும் இயற்கை நீதியின் ஒரு பகுதியாக பாவிக்கப்படுகிறது[2]. இந்திய அரசியலமைப் பின் கீழான அரசின் ஒவ்வொரு உறுப்பும் சட்டத்தின் ஆட்சி யாலேயே ஒழுங்குபடுத்தப்படுகிறது மற்றும் கட்டுப்படுத்தப்படு கிறது[3]. ஏதேச்சதிகாரமின்மையே சட்ட ஆட்சியின் முதற் கூறாக உள்ளது[4]. ஆட்சித் துறை அதிகாரிகளின் தன்விருப்புரிமை அதி காரம் தெளிவாக வரம்பிடப்பட்ட எல்லைக்குள் இருக்க வேண்டும் என்று சட்டத்தின் ஆட்சி கூறுகிறது[5]. வறியவர்களுக்கு இலவச சட்ட உதவி மற்றும் குற்றவியல் வழக்குகளில் விரைவான விசாரணை ஆகியவை சட்ட ஆட்சியின் தேவையான துணைக் கூறுகளாக உள்ளன[6]. நமது இந்திய அரசியலமைப்பில் சட்டத்தின் ஆட்சி பின்வரும் ஷரத்துகளால் நிலை நிறுத்தப்பட்டுள்ளது. அவை,

(1) **ஷரத்து 13** : இந்திய அரசியலமைப்புச் சட்டம், நாட்டின் மிக உயர்ந்த சட்டமாகும். பிற சட்டங்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு உட்பட்டு இருக்க வேண்டும். மாறாக அப்பிற சட்டங்கள் ஏதேனும், அரசியலமைப்புச் சட்டத்தை மீறுவதாக இருப்பின், அவற்றை ஷரத்து 13-ன்படி செல்லாததது மற்றும்

1. Indira Nehru Gandhi v. Raj Narain, AIR 1975 SC 2299
2. Board of High School and Intermediate Education v. Km. Chitra, (1970) 1 SCC 121
3. A.K.Kraipak v. Union of India, (1971) 1 SCC 457
4. S.G.Jaisinghani v. Union of India, AIR 1967 SC 1427
5. Ibid.
6. Khatri v. State of Bihar, AIR 1981 SC 928

இல்லாநிலையது என்று விளம்பும் அதிகாரம் இந்திய உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு.

(2) **ஷரத்து 14** : இச்ஷரத்து, சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்றும் அவர்களுக்கு சட்டங்கள் சம பாதுகாப்பை அளிக்கும் என்றும் கூறுகிறது. ஆனால், ஒத்த சூழ்நிலைகளில் உள்ளவர்களிடையே மட்டும் இந்த சமத்துவ நிலை கிட்டும், என்று நாம் ஏற்கனவே கண்ட கருத்தை இங்கு மறந்து விடக் கூடாது.

(3) **ஷரத்து 19** : இச்ஷரத்து, இந்திய குடிமக்களுக்கு ஆறுவிதமான சுதந்திர உரிமைகளை அளிக்கிறது. இந்த சுதந்திர உரிமைகள் ஆட்சித் துறையினரால் பாதிப்பிற்குள்ளாகும் பொழுது, உயர் நீதிமன்றமும் உச்ச நீதிமன்றமும் அவற்றை தட்டிக் கேட்கின்றன. பாதிக்கப்பட்டவருக்கு தக்க நிவாரணம் வழங்குகின்றன.

(4) **ஷரத்து 20 : ஷரத்து 20 (1)**-ன்படி, ஒரு குற்றமென குற்றஞ் சாட்டப்பட்ட செயல் செய்யப்பட்ட காலத்தில் அமலில் இருந்த சட்டத் தினை மீறியதனைத் தவிர வேறு எந்தக் குற்றத்திற்காகவும் ஒரு நபர் தண்டிக்கப்படவியலாது என்று கூறுகிறது. மேலும், குற்றம் நடந்த காலத்தில் அமலில் இருந்த சட்டத்தின் கீழ் எது தண்டத் தொகையாக விதிக்கப்பட்டிருக்குமோ அதற்கு மேற்பட்ட தண்டத் தொகைக்கு ஒரு நபரை உட்படுத்தக் கூடாது என்றும் கூறுகிறது.

ஷரத்து 20 (2)-ஆனது, எந்த நபரும் ஒரே குற்றத்திற்கு ஒரு தடவைக்கு மேல் குற்ற வழக்கிடப்பட்டு தண்டிக்கப்படக் கூடாது, என்று கூறுகிறது.

ஷரத்து 20 (3)-ஆனது, ஒரு குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப் பட்டுள்ள ஒரு நபர் தனக்கே எதிராக ஒரு சாட்சியமாக ஆக்கப் படுவதற்கு வற்புறுத்தக் கூடாது என்று கூறுகிறது.

ஷரத்து 20-ன் மேற்கண்ட உட்கூறுகள், இந்தியாவில் சட்ட ஆட்சி நடைபெறுகிறது என்பதை முரசொலித்துக் காட்டுகிறது. இவை மீறப்பட்டால், உச்ச நீதிமன்றம் பாதிக்கப்பட்டவனுக்கு தக்க நிவாரணம் அளிக்கிறது.

(5) **ஷரத்து 21** : இச்ஷரத்து, எந்த நபரின் வாழ்க்கையோ அல்லது தனிப்பட்ட சுதந்திரத்தையோ சட்டத்தால் ஏற்படுத்தப்

பட்ட நடைமுறைகளில் தவிர பிறவழிகளில் மீறப்படக் கூடாது என்று கூறுகிறது.

(6) **ஷரத்து 22** : இச்ஷரத்து, ஏதேச்சதிகரமாக கைது செய்தல் மற்றும் சிறை வைத்தலுக்கு எதிரான பாதுகாப்பை வழங்குகிறது.

(7) **ஷரத்து 265** : இச்ஷரத்து, சட்டத்தின் அதிகாரமின்றி வரி விதிக்கவோ அல்லது வசூலிக்கவோ கூடாது என்று கூறுகிறது.

இவ்வாறு இந்திய அரசியலமைப்புச் சட்டம், சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துதோடு மட்டுமில்லாமல், அவற்றை பாதுகாக்கவும் வலியுறுத்தவும் உரிய வகைமுறைகளை நீதித்துறை யின் வாயிலாகச் செய்துள்ளது. எடுத்துக்காட்டாக, உச்ச நீதிமன்றத் தால் (Supreme Court) விளம்பப்படும் சட்டம், இந்திய எல்லைக்குள் உள்ள அனைத்து நீதிமன்றங்களையும் கட்டுப் படுத்துவதாகும் என்று **ஷரத்து 141** கூறுகிறது. மேலும், உச்ச நீதிமன்றம் தனது அதிகார வரம்பை செலுத்தும் பொழுது, தனது முன்னர் நிலுவையில் இருக் கும் வழக்குகளில் முழுமையாக நீதியை நிலைநிறுத்த தீர்ப்பாணைகள் அல்லது உத்தரவுகளை பிறப்பிக்கலாம், என்று **ஷரத்து 142** கூறுகிறது.

அவ்வாறு பிறப்பிக்கப்படும் தீர்ப்பாணை அல்லது உத்தரவு இந்திய எல்லை முழுவதும் செயல்படுத்தத்தக்கதாகும். **ஷரத்து 144**-ஆனது, இந்திய எல்லைக்குள் உள்ள அனைத்து அதிகாரிகளும் (குடிமைத் துறை அல்லது நீதித்துறை), உச்ச நீதிமன்றத்திற்கு உதவும் வகையில் செயல்பட வேண்டும் என்று கூறுகிறது. இவை மட்டுமல் லாது உயர் மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு **ஷரத்துக்கள் 32, 136, 226 மற்றும் 227**-ன் கீழ் நீதிமுறை மறு ஆய்வு (Judicial Review) அதி காரம் வழங்கப்பட்டுள்ளது. குடிமக்களின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படும் பொழுது ஷரத்து 32-ன் கீழ் உச்ச நீதிமன்றம் நீதிப் பேராணைகளை (Writs) பிறப்பித்து தக்க நிவாரணம் வழங்கலாம். அதே போல், அடிப்படை உரிமைகளோ அல்லது குடிமக்களின் பிற உரிமைகளோ மீறப்படும் பொழுது, ஷரத்து 226-ன் கீழ் உயர் நீதிமன்றங்கள் நீதிப்பேராணைகளை அல்லது தக்க உத்திரவுகளை பிறப்பித்து சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்கலாம்.

உச்ச நீதிமன்றம், பல வழக்குகளில் சட்டத்தின் ஆட்சி பற்றி கூறுகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டம், "சட்டத்தின் ஆட்சி" எனும் பாறையின் மீது எழுப்பப்பட்டுள்ளது என்று கூறியுள்ளது.

முடிவுரை:

ஒத்த சூழ்நிலைகளில் உள்ளவர்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமம் என்பதும் சட்டத்தின் பாற்பட்டன்றி வேறு வழிகளில் மனிதர்கள் தண்டிக்கப்படக் கூடாது என்பதும் சட்ட ஆட்சியின் தலையாய தத் துவங்கள். இந்தத் தன்மைகளைக் கொண்ட சட்ட ஆட்சி, ஆட்சித் துறையினரின் நடவடிக்கைகளை உரைத்துப் பார்க்கும் உரைகல்லாக இன்று அமைகின்றது. சட்டத்தின் ஆட்சித் தத்துவப்படி, ஆட்சி, மனிதர்களின் ஆட்சியாக இல்லாமல் சட்டத்தின் ஆட்சியாக இருக்க வேண்டும். ஆட்சி, மனிதர்களுடைய ஆட்சியாக மட்டும் இருக்குமானால், அது ஆட்சியில் உள்ளவர் களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப நடைபெறும். சட்டம் புறக்கணிக்கப்படும். இந்நிலை தவிர்க்கப்பட வேண்டுமானால், ஆட்சியில் உள்ளவர்கள் யாராக இருப்பினும், பிரதம மந்திரி, முதல் அமைச்சர் முதல் கடைநிலை ஆட்சியாளர் வரை, சட்ட ஆட்சியின் விதிகளுக்கேற்ப ஆட்சியை நடத்துதல் வேண்டும்.

21. Droit Adminstratif - Write Short Notes (ஆட்சித்துறை சட்டம் - குறுகிய விடை தருக.)

பிரிட்டன் மற்றும் இந்திய அரசியலமைப்பில் சட்டத்தின் ஆட்சி சிறப்புக் கூறாக விளங்குவதைப் போல, ஃபிரான்ஸ் நாட்டில், **ஆட்சித்துறை சட்டம் (Droit Adminstratif)** சிறப்பாக அமைந் துள்ளது. இதை ஆட்சியாளர்களுக்கான சட்டம், என்றும் அழைக்கலாம்.

பேரா. ஏ.வி.டைசி அவர்கள் சட்டத்தின் ஆட்சியும் ஆட்சித் துறைச் சட்டமும் ஒன்றுக்கொன்று ஒவ்வாதன என்றும், நேர் எதிரானவை **(Rule of Law versus Droit Adminstratif)** என்றும் தான் எழுதிய நூலில் (Introduction to the study of Law of Constitution) குறிப்பிடுகிறார். ஃபிரான்ஸ் நாட்டில் ஆட்சியாளர்கள் சாதாரணமாக எல்லோருக்கும் பொருந்தும்படியான சட்டங்களுக்கு உட்படாத நிலையில் இருக்கிறார்கள். ஆட்சித்துறைச் சட்டம், அவர்களுக்குண்டான தனிச் சட்டமாக இருந்து வருகிறது. அவர்கள் ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள சாதாரணமாக எல்லோருக்கும் பொருந் தும்படியான நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டவர்கள் அல்லர். அவர்களுக்கென தனி நீதிமன்றங்கள் உள்ளன. பொது மக்களுக்கும் அவர்களுக்கும் இடையே எழும் வழக்குகள் தனிப்பட்ட

நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்கு மட்டுமே உட்பட்டதாக உள்ளன. இக்காரணங்களால் ஃபிரான்ஸ் நாட்டில் மக்கள் அனைவரும் சமம் என்று கொள்ள இயலாது, என்று டைசி கூறுகிறார். மேலும், ஆட்சித்துறைச் சட்டப்படி, ஆட்சி அலுவலரே, குற்ற மிழைப்பவராகவும், நீதி வழங்குபவராகவும் விளங்குவதால், குற்ற மிழைக்கின்ற அலுவலர்பால் ஆதரவு காட்டக் கூடுமாதலால், சட்டத்தின் நோக்கமே தோல்வியுறும். நீதிபதிகளின் பாரபட்சமற்ற தன்மையும் நியாய ஒழுங்கமைப்பும் இதனால் சீர் குலைந்து விடும். பாதுகாப்பு பெற்றிருக்கும் அலுவலர்கள் தங்கள் அதி காரத்தை விரிவுபடுத்துவதற்கு முனைந்து பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டு குடிமக்களின் உரிமை வரம்பினைக் கடந்து, அவர் களுடைய அடிப்படை உரிமைகளைத் தாக்கலாம் என்றும் டைசி கூறுகிறார்.

ஆனால் அவர் பிரிட்டனைப் பொறுத்த வரையில் சட்டத்தின் ஆட்சி மட்டுமே நடைபெறுவதாகக் கூறுகிறார். அவரது கூற்றுப்படி, பிரிட்டனில் மக்கள் அனைவரும் சட்டத்தின் முன் சமம்; அவர்கள் யாவரும் சாதாரணமாக எல்லோருக்கும் பொருந்தும் படியான நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டவர்கள். ஃபிரான்ஸ் நாட்டில் நிலவி வரும் ஆட்சித்துறை சட்டம் பிரிட் டனுக்கு அறிமுகம் ஆகவில்லை என்றும், அது சட்டத்தின் ஆட்சிக்கு முரணானது என்றும் அவர் வலியுறுத்திக் கூறுகிறார்.

(ஊ) அரசியலமைப்புகளின் மரபுகள்
[(f) Coventions of the Constitutions]

22. Conventions of the Constitution - Write Short Notes
(அரசியலமைப்பு மரபுகள் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

'சுமுகமான அரசமைப்புச் சட்ட மரபுகளை வளர்க்காமல், ஒரு எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டம் செயல்பட முடியாது' - இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இதுவரை வளர்க்கப்பட்ட மரபுகள் யாவை? அமைக்கப்பட்ட மரபுகள் எதையாவது நாம் ஒதுக்கி தள்ளி வைத்திருக்கிறோமா?

மரபு (Convention) - விளக்கம்:

ஒரு செயல் சாதாரணமாக செய்யப்பட்டு வந்தால் அது வழக்காறு **(Usage)** எனப்படுகிறது. பின்னர் அது பொதுவாக அனைவருடைய விருப்பத்தையும் மறைமுகமாகப் பல காலம் பெற்று தொடர்ந்து நடந்து வந்தால், வழக்கமாக **(Custom)** மாறுகிறது. இந்த வழக்கம் மேலும் தொடரப்பட்டு பழம் பெருமை வாய்ந்ததாக ஆகும் பொழுது, மரபாக **(Convention)** நிலைபெறுகிறது. சுருங்கக் கூறின், மக்கள் அனைவரும் பல காலமாக செய்து பழக்கமுடைய செயல் 'வழக்கம்' எனப்படுகிறது. இங்கு அந்த வழக்கமே, ஒரு நல்ல செயல் எனும் அடிப்படையில் மக்கள் எல்லோராலும் இசைவு கொண்டு தொடர்ந்து செய்யப்பட்டு பழமை வாய்ந்ததாக ஆகும் பொழுது பொழுது, அது 'மரபு' என்றாகிறது. எனவே, வழக்கமே நாளடைவில் மரபாக வளர்ச்சி பெறும்.

மரபுகளுக்கு அடிப்படையாக உள்ள நடைமுறை ஆதரவு:

மரபும் வழக்கமும் அரசியலமைப்பிற்கு உயிரோட்டம் தரும் காரணி களாகும். அவையில்லாவிடின் பல அரசியலமைப்புகள் ஜடமாகிவிடும் அல்லது முழுமையாக செயல்படுத்தப்படாமல் போய்விடும். நீதிமன்றத்தில் வழக்காட முடியாத எழுதப்பெறாத சட்டங்களாக மரபுகள் விளங்கு கின்றன. இங்கு மரபுகள் நாடுகளின் சட்டங்களாக இல்லாமல், நீதிமன்றங்களிலும் நிலைநிறுத்த முடியாமற் போனால், எதற்காக அவைகள் கீழ்ப் படியப்படுகின்றன என்ற வினா இயற்கையாகவே எழுகிறது. எனவே, இங்கு மரபுகளுக்கு அடிப்படையாக உள்ள **நடைமுறை ஆதரவு (Sanction)** எது என்று கண்டறிய வேண்டியுள்ளது. மரபிற்கு நடைமுறை ஆதரவு அளிப்பது, அறநெறி (Moral) தவிர வேறொன்றுமில்லை. குறிப்பிட்ட நபர்கள் மரபுகளை மதிக்க வேண்டுமென அரசியலமைப்பு நெறிகள் எதிர்பார்க்கின்றன. மக்களவையில், அமைச்சரவைக்கு பெரும்பான்மை ஆதரவு இல்லாமற் போனால் அமைச்சரவை பதவி விலக வேண்டும் என்பது மரபு. ஆனால், அமைச்சரவை மரபிற்கு கட்டுப்பட்டு பதவி யிலிருந்து விலகவில்லையென்றால், இந்நிலையை தீர்ப்பதற்கு நீதிமன்றத்தில் வழக்காட முடியாது. மரபுகள் கீழ்ப் படியப்படவில்லையானால், அவற்றை மீறுபவர்கள் நாட்டில் நிறுவப்பட்டுள்ள சட்டங்களுக்கு முரணாக மறைமுக மோதலில் வந்து நிற்பார், என்று பேரா. டைசி அவர்கள் சுட்டிக் காட்டியுள் ளார். இதற்கு எடுத்துக்காட்டாக, பாராளு மன்றம் ஆண்டுக்கொரு முறையேனும் கூட்டப்பட வேண்டும் என்ற மரபினை அவர் குறிப் பிடுகிறார். பாராளுமன்றம் ஆண்டுக்கொரு முறை கூட்டப்பட

வில்லையென்றால், அது மரபை மீறிய செயலாக அமையுமே யொழிய, சட்ட மீறலாக அமையாது. ஆனால் பாராளுமன்றம் ஆண்டுக்கொரு முறை கூட்டப்படவில்லையென்றால், வரிகள் மூலமாக அரசு வருவாய் பெறுவதும், இராணுவச் சட்டத்தை இயற்றுவதும் இயலாதவையாகிவிடும். இதன் விளைவாக வரிகளை வசூல் செய்வதும், இராணுவத்தை பேணுவதும் கடினமானதாக அல்லது முடியாததாகிவிடும். குடிமகன் வரி செலுத்த முடியாது என்று மறுக்கலாம்; வற்புறுத்தினால், அவர் அதனை எதிர்த்து நீதி மன்றத்தில் வழக்கடாலாம். இவ்விளக்கங்களெல்லாம், பாராளு மன்றம் ஆண்டுக்கொரு முறையேனும் கூட்டப்பட வேண்டும் என்பதையே குறிக்கின்றன. மரபை மதித்து நடக்கத் தவறினால், மறை முகமாக அது சட்ட மீறலில் கொண்டுவிடும். எனவே, **'சுமுகமான அரசமைப்புச் சட்ட மரபுகளை வளர்க்காமல், ஒரு எழுதப்பட்ட அரசமைப்புச் சட்டம் செயல்பட முடியாது'** என்பது உண்மைதான்.

மரபுகளின் முக்கியத்துவம் (Significance):

பொதுமக்களின் கருத்துக்களையொட்டி மரபுகள் அமைந் திருப்பதால், அவைகள் நன்கு போற்றப்படுகின்றன. ஆட்சியாளர் களால் பொது மக்களின் கருத்துக்களை எளிதில் புறக்கணிக்க முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஒவ்வொரு ஆட்சியாளரும், பொதுமக்கள் ஆதரவைப் பெறுவதற்காக அவர்களின் நாடியை நன்கு உணர்ந்திருப்பதில் வியப்பொன்றுமில்லை. மக்கள் கருத்தை புறக்கணிக்க அவர் முற்படுவாரானால், அடுத்த பொதுத் தேர்தல் அவரது பதவியின் தலைவிதியை நிர்ணயித்து விடும். சட்டத்தை சொற்றொடரளவில் பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல் அதன் உயிர்ப்பையும் உணர்ந்து நடப்பதைப் பொறுத்துதான் அரசின் திறமை அமைந்திருக்கும். அரசு தடையில்லாத முறையில் சிறப்பாக நடை பெற, மரபுகள் உதவுகின்றன. இயக்காற்றல் பெற்றிருப்பதால், மரபுகள் எட்டா இலக்கை நோக்கினவாக இல்லாமல், நடை முறைக்கு ஏற்றனவாக விளங்குகின்றன. நெகிழாத சட்ட வரம்பினுள் பொருந்தி நிற்பதால், மக்களின் தேவைகளையும், வளர்கின்ற அரசியற் கருத்துகளையும் மரபுகள் நிறைவு செய்யும். மேலும், அரசு எனும் இயந்திரத்திற்கு எண்ணெயிடுவதும், அதனை நல்ல முறையில் இயக்குவதும் மரபுகளேயாகும். நாட்டை ஆள்பவர்கள், பொது மக்களின் நம்பிக்கையைப் பெற்று ஆட்சியை நடத்த வேண்டுமே யொழிய, தான்தோன்றித்தனமாக ஆட்சி செய்யக் கூடாது. மக்களின் மறைமுக இசைவு பெற்றுள்ள நாட்டு மரபுகளைப்

போற்றினால் தான், அவர்களுடைய நம்பிக்கை ஆட்சியாளர்கட்குக் கிடைக்கும்.

அரசியலமைப்புச் சட்டத்தை செயல்படுத்துவதில் மரபுகள் கொண்ட பங்கு (The Role played by Conventions in the application of Constitutional Law) :

அரசியலமைப்புகளை செயல்படுத்துவதில் மரபுகள் உயிர்ப்பான பங்கு கொண்டுள்ளன. அரசியலமைப்பின் சில விதி முறைகளின் செல் வாக்கினை இவைகள் மட்டுப்படுத்தும். சட்டத்தை உருவாக்கவோ அல்லது அதன் எல்லையை குறைக்காமலோ, அரசியலமைப்பின் சில விதிகளைச் செயல்படுத்த முடியாமல் செய்யும். உலகின் பல அரசியலமைப்புகளில் நாட்டின் தலைமை நிர்வாகிக்கு (அரசியலமைப்புச் சட்ட சொற்றொடர்களையொட்டி அரசர், குடியரசுத் தலைவர் போன்றோர்), சட்டமன்றம் இயற்றும் சட்டங்கள் மீது தனது தடுப்பாணை அதிகாரத்தை (veto power) பயன்படுத்த அதிகாரம் உண்டு. ஆனால், மரபடிப்படையில் இவ் வதிகாரம் பெரும்பாலும் பயன்படுத்தப்படுவதில்லை. இந்தியாவில் ஒரு முறைதான் இம்மாதிரியான நிகழ்வு நடந்துள்ளது. **In re Kerala Education Bill**[1] எனும் வழக்கில், இந்திய குடியரசுத் தலைவர் தனது தடுப்பாணை அதிகாரத்தை பயன்படுத்தி கேரளா மாநில சட்டசபை இயற்றிய சட்ட மசோதா மீதான தனது இசைவை வழங்கவில்லை. அப்பொழுதும் கூட, மத்திய அரசு அந்த மசோதாவை சட்ட மாக்குவது தொடர்பான ஆலோசனையைக் கோரி, அதனை உச்ச நீதிமன்றத்திற்கு அனுப்பியது. மேலும், உச்ச நீதிமன்றம் கூறிய கருத்துகளின் அடிப்படையில் அதில் தகுந்த திருத்தங்கள் செய்ய அதனை மீண்டும் கேரளா மாநில சட்டசபைக்கு திருப்பியதே தவிர, முற்றிலும் தடை செய்துவிடவில்லை. ஏனெனில், அவ்வாறு குடியரசுத் தலைவர் இசைவளிக்காமல் மாநிலத்தின் சட்ட மசோதாவை , திருப்புவது மரபு கிடையாது.

"பிரிட்டிஷ் அரசியலமைப்பின் பல மரபுகள், அரசின் நிலைமைக்கேற்ற முடியுரிமை வாய்ந்த அதிகாரம் எந்த அளவில் செலுத்தப்பட வேண்டும் என்று கூறுகின்ற விதிகளேயாகும்" என்று டைசி கூறியுள்ளார். எடுத்துக்காட்டாக, அமைச்சர்களை நியமனம் செய்தல், அரசரின் அதிகாரவரம்பிற்குட்பட்ட செயலாயினும் நாட்டின் மரபின்படி, அமைச்சர்கள் நியமனம் தலைமை அமைச்

1. AIR 1958 SC 956

சரின் அதாவது பிரதம மந்திரியின் ஆலோசனையின் பேரில்தான் அமைய வேண்டும். சட்ட வரம்பிற்குள், அரசியலமைப்பு முறியாமல் வளைந்து கொடுத்து இயங்குவதைக் காக்கும் பணியினை மரபுகள் செவ்வனே செய்கின்றன. **இனி சில நாட்டு அரசியலமைப்புகளில் மரபுகள் கொண்டுள்ள பங்கினைக் குறித்துக் காண்போம்.**

(அ) பிரிட்டன் அரசியலமைப்பில் மரபுகளின் பங்கு:

பிரிட்டனின் அரசியலமைப்பு எழுதப்பெறாமல் விளங்குவ தால், மரபுகள் வளர்வதற்கு உகந்த இடமாக அது உள்ளது. பிரிட்டனில் உள்ள சில முக்கியமான மரபுகள் பின்வருமாறு: (1) பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டுள்ள சட்ட மசோதாவிற்கு அரசர் ஒப்புதல் தெரிவிக்க வேண்டும். (2) அமைச்சரவை, மக்களவையின் ஆதரவை இழக்கும் பொழுது, பதவியினின்றும் விலக வேண்டும். (3) நாட்டின் தலைமை அமைச்சர் (பிரதம மந்திரி) மக்களவையின் உறுப்பினராக இருத்தல் வேண்டும். (4) பாராளுமன்றம் ஆண்டுக்கொரு முறையேனும் கூட்டப்பட வேண்டும். (5) அமைச்சர் குழுவின் (Cabinet) செயல்முறை யனைத்தும் மரபின்வழி நடப்பனவாகும். அமைச்சர் குழு என்ற சொல், 1937-ஆம் ஆண்டுக்கு முன்னால் வரை சட்டத்தில் இடம் பெறவில்லை.

(ஆ) அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசியலமைப்பில் மரபுகளின் பங்கு:

எழுதப்பெறாத அரசியலமைப்பில் பல மரபுகளும் வழக்கங் களும் இடம் பெற்றுள்ளன என்றாலும், எழுதப்பெற்ற அரசிய லமைப்புகளிலும் அவை முக்கியமான பங்கை கொண்டே இயங்கு கின்றன. அந்த வகையில் அமெரிக்க அய்க்கிய நாடுகளின் எழுதப் பெற்ற அரசியலமைப்பில், மரபுகள் சிறப்பான முறையில் பின் வருமாறு இடம்பெற்று அரசியலமைப்பு நெறிகளின் வளர்ச்சிக்கு உதவி யுள்ளன என்றே கூற வேண்டும். அவை (1) அமெரிக்க அரசிய லமைப்பை இயற்றியவர்கள் குடியரசுத் தலைவர் மறைமுகமாகத் தான் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வகுத்திருந்தாலும், நடை முறையில் இது நேரடித் தேர்தல் போலாகிவிட்டது. குடியரசுத் தலைவரின் தேர்விற்காக தேர்வாளர் குழு அமைக்கப்பட்ட வுடனேயே, அடுத்த குடியரசுத் தலைவர் யாரென்று தெரிந்து விடும். ஏனெனில், அக்குழுத் தேர்தலே, கட்சியடிப்படையில்தான் அமைந்துள்ளது. அமெரிக்க அரசிய லமைப்பைத் தோற்றுவித்த பெரியோர்கள், அரசியல் கட்சிகளை விரும்பத் தகாதவை எனக்

கருதினர். ஆனால், வழக்கத்தின் மற்றும் மரபின் அடிப்படையில், மக்களின் அரசியல் வாழ்வில் முக்கியமான இடத்தை அரசியல் கட்சிகள் பெற்றுள்ளன. (2) நாட்டின் மரபின்படி குடியரசுத் தலைவர் பதவிக்கு ஒருவர் இருவரைக் காலத்திற்கு மட்டுமே அப்பதவி வகிக்க முடியும். இந்த மரபைப் பின்பற்றி, ஜார்ஜ் வாஷிங்டன் மூன்றாவது முறையாக குடியரத் தலைவர் பதவிக்கு நிற்கவில்லை. ஆனால், பிராங்களின் டி.ரூஸ்வெல்ட் இம்மரபை முறித்தார்.எனினும்,இம்மரபு அரசியலமைப்பின் 22-ம் சட்ட திருத்தத்தின்படி, ஒருவர் குடியரசுத் தலைவர் பதவிக்கு இருவரைக் காலங்கள் மட்டுமே பதவி வகிக்க முடியும் என்று சட்டமாக்கப்பட்டது. இன்னும் எத்தனையோ மரபுகள் அங்கு உள்ளன.

(இ) இந்திய அரசியலமைப்பில் மரபுகளின் பங்கு:

இந்திய அரசியலமைப்பு எழுதப்பெற்ற, மிக நீண்ட அரசியலமைப்பாகும். அதில் பின்வரும் மரபுகள் பங்கு வகிக்கின்றன. அவை

(1) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 53-வது ஷரத்து, நாட்டின் நிர்வாக அதிகாரம் குடியரசுத் தலைவரிடம் விளங்கி, அவரால் செலுத்தப்பட வேண்டும் என வரையறுத்துள்ளது. பாராளுமன்றத்திற்கு பொறுப்புடன் விளங்கும் அமைச்சரவையின் ஆலோசனை யுடன்தான் தனது அதகாரத்தை செலுத்த வேண்டும் என அரசியலமைப்பு நெறிப்படுத்தியுள்ளது. ஆனால், அமைச்சரவையின் ஆலோசனைக்குக் குடியரசுத் தலைவர் கட்டுப்பட்டவரா என்பதைப் பற்றி உறுதியாக அரசியலமைப்புச் சட்டம் ஒன்றும் கூறவில்லை. அது மரபு களைத்தான் முழுமையாகப் பற்றி நிற்கிறது. எனவே, குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மீது மரபுகள் மட்டுமே தடையிட முடியும். இந்தியாவின் முதற் குடியரசுத் தலைவராக விளங்கிய டாக்டர் இராஜேந்திர பிரசாத் குடியரசுத் தலைமையின் அதிகாரங்களையும் வரம்புகளையும் பற்றி சிறப்பான மரபுகளைத் தோற்றுவித்துள்ளார். அவருடைய கருத்துகளையே பின்னர் வந்த மூன்று குடியரசுத் தலைவர்களான டாக்டர் இராதா கிருஷ்ணனும், டாக்டர் ஜாகீர் ஹுசேனும், வி.வி.கிரியும் நிலைநிறுத்தினர்.

(2) தேர்தலில் வெற்றி பெற்ற கட்சியின் தலைவரை குடியரத் தலைவர் மத்திய அரசைப் பொருத்தும், ஆளுநர் மாநில அரசைப் பொருத்தும் ஆட்சியமைக்க அழைக்க வேண்டும் என்பது மரபு. இந்த மரபு மிகக் கண்டிப்பாக பின்பற்றப்பட்டதற்கு மிகப் பிரபலமான எடுத்துக் காட்டை இங்கு குறிப்பிடல் பொருத்தமாகும். அதாவது

தமிழ்நாடு மாநிலத்தின் 2001-ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் அ.தி.மு.க அமோக வெற்றி பெற்றது. எனவே, மரபுப்படி, அந்த கட்சியின் தலைமையான செல்வி. ஜெயலலிதா அவர்களை தமிழக ஆளுநர் ஆட்சியமைக்க அழைக்க வேண்டும். ஆனால், இங்கு தேர்தலில் போட்டியிட முடியாதபடி அவர் மீது குற்ற வழக்குகளும் தண்டனையும் அப்போது இருந்தன. எனவே, அவர் தேர்தலில் போட்டியிட முடியவில்லை. இதனால் அவரால் சட்டசபை உறுப் பினர் பதவியை அடைய இயலவில்லை. ஒரு புறம் குற்ற வழக்குகளும் தண்டனையும்; மறுபுறம் அதனால் தேர்தல் தகுதியிழப்பும் சட்ட சபை உறுப்பினராகாமையும். இந்த இக்கட்டான சூழலில், தமிழக ஆளுநர் அவரை ஆட்சியமைக்க அழைப்பாரா என்ற வினா இந்தியா முழுமைக்கும் உள்ள மக்கள் மனதில் எழுந்தது எனலாம். ஆனால், அப்போதைய தமிழக ஆளுநர் செல்வி. ஃபாத்திமா பீவி அவர்கள், மரபுப்படி, வெற்றி பெற்ற கட்சியின் தலைவியான செல்வி. ஜெய லலிதா அவர்களை ஆட்சியமைக்க அழைத்து அவரையே முதல மைச்சராக நியமித்தார். இங்கு மரபே மேலோங்கி நின்றது. எனினும் பின்னிட்டு உச்ச நீதிமன்றத்தில் அவரது நியமனம் குறித்து வழக் குகள் எழுந்தன. தண்டனை பெற்றவர், முதலமைச்சர் பதவி வகிக்கக் கூடாது என்றும், மக்கள் தீர்ப்பை விட சட்டத்தின் ஆட்சிதான் உயர்ந்தது என்றும் உச்ச நீதிமன்றம் கூறி செல்வி. ஜெயலலிதா அவர்களை பதவி நீக்கம் செய்ய உத்திரவிட்டது. எவ்வாறு இருப் பினும், அந்த சூழலில் மாநிலத்தின் நலன் கருதி, தமிழக ஆளுநர் மரபுப்படி செயல்பட்டுள்ளார் என்றே கூற வேண்டும்.

(3) ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள் அக்கட்சிக்கெதிராக வாக் களிக்கக் கூடாது என்று கட்சிக் கட்டுப்பாடு கூறுகிறது. ஆனால், இந்தியாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு கட்சியினின்றும் மற்றொரு கட்சிக்கு தாவிச் செல்கின்றனர். எனினும், இந்தக் கட்டுப்பாட்டு மரபை சட்டமாக்க, **கட்சித் தாவல் தடைச் சட்டம் (Anti Defection Law)** பின்னர் இயற்றப்பட்டது. (4) இந்திய அரசியலமைப்பில் அமைச்சர் குழு (Cabinet) என்ற சொல்லைக் காண்பதிற்கில்லை. அதன் 74-வது ஷரத்து " குடியரசுத் தலைவர் தம் கடமைகளைச் செய்வதற்கு உதவியாகவும் ஆலோசனை கூறும் வகையிலும் பிரதம மந்திரியை தலைமையாகக் கொண்ட அமைச் சரவை ஒன்று இருக்கும்" என்று கூறுகிறது. (5) பிரிட்டன் பாராளு மன்ற முறையை வழி நடத்துகின்ற மரபுகள்தாம் நம் நாட்டிலும் ஏற்றுக் கொள்ளப் பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, அமைச்சரவை, மக்களவையின் நம்பிக்கையை இழக்கும் பொழுது பதவி விலகுகிறது.

இத்தகு மரபுகள் இந்தியாவில் இருந்தாலும் மேலும் பல நல்ல மரபுகள் பின்பற்றப்பட வேண்டும். மத்திய பாராளுமன்றமும், மாநில சட்ட மன்றங்களும் ஆளுங்கட்சியினர் மற்றும் எதிர்க் கட்சியினர் பூசலிடும் களங்களாக மாறிவிட்டன. பாராளுமன்ற உறுப்பினர் களும் சட்ட மன்ற உறுப்பினர்களும் முறையே அவரவர்களுக்குரிய சபைகளில் நடவடிக்கைகள் நல்ல முறையில் இருப்பதற்கான அளவில் நன்மரபுகளை வளர்க்க வேண்டும். அப்பொழுதுதான் மக்களுடைய, மக்களால், மக்களுக்காக எனப்படும் மக்களாட்சியும் நிலைபெறும்.

முடிவுரை:

அரசியலமைப்புகளில், மரபுகள் இழைந்தோடும் எழுதப் பெறா சட்டங்களாக விளங்குகின்றன. பல சிக்கலான சூழ்நிலைகளில் மரபுகள் கூறும் நெறிகள் மறுக்க முடியாதவை; மறக்க முடியாதவை.

(எ) அரசியலமைப்புகளுக்கு பொருந்தக் கூடிய தனிச்சிறப்பு பொருள் விளக்க விதிகள்
[(g) Special Rules of Interpretation applicable to Constitutions]

23. State the special rules of interpretation applicable to Constitutions. (அரசியலமைப்புகளுக்கு பொருந்தக் கூடிய தனிச்சிறப்பு பொருள் விளக்க விதிகளைக் குறிப்பிடுக)

(அல்லது)

Examine the different rules of interpretation of legislative entries in the Constitution. (அரசமைப்புச் சட்டத்தில் சட்டமியற்றும் அதிகாரப் பட்டியலை பொருள் விளக்கம் செய்வதற்கான பல்வேறு விதிகளை ஆராய்க)

(அல்லது)

Progressive interpretation in Constitution - Write Short Notes (அரசியலமைப்பில் முற்போக்கான பொருள் விளக்கம் - சிறு குறிப்பு வரைக.)

பொருள்விளக்கம் (Interpretation) - விளக்கம்:

அரசியலமைப்புகளுக்கு உரித்த தனிச் சிறப்பு பொருள்

விளக்க விதிகளை காணும் முன்னர், பொருள்விளக்கம் என்பதின் விளக்கத்தை நாம் இங்கு அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. மக்களாட்சி முறையில் சட்ட மன்றங்கள் சட்டங்களை இயற்றும் போது, தாங்கள் அதன் மூலம் கட்டுப்படுத்த இருக்கின்ற தற்போதைய சூழ்நிலைகள் மற்றும் வாய்ப்புகள் (circumstances and instances), எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சாத்தியக் கூறான நிகழ்ச்சிகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்குண்டான வழிவகைகளை திட்டவட்டமாக, தெள்ளத் தெளிவாக கூறிவிட்டால், நீதிமன்றங்களின் பணி மிகவும் எளிதாகிவிடும். ஆனால், இது இயலாத ஒன்று. எல்லாவற்றையும் எதிர்பார்க்கும் வாய்ப்புகள் இருந்து விட்டாலும், அவற்றை எளிதான நடையில் எழுதி, சந்தேகமில்லாமல் செய்வது அசாதாரணமான, இயலாத பணியாகும். மேலும் அதுமிகப் பரந்தும், பொதுவான கருத்தும் கொண்டதாக (Wide and General meaning and makes it difficult for particular application) அமைந்து விடுவதால், எடுத்தாள்வது எளிதாக இருப்பதில்லை. அதாவது, ஒரு வழக்கு நீதிமன்றத்தின் முன் வரும்போது, முற்றிலும் அந்த வழக்குக்கு உரித்தான முறையில் ஏற்படுத்தப்பட்ட பகுதி (Provision) சட்டத்தில் இருப்பதில்லை. அப்படி இருப்பின், நீதிமன்றத்தின் பணி இயந்திரமயமாகி விடும். கொடுக்கப்படும் தீர்ப்பு சரியான, முறையான ஒன்றாக அமையாது. எனவே, இயற்றப்பட்ட சட்டத்திற்கு பொருள் விளக்கம் காண வேண்டியுள்ளது.

ஒரு சட்ட வாசகத்தை அதன் மொழி இலக்கணப்படி அகராதியில் பொருள் காண்கிறோம். இது ஒரு வகை. மற்றொரு வகை இதற்கு நேர் எதிரிடையானதாகும். அதன்படி, அதாவது, ஒரு சட்ட வாசகத்திற்கு அதன் மொழி இலக்கணரீதிப்படி அகராதிப் பொருளைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் பொழுது, அது அச்சட்டத்தின் நோக்கத்திற்கே முரணாகவும், குழப்பமான விளக்கத்தைத் தருவதாகவும் இருப்பின் என்ன செய்வது ? இங்குதான், சட்ட(பாராளு)மன்றத்தின் கருத்தைக் கண்டு பொருள் விளக்கமளிக்கும் எனும் இந்த மற்றொரு வகை உதவிக்கு வருகிறது. இங்கு, ஒரு சட்டத்தை இயற்றும் பொழுது சட்ட மன்றம் தனது மனதில் எந்தக் கருத்துடன் அச்சட்டத்தை இயற்றியதோ, அதுவே **'சட்ட மன்றத்தின் கருத்து அல்லது உள்ளக்கிடக்கை' (Intention of Legislature)** எனப் படுகிறது. அதாவது எந்நோக்கத்திற்காக சட்ட மன்றம் ஒரு குறிப்பிட்ட சட்டத்தை இயற்றியதோ, அதுவே அதன் கருத்தாகும். அந்நோக்கம், அச்சட்டத்தினுள்ளேயே பொதிந்துள்ளது. இதனைக் கண்டறிந்து பொருள் விளக்கமளிப்பதே,

சட்டமன்றத்தின் கருத்தைக் காணலாகும். இவ்வகையின் படி., ஒரு சட்ட வாசகத்திற்கு, அதன் அகராதிப் பொருளின்படி மேலெழுந்த வாரியாக அளிக்கப்படும் பொருள் விளக்கமானது, முரண்பட்ட தாகவோ அல்லது தெளிவற்றோ இருப்பின், அச்சட்ட வாசகத்தை இயற்றும் பொழுது சட்டமன்றம் எதை மனதில் கருதிக் கொண்டு, அதனை இயற்றியது என்பதை அச்சட்டத்தினுள் பொதிந்துள்ள பொருளைக் காண்பதின் வாயிலாக அறிந்து, அதற்கொப்ப பொருள் விளக்கமளித்தலாகும்.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு ஏன் தனிச் சிறப்பு பொருள் விளக்க விதிகள் பின்பற்றப்பட வேண்டும்?

ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அளிக்கப்படும் பொருள் விளக்கமானது, ஒரு சாதாரண சட்டத்திற்கு அளிக்கப்படும் பொருள் விளக்கத்திலிருந்து பெரிதும் மாறுபட்டதாகும். ஏனெனில், சாதாரண சட்டங்களை இயற்றிய சட்டமன்றத்தின் கருத்தானது, அச்சட்டத்தின் தனிப்பட்ட நோக்கம் ஒன்றை மட்டுமே மையமாகக் கொண்டிருக்கும். எனவே, அச்சட்டத்திற்கு, அதன் நோக்கத்திற்கேற்ப, சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் மேற்கண்ட பொதுவான விதிகளைக் கொண்டு பொருள் விளக்கமளித்து விடலாம். ஆனால், ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் அவ்வாறல்ல. ஏனெனில், அரசியலமைப்புச் சட்டம் இயற்றப் படுவதற்கான நோக்கம், அது ஆற்றிட இருக்கும் பணி, அது அடைய நினைக்கும் எல்லைகள் ஆகியவை முற்றிலும் வேறுபட்டவையாகும். எனவே, அதை அணுகுவதற்குண்டான பொருள் விளக்க முறையும் மாற்றம் கொண்டதாகவே இருக்க வேண்டியுள்ளது. மேலும், மக்களாட்சியின் மறுவடிவமே, அரசியலமைப்புச் சட்டமாகும். மக்களாட்சி மலர்ந்துள்ள நாடுகளிலெல்லாம், மக்களுக்கென்று அடிப்படை உரிமைகளும், சுதந்திரங்களும் அரசியலமைப்பால் கொடுக்கப்பட்டுள்ளன. அதேபோல், அவை மீறப்பட்டால், அதற்கு நீதிப்பேராணைகள் (Writs), மூலம் அரசியலமைப்பு தீர்வழி தருகிறது. பிற சட்டங்களையெல்லாம் நெறிப் படுத்தும், தாய் சட்டமாக அரசியலமைப்புச் சட்டம் விளங்குகிறது. எனவே, ஒரு சாதாரண சட்டத்திற்கு அளிக்கப்படும் பொருள் விளக்கத்தைக் காட்டிலும், அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு அளிக்கப்படும் பொருள் விளக்கம் மிகவும் நுட்பமானதாகும். இதனால்தான், அரசியலமைப்புச் சட்டத்தின் பொருள் விளக்கத் திற்கென சில தனிச் சிறப்பு விதிகளும் கோட்பாடுகளும் பின்பற்றப்

படுகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருந்தக் கூடிய தனிச் சிறப்பு பொருள் விளக்க விதிகள் :

அரசியலமைப்புச் சட்டமும் ஒரு சட்டத்தின் தன்மையைக் கொண்டிருப்பதால் சட்டப் பொருள் விளக்க விதிகள் அனைத்தும் அதற்கும் பொருந்தும். எனினும், பொருள் விளக்கத்திற்கென தனிச்சிறப்பு விதிகளும், கோட்பாடுகளும் அரசியலமைப்புகளுக்கு பல உள்ளன. அரசியலமைப்புச் சட்டத்தினை நிர்மாணித்தவர்களின் நோக்கத்தைக் கண்டறிவதே, அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கமளித்தலின் அடிப்படைக் கோட்பாடாகும். சுருங்கக்கூறின், அவர்கள் நோக்கத்தைச் செயல்படுத்துவதாகவே சட்டப் பொருள் விளக்கம் அமைய வேண்டும். மேலும் அதில் பயன் படுத்தப்பட்டுள்ள மொழி நடையை ஒட்டியே அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் தர வேண்டும். இது குறித்த விதிகள் பின்வருமாறு :

1. பிற அரசியலமைப்புகளை ஒப்பு நோக்கி அறிதல் (Anologistic provisions of other Constitutions):

ஒரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டம் அந்நாட்டின் உயிர் நாடியாகக் கருதப்பட்டாலும் பிற நாட்டு அரசியலமைப்புச் சட்டங்களில் காணப்படுகிற ஒற்றுமைகளை ஒப்பு நோக்கி ஆராய நீதிமன்றங்கள் தயங்குவதில்லை.

2.அரசியலமைப்பு முழுவதையும் கருத்தில் கொள்ள வேண்டும் (Constitution to be considered as a whole) :

அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு ஷரத்தினை புரிந்து கொள்வ தற்கு அச்சட்டம் முழுவதையுமே கருத்தில் கொள்ள வேண்டும். எந்த ஒரு ஷரத் தையும் பிரித்து தனிமைப்படுத்தக் கூடாது. அப்பொழுதுதான் அதன் முழுமை யான நோக்கம் புலனாகும். மேலும் அதன் உண்மையான பணியும் செவ்வனே நிறைவேறும். பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது அரசியலமைப்பு சட்டத்தின் ஒவ்வொரு வார்த்தைக்கும் சொல்லுக்கும், சொற்றொடருக்கும், உயிரோட்டம் அளிக்க வேண்டும். அதனால் **கேசவானந்த பாரதி**[1] **வழக்கில்** அரசியலமைப்பு சட்டத்தின் முகப்புரை கூட (Preamble)

1. AIR 1973 SC 1461

அதன் ஒரு பகுதி என்றும், ஏதாவது ஒரு வரத்து தெளிவற்றிருந்தால் அல்லது பொருள் விளங்காமலிருந்தால் அதனைப் புரிந்து கொள்ளுவதற்குப் பேருதவியாய் இருப்பது அம்முகப்புரையே ஆகும், என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

3. அரசியலமைப்பு தோன்றிய சந்தர்ப்பங்களின் அடிப்படையில் அது பொருள் கொள்ளப்பட வேண்டும் (To be construed in the light of circumstances in which constitution was made) :

அரசியலமைப்பு தோன்றுவதற்கு முன்பிருந்த சூழ்நிலைகள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த சூழல்கள், தோன்றிய பின் ஏற்பட்ட மாற்றங்கள், அத்தோடு அப்போது இருந்த மரபுவழிச் சட்டங்களின் தன்மை இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு அரசியலமைப்புச் சட்டம் பொருள் கொள்ளப்பட வேண்டும். இதனை நீதித்துறை அடிக்கடி வலியுறுத்துகிறது.

4. இசைவமைந்த பொருள் விளக்கம் (Harmonious Construction):

சட்டமொன்றில், இரண்டு முரண்பட்ட சட்டப் பிரிவுகள் இருப்பின், அவை இரண்டும் ஒன்றிணைக்கப்பட்டு, அவற்றிற்கு இசைவான பொருள் விளக்கம் காணலே, இசைவமைந்த பொருள் விளக்கம் என்கிறோம். இங்கு எதற்காக 'இசைவமைந்த பொருள் விளக்கம்' முக்கை நுழைக்கிறது என்றால், அரசியலமைப்பு சட்டம் கூறும் அடிப்படை உரிமைகளும் (Fundamental Rights), அதே அரசியலமைப்புச் சட்டம் கூறும் அரசு நெறி முறையுறுத்து கொள்கைகளும் (Directive Principles of State Policy) ஒன்றுக் கொன்று முரண்பாடானவை ஆகும். அவற்றினை, ஒன்றிற்கொன்று இயைந்த முறையில் பொருள் விளக்கமளிக்க, இசை வமைந்த பொருள் விளக்க விதி பயனாகிறது.

5. அரசியலமைப்புகளின் பொருள் விளக்கம் குறித்த பல சிறப்புக் கோட்பாடுகள் (Special Doctrines of Interpretation):

பின்வரும் சிறப்பு கோட்பாடுகள் அரசியலமைப்பிற்கு பொருள் விளக்கம் அளிக்கும் பொழுது, நீதிமன்றங்களால் விவாதிக்கப்பட்டு கையாளப் பட்டுள்ளன. அவை 1. உள்ளதாகக் கருதப்படுகிற அதிகாரங்கள் (Doctrine of Implied Powers) 2. உப அல்லது துணை அதிகாரங்களின் கோட்பாடு (Doctrine of Incidental or Ancilliary Powers) 3. உட்கிடைத் தடைக் கோட்பாடு (Doctrine of Implied Prohibition) 4. ஆக்ரமித்துக் கொள்ளும்

கோட்பாடு (Doctrine of Occupied Field) 5. பெரும்பான்மை விதி (Doctrine of Pith and Substance) 6. சட்டத்தின் பொய்மைத் தோற்ற விதி (Doctrine of Colourable Legislation) 7.ஆளுகைத் தொடர்புக் கோட்பாடு (Doctrine of Territorial Nexus) 8. கூட்டுப் பிரியக்கூடிய தத்துவம் (Doctrine of Severability) 9. வரு நிகழ்வு ஒதுக்கித் தள்ளும் கோட்பாடு (Doctrine of Prospective Overruling) 10. மறைதல் கோட்பாடு (Doctrine of Eclipse) 11. வரம்பு மீறல் கோட்பாடு (Doctrine of Ultra Virus) 12. தளர்த்தீடு கோட்பாடு (Doctrine of Waiver).[1]

அரசமைப்புச் சட்டத்தில் சட்டமியற்றும் அதிகாரப் பட்டியலை பொருள் விளக்கம் செய்வதற்கான பல்வேறு விதிகள்:

இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாகும். எனவே, சட்டமியற்று அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. மத்திய அரசு, மத்திய பட்டியலில் (Union List) உள்ள துறைகளிலும், மாநில அரசுகள் மாநிலப் பட்டியலில் (State List) உள்ள துறைகளிலும் சட்டமியற் றிக் கொள்ளலாம். எனவே, சட்டமியற்றும் அதிகாரப் பட்டியலுக்கு பொருள்விளக்கம் தரும்பொழுது, இந்தியாவில் கூட்டாட்சியை நிலைநிறுத்த வேண்டும் என்ற கருத்துடன் ஒரு சுதந்திரமான போக்கு கொண்டு செயல்பட வேண்டும். வார்த்தைகளுக்கு அவற்றின் சாதாரண பொருளே தர வேண்டும். மேலும் நாம் சென்ற பத்தியில் கண்ட கோட்பாடுகளில் பின்வருபவை, சட்டமியற்றும் அதிகாரப் பட்டியலை பொருள் விளக்கம் கொள்வதற்குண்டான விதிகளாக நமது உச்ச நீதிமன்றம் பின்பற்றியுள்ளது. அவை, 1. உள்ளதாகக் கருதப்படுகிற அதிகாரங்கள் (Doctrine of Implied Powers) 2. உப அல்லது துணை அதிகாரங்களின் கோட்பாடு (Doctrine of Incidental or Ancilliary Powers) 3. உட்கிடைத் தடைக் கோட்பாடு (Doctrine of Implied Prohibition) 4. ஆக்ரமித்துக் கொள்ளும் கோட்பாடு (Doctrine of Occupied Field) 5. பெரும்பான்மை விதி (Doctrine of Pith and Substance) 6. ஆளுகைத் தொடர்புக் கோட்பாடு (Doctrine of Territorial Nexus).[1]

முற்போக்கான பொருள் விளக்கமளித்தலின் கருத்து (The Concept of Progressive Interpretation):

அரசியலமைப்பு சட்டம் என்பது நாளொரு மேனியும்

1. இக்கோட்பாடுகளின் விளக்கத்தை நாம் இந்நூலின் பிற்பகுதியில் காண உள்ளோம் - ஆசிரியர்.

பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வருகின்ற ஒன்று. அதில் அனுதினமும் பல மாற்றங்கள் ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. ஆகவே அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கம் கொடுக்கும் பொழுது சற்று சுதந்திரமாகவே செயல்பட வேண்டும். "சொற்கள் அனைத்தும் பளிங்கின் தூய்மையை கொண்டவை அல்ல" என்று நீதிபதி Oliver அவர்கள் கூறுகிறார். எனவே அரசியலமைப்பு சட்டத்திற்கு இலக்கணரீதியாக (literal) பொருள் கொடுப்பது என்பது பெரும் சோதனையாக முடியும். மேலும் அது உண்மையான நோக்கத்தை அழிக்கவும் கூடும். ஆகவே எவரும் அர்த்தமற்ற ஊட்டங்களை உபயோகப்படுத்தக் கூடாது. நாட்டு மக்களின் உயிர்தான் அரசியலமைப்பின் உயிர் ஆகும். அவர்களின் உணர்வே அதன் உணர்வாகும். எனவே அதனை வெளிக் கொணரும் முயற்சியாகவே சட்டப் பொருள் விளக்கம் அமைய வேண்டும். இதனால் அளிக்கப்படும் அரசியலமைப்பின் நோக்கத்தை அதாவது மக்கள் நலனை முன்னேற்றக் கூடிய முற்போக்கான பொருள் விளக்கமாக (Progressive Interpretation) இருக்க வேண்டும். அரசியலமைப்புகள் எக்கருத்து கொண்டு உருவாக்கப்பட்டதோ அதனை நிலை நிறுத்தும் விதத்தில் பொருள் விளக்கம் அமைய வேண்டும். பரந்த நோக்கு இருக்க வேண்டும். தற்காலத்தையும் சூழலையும் ஒட்டிய பயன்மிகு பொருள் விளக்கம் (Beneficial Interpretation) தரப்பட வேண்டும். அடிப்படை உரிமைகள் (Funda-mental Rights) குறித்த பகுதியின் பொருள் விளக்கம் அதற்கு உரியவர்களான குடிமக்களுக்கு பயன்தரக் கூடிய பரந்த நோக்கில் இருக்க வேண்டும்.

Atam Prakash v. State of Haryana and others[1] எனும் வழக்கில், "நாம் பொருள் விளக்கம் அளிக்க வேண்டும் என்று விழையும் அரசியலமைப்பின் ஷரத்து, அது எதுவாக இருந்தாலும், அதுபோல், ஒரு சட்டத்தின் அரசியலமைப்படியான செல்லுதன்மை குறித்த அய்யப்பாடு எழும் பொழுது, அது எச்சட்டமாக இருப்பினும், நாம் ஒரு சமதர்ம குடியரசு நாட்டினை நோக்கிய முன்னேற்ற நடையை மேம்படுத்துத்தக் கூடிய முற்போக்கான பொருள் விளக்கத்தை அளிக்கவே தலைப்பட வேண்டும்,"[2] என்று நீதிபதிகளுக்கு உச்ச நீதிமன்றம் கூறியது.

1. AIR 1986 SC 859
2. "Whatever article of the Constitution it is we seek to interpret, whatever statute it is whose constitutional validity is sought to be questioned, we must strive to give an interpretation as will promote the march and progress towards a Socialistic Democratic State."

முடிவுரை:

நாம் முன்னர் கண்டது போல் அரசியலமைப்புகளை உருவாக்க முடியாது; அது வளர வேண்டும். இங்கு அதன் வளர்ச்சி என்பது, அரசியலமைப்புகளுக்கு பொருள் விளக்கமளிக்கக் கூடிய அதிகாரம் படைத்த நீதிமன்றங்களின் கைகளில்தாம் உள்ளது. அரசியலமைப்பை உருவாக்கியவர்களின் கருத்தை மனதில் கொண்டு மக்களாட்சித் தத்துவங்களை மனதில் கொண்டு நீதிமன்றங்கள் தற்காலத்திற்கு ஏற்றதான முற்போக்கான பொருள் விளக்கத்தை அளிக்க வேண்டும். அப்பொழுதுதான் அரசியலமைப்பு எனும் ஆபரணம், என்றும் மினுமினுப்புடன் மக்களாட்சி என்பதின் கழுத்தை அலங்கரிக்கும்.

(ஏ) அரசியலமைப்பை திருத்தும் நடைமுறை
[(h) Amending Process of Constitution]

24. Amending process in static and dynamic Constitutions - Write short notes. (நிலையான மற்றும் முனைப்பான அரசியலமைப்புகளில் திருத்தும் முறை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

"The amending process of Constitution in India is different from that of Britain" Discuss. ("இந்தியாவில் அரசியலமைப்பை திருத்தும் நடைமுறை பிரிட்டனின் அத்தகு முறையிலிருந்து இருந்து வேறுபட்ட தாகும் "- விவாதிக்க.)

நிலையான மற்றும் முனைப்பான அரசியலமைப்புகள் (Static and Dynamic Constitutions) - விளக்கம்:

***நிலையான அரசியலமைப்பு* (Static Constitution)** என்றால், உறுதித் தன்மை வாய்ந்த அரசியலமைப்பு என்று பொருள்படும். ஒரு அரசியலமைப்பு எழுதப்பெற்றதாகவும் நெகிழ்வற்றதாகவும் இருப்பின், அதில் உறுதித் தன்மையும் ஒட்டிக் கொண்டிருக்கும். மேலும் இந்த வகை அரசியலமைப்புகளில்தாம், அரசியலமைப்பை திருத்துவதற்கு கடினமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டியுள்ளது. இதனால், நிலையான அரசியலமைப்புகள் சமுதாய மற்றும் அரசியல் சூழ்நிலைக்கேற்ப புதியவனவற்றை ஏற்றுக் கொண்டு, அதற்கொப்ப எளிதில் தம்மைத் திருத்திக் கொள்ள இயலாதவனவாக உள்ளன.

ஆனால் அதே சமயத்தில் **முனைப்பான அரசியலமைப்புகள் (Dynamic Constitutions)**, சமுதாயத்தில் ஏற்படும் மாறுதலுக்கேற்ப எளிதில் தம்மைத் திருத்திக் கொள்ளக் கூடிய தன்மையை பெற்றுள்ளன. இதற்கு காரணம், முனைப்பான அரசியலமைப்புகள் எழுதப் பெறாததாகவும் நெகிழ்ந்து கொடுக்கக் கூடியதாக உள்ளன. அவை, புதிய சூழலுக்கேற்ற விதத்தில் வளைந்து கொடுக்கின்றன. எனவே, முனைப்பான அரசியலமைப்புகளில், அரசியலமைப்பை திருத்தும் முறை எளிதானதாகும். அரசியலமைப்பை திருத்தும் முறை கடினமாக உள்ள நிலையான அரசியலமைப்புகளுக்கு எடுத்துக்காட்டாக இந்திய மற்றும் அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசியலமைப்புகளைக் குறிப்பிடலாம். திருத்தும் முறை எளிதாக உள்ள முனைப்பான அரசியலமைப்புகளுக்கு எடுத்துக்காட்டாக பிரிட்டனின் அரசியலமைப்பை குறிப்பிடலாம்.

பிரிட்டனில் அரசியலமைப்பை திருத்தும் நடைமுறை (Amending Process of Constitution in Britain):

பிரிட்டனின் அரசியலமைப்பு எழுதப்பெறாதது மற்றும் நெகிழ்ந்து கொடுப்பதாகும். எனவே, புதிய கருத்துகளுக்கொப்ப அரசியலமைப்பை எளிதில் திருத்தி விடலாம். இதனால் இது முனைப்பான அரசியலமைப்பு என்ற வகையில் வருகிறது. மேலும், பிரிட்டனில் பாராளுமன்றம் இறைமை பெற்றிருப்பதால், அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை, ஒரு சாதாரண சட்ட மசோதா இயற்றுவதைப் போலவே, முதல் வாசிப்பு (First Reading), இரண்டாவது வாசிப்பு (Second Reading), குழு நிலை (Committe Stage), அறிக்கைக் நிலை (Report Stage), மூன்றாவது வாசிப்பு (Third Reading) என்ற அளவில் இயற்றப்படலாம். திருத்தச் சட்ட மசோதா, இரண்டு சபைகளிலும் (மன்றங்களிலும்) (House of Commons and House of Lords) ஏற்கப்பட்ட பின்னர், அரசரின் இசைவைப் (Royal Assent) பெற்று[1], அரசியலமைப்பின் ஒரு பகுதியாக மாறிவிடுகிறது. இங்கு திருத்தம் தேவையெனும் பொழுது வெகு விரைவில் முனைப்புடன் செய்யப்படுகிறது. நடைமுறை சிக்கல்கள் ஏதுமில்லை.

---

1. பிரிட்டனில் ஒரு சாதாரண சட்ட மசோதா சட்டமாக இயற்றப்பட மேற்கண்ட நிலைகளை கடந்து வர வேண்டும். இதே நடைமுறைதான் அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்படுவதற்காக இயற்றப்பட வேண்டிய சட்டத்திற்கும் பின்பற்றப்பட வேண்டியுள்ளது. இதற்கென சிறப்பு நடைமுறைகள் **ஏதுமில்லை.**

அமெரிக்க அய்க்கிய நாடுகளில் அரசியலமைப்பை திருத்தும் நடைமுறை (Amending Process of Constitution in U.S.A.):

அமெரிக்க அரசியலமைப்பு எழுதப்பெற்றது மற்றும் நெகிழ்வற்ற தன்மையுடையது. எனவே, இதனை நிலையான அரசியலமைப்பு எனலாம். இதனால், இங்கு அரசியலமைப்பை திருத்தும் முறை கடினமானதாக உள்ளது. ஒரு சாதாரண சட்டத்தை இயற்றுவதைப் போல, அரசியலமைப்பில் திருத்தம் கொண்டு வரும் சட்டத்தை இயற்ற முடியாது. இதற்கென தனி நடைமுறை உள்ளது. அதன்படி, நான்கு முறைகளில் அமெரிக்க அரசியலமைப்பை திருத்தலாம். அவை, (1) கூட்டாட்சி சட்ட (பாராளு)மன்றம் (Congress) மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலம் ஒரு திருத்தத்தை முன்மொழிந்து மாநிலங்களின் நான்கில் மூன்று பங்கு சட்டமன்றங்கள் அதை ஏற்கலாம். (2) கூட்டாட்சி சட்டமன்றம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை மூலம் ஒரு திருத்தத்தை முன்மொழிந்து மாநிலங்களின் நான்கில் மூன்று பங்கு சிறப்புக் கூட்டங்கள் அதை ஏற்கலாம். (3) மாநிலங்களின் மூன்றில் இரு பங்குச் சட்டமன்றங்கள் கொடுத்த மனுவின் பேரில் கூட்டப் பெற்ற சிறப்புக் கூட்டம் ஒரு திருத்தத்தை முன்மொழிந்து மாநிலங்களின் நான்கில் மூன்று பங்குச் சட்டமன்றங்கள் அதை ஏற்கலாம். (4) மூன்றில் இரு பங்குச் சட்டமன்றங்கள் கொடுத்த மனுவின் பேரில் கூட்டப் பெற்ற சிறப்புக் கூட்டம் ஒரு திருத்தத்தை முன்மொழிந்து அதை நான்கில் மூன்று பங்கு மாநிலங்களில் கூட்டப் பெறுகிற சிறப்புக் கூட்டங்கள் ஏற்கலாம்.

இந்திய அரசியலமைப்பை திருத்தும் நடைமுறை (Amending Process of Constitution in India):

அமெரிக்க அரசியலமைப்பைப் போல இந்திய அரசியலமைப்பும் எழுதப்பெற்றது மற்றும் நெகிழ்வற்ற தன்மையுடையது. எனவே, இதனையும் நிலையான அரசியலமைப்பு எனலாம். இதனால், அரசியலமைப்பை திருத்துவதற்கு ஒரு தனி நடைமுறை பின்பற்றப்படுகிறது. இந்திய அரசியலமைப்பு மூன்று வழிகளில் திருத்தப்படலாம். (1) பாராளுமன்றத்தின் எளிய பெரும்பான்மை (Simple Majority) அடிப்படையில் சில ஷரத்துகள் திருத்தியமைக்கப்படலாம். (2) வேறு சில ஷரத்துகள், பாராளுமன்றத்தின் அறுதிப் பெரும்பான்மை (Special Majority) மூலம் திருத்தியமைக்கப் பெறும். (3) வேறு சில ஷரத்துகள் பாராளுமன்றத்தின் அறுதிப் பெரும் பான்மைக்குப் பின்னர் மாநிலங்களில் பாதிக்குக் குறையாத

சட்டசபை களாலும் ஏற்கப்பட வேண்டும். (Special Majority and ratification by atleast one-half of the State Legislatures).

இந்தியாவில் அரசியலமைப்பை திருத்தும் நடைமுறை பிரிட்டனில் இருந்து வேறுபட்டது - விவாதம்:

பிரிட்டன் மற்றும் இந்திய அரசியலமைப்பை திருத்தும் முறையை மேலே கண்டோம். பிரிட்டனில் ஒரு சாதாரண சட்டத்தை இயற்றுவதைப் போல அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தையும் எளிதான முறையில் இயற்றிவிடலாம். ஆனால், இந்தியாவில் அவ்வாறு முடியாது. அதற்கென தனி நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். மாநிலச் சட்டசபைகளின் இசைவும் தேவைப்படுகிறது. இந்த வேறுபாடுகளுக்கு காரணம், பிரிட்டனில் ஒற்றையாட்சியும், இந்தியாவில் மத்திய அரசிற்கும் மாநில அரசுகளுக்கும் இடையே நிலவும் கூட்டாட்சியும் என்றால் மிகையாகாது. இதனால், அரசியலமைப்பின் திருத்தத்தில் மாநிலங்களின் இசைவிற்கும் பங்களிக்கப்படுகிறது. மேலும் பிரிட்டனின் எழுதப்பெறாத மற்றும் நெகிழும் முனைப்பான அரசியலமைப்பு, திருத்தத்தை எளிதில் அங்கீகரிக்கத் தக்கதாக உள்ளன. ஆனால், இந்தியாவில் எழுதப்பெற்ற மற்றும் நெகிழாத நிலையான அதாவது உறுதியான அரசியலமைப்பு உள்ளதால், அதை திருத்துவதற்கு கடினமான நடைமுறை பின்பற்றப்படுகிறது. எனவே இந்தியாவில் அரசியலமைப்பை திருத்தும் முறை பிரிட்டனின் முறையிலிருந்து வேறுபட்டதேயாகும்.

முடிவுரை:

எழுதப்பெற்ற மற்றும் நெகிழாத அரசியலமைப்புகளைக் கொண்ட நாடுகளில் கூட்டாட்சி நிலவும். ஏனெனில், அவை ஒரு கூட்டாட்சிக்குரிய அம்சங்களாகும். அவ்வாறு கூட்டாட்சி நிலவும் நாடுகளின் அரசியலமைப்புகள், நிலையான (உறுதியான) (Static) அரசியலமைப்புகளாகும். எனவே, திருத்தங்களை அவ்வளவு எளிதாக ஏற்றுக் கொள்வதில்லை. அதற்கென தனி நடைமுறைகளை வகுத்துள்ளது. அதில் மாநில சட்ட மன்றங்களும் இசைவு கொடுக்க வேண்டிய சூழலை ஏற்படுத்தியுள்ளது. இதனால், செய்யப்பட விருக்கும் திருத்தங்களில் மாநிலங்களும் பங்கேற்று கூட்டாட்சிக் கோட்பாட்டை நிலைபெறச் செய்கின்றன. நிலையான அரசியல மைப்பிற்கு இத்தகு சிறப்பு இருந்தாலும், மாறுகின்ற சூழலை யொட்டி உடனுக்குடன் அரசியலமைப்பில் திருத்தங்களை கொண்டு வர இயலாது. மேற்கண்ட மாதிரியான தனி நடைமுறைகளைத்தான்

பின்பற்ற வேண்டும். இது ஒருபுறம் என்றால், மறுபுறம் பிரிட்டன் போன்ற எழுதப் பெறாத மற்றும் நெகிழும் அரசியலமைப்புகள், முனைப்பான (Dynamic) அரசியலமைப்புகளாகும். அங்கு மாறுகின்ற சூழலையொட்டி, அரசியலமைப்பில் எளிய நடைமுறைகள் மூலம் திருத்தங்களை கொண்டு வந்துவிடலாம். எவ்வாறு இருப்பினும், இந்திய அரசியலமைப்பும், மாறுகிற கால மற்றும் சமூக சூழலையொட்டி, 2009-ஆம் ஆண்டு வரை சரியாக 95 முறை திருத்தப் பட்டுள்ளது என்பதையும் நாம் இங்கு மறந்து விட முடியாது.

(ii) முகப்புரை மற்றும் நோக்கம் [Preamble and the Objective Resolution]

25. Point out the significance and legality of the preamble of the Constitution of India. Can preamble be amended ? Discuss with decided cases (இந்திய அரசியலமைப்பினுடைய முகப்புரையின் முக்கியத்துவத்தையும் சட்டத் தன்மையையும் சுட்டிக் காட்டுக. முகப்புரையை திருத்தம் செய்ய இயலுமா என்பதை முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்க.)

(அல்லது)

Point out the significance of the preamble of the Constitution of India. Had there been any amendment to the preamble? If so, what was the object? (இந்திய அரசியலமைப்பினுடைய முகப்புரையின் முக்கியத்துவத்தை சுட்டிக்காட்டுக. முகப்புரையில் திருத்தம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா? அவ்வாறெனில், அதன் நோக்கம் யாது?)

(அல்லது)

Bring out the significance of the Preamble of the Indian Constitution, citing decided cases. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரையின் முக்கியத்துவத்தை தீர்க்கப்பட்ட வழக்குகளின் வாயிலாக எடுத்துரைக்கவும்.)

(அல்லது)

Explain the object of the preamble of the constitution. Discuss whether it can be altered like any other provisions of the constitution. (இந்திய அரசமைப்புச் சடட முகப்புரையின்

நோக்கங்களை விளக்குக. அதனை அரசமைப்புச் சட்டத்தின் பிற சரத்துக்களைப் போன்று மாற்றம் செய்ய முடியுமா என்பதை விளக்கவும்.)

(அல்லது)

"Preamble lays down the purpose and object of the Indian Constitution" - Explain. ("முகப்புரை இந்திய அரசியலமைப்பின் குறிக்கோள் மற்றும் நோக்கத்தை எடுத்துரைக்கிறது" - விளக்குக.)

(அல்லது)

Discuss whether and to what extent the preamble can be used in interpreting the provisions of the constitution. (அரசமைப்பு சட்ட வாசகங்களின் பொருள் விளக்கத்தில் முகப்புரையை பயன்படுத்தலாமா மற்றும் எந்த அளவிற்கு பயன்படுத்தலாம் என்பது பற்றி விவாதிக்க.)

(அல்லது)

Discuss the object and scope of the preamble in the Constitution of India. Discuss the extent to which it can be used in interpreting the provisions of the constitution. (இந்திய அரசமைப்பின் முகப்புரையின் நோக்கத்தையும் நோக்க எல்லையையும் விவரித்துக் கூறுக. அரசமைப்பு சட்ட விளக்கத்தில் அதை எவ்வாறு பயன்படுத்த இயலும் என்பதை கூர்ந்தாய்க.)

(அல்லது)

Preamble - Write Short notes (முகப்புரை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Preamble of the Indian Constitution - Write Short notes (அரசமைப்பு சட்ட முகப்புரை - குறுகிய விடை தருக.)

முகப்புரையின் பொருள் :

முகப்புரை (Preamble) எனப்படுவது, இயற்றப்பட்ட சட்டத்தை அறிமுகம் செய்து வைக்கும் பகுதியாகும். மேலும் அச் சட்டத்தின் நோக்கங்களை புரிந்துகொள்ளவும், சட்ட (பாராளு) மன்றத்தின் கருத்தை அறிந்து கொள்ளவும், சட்டத்தின் முகப்புரை

பெரிதும் உதவுகிறது.

முகப்புரையின் முக்கியத்துவம் :

சட்டத்தை இயற்றியவர்கள் அச்சட்டத்தை எந்நோக்கிற்காக இயற்றினார்கள், அதன் மூலம் சமூகத்தில் எந்தவிதமான சூழ்நிலைகளையும் மாறுதல்களையும் உண்டாக்கக் கருதினார்கள் என்று முகப்புரையில் கூறப்படுகிறது.

நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் எந்நோக்கத்திற்காக இயற்றப்பட்டது என்பதும் அதன் மூலம் ஏற்படுத்தப்பட வேண்டிய மாறுதல்களும், அரசியலமைப்புச் சட்டத்தின் 'முகப்புரையை' கண்டாலே தெளிவாகிவிடும். (முகப்புரையின் நோக்கங்கள் பின் வருமாறும், முகப்புரை அடுத்த பக்கத்திலும் கொடுக்கப்பட்டுள்ளன.)

முகப்புரையின் நோக்கங்கள் :

பின்வருவன முகப்புரையில் கூறப்பட்டுள்ள நோக்கங்களாகும்.

1. சமுதாய நீதி, பொருளாதார நீதி மற்றும் அரசியல் நீதி (Justice) வழங்குவது;

2. சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில், நம்பிக்கையில் மற்றும் வழிபாட்டில் சுதந்திரம் (Liberty) அளிப்பது;

3. தகுநிலை (Status) மற்றும் வாய்ப்பில் சமத்துவத்தை (Equality) அளிப்பது;

4. தனியொருவரின் மாண்புக்கும் (Dignity of the individual), நாட்டின் ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும் உறுதி அளிக்கும் உடன் பிறப்புணர்வை (Fatarnity) குடிமக்கள் அனைவரிடையே வளர்த்தல்;

இவற்றை இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் அளித்து பாதுகாக்கிறது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை :



முகப்புரை

இந்திய மக்களாகிய நாம்,

இந்தியாவை ஒரு [**இறைமை வாய்ந்த, சம நலமை நெறி சார்ந்த, சமயச் சார்பற்ற, மக்களாட்சிக் குடியரசாக**][1] அமைக்கவும், அதன் குடிமக்கள் அனைவருக்கும்,

சமுதாய, பொருளாதார மற்றும் அரசியல் **நீதியும்,**

சிந்தனையில், சிந்தனை வெளிப்பாட்டில், நம்பிக்கையில், பற்றார்வத்தில் மற்றும் வழிபாட்டில் **சுதந்திரமும்,**

தகுநிலையில் மற்றும் வாய்ப்பில் **சமத்துவமும்,**

உறுதியாகக் கிடைக்கச் செய்யவும்

தனி ஒருவரின் மாண்புக்கும், [நாட்டின் **ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டுக்கும்**][2] *உறுதி யளிக்கும்* **உடன்பிறப்புணர்வை** அவர்கள் அனைவரிடையே வளர்க்கவும்,

விழுமிய முறைமையுடன் உறுதி பூண்டு,

1949, நவம்பர் இருபத்து ஆறாம் நாளாகிய இன்று **நம்முடைய அரசியலமைப்பு பேரவையில், ஈங்கிதனால், இந்த அரசியலமைப்பை ஏற்று, சட்டமாக இயற்றி, நமக்கு நாமே வழங்கிக் கொள்கிறோம்.**

1. *1976-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு சட்டத் திருத்தத்தால் 'இறைமை வாய்ந்த மக்களாட்சிக் குடியரசு' என்பதற்கு பதிலாக புகுத்தப்பட்டது.*
2. *மேற்படி சட்ட திருத்தத்தால் 'நாட்டின் ஒற்றுமை' என்பதற்கு பதிலாக*

முகப்புரையின் சட்டத் தன்மை (Legality of the Preamble) (அல்லது) முகப்புரையை எவ்வாறு மற்றும் எந்த அளவிற்கு பொருள் கொள்ள வேண்டும் என்று கருத்து தெரிவித்த வழக்குகள்:

முகப்புரைக்கு சட்ட முக்கியத்துவம் உள்ளதா, அது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஒரு பகுதியா என்ற வினாக்கள் காலப் போக்கில் எழுந்த வழக்குகளில் தோன்றலாயின. அப்பொழுது, இந்திய அரசியலமைப்பின் முகப்புரைக்கு எவ்வாறு பொருள் விளக்கம் கொடுக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றமும் கருத்து தெரிவித்தது. இந்த வழக்குகளில் முகப்புரையின் சட்டத் தன்மை குறித்து ஒன்றுக்கொன்று மாறுபட்ட கருத்துகள் நிலவின. **அம்மிக முக்கியமான வழக்குகள் வருமாறு.**

In Re Berubari Case (or) In Re Berubari Union and Exchange of Enclaves Case[1]

இவ்வழக்கின் பொழுது, இந்திய அரசியலமைப்பின் முகப் புரை, குறித்து பல பொருள் விளக்கங்கள் கூறப்பட்டன. முதலில் **முகப்புரை என்பது, இந்திய அரசியலமைப்பின் ஒரு பகுதி அல்ல என்றும்,** எனவே, எந்த நிலைமுறை அதிகாரங்களுக்கும் அடிப்படை யாக (source of any substantive power) முகப்புரையைக் கருதக் கூடாது என்றும், அத்தகு அதிகாரங்கள் இந்திய அரசியலமைப் பிலேயே வெளிப்படையாக வழங்கப்பட்டுள்ளது, என்றும் கூறப் பட்டது. மேலும், அதிகாரங்களைக் குறித்து எது உண்மையாக உள்ளதோ, அதே, அந்த அதிகாரங்களின் மீதான தடை குறித்தும் உண்மையாக உள்ளன, எனப்பட்டது. முகப்புரையானது அரசிய லமைப்புச் சட்டத்தின் நோக்கங்களைக் குறித்து கூறுகிறதே தவிர, அதே சட்டமல்ல அல்லது சட்ட வலிமையும் பெற்றதல்ல. அரசிய லமைப்பில் பயன்படுத்தப்பட்டுள்ள பதங்கள் குழப்பக் கூடிய தாகவோ அல்லது இரு பொருள் தரக்கூடியதாகவோ இருப்பின், முகப்புரையில் கூறப்பட்டுள்ள அரசியலமைப்பின் நோக்கங்களின் உதவியை நாடலாம். அதற்குப் பொருந்துமாறு உள்ள பொருள் விளக்கத்தை எடுத்துக் கொள்ளலாம், எனப்பட்டது. இந்த அளவிற்கு மட்டுமே முகப்புரையை பொருள் காணுவதில் பயன்படுத்த இயலும் என மேற்படி வழக்கில் கூறப்பட்டது. மேலும் முகப்புரையை ஷரத்து 368ன் கீழ் திருத்த முடியாது; ஏனெனில் முகப்புரையானது, அரசியலமைப்பின் ஒரு பகுதியே அல்ல, எனப்பட்டது.

1. AIR 1960 SC 845

Kesavanand Bharathi v. State of Kerala[1]

பெருபாரி வழக்கில் கூறப்பட்ட மேற்படி கருத்தை உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் நிராகரித்து, **முகப்புரையானது அரசியலமைப்பின் ஒரு பகுதியே** என்று குறிப்பிட்டது. சாதாரண சட்டங்களின் முகப்புரைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காது போனாலும், ஒரு அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனப்பட்டது. இவ்வழக்கில், அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருள் விளக்கமளிப்பதற்கு, முகப்புரையை கவனிக்க வேண்டியது முக்கியமான ஒன்று என முகப்புரையின் முக்கியத்துவம் நிலை நிறுத்தப்பட்டது. அதாவது, முகப்புரைக்கும், சட்டத்தன்மை உண்டு என்றும், சட்ட வலிமை உண்டு என்றும் வலியுறுத்தப்பட்டது.

S.R.Bommai v. Union of India[2]

இவ்வழக்கில், முகப்புரை அரசியலமைப்பின் ஒரு பகுதியாகும் என்று உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

முகப்புரையை திருத்தம் செய்ய இயலுமா?

இக்கேள்வி புகழ் பெற்ற மேற்படி **கேசவானந்த பாரதி வழக்கின்**[1] பொழுது; உச்ச நீதிமன்றத்தின் முன்னர் எழுந்தது. அப்பொழுது, **தலைமை நீதியரசர் சிக்ரி (Sikri C.J.)** அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள். அவரது கூற்றுப்படி, " அதிகாரங்கள் குறித்து எது உண்மையாக உள்ளதோ, அதே, அந்த அதிகாரத்தின் மீதான தடைகள் மற்றும் வரம்புகளைக் குறித்தும் உண்மையாக உள்ளது, என்ற உரையை மெய்பிப்பதற்கு எவ்வித ஆதாரமும் நம் முன் சமர்ப்பிக்கப்படவில்லை .... நமது அரசியலமைப்பின் முகப்புரையானது அதிமுக்கியத்துவம் வாய்ந்தது என்றும், அரசியலமைப்பானது, முகப்புரையில் கூறப்பட்டுள்ள மாபெரும் மற்றும் உயர்ந்த கண்ணோட்டத்தின் அடிப்படையில்தான் படிக்கப்பட வேண்டும் மற்றும் பொருள் கொள்ளப்பட வேண்டும் என்று எனக்கு தோன்றுகிறது" என்று குறிப்பிடுகிறார். உண்மையில், ஷரத்து 368-ன் கீழான அரசியலமைப்பை திருத்தும் பாராளுமன்ற அதிகாரத்தின் மீது உட்கிடை வரம்புகளை விதிக்க முகப்புரையை சார்ந்திருக்க வேண்டும் எனப்பட்டது.

---

1. AIR 1973 SC 1461
2. (1994) SCC 1

மேலும் முகப்புரையானது, அரசியலமைப்பின் ஒரு பகுதி என்பதால், அரசியலமைப்பின் ஷரத்துக்களை எவ்விதம் ஷரத்து 368-ன் கீழ் திருத்துகிறோமோ, அதே போன்று முகப்புரையையும் திருத்தலாம் எனப்பட்டது. ஆனால் அச்சமயத்திலும், முகப்புரையில் கூறப்பட்டுள்ள அரசியலமைப்பின் **'அடிப்படை அம்சங்களை' (basic features)** ஷரத்து 368-ன் கீழ் திருத்தியமைக்க முடியாது என்றும் கூறப்பட்டது. எனவே முகப்புரையை திருத்தலாம்.

42-வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்திற்கு பிறகு முகப்புரை:

1976-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு சட்ட திருத்தமானது, நமது முகப்புரையில் மூன்று சொற்களை புகுத்தியுள்ளது. அவை, **சமநலமை நெறி (Socialist), சமயச் சார்பின்மை (Secular)** மற்றும் **ஒருமைப்பாடு (Integrity)** ஆகும். (முன் பக்கத்தில் உள்ள முகப்புரையின் அடிக் குறிப்புகளைக் காண்க).

"சமநலமை நெறி" (Socialist) என்பது, சமதர்ம நெறியை குறிப்பிடுகிறது. **Excel Wear v. Union of India**[1] என்ற வழக்கில், மேற்படி சொல்லை முகப்புரையில் புகுத்தியதால், தேசியமயமாக்கல் (Nationalisation) மற்றும் ஒரு தொழிற்சாலையின் அரசு உடைமைக்கு (State Ownership of an industry) ஆதரவாக நீதிமன்றங்கள் அதிகப் படியாக சார்ந்திருக்க ஏதுவாக்கலாம், என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

D.S.Nakara v. Union of India[2] என்ற வழக்கில், பணிபுரியும் மக்களுக்கு ஒரு நடுத்தர வாழ்க்கையை அளித்தல், குறிப்பாக கருவறை முதல் கல்லறை வரை பாதுகாப்பு அளித்தல் ஆகிய இவைதான், சமநலமை நெறி என்பதின் அடிப்படை திட்டமாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

அரசின் சமயமென, எந்த ஒரு சமயத்தையும் ஒரு அரசு அங்கீகரிக்கவில்லையானால், அவ்வரசு சமயச் சார்பற்ற அரசு எனப்படுகிறது. இதுவே, **"சமயச் சார்பின்மை" (Secular)** ஆகும். அந்த அரசு எல்லா சமயத்தையும் அதாவது மதத்தையும் **(Religion)** சமமாக பாவிக்கின்றது. எனினும், குடிமக்கள் தங்கள் சமயங்களை எவ்வித தடையுமில்லாமல் பின்பற்ற இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **25 முதல் 28 வரையிலான ஷரத்துகள்** பாதுகாப்பளிக்கின்றன.

1. AIR 1979 SC 25
2. AIR 1983 SC 130

S.R.Bommai v. Union of India[1] என்ற வழக்கில் "சமயச் சார்பின்மை என்பது அரசியலமைப்பின் அடிப்படை அம்சமாகும்" (Secularism is the basic feature of the constitution) என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Aruna Roy v. Union of India[2] என்ற வழக்கில் **"சமயச் சார்பின்மை" (Secular)** என்பதற்கு உச்ச நீதிமன்றம் ஒரு நேர்மறையான விளக்கத்தை அளித்தது. அதாவது பல்வேறுபட்ட மதங்களை மேம்படுத்தல், புரிந்து கொள்ளுதல் மற்றும் மதிப்பளித்தலே சமயச்சார்பின்மை ஆகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

"ஒருமைப்பாடு" (Integrity) என்ற சொல், தனிப்பட்ட போக்கிற்கு முற்றுப்புள்ளி வைக்கவும் மற்றும் இந்தியாவின் ஒவ்வொரு பகுதியையும் தங்கள் வீடாக மக்களை கருத வைக்கவும் விளைகின்றது. அரசியலமைப்பின் முதல் ஷரத்திலேயே (Article 1) இது பற்றி மறைமுகமாக, **"இந்தியா, மாநிலங்களின் ஓர் ஒன்றியமாக இருக்கும்" (India shall be a Union of States)** என்று குறிப்பிடப் பட்டுள்ளது. அஃதாவது, எந்த ஒரு மாநில அரசும் ஒன்றியத் திலிருந்து பிரிந்து செல்ல இயலாது என்பதை மேற்படி ஷரத்து வலியுறுத்து கிறது. இங்கு **"ஒன்றியம்" (Union)** என்பது மத்திய அரசு ஆகும். மேற்படி ஷரத்திலேயே 'ஒருமைப்பாடு' குறித்து மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருப்பினும், அது 42-வது திருத்தச் சட்டத்தால் முகப்புரையில் புகுத்தப்பட்டுவிட்டதால் மேலும் பலப்படுகிறது.

முகப்புரையின் நோக்கங்களும், அவை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள விதமும்:

முகப்புரையின் **நோக்கங்களைப் (Objects)** பொறுத்தவரை, முகப் புரையில் காணப்படும் நீதி, சுதந்திரம், சமத்துவம், உடன் பிறப்புணர்வு (சகோதரத்துவம்), நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு ஆகிய இவற்றைத்தாம் நமது நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் உறுதியாக அளிக்க முகப்புரை நினைக்கிறது.

சமூக, பொருளாதார் மற்றும் அரசியல் **நீதியை** குடிமக் களுக்கு முகப்புரை உறுதியாக கிடைக்க செய்ய விழைகிறது. இதற் கென நமது அரசியலமைப்பில் அரசு நெறி முறையுறுத்தும் கொள்கைகள் (Directive Principles of State Policy) சேர்க்கப்

1. (1994) SCC 1
2. AIR 2003 SC 3176

பட்டுள்ளன. மேலும், ஷரத்து 15-ஆனது, எந்த குடிமகனும் அவனது சமயம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படக் கூடாது என்று கூறுகிறது. அதுபோல், ஷரத்து 17-ஆனது, தீண்டாமையை ஒழிக்கிறது. ஷரத்துகள் 38 மற்றும் 39 ஆகியன சமூக-பொருளாதார நீதிக்கு வழி வகுக்கின்றன. சமூக - பொருளாதார நீதி என்பது, பொருள் வளங்களை நியாயமான முறையில் பங்கீடு செய்வதற்காக சமுதாய மாந்தர்களிடையே செல்வத்தை கட்டாயமாக பகிர்ந்தளித்தலையும் குறிப்பிடுகிறது, என்று **Lingappa v. State of Maharashtra**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது. அரசியல் நீதி என்பது, தக்க வயது டைந்த அனைவருக்கும் ஓட்டுரிமை அளிப்பதன் மூலம் உறுதியளிக்கப் படுகிறது.

அடுத்து குடிமக்களின் சிந்தனையில், சிந்தனை வெளிப் பாட்டில், நம்பிக்கையில், பற்றார்வத்தில் மற்றும் வழிபாட்டில் அவர்களுக்கு **சுதந்திரத்தை** முகப்புரை வழங்குகிறது. இதற்கு ஷரத்துகள் 25 மற்றும் 26 வகை செய்கிறது.

இதற்கடுத்ததாக தகுநிலை மற்றும் வாய்ப்பில், **சமத்துவத்தை** முகப்புரை குடிமக்களுக்கு உறுதி செய்கிறது. இதற்கு 14 முதல் 18 வரையிலான ஷரத்துகளே சான்றுகளாகும்.

மேலும் தனியொருவரின் மாண்பினை கருத்தில் கொண்டு அனைவரிடையேயும் **உடன்பிறப்புணர்வை** வளர்ப்பது நமது முகப்புரை மற்றொரு நோக்கமாகும். இதனால், ஷரத்து 19(1) (d) மற்றும் 19 (1) (e)-படிக்கு இந்தியக் குடிமகன் இந்தியா முழுமைக்கும் எங்கும் செல்ல, தங்க உரிமை படைத்தவனாகிறான். இதனால், ஒரு சகோதரத் துவம் மலர வழி பிறக்கிறது. மேலும் இதற்கு வசதியாக ஒற்றைக் குடியுரிமைதான் **(Single Citizenship)** நமது நாட்டிலும் நிலவுகிறது. எனவே, இந்தியன் இந்தியாவிற்குள் எங்கும் செல்லலாம். நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, ஷரத்து 1-ல் மேற்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.

மேலும், முகப்புரையின் **முக்கியத்துவத்திற்கு (Significance)** வலு சேர்க்கும் சேர்க்கும் விதத்தில், **I.C. Golak Nath v. State of Punjab**[2] எனும் வழக்கில், "சட்டமன்றம் அடைவதற்கு எண்ணம் கொண்டுள்ள முக்கிய நோக்கங்களைக் கூறுவது தான் ஒரு செய்

1. AIR 1985 SC 389
2. AIR 1967 SC 1643

சட்டத்தின், முகப்புரை எனப்படுகிறது" என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

முகப்புரையின் **பொருள் விளக்கத்தைப்** (Interpretation) பொருத்து, **In Re Berubari**[1] வழக்கில், முகப்புரை குறித்து மாறுபட்ட கருத்துக்கள் கூறப்பட்டிருப்பினும், **"சட்டத்தினை உண்டாக்குபவர்களின் மனதை திறக்கக் கூடிய சாவிதான், முகப்புரை"** (key to open the mind of the makers), என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இதிலிருந்து முகப்புரை, **அரசியலமைப்புச் சட்டப் பொருள் விளக்கத்திற்கு உதவும் ஒரு கருவி (tool) என்பதும் புலனாகும்.**

முடிவுரை:

மேற்கண்டவற்றையெல்லாம் காணும் பொழுது, முகப்புரை என்பது அரசியலமைப்பு எனும் மாளிகை நிற்க அடிப்படையாக விளங்கும் அஸ்திவாரம் என்பதும், முகப்புரையை ஒட்டியே பொருள் விளக்கம் காண வேண்டுமென்றும் மிகத் தெளிவாகத் தெரியக்கூடிய ஒன்று.

-o0o-

1. AIR 1960 SC 845

அத்தியாயம் 5

ஒன்றியமும் அதன் ஆட்சி எல்லையும்
(ஷரத்துகள் 1 முதல் 4 வரை)
[The Union and its Territory]
(Articles 1 to 4)

இந்தியாவின் ஆட்சி எல்லை – 35 மற்றும் 36–வது சட்டத்திருத்தம் – புதிய மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் எல்லைகளை மாற்றுதல் முதலியன – மாநிலங்களை மறுசீரமைப்பு செய்யும் நடைமுறை – எல்லையை மாற்றிக் கொடுத்தல்
[Territory of India - 35th, 36th Amendment - Formation of New States and Alteration of Boundaries, etc. - Procedure for reorganisation of States - Cession of Territory]

26. Explain the scope of the "Territory of India". Can a portion of the territory of India be transferred to a foreign State? Illustrate with decided cases. Can the areas, boundaries of States be altered? If so, explain the constitutional procedure.
(இந்திய எல்லையின் அளாவுகையை விளக்குக. இந்திய எல்லையின் ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்கு மாற்றலாமா? முடிவுற்ற வழக்குகளைக் கொண்டு உதாரணம் தருக. மாநிலங்களின் எல்லைப் பரப்பையும், எல்லையையும் மாற்றலாமா? அப்படியானால், அரசமைப்பு செயல்விதிகளை விளக்குக.)

(அல்லது)

Explain the scope and extent of the territory of India. Can a new state be formed in the Indian Union? If so, explain the constitutional procedure. (இந்திய எல்லையின் நோக்கெல்லையையும், பரப்பையும் விளக்குக. இந்திய யூனியனில் ஒரு புதிய மாநிலத்தை அமைக்க முடியுமா? அப்படியென்றால், அரசமைப்பு சட்டத்தின் வழிவகைகளை விளக்குக.)

(அல்லது)

Pointout the provisions in the Constitution of India for the establishment of new States and their admission into the Union. Is the procedure same for the alteration of the areas and boundaries of existing states? (இந்திய யூனியனில் புதிய மாநிலங்களை அமைப்பது மற்றும் அவைகளை சேர்ப்பதற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தின் வழிவகைகளைக் குறிப்பிடுக. தற்போதுள்ள மாநிலங்களின் பரப்புகளை மற்றும் எல்லைகளை மாற்றியமைப்பதற்கு அதே நடைமுறைகளா?)

(அல்லது)

Explain the power of Parliament to form new States and to alter the areas, boundaries and name of a State. (புதிய மாநிலங்களை உருவாக்கவும், ஒரு மாநிலத்தின் பகுதிகள், எல்லைகள் மற்றும் பெயரை மாற்ற பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரத்தை விவரி.)

(அல்லது)

What is the procedure for transfer of Indian territory to a foreign State? (ஒரு அயல் நாட்டிற்கு இந்திய ஆட்சி நிலப்பகுதி உரிமை மாற்றம் செய்வதின் முறை என்ன?)

(அல்லது)

State the provisions of Constitution relating to the territory of India. (இந்திய எல்லை தொடர்பான அரசியலமைப்பின் சட்ட வகை முறைகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

State the procedure for formation of new States and alter-

ation of areas, according to Indian Constitution. (இந்திய அரசமைப்புபடி புதிய மாநிலங்களை உருவாக்குதல் மற்றும் பரப்புகளை மாற்றுதலுக்குண்டான நடைமுறையை குறிப்பிடுக)

(அல்லது)

Constitutional procedure for the formation of new States - Write short notes. (புதிய மாநிலங்கள் அமைப்பதில் அரசமைப்பு சட்டத்தின் நடைமுறைகள்- குறுகிய விடை தருக.)

(அல்லது)

Formation of new States - Write short notes. (புதிய மாநிலங்களை உருவாக்குதல் - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

நமது இந்தியா, மாநிலங்களை தன்னகத்தே ஒன்றிணைத்துக் கொண்டு மைய்யமாக நின்று ஆட்சி செலுத்துகிறது. எனவே, இது **"ஒன்றியம்" (Union)** என்று அழைக்கப்படுகிறது. இங்கு மைய்யமாக நின்று ஆட்சி செய்வது, மத்திய அரசு ஆகும். அதாவது இந்திய அரசு. இனி அதன் எல்லையைக் குறித்த ஷரத்துக்களை கவனிப்போமா?

இந்திய எல்லையின் அளாவுகையும், பரப்பும் (Scope and extent):

இந்திய எல்லை எவற்றையெல்லாம் உள்ளடக்கியது, அதன் அளாவுகை என்ன என்பன குறித்து **ஷரத்து 1** கூறுகிறது. அதன்படி,

ஷரத்து 1 (1)-ஆனது, இந்தியா, அதாவது பாரதம் மாநிலங்களின் ஓர் ஒன்றியமாக இருத்தல் வேண்டும், என்று கூறுகிறது.

ஷரத்து 1 (2)-ஆனது, மாநிலங்களும் அவற்றின் எல்லைகளும் முதலாம் அட்டவணையில் (First Schedule) குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும், என்று கூறுகிறது.

ஷரத்து 1 (3)-ஆனது, இந்திய எல்லை,- (a) மாநிலங்களின் எல்லைகளையும் (State Territories), (b) முதலாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட ஒன்றியத்து எல்லைகளையும் (Union Territories), (c) கையகப்படுத்தப்படக் கூடிய அத்தகைய பிற எல்லைகளையும் உள்ளடக்கியிருத்தல் வேண்டும், என்று கூறுகிறது.

இந்திய அரசியலமைப்பின் முதலாவது அட்டவணையில் 28

மாநிலங்களின் பெயர்களும் 7 ஒன்றியத்து எல்லைகளின் (யூனியன் பிரதேசம்) பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. அவையாவன:

(1) ஆந்திரப்பிரதேஷ், (2) அசாம், (3) பீகார், (4) குஜராத், (5) கேரளா, (6) மத்தியப்பிரதேஷ், (7) தமிழ்நாடு, (8) மகாராஷ்டிரா, (9) கர்நாடகா, (10) ஒரிசா, (11) பஞ்சாப், (12) இராஜஸ்தான், (13) உத்திரப்பிரதேஷ், (14) மேற்கு வங்காளம், (15) ஜம்மு மற்றும் காஷ்மீர், (16) நாகாலாந்து, (17) ஹரியானா, (18) இமாச்சல பிரதேஷ், (19) மணிப்பூர், (20) திரிபுரா, (21) மேகாலயா, (22) சிக்கிம், (23) மிசோரம், (24) அருணாச்சலபிரதேஷ், (25) கோவா, (26) சட்டீஸ்கர், (27) உத்தராஞ்சல், மற்றும் (28) ஜார்கண்ட்.

முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட 7 யூனியன் பிரதேசங்களாவன: (1) தில்லி, (2) அந்தமான் மற்றும் நிகோபர் தீவுகள், (3) இலட்சத் தீவுகள், (4) டாட்ரா மற்றும் நாகர் ஹவேலி, (5) கோவா, டையூ மற்றும் டாமன், (6) பாண்டிச்சேரி (புதுச்சேரி), மற்றும் (7) சண்டிகர்.

ஆரம்பத்தில் முதலாம் அட்டவணை நான்கு வகைப்பட்ட மாநிலங்களையும், பிரதேசங்களையும் கொண்டிருந்தது. பகுதி A மாநிலங்கள், பகுதி B மாநிலங்கள், பகுதி C மாநிலங்கள் மற்றும் பகுதி D பிரதேசங்கள் என்பனவாகும். 1956-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு (ஏழாவது சட்டத்) திருத்தம் இத்தகைய வகைப் பாட்டை நீக்கிவிட்டது. தற்போது முதலாம் அட்டவணையானது, மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் என்ற இரு வகையை மட்டுமே கொண்டுள்ளது.

இந்தியாவின் நிலப்பகுதி மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் நிலப்பகுதிகளை மட்டும் கொண்டிராமல், வருங் காலத்தில் கையகப்படுத்தப்படக் கூடிய அத்தகைய நிலப்பகுதிகளை யும் உள்ளடக்கும்.

இந்திய யூனியனில் ஒரு புதிய மாநிலத்தை சேர்க்க அல்லது நிறுவ முடியுமா? (Can a new State be admitted or established into the Indian Union?):

முடியுமென்று **ஷரத்து 2** கூறுகிறது. அதன்படி, பாராளுமன்றம் ஒரு சட்டத்தின் வாயிலாக, தான் பொருத்தமெனக் கருதும் வரையீடுகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில், இந்திய ஒன்றியத்திற்குள் புதிய மாநிலங்களை சேர்த்துக் கொள்ளலாம் அல்லது நிறுவலாம்.

(New States can be admitted or establised). இச்ஷரத்து, ஏற்கனவே உள்ள மாநிலங்களை இந்திய ஒன்றியத்திற்குள் சேர்த்துக் கொள்ளவோ அல்லது முற்றிலும் புதிய மாநிலங்களை இந்திய ஒன்றியத்திற்குள் நிறுவவோ, பாராளுமன்றத்திற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்கிறது.

அதே நேரத்தில் ஷரத்து 2-இன் கீழ் இந்திய ஒன்றியத்தில் புதிதாக யூனியன் பிரதேசம் ஒன்றை சேர்க்கவோ, நிறுவவோ முடியாது. யூனியன் பிரதேசங்களை சேர்த்துக் கொள்ளுதலும், புதிதாக நிறுவிக் கொள்ளுதலும் அரசியலமைப்பு சட்டத் திருத்தம் ஒன்றினால்தான் செயல்படுத்த முடியும். யூனியன் பிரதேசங்களான கோவா, டையூ, டாட்ரா மற்றும் நாகர் ஹவேலி மேலும் பாண்டிச் சேரி ஆகியன அரசியலமைப்புச் சட்டத் திருத்தச் சட்டத்தின் வாயிலாகத்தான் ஏற்படுத்தப்பட்டன.

ஷரத்து 2 இரு வகையான அதிகாரங்களை வழங்குகிறது. (1) புதிய மாநிலங்களை இந்திய ஒன்றியத்தில் சேர்த்துக் கொள்ளுதல். (2) புதிய மாநிலங்களை நிறுவுதல். முன்னது முன்னரே முறைப்படி நிறுவப்பட்டு ஏற்கனவே நடப்பில் இருந்து வருவதை சேர்த்துக் கொள்ளுதலை குறிப்பிடுகிறது. பின்னது இதற்கு முன்னர் இருந்திராத ஒன்றை சேர்த்துக் கொள்ளுதல் மற்றும் உருவாக்குதலை கூறுகிறது. சட்டீஸ்கர், உத்தராஞ்சல் மற்றும் ஜார்கண்ட் என்ற 3 புதிய மாநிலங்கள் முறையே 2000-ஆம் ஆண்டின் மத்தியப்பிரதேஷ் சீரமைப்புச் சட்டம், 2000-ஆம் ஆண்டின் உத்திரப்பிரதேஷ் சீரமைப்புச் சட்டம், 2000-ஆம் ஆண்டின் பீகார் சீரமைப்புச் சட்டம் ஆகியவற்றின் கீழ் நிறுவப்பட்டன.

35-வது அரசியலமைப்பு திருத்தம் :

இந்திய அரசியலமைப்பில் 1974-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 35-வது திருத்தமானது அதில் ஷரத்து 2-A என்றொரு வகைமுறையையும், பத்தாவது அட்டவணையையும் சேர்த்தது. இப்புதிய ஷரத்து 2-A ஆனது சிக்கிமிற்கு "இணை மாநிலம்" (Associate State) என்ற அந்தஸ்தை வழங்கியது. இத்திருத்தம் பாராளுமன்றத்தின் இரு அவைகளுக்கு தலா ஒருவர் என்ற வீதத்தில் ஒரு பிரதிநிதியை அனுப்ப வகை செய்தது. அதே போல் புதிதாக சேர்க்கப்பட்ட 10-வது அட்டவணை இந்தியாவுடன் சிக்கிமின் இணைப்பு பற்றிய நிபந்தனைகளை வகுத்துரைத்தது. எனினும் இத்திருத்தம் நீண்ட நாள் நீடிக்கவில்லை. சிக்கிம் மக்களின் விருப்பத்

திற்கிணங்க 1975-ஆம் ஆண்டில் 36-வது அரசியலமைப்புத் திருத்தம் இயற்றப்பட்டு, சிக்கிமிற்கு முழுமையான மாநில அந்தஸ்து வழங்கப் பட்டது.

36-வது அரசியலமைப்பு திருத்தம் :

1975-இல் கொண்டு வரப்பட்ட 36-வது அரசியலமைப்புத் திருத்தத்தின்படி இந்திய ஒன்றியத்தில் சிக்கிமிற்கு முழுமையான மாநில அந்தஸ்து வழங்கப்பட்டது. இது அரசியலமைப்பின் முதலாவது அட்டவணையை திருத்தி, சிக்கிமை 22-வது மாநிலமாக சேர்த்துக் கொண்டது. மேலும் மாநிலங்களவைக்கு (ராஜ்ய சபை) சிக்கிமிலிருந்து ஒரு பிரதிநிதியை அனுப்புவதற்கு ஏதுவாக அரசியலமைப்பின் 4-வது அட்டவணையும் திருத்தப்பட்டது. அத்துடன் இத்திருத்தம் இந்திய அரசியலமைப்பில் 371-F என்றொரு புதிய ஷரத்தை சேர்த்து, அது சிக்கிம் மாநிலம் தொடர்பான சிறப்பு வகைமுறைகளுக்கு வழிவகை செய்தது. முன்னதாக 1974-ஆம் ஆண்டின் 35-வது அரசியலமைப்புத் திருத்தத்தால் சேர்க்கப்பட்ட ஷரத்து 2-A-ம் பத்தாவது அட்டவணையும் நீக்கறவு செய்யப்பட்டது.

இந்திய யூனியனில் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க முடியுமா? இருக்கும் மாநிலங்களின் பரப்புகள், எல்லைகள் மற்றும் பெயரை மாற்ற முடியுமா? (Can a new state be formed in the Indian Union? Can the areas, boundaries or names of existing States be altered?):

ஷரத்து3-ன்படி, இந்திய ஒன்றியத்திற்குள் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க முடியும். மேலும், ஏற்கனவே இருக்கும் **மாநிலங்களின் பரப்பு களை, எல்லைகளை அல்லது பெயர்களை மாற்றவும் (alteration of areas, boundaries or names of existing States)** முடியும்.

அச்ஷரத்தின்படி, பாராளுமன்றம் ஒரு சட்டத்தின் வாயிலாக,

(a) ஒரு மாநிலத்தின் எல்லையை பிரிப்பதாலோ அல்லது இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட மாநிலங்களை அல்லது மாநிலங்களின் பகுதிகளை இணைப்பதாலோ அல்லது எந்த எல்லையையாவது, ஏதாவது ஒரு மாநிலத்தின் பகுதியுடன் இணைப்பதாலோ, ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கலாம். (a new State can be formed);

(b) எந்த மாநிலத்தினுடைய பரப்பையும் அதிகரிக்கச் செய்யலாம்;

(c) எந்த மாநிலத்தினுடைய பரப்பையும் குறைக்கச் செய்யலாம்;

(d) எந்த மாநிலத்தினுடைய எல்லைகளையும் மாற்றலாம்;

(e) எந்த மாநிலத்தினுடைய பெயரையும் மாற்றலாம்;

மேற்கண்டவைகளை எவ்வாறு செய்வது என்பதற்குண்டான **நடைமுறைகளும் (procedures)** மேற்படி ஷரத்து 3-ன் கீழாகவே கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கண்டவாறு ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கவோ அல்லது இருக்கும் மாநிலங்களின் பரப்புகள், எல்லைகள் மற்றும் பெயரை மாற்றவோ, பாராளுமன்றம் சட்டமொன்று இயற்ற வேண்டும் என்று கண்டோம். ஆனால், அந்த சட்டத்திற்குண்டான மசோதா (Bill) இந்திய குடியரசுத் தலைவரின் பரிந்துரையின் பேரில்தான் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். எனினும், குடியரசுத் தலைவர் மேற்கண்டவாறு பரிந்துரை செய்வதற்கு முன்னர், மேற்படி மசோதாவால் பாதிப்பிற்குள்ளாகும் மாநிலத்தின் சட்டமன்றத்திற்கு அம்மசோதா குறித்து அதன் கருத்துகளை தெரிவிப்பதற்காக அனுப்ப வேண்டும். அவர் குறிப்பிடும் காலத்திற்குள் அம்மாநில சட்டமன்றம் தனது கருத்துகளை தெரிவித்துவிட வேண்டும். அப்படி தெரிவித்தாலும், குடியரசுத் தலைவர் அக்கருத்துகளை ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும் என்ற கட்டாயம் ஏதுமில்லை, அவற்றை புறக்கணிக்கவும் செய்யலாம் என்பது இங்கு குறிப்பிடத் தகுந்த ஒன்று.

1960-ஆம் ஆண்டுச் சட்டத்தின் வாயிலாக பாராளுமன்றம் மேற்படி ஷரத்து 3-ஐ பயன்படுத்தி, பம்பாய் மாநிலத்தை, மகாராஷ்டிரா மாநிலம் என்றும், குஜராத் மாநிலம் என்றும் இரண்டாகப் பிரித்தது. 1964-ல் நாகலாந்து எனும் ஒரு புதிய மாநிலத்தை உருவாக்கியது. 1966-ல் பஞ்சாப் மாநிலத்தை பஞ்சாப் மற்றும் ஹரியானா எனும் இரண்டு மாநிலங்களாக பிரித்தது. 1970-ல் ஒன்றியத்து எல்லையாக (Union Territory) இருந்த ஹிமாச்சல பிரதேசத்திற்கு, மாநில அந்தஸ்துத்தைக் கொடுத்தது. மேலும் 1971-ல் மணிப்பூர், திரிபுரா மற்றும் மேகாலயா ஆகிய ஒன்றியத்து எல்லைகளுக்கும், மாநில அந்தஸ்துத்தை கொடுத்தது. மிஜோரம் மற்றும் அருணாச்சல பிரதேசத்தை ஒன்றியத்து எல்லைகள் பட்டியலில் சேர்த்துக் கொண்டது. இவ்வாறு பல.

மேலும், ஒரு மாநிலத்தின் பெயரை மாற்றக் கூடிய அதிகாரத்தைப் பயன்படுத்தி, பாராளுமன்றம் 1968-ல், **மெட்ராஸ் மாநிலம் (State of Madras)** எனவிருந்த பெயரை **தமிழ்நாடு மாநிலம் (State of Tamil Nadu)** என்றும், 1973-ல் **மைசூர் மாநிலம் (State of Mysore)** என்றிருந்த பெயரை **கர்நாடகா மாநிலம் (State of Karnataka)** என்றும், மீண்டும் அதே ஆண்டில் ஒன்றியத்து எல்லையான **லக்கதிவ், மினிகாய் மற்றும் அமின்திவி தீவுகள் (Laccadive, Minicoy and Amindivi Islands)** என்றிருந்த பெயரை **லக்ஷ தீப் (Lakshadweep)** என்றும் மாற்றியது.

இந்திய எல்லையின் ஒரு பகுதியை அந்நிய நாட்டிற்கு மாற்றலாமா? (Can a portion of the territory of India be transferred to a foreign State?) (அல்லது) இந்திய எல்லையை வெளிநாட்டு அரசிற்கு மாற்றிக் கொடுத்தல் (Cession of Indian territory to foreign country):

இது குறித்து பின்வரும் ஒரு மிக மிக முக்கியமான வழக்கில் ஒரு பெரும் பிரச்சனை எழுந்தது. அதில் முடிவாக, இந்திய எல்லையின் ஒரு பகுதியை வெளிநாட்டிற்கு மாற்றலாம் எனப்பட்டது. அம்முக்கியமான வழக்கின் பொருண்மைகளை காண்போமா?

In Re Berubari Case (or) In Re Berubari Union and Exchange of Enclaves Case[1]

இந்திய அரசியலமைப்பின் **ஷரத்து 3 (c)** ஆனது, ஒரு மாநிலத்தின் எந்த நிலப் பகுதியையும் குறைப்பதற்கு, பாராளுமன்றம் சட்டமியற்றலாம் என்று கூறுகிறது. ஆனால் மேற்படி வழக்கில், எழுந்த பிரச்சனை என்னவென்றால், இந்திய நாட்டினுடைய அல்லது இந்தியாவின் ஒரு மாநிலத்தினுடைய நிலப்பகுதியை குறைத்து, அதை ஒரு வெளிநாட்டிற்கு அளிக்க லாமா, என்பது தான்.

இது பொது நலன் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை என்பதால், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனையை (Advisory Jurisdiction of Supreme Court), இந்தியக் குடியரசுத் தலைவர் ஷரத்து 143ன் கீழ் நாடினார்.

இங்கு மேற்படி வழக்கின் பொருண்மைகளை சற்று சுருக்கமாக காண்பது அவசியம். அதன்படி, எல்லைத் தகராறுகளைத் தீர்த்துக் கொள் வதற்காக, 1958 ஆம் ஆண்டில் இந்திய - பாகிஸ்தான்

1. AIR 1960 SC 845

உடன்படிக்கை (Indo - Pakisthan Agreement) ஏற்பட்டது.

அவ்வுடன்படிக்கையின்படி, (i) இந்தியாவின் ஆட்சிக்குட்பட்ட **பெருபாரி** என்ற நிலப்பகுதியின் ஒரு பாதியை பாகிஸ்தானுக்கு இந்தியா மாற்றியளிக்க வேண்டியது. மற்றும் (ii) பழைய கூச் - பீகார் நிலப்பரப்பை (exchange of old Cooch - Bihar enclaves) பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டியது. பெருபாரி பகுதியானது, மேற்கு வங்காளத்தில் சுமார் 12,000 மக்களை உள்ளடக்கி, 9 சதுர மைல் பரப்பளவு கொண்டதாக இருந்தது. மேற்படி மாற்றியளிக்கும் உடன்படிக்கையை மத்திய அரசு செயல்படுத்த முனைந்த பொழுது, அதனை எதிர்த்து மாபெரும் அரசியல் கிளர்ச்சி உருவானது. அதன் அடிப்படையில் அப்பிரச்சனையில் முடிவெடுக்க, முன்சொன்ன வாறு இந்தியக் குடியரசுத் தலைவர், உச்ச நீதிமன்றத்தின் ஆலோசனை கூறும் அதிகாரவரம்பை நாடினார்.

அப்பொழுது உச்ச நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட வினாக்கள் என்னவென்றால், (i) பெருபாரி பகுதியை மாற்றியளிப்பது தொடர்பான உடன்படிக்கைகளை செயற்படுத்துவதற்கு, சட்டமியற்றல் நடவடிக்கை ஏதும் தேவையா ? மற்றும் (ii) அப்படி சட்டமியற்றுவது தேவையானால், மேற்படி ஷரத்து 3ன் கீழான பாராளுமன்றச் சட்டம் போதுமா அல்லது ஷரத்து 368ன் படி அரசியலமைப்பை திருத்த வேண்டியது தேவையா ? அல்லது மேற்கண்ட இரண்டுமே தேவையா ? என்பதுதான்.

இங்கு மத்திய அரசின் பல சால்ஜாப்பான வாதங்களை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. **ஷரத்து3 (c)** ஆனது, இந்திய மாநிலத்தின் ஒரு பகுதியை குறைத்து, அதை மற்றொரு மாநிலத்திற்கு மாற்றுவது குறித்து கூறுகிறதோயொழிய, இந்திய நாட்டின் நிலப்பரப்பை மற்றொரு வெளிநாட்டிற்கு அளிப்பது குறித்து கூறவில்லை. எனவே ஷரத்து 3(c)-யின் மூலம், அவ்வாறு வெளிநாட்டிற்கு மாற்றியளிப்பதற்காக, பாராளுமன்றம், சட்டம் எதையும் இயற்ற இயலாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே வெறுமனே ஷரத்து 3(c) யின் கீழ் சட்டமியற்றி, நிலப்பகுதியை வெளிநாட்டிற்கு தாரை வார்க்க முடியாது, என்பதை முதற்கண் உச்ச நீதிமன்றம் தெளிவு படுத்தியது. அதே சமயத்தில் மேற்கண்டவாறு மாற்றியளிக்க வேண்டுமெனில், அரசியலமைப்பையே ஷரத்து 368-ன் கீழ் திருத்தம் செய்ய வேண்டியது, அவசியமாகும் என்று மற்றொரு வினாவிற்கும் உச்ச நீதிமன்றம் விடையளித்தது.

எனினும், இது, ஒரு நாட்டிற்கு மற்றொரு நாட்டின் நிலப்பரப்பை அடையவோ அல்லது விட்டுக் கொடுக்கவோ அதிகாரம் இல்லை என்ற பொருளில் குறிப்பிடவில்லை. ஏனெனில், அச்செயல்கள், ஒரு நாட்டின் இறைமையின் கீழ் வருவதாகும். முகப்புரையின்படி, இந்தியா ஒரு இறைமையுடைய நாடு (Soverign State). எனவே, அது நாட்டிடைச் சட்டத்தின் கீழும், முகப்புரையின் படியும் (Preamble) மற்றொரு நாட்டின் நிலப் பரப்பை அடையவும், விட்டுக் கொடுக்கவும், அதிகாரம் படைத்தது, எனப்பட்டது.

உச்ச நீதிமன்றத்தின் மேற்கண்ட ஆலோசனையின்படி, மேற்கண்ட உடன்படிக்கையின் கீழ் இந்திய நிலப்பரப்பான பெருபாரியின் ஒரு பாதியை பாகிஸ்தானுக்கு மாற்றியளிக்க, 1960 ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்பில் 9வது சட்டத்திருத்தம் கொணரப்பட்டது. அதன்படி, மேற்படி பகுதியும் கைமாறிச் சென்று விட்டது.

முடிவுரை:

ஒரு புதிய மாநிலத்தை இந்திய ஒன்றியத்திற்குள் சேர்த்துக் கொள்ள அல்லது நிறுவ ஷரத்து 2-ஆனது பாராளுமன்றத்திற்கு முழு தன்விருப்புரிமை அதிகாரத்தை அளிக்கிறது. அது, தான், பொருத்தமெனக் கருதும் வரையீடுகள் மற்றும் நிபந்தனைகளின் (terms and conditions) அடிப்படையில் சட்டமியற்றி அவ்வாறு செய்யலாம். ஆனால், ஒரு புதிய மாநிலத்தை உருவாக்க மற்றும் மாநிலங்களின் பரப்புகள், எல்லைகள் அல்லது பெயர்களை மாற்ற, பாராளு மன்றம் ஷரத்து 3-ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். ஷரத்து 2-ன்படி, ஒரு புதிய மாநிலம் சேர்க்கப் பட்டாலோ அல்லது ஷரத்து 4-ன்படி, இருக்கும் மாநிலத்தின் பரப்பு முதலியவைகள் மாற்றப்பட்டாலோ, அரசியலமைப்பில் அவை தொடர்பான திருத்தங்களை பாராளுமன்றமானது எளிய பெரும் பான்மையின் (simple majority of Parliament) அடிப்படையில் சட்டமாக இயற்றி நிறைவேற்ற வேண்டும். ஆனால் இந்த திருத்தம் ஷரத்து 368-ன் கீழான ஒரு அரசியலமைப்பு திருத்தமாக கருதப் படாது. **(ஷரத்து 4)**. மேற்கண்டவற்றை ஆராயும் பொழுது, ஒரு மாநிலம் தொடர்ந்து அதே வடிவில் மற்றும் பெயரில் நீடித்திருப்பது, இந்திய ஒன்றியத்தின் அதாவது மத்திய அரசின் இன் விருப்பத்தை (sweet will of the Union of India ie. Central Government) பொருத்தது என்பது தெளிவாகக் கூடிய ஒன்று.

அத்தியாயம் 6

குடியுரிமை (அல்லது) குடிமை
(ஷரத்துகள் 5 முதல் 11 வரை)
[Citizenship]
(Articles 5 to 11)

பொருள் – இந்திய குடியுரிமை – 1955–ஆம் ஆண்டின் இந்திய குடியுரிமைச் சட்டத்தின் கீழ் குடியுரிமை – இந்தியக் குடியுரிமையை இழத்தல்
[Meaning - Citizenship of India - Citizenship under the Citizenship Act, 1955 - Loss of Indian Citizenship]

27. Explain the relative importance of Nationality, Citizenship, Domicile and Residence. How the question of citizenship is dealt with under the Indian Constitution? நாட்டுரிமை, குடியுரிமை, நிரந்தரமாக குடியிருத்தல், குடியிருத்தல் இவைகளுக்கிடையிலான முக்கியத்துவத்தை விளக்குக. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ், குடியுரிமை எவ்வாறு கூறப்பட்டுள்ளது?)

(அல்லது)

Explain clearly the provisions of the Constitution relating to citizenship (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் குடி உரிமை தகுதி சார்ந்த விதிமுறைகளை சரியாக விளக்குக.)

(அல்லது)

Point out the rules regarding 'Citizenship' as enshrined in the Indian Constitution. (குடியுரிமை குறித்து இந்திய அரசியலமைப்பில் வகுக்கப்பட்டுள்ள வழிவகைகளை எடுத்துக் கூறுக.)

(அல்லது)

Explain the modes of acquiring Indian Citizenship under the Citizenship Act 1955. (1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழ் இந்தியக் குடியுரிமையைப் பெறுவதற்கான வழிமுறைகளை விளக்குக.)

(அல்லது)

Explain the following

Provisions of the Constitution relating to citizenship

கீழ்க்கண்டதை விளக்குக

அரசமைப்பு சட்டத்திலுள்ள குடியுரிமைப் பற்றிய வகைமுறைகள்

(அல்லது)

Give a brief account of the provisions relating to citizenship at the commencement of the Indian Constitution. (இந்திய அரசியலமைப்பு தொடக்கத்திற்கு வந்த நேரத்தில் குடியுரிமை தொடர்பான சட்ட வகைமுறைகளைப் பற்றி சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

What was the law that regulated citizenship at the commencement of the Constitution? (அரசமைப்புச் சட்டம் அமலுக்கு வந்த நேரத்தில் குடியுரிமை குறித்த சட்டம் என்னவாக இருந்தது?)

(அல்லது)

Citizenship - Write short notes. (குடியுரிமை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Citizenship at the commencement of the Constitution-Write short notes. (அரசமைப்பு சட்டம் துவங்கியபோது குடியுரிமை -

குறுகிய விடை தருக.)

(அல்லது)

Citizenship by domicile - Write short notes. (உறைவிடம் மூலம் குடியுரிமை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Citizenship by birth - Write short notes. (பிறப்பினால் குடியுரிமை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Explain the provisions of the Constitution relating to citizenship and describe the circumstances which will deprive a citizen of his citizenship. (குடியுரிமைப் பற்றிய அரசமைப்பு வாசகங்களை விளக்குக. ஒரு குடிமகன் தனது குடியுரிமையை இழக்கக் கூடிய சூழ்நிலைகளை விவரிக்க.)

(அல்லது)

Discuss the law relating to citizenship under the Constitution of India. Can a company claim the benefits of Article 19 as a citizen? Refer to decided cases. (இந்திய அரசியல மைப்புச் சட்டத்தின் கீழ் குடியுரிமை தொடர்பான சட்டத்தை விவாதிக்க. ஒரு நிறுவனம் ஒரு குடிமகனாக ஷரத்து 19-ன் கீழான பலன்களைப் பெற முடியுமா? முடிவான வழக்குகளைச் சுட்டிக் காட்டுக.)

குடியுரிமை என்பது யாது? குடிமகன் என்பவன் யார் ?

'குடியுரிமை' எனும் பதத்திற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் எங்கும் வரையறை தரப்படவில்லை. குடியுரிமை என்பது, ஒரு நாட்டில் குடிமகனாக உள்ளவனுக்கு கிடைக்கக் கூடியதாகும். ஒருவன், ஒரு அரசாங்கத்திற்கு கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்டவனாகவும் மற்றும் அந்த அரசாங்கத்தில் இருந்து பாதுகாப்பைப் பெற உரிமையுடையவனாகவும் இருப்பனேயானால், அவன் 'குடிமகன்' எனப்படுகிறான்.[1]

1. A citizen is one who owes allegiance to a government and who is entitled to protection by the government - **Encyclopaedia Americana.**

ஒரு நாட்டின் குடிமகன் முழுமையான குடிமை மற்றும் அரசியல் உரிமைகளைப் அனுபவிக்கிறான். ஒரு நாட்டின் குடிமகனாக இருக்கும்பட்சத்தில்தான், அவனுக்கு அந்த நாட்டின் அரசியலமைப்பால் வழங்கப்படும் உரிமைகளும் கிடைக்கும். அவ்வுரிமைகள் அந்நாட்டின் குடிமகனல்லாதவர்கட்கு கிடைக்காது. இந்திய அரசியலமைப்பின் ஷரத்துகள் 15,16,19,29 ஆகிய வற்றின் கீழான அடிப்படை உரிமைகள், இந்தியக் குடிமகனுக்கு மட்டுமே கிடைக்கத்தக்கதாகும். அரசு உயர் பதவிகளான குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், நீதியரசர்கள் ஆகிய பதவிகளை குடிமகன் மட்டுமே வகிக்கக் கூடியதாகும். குடிமகன் மட்டுமே வாக்காளராகவோ அல்லது வேட்பாளராகவோ இருக்க முடியும்.

எனவேதான், அரசியலமைப்பின் நுணுக்கமான ஷரத்துக்களை அறிந்து கொள்வதற்கு முன்னர், குடியுரிமை குறித்தும், ஒருவன் எவ்வாறு குடியுரிமையை அடைந்து குடிமகனாகிறான் என்பது குறித்தும் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. அதற்கான வகைமுறைகளை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **5 முதல் 11 வரையிலான ஷரத்துக்கள்** கூறுகின்றன. குடிமகன் எனும் பதத்தில் ஆண்பால், பெண்பால் இருவரும் அடங்குவர்.

குடிமக்களின் வகையினம் (Categories of Citizens) (அல்லது) குடியுரிமையை அடையும் முறைகள் (Methods of acquisition of Citizenship):

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 5 முதல் 10 வரையிலான ஷரத்துகள் குடியுரிமை குறித்து விளக்கமாக கூறுகிறது. மேலும் குடியுரிமை குறித்த சட்டத்தை இயற்றுவதற்கு **ஷரத்து 11** பாராளுமன்றத்திற்கு அதிகாரம் அளிக்கிறது. அந்த அதிகாரத்தை பயன்படுத்தி பாராளுமன்றமும் **1955-ல் இந்தியக் குடியுரிமை சட்டத்தை (The Indian Citizenship Act, 1955)** இயற்றியுள்ளது. எனவே, மேற்படி இரண்டு வகையான சட்ட வகைமுறைகளும், இந்தியாவில் குடியுரிமை குறித்த வினாக்களுக்கு முழு விளக்கமளிக்கின்றன. இந்திய அரசியலமைப்பின் மேற்படி ஷரத்துகள், அரசியலமைப்பு சட்டம் தொடங்கும் பொழுது குடியுரிமை (Citizenship at the time of commencement of the Constitution of India) குறித்த வகைமுறைகளைக் கூறுகின்றன. 1955-ஆம் ஆண்டின் குடியுரிமை சட்டமோ இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்ட பின்னர் குடியுரிமையை (Citizenship subsequent

to the commencement of the Constitution of India) அடைதல் மற்றும் முடிவு குறித்து கூறுகிறது. எனவே, பின்வரும் தலைப்பு களின் கீழ் நாம் குடி.யுரிமை குறித்து காண உள்ளோம்.

I. இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடங்கும் பொழுது குடியுரிமை (Citizenship at the time of commencement of the Constitution of India):

இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடங்கும் பொழுது (அதாவது 1950-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் தேதி) எவரெல்லாம் இந்தியக் குடிமக்களாக அங்கீகரிக்கப்படுகின்றனர் என்பது குறித்த வகைமுறைகளை இந்திய அரசியலமைப்பு பின்வரும் உட்-தலைப்புகளின் கீழ் கூறுகின்றது.

1. உறைவிடம் மூலம் குடியுரிமையை பெறல் (Citizenship by Domicile) (ஷரத்து 5) :

இச்ஷரத்தின்படி, இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடங்கிய பொழுது இந்தியாவை உறைவிடமாக (Domicile) கொண்ட எவர் ஒருவரும் பின்வரும் நிலைப்பாட்டில் ஏதேனும் ஒன்றைக் கொண்டிருந்தாலும், அவர் இந்தியக் குடிமகனாக அங்கீகரிக்கப்படுவார். அவை,

(a) அவர் இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும்; அல்லது

(b) அவருடைய பெற்றோரில் எவரேனும் ஒருவர் (தாய் அல்லது தந்தை) இந்தியாவில் பிறந்தவராக இருக்க வேண்டும்; அல்லது

(c) இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் தொடக்கத்திற்கு உடன் முந்திய அய்ந்து ஆண்டுகளுக்கு குறையாமல் அவர் இந்தியாவில் வழக்கமாக குடியிருந்து வந்தவராக இருக்க வேண்டும்.

2. குடிபெயர்தல் மூலம் குடியுரிமையை பெறல் (Citizenship by Migration) (ஷரத்துகள் 6 மற்றும் 7) :

[i] பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்கள் (Migration from Pakistan to India) (ஷரத்து 6) : இச்ஷரத்தானது, இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடங்கும் பொழுது, பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்த

வர்களும் இந்தியக் குடிமக்களாகவே கருதப்படுவார்கள், என்று கூறுகிறது. ஆனால் அதற்கு அவர்கள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தவர்களாக இருக்க வேண்டும். அவை,

(a) அவர்களோ அல்லது அவர்களது பெற்றோரோ அல்லது அவர்களது பெற்றோரின் பெற்றோரில் ஒருவரோ, 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டபடி இந்தியாவில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும். (அதாவது பிரிவினையாகாத இந்தியாவில் பிறந்தவர்களாக இருக்க வேண்டும்.); மற்றும்

(b) (i) அவர்கள் 19-07-1948-ஆம் தேதிக்கு முன்னர் அவ்வாறு குடிபெயர்ந்து வந்தவர்களாக இருப்பின், அவர்கள் அவ்வாறு குடிபெயர்ந்து வந்த தேதிமுதல் இந்தியாவில் வழக்கமாக குடியிருந்து வந்தவராக இருக்க வேண்டும்; அல்லது

(ii) அவர்கள் 19-07-1948-ஆம் தேதிக்கு பின்னர் அவ்வாறு குடிபெயர்ந்து வந்தவர்களாக இருப்பின், அவர்கள் இந்தியக் குடிமக்களாக ஆவதற்குரிய பதிவை அதற்கென இந்திய அரசால் நியமிக்கப்பட்டுள்ள அலுவலரிடம் செய்து கொண்டிருக்க வேண்டும். மேலும் அப்பதிவைச் செய்து கொள்வதற்கு உடன் முந்திய குறைந்தபட்ச காலமான ஆறு மாத காலமாவது அவர்கள் இந்தியாவிலேயே குடியிருந்து வந்தவர்களாக இருக்க வேண்டும்.

நாம் முன்கண்ட 5-வது ஷரத்திற்கு, இந்த 6-வது ஷரத்து உட்பட்டதாகும். அதாவது 5-வது ஷரத்தில் கண்டுள்ள கூறுகளின்படி குடியுரிமை பெறுபவர்கள், 6-வது ஷரத்தின் மேற்படி நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ய வேண்டியுள்ளது.

[ii] இந்தியாலிருந்து பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து சென்றவர்கள் (Migration from India to Pakistan) (ஷரத்து 7) : இச்ஷரத்தின்படி, 01-03-1947-ஆம் தேதிக்கு பின்னர், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு குடி பெயர்ந்து சென்றவர்கள், இந்தியக் குடிமக்களாக கருதப்படமாட்டார்கள். எனினும், அவ்வாறு பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து சென்றவர்கள், சட்டம் எதனின் அதிகாரவுரிமையின் வாயிலாகவோ அல்லது கீழாகவோ மறு குடியமர்விற்காக அல்லது நிலையாகத் திரும்பி விடுவதற்காக வழங்கப் பட்ட ஓர் அனுமதிச் சீட்டின் கீழ் இந்தியாவிற்கு திரும்பி வந்து விட்டால், அவர்கள், 19-07-1948-ஆம் தேதிக்கு பிறகு பாகிஸ்தானி

லிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்களாகவும், இந்தியக் குடிமக்களாகவும் கருதப்படுவர். ஆனால், அவர்கள் மேற்படி ஷரத்து 6 (b) (ii)-ல் குறிப்பிட்டபடி இந்தியக் குடிமக்களாக ஆவதற்குரிய பதிவைச் செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

நாம் ஏற்கனவே கண்ட ஷரத்துகள் 5 மற்றும் 6-ஆனது, இந்த 7-வது ஷரத்திற்கு உட்பட்டதாகும். அதாவது ஷரத்துகள் 5 மற்றும் 6-ல் யாது கூறப்பட்டிருப்பினும், அதைப் பொருட்படுத்தாது ஷரத்து 7-ன் வகை முறைகள் இயங்கும் தன்மையுடையன. இது குறித்த பின்வரும் வழக்கில் விளக்கமளிக்கப்பட்டது.

State of Bihar v. Amar Singh[1] எனும் வழக்கில், மணமான ஒரு பெண்மணி, 01-03-1947-க்குப் பின்னர் இந்தியாவில் தனது கணவனை விட்டு விட்டு பாகிஸ்தானுக்கு சென்றார். இதனால் தனது இந்தியக் குடியுரிமையை இழந்தார். வழக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்றது. அங்கு, அப்பெண்மணி, தான் இந்தியாவில் பிறந்ததாகவும், தனது உறைவிடம் (Domicile), தனது கணவனின் உறைவிடமான இந்தியாவே ஆகும் என்றும், எனவேதான் ஒரு இந்திய குடிமகள்தான் என்றும் வாதம் புரிந்தார். ஆனால், அவரது வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, ஷரத்து 7-ஆனது, ஷரத்து 5-ஐ புறக்கணித்து செல்லக்கூடியது என்றும், அச்ஷரத்து 7, தனது கணவனை இந்தியாவில் விட்டு விட்டு பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து செல்லும் மனைவிக்கு எந்த விதிவிலக்கையும் அளிக்காது என்றும் விளக்கமளித்தது.

மேலும், ஷரத்து 7-ன் கீழான **'குடிபெயர்தல்'** எனும் பதத்தின் பொருள் விளக்கத்தில், மணமான பெண்மணி ஒருவரின் உறைவிடம் அவரது கணவனது உறைவிடத்தையே சாரும் என்பது வராது, என **Abdul Samad v. State of West Bengal**[2] என்ற வழக்கிலும் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

3. பதிவு செய்து கொள்ளல் மூலம் குடியுரிமையை பெறல் (Citizenship by Registration) (ஷரத்து 8) :

இச்ஷரத்து, இந்தியாவில் பிறந்து வெளிநாட்டில் வாழ்பவர்கள் இந்தியக் குடியுரிமையைப் பெறல் குறித்து கூறுகிறது. இதன்படி ஒருவர்/ஒருத்தி, தாமோ அல்லது தம் பெற்றோரில்

1. AIR 1955 SC 282
2. AIR 1973 SC 505

ஒருவரோ அல்லது தம் பெற்றோரின் பெற்றோரில் ஒருவரோ 1935-ஆம் ஆண்டின் இந்திய அரசாங்கச் சட்டத்தில் வரையறுக்கப் பட்டபடி இந்தியாவில் (அதாவது பிரிவினையாகாத இந்தியாவில்) பிறந்திருந்து, அவர் இந்திய எல்லைக்கு அப்பால் உள்ள வெளிநாடு எதிலும் வழக்கமாக குடியிருந்து வருபவராக இருந்தால், இந்திய குடிமகனாகவே கருதப்படுவார். ஆனால், அதற்கு அவர் பின்வரும் ஒரு நிபந்தனையை பூர்த்தி செய்தல் வேண்டும். அதாவது, அவர் அப்போதைக்கு குடியிருந்து வரும் நாட்டில் உள்ள இந்திய தூதுவர் அல்லது வணிக முகவரிடம் உரிய நடைமுறைகளின்படி விண்ணப்பம் செய்து, தம்மை ஒரு இந்தியக் குடிமகனாக பதிவு செய்து கொள்ள வேண்டும். இங்கு அரசியலமைப்பு தொடங்கப் படுவதற்கு முன்னர் அல்லது பின்னர் என்ற கேள்விக்கு இட மில்லை. நாம் மேற்கண்ட 5வது ஷரத்து, இந்த 8-வது ஷரத்திற்கு உட்பட்டதாகும். அதாவது 5-வது ஷரத்தில் யாது கூறப்பட்டிருப் பினும், அதைப் பொருட்படுத்தாமல் ஷரத்து 8 இயங்கக்கூடிய தாகும்.

இந்தியக் குடியுரிமையை இழத்தல் (Loss of Indian Citizenship) (ஷரத்து 9) :

சில சூழ்நிலைகளில் இந்தியக் குடிமகன் தனது குடி யுரிமையை இழந்தவனாகிறான். அந்த சூழ்நிலைகளில் ஒன்றைக் குறித்து ஷரத்து 9 கூறுகிறது. அதன்படி, இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்குவதற்கு முன்பு (அதாவது 1950-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 26-ஆம் நாளுக்கு முன்பு) ஒரு இந்தியக் குடிமகன் தன்னிச்சையாக ஒரு வெளிநாட்டு குடியுரிமையை பெற்றால், அவன் இந்தியக் குடியுரிமையை இழந்தவனாகிறான்.

குடியுரிமையை தொடர்தல் (Continuance of the Right of Citizenship) (ஷரத்து 10) :

நாம் ஏற்கனவே கண்ட 5 முதல் 8 வரையிலான ஷரத்து களின் கீழ் இந்தியக் குடிமக்களாகும் ஒவ்வொருவரும், தொடர்ந்து இந்தியக் குடிமக்களாகவே இருப்பர், என்று ஷரத்து 10 கூறுகிறது. ஆனால், அவர்களது குடியுரிமையை பாராளுமன்றம் சட்ட மொன்றை இயற்றுவதின் வாயிலாக பறிக்கலாம். அதாவது, பாராளுமன்றம் சட்டமொன்றை இயற்றி அவர்களது குடியுரிமையை பறிக்கும் வரையில் அவர்கள் இந்தியக் குடிமக்களாகவே தொடர்ந்து இருப்பர், என்று இங்கு பொருள் கொள்ள வேண்டும்.

குடியுரிமையை ஒழுங்குபடுத்த பாராளுமன்றத்திற்குள்ள சட்டமியற்றும் அதிகாரம் (Parliament's power to enact law to regulate the Right of Citizenship) (ஷரத்து 11) :

நாம் ஆரம்பப் பத்தியில் கண்டவாறு, பாராளுமன்றம் சட்டமொன்றை இயற்றி அதன் மூலம் குடியுரிமை ஒழுங்குபடுத்த அதிகாரம் பெற்றுள்ளது. (ஷரத்து 11). அந்த வகையில் நமது பாராளுமன்றமானது, 1955-ஆம் ஆண்டில் **இந்தியக் குடியுரிமைச் சட்டத்தை (Indian Citizenship Act, 1955)** இயற்றியுள்ளது. இச்சட்டம் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்ட பின்னர், குடியுரிமையை அடைதல் மற்றும் முடிவு குறித்து கூறுகிறது. அதன் வகைமுறைகளை பின்வரும் தலைப்புகளின் கீழ் காண்போமா?

II. இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடங்கிய பின்னர் குடியுரிமை (Citizenship subsequent to the commencement of the Constitution of India):

1. குடியுரிமையை அடைதல் (Acquisition of Citizenship):

இந்திய அரசியலமைப்பு சட்டம் தொடங்கிய பின்னர், இந்தியக் குடியுரிமையை பின்வரும் முறைகளில் அடையலாம். அவை,-

[i] பிறப்பால் குடியுரிமையை பெறல் (Citizenship by Birth) (இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 3-வது பிரிவு) : இப்பிரிவின்படி, ஒரு நபர் இந்தியாவில் (born in India) 26-01-1950-ஆம் தேதியிலோ அல்லது அதற்குப் பின்னிட்டோ ஆனால், 1986-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட குடியுரிமை (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு முன்போ பிறந்திருந்தால் அல்லது அந்நபர் 1986-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மேற்படி குடியுரிமை (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு பின்னிட்டு பிறந்திருந்தால் ஆனால், அவரது பெற்றோரில் எவரேனும் ஒருவர் அவரது பிறப்பின் பொழுது இந்தியக் குடிமகனாக இருப்பின், அவர் பிறப்பால் இந்தியக் குடிமகனாவார்.

[ii] மரபுவழித் தோன்றலினால் குடியுரிமையை பெறல் (Citizenship by Descent) (இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 4-வது பிரிவு) : இப்பிரிவின்படி, ஒரு நபர் இந்தியாவிற்கு அப்பால் (born outside India) 26-01-1950-ஆம் தேதியிலோ அல்லது

அதற்குப் பின்னிட்டோ ஆனால், 1992-ஆம் ஆண்டில் இயற்றப் பட்ட குடியுரிமை (திருத்தச்) சட்டம் தொடங்குவதற்கு முன்போ பிறந்திருந்து அந்த சமயத்தில் அவரது தந்தையார் ஒரு இந்தியக் குடிமகனாக இருப்பின், அந்நபர் மரபுவழித் தோன்றலினால் ஒரு இந்தியக் குடிமகனாவார். மேலும் ஒரு நபர் 1992-ஆம் ஆண்டில் இயற்றப் பட்ட மேற்படி குடியுரிமை (திருத்தச்) சட்டம் தொடங்கு வதற்கு பின்னிட்டு பிறந்திருந்து அச்சமயத்தில் அவரது பெற்றோ ரில் எவரேனும் ஒருவர் இந்தியக் குடிமகனாக இருப்பின், அந்நபர் மரபுவழித் தோன்றலினால் ஒரு இந்தியக் குடிமகனாவார்.

[iii] பதிவு செய்து கொள்ளல் மூலம் குடியுரிமையை பெறல் (Citizenship by Registration) (இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 5-வது பிரிவு): இப்பிரிவின்படி, ஒரு நபர் இந்திய அரசியலமைப்பின் படியோ அல்லது இந்திய குடியுரிமைச் சட்டத்தின்படியோ ஏற்கனவே குடிமகனாகாமல் இருந்து அவர் பின்வரும் வகை யினங்களில் ஏதேனும் ஒன்றைச் சார்ந்தவராக இருப்பின், அவர் தம்மை ஒரு இந்தியக் குடிமகனாக பதிவு செய்து கொள்ளும்படி ஒரு விண்ணப்பத்தை இதற்கென உள்ள அதிகாரியிடம் அளிப்பதன் மூலம், அந்த அதிகாரி அவரை ஒரு இந்தியக் குடிமகனாக பதிவு செய்து கொள்வார். அவ்வகையினங்கள் வருமாறு,-

(a) இந்தியாவில் வழக்கமான குடியிருப்பைக் கொண்ட இந்திய வழிதோன்றிய நபர்கள் (Origin - அதாவது வழிவழியாக இந்தியாவில் பிறந்தவர்கள்). ஆனால், இவர்கள் தங்களது பதிவிற்கான மேற்படி விண்ணப்பத்தை கொடுப்பதற்கு அய்ந்து ஆண்டுகள் முன்பு வரை அவ்வாறு இந்தியாவில் குடியிருந்திருக்க வேண்டும்;

(b) பிரிவினையாகாத இந்தியாவிற்கு அப்பால் உள்ள இடத்தில் அல்லது நாட்டில் வழக்கமான குடியிருப்பைக் கொண்ட இந்திய வழி தோன்றிய நபர்கள்;

(c) இந்தியக் குடிமக்களை மணந்து கொண்டு, இந்தியாவில் வழக்கமாக குடியிருந்து வரும் நபர்கள். ஆனால், இவர்கள் தங்களது பதிவிற்கான மேற்படி விண்ணப்பத்தை கொடுப்பதற்கு அய்ந்து ஆண்டுகள் முன்பு வரை அவ்வாறு இந்தியாவில் குடியிருந்திருக்க வேண்டும்;

(d) இந்தியக் குடிமக்களாக உள்ள நபர்களின் உரிமை

வயதடையாத குழந்தைகள் (minor children); மற்றும்

(e) மேற்படி குடியுரிமைச் சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நாட்டின் குடிமக்களாக உள்ள உரிமை வயது மற்றும் தகுதி அடைந்த நபர்கள்.

[iv] வெளிநாட்டவர் ஒருவர் தம்மை குடிமகனாக்கக் கோரல் மூலம் குடியுரிமையை பெறல் (Citizenship by Naturalisation) (இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 6-வது பிரிவு) : மேற்படி சட்டத்தின் முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒரு நாட்டின் குடிமகனாக இல்லாத மற்றும் உரிமை வயது மற்றும் தகுதியை அடைந்த எந்த ஒரு நபரும், உரிய விண்ணப்பம் ஒன்றைச் செய்வதன் மூலம், மத்திய அரசானது, அவ்விண்ணப்பதாரர் மூன்றாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட தகுதிகளை பெற்றுள்ளவராக இருக்கிறார் என்று கருதினால், அவருக்கு 'வெளி நாட்டவரை இந்தியக் குடிமகனாக்கும் சான்றிதழ்' (Certificate of Naturalisation) வழங்கலாம்.

[v] எல்லையை கூட்டிணைத்துக் கொள்வதன் மூலம் குடியுரிமையை பெறல் (Citizenship by Incorporation of Territory) (இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 7-வது பிரிவு) : ஒரு வெளிநாட்டு எல்லை இந்தியாவின் ஒரு பகுதியானால், மத்திய அரசானது அந்த எல்லை தொடர்பாக யாரெல்லாம் இந்தியக் குடிமக்களாக ஆகின்றனர் என்று குறிப்பிட்டு அதை அரசிதழில் வெளியிட உத்திரவிடலாம். அவ்வாறு உத்திரவிடப்பட்ட தேதியிலிருந்து அவர்கள் எல்லோரும் இந்தியக் குடிமக்களாகின்றனர்.

2. குடியுரிமையின் முடிவு (Termination of Citizenship):

1955-ஆம் ஆண்டின் குடியுரிமைச் சட்டத்தின் கீழ், குடியுரிமையானது பின்வரும் வழிகளில் முடிவிற்கு வருகிறது. அவை,-

[i] இந்தியக் குடியுரிமையைத் துறத்தல் மூலம் (By Renunciation of Indian Citizenship) (இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 8-வது பிரிவு) : பிரிவு 8(1)-ன்படி உரிமை வயது மற்றும் தகுதியைப் பெற்று இந்தியக் குடிமகனாகவும் அதே சமயத்தில் மற்றொரு நாட்டின் குடிமகனாகவும் உள்ள ஒருவர், தாம் இந்திய குடியுரிமையை துறப்பதாக, உரிய விளம்புகை ஒன்றைச் செய்தால், அந்த விளம்புகை உரிய அதிகாரியால் பதிவு செய்து கொள்ளப்படும். அவ்வாறு பதிவு செய்யப்படுவதினால், அவரது இந்தியக்

குடியுரிமை முடிவிற்கு வருகிறது. மேலும் இப்பிரிவின்படி ஒரு நபர் இந்தியக் குடிமகனாக இருப்பதற்கு உரிமையிழந்தவரானால், அவரது உரிமை வயதடையாத குழந்தைகளும் இந்தியக் குடிமக்களாக இருக்க முடியாது, என்று பிரிவு 8(2) கூறுகிறது.இந்திய குடியுரிமையை துறப்பதாக உரிய விளம்புகை ஒன்றைச் செய்தால், அந்த விளம்புகை உரிய அதிகாரியால் பதிவு செய்து கொள்ளப் படும். அவ்வாறு பதிவு செய்யப்படுவதினால், அவரது இந்தியக் குடியுரிமை முடிவிற்கு வருகிறது. மேலும் இப்பிரிவின்படி ஒரு நபர் இந்தியக் குடிமகனாக இருப்பதற்கு உரிமையிழந்தவரானால், அவரது உரிமை வயதடையாத குழந்தைகளும் இந்தியக் குடிமக்களாக இருக்க முடியாது, என்று பிரிவு 8(2) கூறுகிறது.

[ii] வேறொரு நாட்டின் குடியுரிமையை அடைதல் மூலம் (By Acquisition of Citizenship of another country) (இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 9-வது பிரிவு) : இந்தியக் குடிமகன் எவரேனும் ஒருவர், வெளி நாட்டினரை குடிமகனாக்கல் முறை மூலமோ (by naturalisation), பதிவு செய்து கொள்ளல் முறை மூலமோ (by registration) அல்லது பிறவாறோ தன்னிச்சையாக வேறோரு நாட்டின் குடியுரிமையை அடைந்து கொண்டால், அவர் இந்தியக் குடிமகனாக இருக்க முடியாது. அதுபோல், 26-01-1950-ம் தேதி மற்றும் மேற்படி குடியுரிமைச் சட்டம் தொடங்குவதற்கு இடைப்பட்ட காலத்தில், ஒரு நபர் வேறொரு நாட்டின் குடியுரிமையை அடைந்து கொண்டால், அவரும் இந்தியக் குடிமகனாக இருக்க முடியாது. மேற்படி இரண்டு நிகழ்வுகளிலும், இந்தியக் குடியுரிமை முடிவிற்கு வருகிறது.

[iii] குடியுரிமையை இழக்கச் செய்வதன் மூலம் (By Deprivation of Citizenship) (இந்தியக் குடியுரிமைச் சட்டத்தின் 10-வது பிரிவு) : கொடுத்த குடியுரிமையை மத்திய அரசு பறிக்கவும் அதாவது இழக்கும்படியும் செய்யலாம். இதனால் குடியுரிமைக்கு கட்டாய முடிவு ஏற்படுகிறது. இதன்படி, வெளிநாட்டவரை இந்தியக் குடி மகனாக்கல் மூலமோ (by naturalisation) அல்லது பதிவு செய்து கொள்ளல் (by registration) மூலமோ அல்லது உறைவிடம் (by domicle) அல்லது குடியிருத்தல் (by residence) மூலமோ இந்தியக் குடிமகனான ஒருவனின் குடியுரிமை, பின்வரும் காரணங்கள் நிலவுவதாக கருதப்படும் பொழுது, மத்திய அரசின் ஒரு உத்திரவால் இழக்குமாறு செய்யப்படலாம் (பறிக்கப்படலாம்.) அவை,-

(a) பதிவு செய்தல் அல்லது வெளிநாட்டவரை இந்தியக் குடிமகனாக்கல் முறையிலான குடியுரிமையானது மோசடியாகவோ, திரித்துக் கூறலினாலோ அல்லது முக்கிய பொருண்மைகளை மறைத்ததாலோ பெறப்பட்டதாக இருப்பின்; அல்லது

(b) அவர் தன்னுடைய செயலால் அல்லது பேச்சால் இந்திய அரசியலமைப்பிற்கு கட்டுப்படாமல் அல்லது பற்றில்லா மல் இருப்பதாக காட்டிக் கொண்டால்; அல்லது

(c) இந்தியா ஈடுபடலாமெனக் கூடிய ஒரு போரின் போது, அக்குடிமகன் எதிரி நாட்டுடன் சட்ட விரோதமாக வியாபாரம் செய்தாலோ அல்லது தகவல் தொடர்பு கொண்டாலோ;

(d) வெளி நாட்டவரை இந்தியக் குடிமகனாக்கல் முறையின் மூலம் (by naturalisation) அல்லது பதிவு செய்து கொள்ளல் (by registration) மூலம் குடிமகனான பிறகு அய்ந்து ஆண்டுகளுக்குள், அக்குடிமகனுக்கு இரண்டு ஆண்டுகளுக்கும் குறையாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தால்;

(e) அக்குடிமகன் தொடர்ந்து ஏழு ஆண்டுகளுக்கு இந்தியாவிற்கு அப்பால் வழக்கமாக குடியிருந்து வருபவராக இருப்பாரானால்.

மேற்கண்டவாறு குடியுரிமையை இழக்கச் செய்வதற்கு முன்பு, எந்த அடிப்படையில் குடியுரிமை இழக்குமாறு செய்யப்பட உள்ளது என்பது குறித்து சம்பந்தப்பட்ட அக்குடிமகனுக்கு எழுத்துமூலமான அறிவிப்பு ஒன்றை மத்திய அரசு கொடுக்க வேண்டும். சில நிகழ்வுகளில், குடியுரிமை பறித்தல் தொடர்பான தனது வழக்கை விசாரணைக் குழுவிடம் (Committee of Enquiry) அனுப்பக் கோரலாம். அச்சூழ்நிலையில், மத்திய அரசு அவ்வாறே அனுப்பக் கடமைப்பட்ட தாகும். இக்குழு ஒரு தலைவரையும் இரண்டு உறுப்பினர்களையும் கொண்டிருக்கும். இக்குழு விசாரணை நடத்தி அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும். அந்த அறிக்கையை மத்திய அரசு மேற்படி இழக்குமாறு செய்தல் நடவடிக்கையில் உத்திரவிட ஒரு வழிகாட்டியாக பயன்படுத்தும்.

ஒரு நிறுவனம் ஒரு குடிமகனாக ஷரத்து 19-ன் கீழான பலன்களைப் பெற முடியுமா? வழக்குகளுடன் விவாதம் (Can a company claim the benefits of Article 19 as a citizen? Discuss with decided cases):

குடிமகன் என்பவர் ஒரு இயற்கை நபர் (Natural Person)

ஆவர். நிறுவனம் என்பது ஒரு சட்டநிலை நபர் (Legal Person) ஆவர். எனவே, குடியுரிமை குறித்த சட்ட வகைமுறைகள் இயற்கை நபர்களுக்கு பொருந்துமே தவிர, நிறுவனம் போன்ற சட்டநிலை நபர்களுக்குப் பொருந்தாது.

State Trading Corporation of India v. Commercial Tax Officer[1] எனும் வழக்கில் State Trading Corporation of India மீது வரி விதிக்கப்பட்டது. ஆனால் தனக்கு வரிவிலக்கு உண்டு என்றும், அவ்வாறு தன் மீது வரி விதிக்கப்பட்டது ஷரத்து 19 (1) (g)-ன் கீழான தனது அடிப்படை உரிமைகளை மீறியதாகும் என்று அது வாதிட்டது. ஆனால், நிறுவனமோ அல்லது கழகமோ ஒரு இந்தியக் குடிமகனாக முடியாது என்றும், என்வே, குடிமக்களுக்கு ஷரத்து 19-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை அவை பெற முடியாது என்றும், இதனால் மேற்படி State Trading Corporation of India ஒரு குடிமகனாகாது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Tata Engineering and Locomotive Co. v. State of Bihar[2] எனும் வழக்கில், மேற்கண்ட வழக்கில் வழங்கப்பட்ட தீர்ப்பின் நிலை சற்று வேறுபாடான கண்ணோட்டத்தில் நிலவியது. இவ்வழக்கில், ஒரு நிறுவனத்துடன் அதன் பங்குதாரர்களும் சேர்ந்து மனு ஒன்றைச் செய்தனர். அம்மனுவில், நிறுவனம் என்பது ஒரு குடிமகனாகாது போனாலும், அதன் பங்குதாரர்கள் குடிமக்களே என்றும், ஷரத்து 19-ன் கீழான அவர்களது அடிப்படை உரிமைகளை பாதுகாக்க நிறுவனத்தின் சட்டநிலை எனும் திரையை தூக்கிப் பார்க்க (lifting the corporate veil) வேண்டியுள்ளது என்றும மேற்படி Tata Engineering and Locomotive Co. வாதிட்டது. ஆனால், இவ்வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்து விட்டு பின்வருமாறு கூறியது. அதன்படி, "மேற்படி வாதம் ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஒரு நிறுவனமோ அல்லது கழகமோ எதை நேரடியாக அணுக முடியாதோ அதை மறைமுகமாக நிறுவனத்தின் சட்டநிலைத் திரையை தூக்கிப்பார்த்தல் எனும் கோட்பாட்டினை சார்ந்திருத்தலால் அணுக முடியும் என்ற பொருளைத் தரக் கூடியதாகிவிடும்" என்று திட்டவட்டமாகக் கூறி மேற்படி Tata Engineering and Locomotive Co., ஒரு குடிமகனாகாது என்று கூறியது.

1. AIR 1963 SC 184
2. AIR 1965 SC 40

ஆனால், இந்நிலை **Bank Nationalisation Case**[1] எனும் வழக்கில் தலைகீழாக மாறி விட்டது. அதன்படி, அரசின் நடவடிக்கைகள் நிறுவனத்தின் உரிமைகளை பாதிப்பதாக அமைந்து, அதன் விளைவாக அப்பாதிப்பு அந்நிறுவனத்தின் ஒரு தனிப்பட்ட பங்குதாரருக்கும் ஏற்படக் கூடியதானால், ஷரத்து 19-ன் கீழான பாதுகாப்பு அவருக்கு கிடைக்கும், என்று கூறப்பட்டது.

இவ்வழக்கின் தீர்ப்பு **Bennett Coleman and Co. v. Union of India**[2] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது.

இவற்றையடுத்து எழுந்த **D.C. & G.M. v. Union of India**[3] எனும் வழக்கில் மேற்படி **D.C. & G.M.** நிறுவனம் ஷரத்து 19-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு விட்டதாக ஒரு நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தது. இவ்வழக்கில் தீர்ப்பளித்த **நீதியரசர் தேசாய்** அவர்கள், ஷரத்து 19-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளைப் பொருத்து, ஒரு பங்குதாரரின் உரிமையும், பங்குதாரர்கள் சேர்ந்து உருவாக்கிய நிறுவனத்தின் உரிமையும் ஒன்றுடன் ஒன்று பரந்து விரிவதாகும். எனவே, ஒன்றின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால், மற்றொன்றின் அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டதாகத் தான் ஆகும் என்று கூறினார். எனவே, இவற்றிலிருந்து நிறுவனமும் ஒரு குடிமகனாக ஷரத்து 19-ன் கீழான பலனைப் பெற முடியும் என்பது தெளிவாகிறது. மேலும், இதனால், குடிமக்களுக்கென்றே வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகள், தற்பொழுதைய புதிய போக்கினால், அவைகள் மீறப்பட்டதற்காக நிறுவனங்கள், கழகங்கள், அதன் பங்குதாரர்கள் ஆகியோர்களால் தொடுக்கப்படும் மனுக்களை நீதிமன்றங்கள் அனுமதிக்கவே செய்கின்றன.

-o0o-

1. AIR 1970 SC 564
2. AIR 1973 SC 106
3. AIR 1983 SC 937

அத்தியாயம் 7

அடிப்படை உரிமைகள்
(ஷரத்துகள் 12 மற்றும் 13)
[Fundamental Rights]
(Articles 12 and 13)

பொதுவான தனிநபர் உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள் – அடிப்படை உரிமைகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சி – அடிப்படை உரிமைகளுக்கும் அரசியலமைப்பின் பிற வகைமுறைகளால் பெறப்பட்ட உரிமைகளுக்குமிடையிலான வேறுபாடு – அடிப்படை உரிமைகளின் வகைப்பாடு

[General Individual Rights and Fundamental Rights - Origin and Development of Fundamental Rights - Difference between Fundamental Rights and Rights secured by other provisions of the Constitution - Classification of Fundamental Rights]

28. Explain the meaning and significance of fundamental rights. (அடிப்படை உரிமைகளின் பொருளையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் விளக்குக.)

(அல்லது)

Trace out the origin and development of fundamental rights. (அடிப்படை உரிமைகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சியை விளக்குக.)

பொதுவான தனிநபர் உரிமைகள் மற்றும் அடிப்படை உரிமைகள்:

மக்களுக்கு பல்வேறு சட்டங்கள் பல்வேறு பொதுவான தனிநபர் உரிமைகளை வழங்கியிருக்கின்றன. அவை ஒரு தனிநபர் மற்றொருவரின் உரிமையை மீறினால் அதற்காக சட்டப்படியான தீர்வழி கோர வழி வகை செய்கின்றன. ஆனால் அடிப்படை உரிமைகள் அவற்றிலிருந்து வேறுபட்டதாகும். மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். அதாவது, மக்களாட்சி நாட்டில் மக்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் வாழ்வதற்கென்று சில உரிமைகள் தேவைப்படுகின்றன. இவ்வுரிமைகள், மக்களின் முக்கியத்துவத்தை அரசு புறக்கணித்து விடக் கூடாது அல்லது மறந்து விடக் கூடாது என்பதற்காக அவர்களது வாழ்க்கை, தொழில், சுதந்திரம் ஆகியவற்றை பாதுகாப்பதற்காக நாட்டின் அரசியலமைப்பால் வழங்கப்படுகின்றன. இப்படிப்பட்ட உரிமைகள், ஒரு நாட்டின் குடிமக்கள் மகிழ்ச்சியாக வாழ்வதற்கு ஜீவாதாரமாக விளங்குவதால், அடிப்படை உரிமைகள் எனப்படுகின்றன. அரசின் ஏதேச்சதிகாரப் போக்கிலிருந்து குடிமக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள இவ்வடிப்படை உரிமைகள் பயனாகின்றன.

அடிப்படை உரிமைகளின் தோற்றம் மற்றும் வளர்ச்சி (Origin and development of fundamental rights):

நாம் ஏற்கனவே கண்டவாறு ஒவ்வொரு நாட்டின் அரசியலமைப்புச் சட்டத்திலும் குடிமக்களுக்கென்று சில அடிப்படை உரிமைகள் தரப்பட்டுள்ளன. அந்த வகையில் நமது இந்திய அரசியலமைப்புச் சட்டமும் தனது III-வது பகுதியின் வாயிலாக 12 முதல் 35 வரையிலான ஷரத்துகளின் கீழ் குடிமக்களுக்கு சில அடிப்படை உரிமைகளை கொடுத்துள்ளது. இந்த அடிப்படை உரிமைகளினால்தான், குடிமக்கள் நியாயமானவைகளுக்காக சுதந்திரமாகச் செயல்பட முடிகிறது. சுருங்கக் கூறின், அரசு தன்னிச்சைப்படி செயல்பட்டு மக்களின் சுதந்திரத்தை பறித்து விடக் கூடாது என்பதற்காக சில உரிமைகள் இந்திய அரசியலமைப்பால் அடிப்படை உரிமைகளாக விளம்பப்பட்டுள்ளன. இத்தகு அடிப்படை உரிமைகள் ஆறு வகைப்படும். சற்று விரிவாகச் செல்லும் இந்த அடிப்படை உரிமைகளின் தோற்றம் வளர்ச்சியைக் காண்பது நலமாகும்.

ஆதிகாலத்தில் இங்கிலாந்து நாட்டு அரசர்கள் மிகுந்த அதிகாரம் கொண்டவர்களாக இருந்தார்கள். அவர்களில் சிலர்

கொடுங்கோன்மை ஆட்சி புரிந்து மக்களுக்கு எவ்வித சுதந்திரமும் வழங்காமல் மிகக் கொடுமைப்படுத்தினர். நாளாவட்டத்தில் மக்கள் அவ்வரசர்களுக்கு எதிராக புரட்சி செய்ய ஆரம்பித்தனர். இறுதியாக 1215-ஆம் ஆண்டில் ஆயுதக் கிளர்ச்சி ஏற்பட்டது. இதனால் அப்போதைய இங்கிலாந்து அரசர் ஜான் மக்களுக்கு சுதந்திரம் வழங்கும் பட்டயத்தை வழங்க நெருக்கடி செய்யப் பட்டார். இதன் விளைவாக மக்கள் தேவாலயங்களுக்கு சென்று பிரார்த்திக்க சுதந்திரம், கட்டுப்படுத்தப்பட்ட வரிச்சுமை மற்றும் அபராதம், அனைவருக்கும் நீதி உள்ளிட்ட பல சுதந்திரங்கள் மக்களுக்கு அளிக்கப்பட்டு பட்டயமொன்று (பத்திரமொன்று) வெளியிடப்பட்டது. இப்பட்டயத்தில் ஒரு முகப்புரை உள்ளிட்ட 63 ஷரத்துகள் குறிப்பிடப்பட்டிருந்தன. இவ்வாறு சுதந்திர உரிமைகளை மக்களுக்கு அளித்து வெளியிடப்பட்ட அப்பட்டயம் **'பேருமைப் பட்டயம்'** அல்லது **'மேக்னா கார்டா' (Magna Carta)** என்று வழங்கப்படுகிறது. குடிமக்களுக்கு முதன்முதலில் சுதந்திர உரிமைகளை வழங்கியதற்கு இப்பட்டயம்தான் ஆரம்பகாலச் சான்றாகும்.

இப்பட்டயத்திற்குப் பின்னிட்டு அரசர் தனது மக்களுக்கு பல்வேறு உரிமைகளை அவ்வப்போது வழங்க வேண்டி வந்தது. அந்த வகையில் 1689-ஆம் ஆண்டில் ஆங்கில நாட்டு மக்களின் முக்கியமான அனைத்து உரிமைகளையும், சுதந்திரங்களையும் **'உரிமைகள் மசோதா' (Bill of Rights)** என்ற தலைப்பில் எழுத்து வடிவில் தொகுத்து வெளியிடப்பட்டது.

இது ஒரு புறமிருக்க 1789-ஆம் ஆண்டில் பிரான்சு நாட்டில் **'மனித மற்றும் குடிமக்கள் உரிமைகள் பிரகடனம்' (Declaration of Rights of Man and the Citizen)** வெளியிடப்பட்டது. இது மனிதனின் இயற்கையான, மாற்றியளிக்க முடியாத மற்றும் புனித உரிமைகளை விளம்பியது.

இவ்வாறு இங்கிலாந்திலும், பிரான்சிலும் குடிமக்களின் உரிமைகள் பிரகடனப்படுத்தப்படுவதைக் கண்ட அமெரிக்கா தனது நாட்டு அரசியலமைப்பில் **'உரிமைகள் மசோதா' (Bill of Rights)** சேர்த்துக் கொண்டது. இதில் முக்கியத்துவம் என்னவென்றால் அமெரிக்க நாடுதான் உரிமைகள் பற்றிய மசோதாவிற்கு முதன்முதலில் அரசியலமைப்புரீதியான அந்தஸ்து வழங்கிய நாடாகும்.

இந்திய அரசியலமைப்பை உருவாக்கும் காலகட்டத்தில்

மேற்கண்டவாறு உரிமைகள் மசோதாவை அரசியலமைப்பில் சேர்க்கும் செயல்திட்டம் ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்தது கண்கூடாகும். எனவே இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்களும் இப்படிப்பட்ட உரிமைகள்பால் ஈர்க்கப் பட்டு, இந்தியக் குடிமக்களின் முக்கிய உரிமைகளை **'அடிப்படை உரிமைகள்'** என்ற தலைப்பில் ஒரு தனி பகுதியையே ஒதுக்கி இந்திய அரசியலமைப்பில் சேர்த்தனர். அதே நேரத்தில் இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பகுதி மிகவும் விரிவானதும், முழுமையானதுமாகும். அதாவது எந்த ஒரு நாடும் இந்த அளவிற்கு விரிவாக குடிமக்களின் உரிமைகளை தங்கள் அரசியலமைப்பில் சேர்க்கவில்லை என்றே குறிப்பிட வேண்டும்.

அடிப்படை உரிமைகளின் தேவை (Need for Fundamental Rights) (அல்லது) அடிப்படை உரிமைகளுக்கும் அரசியலமைப்பால் வழங்கப் பெற்ற பிற உரிமைகளுக்குமிடையிலான வேறுபாடு (Difference between Fundamental Rights and Other Rights):

குடிமக்களுக்கு அரசியலமைப்பால் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகள் பறிக்கப்படாலும் மீறப்படாமலும் இருக்க போதிய பாதுகாப்பு தேவை. இந்த உரிமைகள் அரசின் தன்னிச்சையான நடவடிக்கைகளால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும். இதற்குரிய உத்தரவாதம் அளிக்கப்பட வேண்டும். குடிமக்களின் உரிமைகள் மீறப்படும் போது நீதிமன்றங்களுக்குச் சென்று அவற்றை நிலைநாட்டவும் உரிமை வழங்கப்பட வேண்டும். இந்த அடிப்படை உரிமை அரசியலமைப்பின் பிற வகைமுறை களால் வழங்கப்பெற்ற வேறு உரிமைகளை விட மேலானவை. அதாவது குடிமக்களின் அடிப்படை உரிமைகள் அரசினாலேயே மீறப்பட முடியாதவை.

அடிப்படை உரிமைக்கும் ஒரு சட்ட உரிமைக்குமிடையே வேறுபாடு உண்டு. சட்ட உரிமை மீறப்படும் போது உரிய நீதிமன்றங்களில் முறையிட்டு அவற்றுக்கு சாதாரண சட்டங் களாலேயே தீர்வு காண முடியும். ஆனால் அடிப்படை உரிமைகள் ஓர் எழுதப்பெற்ற அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்டு உத்தரவாதம் அதாவது பாதுகாப்பு கொடுக்கப்பட்டவையாகும். அடிப்படை உரிமைகளைச் சட்டமன்றங்கள் சாதாரண முறையில் மாற்றியமைக்கவியலாது அதாவது திருத்த முடியாது. அரசிய லமைப்புச் சட்டத்தால் கூறப்பட்ட முறைகளில் மட்டுமே பாராளு

மன்றத்தால் திருத்த முடியும். அதுபோன்றே அரசியலமைப்புச் சட்டத்தால் கூறப்பட்ட நடைமுறைகளால் மட்டுமே இடை நிறுத்தம் செய்யவோ அல்லது குறைக்கவோ முடியும். அடிப்படை உரிமைகளை அரசு பறிக்கக் கூடாது. எனவே அவை பறிக்கப்படும் போது அல்லது மீறப்படும் போது அரசுக்கு எதிராக வழக்கிட்டு நிவாரணம் பெறலாம்.

அடிப்படை உரிமைகளின் வகைப்பாடு (Classification of Fundamental Rights):

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் பின்வரும் ஆறு வகையான உரிமைகள் அடிப்படை உரிமைகளாக இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவை,-

1. சமத்துவ உரிமை (Right to Equality) (ஷரத்துகள் 14 - 18)

2. சுதந்திர உரிமை (Right to Freedom) (ஷரத்துகள் 19 - 22)

3. சுரண்டலுக்கெதிரான உரிமை (Right against Exploitation) (ஷரத்துகள் 23 - 24)

4. சமய சுதந்திர உரிமை (Right to Freedom of Religion) (ஷரத்துகள் 25 - 28)

5. கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமைகள் (Cultural and Educational Rights) (ஷரத்துகள் 29 - 30)

6. அரசியலமைப்பு தீர்வழிகள் பெற உரிமை (Right to Constitutional Remedies) (ஷரத்துகள் 32 - 35)

இந்த ஆறு வகையான உரிமைகளும் நிச்சயமாக ஒரு குடிமகனுக்கு தேவையான அடிப்படை உரிமைகளே. மேலும், நமது அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் கூறப்பட்டுள்ள நோக்கங்களை நிறைவேற்றும் வகைளில் அமைந்துள்ளன. முன்பு இயற்கை உரிமைகளாக இருந்த இவ்வுரிமைகள் தற்பொழுது அடிப்படை உரிமைகளாக ஆகியுள்ளன. மேற்படி அடிப்படை உரிமைகளிலிருந்து சொத்துரிமையைப் (Right to Property) பற்றி கூறும் **ஷரத்து 19 (1) (f)-ம் ஷரத்து 31-ம்,** 44-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட்டது. எனினும், சொத்துரிமையானது, ஷரத்து 300-A-ன் கீழ் ஒரு சாதாரண உரிமையாக சேர்க்கப்பட்டது.

அடிப்படை உரிமைகளின் நோக்கம்:

இந்தியக் குடிமக்களிடையே சமத்துவம் மற்றும் சகோதரத் துவத்தை வளர்த்து, ஆட்சித் துறையினரிடமிருந்து அவர்களது சுதந்திர உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களது கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமைகளை பேணி வளர்ப்பது அடிப்படை உரிமை களின் நோக்கமாகும். அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால், அதற்கு தக்க தீர்வழிகளைத் தருவதும், இவற்றின் தலையாய நோக்கங்களில் ஒன்றாகும். எனவே, அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் அதற் காக நீதிமன்றத்தில் வழக்கிட்டு நீதிப்பேராணைகள் (Writs) வழியாக தீர்வழி பெறுவதும், அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக ஷரத்து 32-ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம்:

அடிப்படை உரிமைகள் என்று பெயரிலிருந்தே அதன் முக்கியத்துவம் புலனாகிறது. பல்வேறு சாதாரண உரிமைகள் பல்வேறு சட்டங்களால் குடிமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆனால், அடிப்படை உரிமைகள் மட்டும் இந்திய நாட்டின் உயர் சட்டமாக விளங்கும் அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப் பட்டுள்ளன. எனவே, இவ்வுரிமைகளை பறிக்கவோ அல்லது நீக்கவோ முடியாது. அடிப்படை உரிமைகள், இந்திய அரசியலமைப் பின் அடிப்படைக் கட்டமைப்பின் (Basic Structure) ஒரு பகுதியாகும். எனவே, அவற்றை ஒரு முறையான அரசியல் சட்டத் திருத்தத்தால் குறைக்கலாமே தவிர, முற்றிலும் அழித்துவிட முடியாது. சாதாரண உரிமைகளை ஒரு குடிமகன் விட்டுக் கொடுத்து (Waive) விடலாம். ஆனால் அடிப்படை உரிமைகளை ஒரு குடிமகன் விட்டுக் கொடுத்துவிட்டாலும், அதை அரசியலமைப்புச் சட்டம் அனுமதிப்பதில்லை. ஏனெனில் அடிப்படை உரிமைகளை குடி மக்களுக்கு வழங்குவது நாட்டின் பொதுக் கொள்கையாகும். (Public Policy). மேலும் அரசின் வரம்புமீறிய தலையீட்டிற்கும் தனிமனித சுதந்திரத்திற்கும் இடையே ஒரு சமத்துவத்தை நிலவ உதவுவதே, அடிப்படை உரிமைகள்தாம். ஒரு சட்டம் அடிப்படை உரிமைகளை பறிக்கும் வண்ணமோ அல்லது மீறும் வண்ணமோ இயற்றப் பட்டால், அதை அரசியலமைப் பற்றது என்றும் செல்லாதது என்று அறிவிக்கும் நீதிச் சீராய்வு அதிகாரம் (Power of Judicial Review) உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்தியா வில் சட்டத்தின் ஆட்சிதான் (Rule of Law) நடைபெறுகிறதே யொழிய, ஆட்சியாளரின் ஆட்சியல்ல என்பதும் புலனாகிறது.

அடிப்படை உரிமைகள் யாருக்கு கிடைக்கும்? (To whom available?):

ஷரத்துகள் 15, 16, 19, 29 மற்றும் 30-ல் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள், இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே கிடைக்கும். பிற உரிமைகள் இந்தியக் குடிமக்களுக்கும், அவ்வாறு குடிமக்களல்லாதவர்கட்கும் கிடைக்கும்.

அடிப்படை உரிமைகள் யாருக்கெதிராக கிடைக்கும்? (Against whom available?):

இந்திய அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள பெரும்பாலான அடிப்படை உரிமைகள் அரசிற்கெதிராக மட்டுமே கிடைக்கும். ஆனால் சில உரிமைகள் தனிப்பட்டோர்களுக்கு எதிராகவும் கிடைக்கத்தக்கதாகும். எடுத்துக்காட்டாக, ஷரத்துகள் 14, 15(1), 16, 18(1), 19, 20, 21, 22, 25, 26, 27, 28, 29 மற்றும் 30 ஆகியவற்றின் கீழ் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் அரசிற்கெதிராக மட்டுமே கிடைக்கும். அதே சமயத்தில் ஷரத்துகள் 15(2), 17, 23(1) மற்றும் 24 ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் அரசிற்கெதிராகவும் தனிப்பட்ட நபர்களுக்கு எதிராகவும் கிடைக்கும். அதாவது, இந்த ஷரத்துகளின் கீழான அடிப்படை உரிமைகளை ஒரு தனிப்பட்ட நபர் மீறினாலும் பாதிக்கப்பட்டவர், அதை எதிர்த்து வழக்கிட்டு அவருக்கெதிராக தீர்வழி பெறலாம். அதே சமயத்தில் அரசு மீறினாலும் தீர்வழி பெறலாம்.

அடிப்படை உரிமைகளின் மீதான வரம்புகள் (Limitations):

மேற்கண்ட சிறப்புகளை எல்லாம் அடிப்படை உரிமைகள் பெற்றிருந்தாலும், அவை முழுமையானதல்ல, என்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, அவை வரம்புகளுக்குட்பட்டதாகும். ஷரத்துகள் 31-A முதல் 31-C, 33 , 34, 358 மற்றும் 359 ஆகியவை, மேற்படி அடிப்படை உரிமைகள் மீது வரம்புகளை (curtailment) விதிக்கின்றன அல்லது அவற்றின் செயல்பாட்டை நிறுத்தி வைக்கின்றன (suspension).

முடிவுரை:

அடிப்படை உரிமைகள் குறித்து பல சர்ச்சைகளும் வழக்குகளும் எழுந்துள்ளன. நீதிமன்றங்களும் அவற்றிற்கு இன்று வரை பல பொருள் விளக்கங்களை வழங்கியுள்ளன. மேலும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நீங்கா இடம் பெற்ற பல முக்கியமான மற்றும் சுவாரஸ்யமான வழக்குகள் உண்டு. அவற்றை பின் காண்போம்.

இங்கிலாந்து மற்றும் அமெரிக்க அய்க்கிய நாடுகளில் அடிப்படை உரிமைகள்

[Fundamental Rights in England and in the U.S.A.]

29. Fundamental Rights in England and U.S.A. - Write short notes. (இங்கிலாந்து மற்றும் அமெரிக்காவில் அடிப்படை உரிமைகள் - குறுகிய விடை தருக.)

இங்கிலாந்தில் அடிப்படை உரிமைகள்:

இங்கிலாந்து அரசியலமைப்பு எழுதப்பெறாத அரசியமைப் பாக விளங்கிய போதிலும் நாம் முந்தைய வினாவின் விடையில் கண்டது போல் சில ஆவணங்களின் வழியாக குடிமக்களின் அடிப்படை சுதந்திர உரிமைகள் பதிவு செய்யப்பட்டன. அவை, மேக்னா கார்டா எனப்படும் பேருரிமைப் பட்டயம், உரிமைகள் மசோதா ஆகியனவாகும். எனினும் இவ்வாவணங்களின் உறுதி யளிக்கப்பட்ட உரிமைகள் மக்கள் அடிப்படை உரிமைகளை முழுமையாக வெளிப்படுத்தப் போதுமானவையல்ல. பேச்சுரிமை, ஒன்றாகக் கூடும் உரிமை, அரசு அலுவலர்கட்கெதிரான தம் குறைகளை வெளியிட்டு தீர்வு காணும் உரிமை ஆகியவை நாட்டின் பொதுச் சட்டத்தின்படியும் மரபின்படியும் அமைகின்றன. அடிப்படை உரிமைத் தொகுப்பில் ஏதேனும் விட்டுப் போயிருந் தால் பாராளுமன்றம் இயற்றும் சட்டங்களால் அவை நிரப்பப் படுகின்றன.

சட்டத்தின் ஆட்சி (Rule of Law) இங்கிலாந்தில் நீதி வழங்கும் முறைக்கு அடிப்படையாக இருப்பதால் குடிமக்களின் உரிமைகள் போதுமான அளவில் காப்பாற்றப்படுகின்றன. நாட்டின் சட்ட முறையில் மூன்றுவிதமான கூறுபாடுகள் இணைந்துள்ளன. அவை, பொதுச் சட்டம் (Common law), நேர்மை (Equity), பாராளுமன்ற இயற்சட்டம் (Statute Law) ஆகியவையாகும். எழுதப் பெறாத சட்டங்களாக பொதுச் சட்டங்களும் நேர்மையும் அமைந்துள்ளன. பாராளுமன்ற இயற் சட்டமானது எழுதப்பட்ட சட்டத் தொகுப்பாக அமைந்துள்ளது. இங்கிலாந்து அரசியமைப்பு எழுதப் பெறாத அரசியலமைப்பாக

விளங்கும் போதும் கூட நீதிபதிகள் அளிக்கும் தீர்ப்புகளினின்றும் திரட்டியெடுக்கப்படும் நீதிபதிகளியற்றிய அரசியலமைப்பாக அது உள்ளது. குடிமக்களுடைய உரிமைகளைப் பற்றி நீதிபதிகள் தீர்ப்புகள் அளிக்கும் போது அவை பொதுச் சட்டத்தையும் நேர்மையையும் அடிப்படையாகக் கொண்டு விளைந்தனவாகும். நீதிபதிகளின் விருப்பு வெறுப்பற்ற நிலை தெளிவாக அமைந்துள்ளதே மக்களின் உரிமைகளுக்கு போதுமான உறுதியளிப்பதாக உள்ளது.

அமெரிக்க அய்க்கிய நாடுகளில் அடிப்படை உரிமைகள்:

அமெரிக்க அரசியலமைப்பில் அதன் முதல் பத்து திருத்தங்களில் **உரிமைகளின் மசோதா (Bill of Rights)** கூட்டிணைவாக்கப் பட்டுள்ளது. இந்த உரிமைகள் முழுமையான வரைவுரைகளில் விளம்புகை செய்யப்பட்டுள்ளன. இந்த உரிமைகளின் மீது அமெரிக்க அரசியலமைப்பில் எவ்வித வரம்புகளும் கிடையாது. எனினும் பொது அமைதியைப் பேணுதல், பொது ஒழுங்கமைப்பில் ஊழல் மற்றும் குற்றங்களைத் தடுத்தல் போன்ற பல காரணங்களாக அவ்வுரிமைகளின் மீது சில வரம்புகள் விதிக்கப்பட வேண்டியது அவசியம் என்பது விரைவில் உணரப்பட்டது. எனவே பொது நலனின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அடிப்படை உரிமைகளின் மீது சில தடைகளை விதிப்பது உகந்தது என்று அமெரிக்க உச்ச நீதிமன்றம் அரசியலமைப்பிற்கு பொருள் விளக்கம் அளிக்கும் போது தெளிவுபடுத்தியது. இதை உச்ச நீதிமன்றம் **'பாதுகாவல் அதிகாரக் கோட்பாடு' (Doctrine of Police Power)** என்று பெயரிட்டது. அதாவது தனி மனிதனுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளானது பொது நன்மைக்கு வித்திடுவதாக இருக்க வேண்டும். அவன் தனது அடிப்படை உரிமைகளை தவறாகப் பயன்படுத்தினால், அதன் மீது நியாயமான தடைகளை விதிக்க நாட்டிற்கு உள்ளார்ந்த அதிகாரம் உள்ளது என்பதே உச்ச நீதிமன்றம் மேற்படி கோட்பாடு வழியாக தெளிவுபடுத்த விழைந்ததாகும். அதாவது அடிப்படை உரிமைகளின் மீதான வரம்புகளை தீர்மானிப்பது அமெரிக்க உச்ச நீதிமன்றத்திடம் இருந்தது எனலாம்.

ஆனால் இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளின் மீதான வரம்புகள் அதாவது நியாயமான தடைகள் அதிலேயே தெளிவுற கூறப்பட்டுள்ளது. எனவே அவற்றை தீர்

மானிக்கும் அதிகாரத்தை நீதித்துறையிடம் இந்திய அரசியல மைப்பு விட்டுவிடவில்லை. இதனால் அமெரிக்காவின் பாதுகாவல் அதிகாரக் கோட்பாட்டை நமது இந்திய அரசியலமைப்பு அங்கீ கரிக்கவில்லை. ஷரத்து 19-இன் (2) முதல் (6) வரையிலான கூறுகள் அடிப்படை உரிமைகளின் மீதான நியாயமான தடைகளைப் (reasonable restrictions) பற்றிக் கூறுகிறது. எனவே அவற்றை நீதிபதி களின் முடிவுக்கு விடுவது என்பதற்கு இங்கு எவ்வித இடமுமில்லை. எனினும் ஒரு தடை அடிப்படை உரிமைகளின் மீதான 'நியாய மான தடையாகுமா' என்பது நீதிமன்றம் தன் முன் வரும் வழக்கு களின் போது ஆராய்ந்து தீர்மானிப்பதற்குரியதாகவே உள்ளது.

அடிப்படை உரிமைகளின் இடை நிறுத்தம்
[Suspension of Fundamental Rights]

30. Suspension of Fundamental Rights - Write short notes.
(அடிப்படை உரிமைகளின் இடை நிறுத்தம் - குறுகிய விடை தருக.)

அடிப்படை உரிமைகளின் இடைநிறுத்தம் (அல்லது) நிறுத்தி வைத்தல்:

நாம் ஏற்கனவே கண்டவாறு அடிப்படை உரிமைகள் என்பன கட்டுப்பாடற்ற சுதந்திரங்கள் அல்ல. அதன் மீது நியாயமான தடைகளை விதிக்க இந்திய அரசியலமைப்புச் சட்டத்திலேயே ஷரத்து 19-இன் (2) முதல் (6) வரையிலான கூறுகள் வகை செய்கின்றன. எனவே அடிப்படை உரிமைகளை முழுமை யான உரிமைகள் என்று கூறவியலாது. அந்த வகையில் பின்வரும் சில முக்கிய சூழல்களில் அடிப்படை உரிமைகளை குடிமக்கள் பயன்படுத்துவதை நமது அரசியலமைப்புச் சட்டம் இடை நிறுத்தி வைக்க முடியும். அவை,-

ஷரத்து 352-இன்படி போர் மற்றும் வெளித் தாக்குதலின் காரணத்தால் நெருக்கடி நிலையை குடியரசுத் தலைவர் பிரகடனப் படுத்தினால், ஷரத்து 19-இன் வாயிலாக அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் தானாகவே இடை நின்றுவிடும். அதாவது அதன் செயலாக்கத்திற்கு தடை ஏற்பட்டுவிடும் என்று ஷரத்து 358 கூறுகிறது. இத்தடை நெருக்கடி நிலை தொடர்ந்திருக்கும் வரை அமலில் இருக்கும். அடிப்படை உரிமைகளை சட்டமன்றமோ, நிர்வாகத்துறையோ மீறக் கூடாது என்று அரசியலமைப்புச் சட்டம் விதித்திருக்கும் தடையை இந்த இடை நிறுத்தம் நீக்கி

விடுகிறது. சட்டம் ஏதும், அல்லது நிர்வாகத்துறை ஆணை ஏதும் அரசால் இயற்றப்பட்டால் அல்லது வெளியிடப்பட்டால் அது ஷரத்து 19 அளித்துள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணாக உள்ளது என்ற அடிப்படையில் அதை எதிர்த்து குடிமக்கள் யாரும் வழக்கிட இயலாது. எனினும் அச்சட்டம் அல்லது நிர்வாகத்துறை ஆணையானது நெருக்கடி நிலை விலக்கிக் கொள்ளப்பட்டவுடன் செயழிந்துவிடும். ஷரத்து 19-இன் கீழான அடிப்படை உரிமைகளுக்கு மீண்டும் உயிர் வந்துவிடும்.

அதே நேரத்தில் நெருக்கடி நிலையின் போது ஷரத்து 358-இன் கீழ் செய்யப்பட்ட செயல்கள் அல்லது செய்யாமல் விடப்பட்ட செயல்கள் குறித்து நெருக்கடி நிலை முடிந்தவுடன் எவ்வினாவையும் நீதிமன்றத்தில் எழுப்ப இயலாது.

மேலும் அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்ட அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி நீதிமன்றத்திற்குச் செல்லும் உரிமையையும் குடியரசுத் தலைவர் நெருக்கடி நிலையின் போது இடை நிறுத்தி வைக்க குடியரசுத் தலைவருக்கு ஷரத்து 359 அதிகாரமளித்துள்ளது. (எனினும் இதற்கு விதிவிலக்காக ஷரத்து 20 மற்றும் 21 அமைகிறது.) இதற்காக குடியரசுத் தலைவர் ஆணை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டும். அதில் அவர் எந்த அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்த நீதிமன்றத்திற்கு செல்வது இடை நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும் குறிப்பிடலாம். குடியரசுத் தலைவரின் இந்த ஆணை இந்தியா முழுமைக்கோ, அதன் ஏதேனும் ஒரு பகுதிக்கோ பொருந்தும்படியும் செய்யலாம்.

இங்கு ஒரு சிறிய வேறுபாடு உள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது ஷரத்து 358-இன் கீழ் நெருக்கடி நிலையை குடியரசுத் தலைவர் பிரகடனம் செய்தவுடன் ஷரத்து 19-இன் கீழான சுதந்திர உரிமைகள் தானாகவே நின்றுவிடும். ஆனால் ஷரத்து 359-இன்படி நெருக்கடி நிலையின் போது அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்தும் பொருட்டு நீதிமன்றத்திற்குச் செல்லும் உரிமையை குடியரசுத் தலைவர் தனது ஆணை ஒன்றின் வாயிலாகத்தான் இடை நிறுத்தம் செய்ய முடியும். அதாவது அது தானாக நின்றுவிடாது. (It is to be noted that while under Article 358, the fundamental rights conferred by Article 19 are automatically suspended. The suspension under Article 359 can only be brought about by an order of the President)

'அரசு' என்பதன் வரையறை

(ஷரத்து 12)

[Defintion of 'State']

[Article 12]

31. Examine the evolving concept of 'State' for the purpose of Fundamental Rights under Art. 12 of the Constitution. (இந்திய அரசு அமைப்புச் சட்டத்தின் பிரிவு (ஷரத்து) 12-ன்படி அடிப்படை உரிமைகளுக்காக 'அரசு'-ஐ தோற்றுவிக்கும் கருத்தை ஆராய்க.)

(அல்லது)

Examine the significance of the definition of 'State' under Art. 12 of the Constitution and in the light of decided cases discuss what is meant by "other authority" under Article 12. (அரசமைப்பின் 12 வது பிரிவின் கீழ் 'அரசு'- என்ற சொல் விளக்கத்தின் முக்கியத்துவத்தை ஆராய்ந்து வழக்குத் தீர்ப்புகளின் துணையோடு 12-வது பிரிவின் கீழ் "பிற அதிகார அமைப்புகள்" என்றால் என்ன என்பதினை விவாதிக்கவும்.)

(அல்லது)

Define 'State' under Art. 12 of the Indian Constitution. Refer to decided cases. (இந்திய அரசமைப்பு சட்டத்தின் பிரிவு 12-ன்படி 'அரசு' என்பதை வரையறை செய்க. முடிவுற்ற வழக்குகளை குறிப்பிடுக.)

(அல்லது)

Explain the meaning of "other authorities" in Art. 12 of the Constitution with reference to the decisions of the Supreme Court. (அரசியல் சட்டம் 12-வது பிரிவின் கீழ் குறிப்பிடப் பட்டுள்ள "இதர அமைப்புகள்" என்பதை உச்ச நீதிமன்றத்தின் வழக்குகளைக் கொண்டு விளக்குக.)

(அல்லது)

Define 'State'. How will you decide the meaning of "Other authorities" under Article 12? ("அரசு" என்பதனை வரையறு.

அரசமைப்பின் 12வது உறுப்பின் கீழ் "ஏனைய அதிகார அமைப்புகள்" என்பதை எவ்வாறு பொருள் கொள்வீர்கள்?)

(அல்லது)

Explain the word "State" as defined in Article 12 for the purpose of Fundamental Rights. Can the judiciary violate fundamental rights? (அடிப்படை உரிமைகளுக்காக பிரிவு 12ல் "அரசு" என்ற சொல் வரையறுக்கப்பட்டதை விளக்குக. நீதிமன்றம் அடிப்படை உரிமைகளை மீற முடியுமா?)

(அல்லது)

Fundamental rights are not only the rights of the citizens but also the obligations imposed upon the State. Discuss the meaning of the term 'State' in this regard. (அடிப்படை உரிமைகளானவை குடிமக்களின் உரிமைகள் மட்டுமல்ல. அவை அரசுக்கு எதிராக சுமத்தப்பட்ட கட்டுப்பாடுகளும் ஆகும். இது குறித்து 'அரசு' எனும் வாசகத்தின் பொருளினை விவாதிக்கவும்.)

(அல்லது)

What is the test propounded by the Supreme Court to determine "other authorities" mentioned in Article 12 as "State" for the purpose of Part III of the Constitution of India? (உச்ச நீதிமன்றம் "இதர அமைப்புகள்" என்று கூறி உள்ள அரசியல் அமைப்புச் சட்டம் பிரிவு 12-ல் பாகம் முன்றில் உள்ளதை கண்டறியும் சோதனையைப் பற்றிக் குறிப்பிடுக.)

(அல்லது)

Define 'State' according to Part III of the constitution. (அரசமைப்பு பகுதி III ன்படி 'அரசு' என்பதனை வரையறு.)

(அல்லது)

In the definition of "State" in Article 12, Judiciary is not expressly included or expressly excluded for the purpose of Fundamental Rights. Therefore, can the Judiciary violate fundamental rights? If so, what is the remedy? (அடிப்படை உரிமைகளுக்காக பிரிவு 12-ல் "மாநிலம் (அரசு)"-யை வரையறுக்

கும் போது, நீதிமன்றத்தை வெளிப்படையாக உள்ளடக்கியோ அல்லது வெளிப்படையாக விலக்கியோ செய்யப்படவில்லை. அதனால், நீதிமன்றம் அடிப்படை உரிமைகளை மீற முடியுமா? அப்படியென்றால், அதற்கு என்ன பரிகாரம்?)

(அல்லது)

Definition of 'State' - Write short notes. ('அரசின்' வரையறை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Define 'State' - Write short notes. ('அரசு' வரையறு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

'Other authority' under Art. 12 - Write short notes. (பிரிவு 12-ன்படி 'பிற அதிகார அமைப்புகள்' - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதி (Part III) அடிப்படை உரிமைகள் குறித்து கூறுகிறது என்றும், பெரும்பாலான அடிப்படை உரிமைகளை அரசிற்கெதிராக மட்டுமே வலியுறுத்திப் பெற இயலும் என்றும் நாம் ஆரம்ப வினாவில் கண்டோம். எனவே ஒருவரது அடிப்படை உரிமையை மீறியது அரசா, இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக ஷரத்து 12-ஆனது, **"அரசு" (State)** என்பதில் எவையெல்லாம் அடக்கம் என்பதற்குண்டான வரையறையைக் கொடுக்கிறது.

"அரசு" என்ற சொல்லில் எவை அடங்கும்? - ஷரத்து 12 கூறும் வரையறை:

ஷரத்து 12-ன்படி, "அரசு" என்ற சொல்லில் பின்வருவன அடங்கும் (1) இந்திய அரசாங்கம் மற்றும் பாராளுமன்றம்; மற்றும் (2) ஒவ்வொரு மாநிலத்தினுடைய அரசாங்கம் மற்றும் சட்டமன்றம்; மற்றும் (3) இந்திய ஆட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து **உள்ளூர் அதிகார அமைப்புகள் (Local Authorites)** அல்லது **பிற அதிகார அமைப்புகள் (Other Authorites)**; அல்லது (4) இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து உள்ளூர் அல்லது பிற அதிகார அமைப்புகள்.

"அரசு"- விளக்கம்:

மேற்கண்ட வரையறை **"அரசு"** என்ற சொல்லில் எவை யெல்லாம் அடங்குகின்றன என்று கூறுகின்றது. அவை ஒருவரு டைய அடிப்படை உரிமைகளை மீறினால் அவற்றிற்கெதிராக வழக்கிட்டு தீர்வழி பெறலாம். இந்த வரையறையில் இந்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் **"அரசு"** என்ற சொல்லில் சேர்க்கப்பட்டுள்ளதால், நிர்வாகத் துறையை (Executive) எதிர்த்தும் அடிப்படை உரிமைகள் மீறலுக்காக வழக்கிடலாம் என்பது தெளிவாகிறது. அதுபோல், இந்திய பாராளுமன்றமும், மாநில சட்டமன்றமும் **"அரசு"** என்ற சொல்லில் சேர்க்கப்பட்டுள் ளதால் சட்டத் துறையை (Legislative) எதிர்த்தும் அடிப்படை உரிமைகள் மீறலுக்காக வழக்கிடலாம் என்பதும் தெளிவாகிறது. ஆனால், இங்கு எழும் சிக்கல் யாதெனில், **அதிகார அமைப்புகள் (Authorites)** என்பதற்கு விளக்கம் கொடுக்கப்படாததேயாகும். எனவே அவற்றின் பொதுவான விளக்கத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது.

அதிகார அமைப்புகள் (Authorites) - விளக்கம்:

ஷரத்து 12-ல் கூறப்பட்டுள்ள **அதிகார அமைப்புகள் (Authorites)** என்பதில் ஒரு அமைப்பு, சட்டத்தின் வலிமை கொண்ட சட்டங்கள், உத்திரவுகள், ஒழுங்குமுறை விதிகள், உப-விதிகள், அறிக்கைகள் ஆகியவற்றை செய்யவும், அவற்றை வலியுறுத்திச் செயல்படுத்தவும் அதிகாரம் கொண்டிருந்தால், அவை மேற்படி ஷரத்து 12-ன் கீழான 'அதிகார அமைப்புகள்' எனும் சொல்லில் வருகின்றது. இதனடிப்படையில் நாம் அடுத்து, **உள்ளூர் அதிகாரஅமைப்புகள் (Local Authorites)** என்பதின் விளக்கத்தை பார்க்க வேண்டியுள்ளது.

உள்ளூர் அதிகார அமைப்புகள் (Local Authorites)- விளக்கம்:

பொதுச் சொல் பொருள்விளக்கச் சட்டத்தின் 3 (31)-வது பிரிவின்படி, உள்ளூர் அதிகார அமைப்புகள் என்ற சொல்லில் நகராட்சிகள், மாவட்ட வாரியங்கள், பஞ்சாயத்துகள் ஆகியவை அடங்கும். அடுத்து நாம் மிக முக்கியமாக காண வேண்டியது, **பிற அதிகார அமைப்புகள் (Other Authorites)** என்பதின் விளக்கம் ஆகும்.

பிற அதிகார அமைப்புகள் (Other Authorites) - விளக்கம் :

"பிற அதிகார அமைப்புகள்" என்ற சொற்றொடரில் உள்ள **"பிற"** என்ற சொல்லில் எவையெல்லாம் அடங்கும் என்பதற்கு தெளிவான விளக்கத்தை நமது அரசியலமைப்பு அளிக்கவில்லை. எனவே, அவற்றின் விளக்கத்தை அறிந்து கொள்ள நாம் முடிவுற்ற சில முக்கிய வழக்குகளையே சார்ந்திருக்க வேண்டியுள்ளது.

முடிவுற்ற முக்கிய வழக்குகள் (Decided case laws):

University of Madras v. Santabai[1]

இவ்வழக்கில், அனைத்து பிற அதிகார அமைப்புகளும் **"அரசு"** என்ற சொல்லில் வந்து விடாது. அவை அரசாங்க (governmental) அல்லது இறைமை (sovereign) தன்மையுடைய பணிகளைச் செய்து கொண்டிருக்க வேண்டும்; அரசால் பராமரிக்கப்பட வேண்டும் (maintained by the State). அப்பொழுதுதான் அவை **"அரசு"** என்ற சொல்லில் வரும். எனவே, அரசால் பராமரிக்கப்படாத பல்கலைக்கழகங்கள் போன்றவை, **"பிற அதிகார அமைப்புகள்"** என்ற சொற்டொரில் அடங்காது என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Ujjambai v. State of U.P.[2]

இவ்வழக்கில் உச்ச நீதி மன்றமானது, மேற்படி **University of Madras v. Santabai** வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம், பிற அதிகார அமைப்புகளுக்கு கொடுத்த பொருள் விளக்கமானது வரம்பிற்குட்பட்ட ஒரு குறுகிய பொருள் விளக்கமாகும் என்று கூறி, அதனை நிராகரித்து விட்டது.

Electricity Board, Rajasthan v. Mohan Lal [3]

இந்த மற்றொரு வழக்கில், பிற அதிகார அமைப்புகளுக்கு சற்று பரந்த விளக்கம் அளிக்கப்பட்டது. அதன்படி அரசியலமைப்பால் அல்லது சட்டத்தால் உருவாக்கப்பட்டதும், சட்டத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டதுமான அனைத்து அதிகார அமைப்புகளுமே பிற அதிகார அமைப்புகள் என்பதில் அடங்கும் என்றும், அவ்வாறு சட்டப்படி உருவாக்கப்பட்ட அதிகார அமைப்புகள், அரசு அல்லது இறைமை தன்மையுடைய பணிகளைச் செய்ய

1. AIR 1954 Mad. 67
2. AIR 1962 SC 1621
3. AIR 1967 SC 1857

வேண்டும் எனும் அவசியம் ஏதுமில்லை என்றும் உச்ச நீதிமன்றம் பரந்த பொருள் விளக்கமளித்தது.

இதன்படி, சட்டத்தால் உருவாக்கப்பட்ட இராஜஸ்தான் மின்சார வாரியமும் (Electricity Board, Rajasthan) 'பிற அதிகார அமைப்புகள்' என்பதில் அடங்கும். இவ்வழக்கின் மூலம் சட்டத்தால் உருவாக்கப்பட்டதும் மற்றும் சட்டத்தால் அதிகார மளிக்கப்பட்டதுமான அனைத்து அதிகாரஅமைப்புகளும் 'பிற அதிகார அமைப்புகள்' என்பதில் அடங்கும், என்பது தெளி வானது.

Umesh v. V.N.Singh[1]

இவ்வழக்கில் பாட்னா உயர் நீதிமன்றமானது, மேற்படி **University of Madras v. Santabai** வழக்கில் சென்னை உயர் நீதிமன் றம் பிற அதிகார அமைப்புகளுக்கு கொடுத்த பொருள் விளக்கத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டு (overruled), மேற்படி **Electricity Board, Rajasthan v. Mohan Lal** - எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பைப் பின்பற்றி, பாட்னா பல்கலைக்கழகமும் 'ஒரு அரசே' என்று தீர்ப் பளித்தது.

Sukhdev Singh v. Bhagatram[2]

இவ்வழக்கில் எண்ணெய் மற்றும் நில வாயுக் கழகம் (ONGC), ஆயுள் காப்பீட்டுக் கழகம் (LIC) மற்றும் தொழிற்சாலை நிதிக் கழகம் (IFC) ஆகியவை சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட சட்ட அமைப்புகளாகும். அவை தங்களது பணியாளர்களின் பணி நிபந் தனைகளை ஒழுங்குபடுத்த ஒழுங்குமுறை விதிகளை இயற்ற சட்டத்தால் அதிகாரம் பெற்றுள்ளன. அந்த ஒழுங்குமுறை விதிகள் சட்டத்தின் வலிமையைக் கொண்டதாகும். எனவே, மேற்படி கழகங்கள் ஷரத்து 12-ன் கீழான அரசு என்று சொல்லில் அடங்கக் கூடியதாகும் என்று உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதியரசர்கள், நாம் முன் கண்ட **Electricity Board, Rajasthan v. Mohan Lal** - எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கொடுத்த பொருள் விளக்கத்தைப் பின்பற்றி தீர்ப்பளித்தனர். எனவே, மேற்படி கழகங்கள் தங்களது பணியாளர்களின் அடிப்படை உரிமைகள் எதையும் மீறும்படி நடந்து கொள்ள இயலாது. **நீதியரசர் மேத்தியூ**

1. AIR 1968 Pat. 3
2. AIR 1975 SC 1331

(Mathew, J.) அவர்கள், தனது தனி ஆனால் இணக்கமான தீர்ப்புரையில் (separate but concurring judgment) எவை பிற அதிகார அமைப்புகளின் கீழ் வரும் என்பதைக் கண்டறிய ஒரு **பரந்த சோதனையை (Wider Test)** முன் வைத்தார். அதன்படி, ஒரு கழகத்தின் (Corporation) பணிகள் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், அரசாங்கப் பணிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதாகவும் இருப்பின், அதனை அரசாங்கத்தின் ஒரு **முகைமையாக (agency)** அல்லது **இடைச்சாதனமாகவோ (instrumentality)** பாவிக்க வேண்டும், என்று அவர் கூறினார். இச்சோதனையின்படி, மேற்படி கழகங்கள் ஷரத்து 12-ன் கீழான 'அரசு' என்று சொல்லில் வருகின்றன என்றும் கூறினார்.

Ramana Dayaram Shetty v. The International Airport Authority of India (or) Airport Authority's Case[1]

இவ்வழக்கு **Airport Authority's Case** என்று அழைக்கப் பட்ட மிகப் பிரபலமான வழக்காகும். இவ்வழக்கில் **நீதியரசர் பகவதி (Bhagwati, J.)** அவர்கள், **Sukhdev Singh v. Bhagatram** வழக்கில் **நீதியரசர் மேத்தியூ (Mathew, J.)** அவர்கள் குறிப்பிட்ட **பரந்த சோதனையை (Wider Test)** ஏற்றுக் கொண்டு, ஒரு சட்டப் படியான கழகமோ, ஒரு அரசாங்க நிறுவனமோ அல்லது ஒரு பதிவு பெற்ற சங்கமோ எதுவாக இருப்பினும், ஒரு அமைப்பு அரசாங்கத்தின் முகமையாகவோ அல்லது இடைச்சாதன மாகவோ இருப்பின், ஷரத்து 12-ன் கீழான 'அரசு' என்று சொல்லில் வரும் என்று குறிப்பிட்டார். இவ்வழக்கில், **International Airport Authority** எனும் அமைப்பு, பாராளுமன்றச் சட்டத்தால் உருவாக்கப்பட்டதாகும். எனவே, அரசு என்ற சொல்லில் வரும் என்று கூறப்பட்டது. இவ்வழக்கின் தீர்ப்புரை யில், நீதியரசர் பகவதி அவர்கள் தனது பங்குக்கு மற்றொரு **சோதனையை (Test)** முன் வைத்தார். அதாவது, ஒரு அமைப்பு அரசாங்கத்தின் ஒரு முகமை அல்லது இடைச்சாதனம் என்பதை எவ்வாறு தீர்மானிப்பது என்பதற்குண்டான வழிமுறைகளை எடுத்துக் கூறுவதே அச்சோதனையாகும்.

அச்சோதனையின்படி, *(1)* அக்கழகத்தின் அனைத்து மூலதனமும் அரசால் முதலீடு செய்யப்பட்டிருக்க வேண்டும். *(2)* அரசின் கண்டிப்பான கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். *(3)*

1. AIR 1979 SC 1628

அக்கழகத்தின் பணிகள் பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், அரசாங்கப் பணிகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டும் இருத்தல் வேண்டும். (4) அரசாங்கத்தின் ஒரு துறை அகழகத்திற்கு மாற்றியளிக்கப்பட்டுள்ளதா? (5) அக்கழகம் அரசால் வழங்கப்பட்ட அல்லது அரசால் பாதுகாக்கப்பட்ட முற்றுரிமையை துய்க்கின்றதா? எனினும் இந்த வழிமுறைகளே முடிவானதல்ல. எடுத்துக்காட்டிற் காக வகுக்கப்பட்டதாகும். எனவே, அவற்றை மிகுந்த எச்சரிகை யுடனும் உரிய கவனமுடனும் பின்பற்ற வேண்டும் என்றும் மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

Som Prakash v. Union of India[1]

முன்கண்ட வழக்கில் கூறப்பட்ட சோதனையைப் பின்பற்றி இவ்வழக்கில், ஒரு அரசு நிறுவனம் (பாரத் பெட்ரோலியம் கார்ப்ரேஷன்), ஷரத்து 12-ன்படி பிற அதிகார அமைப்புகளின் கீழ் வருவதால், 'அரசு' என்றாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Ajay Hasia v. Khalid Mujib[2]

இவ்வழக்கில், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கம் அரசாங் கத்தின் ஒரு முகமை அல்லது இடைச் சாதனமாக உள்ளதால், ஷரத்து 12-ன் கீழ் 'அரசு' ஆகும், எனப்பட்டது. ஏனெனில், அச்சங்கத்தின் நிர்வாகம் மற்றும் செயல்பாடுகள் அரசாங்கத்தால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு மாறான ஒரு தீர்ப்பு பின்வரும் வழக்கொன்றில் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

Takraj Vasandi v. Union of India[3]

இவ்வழக்கில், சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கம், ஷரத்து 12-ன் கீழான அரசு எனும் சொல்லில் வராது என்று கூறப்பட்டது. ஏனெனில், அது அரசின் ஒரு முகமையோ அல்லது இடைச் சாதனாமோ அல்ல. மாறாக, அது ஒரு தன்னார்வ அமைப்பாகும். மேலும்,அச்சங்கத்தின் மீது அரசாங்கம் எந்த ஒரு கட்டுப்பாட்டையும் கொண்டிருக்கவில்லை.

1. AIR 1981 SC 212
2. AIR 1981 SC 487
3. (1988) 1 SCC 236

Sri Kona Seema Co-operative Central Bank Ltd. v. N.Seetharama Raju[1]

இவ்வழக்கில், கூட்டுறவு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட ஒரு கூட்டுறவு வங்கி, ஷரத்து 12-ன் கீழான அரசு எனும் சொல்லில் வராது என்று கூறப்பட்டது. ஏனெனில், அதன் பணிகள், பொது முக்கியத்துவம் வாய்ந்ததாகவோ அல்லது அரசாங்க பணியுடன் நெருங்கிய தொடர்போ கொண்டிருக்க வில்லை. மேலும் அவ்வங்கியின் முதன்மை நோக்கமே அதன் உறுப்பினர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்காக நிதி திரட்டுதலே யாகும்.

G.Bassi Reddy v. International Crops Research Institute[2]

இவ்வழக்கில் International Crops Research Institute என்பது ஒரு சர்வதேச அமைப்பு என்றும், அது இலாப நோக்கமில் லாத ஆராய்ச்சிக்காகவும், வளர்ந்து வரும் நாடுகளில் தங்கள் நாட்டின் ஊரக வறுமை மற்றும் பட்டினியை ஒழிப்பதற்காக பயிற்சியளிக்கும் ஒரு மையமாகவும் கட்டமைக்கப்பட்டுள்ளது என்றும், எனவே இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 12-இன் கீழ் அது 'அரசு' என்ற சொல்லில் வராது என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. இதன் விளைவாக இந்த அமைப்பிற்கு எதிராக அதன் பணியாட்களின் தங்கள பணி நீக்கமானது ஷரத்துகள் 14 மற்றும் 16-ஐ மீறுவதாக உள்ளது என்று கூறி நீதிப்பேராணை மனு ஏதும் தாக்கல் செய்ய இயலாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதாவது இந்த அமைப்பு அரசால் அமைக்கப்பட்டதல்ல. மேலும் அது அரசால் கட்டுப்படுத்தப்படுவதுமல்ல அல்லது அரசுக்கு பொறுப்புடையதுமல்ல. எனவே மேற்படி அமைப்பு 'அரசு' என்ற சொல்லில் வராது.

General Manager, Kisan Sahkari Chini Mills Ltd., Sultanpur, U.P. v. Satrughan Nishad[3]

இவ்வழக்கில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அரசாங்கத்தின் ஒரு முகமையோ அல்லது இடைச்சாதனமோ அல்ல என்றும், எனவே அது 'அரசு' என்ற சொல்லில் வராது என்றும் உச்ச

1. AIR 1990 AP. 171
2. AIR 2003 SC 1764
3. AIR 2003 SC 4531

நீதிமன்றம் நிலைநிறுத்தியது. காரணம் அரசு மேற்படி ஆலையின் மீது ஆழமான அல்லது பரவிச் செல்லும் கட்டுப்பாடு ஏதும் கொண்டிருக்கவில்லை எனப்பட்டது (State has no deep and pervasive control over mill).

V.K.Srivastava v. U.P.Rajya Karmachari Kalyan Nigam[1]

இந்த வழக்கில் **U.P. Rajya Karmachari Kalyan Nigam** என்ற கழகம் அரசின் ஒரு முகமையாகவும் இடைச்சாதனமாகவும் உள்ளது என்றும், எனவே அது அரசியலமைப்பின் ஷரத்து 12-இன் கீழ் 'அரசு' என்ற சொல்லில் வரும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. மேற்படி கழகத்தின் மீதான அரசின் கட்டுப்பாடானது ஒழுங்குபடுத்தக் கூடிய தன்மை வாய்ந்தாக மட்டுமல்லாமல், ஆழமானதாகவும் பரவிச் செல்லக் கூடியதாகவும் உள்ளது. இது அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மற்றும் இதர படிகளுக்கு துணைநிலையாக அவர்களின் வேறு பல தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்டுள்ளது. அரசுத் துறையின் மேலதிகாரிகள், இக்கழகத்தின் பதவிவழி அல்லாத உறுப்பினர்களாகவும், கழகத்தின் பொறுப்பாளர்களாகவும் உள்ளனர். அரசும், அதன் அதிகார அமைப்புகளும் இக்கழகத்திற்கு வேண்டிய நிதியுதவியை வழங்கி நிருவாகமும் செய்கிறது. இக்கழகத்தின் தினசரி செயல்பாடு கூட அரசின் பல்வேறு துறைகளால் மேற்பார்வையிடப்பட்டு கட்டுப்படுத்தப்படுகிறது. குறிப்பாக உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கல் துறை இக்கழகத்தை மேற்பார்வை செய்கிறது. எனவே இது 'அரசு' என்ற சொல்லில் வரும்.

Assam Small Scale Industries Development Corporation Ltd. v. J.D.Pharmaceuticals[2]

இந்த வழக்கிலும் **Assam Small Scale Industries Development Corporation Ltd.** என்ற கழகம் ஒரு சட்டப்படியான அமைப்பு என்றும், எனவே அரசியலமைப்பின் ஷரத்து 12-இன் படி 'அரசு' என்ற சொல்லில் வரும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. அதாவது **Assam Preferential Stores Purchase Act, 1989** என்ற சட்டம் அஸ்ஸாம் மாநிலத்தில் சிறு தொழில் வளர்ச்சியை

1. AIR 2005 SC 411
2. AIR 2006 SC 131

ஊக்கப்படுத்துவதற்காக இயற்றப்பட்டதாகும். இங்கு மேற்படி **Assam Small Scale Industries Development Corporation Ltd.** என்ற கழகமானது அரசாங்கத்திற்கு வேண்டிய பொருட்களை விலைக்கு வாங்க சிறு தொழில் நிறுவனத்திற்கு (SSI unit) ஆணை வழங்கும் அதிகாரம் கொண்டதாகும். மேலும் அப் பொருட்களின் வாங்கு விலையில் 90 விழுக்காடு தொகையை முன்பணமாகவும் அது செலுத்தலாம். இங்கு மனுதாரர் ஒரு சிறு தொழில் முனையும் நிறுவனமாகும். இது பொருட்களை விற்க மேற்படி கழகத்திடம் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டது. அதாவது இங்கு மேற்படி சிறு தொழில் நிறுவனம் முதல்வராகவும், மேற்படி கழகம் அதன் முகவராகவும் உள்ளது. உடன்படிக்கையின்படி சிறு தொழில் நிறுவனமானது பொருட்களை மேற்படி கழகத்திற்கு வழங்கியது. எனவே அதன் வாங்கு விலையில் 90 விழுக்காடு தொகையை மேற் படி கழகம் அதற்கு விடுவிக்க வேண்டும். ஆனால் அக்கழகமோ தன்னிடமிருந்து பொருட்களை வாங்கும் அரசு அதிகாரஅமைப் பிடமிருந்து தொகை இன்னும் வரவில்லை என்று காரணம் காட்டி அச்சிறு தொழில் நிறுவனத்திற்கு தொகை வழங்காமல் இழுத்தடிக் கிறது. இவ்வாறு செய்ய முடியாது என்றும், உடன்படிக்கையின் படி கழகமானது தொகையை சிறு தொழில் நிறுவனத்திற்கு வழங்க வேண்டும் என்றும், அக்கழகம் 'அரசு' என்ற சொல்லில் வருவதால் அதன் மீது அரசியலமைப்பின்படி வழக்கிட்டு தீர்வழி பெறுவதற்கு அந்நிறுவனத்திற்கு உரிமை உண்டு என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

Punjab Water Supply and Sewerage Board v. Ranjodh Singh[1]

இவ்வழக்கில் தன்னாட்சி பெற்ற ஒரு அமைப்பு **(autonomous body)** அரசியலமைப்பின் ஷரத்து 12-இன் கீழான 'அரசு' என்ற சொல்லின் பொருளுக்குள் வரும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதாவது சட்டப்படியான அமைப்புகள் தங்கள் பணியாளர்களை தேர்வு செய்வதில் சட்டப்படியான விதிகளில் கூறப்பட்டுள்ள தேர்வு விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அவை பணியாளர்களை தேர்வு செய்வதில் சமத்துவ நியதிகளை பின்பற்ற வேண்டும். அத்தகு நிபந்தனைகளை வழி நடத்திச் செல்லும் சட்டப்படியான விதிகளுக்கு முரணான ஏவுரைகளை மாநில அரசு பிறப்பிக்க இயலாது. இவ்வழக்கின் சங்கதிகள்படி

1. AIR 2007 SC 1082

Punjab Water Supply and Sewerage Board -இல் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுபவர்களின் பணியை முறைப்படுத்துவதை முடிவுக்கு கொண்டு வரலாம் எனப்பட்டது. இந்த முறைப்படுத்தும் நடவடிக்கையை உயர் நீதிமன்றம் ஆணையிட முடியாது. அப்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை இரத்து செய்யப்படத் தக்கதே என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Lt. Governor of Delhi v. K.Sodlu[1]

இந்த மற்றொரு வழக்கில் **State of Council of Educational Research and Training (SCERT)** என்ற மாநில கல்வி மன்றமானது ஷரத்து 12-இன் கீழ் 'அரசு' என்ற பதத்தில் வராது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதாவது ஒரு அமைப்பு 'அரசு' என்ற பதத்திற்குள் வருகிறதா என்பதற்கு அது சம்பந்தப்பட்ட ஒவ்வொரு வழக்கையும் அதன் ஒட்டுமொத்த பொருண்மைகளின் அடிப்படையிலேயே தீர்மானிக்க வேண்டும் என்றும், குறிப்பாக ஒரு அமைப்பை நிதி, பணி மற்றும் நிருவாகரீதியாக அரசாங்கம் மேல்நடத்திச் செல்கிறதா அல்லது கட்டுப்படுத்துகிறதா என்பதை கவனித்தறிந்தால், அதை 'அரசு' என்ற பதத்திற்குள் கொண்டு வருவதா இல்லையா என்பதற்கு விடை கிடைத்துவிடும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. இங்கு SCERT என்ற மேற்படி மாநில கல்வி மன்றத்திற்கு அரசாங்கம் முழுமையான அளவில் நிதியுதவி செய்கிறது. அதே நேரத்தில் அது தனது நிருவாகத்தில் தன்னாட்சி பெற்ற ஒரு அமைப்பாகவும் உள்ளது. மேலும் அம்மன்றம் தனது நிதிநிலையின் மீது தானே கட்டுப்பாடு கொண்டுள்ளது. எனவே அது ஷரத்து 12-இன் கீழான 'அரசு' என்ற சொல்லின் வரையறைக்குள் வரவில்லை என்றும், எனவே அதன் பணியாளர்களின் பணியை நீட்டித்தளிக்க செயலுறுத்தும் நீதிப்பேராணையை (Writ of Mandamus) அதற்கு எதிராக பிறப்பிக்க இயலாது என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

State of Assam v. Barak Upatyaka D.V.Karmchari Sansthan[2]

இந்த வழக்கில் மானிய உதவித் தொகை என்ற பெயரில் அஸ்ஸாம் கூட்டுறவு சங்கத்திற்கு மாநில அரசானது தொடர்ச்சியாக சில ஆண்டுகளுக்கு நிதியுதவி அளித்து வந்தது. ஆனால்

1. AIR 2007 SC 2885
2. AIR 2009 SC 2249

இதைக் கொண்டு அச்சங்கத்தை ஷரத்து 12-இன் கீழான 'அரசு' என்ற சொல்லில் அடங்கக் கூடியதாக கருத முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே அச்சங்கம் பெற்று வந்த நிதியுதவியை அதற்கு எப்போதும் அளித்து வருவதன் வாயிலாக அதன் பணியாளர்களின் சம்பளம், படி ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளவோ அல்லது செலுத்தவோ மாநில அரசை பொறுப்புடையதாக்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் தெளிவுப்படுத்தியது.

இவ்வாறு பல வழக்குகளின் வாயிலாக, அவ்வழக்குகளில் நீதியரசர்கள் கூறிய சோதனைகளின் வழியாக 'பிற அதிகார அமைப்புகள்' எனும் சொல்லின் எல்லை விரிவாக்கப்பட்டு, அவற்றில் பல அமைப்புகள், கழகங்கள், நிறுவனங்கள், சங்கங்கள் சேர்க்கப்பட்டு, அவை அடிப்படை உரிமைகளுக் காக ஷரத்து 12-ன் கீழான 'அரசு' எனும் சொல்லில் கொண்டுவரப்பட்டன. இவையெல்லாம் எதற்காக செய்யப்பட்டன என்றால், தவறியும் அத்தகைய பிற அதிகார அமைப்புகள், குடிமக்களுடைய அடிப்படை உரிமைகளை மீறிவிடக் கூடாது என்பதை சுட்டிக்காட்டத் தான் எனில் அது மிகையன்று.

'அரசு' என்ற சொல்லில் நீதித்துறை சேர்க்கப்பட்டுள்ளதா? (Is Judiciary included in the word 'State') (அல்லது) நீதித்துறை ஒரு அரசாகுமா? (Is Judiciary a State?):

அடிப்படை உரிமைகளுக்காக ஷரத்து 12-ஆனது, 'அரசு' என்ற சொல்லை வரையறுக்கும் பொழுது, நீதித்துறையை வெளிப்படையாக உள்ளடக்கியோ அல்லது வெளிப்படையாக விலக்கியோ எதனையும் தெரிவிக்கவில்லை. அதாவது அரசின் வரையறையில் உள்ள **'பிற அதிகார அமைப்புகள்'** என்பதில் நீதித்துறையை ஷரத்து 12 சேர்த்துக் கொள்ளவுமில்லை; விலக்கி வைக்கவுமில்லை. மாறாக, மௌனம் சாதிக்கிறது. நீதிமன்றங்கள், சட்டத்தால் உருவாக்கப்பட்டுள்ளன. அவற்றிற்குண்டான அதிகாரம், சட்டத்தால் வழங்கப்பட்டுள்ளன. அப்படியிருக்க நீதித்துறை மட்டும், பிற அதிகார அமைப்புகள் என்பதில் ஏன் சேர்த்துக் கொள்ளப்படாமல் உள்ளது? அப்படியானால் நீதித்துறை, அடிப்படை உரிமைகளை மீறலாமா எனும் வினாக்கள் எல்லாம் மனதில் உடனே எழுகின்றன. நீதித்துறையானது, நீதி வழங்கும் அதிகாரத்தை கொண்டுள்ளது. ஆனால் அதே சமயத்தில் நிர்வாக அதிகாரத்தையும் (administrative power) சட்டமியற்றும்

அதிகாரத்தையும் (legislative power) கொண்டுள்ளது. நீதித் துறையானது, தனது நிர்வாக மற்றும் சட்டமியற்றும் அதிகாரத்தைக் கொண்டு செயல்படும் பொழுது, ஷரத்து 12-ன்படி **'பிற அதிகார அமைப்புகள்'** என்பதில் அடங்கி 'அரசு' என்ற வரையறைக்குள் வரும். எனவே, நீதித்துறையானது நிர்வாகரீதியாக செயல்படும் பொழுதோ அல்லது சட்டமியற்றும் பொழுதோ, குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுமாறு செயல்பட முடியாது. எடுத்துக்காட்டாக, உயர் நீதிமன்றங்களின் அல்லது உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் கீழமை நீதிமன்றங்களின் நீதிபதிகளை நியமனம் செய்ய அதிகாரம் படைத்தவர்கள். அப்பொழுது அவர், தம்மால் நியமனம் செய்யப்படும் நீதிபதிகளின் அடிப்படை உரிமைகளை மீறுமாறு செயல்பட்டால் பாதிக்கப்பட்டவர் நீதிமன்றத்தில் வழக்கிட்டு நிவாரணம் பெறலாம். அதுபோல் தங்களுக்குள்ள சட்டமியற்றும் அதிகாரத்தை பயன்படுத்தி உச்ச அல்லது உயர் நீதிமன்றங்கள் இயற்றும் விதிகள் அடிப்படை உரிமைகளை மீறுமாறு இருப்பின் அவற்றை எதிர்த்து வழக்கிடலாம்.

எனவே, இங்கு தற்பொழுது எழும் பிரச்சனை யாதெனில், நீதித்துறையானது தனது நீதிவழங்கும் அதிகாரத்தை மேற் கொள்ளும் பொழுது அடிப்படை உரிமைகளை மீறலாமா என்பதுதான்.

இப்பிரச்சனை முதன்முதலில் **Naresh Sridhar Mirjakar v. State of Maharashtra**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் பார்வைக்கு வந்தது. அப்பொழுது, நீதித்துறை யானது, தனது நீதி வழங்கும் அதிகாரத்தை செயல்படுத்தும் பொழுது, ஷரத்து 12-ன்படி **'பிற அதிகார அமைப்புகள்'** என்பதில் அடங்கி 'அரசு' என்ற வரையறைக்குள் வருவதில்லை. எனவே, ஒரு நீதிமன்ற தீர்ப்புரை அல்லது உத்திரவு, அடிப்படை உரிமைகளை மீறுகிறது என்பதால், அதனை செல்லாது என்று விளம்பக் கோர முடியாது என்று கூறப்பட்டது. வேறு விதத்தில் கூறுவதானால், ஒரு நீதிமன்ற தீர்ப்புரையில் அல்லது உத்திரவில் குறைபாடுகள் உள்ளது என்பதை மேல்முறையீட்டில்தான் சுட்டிக்காட்ட முடியுமே தவிர, அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் வெளியிடப்படும் நீதிப் பேராணைகளை வெளியிடக் கோரி அந்நீதிமன்றத்திற்கெதிராக மனு எதையும் தாக்கல் செய்ய இயலாது.

1. AIR 1967 SC 1

H.M.Seervai[1] மற்றும் **D.D.Basu**[2] போன்ற சட்ட அறிஞர்கள், நீதித் துறையையும் 'அரசு' என்பதின் வரையறைக்குள் சேர்க்க வேண்டும் என்று கருத்து தெரிவிக்கின்றனர். ஆனால், இக்கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில், நாம் ஆரம்பத்தில் கண்ட ஷரத்து 12-ன் வரையறைக்குள் நிர்வாகத் துறையும், சட்டமியற்றுத் துறையும் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் அரசியலமைப்பின் மூன்றாவது அங்கமான நீதித்துறை மட்டும் சேர்க்கப்படவில்லை. இதற்குக் காரணம், அடிப்படை உரிமைகளை அள்ளித் தரும் அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலனாக உள்ள நீதித்துறையே, அந்த அடிப்படை உரிமைகளை மீறக் கூடியதாகலாமா எனும் அனுமானம்தான். மேலும், உச்ச நீதிமன்றமே அடிப்படை உரிமைகளை மீறி விட்டால், பாதிக்கப்பட்ட நபர் தீர்வழிக்காக நாட்டின் மிக உயர்ந்த நீதிமன்றம் (உச்ச நீதிமன்றம்) வழங்கிய உத்திரவிற்கு எதிராக எந்த நீதிமன்றத்தில் போய் முறையிடுவார்? ஒருவேளை, உயர் நீதிமன்றங்கள் மற்றும் கீழமை நீதிமன்றங்கள் அடிப்படை உரிமைகளை மீறி உத்திரவு எதனையும் பிறப்பித்து விட்டால், அதனை எதிர்த்து ஷரத்து 136-ன் கீழ் பாதிக்கப்பட்டவர் உச்ச நீதிமன்றத்தில் **மேல்முறையீடு (Appeal)** செய்து கொள்ளலாம். மாறாக ஷரத்து 32-ன் கீழ் நீதிப் பேராணைகளுக்காக மனு தாக்கல் செய்ய இயலாது. எனவேதான், நீதித்துறையானது, அடிப்படை உரிமைகளுக்காக ஷரத்து 12-ன் கீழான 'அரசு' என்பதின் வரையறைக்குள் சேர்க்கப்படவில்லை.

A.R.Antulay v. R.S.Nayak[3] - இதில் குடிமக்களின் அடிப்படை உரிமைகளை மீறுமாறு நீதிமன்றம் ஏவுரை அல்லது ஆணை பிறப்பிக்க இயலாது என்றும், ஷரத்து 12-இன் கீழான 'அரசு' என்பதில் நீதித்துறையும் வரும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

முடிவாக, நீதித்துறையானது நிர்வாக மற்றும் சட்டமியற்று அதிகாரங்களை மேற்கொள்ளும் போது, அது ஷரத்து 12-ன் கீழ் ஒரு அரசாகும். அப்போது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டால் அதனை எதிர்க்கலாம். ஆனால், நீதிவழங்கும் அதிகாரத்தை மேற்கொள்ளும் போது, ஷரத்து 12-ன் கீழ் அரசு எனும் வரையறைக்குள் நீதித்துறை வருவதில்லை. எனவே அடிப்படை உரிமைகளை மீறியதற்காக எதிர்க்க இயலாது. மாறாக மேல்முறையீடு செய்யலாம்.

1. Constitutional Law of India, pp. 393 to 399 (4th Edn.)
2. Commentary on the Constitution of India, p. 145 (5th Edn.)
3. AIR 1988 SC 1531

அடிப்படை உரிமைகளுடன் முரண்படும் சட்டங்கள்

(ஷரத்து 13)

(அரசியலமைப்பிற்கு முன்னால் மற்றும் பின்னால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கிடையே வேறுபாடு - 'சட்டம்' மற்றும் 'அமலில் உள்ள சட்டம்' என்பதின் பொருள் - மறைதல் கோட்பாடு, கூட்டுப் பிரித்தல் தத்துவம் - வரம்பு மீறல் கோட்பாடு ஆகியவைற்றின் பொருந்தும் தன்மை)

Laws inconsistent with of Fundamental Rights

[Article 13]

[Distinction between Pre and Post Constitution Statutes - Meaning of 'Law' and 'Law in force' - Application of Doctrine of Eclipse, Severability and Ultra-vires]

32. Explain the effect of pre-constitution statutes and post-constitution statutes on Fundamental Rights. (அரசமைப்புச் சட்டத்திற்கு முன்னால் இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் பின்னால் இயற்றப்பட்ட சட்டங்கள், இவைகளின் அடிப்படை உரிமைகளின் மீதான விளைவை விளக்குக.)

(அல்லது)

What is the effect of Pre-constitutional laws and Post-constitutional laws, if they are inconsistent with the constitution? Explain the extent of application of doctrine of Eclipse to such laws. (அரசமைப்புச் சட்டத்திற்கு முந்திய சட்டங்களும் மற்றும் பிந்திய சட்டங்களும் அரசமைப்புச் சட்டத்திற்கு முரண்பாடாக இருந்தால் அதன் விளைவுகள் யாவை? அம்மாதிரி சட்டங்களுக்கு ஒளி மறைப்புக் கோட்பாடு எந்த அளவுக்கு பொருந்தும் என்பதை விளக்குக.)

(அல்லது)

What do you understand by "Law" and "Law in force" under article 13? Answer with supporting case laws. (அரசமைப்புச் சட்டத்தின் 13-வது பிரிவின் கீழ் 'சட்டம்' "நடைமுறையிலுள்ள சட்டம்" இது குறித்து தாங்கள் புரிந்து கொண்ட கருத்தை தீர்ப்பாதாரங்களுடன் பதிலளிக்கவும்.)

(அல்லது)

Doctrine of Eclipse- Write short notes.(ஒளிமறைப்புக் கோட்பாடு - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் III-வது பகுதி குடிமக்களுடைய அடிப்படை உரிமைகளைப் பற்றிக் கூறுகிறது. அந்த அடிப்படை உரிமைகளுக்கு முரண்படுமாறு அல்லது மீறுமாறு சட்டம் ஏதேனும் இயற்றப்பட்டால், அது இல்லாநிலையதாகும் மற்றும் செல்லாததாகும். இந்நிலைப்பாடு, அரசியலமைப்புச் சட்டம் தொடங்குவதற்கு முன்னால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்ட பிறகு இயற்றப்பட்ட சட்டங்களுக்கு இடையே என்ன விளைவை ஏற்படுத்துகிறது என்பதை நாம் இங்கு காண வேண்டியுள்ளது. இது குறித்து **ஷரத்து 13** பின்வருமாறு கூறுகிறது.

ஷரத்து 13:

(1) ஷரத்து 13(1) - அரசியலமைப்புச் சட்டம் தொடங்குவதற்கு முன்னால் இயற்றப்பட்ட சட்டங்களின் விளைவு (Effect of Pre-constitutional Laws):

ஷரத்து 13(1) -ஆனது, அரசியலமைப்பு தொடங்குவதற்கு உடன் முன்பாக, இந்திய எல்லைக்குள் **அமலில் உள்ள அனைத்து சட்டங்களும் (laws in force)**, இந்தப் பகுதியில் (அடிப்படை உரிமைகள் குறித்த III-வது பகுதி) உள்ள வகைமுறைகளுடன் எந்த அளவிற்கு முரண்பட்டதாக உள்ளதோ அந்த அளவிற்கு இல்லாநிலையதாகும் (to the extent of such inconsistency be void), என்று கூறுகிறது.

(2) ஷரத்து 13(2) - அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்ட பின்னர் இயற்றப்பட்ட சட்டங்களின் விளைவு (Effect of Post-constitutional Laws):

13(2)-ஆனது, குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகவோ அல்லது மீறுவதாகவோ, அரசு எந்தச் **சட்டத்தையும் (law)** இயற்றக் கூடாது மற்றும் இந்நிபந்தனைக்கு முரணாக (in contravention) சட்டம் ஏதேனும் இயற்றப்பட்டால், அது அம்முரண்பாடு அளவிற்கு இல்லாநிலையதாக்கப்படும் (void), என்று கூறுகி

றது. எனவே, அரசியலமைப்பு சட்டம் தொடங்கிய பின்னர், இயற்றப்பட்ட சட்டம் ஏதேனும், பகுதி III-ல் கூறப்பட்ட அடிப்படை உரிமைகளை பறிக்குமாறு அல்லது மீறுமாறு இயற்றப்பட்டால், அதன் வகைமுறைகள் எந்த அளவிற்கு அடிப்படை உரிமைகளை பறிக்குமாறு உள்ளதோ அல்லது மீறுமாறு உள்ளதோ அந்த அளவிற்கு இல்லாநிலையதாக்கப்படும்.

(3) ஷரத்து 13(3) - "சட்டம்" மற்றும் "அமலில் உள்ள சட்டம்" ஆகிய வற்றிற்குண்டான வரையறை (Definition of "law" and "laws in force"):

மேற்படி **ஷரத்துகள் 13(1) மற்றும் 13 (2)-ல்**, முறையே 'அமலில் உள்ள சட்டம்' மற்றும் 'சட்டம்' எனும் சொற்கள் காணப்படுகின்றன. அவை எவற்றை உள்ளடக்கியதாகும் என்பதற்குண்டான விளக்கத்தை **ஷரத்து 13(3)** கூறுகிறது. அதன்படி முதலில், (a) 'சட்டம்' என்பதில் இந்திய எல்லைக்குள் சட்டத்தின் வலிமை கொண்ட மேலாணை, உத்திரவு, துணை-சட்டம், விதி, ஒழுங்கு முறை விதி, அறிக்கை, வழக்கம் அல்லது வழக்காறு ஆகியவை அடங்கும்.

(b) 'அமலில் உள்ளசட்டம்' என்பதில் இந்திய அரசியலமைப்பு தொடங்கப்படுவதற்கு முன்பு ஒரு சட்டமன்றத்தால் அல்லது தகுதி வாய்ந்த பிற அதிகார அமைப்பால் இயற்றப்பட்ட மற்றும் முன்னதாக நீக்கப்படாத சட்டங்கள் அடங்கும். அப்படிப்பட்ட சட்டம் அல்லது அதன் ஒரு பகுதி அச்சமயத்தில் அனைத்து அல்லது ஒரு குறிப்பிட்ட பகுதியில் செயல்பாட்டில் இல்லாமல் இருந்தாலும், அதுவும் அமலில் உள்ள சட்டத்தில் அடங்கும்.

(4) ஷரத்து 13(4) - அரசியலமைப்பு சட்ட திருத்தத்திற்கு பொருந்தாது:

ஷரத்து 13(4) -ன்படி, மேற்கண்ட ஷரத்து 13-ல் உள்ள எதுவும் ஷரத்து 368-ன் கீழான ஒரு அரசியலமைப்புச் திருத்தச் சட்டத்திற்கு பொருந்தாது. அதாவது ஒரு அரசியலமைப்புச் திருத்தச் சட்டம் மேற்படி 'சட்டம்' என்பதில் உள்ளடங்காது. எனவே, ஷரத்து 368-ன் கீழ் செய்யப்பட்ட ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தை, ஷரத்து 13(2) பாதிக்காது. எனவே, பாராளுமன்றமானது, அடிப்படை உரிமைகள் உள்ளிட்ட அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளை திருத்த சட்டமியற்றலாம். ஆனால், அது அரசியலமைப்பின் கட்டமைப்பை (basic structure of the Constitution) மாற்ற முடியாது, என்று **Keshvanand Bharti v. State**

of Kerala[1] வழக்கில் கூறப்பட்டது.

ஒளிமறைப்புக் கோட்பாடு (Doctrine of Eclipse):

அரசியலமைப்புச் சட்டம் தொங்குவதற்கு முன்பு இயற்றப் பட்ட சட்டத்திற்கு (Pre-constitutional Law) மேற்படி ஒளி மறைப்பு கோட்பாடு பொருந்துகிறது.

அதாவது ஷரத்து 13 (1)-ன் கீழ் மேற்படி கோட்பாடு இயங்குகிறது. ஒரு சட்டம் அது இயற்றப்பட்ட ஆரம்ப காலத்தில் செல்லக் கூடியதாக இருந்து, அரசியலமைப்புச் சட்டம் தொடங் கிய பின்னர், அது அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடாக உள்ளது என்ற காரணத்தால் செல்லாததானால், அது செய லாற்றலற்றதாக (unenforceable) உள்ளதே தவிர, இறந்து விட வில்லை (not dead). எனவே, அச்சட்டத்தில் உள்ள அம்முரண் பாட்டை, பின்னர் ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் வாயிலாக நீக்கிவிடலாம். இதனால் மேற்படி குறைபாடுள்ள அச்சட்டம் அக்குறை நீக்கி செயலாற்றல் உடையதாக ஆகி விடுகிறது. இத்தத்துவம்தான் **ஒளிமறைப்புக் கோட்பாடு (Doctrine of Eclipse)** எனப்படுகிறது.

இக்கோட்பாட்டிற்கு ஏன் இந்தப் பெயர் வந்ததென்றால், ஆரம்பத்தில் செல்லக் கூடியதாக உள்ள ஒரு சட்டம், அரசியல மைப்புச் சட்டம் தொடங்கிய பின்னர், அடிப்படை உரிமை களுக்கு முரண்பாடானால், அச்சட்டத்தின் மீது 'அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடு' எனும் நிழல் (கிரஹணம்) படிந்து, அதன் ஒளி மறைந்து செயலாற்றலற்றதாகிவிடுகிறது. பின்னர் பாராளுமன்றம் ஒரு அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தை கொண்டு வருவதின் வாயிலாக, அச்சட்டத்தில் உள்ள அம்முரண் பாடு எனும் நிழலை நீக்கிவிட்டால், அது மீண்டும் தனக்குரிய ஒளியை பெற்று செயலாற்றலுடையதாகிவிடுகிறது. அதாவது அச்சட்டத்திற்கு அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடு எனும் கிரஹணம் பிடித்து, பின்னர் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் நீங்குகிறது. எனவேதான், இக்கோட்பாடு, ஒளிமறைப்பு கோட்பாடு அல்லது **கிரஹணக் கோட்பாடு** எனப்படுகிறது.

இக்கோட்பாடு **Bhikaji v. State of M.P.**[2] எனும் வழக்கில்

1. AIR 1973 SC 1461
2. AIR 1955 SC 781

உச்ச நீதிமன்றத்தால் வகுக்கப்பட்டதாகும். இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, அரசியலமைப்பு சட்டம் தொடங்குவ தற்கு முன்பு 1947-ஆம் ஆண்டில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது. அச் சட்டத்தின் பிரிவு ஒன்று, மாநிலத்தின் மோட்டார் போக்குவரத்து வாணிகத்தை முற்றிலும் மாநில அரசே எடுத்துக் கொள்ள மாநில அரசுக்கு அதிகாரம் அளித்தது. அச்சட்டம் இயற்றப்படும் காலத்தில், அது செல்லத்தக்கதாகவே இருந்தது. ஆனால் 1950-ல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் இயற்றப்பட்ட பிறகு, அவ்வகை முறை, ஷரத்து 19(1)(g)-ன் கீழ் குடிமக்களுக்கு வழங்கப்பட்ட அடிப்படை உரிமையான எந்தத் தொழிலை செய்யவும், அல்லது எந்த வேலையை, வியாபாரத்தை அல்லது வாணிகத்தை செய்யவும் உள்ள உரிமையை மீறுவதாக உள்ளது என்று குறை கூறப்பட்டது. ஆனால், ஷரத்து 19(6)-ஆனது, 1951-ல் கொண்டு வரப்பட்ட முதல் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் வாயிலாக, **"எந்த வாணிகத் தையும் ஏகபோகமாக செய்வதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கப் படுகிறது"** என்று திருத்தப்பட்டது. இதனால், குறை கூறப்பட்ட மேற்படி சட்டத்தின் மீதிருந்த நிழலை மேற்படி திருத்தச் சட்டம் அகற்றி, அதனை அனைத்து விதமான குறைகள் மற்றும் ஊனங் களிலிருந்தும் விடுவிக்கிறது, என உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே, அச்சட்டம் குடிமக்கள் மற்றும் குடிமக்கள் அல்லாதவர்கள் அனைவருக்கும் எதிராக செயல்படக் கூடியதாகிறது. அச்சட்டம் அடிப்படை உரிமைகளுடன் முரண்பாடு என்பதால் சில காலம் மறைக்கப்பட்டிருந்தது; அந்த ஒளிமறைப்பு நீக்கப்பட்டவுடன், அவ்வாறு நீக்கப்பட்ட தினத்திலிருந்து மேற்படி சட்டம் செயல் படத் துவங்குகிறது, என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்ட பின்னர் இயற்றப்படும் ஒரு சட்டத்திற்கு ஒளிமறைப்புக் கோட்பாடு பொருந்துமா? (Does the Doctrine of Eclipse apply to a Post-constitutional law?):

அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்ட பின்னர் இயற்றப்படும் சட்டங்களின் நிலை குறித்து **ஷரத்து 13(2)** கூறுகிறது. அதன்படி, குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பறிப் பதாகவோ அல்லது மீறுவ தாகவோ, அரசு எந்தச் **சட்டத்தையும் (law)** இயற்றக் கூடாது மற்றும் இந்நிபந் தனைக்கு முரணாக (in contravention) சட்டம் ஏதேனும் இயற்றப்பட்டால், அது அம் முரண்பாடு அளவிற்கு இல்லா நிலையதாக்கப்படும் (void) என்று கூறுகிறது. ஒளிமறைப்பு கோட்பாடு பொருந்துவதற்கு, ஒரு சட்டம்

அது இயற்றப்பட்ட ஆரம்ப காலத்தில் செல்லத்தக்கதாக இருக்க வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் தொடங்கப்பட்ட பின்னர், அச்சட்டம் அடிப்படை உரிமைகளுடன் முரண்பட்டதாக இருப்பின், அது செல்லாததாகி விடுகிறது. அம்முரண்பாடு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் நீக்கப்பட்டுவிட்டால் அச்சட்டம் மீண்டும் செல்லக் கூடியதாகி விடுகிறது. இதுவே நாம் கண்ட ஒளிமறைப்புக் கோட்பாட்டின் சாரமாகும். எனவே, ஒளி மறைப்பு கோட்பாடு அரசியலமைப்பு தொடங்குவதற்கு முன்பு இயற்றப்பட்ட சட்டங்களுக்கே ஷரத்து 13 (1)-ன்படி பொருந்துவ தாகும். அரசியலமைப்புச் சட்டம் தொடங்கிய பின்பு இயற்றப்பட்ட சட்டங்களுக்கு பொருந்தாது. ஏனெனில், அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு பிறகு இயற்றப்படும் சட்டங்கள் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகவோ அல்லது மீறுவதாகவோ இருப்பின், அவை ஆரம்ப முதலே இல்லா நிலையதாகும். அவ்வாறு இல்லா நிலையான சட்டங்களை பின்னர் ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தினால், அதன் இல்லாநிலை எனும் நிலைப்பாட்டை நீக்கி, அதனை செல்லக் கூடியதாக ஆக்க முடியாது.

Deepchand v. State of U.P.[1] எனும் வழக்கில், ஷரத்து 13(2)-ன்படி, அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு பின்னர் இயற்றப் பட்ட ஒரு சட்டம், அடிப்படை உரிமைகளுக்கு முரணாக இருப் பின், அது தொடக்க முதலே இல்லாநிலையதாகிவிடும் (void *ab-initio*). இதற்கு ஒளிமறைப்பு கோட்பாடு பொருந்தாது. மேலும் அச்சட்டத்தை பின்னர் ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் திருத்தியமைக்கவும் முடியாது. சுருங்கக்கூறின் அச்சட்டம் இறந்து பட்ட நிலையை அடைகிறது. 'அடிப்படை உரிமைகளுடன் முரண் பாடு' என்பதால் மறைக்கப்பட்டிருக்கவில்லை, என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

மேற்கண்ட வழக்கின் தீர்ப்பினை உச்ச நீதிமன்றம் மீண்டும் **Mahendra Lal Jain v. State of U.P.**[2] எனும் வழக்கில் பின்பற்றி, ஷரத்து 13(1)-ன்படி, அரசியலமைப்பு தொடங்குவதற்கு முன் இயற்றப்பட்ட சட்டங்களுக்கு மட்டுமே ஒளிமறைப்பு கோட்பாடு பொருந்தும் என்றும், ஷரத்து 13(2)-ன்படி அரசியலமைப்பின் தொடக்கத்திற்கு பிறகு இயற்றப்பட்ட சட்டங்களுக்கு ஒளிமறைப்பு கோட்பாடு பொருந்தாது என்று கூறியது. மேலும் அரசியலமைப்

1. AIR 1959 SC 648
2. AIR 1963 SC 1019

பிற்கு முன் இயற்றப்பட்ட சட்டத்திற்கும், அரசியலமைப்பிற்கு பின் இயற்றப்பட்ட சட்டத்திற்கும் தெளிவான **வேறுபாடு (Distinction between Pre-constitutional and Post-constitutional statutes)** உண்டு, என்றும் கூறியது. அதன்படி, அரசியலமைப்பிற்கு முன் இயற்றப்பட்ட சட்டத்தின் இல்லாநிலைமை (voidness) அரசியலமைப்பு தொடங்கப்பட்ட தினத்திலிருந்துதான் ஆரம்பமாகுமே தவிர, அச்சட்டம் தொடங்கப்பட்டதிலிருந்தே இல்லாநிலையதாகாது. (void *ab-initio*). ஆனால், அரசியலமைப்பிற்கு பின் இயற்றப்பட்ட சட்டமோ, தொடக்கம் முதலே இல்லாநிலையதாகி, அதன் பிறகு அச்சட்டம் எதற்காகவும் நிலை பெறாது.

ஆனால், முன் கண்ட இரு வழக்குகளின் முடிவினையும் உச்ச நீதிமன்றம், **State of Gujarat v. Sri Ambika Mills**[1] எனும் வழக்கில் மாற்றியமைத்தது. அதன்படி, சில விதிவிலக்கான சூழல்களில் ஒளி மறைப்புக் கோட்பாடு, அரசியலமைப்பிற்கு பின்னர் இயற்றப்படும் சட்டத்திற்கும் பொருந்தும் எனப்பட்டது. அதாவது, அரசியலமைப்பிற்கு பின்னர் இயற்றப்பட்ட சட்டங்கள் அடிப்படை உரிமைகளுக்கு முரணாக இருப்பின் அவை இல்லாநிலையது எனும் நிலை மாறி, அச்சட்டங்களும் சில சூழல்களில் செல்லும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

33. Doctrine of Severability- Write short notes. (பிரிக்கத்தக்கதன்மைக் கோட்பாடு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

What is the effect of post-constitutional laws which are inconsistent with the Constitution? How can the Doctrine of Severablity be applied to determine the validity of such laws?(அரசமைப்புச் சட்டம் துவங்கிய பிறகு இயற்றப்பட்ட சட்டங்கள், அரசமைப்புச் சட்டத்திற்கு முரண்பாடாக இருப்பதால் ஏற்படும் விளைவுகள் யாவை? இம்மாதிரியான சட்டங்கள் செல்லுபடியானவை என்பதை நிர்ணயிக்க, பிரித்தெடுக்கும் கோட்பாடு எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது?)

முன்னுரை:

இயற்றப்பட்ட சட்டத்தின் ஒரு வகைமுறையானது

1. AIR 1974 SC 1300

அரசியலமைப்பற்றது என்று அறிவிக்கப்படும் பொழுது, அந்த இயற்றப்பட்ட சட்டம் முழுவதும் இல்லாநிலையதா அல்லது அரசியலமைப்பற்றது என்று அறிவிக்கப்பட்ட அந்த வகைமுறை மட்டும் இல்லா நிலையதா என்ற வினா இங்கு எழுகிறது. இதற்கு விடையளிக்க உச்ச நீதிமன்றம் **பிரித்தெடுக்கும் கோட்பாட்டை (Doctrine of Severability)** அறிமுகப்படுத்தியது.

பிரித்தெடுக்கும் கோட்பாடு (Doctrine of Severability) -விளக்கம்:

அரசியலமைப்பின்படி உள்ள ஒரு சட்டத்திலிருந்து, கேடுடைய (குறையுடைய) ஒரு குறிப்பிட்ட வகைமுறையை மட்டும் பிரித்தெடுக்க முடியுமென்றால், அந்த வகைமுறையை மட்டும் இல்லாநிலையதாக அறிவிக்க முடியும் என்பதே மேற்படி கோட்பாடு விளக்குவதாகும். எனவே, இங்கு அச்சட்டம் முழுவதையும் (whole Act) இல்லாநிலையதாக அறிவிக்க வேண்டியதில்லை. ஷரத்து 13 (1)-ஆனது, "எந்த அளவிற்கு முரணாக உள்ளதோ அந்த அளவிற்கு இல்லாநிலையதாகும்" என்று கூறுகிறது. அதாவது, ஒரு சட்டத்தின் சில வகைமுறைகள், அரசியலமைப்பற்றதானால், அவற்றை மட்டும் இல்லாநிலையதாக நீதிமன்றம் கவனத்தில் கொள்ளும் என்று **Motor General Traders v. State of A.P.**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

A.K.Gopalan v. State of Madras[2] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றமானது, 1950-ஆம் ஆண்டு தடுப்புக் காவல் சட்டத்தின் 14வது பிரிவை வரம்பு மீறியதாக (ultra-vires) அறிவித்தது. இதனால் அப்பிரிவு இல்லா நிலையதாக்கப்பட்டு நீக்கப்பட்டு விட்டது. இவ்வாறு ஒரு சட்டத்தின் பிரிவு ஒன்றை நீக்கியது, அச்சட்டம் முழுவதையும் நீக்கியதாகாது. மேற்படி பிரிவு 14-ஐ தவிர்த்து அச்சட்டம் முழுவதும் செல்லத்தக்கதே என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

இம்முடிவு, **State of Bombay v. F.N.Balsara**[3] எனும் வழக்கிலும் பின்பற்றப்பட்டு, "இல்லாநிலையது என்று அறிவிக்கப் பட்ட ஒரு சட்டத்தின் வகைமுறைகள், அச்சட்டம் முழுவதையும் பாதிக்காது" என்று கூறப்பட்டது.

1. (1984) 1 SCC 222
2. AIR 1950 SC 27
3. AIR 1951 SC 318

பிரித்தெடுக்கும் கோட்பாட்டிற்கு விதிவிலக்கு (Exception):

இக்கோட்பாடு ஒரு விதிவிலக்கிற்கு உட்பட்டு செயலுறுகின்றது. அதாவது, ஒரு சட்டத்தின் அரசியலமைப்பற்ற வகை முறையானது அச்சட்டத்தின் அரசியலமைப்பிற்குட்பட்ட பிற வகைமுறைகளுடன் நெருங்கிய விதத்தில் கலந்தும் பிணைந்தும் ஒன்றிலிருந்து மற்றொன்றை பிரித்தெடுக்க முடியாதபடி இருப்பின், அச்சட்டம் முழுவதையுமே இல்லாநிலையதாக நீதி மன்றங்கள் கருதும். அவ்வாறு கலந்து இருக்கும் சட்டத்தின் வகை முறையை பிரித்தெடுக்க இயலாதெனில், அச்சட்டம் முழுவதுமே நீக்கப்படும் என **Romesh Thapper v. State of Madras**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது. இக்கோட்பாடானது **R.M.D.C. v. Union of India**[2] வழக்கில் மேலும் விரிவாக்கப்பட்டது.

33A. "All the laws in force immediately before the commencement of the Constitution in so far as they are inconsistent with Fundamental Rights to that extent they are void". Explain the doctrine of Eclipse and Severability.) ("அரசமைப்புச் சட்டம் துவங்குவதற்கு முன்னால் செயலில் உள்ள எல்லாச் சட்டங்களும் அடிப்படை உரிமைகளுக்கு முரண்பாடாக எவ்வளவு தூரம் உள்ளதோ அவ்வளவு தூரத்திற்கு அவைகள் செல்லாது". ஒளிமறைப்புச் கோட்பாட்டையும், பிரிக்கத்தக்க தன்மைக் கோட்பாட்டையும் விளக்குக.)

(அல்லது)

With reference to pre-constitution statutes and post - Constitution statutes, explain the doctrine of severability and doctrine of eclipse. (அரசமைப்புச் சட்டத்திற்கு முன் மற்றும் பின் இயற்றப்பட்ட சட்டங்கள் தொடர்பாக பிரித்தெடுக்கும் கோட்பாடு மற்றும் மறைதல் கோட்பாடு ஆகியவற்றை விளக்குக.)

(வினா எண்கள் 32 மற்றும் 33-ஐ சேர்த்துப் படிக்கவும்.)

34. Doctrine of Ultravires - Write short notes. (வரம்பு மீறல் கோட்பாடு - குறுகிய விடை தருக.)

அரசியலமைப்புச் சட்டத்தினால் பாராளுமன்றத்திற்கும்

1. AIR 1950 SC 124
2. AIR 1957 SC 628

சட்டமன்றத்திற்கும் சட்டமியற்றும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அவை தங்களுக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தினை மீறி ஒரு சட்டத்தினை இயற்றும் பொழுது, அதாவது சட்டத்தை இயற்றுவதற்கு அதிகாரமளிக்கும் அரசியலமைப்புச் சட்டத்தையே மீறி சட்டமியற்றும் பொழுது, அச்சட்டம் வரம்பு மீறியதாகிறது. எனவே, வரம்பு மீறல் கோட்பாட்டின்படி, அரசியலமைப்பு சட்டத்தினை மீறியவை என்று நீதிமன்றத்தால் அறிவிக்கப்படும்.

வரம்பு மீறல் கோட்பாட்டின் சிறப்பியல்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். (1) சட்டமியற்றுபவர்கள் தங்களுக்களிக்கப்பட்ட அதிகாரத்தை மீறி சட்டமியற்றும் பொழுது, அச்சட்டங்கள் நீதித்துறையினரால் இல்லாநிலையது என்று கூறப்படுகின்றன. (2) இக்கோட்பாடு, முரண்தடை, முன்தீர்ப்புத் தடை போன்றவை போல் பரந்த அளாவுகையை உடையது. (3) நிர்வாக அதிகாரங்களும் இதன் மூலம் கட்டுப்படுத்தப் படுகின்றன.

35. Doctrine of Waiver - Write short notes. (தளர்த்தீடு கோட்பாடு - குறுகிய விடை தருக.)

தளர்த்தீடு என்றால் விட்டுக் கொடுப்பது என்பதாகும். இங்கு ஒரு குடிமகன் தனது அடிப்படை உரிமைகளை விட்டுக் கொடுப்பதுதான் தளர்த்தீடாகிறது. ஆனால், இது சாத்தியமாகாது என பின்வரும் வழக்கொன்றில் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

Bashesher Nath v. Income Tax Commissioner[1] எனும் வழக்கில் வருமான வரிச் சட்டம் பிரிவு 5(1)-ன் கீழ் **Bashesher Nath** என்பவர், தன் வருமானத்தின் அதிகபட்ச தொகையை மறைத்ததாக கூறப்பட்டார். அதன்பின், 1954-ல் அவர், ரூபாய் மூன்று இலட்சம் அபராதத்துடன் வருமான வரி பாக்கியை மாதத் தவணைகளில் செலுத்துவதாக வருமான வரி ஆணையருடன் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டார். ஆனால், 1955-ஆம் ஆண்டு **Muthiah v. Income Tax Commissioner**[2] எனும் வழக்கில் மேற்படி பிரிவு 5(1)-ஆனது, அரசியலமைப்புச் சட்டத்தின் 14-வது ஷரத்தின் வரம்பை மீறுவதாக உள்ளது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. உடனே, **Bashesher Nath** மேற்படி பிரிவு 5(1)-ஆனது செல்லாது என்று அறிவிக்கப்பட்டுவிட்டதால், தனக்கும் வருமான வரி ஆணையருக்

1. AIR 1959 SC 149
2. AIR 1956 SC 269

கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கையும் செல்லாது என்று வாதிட்டார். பிரிவு 5(1) செல்லாததாக ஆனாலும், எப்பொழுது வரி பாக்கியை செலுத்தி விடுகிறேன் என்று ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதோ, அப்பொழுதே மேற்படி **Bashesher Nath** ஒரத்து 14-ன் கீழான தனது அடிப்படை உரிமையை தளர்த்தீடு செய்துவிட்டதாக அல்லது விட்டுக் கொடுத்து விட்டதாக பொருள்படும் என்று வருமான வரி ஆணையரால் கூறப்பட்டது.

ஆனால், அரசியலமைப்பின் III-வது பகுதியின் வாயிலாக அளிக்கப்பட்டுள்ள எந்த அடிப்படை உரிமைகளையும் தளர்த்தீடு செயய ஒரு குடிமகனால் ஆகாது என்றும், இவ்வுரிமைகள் தனிப் பட்ட நபரின் ஆதாயத்திற்காக மட்டும் அளிக்கப்படவில்லை. மாறாக, இது பொதுக் கொள்கையின் அடிப்படையிலும் பொது மக்களின் நலனுக்காகவும், அரசியலமைப்பால் அரசின் மீது சுமத்தப்பட்டுள்ள ஒரு கடப்பாடு என்றும், எந்த நபரும் அரசின் அக்கடப்பாட்டினை விடுவிக்க முடியாது என்றும், ஏனெனில் நாட்டின் பெரும்பகுதி மக்கள் கல்வி வளமை, அறிவு போன்ற வற்றில் பின்தங்கியும், அரசியல்ரீதியாக தங்களுக்கு அளிக்கப் பட்டுள்ள உரிமைகள் குறித்து எதனையும் அறியாமலும உள்ளனர் என்றும், உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும், இச் சூழ்நிலைகளில் அவர்களுக்கு எதிராக அடிப்படை உரிமைகளை காப்பது இந் நீதிமன்றத்தின் கடமையாகும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

எனவே, **Bashesher Nath** தனது அடிப்படை உரிமைகளை தளர்த்தீடு செய்தவராகக் கூற முடியாது என்று கூறப்பட்டது. இதனால், மேற்படி கோட்பாடு அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் குறித்த III-வது பகுதியின் மீது எவ்வித தாக்கத்தையும் செயல்பாட்டையும் கொண்டிருக்கவில்லை என்று கூறுவதுதான் சரியாகும்.

நீதிமுறை மறு ஆய்வு கோட்பாடு
(அல்லது)
நீதிமுறை மறு சீராய்வுக் கோட்பாடு
[Doctrine of Judicial Review]

36. Judicial Review - Write Short notes. (நீதிமுறை மறு ஆய்வு- குறுகிய விடை தருக.)

(அல்லது)

What is the extent to which Indian Constitution can be reviewed? (இந்திய அரசு அமைப்புச் சட்டத்தை எந்த அளவுக்கு மறு ஆய்வு செய்ய முடியும்?)

(அல்லது)

What is Judicial Review? Can the Constitutional Amendments be reviewed by the Supreme Court? If so, under what basis? Dicuss, referring to various Supreme Court Cases and Constitutional Amendments. (நீதிமுறை மறு சீராய்வு என்றால் என்ன? அரசமைப்பு சட்ட திருத்தங்களை உச்ச நீதிமன்றம் சீராய்வு செய்ய முடியுமா? அப்படி யென்றால், எந்த அடிப்படை மற்றும் பல்வேறு உச்ச நீதிமன்ற வழக்கு களையும் அரசமைப்பு சட்ட திருத்தங்களையும் குறிப்பிட்டு விவாதிக்க.)

(அல்லது)

Discuss the application of the Doctrine of Judicial Review under the Indian Constitution. Can an amendement of the Constitution be reviewed? (இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் நீதிமுறை மறு சீராய்வு கோட்பாட்டின் பொருத்தத்தை ஆராய்க. அரசமைப்புச் சட்டத்தில் ஒரு சட்டத் திருத்தத்தை மறு சீராய்வு செய்ய முடியுமா?)

நீதிமுறை மறு சீராய்வு கோட்பாடு (Doctrine of Judicial Review):

பொதுவாக, எழுதப் பெற்ற அரசியலமைப்பினை கொண்டுள்ள நாடுகளில் எல்லாம், இந்த **"நீதிமுறை மறு ஆய்வு அல்லது மறு சீராய்வுக் கோட்பாடு"** உள்ளது. ஒரு அரசியலமைப்பு எழுத்து வடிவில் வெளியிடப் படுவதே அதன் மேலாண்மை **(Supremacy of Constitution)** பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற் காகத்தான். ஏனெனில் இங்கு நாட்டின் உயர் சட்டமாக **(Supreme Law of the Land)**, அரசியலமைப்புச் சட்டம் கருதப்படுகிறது. எனவே, அரசியமைப்பிற்கு முரணாக சட்டங்கள் இயற்றப் படுவதை தடுக்க வேண்டுமெனில், அந்த அரசியலமைப்புச் சட்டத்தில் என்னவெல்லாம் கூறப்பட்டுள்ளது என்பது எழுத்து வடிவில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் அரசியலமைப் பிற்கு முரணாக விளங்கும் சட்டங்களை கண்டறிய முடியும். இப்படி முரணாக விளங்கும் சட்டங்களை கண்டறிந்து அதை

செல்லாதது அல்லது இல்லாநிலையது **(void)** என்று அறிவிக்கும் அதிகாரம் உயர் மற்றும் உச்ச நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதாவது அந்நீதிமன்றங்கள் சம்பந்தப்பட்ட சட்டத்தை நீதிமுறையில் மறு ஆய்வு செய்து, அது அரசியலமைப்பிற்கு உட்பட்டு விளங்குகிறதா அல்லது முரண்பட்டு விளங்குகிறதா என்பதைக் கண்டறிந்து, அது முரண்பட்டு இருந்தால், அதனை இல்லா நிலையது என்று விளம்புகிறது. இதுவே, நீதிமுறை மறு சீராய்வுக் கோட்பாடு எனப்படுகிறது.

நீதிமுறை மறு சீராய்வு கோட்பாடு - தோன்றிய விதம் (Origin) (அல்லது) அமெரிக்கா அய்க்கிய நாடுகளில் நீதிமுறை மறு சீராய்வுக் கோட்பாட்டின் நிலை:

இக்கோட்பாட்டின் பிறப்பிடம் எழுதப்பெற்ற அரசியலமைப்பைக் கொண்ட அமெரிக்க அய்க்கிய நாடுகள் ஆகும். ஆனால், அமெரிக்க அரசியலமைப்பில், இக்கோட்பாடு குறித்து எந்த வகைமுறையும் செய்யப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும். இந்நிலையில், அமெரிக்க உச்ச நீதிமன்றம், தன்முன்னர் எழுந்த **Marbury v. Madison**[1] என்ற வழக்கில், தனக்கு இந்த நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் உண்டு, என்பதை தெளிவுபடுத்தியது. **தலைமை நீதியரசர் ஜார்ஜ் மார்ஷல்** அவர்கள், "எழுதப்பெற்ற அரசியலமைப்பை வடிவமைத்துள்ள அனைவரும் நிச்சயமாக தங்களை நாட்டின் அடிப்படை மற்றும் மிக உயர்ந்த சட்டத்தை அமைத்தவர்களாக கருதுகிறார்கள்; அதன் விளைவாக, அப்படிப்பட்ட ஒவ்வொரு அரசாங்கத்தின் கோட்பாடும், சட்டமன்றத்தின் ஒரு சட்டம், அரசியலமைப்பிற்கு முரண்பட்டதானால், இல்லாநிலையது என்பதாக இருக்க வேண்டும்,"[1] என்று மேற்படி வழக்கின் பொழுது ஆணித்தரமாக குறிப்பிடுகிறார். அமெரிக்க அரசியலமைப்பு மேலாண்மை வாய்ந்ததாகும். எனவே, அரசியலமைப் பிற்கும் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டங்களுக்கும் இடையே முரண்பாடு ஏதேனும் எழுமானால், நீதிமன்றங்கள் அச்சட்டங்களை அரசியலமைப்பற்றது என்றும்,

1. I Cranch 137 (1803)

2. "certainly all those who have framed the written Constitution contemplate them as forming the fundamental and paramount law of the nation and consequently, the theory of every such Government must be that an act of the Legislature, repugnant to the Constitution, is void" - Chief Justice George Marshall in **Marbury v. Madison.**

எனவே, இல்லாநிலையது என்றும் விளம்பும். இவ்வாறு அமெரிக் காவில் நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் சிறப்புடன் விளங்குகிறது.

பிரிட்டனில் நீதிமுறை மறு சீராய்வு கோட்பாட்டின் நிலை:

கிரேட் பிரிட்டனில் எழுதப்பெற்ற அரசியலமைப்பு கிடை யாது. எனவே, இங்கு பாராளுமன்றம்தான் மேலாண்மை வாய்ந்த தாகும்; அரசிய லமைப்பு அல்ல (Parliament is Supreme and not Constitution). இதனால், பாராளுமன்றம் இயற்றும் சட்டம் எதையும், நீதிமன்றம் இல்லாநிலையதென விளம்ப முடியாது. இங்கு, நீதித்துறையின் பணியானது, நிர்வாகத் துறையின் செயல்கள் சட்டத்துடன் இயைந்ததுள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவ தாகும். எனவே, பிரிட்டனில் நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் கிடையாது.

இந்திய அரசியலமைப்பில் நீதிமுறை மறு சீராய்வு கோட்பாட்டின் பொருத்தம் (Application of the Doctrine of Judicial Review under the Indian Constitution) (அல்லது) எந்த அளவிற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மறு ஆய்வு செய்ய முடியும்?

இந்திய நாடு, எழுதப்பெற்ற அரசியலமைப்பை கொண்ட தாகும். எனவே, இங்கு அரசியலமைப்புதான் மேலாண்மை வாய்ந்ததாகும்; மேலும் நாட்டின் உயர்ந்த சட்டமாகும். இந்திய அரசியலமைப்பின் மேலாண்மையை நிலைநிறுத்த, உயர் நீதிமன்றங் களுக்கும் உச்ச நீதிமன்றத்திற்கும் நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் (Power of Judicial Review) வழங்கப்பட்டுள்ளது. இந்த அதி காரத்தின் மூலம், சட்ட மன்றம் இயற்றிய சட்டங்களோ அல்லது நிர்வாகத் துறையின் முடிவுகளோ, இந்திய அரசியலமைப்பு சட்ட வகைமுறைகளுக்கு முரண்பட்டதாக இருப்பதாக உயர் நீதிமன்றங்களோ அல்லது உச்ச நீதிமன்றமோ கண்டறிந்தால், அவற்றை செல்லாது மற்றும் இல்லா நிலையது என்று அறிவிக்கும் ஆற்றலை பெற்றுள்ளன. நீதிமுறை மறு சீராய்வு அதிகாரமானது, சட்டங்களையும் மற்றும் அரசு செயல்பாடுகளையும் அரசியல மைப்பிற்கு உட்பட்ட தன்மையின் அடிப்படையில் பரிசோதித் தறியும் தன்மை பெற்றதாகும். அரசாங்கம் சட்டத்திற்கு உட் பட்டதாகுமே தவிர, சட்டத்திற்கு மேற்பட்டதல்ல என்பதை அறிவிப்பதற்காக, அரசியலமைப்பு எனும் தாயின் வயிற்றிலிருந்து பிறந்த ஒரு சிசுவாக நீதிமுறை மறு சீராய்வு கோட்பாடு இந்தியாவில் போற்றப்படுகிறது.

A.K.Gopalan v. State of Madras[1] எனும் வழக்கில், நீதிமன்றமானது அரசியலமைப்பை நிலைநிறுத்துவதாக உறுதி மொழி **(Oath)** எடுத்துள்ளது. எனவே, அரசியலமைப்பிற்கு முரணாக இயற்றப்படும் சட்டங்கள், அரசியலமைப்பற்றது என்றும், எனவே, இல்லாநிலையதென என்றும் விளம்பக் கடமைப்பட்டதாகும், என்று உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

Keshavanand Bharti v. State of Kerala[2] எனும் வழக்கில் **அரசியலமைப்பின் மேலாண்மையும், Indira Nehru Gandhi v. Raj Narain**[3] எனும் வழக்கில், நீதிமன்றங்களின் **நீதிமுறை மறு சீராய்வு அதிகாரமும்**, அரசியலமைப்பு அடிப்படை அம்சங்களின் **(Basic Structure or Basic features of Constitution)** பகுதி களாகும் என்று உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்பட்டது.

அமெரிக்க அரசியலமைப்பில், நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் குறித்து எதுவும் கூறப்படவில்லை என்று முன்னர் கண்டோம். ஆனால், இந்திய அரசியலமைப்பில், நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் குறித்து **ஷரத்து 13(2)-ன்** கீழ் வெளிப் படையாக கூறப்பட்டுள்ளது. அச்ஷரத்தின்படி, குடிமக்களின் அடிப்படை உரிமைகளை பறிப்பதாகவோ அல்லது மீறுவ தாகவோ, அரசு எந்தச் சட்டத்தையும் இயற்றக் கூடாது மற்றும் இந்நிபந்தனைக்கு முரணாக சட்டம் ஏதேனும் இயற்றப்பட்டால், அது அம்முரண்பாடு அளவிற்கு இல்லாநிலையதாக்கப்படும், என்று கூறுகிறது. மேலும், இது அமலில் உள்ள சட்டங்களுக்கும் (existing laws) பொருந்தக் கூடியதாக **ஷரத்து 13(1)** வகை செய்கிறது. இதன்படி, அரசியலமைப்பு தொடங்குவதற்கு உடன் முன்பாக, இந்திய எல்லைக்குள் அமலில் உள்ள அனைத்து சட்டங் களும், இந்தப் பகுதியில்[4] உள்ள வகைமுறைகளுடன் எந்த அளவிற்கு முரண்பட்டதாக உள்ளதோ அந்த அளவிற்கு இல்லாநிலையதாகும், என்று கூறுகிறது.

மேற்கண்ட ஷரத்து தவிர, ஷரத்துகள் 32, 136, 226 மற்றும் 227 ஆகியவைவற்றாலும் நீதிமுறை மறு சீராய்வு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

---

1. AIR 1950 SC 27
2. AIR 1973 SC 1461
3. AIR 1975 SC 2299
4. அடிப்படை உரிமைமைகள் குறித்த மூன்றாவது பகுதி

நீதிமுறை மறு சீராய்வு கோட்பாட்டின் மீதான தடை (Restriction on the Doctrine of Judicial Review):

நீதிமுறை மறு சீராய்வு கோட்பாடு, இந்தியாவில் மேற் கண்டவாறு மிக்க சிறப்புடன் இருந்தாலும், அதன் மீது ஒரு முக்கிய தடையை **ஷரத்து 31-B** விதிக்கிறது. அதன்படி, ஒன்பதாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள் அல்லது அதன் வகைமுறைகள் எதுவும், அச்சட்டம், ஒழுங்குமுறை விதி அல்லது வகைமுறையானது அரசியலமைப்பின் மூன்றாவது பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளுக்கு முரணாகவோ அல்லது அவற்றை பறிப்பதாகவோ அல்லது மீறுவதாவோ உள்ளது எனும் அடிப் படையில் இல்லாநிலையதாகவோ அல்லது இல்லாநிலையதாக ஆகிவிட்டது என்றோ கருதப்படக் கூடாது மற்றும் நீதிமன்றத்தின் அல்லது தீர்ப்பாயத்தின் எந்த தீர்ப்புரை, தீர்ப்பாணை அல்லது உத்திரவில் முரணாக யாது கூறப்பட்டிருப்பினும், அப்படிப்பட்ட சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை விதிகள், தகுதி வாய்ந்த எந்த சட்டமன்றத்தாலும் அவற்றை நீக்கும் மற்றும் திருத்தும் அதிகாரத்திற்கு உட்பட்டு, அமலிலேயே தொடர்ந்து இருக்கும், என்று கூறுகிறது. அதாவது, மேற்கண்ட நிலைப்பாட்டின் பொழுது, நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்தை பயன்படுத்த இயலாது. அவை, நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்திலிருந்து, **ஷரத்து 31-B**-ஆல் பாதுகாக்கப்படுகிறது.

State of Maharashtra v. Man Singh[1] எனும் வழக்கில், ஒரு சட்டம் அல்லது ஒழுங்குமுறை விதியானது அடிப்படை உரிமைகளை மீறுகிறது எனும் அடிப்படையில் நீதிமன்றத்தால் செல்லாததது என்று விளம்பப்பட்டு, ஆனால், பின்னர் அது அரசியலமைப்பின் ஒன்பதாவது அட்டவணையில் அது இயற்றப் பட்ட தேதி முதல் அமலுக்கு வரத்தக்கவகையில் முன்மேவு அதிகாரத்துடன் சேர்க்கப்பட்டால், அக்குறை நீக்கப்பட்டுவிடும் (அதாவது செல்லாதது என்ற குறை) மற்றும் அது **ஷரத்து 31-B**-ஆல் பாதுகாக்கப்படும், என்று உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

மேலும் **Tata Cellular v. Union of India**[2] எனும் மற்றொரு முக்கியமான வழக்கில், நீதித்துறையானாது, தனக்கு நீதிமுறை மறு

1. AIR 1978 SC 916
2. AIR 1996 SC 11 at 26

சீராய்வு வழங்கப்பட்டுள்ளதே என்று எல்லா விஷயங்களிலும் தனது மூக்கை நுழைத்து, செல்லாது என்று அறிவிக்க இயலாது; அதற்கென சில சுய கட்டுப்பாடுகளை அல்லது வரம்புகளை (self-restraints or limitations) பின்பற்ற வேண்டியுள்ளது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அவை,

1. முடிவெடுக்கும் அதிகாரம் ஒன்று, தனது அதிகாரத்தை மீறிச் செயல்பட்டுள்ளதா?

2. சட்டத் தவறு ஏதேனும் புரிந்துள்ளதா?

3. இயற்கை நீதி விதிகள் எதையும் மீறுகை புரிந்துள்ளதா?

4. எந்த நியாயமான தீர்ப்பாயமும் இதுவரை எடுக்காத ஒரு முடிவு எடுக்கப்பட்டுள்ளதா?

5. அதிகார துஷ்பிரயோகம் எதையும் செய்துள்ளதா?

மேற்கண்ட சுயகட்டுப்பாடுகளை அல்லது வரம்புகளை நீதிமன்றம் தனக்குத் தானே விதித்துக் கொண்டுதான், நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்தை பயன்படுத்த வேண்டுமேயொழிய, அதன் அதிகாரத்திற்கு வானமே எல்லையாகாது.

அரசியலமைப்பு சட்ட திருத்தங்கள் உச்ச நீதிமன்றத்தால் மறு சீராய்வு செய்யப்பட முடியுமா? (Can the Constitutional Amendments be reviewed by the Supreme Court?):

இந்தியாவில் பொருளாதார நிலை, அரசியலில் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்திய பிறகு , அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருவதில் பாராளுமன்றம் முனைப்பு காட்டியது. இந்நிலையில், சாதாரண சட்டங்கள் மட்டுமில்லாமல், ஒரு அரசியலமைப்புச் சட்ட திருத்தம் கூட, நீதிமன்றத்தின் மறு சீராய்விற்கு உட்பட்டதாகும் என்ற கருத்துகள் வேகமாகப் பரவின. **கோலக் நாத் வழக்கில்**[1], அடிப்படை உரிமைகளை பாதிக்குமாறு அமையும் அரசியலமைப்பு சட்ட திருத்தங்களை, மறு சீராய்வு செய்து, செல்லுபடியாதவை என உச்ச நீதிமன்றம் விளம்பலாம், எனப்பட்டது. **கேசவானந்த பாரதி வழக்கில்**[2], இதற்கும் ஒருபடி மேலாக, அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்களை [Basic fea-

1. Golak Nath v. State of Punjab AIR 1967 SC 1643
2. Keshavanand Bharti v. State of Kerala AIR 1973 SC 1461

tures (structure) of Constitution] பாதிக்குமாறு அமையும் சட்ட திருத்தங்களையும் மறு சீராய்வு செய்து, செல்லுபடியாதவை என்று அறிவிக்கலாம், எனப்பட்டது. கோலக் நாத் வழக்கைக் காட்டிலும், கேசவானந்த பாரதி வழக்கில் கூறப்பட்ட முடிவு, பரந்ததாக (wider) உள்ளது. எனவே, ஒரு அரசியலமைப்பு சட்ட திருத்தத் தையும் நீதிமுறை மறு சீராய்வு செய்ய முடியும். இங்கு நாம் மற்றொரு முக்கியமான வழக்கையும் காண வேண்டியுள்ளது. அது வருமாறு.

Indira Nehru Gandhi v. Raj Narain[1]

இவ்வழக்கில், 1975-ஆம் ஆண்டின் 39-வது அரசியலமைப்பு சட்ட திருத்தத்தால் நமது அரசியலமைப்பின் **ஷரத்து 329-A**-ல் புகுத்தப்பட்ட (4)வது உட்கூறின் [Clause (4) of Article 329-A] செல்லுதன்மை குறித்து ஆராயப்பட்டது. ஏனெனில், அது நமது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை (Basic structure of Constitution) அழிக்கும் வண்ணம் உள்ளதே காரணமாகும். மேற்படி உட்கூறு (4)-ஆனது, பிரதமரின் அல்லது பாராளுமன்ற சபாநாயகரின் தேர்தலை செல்லாது என்ற நீதிமன்றத்தின் உத்திரவு எதுவும் இல்லாநிலையதாகும், மற்றும் அது அனைத்து விஷயங் களைப் பொறுத்தும் இல்லாநிலையதாகவே தொடரும், அதற்கு விளைவு ஏதும் கிடையாது என்று கூறுகிறது. இந்த உட்கூறு, பிரதமர் அல்லது சபாநாயகரின் தேர்தல் தொடர்பான பிரச் சனைகளை தீர்ப்பதற்காக வேறு அதிகாரம் அல்லது அமைப்பை சட்டத்தால் ஏற்படுத்த பாராளுமன்றத்திற்கு அதிகாரம் வழங்கும் வண்ணம் உள்ளது. மேலும், அந்த அதிகாரத்தின் அல்லது அமைப்பின் முடிவை, நீதிமன்றத்தின் முன்னர் வழக்கிட்டு எதிர்க்க முடியாததாக ஆக்கி உள்ளது. இந்த உட்கூறு அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் பகுதிகளாக உள்ள சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல், மக்களாட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவற்றை மீறுவ தாக உள்ளதால், அரசியலமைப்பற்றது என்று உச்ச நீதிமன்றம், தனக்குள்ள நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்தைப் பயன்படுத்தி விளம்பியது. இந்த வழக்கில் நீதி முறை மறு சீராய்வு, மக்களாட்சி, சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல் மற்றும் சட்டத்தின் ஆட்சி ஆகியவை, அரசியலமைப்பின் அடிப்படை அம்சங்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டன. எனவே, அந்த அடிப்படை அம்சங்களை பறிக்கும் வண்ணம் இயற்றப்படும்

1. AIR 1975 SC 2299

அரசிய லமைப்பு சட்ட திருத்தம் அரசியலமைப்பற்றது என்றும், எனவே, இல்லா நிலையதென்றும் உச்ச நீதிமன்றத்தால் மறு சீராய்வின் பொழுது அறிவிக்கப் படத் தக்கதாகிறது. (மேற்படி **ஷரத்து 329-A**, பின்னர், 1978-ஆம் ஆண்டின் 44-வது அரசிய லமைப்பு சட்டத் திருத்தத்தால் நீக்கப்பட்டு விட்டது.)

Minarva Mills v. Union of India[1]

இது, அரசியமைப்பு சட்ட திருத்தத்தில் நீதிமுறை சீராய் வின் முக்கியத்துவத்தை விளக்கும் மற்றொரு சுவாரஸ்யமான வழக் காகும். இவ்வழக்கில், ஷரத்து 368-ன் (4)-வது மற்றும் (5)-வது உட் கூறுகளானது, அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பை அழிக்கும் வண்ணம் உள்ளதால், செல்லாதவை என்று உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்பட்டது. மேற்படி உட்கூறுகள், ஷரத்து 368-ல் 1976-ஆம் ஆண்டின் 42-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் 55-வது பிரிவால் சேர்க்கப்பட்டன [inserted in Article 368 by Section 55 of the Constitution (42nd Amendment) Act, 1976] . உட்கூறு (4)-ஆனது, அரசியலமைப்பின் எந்த திருத்தத்தையும் எந்த அடிப்படையிலும், நீதிமன்றத்தால் வினவ முடியாது, என்பதாகும். இது அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக விளங்கும் நீதிமுறை மறு சீராய்வு அதிகாரத்தையே பறிப்பதால், அரசியலமைப்பற்றது என்று உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்பட்டது. மேலும் உட்கூறு (5)-ஆனது, அரசியலமைப்பை திருத்துவதற்கு பாராளுமன்றத்திற்கு உள்ள அதிகாரம் வரம்பற்றதாகும், என்று கூறுகிறது. இதுவும் அரசியல மைப்பற்றது என்று உச்ச நீதிமன்றத்தால் விளம்பப்பட்டது. ஏனெனில், அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பின் ஒரு பகுதியாக விளங்கும் வரம்புடைய திருத்தல் அதிகாரத்தை (limited amending power) பறித்து, பாராளுமன்றத்திற்கு அரசியல மைப்பை திருத்துவதற்கு வரம்பிலா அதிகாரத்தை கொடுக்கும் வண்ணம் உள்ளதே காரணமாகும்.

முடிவுரை:

மேற்கண்டவற்றை எல்லாம் ஆராயும் பொழுது, நீதி முறை மறு சீராய்வு மூலம் குடிமக்களின் அடிப்படை உரிமைகள், அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை கட்டமைப்பு அல்லது

1. AIR 1980 SC 1789

அம்சங்கள் ஆகியவற்றை உச்ச நீதிமன்றம் காத்து, மக்களாட்சிக் குடியரசின் காவலனாக விளங்குவது உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாகும்.

ஒரு அரசியலமைப்பு சட்ட திருத்தத்தையும் மறு சீராய்வு செய்து, அது அரசியலமைப்பிற்கு முரணானதாக இருப்பின் அரசியலமைப்பற்றது, செல்லாதது மற்றும் இல்லா நிலையது என்று அறிவிக்கும் அதிகாரத்தையும் உச்ச நீதிமன்றம் கொண்டுள்ளது. ஆனால், அதே சமயத்தில் உச்ச நீதிமன்றத்தின் இந்த அதிகாரத்திற்கும் **ஷரத்து 31-B** ஒரு முக்கிய தடை விதித்துள்ளது என்பதையும், சில சுய கட்டுப்பாடுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டே இந்த அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் செயல்படுத்த வேண்டும் என்பதையும் கண்டோம். எனினும், இந்த அதிகாரம் உச்ச நீதிமன்றத்திற்கு ஒரு தனித் தன்மையையும், சுதந்திரச் செயல் பாட்டையும், மேலாண்மையையும் அளிப்பதோடு மட்டுமில்லாமல், மேற்கூறப்பட்ட உரிமைகளைப் பாதுகாத்து மக்களாட்சி நன்முறையில் செல்ல வழிவகுக்கிறது என்பதுதான் உண்மை.

-o0o-

அத்தியாயம் 8

அடிப்படை உரிமைகள் – இந்திய அரசியலமைப்பின் பகுதி III (ஷரத்துகள் 14 மற்றும் 35 வரை) [Fundamental Rights - Part III of the Constitution of India] (Articles 14 to 35)

சமத்துவ உரிமை *(ஷரத்துகள் 14 முதல் 18 வரை)* Right to Equality (Articles 14 to 18)

(அ) சட்டத்தின் முன் சமம் *(ஷரத்து 14)* [A] Equality before Law (Article 14)

37. The State shall not deny to any person 'equality before law' and 'equal protection of laws' within the territory of India. Referring the landmark decisions of the Supreme Court, explain its scope and application. (இந்திய எல்லைப் பகுதிக்குள் 'சட்டத்தின் முன் சமம்', 'சட்டத்தின் சம

பாதுகாப்பு' அரசு எந்த நபருக்கும் மறுக்கக் கூடாது. உச்ச நீதிமன்றத்தின் மிக முக்கியமான வழக்குகளைக் கொண்டு இதன் அளாவுகையையும் நடைமுறைப்படுத்துவதையும் விளக்குக.)

(அல்லது)

What is meant by 'Equality before law' and 'Equal protection of Law'. ('சட்டத்தின் முன் அனைவரும் சமம்' மற்றும் 'சட்டங்களின் சம பாதுகாப்பு' என்பதன் பொருள் யாது?)

(அல்லது)

Explain the nature and scope of the right to equlity under Art. 14 of the Constitution of India. (இந்திய அரசியல் சட்டப் பிரிவு 14-ல் குறிப்பிடப்பட்டுள்ள சம உரிமைகளைப் பற்றி ஆராய்ந்து விளக்குக.)

(அல்லது)

Explain the Doctrine of Equality provided for under the Indian Constitution. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள சமத்துவக் கொள்கைகளை விளக்குக.)

(அல்லது)

The right to equality is subjected to an new interpretation by the Supreme Court. Discuss. (சமத்துவத்திற்கான உரிமை, உச்ச நீதிமன்றத்தால் புதிய பொருள் காணலுக்கு உட்படுத்தப் பட்டுள்ளது. விவாதி.)

(அல்லது)

Distinquish between equality before law and equal protection of law within the territory of India. ('சட்டத்தின் முன் சமம்' மற்றும் 'இந்திய எல்லைக்குள் சட்டங்களின் சம பாதுகாப்பு' - இவைகளை வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

Explain the 'Right to Equality' guaranteed under Article 14 of the Constitution. (அரசியமைப்பின் 14வது ஷரத்தின் கீழ் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள 'சமத்துவ உரிமை' என்பதனை

விவரிக்கவும். அது முழுமையானதா?)

(அல்லது)

"Article 14 forbids class legislation but does not forbid classification" - Explain with cases. ("பிரிவு 14, இன வகுப்புச் சட்டத்தை தடுக்கிறதே தவிர வகைப்பாடு செய்வதைத் தடுக்கவில்லை" - வழக்குகளுடன் விளக்குக.)

(அல்லது)

"Constitution permits classification and not class legislation" - Elucidate. (அரசமைப்புச் சட்டம் வகைப்பாட்டை அனுமதிக்கிறது. வகுப்புவாரி சட்டமியற்றலை அல்ல. தெளிவாக்குக.)

(அல்லது)

"Equality implies equality among equals and not among unequals". Elucidate this statement with decided cases. ("சமத்துவம் என்பது சமமானவர்களுக்கிடையில் தானே தவிர சமமான நிலையில் இல்லாதவர்களுக்கிடையில் இல்லை." இக் கூற்றை முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் தெளிவுபடுத்துக.)

(அல்லது)

"The principle of equality does not take away from the State, the power of classifying persons for legitimate purposes". Explain the doctrine of classification, illustrating your answer with decided cases. ("சட்டப்படியான நோக்கங்களுக்காக நபர்களை வகைப்படுத்துவதற்கு அரசிற்குள்ள அதிகாரத்தை சமத்துவக் கோட்பாடு நீக்கிவிடவில்லை". நியாயமான வகைப்பாட்டுக் கோட்பாட்டை உமது விடையில் வழக்குகளுடன் பொருத்தி விளக்குக.)

(அல்லது)

"Equality is a dynamic concept..... The principle of reasonableness ..... is an element of equality or non-arbitrariness, pervades Art. 14 like a brooding omnipresence" - Discuss. ("சமத்துவம் ஒரு செயல் விரைவுடைய கருத்துப்படிவம்..... சமத்துவத்திற்கு அல்லது விருப்பப்படியல்லாததற்கு நியாய

மானது என்ற கொள்கை, ஒரு இன்றியமையாத மூலப் பொருளில் ஒன்று.... பிரிவு 14ல் ஊடுருவி அடைகாக்கிறதைப் போல எங்கும் நிறைந்துள்ளதைப் போல இருக்கிறது" - விவாதி.)

ஷரத்து 14 என்ன கூறுகிறது?

நாட்டில் சமத்துவம் பிறக்க, "இந்திய எல்லைக்குள் எந்த நபரின் சட்டத்தின் முன்பான சமத்துவத்தையோ, சட்டங்களின் சம பாதுகாப்பையோ அரசு மறுக்கக் கூடாது" என்று **ஷரத்து 14** கூறுகிறது.

சட்டத்தின் முன் சமம் (Equality before law):

'சட்டத்தின் முன் சமம்' எனும் கோட்பாடு பிரிட்டனில் பிறந்ததாகும். இதன்படி எவர் ஒருவரும் சட்டத்திற்கு மேலாகக் கருதப்படமாட்டார். அனைவரும் சட்டத்தின் முன் சமமானவரே என்று கூறுகிறது. **பேரா. டைசி** 'சட்டத்தின் ஆட்சி' (Rule of Law) என்பதை விளக்கும் போது, எந்தக் குடிமகனும் அவனது நாட்டில் உள்ள சாதாரண சட்டங்களுக்கும், நீதிமன்றங்களுக்கும் உட்பட்டவன் என்று கூறுகிறார். இதுதான் ஷரத்து 14-இல் 'சட்டத்தின் முன் சமம்' என்று விளக்கப்பட்டுள்ளது. இது, இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கட்டமைப்பில் (basic structure) ஒரு பகுதியாகும். எனவே, இதை ஷரத்து 368-இன் கீழான ஒரு திருத்தச் சட்டத்தின் வாயிலாகக் கூட பறிக்க முடியாது. சுருங்கக் கூறின், இது "சாதாரண சட்டங்களின் கீழுள்ள தனிப்பட்ட நபருக்கு எவ்வித சிறப்புரிமையும் கிடையாது" என்ற எதிர்மறைக் கருத்தை (negative concept) வலியுறுத்துகிறது. எனினும், இதற்கு விதிவிலக்குகள் இல்லாமல் இல்லை. அதாவது ஷரத்து 361-இன்படி, குடியரசுத் தலைவரோ அல்லது ஆளுநரோ நீதிமன்றங்களுக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டவரல்லர். அவர்கள் அத்தகு பதவியிலிருப்பதால் அவர்கள் மீது உரிமையியல் அல்லது குற்றவியல் வழக்கிட முடியாது. அவர்களைக் கைது செய்ய பிடியாணை பிறப்பிக்கவும் முடியாது.

சட்டங்களின் சம பாதுகாப்பு (Equal protection of laws):

இது அமெரிக்க அரசியலமைப்பினின்று எடுத்துக் கொள்ளப்பட்ட ஒரு கருத்தாகும். இது "அனைவருக்கும் சட்டங்களானது சம பாதுகாப்பை அளிக்க வேண்டும்" என்ற நேர்மறையான கருத்தை (positive concept) வலியுறுத்துகிறது. ஆனால்

இதன் உட்பொருள் யாதெனில், ஒத்த (சமமான) சூழ்நிலையில் உள்ளவர்களுக்கு ஒத்த (சமமான) பாதுகாப்பை (equal protection to persons who are in equal circumstances) சட்டங்கள் வழங்க வேண்டும் என்பதுதான். அதாவது, சமமான சூழ்நிலைகளில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் (equality among equals) என்று பொருள் கொள்ள வேண்டுமேயொழிய, அனைத்து சூழ்நிலைகளிலும் அனைவரும் சமம் என்று பொருள் கொள்ள லாகாது. சமமில்லாத சூழ்நிலைகளில் இருப்பவர்களை சமமாக பாவித்தால், அதனால் சமமின்மையே ஏற்படும்; சமத்துவம் பிறக்காது. நீதிக்கு பதிலாக அநீதியே விளையும்.

'சட்டத்தின் முன் சமம்', 'சட்டங்களின் சம பாதுகாப்பு' - வேறுபாடுகள்:

1) 'சட்டத்தின் முன் சமம்' என்பது பிரிட்டனில் பிறந்ததாகும். 'சட்டங்களின் சம பாதுகாப்பு' என்பதின் பிறப்பிடம் அமெரிக்க அரசியலமைப்பு ஆகும்.

2) 'சட்டத்தின் முன் சமம்' எதிர்மறைக் கருத்தை கூறுகிறது. 'சட்டங்களின் சம பாதுகாப்பு' நேர்மறைக் கருத்தை குறிப்பிடுகிறது. (இது குறித்து முந்தைய பத்திகளில் கூறப்பட்டவற்றை விவரித்து எழுதவும்.)

3) 'சட்டத்தின் முன் சமம்' என்பது சாதாரண சட்டங்கள் முன்பு அனைவரும் சமம் என்று கூறுகிறது. 'சட்டங்களின் சம பாதுகாப்பு' என்பது சம நிலையில் உள்ளவர்களுக்கு சட்டங்களானது சம பாதுகாப்பை அளிக்கும் என்று கூறுகிறது.

ஷரத்து 14 முழுமையானதா? (Is Art. 14 absolute?)

ஷரத்து 14 முழுமையான சமத்துவத்தை வழங்கவில்லை. அது அனைவரும் சட்டத்தின் முன் சமம் என்றோ அல்லது அனைவருக்கும் சட்டங்களின் சம பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும் என்றோ வலியுறுத்தவில்லை. மேலும் சட்டங்கள், அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டுமென்றும் கூறவில்லை. அது சமமான சூழ்நிலைகளில் இருப்பவர்கள் சமமாக பாவிக்கப்பட வேண்டும் என்றே கூறுகிறது. இதைப் பின்வரும் பத்தி மேலும் தெளிவாக்கும்.

நியாயமான வகைப்பாடு (Reasonable Classification):

அனைவரையும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் சமமாக கருத முடியாது. எடுத்துக்காட்டாக, ஆணும் பெண்ணும் சமம்

என்று கொண்டு, பெண்களுக்கென தனிப்பாதுகாப்பு கொடுக்க சட்டமேதும் இயற்றக் கூடாது என்றால், அங்கு சமத்துவத்திற்குப் பதிலாக சமமின்மையே தோன்றும். எனவே பல்வேறு பிரிவிலுள் ளோர்களின் பல்வேறு விதமான தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்களை நியாயமான அடிப்படையில் வகைப்பாடு (reasonable classification) செய்து, அவர்களுக்கேற்ற சட்டத்தை இயற்ற வேண்டும், என்று ஷரத்து 14 வலியுறுத்துகிறது. ஆனால் ஒரு பிரிவினரில் உள்ளோர்களை (சம நிலையில் இருப்பவர்களை) நியாயமற்ற விதத்தில் வகைப்படுத்தி, அவர்களுக்கென தனித் தனியாக சட்டமியற்றலை (class legislation) ஷரத்து 14 அனுமதிப்பதில்லை.

இதைத்தான் **Chiranjit Lal v. Union of India**[1] என்ற வழக் கில் உச்ச நீதிமன்றமானது, "ஷரத்து 14, ஒரு குறிப்பிட்ட பிரிவின ருக்காக சட்டமியற்றுவதை தடுக்கிறதேயொழிய, அவர்களை நியாயமான வேறுபாடுகளின் கீழ் வகைப்பாடு செய்து சட்டமியற்றுவதை தடுக்கவில்லை"[2] என்று கூறுகிறது.

ஆனால் இங்கு அவ்வாறு செய்யப்படும் வகைப்பாடு, நியாயமானதா இல்லையா என்பதை எவ்வாறு கண்டறிவது? இதற்கென சில சோதனைகளை (Tests) நமது உச்ச நீதிமன்றம் பின்வரும் வழக்குகளில் வகுத்துக் கொடுத்துள்ளது.

நியாயமான வகைப்பாட்டுச் சோதனை (Test of Reasonable Classification):

Aneeroonisa v. Mahboob[3]

இவ்வழக்கில், வகைப்பாடானது ஏதேச்சதிகாரமாகவோ செயற்கைத்தனமாகவோ அல்லது மழுப்பலானதாகவோ (arbitrary, artificial or evasive) இருக்கக் கூடாது எனப்பட்டது.

Budhan Chaudhary v. State of Bihar[4]

இவ்வழக்கில், ஒரு வகைப்பாடு நியாயமானதா என்பதைக்

1. AIR 1951 SC 41
2. "Article 14 forbids class legislation, but does not forbid classification which rests upon reasonable grounds of distinction"
3. AIR 1953 SC 91
4. AIR 1953 SC 191

கண்டறிய இரண்டு நிபந்தனைகள் கூறப்பட்டன. அவை, (1) செய்யப்படும் வகைப்பாடானது ஒரு குழுவில் ஒருங்கிணைப்பட்ட நபர்கள் அல்லது பொருட்களானது, அக்குழுவிலிருந்து விடுபட்டுப்போன மற்றவர்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டும் வண்ணம் **அறிவுக்கு புலனாகக் கூடிய ஒரு வேறுபாட்டின் (Intelligible differentia)** அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும்.; (2) அந்த அறிவால் புலனாகக் கூடிய வேறுபாட்டிற்கும், சம்பந்தப்பட்ட சட்டம் எந்நோக்கத்திற்காக இயற்றப்பட்டதோ அந்நோக்கத்திற்காக **பகுத்தறிவு வாய்ந்த ஒரு தொடர்பு (rational relation)** இருக்க வேண்டும்.

Ramkrishna Dalmia v. Justice Tendolkar[1]

இந்த முக்கிய வழக்கில், மாண்பமை நீதியரசர் தாஸ் **(Das, J.)** அவர்கள், மேற்படி நியாயமான வகைப்பாட்டுச் சோதனையை எங்ஙனம் மேற்கொள்வது என்பதற்காக சில அறுதியுரைகளை (propositions) வகுத்துக் கொடுத்தார். அவை, (1) சில சிறப்புச் சூழலிலும், காரணத்தாலும் தனிப்பட்ட ஒருவனுக்கு மட்டுமே பொருந்தக் கூடிய சட்டமானது கூட அரசியலமைப்பிற்கு உட்பட்டதுதான். அந்த ஒருவனே, ஒரு வகைப்பாட்டுப் பிரிவாகக் கருதப்படுவான். (2) சட்டமியற்றலால் ஏற்படுத்தப்படும் வகைப்பாடு விஞ்ஞானரீதியாக முழுமையாகவோ அல்லது காரணகாரிய அடிப்படையில் முற்றுப் பெற்றோ இருக்க வேண்டிய அவசியமில்லை. (3) பலதரப்பட்ட அடிப்படையில் வகைப்பாடுகள் அமையலாம். எடுத்துக்காட்டாக, புவியியல், தொழில் மற்றும் பொருள் ரீதியாக. (4) நிலைமுறைச் சட்டத்திலும், நடைமுறைச் சட்டத்திலும் வேறுபாடு இருக்கலாம். ஷரத்து 14 இரண்டிற்குமே பொருந்தும். (5) மக்களின் தேவை என்னவென்பதை உணர்ந்துதான் சட்டமன்றம் சட்டமியற்றியதாக அனுமானிக்கப் படும். ஆகவே அதன் வகைப்பாடுகளும் சரியான அடிப்படையில் அமைந்ததாகவே கருதப்படும். (6) இயற்றப்பட்ட சட்டம் ஒன்றினைக் குறை கூறுபவன் அது அரசியலமைப்புக் கொள்கைகளை மீறுவதாக உள்ளது என்பதைக் காண்பிக்க பொறுப்புடையவன் என்று அனுமானிக்கப்படும். (7) சட்டமன்றம் தீங்கின் படிநிலைகளை அறிந்து கொண்டு அதற்குத் தக்க வகையில் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள, அதற்கு சுதந்திரம் உண்டு.

1. AIR 1958 SC 538

செய்யப்படும் வகைப்பாடானது மேற்கண்ட அறுதியுரை களுடன் இணக்கமாக அமைந்ததால்தான், தொடர்புடைய சட்டம் அரசியலமைப்பிற்குட்பட்டதாக அறிவிக்கப்படும். வகைப்பாடு நியாயமானதா என்பதை சட்டத்தின் அடிப்படையில் விட பொது உணர்வின் (common sense) அடிப்படையில்தான் தீர்மானிக்க வேண்டும்.

நியாயமான வகைப்பாட்டை எடுத்துரைத்த சில வழக்குகள்:

State of Bombay v. F.N.Balsara[1]

இவ்வழக்கில், மாநிலத்தில் மதுபானங்கள் விற்பதையோ, வைத்திருப்பதையோ அல்லது உபயோகப்படுத்துவதையோ தடை செய்யும் பம்பாய் மதுவிலக்குச் சட்டமானது (Bombay Prohibition Act) இராணுவ வீரர்கள் மதுபானங்களை உபயோகப்படுத்த லாம் என்று விதிவிலக்கு அளிக்கிறது. எஃப்.என்.பல்சாரா, இவ் வாறு இராணுவ வீரர்கள் மட்டும் மதுபானங்களை உபயோகிக்க லாம் என்று விதிவிலக்கு அளித்துள்ள மேற்படி சட்டமானது ஷரத்து 14ஐ மீறுவதாக உள்ளது என்று வழக்குத் தொடுத்தார். ஆனால் இது ஒரு நியாயமான வகைப்பாடு (reasonable classification) என உச்ச நீதிமன்றம் அறிவித்தது. ஏனெனில் இராணுவ வீரர்களுக்கென ஒரு பாரம்பரியம், தனி வாழ்க்கை முறை இருப் பதால் அவர்கள் ஒரு தனி வகைப்பாட்டு வகையென (Classification by themselves) கருதப்பட்டு அவர்களுக்கு விலக்கு அளிக்கப் படுகிறது.

Chiranjit Lal v. Union of India[2]

இந்திய அரசு 1950-ஆம் ஆண்டு, சீர்கேடான மேலாண்மை யின் (mismanagement) கீழ் இயங்கி வந்த சோலாப்பூர் ஆலை (நூல் நெசவு) நிறுவனத்தை, அவசரக் காலச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்து, அதன் நிர்வாக மேலாண்மையை தன் வசப்படுத்தியது. இவ்வாறு இந்த ஒரு நிறுவனத்தை மட்டும் அரசு தன் வசப்படுத் தியது, ஷரத்து 14ஐ மீறுவதாக உள்ளது என்று கூறி, அச்சட்டத்தை இல்லா நிலையதென அறிவிக்குமாறு சிரஞ்சித்லால் என்பவர் வழக்குத் தொடுத்தார். ஆனால் உச்ச நீதிமன்றம் நிறுவனத்தின் சூழ்நிலைகளை, உதாரணமாக நிறுவனத்தின் தொழிலாளர்கள்

1. AIR 1951 SC 327
2. AIR 1951 SC 41

அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்பை இழக்கக் கூடிய அபாயம், நிறுவனத்தின் நிர்வாக சீர்கேடுகள் போன்றவற்றை யெல்லாம் பார்க்கும் பொழுது, அந்த நிறுவனமே ஒரு தனி வகுப்பாக கருதப்படலாம் (a class by itself) என்று கூறியது. மேலும் மனுதாரராகிய சிரஞ்சித்லால் மற்ற நிறுவனங்களும் இதே மாதிரியான சூழ்நிலைகளில் இயங்குகின்றன என்று மெய்ப்பிக்கவில்லை எனவே மேற்படி சட்டத்தின் செல்லுந்தன்மையானது நிலைநிறுத்தப்பட்டு ஷரத்து 14, அதனால் பாதிப்படையவில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

R.C.Cooper v. Union of India (or) Bank Nationalisation Case[1]

இந்த முக்கிய வழக்கில், ஒரு சட்டத்தின் மூலமாக 14 வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன. இவை யாவும் தங்களுடைய வங்கித் தொழிலை புரியக் கூடாதென தடை செய்யப்பட்டன. எனினும் மற்ற வங்கிகள் யாவும் தங்களுடைய வங்கித் தொழிலை புரியலாம். மேலும் புதிய வங்கிகளும் தொடங்கலாம். இப்படி இருக்கும் பொழுது, தேசியமயமாக்கப்பட்ட 14 வங்கிகள் மட்டும் தங்கள் வங்கித் தொழிலை புரியக் கூடாது என அரசு தடை விதித்தது. இது ஒரு நியாயமான வகைப்பாடாக இல்லை. எனவே மேற்படி அரசு சட்டமானது ஷரத்து 14ஐ மீறுவதாக உள்ளது என்று கூறப்பட்டு, அச்சட்டம் செல்லாது என உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

E.P.Royappa v. Tamil Nadu[2]

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றமானது, நியாயமான வகைப்பாடு என்பதின் அடிப்படையில் தொன்றுதொட்டு வரும் சமத்துவக் கோட்பாட்டிற்கு (Traditional Concept of Equality) சவால்விட்டு, **சமத்துவம் குறித்த புதிய கருத்தை** (New Concept of Equality) எடுத்துக் கூறியது. அதன்படி, ஏதேச்சதிகாரத்திற்கு (arbitrariness) சமத்துவமானது விரோதமானதாகும். ஏதேச்சதிகாரத்துடன் ஏதேனும் ஒரு செயல் செய்யப்பட்டால் அங்கு சமத்துவம் மீறப்படுகிறது. இக்கொள்கையானது இரண்டு முன் மொழியுரைகளாக இவ்வழக்கில் கூறப்பட்டது. அதில் முக்கியமான ஒன்று, ஒரு அதிகார அமைப்பிற்கு கட்டுப்பாடில்லாத அதிகாரத்தினை வழங்கும் சட்டமானது, சமத்துவமின்மைக்கு வழி வகுக்கிறது என்பதாகும்.

1. AIR 1970 SC 564
2. AIR 1974 SC 555

Menaka Gandhi v. Union of India[1]

இப்புகழ் பெற்ற வழக்கிலும் மேற்படி **E.P.Royappa** வழக்கில் கூறப்பட்ட சமத்துவம் குறித்த புதிய கருத்து பின்பற்றப்பட்டு மேலும் விரிவாக்கப்பட்டது. அதன்படி "……சமத்துவம் என்பது பல கோணங்களிலும் விஷயங்களிலும் ஆற்றல் மிக்கதொரு கருத்தாகும். எனவே, அதை தொன்றுதொட்டு வரும் கோட்பாடுரீதியான வரம்புகளுக்குள் சிறை வைக்க முடியாது. அரசின் ஏதேச்சதிகாரப் போக்கினை ஷரத்து 14 வேரறுக்கிறது; மக்கள் நியாயமாகவும், சமமாகவும் நடத்தப்பட உறுதியளிக்கிறது. நியாயத்தன்மை கோட்பாடு, சட்டப்படியும், சித்தாந்தப்படியும், சமத்துவம் அல்லது ஏதேச்சதிகாரமின்மைக்குண்டான ஒரு இன்றிமையாத மூலப் பொருளாகும். இது எங்கும் நிறைந்து நின்று காணப்படும் நிலை போல, ஷரத்து 14ஐ ஊடுருவிப் பரவிக் காக்கிறது.[2]

இந்த வழக்கில் புதிய சமத்துவக் கருத்தாக சமத்துவம் பிறக்க அரசானது, ஏதேச்சதிகாரமில்லாமல் நியாயமான அடிப்படையில் சட்டமியற்ற வேண்டும், என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. மேலும் ஷரத்து 14, முதலில் ஒழிக்க நினைப்பது, அரசின் ஏதேச்சதிகாரப் போக்கைத்தான் என்று சுட்டிக்காட்டியது. இது பின்வரும் வழக்கொன்றில் எடுத்துரைக்கப்பட்டது.

Air India v. Nargesh Meerza[3]

இந்த முக்கியமான வழக்கில் ஏர் இந்தியா நிறுவனம் தனது ஒரு ஒழுங்குமுறை விதியின் மூலமாக விமானப் பணிப்பெண்களின் ஓய்வு பெறும் வயதை 35 ஆக நிர்ணயித்தது. ஆனால் அதே சமயத்தில் அவ்வயதை 45 ஆக நீட்டிப்பதற்கு அதன் நிர்வாக

---

1. AIR 1970 SC 564
2. ".... Equality is a dynamic concept with many aspects and dimensions and it cannot be imprisoned within traditional and doctrinaire limits. Article 14 strikes at arbitrariness in State action and ensures fairness and equality of treatment. The principle of reasonableness, which legally as well as philosophically, is an essential element of equality or non-arbitrariness, pervades Article 14 like a brooding omnipresence" *(இந்த அடைப்புக் குறிக்குள் உள்ளது ஒரு வினாவாக முனைவர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் மே, 2000 வினாத்தாளில் கேட்கப்பட்டுள்ளது. அவ்வினா இவ்விடையின் முன்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ளதைக்காண்க. மேலும் அவ்வினாவின் தமிழ் மொழி பெயர்ப்பு சரியாக அமையவில்லை என்பதை அறியவும் - ஆசிரியர்)*
3. AIR 1981 SC 1829

இயக்குநருக்கு அவ்விதி அதிகாரமளித்திருந்தது. இவ்விதி, நிர்வாக இயக்குநருக்கு விமான பணிப்பெண்களின் ஓய்வு பெறும் வயதை அதிகரிக்க கட்டுப்பாடில்லாத தன்னுரிமையை அளித்து இருப்பதாலும், மேலும் அவ்வதிகாரத்தை பயன்படுத்தி எந்த வழிமுறைகளும் மற்றும் கொள்கைகளும் (guidelines and principles) இல்லாத காரணத்தாலும் அவ்விதி செல்லாததென உச்ச நீதிமன்றத்தால் அறிவிக்கப்பட்டது. நிர்வாக இயக்குநரின் மேற்படி அதிகாரமானது, ஏதேச்சதிகாரத்திற்கு வழி வகுக்கிறது என்பதும், எனவே அது ஷரத்து 14ஐ மீறுவதாக உள்ளது என்பதும் இவ்வழக்கில் தெளிவாகியது.

Suneel Jatley v. State of Haryana[1]

இவ்வழக்கில் எம்.பி.பி.எஸ். மற்றும் பி.டி.எஸ். மருத்துவப் படிப்புகளில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரை அரசு கிராமப்புற பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு 25 இடங்களை ஒதுக்கீடு செய்தது ஷரத்து 14ஐ மீறுவதாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. கிராமப்புற மற்றும் நகர்ப்புற பள்ளிகளில் கல்வி கற்கும் மாணவர்களை இவ்வாறு மருத்துவக் கல்வியில் இடம் ஒதுக்கும் நோக்கத்திற்காக பாகுபாடு செய்து முற்றிலும் ஏதேச்சதிகாரமானது என்றும், நியாயமற்றது என்றும் உச்ச நீதிமன்றம் மேலும் கூறியது. மருத்துவக் கல்லூரியில் சேரும் கிராமப்புற மாணவர்களுக்கு கூடுதல் வசதிகளை செய்து தரும் நோக்கத்திற்கும் இவ்வாறு இடம் ஒதுக்குவதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் தெளிவுபடுத்தியது.

Y.Srinivasa Rao v. J.Veeraiah[2]

இவ்வழக்கின் சங்கதிகள்படி நியாய விலைக் கடை நடத்துபவர்களுக்கு உரிமம் வழங்குவதில் அரசு ஒரு கொள்கை முடிவைச் செய்திருந்தது. அதன்படி நியாய விலைக் கடை உரிமத்திற்காக விண்ணப்பிப்பவர்களில் அதிகம் படித்தவர்களை விட குறைவாகப் படித்தவர்களுக்கு முன்னுரிமை அளித்து உரிமம் வழங்க வேண்டும். ஆனால் இக்கொள்கை ஏதேச்சதிகாரமானது என்றும், ஷரத்து 14-க்கு எதிரானது என்றும், குறைவாகப் படித்தால் கூட போதும் என்ற எண்ணத்தை ஊக்குவிக்கக் கூடியது என்றும், எனவே இரத்து செய்யப்படத்தக்கது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

1. (1984) 4 SCC 296
2. AIR 1993 SC 929

State of Maharashtra v. Manubhai Pragaji Vashi[1]

கலை, அறிவியல், வணிகம், பொறியியல் மற்றும் மருத்துவக் கல்லூரிகளுக்கு அரசு மானியம் வழங்குகிறது. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட தனியார் சட்டக் கல்லூரிகளுக்கு அவ்வாறு வழங்க மகாராஷ்டிர மாநில அரசு மறுக்கிறது. இது அரசியலமைப்பின் ஷரத்து 14-ஐ மீறியது என்றும், பாகுபடுத்தக் கூடியது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதால் மாநில அரசு எந்நோக்கத்தை அடைய விழைகிறதோ அதற்கும் அரசிடம் நிதி போதுமான அளவு இல்லை என்பதற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், இதைக் காரணமாகக் காட்டி தனியார் சட்டக் கல்லூரிகளுக்கு அரசு மானியமளிக்க மறுப்பது நியாயமற்ற பாகுபாடாகும் என்றும் உச்ச நீதிமன்றம் மேலும் தெளிவுபடுத்தியது.

BALCO Employees Union (Regd.) v. Union of India[2]

இவ்வழக்கில் அரசின் பொருளாதார கொள்கை அரசியலமைப்பை அல்லது வேறு சட்டம் எதையும் மீறியதாகவோ இருந்தாலன்றி அதை நீதிமுறையில் மறுசீராய்வு செய்தலாகாது (there cannot be no judicial review of economic policy of the government unless there is violation of the Constitution or any Act) என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது.

B.C.P.P. Mazdoor Sangh v. N.T.P.C.[3]

இவ்வழக்கின் மேல்முறையீட்டாளர்கள் **N.T.P.C.** என்ற அரசுத் துறை நிறுவனத்தின் பணியாளர்கள். இவர்களின் பணி பங்கு முதலீட்டை திரும்பப் பெறுதல் (disinvestment) என்ற கொள்கையின் அடிப்படையில் **BALCO** (Bharat Aluminium Company Limited) என்ற தனியார் நிறுவனத்திற்கு மாற்றப்படுகிறது. இது சட்ட விரோதமானது, ஏதேச்சதிகாரமானது மற்றும் ஷரத்து 14ஐ மீறுவதாகும் என்று அப்பணியாளர்கள் வழக்கு தொடுத்தனர். ஒரு இருதலை உடன்படிக்கையின் (bi-partite agreement) கீழ் **N.T.P.C.** நிறுவனத்திற்கு பொருந்தும் பணி நிபந்தனைகள் அப்பணியாளர்களின் பணியை நெறிப்படுத்துகிறது.

1. (1995) 5 SCC 730
2. AIR 2002 SC 350
3. AIR 2008 SC 336

தங்கள் பணி நிபந்தனைகளை மாற்றம் செய்வதற்கு முன் தங்கள் தரப்பு ஆட்சேபணைகளை எடுத்துரைக்கும் வாய்ப்பு தங்களுக்கு வழங்கப்படவில்லை என்று அப்பணியாளர்கள் வாதிட்டனர். இதை கேட்டறிந்த உச்ச நீதிமன்றம், பணியாளர்களின் பணி நிபந்தனைகளை அவர்களது ஆட்சேபணைகளை கேட்டறியாமல் முன்தேதியிட்டு மாற்ற முடியாது என்றும், இது ஏதேச்சதிகாரமானது மட்டுமல்ல, இந்திய ஒப்பந்தச் சட்டத்தின் பிரிவு 23 மற்றும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14ஐ மீறியதுமாகும் என்றும் கூறியது. மேலும் அப்பணியாளர்கள் முன் சென்ற உடன்படிக்கையின் ஒரு தரப்பினர் அல்ல என்றும், அத்துடன் பணி நிபந்தனைகளை மாற்றுவதற்கு முன் அவர்களது ஆட்சேபணைகளும் கேட்டறியப்படவில்லை என்றும், எனவே நிறுவன நிருவாகத்தின் இந்நடவடிக்கை ஷரத்து 14ஐ மீறியதாகும் என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

(ஆ) மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றின் அடிப்படையில் பாகுபாடு காட்டலாகாது

(ஷரத்து 15)

[B] No Discrimination on grounds of Religion, Race, Caste, Sex, Place of birth etc.

(Article 15)

38. "Discrimination on the grounds of religion, race, caste, sex and place of birth is inadmissible" - Discuss. ("அரசு குடிமக்களை அவர்களுடைய மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் இவற்றினடிப்படையில் பாகுபடுத்துவது அனுமதிக்கத்தகாதது" - விவாதிக்க.)

(அல்லது)

Discuss the scope of Article 15 of the Indian Constitution with judicial decisions. (இந்திய அரசமைப்பு சட்டம் 15-வது பிரிவின் தன்மையை நீதிமன்ற தீர்ப்புகளோடு விளக்குக.)

முன்னுரை:

ஷரத்து 14, "சட்டத்தின் முன் அனைவரும் சமம்" என்று

பொதுவாகக் கூறினாலும், ஷரத்து 15 குடிமக்களை அவர்களுடைய மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் இவற்றினடிப்படையில் அவர்களிடையே பாகுபாடு காட்டக் கூடாது என்றும், அவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு நிபந்தனைகளையோ, தடைகளையோ விதிக்கக் கூடாது என்றும் குறிப்பாகக் கூறுகிறது. ஆனால் ஷரத்து 15(4)-ஆனது சமுதாயம் மற்றும் கல்வி நிலையில் பின் தங்கியுள்ள பிற்பட்ட வகுப்பினருக்காக சிறப்புச் சட்டங்கள் இயற்றுவதில் இருந்து அரசை, ஷரத்து 15 தடுக்க முடியாது என்று கூறுகிறது. அச்சரத்து 15-ஐக் காண்போமா?

ஷரத்து 15 என்ன கூறுகிறது?

ஷரத்து 15(1) - அரசு எந்தக் குடிமகனையும் அவனுடைய மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றில் எதனையாவது காரணமாகக் காண்பித்து, அவனை பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது.

ஷரத்து 15(2) - எந்தக் குடிமகனும் அவன் சார்ந்துள்ள மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றினடிப்படையில் பின் வரும் சூழ்நிலைகளில் தகுதியின்மைப்படுத்தவோ, பொறுப்புக்குள்ளாக்கவோ, தடைப்படுத்தவோ அல்லது நிபந்தனை விதிக்கப்படவோ கூடாது.

(a) கடை, பொது ஓய்வு விடுதிகள், உணவு விடுதிகள் மற்றும் பொதுவான பொழுதுபோக்கு இடங்களில் நுழையும் போதும்;

(b) அரசினால் பொது மக்களின் உபயோகத்திற்கென முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ நிதி உதவி அளிக்கப்பட்டு ஏற்படுத்தப்பட்ட கிணறுகள், தொட்டிகள், குளியல் துறைகள், சாலைகள் ஆகியவற்றை உபயோகிக்கும் போதும்;

ஷரத்து 15(3) - பெண்டிர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்புச் சட்டங்கள் இயற்றுவதிலிருந்து அரசினை, இச்ஷரத்தில் உள்ள எதுவும் தடுக்காது.

ஷரத்து 15(4) - அரசு, சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கி உள்ள வகுப்பினர்களுக்கு அல்லது தாழ்த்தப்பட்டோர்

மற்றும் பழங்குடியினருக்கு தனிச் சலுகைகள் அளித்து, அவர்களும் சமுதாயத்தில் முன்னேற்றமடைய தனிச்சிறப்புச் சட்டங்கள் இயற்றுவதற்கு அரசினை ஷரத்து 15-இல் அல்லது ஷரத்து 29(2)-இல் கூறப்பட்டுள்ள எதுவும் தடுக்காது.

சில வழக்குகள்:

Rajasthan v. Pratap Singh[1]

இராஜஸ்தானில் உள்ள சில கிராமங்களில் வசிக்கும் மக்கள் கொள்ளையர்களுக்கு புகலிடம் அளிப்பதாக வந்த தகவலின் பேரில், இராஜஸ்தான் அரசு அக்கிராமங்களில் சில கூடுதல் காவலர்களை நியமிக்க உத்தரவிட்டது. மேலும் அவர்களுக்கு உண்டாகும் செலவுகளை அக்கிராமவாசிகளே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கூறியது. ஆனால் அச்செலவுகளில் இருந்து அக்கிராமங்களில் வசிக்கும் ஹரிஜன் மக்களுக்கும் முகமதியர்களுக்கும் விலக்கு அளிக்கப்பட்டது. இவ்வாறு விலக்கு அளித்தது சாதி மற்றும் மதத்தின் அடிப்படையில் அக்கிராமவாசிகளை பாகுபடுத்துவதாக உள்ளது எனக் கூறி, அவ்வுத்திரவு நசித்து (quashed) போகும்படி உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Shiek Hussain v. Shiek Mohammad[2]

இவ்வழக்கில் 1861-ஆம் ஆண்டின் பம்பாய் நகரக் காவல் சட்டத்தின் கீழ் பம்பாய் நகருக்கு வெளியே பிறந்த பழைய குற்றவாளிகளுக்கு தண்டனையும், கிரேட்டர் பம்பாய்க்கு உள்ளே பிறந்த பழைய குற்றவாளிகளுக்கும் விலக்கும் அளிக்கப்பட்டது. இந்தப் பாகுபாடு பிறப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டதால் செல்லாது என்று பம்பாய் உயர் நீதிமன்றம் கூறியது.

D.P.Joshi v. State of M.P.[3]

உச்ச நீதிமன்றம் இவ்வழக்கில் முக்கிய வேறுபாடு ஒன்றைச் சுட்டிக்காட்டியது. அஃதாவது குடியிருப்பு (residence) என்ற காரணத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவது ஷரத்து 15-ஐ மீறுவதாகாது என்றும், பிறப்பிடம் (place of birth) என்பது குடியிருப்பு என்பதிலிருந்து வேறுபட்டது என்றும் உச்ச

1. AIR 1960 SC 1208
2. AIR 1951 Bom. 285
3. AIR 1955 SC 334

நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. வழக்கின் சங்கதிகள்படி, மாநில மருத்துவக் கல்லூரிக்கான சேர்க்கைக்காக கட்டாய நன்கொடை பெறப்படுவதில் மத்திய பாரத் (மத்தியப் பிரதேஷ்) மாநிலத்தை குடியிருப்பாகக் கொண்டவருக்கு விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் மற்றவர்கள் இதைச் செலுத்த வேண்டும் என்றும் கூறப் பட்டது. இது பிறப்பிடத்தை காரணமாகக் கொள்ளாததால் செல்லும் என உச்ச நீதிமன்றம் கூறியது.

Nainsukhdas v. State of U.P.[1]

பல்வேறு மதங்களின் அடிப்படையில் தனித்தனி வாக்கா ளர் தொகுதிகள் அமைக்கப்பட்டது ஷரத்து 15-க்கு முரணானது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Yusuf Abdul Azis v. Bombay[2]

இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 497-இன்படி பிறன் மனை புணர்ச்சி குற்றத்தில் (Adultry) ஈடுபட்ட ஆண் மட்டுமே தண்டிக்கப்படுகிறான். அதில் ஈடுபட்ட பெண் தண்டிக்கப்படுவ தில்லை. இவ்வாறு பாகுபடுத்தியிருப்பது பாலினம் அடிப்படை யில் வேறுபாட்டை காண்பிப்பதால் பிரிவு 497 அரசியலமைப்பற் றது என வாதிடப்பட்டது. ஆனால் அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 15(3)-இன்படி இது அரசியலமைப்பிற்கு உட்பட்டதுதான் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [ஷரத்து 15(3) - பெண்டிர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்புச் சட்டங்கள் இயற்றுவதிலிருந்து அரசினை, இச்ஷரத்தில் உள்ள எதுவும் தடுக்காது.]

Anjali Roy v. State of West Bengal[3]

இவ்வழக்கின் போது ஷரத்து 15(3) பெண்டிர் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்புச் சட்டங்கள் இயற்றலாம் என்று மட்டுமே கூறுகிறதே தவிர, ஆண்கள் துய்க்கும் ஒத்த விடயங்களில் பெண்களையும் ஆண்களைப் போலவே அதே மாதிரியாக நடத்த வேண்டும் என்று பெண்கள் கோர முடியாது என்று சற்று நுணுக்கமான பொருள் விளக்கத்தை கல்கத்தா உயர் நீதிமன்றம் கூறியது.

---

1. AIR 1953 SC 384
2. AIR 1954 SC 32
3. AIR 1952 Cal. 1995

Gayathri Devi Bansari v. State of Orissa[1]

இவ்வழக்கில் சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக 24 மணி நேர மருந்துக் கடை வேலையில் 30 சதவீத இட ஒதுக்கீடு பெண்களுக்கு அளித்தது செல்லும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

[ஷரத்து 15(4)-இன் கீழான சில வழக்குகளை நாம் அடுத்த வினாவின் விடையில் காண்போம் - ஆசிரியர்]

39. Who are "socially and educationally backward classes of citizens"? Refer to cases. (குடிமக்களில் "சமுதாய மற்றும் கல்வியால் பிற்பட்ட வகுப்பினர்" யார்? முடிவுற்ற வழக்குகளை குறிப்பிடுக.)

(அல்லது)

What are the tests to determine the social and educational backwardness? Cite supreme court cases. (சமூக மற்றும் கல்வி நிலையில் பின்தங்கிய நிலையை நிர்ணயிக்க உதவும் தேர்வு அளவுகள் யாவை? உச்ச நீதிமன்ற வழக்குகளை எடுத்துக்காட்டவும்.)

(அல்லது)

Discuss the constitutional provisions for reservation of seats in educational institutions to backward classes by referring to cases. (பின் தங்கியுள்ள வகுப்பினர்களுக்கு கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்வது தொடர்பாக அரசியலமைப்பின் சட்ட விதிமுறைகளை வழக்குகளை ஆதாரங் காட்டி விவாதிக்க.)

ஷரத்து 15(4) என்ன கூறுகிறது?

சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கியுள்ள வகுப்பினர்கள் அல்லது தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினர்களை முன்னேற்றும் பொருட்டு சிறப்புச் சட்டங்களை இயற்ற ஷரத்து 15(4) அதிகாரமளிக்கிறது. இச்ஷரத்து பின்வரும் முக்கிய வழக்கொன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பின் விளைவாக இந்திய அரசியலமைப்பில் சேர்க்கப்பட்டது.

1. AIR 2000 SC 1531

State of Madras v. Chonpakam Durairajan[1]

சென்னை அரசாங்கம் மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி ஆகியவற்றில் மாணவர்களை சாதி, மத அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யுமாறு அரசு ஆணை (Communal Order) ஒன்றை பிறப்பித்தது. ஆனால் மாணவர்களை அவர்களுடைய தகுதியின் அடிப்படையில் கல்லூரிகளில் இடத்தை ஒதுக்காமல் சாதி, மத அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்திருப்பது செல்லாது என்றும், சென்னை அரசின் ஆணை அரசியலமைப்பற்றது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இதனால் பின்தங்கிய வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இதனைத் தவிர்ப்பதற்காக, இந்திய அரசியலமைப்பில் 1951-ஆம் ஆண்டில் சரத்து 15(4) சேர்க்கப்பட்டது.

சமூக மற்றும் கல்வியில் பின் தங்கிய வகுப்பினர் - யார்?

சரத்து 15(4) 'பின்தங்கிய வகுப்பினர்' (Backward Classes) என்று குறிப்பிடுகிறதேயொழிய, யாரெல்லாம் அவ்வாறு பின் தங்கியவர் என்று வரையறை ஏதும் கூறவில்லை. ஆனால் சரத்து 340, சமுதாயம் மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ள வகுப்பினர்களின் நிலை குறித்து ஆராய்ந்தறிய விசாரணைக் குழு ஒன்றை நியமிக்க இந்தியக் குடியரசுத் தலைவருக்கு அதிகாரமளிக்கிறது. (எடுத்துக்காட்டாக, மண்டல் கமிஷனைக் குறிப்பிடலாம்[2]). அக் குழு கொடுக்கும் அறிக்கையின் அடிப்படையில், யாரெல்லாம் பின்தங்கிய வகுப்பினர்களாக கருதப்படக் கூடியவர்கள் என்று குடியரசுத் தலைவர் முடிவு செய்வார். எனினும் அவரது முடிவு, மறு பரிசீலனைக்கும் விவாதத்திற்கும் உரியது. அந்த வகையில், 1955-இல் ஒரு குழு தனது அறிக்கையை சமர்ப்பித்தது. ஆனால் அதனை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அனைத்திந்திய அளவில் யாரெல்லாம் சமுதாயம் மற்றும் கல்வியில் பின் தங்கிய வகுப்பினர் என்பதற்குக் குறிப்பிட்ட ஒரு திட்டவட்டமான வரையறை ஏதுமில்லை. தற்பொழுது, ஒவ்வொரு மாநில அரசும், யாரெல்லாம் பின்தங்கிய வகுப்பினர் என்பதை தங்களுக்கே உரிய வழியிலும், முறையிலும் குறிப்பிடுகின்றன. இதனால் பின்தங்கிய வகுப்பினர் யார் என்பது குறித்து நாட்டில் ஒரே சீர்மையான

1. AIR 1951 SC 226
2. பின்னர் விரிவாகக் காண உள்ளோம்.

கருத்து இல்லை. எனினும் அவ்வாறு மாநிலங்கள் இன்னாரெல் லாம் பின்தங்கிய வகுப்பினர் என்று வகைப்படுத்தி குறிப்பிடுவதை, நியாயமானதா அல்லது அறிவுக்கு புலனாகக் கூடிய கொள்கை களின் அடிப்படையில் அமைந்ததா (reasonable or based on intelligible principle) என்பதைக் கண்ட்றியும் அதிகாரம் நீதிமன்றங்களின் கைகளில் உள்ளது. இதற்காக பின்வரும் பல வழக்குகளில், பின்தங்கிய வகுப்பினரை நிர்ணயிக்க உதவும் பல அளவுகோல்கள் [அல்லது சோதனைகளை (tests) உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.]

பின்தங்கிய வகுப்பினரை நிர்ணயிக்க உதவும் அளவுகோல்களை வழங்கிய வழக்குகள் (Tests for determining the social and educational backwardness - Case Laws):

Ram Krishna Singh v. State of Mysore[1]

1941-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கட் தொகை கணக்கை அடிப்படையாகக் கொண்டு, 1959-ஆம் ஆண்டில் பின்தங்கி உள்ள வகுப்பினர்களை நிர்ணயம் செய்த விதமானது, அறிவுக்கு புலனாகக் கூடிய கொள்கைகளின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகக் கருத முடியாது என மேற்படி வழக்கில் கூறப்பட்டது. ஏனெனில் 1941 மற்றும் 1959-ஆம் ஆண்டிற்கிடையில் பல்வேறுபட்ட மாறுதல்கள் நிகழ்ந்ததே இதற்குக் காரணமாகும்.

M.R.Balaji v. State of Mysore[2]

இவ்வழக்கின் சங்கதிகள்படி, மைசூர் அரசாங்கமானது மருத்துவ மற்றும் பொறியியற் கல்லூரிகளில் பின்வரும் அடிப் படையில் இட ஒதுக்கீடு செய்து உத்தரவு ஒன்றை ஷரத்து 15(4)-இன் கீழ் வெளி யிட்டது. அதன்படி, பின்தங்கிய வகுப்பினருக்கு 28 சதவீதமும், மிகவும் பின்தங்கிய வகுப்பினருக்கு 20 சதவீதமும், தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 18 சதவீதமும், ஆக மொத்தம் 68 சதவீத இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 32 சதவீத இடங்கள் மட்டுமே தகுதியின் அடிப்படையிலான மாணவர் களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்படி உத்தரவின் பலனால் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களை விட அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர்கள், மேற்படி உத்தரவை எதிர்த்து வழக்கிட்டனர்.

1. AIR 1960 Mys. 338
2. AIR 1963 SC 649

அவர்கள் பெற்றுள்ள மதிப்பெண்ணின் அடிப்படையில் கல்லூரியில் சேருவதற்குண்டான தகுதியை பெற்றிருந்தும், மேற்படி உத்தரவில் தகுதி அடிப்படையில் குறைவான இடங்களே ஒதுக்கப்பட்டிருப்பதால், அவர்களால் கல்லூரியில் சேர இயலவில்லை. 'பின்தங்கிய வகுப்பினரை', மீண்டும் 'மிகவும் பின் தங்கிய வகுப்பினர்' (More backward class) என்று உட்பிரிவாக வகைப்படுத்தியிருப்பது ஷரத்து 15(4)-ன்படி நியாயமானதாக இல்லை என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஷரத்து 15(4)-இல் கூறப்பட்டுள்ள 'பின்தங்கிய நிலை' என்பது சமூகத்திலும் கல்வியிலும் பின்தங்கிய நிலையைக் குறிப்பிடுகிறதே தவிர, சமூகம் மற்றும் கல்வி ஆகிய இரண்டில் ஏதேனும் ஒன்றில் பின்தங்கிய நிலையைக் குறிப்பிடவில்லை என்று உச்ச நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. மேலும், 'சாதி' என்பது பின்தங்கிய நிலையை நிர்ணயிப்பதற்கு உதவும் ஒரு காரணி என்றாலும், அது மட்டுமே ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை பின்தங்கியவரா இல்லையா என்பதை நிர்ணயிக்க உதவும் அளவு கோல் ஆகாது; வறுமை, தொழில், வாழுமிடம் ஆகிய இன்னபிற தொடர்புடைய காரணிகளையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும், ஷரத்து 15(4)-இல் 'சாதி' (Caste) பற்றிக் குறிப்பிடவில்லை; மாறாக 'வகுப்பினர்' (Class) என்று மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 'சாதியும்', 'வகுப்பினரும்' ஒன்றல்ல என்றும் கூறி பிற காரணிகளை கருத்தில் கொள்ளாமல், 'சாதியின்' அடிப்படையில் மட்டுமே அமைந்த மேற்படி உத்தரவு செல்லாது என்றும் உச்ச நீதிமன்றம் அறிவித்தது. இப்படிப்பட்ட சூழலில் ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களின் சதவீதம் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருக்க வேண்டுமென்றும், 50 சதவீதத்திற்கு எவ்வளவு குறைந்திருக்க வேண்டுமென்பது அந்தந்த நேர்வின் சூழலைப் பொறுத்தது என்றும் மைசூர் அரசிற்கு அறிவுறுத்தியது. எனினும் காலப்போக்கில் உச்ச நீதிமன்றத்தின் இந்த கடுமையான அணுகுமுறை பின்வரும் வழக்குகளின் போது சற்றே தளர்த்தப்பட்டது.

A.Periakaruppan v. State of Tamil Nadu[1]

சாதியின் அடிப்படையில் பின்தங்கிய வகுப்பினர்களை வரிசைப்படுத்துவது ஷரத்து 15(4)-இன் பார்வைக்குட்பட்டதே என மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால் மேற்படி சாதி, சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ளதென்பதை

1. AIR 1971 SC 2303

மெய்ப்பிக்க வேண்டும் எனவும் உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது. ஒருமுறை ஒரு வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினராக கருதப்பட்டு விட்டால், அவர்கள் அவ்வாறே தொடர்ந்து பின்தங்கிய வகுப்பின ராக இருக்க வேண்டியவர்கள் என்ற அடிப்படையில் அரசு தொடர்ந்து செல்லக் கூடாதென உச்ச நீதிமன்றம் அரசுக்கு அறிவுறுத்தியது. மேற்கண்ட மாதிரியானதொரு அணுகுமுறையில் அரசு சென்றால் அது 'இட ஒதுக்கீடு செய்தல்' என்ற நோக்கத் தையே அழித்துவிடக் கூடும். ஆகவே அரசு இட ஒதுக்கீடு செய்கை யில் அவ்வகுப்பினர் உண்மையிலேயே சமுதாயம் மற்றும் கல்வியில் அச்சமயத்தில் பின்தங்கியுள்ளனரா என்பதை ஆராய்ந்து, அதன் படி செயல்பட வேண்டும் என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

State of A.P. v. U.S.V. Balaram[1]

இவ்வழக்கிலும் முன்கண்ட வழக்கில் கூறப்பட்ட கருத்துக் களே மீண்டும் வலியுறுத்தப்பட்டன. இவ்வழக்கில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரை, 'பின்தங்கியுள்ள வகுப்பினரா' என்பதை நிர்ணயம் செய்வதற்கு அவ்வகுப்பினரில் உள்ள ஒரு நபரின் சாதி ஒன்றை மட்டுமே அடிப்படை சோதனையாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும், அவ்வகுப்பினர் அனைவரின் சாதியை எடுத்துக் கொண்டு, அவர்கள் சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கியுள்ளனரா என்பதை ஆராய்ந்து, அதன் பின்னரே அவர்களை 'பின்தங்கியுள்ள வகுப்பினர்' பட்டியலில் சேர்க்க வேண்டும் என்றும் கூறப்பட்டது. பின்தங்கியுள்ள வகுப்பினர், சமுதாயத்தில் மற்றும் கல்வியில் முன்னேறிவிட்டதாக அரசுக்கு தெரிய வந்தால், அவ்வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு உள்ளிட்ட எவ்வித சிறப்பு பாதுகாப்புகளையும் தருவதற்கு அரசு கடமைப்பட்டதல்ல. அதற்குத் தக்க விதத்தில் 'பின்தங்கிய வகுப்பினர்' பட்டியலை அரசு திருத்தி அமைக்கலாம்.

K.S.Jayasree v. State of Kerala[2]

கேரள வாழ் மக்களில் எப்பகுதியினர் சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ளனர் என்பதை ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்கும் பொருட்டு கேரள அரசு விசாரணைக் குழு (Commission) ஒன்றை அமைத்தது. ஆண்டு வருமானம் ரூ.10,000/

1. AIR 1971 SC 1375
2. AIR 1976 SC 2381

-த்திற்கு மேற்பட்டுள்ள குடும்பங்களை (அப்பொழுதைய 'செல்வந்தர்கள்') மருத்துவக் கல்லூரிகளில் பின்தங்கியுள்ள வகுப்பினர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடங்களைப் பெற தகுதியற்றவர்கள் என கேரள அரசு உத்திரவிட்டது. இவ் வுத்திரவு சரியான ஒன்றே என உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் தீர்ப்பளித்தது. உச்ச நீதிமன்றம் தனது தீர்ப்பினைக் கூறும் பொழுது, வறுமை என்பது மட்டுமே அல்லது சாதி என்பது மட்டுமே 'பின்தங்கியிருப்பதை' (Backwardness) நிர்ணயிக்க உதவும் ஒரு காரணியாக இல்லாது போனாலும், அது சமுதாயத் தில் பின் தங்கியுள்ள நிலையை தீர்மானிக்க உதவும் வண்ணம் அமைந்துள்ள ஒரு தொடர்புக் கூறு (relevant factor) ஆகும் என்றும், ஆகவே சாதி மற்றும் வறுமையை குடிமக்களின் பின் தங்கியுள்ள நிலையை நிர்ணயிக்க உதவும் ஒரு சார்புக் கருவியாக கருதலாம் என்றும் கூறியது.

Suneel Jatley v. State of Haryana[1]

இவ்வழக்கில் 1 முதல் 8-ஆம் வகுப்பு வரையிலான ஆரம்பக் கல்வியை கிராமப்புற பள்ளிகளில் படித்த மாணவர்களுக்கு, அதே ஆரம்பக் கல்வியை நகர்ப்புற பள்ளிகளில் படித்த மாணவர்களைக் காட்டிலும் அதிக இட ஒதுக்கீட்டை எம்.பி.பி.எஸ்., மற்றும் பி.டி.எஸ்., மருத்துவப் படிப்புகளில் சேர்வதற்கு அளித்தது, ஷரத்து 15(4)ஐ மீறுவதாக உள்ளது என்றும், கிராமப்புற மற்றும் நகர்ப்புற பள்ளிகளில் படித்த மாணவர்களிடையே வேற்றுமை காட்டி வரிசைப்படுத்திய விதம் பகுத்தறிவுக்கு ஒவ்வாதது எனவும், நியாய மற்றது எனவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Indira Sawhney v. Union of India (or) Mandal Commission Case[2]

இவ்வழக்கு சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினர் யார் என்பது குறித்து மண்டல் கமிஷன் கொடுத்த பரிந்துரைகளை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மிக முக்கியமான வழக்காகும். இதில் உச்ச நீதிமன்றம் பல முக்கிய கொள்கைகளை வகுத்தது. (விரிவாக பின்னர் வரும் ஒரு தனி வினாவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ளது.)

1. AIR 1976 SC 2381
2. AIR 1993 SC 477 : 1984 4 SCC 296

Dr. Priti Srivasthava v. State of Madhya Pradesh[1]

இவ்வழக்கில் எம்.பி.பி.எஸ., படிப்புச் சேர்க்கைக்காக தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் சமூகம் மற்றும் கல்வியில் பின்தங்கியவர்களுக்கு குறைந்த மதிப்பெண்கள் நிர்ணயிக்கப்படலாம் என்பதை உச்ச நீதிமன்றம் ஏற்றது. ஆனால் மேற்கல்வி பட்டப்படிப்பிற்கு பொது வகையினரைவிட குறைந்த மதிப்பெண்கள் நிர்ணயிக்கப்படக் கூடாது என்று கூறியது.

Dr. Neelima v. Dean P.G. Studies, A.P. Agriculture University, Hyderabad[2]

இவ்வழக்கில் உயர்ந்த சாதியைச் சேர்ந்த பெண் ஒருத்தி பழங்குடியின ஆண் ஒருவரை திருமணம் செய்து கொள்வதால் பழங்குடியினருக்கு உள்ள இட ஒதுக்கீட்டுப் பலன் பெற அருகதை யுடையவள் அல்ல என்று ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றம் கூறியது. வழக்கின் சங்கதிகள்படி மேல்முறையீட்டாளர் ரெட்டி சாதியில் பிறந்த ஒரு பெண் ஆவார். இச்சாதி முன்னேறிய வகுப்பு (Forward class) ஆகும். இவர் எருகாலா பழங்குடியினத்தைச் சேர்ந்த ஆண் ஒருவரை திருமணம் செய்து கொள்கிறார். இப்பழங்குடியினம் ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உள்ள அட்டவணை பழங்குடியினம் (Scheduled Tribe) ஆகும். இந்நிலையில் அப்பெண் தனது திருமணத்திற்குப் பிறகு ஐதராபாத்தில் உள்ள வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் எம்.எஸ்.சி., பட்டப்படிப்பில் சேர விண்ணப்பம் செய்தார். ஆனால் அப்பெண் தனது திருமணத்தின் காரணமாக பழங்குடியினருக்காக செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டில் அவரது சேர்க்கையைஅனுமதிக்க முடியாது என்று ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் கூறியது.

Meera Kanwaria v. Sunita[3]

மேற்கண்ட வழக்கின் அதே நிலைப்பாடு இவ்வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் எடுத்துரைக்கப்பட்டது. அதாவது இவ்வழக்கில் உயர்ந்த சாதியைச் சேர்ந்த பெண் ஒருத்தி அட்டவணை சாதியை (Scheduled Caste) சேர்ந்த ஆண் ஒருவரை திருமணம் செய்து கொள்வதாலே அவர் அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து

1. AIR 1999 SC 2894
2. AIR 1994 AP 229
3. AIR 2006 SC 597

15(4) மற்றும் 16(4)-இல் கொடுக்கப்பட்டுள்ள பலன்கள எடுத்துக் கொள்ள முடியாது என்று உச்ச நீதிமன்றம் நிலைநிறுத்தியது. வழக்கின் சங்கதிகள்படி உயர்ந்த சாதியைச் சேர்ந்த இந்து பெண் ஒருவர் அட்டவணை சாதியைச் சார்ந்த ஆண் ஒருவரை திருமணம் செய்து கொள்கிறார். இத்திருமணம் வேத மந்திரங்கள் ஓத இந்து சடங்கு சம்பிரதாயப்படி நடந்ததாகும். இவரது திருமணத்தை கணவனின் வீட்டார் மட்டுமே ஏற்றுக் கொண்டனர். அதே நேரத்தில் அப்பெண்ணை கணவனின் சமூகம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே அப்பெண் அட்டவணை சாதியினர் என்ற தகுநிலையை அடைந்தவரல்ல என்றும், அச்சாதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்திற்காக தேர்தலில் போட்டியிட முடியாது என்றும், அப்பெண்ணை கணவனின் குடும்பத்தினர் ஏற்றுக் கொண்டனர் என்பது மட்டுமே போதுமானதல்ல என்றும், கணவனின் சமூகத்தினர் அவரை ஏற்றுக் கொண்டனர் என்பதை திட்டவட்டமாக மெய்ப்பிக்க வேண்டியது அவசியம் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

Ashok Kumar Thakur v. Union of India[1]

இவ்வழக்கு **உயர் கல்வி நிறுவனங்களில் 'இதர பின்தங்கிய வகுப்பினருக்கு' (O.B.C. Reservation in Higher Educational Institutions)** இட ஒதுக்கீடு அளிப்பது தொடர்பான முக்கியமான வழக்காகும். IIT, IIM போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் இதர பின்தங்கிய மாணவர்களை சேர்த்துக் கொள்வதில் அவர்களுக்கு 27 சதவீத இட ஒதுக்கீடு அளிப்பதற்கு வகை செய்து 2006-ஆம் ஆண்டில் அரசியலமைப்பில் ஒரு திருத்தச் சட்டம் [Constitution (93rd Amendment) Act, 2005] கொண்டு வரப்பட்டது. இத் திருத்தச் சட்டத்தின் செல்லுந்தன்மையை இவ்வழக்கின் போது ஆராய்கையில் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் கே.ஜி.பாலகிருஷ்ணன் அடங்கிய அய்ந்து நீதிபதிகள் ஆயம் மேற்படி திருத்தச் சட்டம் அரசியலமைப்பிற்குட்பட்டதே என்று தீர்ப்புரைத்தது. எனினும் தனியார் கல்வி நிறுவனங்களில் இத்தகு வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அளிப்பது தொடர்பான பிரச்சனை பற்றி தீர்வு ஏதும் கூறாமல் உச்ச நீதிமன்றம் அப்படியே விட்டுவிட்டது. இத் திருத்தமானது மாணவர்களில் உள்ள பொது வகையினரின் (General Category) தற்போதைய எண்ணிக்கையை கணக்கில் கொள்

1. AIR 2008 SCW 2899

ளாமல், இதர பின்தங்கிய வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு அளிக் கிறது. இங்கு சமூக மற்றும் கல்வியில் மேம்பட்ட உயர் வகுப் பினருக்கு (Creamy layer) (அதாவது முன்னேறிய வகுப்பினர்) திருத்தச் சட்டத்தின் பலனை கிடைக்கும்படி செய்ய இயலாது என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.மேலும் இந்த இட ஒதுக்கீடானது ஒவ்வொரு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறையும் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

இங்கு கவனிக்கத்தக்கது யாதெனில் முன்னதாக **மண்டல் கமிஷன்** வழக்கில் **(Indira Sawhney v. Union of India (or) Mandal Commission Case)**[1] IIT, IPM போன்ற உயர் கல்வி நிறுவனங்களிலும் பல்கலைக்கழகங்களில் பட்ட மேற்படிப்பு அளவிலும் 'இதர பின் தங்கிய மாணவர்களுக்கு' இட ஒதுக்கீடு கிடையாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. ஆனால் தேர்தலில் வாக்குகளைப் பெறும் உத்தியாக, உச்ச நீதிமன்றத்தின் இத்தீர்ப்பை செயலாக்கத்திற்கு கொண்டு வருவதற்கு அப்போதைய அரசு மேற்படி 2006-ஆம் ஆண்டு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் [Constitution (93rd Amendment) Act, 2005] வாயிலாக முட்டுக்கட்டை இட்டுவிட்டது.

(இ) பொதுப்பணியில் சம வாய்ப்பு

(ஷரத்து 16)

[C] Equality of Opportunity in Public Employment

(Article 16)

40. Examine the scope of the right toequality of opportunity in matters of public employment with the aid of recent cases. (பொதுப்பணி[2] சம்பந்தப்பட்ட வகைகளில் சம உரிமை அளிக்கப்படும் வாய்ப்பின் அளாவுகையினை அண்மையில் முடிவான வழக்குகளின் உதவியுடன் ஆராய்க.)

(அல்லது)

1. AIR 1993 SC 477 : 1984 4 SCC 296
2. அரசுப்பணி, பொதுப்பணி, அரசு வேலை ஆகிய அனைத்தும் ஒரே பொருளையே தரக் கூடியதாகும்.

Explain the concept of equlity of opportunity in public employment under the Indian Constitution with decided cases. (இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பொது வேலை வாய்ப்பில் சமமான உரிமை என்பதினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.)

(அல்லது)

Discuss briefly equality of opportunity in matters of public employment under the Indian Constitution. (இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி பொதுப்பணியில் அமரும் வாய்ப்புகள் பொறுத்து சமத்துவம் இருக்கிறது என்பதை விளக்குக.)

(அல்லது)

How equality of opportunity for public employment is guaranteed and what are the limitations to such guarantee? (பொதுப்பணி வாய்ப்பில் சம உரிமை எவ்வாறு உத்தரவாதமளிக்கப்பட்டுள்ளது மற்றும் அவற்றின் மீதான வரம்புகள் யாவை?)

(அல்லது)

Equality of opportunity in matters of public employment - Write short notes. (அரசு வேலை வாய்ப்பு சம்பந்தப்பட்டவைகளில் சம உரிமை - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

அரசியமைப்புச் சட்டத்தின் 16-வது ஷரத்தின்உட்கூறு (1) மற்றும் (2) [Clause (1) and (2) of Article 16] ஆகியன பொதுப் பணிகளில் எல்லோருக்கும் சம வாய்ப்பு (Equality of opportunity in public employment) அளிக்கப்பட வேண்டும் என்று கூறுகிறது. இவ்வாறு சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும், மேற்படி 16-வது ஷரத்தின் உட்கூறுகள் 3, 4, 5 ஆகியன மூன்று விதிவிலக்குகளை அல்லது வரம்புகளை (exceptions or limitations) கூறுகிறது.

பொதுப் பணியில் அமரும் வாய்ப்பில் சமத்துவம்:

1) ஷரத்து 16 (1) : அரசின் கீழுள்ள எந்த அலுவலகத்திலும்

பணி அல்லது நியமனம் குறித்த விவரங்களில் எல்லா குடிமகன்களுக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

2) ஷரத்து 16(2) : இந்தியாவின் எப்பகுதியில் வாழ்ந்து வருவதாக இருப்பினும் வேலை வாய்ப்புகளில் அரசு சம வாய்ப்பு அளிக்க மறுக்கக் கூடாது. மதம், இனம், சாதி, பால், இறங்குரிமை, பிறப்பிடம் மற்றும் உறைவிடம், இவற்றின் அடிப்படையில் அரசின் ஒரு அலுவலகத்தில் அல்லது பணியில் ஒரு குடிமகன் அமரத் தகுதியற்றவனாக ஆக்கப்படக் கூடாது.

அரசு பணிகளில் அமர அரசியலமைப்பு சமத்துவம் அளிக்கின்றதென்றாலும், அப்பணிக்கு தேவையான தகுதிகளான அடிப்படைக் கல்வி, தேர்ந்தெடுப்பு தேர்வுகளில் தகுதி பெறல், ஒழுக்கம், கடமையுணர்வு, உளத்திறமை முதலியவற்றை அரசு எதிர்பார்க்கிறது. இவற்றில் தகுதி பெற்றிருந்தால்தான் அங்ஙனம் தகுதி பெற்றவர்களிடையே அரசுப் பணிகளில் சமத்துவத்தை ஷரத்து 16 வலியுறுத்துகிறது. இதனை விடுத்து, எந்த அடிப்படைத் தகுதியோ, தேர்ந்தெடுப்பு தேர்வுகளில் வெற்றியோ பெறாமல் அரசுப் பணிகளில் சம வாய்ப்பு வேண்டும் எனக் கோருவது அர்த்த மற்றதாகும். சமவகையினர் எனக் கருதப்பட்டோர்களிடையே தான் சம வாய்ப்பு அளிக்கப்படும். அரசுப் பணிகளை திறமையாகச் செய்வதற்குரிய தகுதிகளை நிர்ணயிப்பது ஷரத்து 16க்கு எதிராக அமையாது. மேலும் குறிப்பிட்ட பணிகள் ஒழுங்காக நடைபெறுவதற்குரிய ஒழுக்கங்களை அரசு எதிர்பார்ப்பது சமவாய்ப்பு அளிப்பு கோட்பாட்டிற்கு எதிரானதாக கருதப்படமாட்டாது.

Banarsidas v. State of U.P.[1]

இவ்வழக்கில் அரசுப் பணிகளுக்கு விண்ணப்பம் செய்திருக்கின்றவர்களின் குணநலன்கள் மற்றும் முன்னனுபவங்களை அரசு அவர்களை பணியில் நியமனம் செய்வதற்கு கருத்தில் கொள்ளும் என்று கூறப்பட்டது.

Union of India v. Dr. Kohali[2]

இவ்வழக்கில் எலும்பு சிகிச்சை முறை துறையில் (Orthopedics) பேராசிரியராக பணி புரிய எலும்பு சிகிச்சைத் துறையில்

1. AIR 1956 SC 520
2. AIR 1973 SC 811

பட்டம் பெற்றிருத்தல் அவசியம் என்று கூறப்பட்டது. இவ்வாறு பணிக்குண்டான தகுதியை அரசு நிர்ணயம் செய்திருப்பது ஷரத்து 16-ஐ மீறுவதாகாது எனப்பட்டது.

Indira Sawhney v. Union of India[1]

இந்த பிரபலமான வழக்கில், பொதுப்பணிக்கு விண்ணப்பம் செய்பவர்களிடையே நியாயமான வகைப்பாட்டை (reasonable classification) செய்து அதனடிப்படையில் பதவியில் ஒதுக்கீடு செய்ய ஷரத்து 16 அனுமதிக்கிறது என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

State of Haryana v. Rajpal Sharma[2]

இவ்வழக்கில் ஹரியானா மாநிலத்தில் தனியாரால் சொந்த நிதி கொண்டு மேலாண்மை செய்யப்படும் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கள் அரசுப் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் அதே சம்பளம் மற்றும் அகவிலைப்படியை பெற உரிமை படைத்தவர்கள் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதாவது சமமான பணிக்கு சமமான ஊதியம் (equal pay for equal work) என்பது நிலை நிறுத்தப்பட்டது.

State of Haryana v. Tilak Raj[3]

இவ்வழக்கில் ஹரியானா ரோட்வேஸ்-இல் பணியாற்றும் தினக் கூலியாட்கள் (daily wagers) அதில் நிரந்தரமாகப் பணியாற்றும் பணியாட்களுக்கு இணையான சம்பளம் பெற உரிமை படைத்தவர்கள் அல்ல என்று உச்ச நீதிமன்றம் கூறியது. இங்கு 'சமமான பணிக்கு சமமான ஊதியம்' என்ற கொள்கை பொருந்தாது. ஏனெனில் நிரந்தரமாகப் பணியாற்றும் பணியாளர்கள் ஒரு நிச்சயமான பதவியில் இருக்கின்றனர். ஆனால் தினக் கூலியாட்களுக்கு அப்படிப்பட்ட நிரந்தரப்பதவி ஏதும் கிடையாது. எனினும் அத்தகு தினக் கூலியாட்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயம் செய்து அதை அவர்களுக்கு அரசு அளித்தாக வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

---

1. AIR 1993 SC 477 : 1984 4 SCC 296
2. AIR 1997 SC 449
3. AIR 2003 SC 2658

பொதுப் பணிகளில் சம வாய்ப்பு அளிப்பதற்கு உள்ள விதிவிலக்குகள் (அல்லது) வரம்புகள்:

பொதுப்பணி வாய்ப்புகளில் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டாலும், ஷரத்து 16-இன் 3, 4, 5 ஆகிய உட்கூறுகள் விதிவிலக்குகளைப் பகர்கின்றன. அவை வருமாறு:

1) ஷரத்து 16(3) : மாநில அரசின் ஒரு சில பணிகளைப் பொறுத்தவரை உறைவிடம் (residence) என்பதை ஒரு தகுதியாகக் குறிப்பிட்டு அதன் அடிப்படையில் வேறுபாடு காட்டப்பட்டால், அஃது அரசியலமைப்புச் சட்டத்திற்கு எதிராக கருதப்படமாட்டாது. ஆனால் மாநிலங்களுக்கு இடையே இவ்வகையில் வேறுபாடுகள் ஏற்படாதவாறு பாராளுமன்றம் ஒரே சீரான சட்டத்தை ஏற்படுத்த அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றமே அப்படிப்பட்ட பணிகளைப் பொறுத்தவரை 'உறைவிடம்' என்பதை ஒரு முன்தகுதியாகக் குறிப்பிட்டுச் சட்டம் இயற்றும்.

2) ஷரத்து 16(4) : அரசுப்பணிகளில் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படாத பின்தங்கிய வகுப்பினர்களுக்கு (Backward classes) சாதகமாக பதவி நியமனத்தை ஒதுக்கீடு செய்வதற்குண்டான சட்டமியற்ற அரசுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. இதனால் பொதுப்பணிகளில் மிகக் குறைந்த வாய்ப்புகளையே பெற்று வந்த பின்தங்கிய வகுப்பினர்கள் தங்களுக்குரிய பங்கினைப் பெற வழி ஏற்படுகிறது. இவர்களுக்கு மட்டும் இப்படிப்பட்ட முன்னுரிமை அளிக்கப்பட்டிருப்பது ஷரத்து 16-க்கு எதிரானதாக அமையாது.

ஷரத்து 16(4-ஏ) : அரசுப் பணிகளில் போதுமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படாத அட்டவணை சாதியினர் மற்றும் அட்டவணை பழங்குடியினருக்கு சாதகமாக அரசுப் பணிப் பதவிப் பிரிவுகளில் (class of posts) பதவி உயர்வு அளிப்பதற்குண்டான விடயங்களில் இட ஒதுக்கீடு செய்யும் பொருட்டு சட்டமியற்ற அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதை ஷரத்து 16 தடுக்கவியலாது.

ஷரத்து 16(5) : சமயச் சார்பான நிறுவனங்களில் அச்சமயங்களைச் சார்ந்தவர்கள்தான் நியமனம் செய்யப்பட வேண்டும் என்பது ஷரத்து 16க்கு விதிவிலக்காக அமைகிறது.

மேற்கண்ட விதிவிலக்குகளில் சம வாய்ப்பு என்பதைக்

கோர வழியில்லை.

முக்கியமான வழக்குகள்:

Venkataramna v. State of Madras[1]

இவ்வழக்கு இசுலாமியர்கள், கிறுத்துவர்கள், ஹரிஜனர்கள், பின்தங்கிய இந்துக்கள், பிராமணரல்லாத இந்துக்கள் மற்றும் பிராமணர்களுக்கு பதவியில் ஒதுக்கீடு செய்யப்பட்டதை எதிர்த்து தொடுக்கப்பட்டதாகும். ஹரிஜனர்களுக்கும் பின்தங்கிய இந்துக்களுக்கும் இட ஒதுக்கீடு செய்தது செல்லும் என்றும், இசுலாமியர்கள், கிறுத்தவர்கள், பிராமணரல்லாத இந்துக்கள் மற்றும் பிராமணர்களுக்கு இட ஒதுக்கீடு செய்தது ஷரத்து 16(4)-ஐ மீறுவதாக உள்ளதால் செல்லாதது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஏனெனில் இங்கு மதம் அல்லது சாதியின் அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டது, ஷரத்து 16(2)-ஆல் தடை செய்யப்பட்டதென்றும், மேலும் ஷரத்து 16(4)-ஆல் பாதுகாக்கப்படவில்லையென்றும் காரணம் கூறப்பட்டது.

All India Station Master's Association v. General Manager, Central Railway[2]

சம வாய்ப்பு என்பது பதவியளிப்பதில் மட்டும் பின்பற்ற வேண்டியது என்றில்லாமல் பதவி உயர்வு முறைகளிலும் பின் பற்றக் கூடிய ஒன்றாகும். இக்கருத்தை மேற்கண்ட வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒப்புக் கொண்டாலும், சம வாய்ப்புக் கொள்கை என்பது, ஒரே பிரிவிலுள்ள ஒரே நிலையிலுள்ளவர்களாலேயே மட்டும் பின்பற்றக் கூடியது என்று கூறியது.

Kishori v. Union of India[3]

மேற்படி வழக்கில் கூறப்பட்டதைப் போன்றே இவ்வழக்கி லும் கூறப்பட்டது. இதில் வகையினம் I-ன் (Class - I) கீழுள்ள வருமான வரி அதிகாரிகள், உதவி ஆணையர்களாக (Assistant Commissioners) நியமிக்கப்படத் தகுதியுடையவர்கள் என விதி வகுக்கப்பட்டது. ஆனால் வகையினம் II-ன் கீழுள்ள வருமான வரி அதிகாரிகள் உதவி ஆணையர்களாக நியமிக்கப்படத் தகுதி

1. AIR 1951 SC 229
2. AIR 1960 SC 394
3. AIR 1962 SC 1704

யுடைவர்கள் என விதி வகுக்கப்படவில்லை. இங்கு ஒரு குறிப்பிட்ட பிரிவினத்தில் உள்ள அலுவலர்களுக்கு ஒரு குறிப்பிட்ட பதவிக்கு, பதவி உயர்வு அளிக்கப்படுகிறது. எனவே, இங்கு சம வாய்ப்பு எதிர்பார்க்கப்படுகிறது, என்பதற்கு இடமே இல்லை. ஆனால் வருமான வரி அதிகாரிகளின் அதே பிரிவினத்தினருக்கு பல்வேறு விதமான பதவி உயர்வுகள் அளிக்கப்படும் என விதி வகுக்கப் பட்டிருப்பின் அவ்விதி ஷரத்து 16க்கு எதிரானதாக ஆகியிருக்கும்.

Randir Singh v. Union of India[1]

தில்லி நிருவாகத்தின் கீழ் உள்ள தில்லி காவலர் படையில் (Delhi Police Force) பணிபுரியும் வண்டியோட்டும் ஓட்டுநர் காவலர்களுக்கு (Driver Constables) அளிக்கப்படும் ஊதியத் திற்கும், அதே தில்லி நிருவாகத்தின் கீழ் இயங்கும் மற்ற துறைகளின் ஓட்டுநர்களாக பணிபுரிபவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியத் திற்கும் வேறுபாடு இருந்தது. அதாவது, இந்த இரண்டு துறை ஊழியர்களும் செய்யும் வேலை ஒன்றே. ஆனால் வெவ்வேறுபட்ட ஊதியங்கள் அளிக்கப்பட்டன. இவ்வாறு அளிக்கப்பட்டது ஷரத்து 16ஐ மீறுவதாக உள்ளது என உச்ச நீதிமன்றம் அறிவித்தது.

முடிவுரை:

பாராளுமன்றமானது அரசியலமைப்புச் சட்டத்தின் 16-வது ஷரத்தின் இலட்சியத்தை நடைமுறையில் கடைபிடிக்க மொழி, உறைவிடம் போன்றவற்றின் தடையை நன்கு ஆராய்ந்து நீக்குவதற்காக முயன்று வெற்றி கண்டது. அதே சமயத்தில், உச்ச நீதிமன்றமும் எண்ணற்ற வழக்குகளில் பல விதமான பொருள் விளக்கங்களை அளித்தது. இவ்வகையில் சமுதாயத்தின் ஒரு பகுதியினரே பொதுப் பணியை ஏகபோகமாக அனுபவித்து வந்த நிலை நீங்கி, எல்லாச் சமுதாய மக்களும் சம வாய்ப்பு பெற்று நாட்டிற்கு பொதுப் பணியை ஆற்றவும் அதன் பலனைப் பெறவும் முடிந்தது.

41. Comment the majority and minority judgments in Indira Sawhney v. Union of India reported in 1992 Supp. (3) SCC 217. State whether the majority or the minority judgment is correct. (இந்திரா சாவனி எ. மத்திய அரசு என்ற வழக்கில் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மைத் தீர்ப்புகளைப் பற்றிக்

1. AIR 1982 SC 879

கூறுக. வழக்கில் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மைத் தீர்ப்பு களைப் பற்றிக் கூறுக. எந்த வகை சரியானது என்றும் விளக்குக.)

(அல்லது)

Indira Sawhney v. Union of India (Mandal Commisson Case) - Write short notes. [இந்திரா சாவனி - எதிர் - இந்திய யூனியன் (மண்டல் கமிஷன் வழக்கு) - குறுகிய விடை தருக.]

(அல்லது)

Explain the right to equality of opportunity in Public Employment in the light of the decision of the Supreme Court in Indira Sawhney v. Union of India reported AIR 1993 SC 477. (பொது வேலை வாய்ப்பில் சமத்துவ உரிமையினை இந்திரா சானி எதிர் மத்திய அரசு (AIR 1993 SC 477) எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் விளக்குக.)

முன்னுரை:

சாதியின் அடிப்படையில் மட்டும் மக்களின் பின்தங்கிய நிலையை நிர்ணயித்து செய்யப்பட்ட இட ஒதுக்கீடானது ஷரத்து 15(4)க்கு முரணானது என **M.R.Balaji v. State of Mysore**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் மிகக் கடுமையாகக் கூறியதைத் தொடர்ந்து, சமுதாயம் மற்றும் கல்வியில் எவரெல்லாம் பின்தங்கியவர் என்பதை அடையாளம் கண்டு கொள்வதற்கு அதன் பின்னர் எழுந்த பல்வேறு வழக்குகளில், பல்வேறு காரணிகளை (அல்லது) அளவுகோல்களை உச்ச நீதிமன்றம் கூறியது. அந்த வழக்குகளிலெல்லாம், மேற்படி **Balaji** வழக்கில் கூறப்பட்ட உச்ச நீதிமன்றத்தின் கடுமையான அணுகுமுறை சற்றே தளர்த்தப்பட்டது என்று கூறலாம். இந்நிலையில் மண்டல் கமிஷன் நியமிக்கப் பட்டது. அதன் பரிந்துரைகளை எதிர்த்து தொடுக்கப்பட்ட வழக்குதான் **Indira Sawney v. Union of India**[2] ஆகும். அதன் விவரம் வருமாறு:-

Indira Sawhney v. Union of India (or) Mandal Commission Case[2]

ஷரத்து 340-இன்படி திரு. B.P.மண்டல் அவர்களின்

1. AIR 1963 SC 649
2. AIR 1993 SC 477 : 1984 4 SCC 296

தலைமையின் கீழ் குழு (Commission) ஒன்றை இந்திய அரசு 1977-ஆம் ஆண்டில் நியமித்தது. இக்குழு நியமிக்கப்பட்டதற்கான நோக்கம், எவரெல்லாம் சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கிய வகுப்பினராக உள்ளனர், அப்படி பின்தங்கிய வகுப் பினருக்கு சாதகமாக அரசுப் பணிகளில் மற்றும் பதவிகளில் எந்த அளவு இட ஒதுக்கீடு செய்வது என்பதை வரையறுப்பதற்குண் டான பரிந்துரைகளைச் செய்வதற்காக ஆகும். மேற்படி நிலைகளை இக்குழு ஆய்ந்தறிந்து, 31-12-1980ல் தனது அறிக்கையை சமர்ப்பித்தது. ஆனால் அந்த அறிக்கை, 1990-ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரை செயற்படுத்தப்படவில்லை. இந்நிலையில், மேற்படி அறிக்கையில் கண்ட பரிந்துரைகளின் அடிப்படையில் இந்திய அரசுப் பணிகளில் அல்லது பதவிகளில் சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின் தங்கிய வகுப்பினர்களுக்கான இட ஒதுக்கீட்டை அதிகப்படுத்தும் எண்ணம் கொண்டு 13-08-1990-இல் ஒரு அரசுக் குறிப்பாணை (Official Memorandum) வெளியிடப்பட்டது. அதில், அட்டவணைச் சாதியினர் (SC) மற்றும் அட்டவணை பழங் குடியினர்களுக்கு (ST) ஏற்கனவே ஒதுக்கப்பட்டதை விட கூடுத லாக சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினர் களுக்கு அரசுப் பணிகளில் அல்லது பதவிகளில் 27 சதவீதம் ஒதுக் கீடு செய்யப்பட்டிருந்தது. இதை அப்பொழுதிருந்த திரு.வி.பி.சிங் அரசு அமல் செய்த பொழுது, ஏறத்தாழ 3 மாதங்களுக்கு நாட்டில் அமைதியின்மை நீடித்தது. அந்த இட ஒதுக்கீடு சதவீதத்திற்கு எதிராக கிளர்ச்சியும் கொந்தளிப்பும் வெடித்தன. தீக்குளிப்புகள் நடந்தன. அந்த அரசுக் குறிப்பாணையை எதிர்த்து நீதிப்பேராணை மனுக்கள் (Writ Petitions) தாக்கல் செய்யப்பட்டன.

இதனால் பின்னர் பதவியேற்ற புதிய அரசானது, அந்த அரசுக் குறிப்பாணையை சில மாறுதல்களைச் செய்து வெளியிட முனைந்தது. அவ்வாறு மாறுதல்கள் செய்யப்பட்டு, 25-09-1991-இல் மீண்டும் ஒரு புதிய அரசுக் குறிப்பாணை வெளியிடப்பட்டது. அதில் சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கிய வகுப்பினர் களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 27 சதவீதத்தில் மிக்க வறுமை நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் வண்ணம் ஒரு பொருளாதாரக் கொள்கை (economic criterion) அறிமுகப் படுத்தப்பட்டிருந்தது. மேலும் அதில் இட ஒதுக்கீட்டு திட்டத்தின் வட்டத்திற்குள் வராத பொருளாதாரரீதியான பின்தங்கியுள்ள பிற வகுப்பினர்களுக்கு (other economically backward sections) அரசுப் பணிகளில் கூடுதலாக மற்றுமொரு 10 சதவீதம் ஒதுக்கீடு

செய்யவும் விழையப்பட்டிருந்தது.

இந்நிலையில்தான் **Indira Sawhney** களத்தில் குதிக்கிறார் என்று சொல்ல வேண்டும். அவர் அரசு வெளியிட்ட மேற்படி அரசுக் குறிப்பாணைகள் அரசியலமைப்பற்றது; எனவே செல்லாதவை என விளம்பக் கோரி வழக்கிட்டார்.

அவ்வழக்கு ஒன்பது நீதிபதிகள் கொண்ட ஒரு சிறப்பு ஆயத்தால் (Special Bench) விசாரிக்கப்பட்டது. அதில் பெரும் பான்மையான தீர்ப்பு (Majority judgment) வழங்கிய ஆறு நீதிபதிகள் (6:3), 13-08-1990-ஆம் தேதிய அரசுக் குறிப்பாணையானது சில நிபந்தனைகள் மற்றும் முன்தேவைகளுக்கும் உட்பட்டு (subject to certain condition and prerequisites) செல்லத்தக்கதே என்றும், அரசியலமைப்பிற்குட்பட்டதே என்றும் தீர்ப்பளித்தனர். பொருளாதாரரீதியாக பின்தங்கியுள்ள பிற வகுப்பினர்களுக்காக கூடுதலாக 10 சதவீதத்தை ஒதுக்கீடு செய்ய விழைந்த 25-09-1991-ஆம் தேதிய புதிய அரசுக் குறிப்பாணையானது அரசியலமைப்பற்றது என்றும், செல்லாது என்றும் தீர்ப்பளித்தனர். மீதமுள்ள மூன்று சிறுபான்மை நீதிபதிகள் இதற்கு மறுதலையான தீர்ப்பை (Minority judgment) வழங்கினர்.

மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றமானது, அரசுப் பணியில் குடிமக்களில் பின்தங்கிய வகுப்பினர்களுக்குண்டான இட ஒதுக்கீடு தொடர்பாக பல்வேறு முக்கிய கொள்கைகளை வகுத்துக் கொடுத்தது. அவற்றை பின்வருமாறு சுருக்கமாக தொகுக்கலாம்.

1) அரசுப்பணியில் இட ஒதுக்கீடு செய்வதற்காக ஒரு நியாயமான வகைப்பாட்டை செய்ய ஷரத்து 16(1) அனுமதிக்கிறது. [Article 16(1) permits reasonable classification].

2) பின்தங்கிய நிலை என்பது சமுதாயத்தில் கல்வியில் ஆகிய இரண்டிலும் இருக்க வேண்டும் என்று ஷரத்து 16(4) குறிப்பிடுவதாகக் கூறப்படும் கண்ணோட்டத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது. [rejected the view that backwardness under Article 16(4) should be both social and educational]. அதாவது ஏதேனும் ஒன்றில் பின்தங்கியிருந்தால் போதுமானது.

3) குடிமக்களிடையே பின்தங்கிய வகுப்பினரை அடையாளம் கண்டு கொள்ளல் மற்றும் தீர்மானித்தலுக்குண்டான கருத்தை உச்ச நீதிமன்றம் தெரிவித்தது (identification and determination

of the backward classes of citizens). இதன்படி பின்தங்கிய நிலையானது, பொருளாதார அடிப்படையில் மட்டும் இருத்தல் கூடாது. அதை சமுதாயத்தில் பின்தங்கிய நிலையுடன் கூடுதலான ஒரு துணைக் கூறாக மட்டும் கருத்தில் கொள்ள வேண்டும், என்று கூறியது. எனவே ஷரத்து 16(1) அல்லது 16(4)-இன் கீழான இட ஒதுக்கீடானது பொருளாதாரத்தின் அடிப்படையில் மட்டுமே இருத்தலாகாது என்பது தெளிவானது.

4) பின்தங்கிய வகுப்பினரை, 'பின்தங்கிய வகுப்பினர்' மற்றும் 'மிகவும் பின்தங்கிய வகுப்பினர்' என்று வகைப்படுத்த இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி தடை ஏதுமில்லை என்றும் கூறியது.

5) ஷரத்து 16(4)-இன் கீழ் ஒரு பின்தங்கிய வகுப்பின் உறுப்பினர்கள், சமுதாயத்தில் மிக முன்னேறிய நிலையில் இருப்பின், அவர்கள் பொருளாதாரத்திலும், கல்வியிலும் முன்னேறியவர்களாகவே பொருளாகும் என்றும், அவர்களை பின்தங்கிய வகுப்பிலிருந்து விட்டுவிட வேண்டுமென்றும், அப்பொழுதுதான் உண்மையிலேயே பின்தங்கியுள்ள வகுப்பினரை கண்டறிய முடியுமென்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. இவ்வாறு விட்டுவிடுவதற்குண்டான அடிப்படைகளைக் குறிப்பிட மத்திய அரசுக்கு உச்ச நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தது.

6) பின்தங்கிய வகுப்பினருக்கு அரசுப் பணிகளில் செய்யப்படும் இட ஒதுக்கீடானது 50 சதவீதத்திற்கு மேல் செல்லக் கூடாது.

7) நிரப்பப்படாத பணியிடங்களை அடுத்த ஆண்டிற்கு கூட்டிக் கொண்டே (carry forward) சென்று சதவீதத்தை அதிகப்படுத்திவிடக் கூடாது. 50 சதவீதத்திற்கு மிகக் கூடாது என்பது ஒரு ஆண்டிற்கு மட்டுமே பொருந்தும்.

8) நுண்ணறிவு, திறமை மற்றும் சிறப்பு ஆகிய தகுதிகளின் அடிப்படையில் அமைந்த பணிகளுக்கு அல்லது பதவிகளுக்கு, இட ஒதுக்கீடு கிடையாது. அவ்வாறு தகுதியானவர்கள் மட்டுமே அப்பணியில் அல்லது பதவிகளில் அமர்த்தப்பட வேண்டும்.

9) அட்டவணை சாதியினர் மற்றும் அட்டவணை பழங்குடியினருக்கு சாதகமாக பதவி உயர்வுகளில் (promotion) இட ஒதுக்கீடு செய்வதற்குண்டான சட்ட வகைமுறைகளை இயற்றுவதற்கு அரசுக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதற்கு முன்மேவு அதிகாரம் கிடையாது. வருநிகழ்வு அதிகாரம்தான்

உண்டு. அவ்வாறு சட்டமியற்றிய பிறகு பணியில் அல்லது பதவியில் அமர்பவர்களுக்கே இட ஒதுக்கீடு பொருந்தும்.

10) ஷரத்து 16(4)-இன் கீழ் இட ஒதுக்கீடு செய்ய, அரசுப் பணிகளில் பின்தங்கிய வகுப்பினருக்கு போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படவில்லை என்ற கருத்திற்கு அரசு வர வேண்டும். ஆனால் அரசின் இக்கருத்து, நீதிமுறை சீராய்விற்குட்பட்டது (judicial review).

11) ஷரத்து 16(4)-இன் கீழான இட ஒதுக்கீட்டிற்குண்டான சட்ட வகைமுறையை, நிர்வாகத் துறையின் ஒரு உத்தரவால் இயற்றி விடலாம். பாராளுமன்றமோ அல்லது சட்டமன்றமோ அதை இயற்ற வேண்டிய அவசியமில்லை.

12) மண்டல் குழுவானது, 1951-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கட் தொகையை கணக்கில் கொண்டு பரிந்துரைகளைச் செய்துள்ளது என்ற காரணத்தினாலேயே, அப்பரிந்துரைகளை செல்லாது என் அறிவிக்க இயலாது.

13) பகிரங்க போட்டி வகையினர்களுள் (open competition category) பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவினருக்கு சாதகமாக, அரசு குறிப்பாணையின் 3-வது கூறின் கீழ் 10 சதவீத இட ஒதுக்கீடு செய்திருப்பது அனுமதிக்கத்தக்கதல்ல.

14) ஷரத்து 16(4)-இன் கீழ் இட ஒதுக்கீட்டை செய்துள்ள அரசுக் குறிப்பாணையானது, பின்வரும் நிபந்தனைக்குட்பட்டு செல்லத்தக்கதாகும். அதாவது ' இதர பின்தங்கிய வகுப்பினர்கள்' என்று அறிவிக்கப்பட்டவர்களிலிருந்து சமுதாயத்தில் முன்னேறிய வகுப்பின் உறுப்பினர்கள் மற்றும் உயர் வருவாய் வகுப்பினரை (socially advanced persons and creamy layer) விட்டுவிடப்படல் வேண்டும்.

முடிவுரை:

மேற்படி வழக்கில் கூறப்பட்ட மேற்கண்ட கொள்கைகளுக்குப் பின்னர், ஷரத்து 16(4)-இன் கீழ் அரசுப் பணிகளில் இட ஒதுக்கீடு செய்ய பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என்ற நிலைப்பாடு தோன்றியது. அவை,

1) குடிமக்களில் சமுதாயத்தில் பின்தங்கிய வகுப்பினராக இருக்க வேண்டும்;

2) அவ்வகுப்பினருக்கு அரசுப் பணிகளில் போதிய பிரதிநிதித்துவம் அளிக்கப்படாமல் இருந்திருக்க வேண்டும்;

3) செய்யப்பட வேண்டிய இட ஒதுக்கீடு அரசின் நிர்வாகத் திறனை இழக்குமாறு செய்துவிடல் கூடாது.

எனவே பெரும்பான்மை நீதிபதிகள் மேற்படி கொள்கைகளின் அடிப்படையில் கூறிய தீர்ப்பே சரியானதாக உள்ளது.

(ஈ) தீண்டாமை ஒழிப்பு

(ஷரத்து 17)

[C] Abolition of Untouchability

(Article 17)

42. Abolition of untouchability - Write short notes. (தீண்டாமை ஒழிப்பு - குறுகிய விடை தருக.)

இந்திய அரசியலமைப்பின் 17-வது ஷரத்து, தீண்டாமையை ஒழிக்கிறது மற்றும் எந்த வகையிலும் தீண்டாமை நடைமுறைக்குட்படுத்தப்படுவதை தடுக்கிறது. மேலும் தீண்டாமையின் மூலம் எந்த தகுதியின்மையாவது ஏற்படுத்தப்பட்டால் அது குற்றமாக கருதப்பட்டு சட்டப்படி தண்டிக்கப்படும் என்று கூறுகிறது.

இதற்காக 1955-ஆம் ஆண்டில் நமது பாராளுமன்றமானது தீண்டாமை (குற்றங்கள்) சட்டத்தை இயற்றியது [Untouchability (Offences) Act, 1955]. இது தீண்டாமையை நடைமுறைக்குட்படுத்துபவர்களை தண்டிக்கிறது. இச்சட்டம் 1976-இல் திருத்தப்பட்டு, தற்பொழுது மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டமாக (Protection of Civil Rights Act) விளங்குகிறது.

தீண்டாமை என்பது, தீண்டாமை சட்டத்திலோ அல்லது இந்திய அரசியலமைப்பிலோ வரையறுக்கப்படவில்லை. இது, "காலங்காலமாக நடந்து வந்த ஒரு முறை" (Practice as it had developed historically) என மைசூர் உயர் நீதிமன்றம் **Devarajjah v. Padmana**[1] என்ற வழக்கில் கூறியது. இதன்படி பார்த்தால், இந்து சாதி முறையில் இந்துக்களிடையே ஒரு குறிப்பிட்ட வகுப்பு

1. AIR 1958 Mys. 84

மக்கள், சமூகத்தின் மற்றொரு வகுப்பு மக்களால் தீண்டத்தகாதவர் களாக பார்க்கப்பட்டனர். தொற்றிக் கொள்ளக் கூடிய வியாதியோ, அல்லது பிறப்பு அல்லது இறப்புச் சடங்குகளுக்கு உதவி புரியும் காரணத்தாலோ, அல்லது சாதிக் கலவரத்தினால் உண்டான சமூக மறியலில் ஈடுபட்டதாலோ அல்லது இதைப் போன்ற இன்ன பிற காரணங்களால் ஒருவர் தீண்டத்தகாதவராக கருதப்பட்டார். அவருக்கு ஷரத்து மற்றும் தீண்டாமைச் சட்டம் பாதுகாப்பு அளிப்பதாக உள்ளது.

தீண்டாமையை ஒழிக்க, நாம் முன்கண்ட ஷரத்து 15(2)[1] உதவிக்கு வருகிறது. இச்ஷரத்து மற்றும் மேற்படி 17-வது ஷரத்து ஆகிய இவை இரண்டின் கீழான உரிமை, அரசிற்கெதிராக மட்டுமல்லாமல் தீண்டாமையை நடைமுறைப்படுத்தும் தனிப் பட்ட நபர்களுக்கு எதிராகவும் கிடைக்கிறது என **People's Union for Democratic Rights v. Union of India**[2] என்ற வழக்கில் கூறப்பட்டது. மேலும் **State of Karnataka v. Appa Balu Ingale**[3] என்ற வழக்கில் புதிதாக தோண்டப்பட்ட ஆழ்துளைக் கிணற்றி லிருந்து நீர் எடுக்க தடை செய்யப்பட்டது தீண்டாமையாகும். அவ் வாறு தடுத்தவர்கள், மக்கள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படத்தக்கவர்கள் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப் பளித்தது.

(உ) பட்டங்கள் ஒழிப்பு

(ஷரத்து 18)

[C] Abolition of Titles

(Article 18)

43. Abolition of Titles - Write short notes. (பட்டங்கள் ஒழிப்பு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

State whether National awards are titles within the meaning of Article 18(1) of the Constitution of India. Refer to

1. *விரிவாக பக்கம் எண். 194-இல் காண்க.*
2. AIR 1982 SC 1473
3. AIR 1993 SC 1126

case law. (அரசியல் சட்டம் பிரிவு 18(1)-இன்படி தேசிய விருதுகள், பட்டங்களா என்பதை வழக்குகளின் மூலம் விளக்குக.)

(அல்லது)

Constitutional validity of national awards - Write short notes. (தேசிய விருது வழங்குவதில் அரசமைப்புச் சட்டத்தின் செல்லும் தன்மை - குறுகிய விடை தருக.)

ஒரு குடிமகனுக்கோ அல்லது குடிமகனல்லாதவனுக்கோ அரசு பட்டங்கள் வழங்குவதை **ஷரத்து 18(1)** தடை செய்கிறது. ஆனால் இராணுவம் மற்றும் கல்வியில் சிறப்புடையவர்களுக்கு பட்டங்கள் அளிப்பதை ஷரத்து 18(1) தடுக்கவில்லை. ஏனெனில் அவை அப்பட்டங்களை பெறுவோருக்கு ஊக்கமளிக்கும் வகையில் தரப்படுகின்றன. **ஷரத்து 18(2)**, வெளிநாட்டு அரசிடமிருந்து இந்தியக் குடிமகன் ஒருவன் பட்டம் பெறுவதை தடை செய்கிறது. **ஷரத்து 18(3)**, அரசின் கீழ் எந்த வெளிநாட்டவராவது இலாப நோக்கின் அடிப்படையில் எந்த அலுவலகத்தையாவது நடத்திக் கொண்டிருக்கும் பொழுது, குடியரசுத் தலைவரின் அனுமதி பெறாமல் எந்த வெளிநாட்டு அரசிடமிருந்தும் எந்த பட்டத்தினையும் பெற முடியாது. **ஷரத்து 18(4)**, இலாப நோக்கின் அடிப்படையில் அல்லாமல் வெளிநாட்டவர் நமது அரசின் கீழ் அலுவலகத்தை நடத்தும் பொழுது, குடியரசுத் தலைவரின் அனுமதி பெறாமல் வெளிநாட்டரசிடமிருந்து பட்டத்தினைப் பெறலாம். ஷரத்து 18-ஐ மீறினால் தண்டனை ஏதும் கிடையாது.

பல துறைகளில் ஈடுபட்டு நற்பணி புரிந்ததினால், ஒரு அரசு அங்கீகாரமாக அளிக்கப்படும், 'பாரத் ரத்னா', 'பத்ம பூஷன்', 'பரம்வீர் சக்ரா' ஆகிய பட்டங்களை ஷரத்து 18 தடை செய்யவில்லை. ஏனெனில் அதற்கு மேற்கண்டதுதான் காரணமாகும்.

Balaji Raghvan v. Union of India[1] எனும் வழக்கில் **தேசிய விருதுகள் (Nationa awards)**, ஷரத்து 18-இன் கீழான **பட்டங்கள் (titles)** என்பதின் கீழ் வராது என்றும், எனவே அவை ஷரத்து 18-ஐ மீறுவதாகாது என்றும் கூறப்பட்டது. ஆனால் அந்த விருதுகளை பெயருக்கு முன்போ, பின்போ இணைத்துக் கொள்ளக் கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

1. AIR 1996 SC 770 : (1996) 1 SCC 361

சுதந்திரத்திற்கான உரிமை

(ஷரத்துகள் 19 முதல் 22 வரை)

Right to Freedom

(Articles 19 to 22)

44. "The essence of democracy is that a balance must be struck between individual liberty on the on hand and social control on the other". Briefly explain how the Indian Constitution seeks to achieve this objective. ("ஒருபுறம் தனி நபர் சுதந்திரமும், மறு புறம் சமூகக் கட்டுப்பாடும் இருக்க, அவற்றினிடையே ஒரு சம நிலையை நிறுவ வேண்டியது மக்களாட்சியின் சாரமாகும்". இக்குறிக்கோளை இந்திய அரசியலமைப்பு எவ்விதத்தில் அடைய விரும்புகிறது என்பதை சுருக்கமாக விளக்குக.)

முன்னுரை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19(1)-வது ஷரத்தானது, இந்தியக் குடிமக்களுக்கு மட்டும் பொருந்தக் கூடிய ஆறு வகையான சுதந்திரங்களை அளித்துள்ளது. இவையனைத்தும் தனி நபர் சுதந்திரங்களாக விளங்குகின்றன. எனினும் இவை முழுமையானதல்ல. சமூகக் கட்டுப்பாடு மற்றும் ஒட்டு மொத்த மக்களின் நலன் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு சுதந்திரங்களின் மீது நியாயமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. ஏன் அவ்வாறு செய்யப்பட்டுள்ளன என்பதற்கு பின்வரும் விளக்கமே காரணமாகும்.

விளக்கம்:

தனி நபர் சுதந்திரம் தேவையான ஒன்றுதான். ஆனால் அது கட்டுப்பாடற்றதாக இருப்பின், அங்கு மற்றொருவரின் சுதந்திரம் பறி போக வாய்ப்புண்டு. இதனால் சமூக ஒழுங்கிற்கும், அமைதிக்கும் பங்கம் ஏற்படலாம். எவ்வித கட்டுப்பாடும் இல்லாமல் முழுச் சுதந்திரத்தையும் மக்களுக்கு அளித்துவிட்டால், அதன் விளைவு சந்தேகத்திற்கிடமில்லாமல், அழிவுதான். இந்த இடத்தில் நெருப்பாற்றின் குறுக்கே மயிர்ப்பாலம் கட்டி நடப்பதைப் போன்றதொரு விநோதமான பிரச்சனை எழுகிறது. அதாவது தனிநபர் சுதந்திரமும் வேண்டும். அதே சமயத்தில் அச்சுதந்திரத்தின் வாயிலாக மக்கள் சமுதாயத்திற்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாமல் இருக்கும்

பொருட்டு, அதன் மீது சமூகக் கட்டுப்பாடும் இருக்க வேண்டும். சுருங்கக் கூறின், கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட சுதந்திரம் (restricted liberty) மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டும். தனி நபர் ஒருவர், தனது சுதந்திரத்தை ஒரு எல்லைக்குட்பட்டே துய்க்க வேண்டும்.

இந்நிலையில் கட்டுப்பாடுகள் கொண்ட சுதந்திரம் தேவையா? என்று ஒரு கேள்வி கூட எழலாம். ஆனால் அது நியாயமானதே. எவ்வாறெனில், இந்தியா ஒரு மக்களாட்சி நாடு (Democratic). மக்களாட்சியில் மக்களுக்கு சுதந்திரம் கொடுக்கப் பட வேண்டும். இல்லாவிட்டால், அது மக்களாட்சியாகாது. மாறாக சர்வாதிகார ஆட்சியாகிவிடும் (Tyranny). அதே சமயத்தில் மக்களுக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டுவிட்டால், உதாரண மாக பேசுவதற்கு முழுச் சுதந்திரம் (absolute freedom) அளித்து விட்டால், அது கண்டிப்பாக சமுதாயத்தில் குழப்பத்தை உண்டு செய்து, வன்முறையைத் தூண்டிவிடும். ஆகவே அச்சுதந்திரம் சமூகத்தின் நலனை முன்னிட்டு கட்டுப்படுத்தப்பட வேண்டும். ஒரு புறம் தனி நபர் சுதந்திரம், மறுபுறம் சமூகக் கட்டுப்பாடு. இரண்டும் வேண்டும். கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்ற நிலை.

இப்பிரச்சனையைத் தீர்க்க இந்திய அரசியலமைப்புச் சட்டம் மேற்கண்ட இரண்டிற்குமிடையே ஒரு சமநிலையை நிறுவியது. அதாவது, மக்களுக்கு சுதந்திரங்கள் சிலவற்றைக் கொடுத்தது. அதே சமயத்தில் சமுதாய நலனுக்காக அச்சுதந்திர உரிமையை பயன்படுத்துவதின் மீது 'சமூகக் கட்டுப்பாடுகள்' என்பதின் அடிப்படையில் சில தடைகளை விதித்தது. ஆனால் அக்கட்டுப்பாடுகள் நியாயமானவையாக (must be reasonable) இருக்க வேண்டும் என்று வகுத்தது. தற்பொழுது ஒட்டுமொத்த மாகப் பார்க்கப் போனால், தனி நபருக்கு சுதந்திர உரிமைகள் வழங்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில், அதன் மீது நியாயமான சில கட்டுப்பாடுகளை விதிப்பதின் வாயிலாக, சமூகக் கட்டுப்பாடும் (Social control) நிலவுகிறது. இச்சம நிலையே மக்களாட்சி நடைபெற வழி வகுக்கிறது. இதுவே அதன் சாரமுமாகும்.

இது குறித்து **A.K.Gopalan v. State of Madras**[1] என்ற வழக்கில் மாண்பமை நீதியரசர் முகர்ஜி அவர்கள் கூறும் கருத் தினை காண்பது இங்கு பொருத்தமானதாகும். அதாவது, எவ்வித

1. AIR 1950 SC 27

தடைகளுமற்ற, கட்டுப்பாடில்லாத முழுச் சுதந்திரம், சமூக ஒழுங்கின்மைக்கு வழி வகுக்கும். அம்மாதிரியான சுதந்திரத்தைப் போல் எது ஒன்றும் இருக்க முடியாது. சுதந்திர உரிமைகள் அனைத்தும், சமுதாயத்தின் பாதுகாப்பு, அமைதி, சுகாதாரம், பொது ஒழுங்கு மற்றும் அறங்களின் நலனுக்காக அரசு விதிக்கும் நியாயமான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். சாதாரணமாக மனிதன் ஒருவன், தான் விரும்பிய இடத்தில் வாழவும், தான் விரும்பியதைச் சொல்லவும், தான் செல்ல விரும்பிய இடத்திற்குச் செல்லவும், தான் விரும்பிய தொழிலை அல்லது வியாபாரத்தைச் செய்யவும் சுதந்திர உரிமை படைத்தவன். ஆனால் ஒரு நிபந்தனை யாதெனில், அம்மனிதனின் மேற்படி செயல்கள் சட்டத்திற்குட் பட்டதாகவும், மற்றவர்களின் சுதந்திரத்திற்கு ஊறு விளைவிக்காத வண்ணமும் இருக்க வேண்டும். ஆகவே, நியாயமான கட்டுப்பாடு களையுடைய மக்களின் உரிமைகளை அறிவிப்பதன் வாயிலாக தனி நபர் சுதந்திரத்திற்கும் சமூகக் கட்டுப்பாட்டிற்கும் இடையே ஒரு சமநிலையை நிறுவ நமது அரசியலமைப்பு முயற்சிக்கிறது என நீதியரசர் முகர்ஜி கூறுகிறார்.

முடிவுரை:

நமது அரசியலமைப்பின் 19(1)-வது ஷரத்தானது தனி நபர் சுதந்திரங்களை பட்டியலிட்டுக் காட்டுகிறது. அதே சமயத்தில், அச்சுதந்திரங்கள், பொது நலனிற்கு ஊறு விளைவிக்காமல் இருக்கும் பொருட்டு சில நியாயமான கட்டுப்பாடுகளையும் அவை மீது 19(2) முதல் 19(6) வரையிலான ஷரத்துகள் விதித்துள்ளன. (அச்சுதந்திரங்களையும் அவற்றின் மீதான கட்டுப்பாடுகளையும் அடுத்த வினாவின் விடையில் நாம் காண உள்ளோம்.)

(அ) ஆறு வகையான சுதந்திர உரிமைகள்

(ஷரத்து 19)

[A] The Six Freedoms

(Article 19)

45. What are the freedoms that are given by the Indian Constitution toits citizens? Are they unrestricted and absolute freedoms? (இந்திய அரசியல் அமைப்பு தனது குடிமக்களுக்கு அளித்துள்ள சுதந்திரங்கள் யாவை? அவை

கட்டுப்பாடற்ற முழுமையான சுதந்திரங்களா?)

(அல்லது)

Reasonable restrictions - Write short notes. (நியாயமான கட்டுப்பாடுகள்- குறுகிய விடை தருக.)

(அல்லது)

Attempt an elucidation of the test of reasonableness applicable to restriction on the freedoms granted under Art. 19.) (பிரிவு 19-இன் கீழ் உறுதியளிக்கப்பட்டுள்ள சுதந்திரத்தினைக் கட்டுப்படுத்தலுக்கான நியாயமான கட்டுப்பாடுகள் சோதனையினை விவாதித்துக் கூறுக.)

(அல்லது)

What are the seven freedoms guaranteed by the Constitution under Article 19 and how are they amended? How the reasonable restrictions have been imposed before them? (பிரிவு 19ன் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள ஏழு வகையான சுதந்திரங்கள் யாவை? அவை எவ்வாறு திருத்தப்பட்டிருக்கின்றன? அவைகள் எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன?)

முன்னுரை:

உரிமைகளிலேயே மிக முக்கியமானது, குடிமக்களுக்கு அளிக்கப்படும் சுதந்திர உரிமைகளேயாகும். அந்த வகையில் ஷரத்து 19(1) குடிமக்களுக்கு முதலில் ஏழு வகையான சுதந்திரங்களை அளித்திருக்கிறது. பின்னர் 1978-ஆம் ஆண்டின் 44-வது திருத்தச் சட்டத்தால் ஷரத்து 19(1)(f)-ன் கீழான சொத்துரிமை சுதந்திரம் மட்டும் நீக்கப்பட்டு தற்பொழுது ஆறு சுதந்திரங்களாக உள்ளன. அவை வருமாறு:-

ஆறு வகையான சுதந்திரங்கள்:

1. **ஷரத்து 19(1) (a)** - பேச்சு மற்றும் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரம் (Freedom of Speech and Expression);

2. **ஷரத்து 19(1) (b)** - ஆயுதங்களின்றி அமைதியாக கூடுவதற்கான சுதந்திரம் (Freedom of Assembly);

3. ஷரத்து 19(1) (c) - கழகங்கள் மற்றும் சங்கங்கள் அமைப்பதற்கான சுதந்திரம் (Freedom to form Associations and Unions);

4. ஷரத்து 19(1) (d) - இந்தியா முழுவதும் சென்று வர சுதந்திரம் (Freedom of Movement throughout the Territory of India);

5. ஷரத்து 19(1) (e) - இந்தியாவிற்குள் எப்பகுதியிலும் தங்கி வாழும் உரிமை (Freedom to Reside and to Settle);

6. ஷரத்து 19(1) (g) - எந்த தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபாரத்தைச் செய்யும் சுதந்திரம் (Freedom of Profession, Occupation, Trade and Business).

நியாயமான கட்டுப்பாடுகள் (Reasonable Restrictions):

மேற்கண்டவாறு அளிக்கப்பட்டுள்ள சுதந்திரமானது முழுமையானதல்ல. கட்டுப்பாட்டுடன் கூடியதாகும். தற்கால அரசு தனி நபர்களுக்கு முழுச் சுதந்திரத்தை அளிக்க இயலாது. ஒருவருக்கு முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டு அதற்கு கட்டுப்பாடுகளோ அல்லது தடைகளோ விதிக்கப்படவில்லையெனில், அவருடைய சுதந்திரம், மற்றொருவரின் உரிமையைப் பறித்து விடும் என்பது திண்ணம். எனவே மேற்படி சுதந்திரங்களின் மீது, 19(2) முதல் 19(6) வரையிலான ஷரத்துகள் நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கின்றன. அவை வருமாறு:-

1. ஷரத்து 19(1)(a)-படியான, பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தின் மீது **ஷரத்து 19(2)** கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. இக்கட்டுப்பாடுகளை பின்வருவனவற்றின் நலன்களுக்காக அரசு தனி நபர் மீது விதிக்கலாம். அவை, 1. அரசின் பாதுகாப்பு; 2. அண்டை நாட்டுடன் நட்புறவு; 3. பொது அமைதி; 4. அறநெறியிலான ஒழுக்கம்; 5. நீதிமன்ற அவமதிப்பு; 6. அவதூறு கூறல்; 7. குற்றம் செய்யத் தூண்டுதல்; 8. இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மை.

2. ஷரத்து 19(1)(b)-படி, ஆயுதங்களின்றி அமைதியாக கூடுவதற்கான சுதந்திரத்தின் மீதான நியாயமான கட்டுப்பாடுகளை விதிப்பதற்குண்டான அடிப்படைகளை **ஷரத்து 19(3)** கூறுகிறது.

அவை, 1. இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையின் நலனுக்கு உட்பட்டு; 2. பொது அமைதியின் நலனுக்குட்பட்டு.

3. ஷரத்து 19(1)(c)-படியான, கழகங்கள் மற்றும் சங்கங்கள் அமைப்பதற்கான சுதந்திரத்தின் மீதான நியாயமான கட்டுப் பாடுகளை பின்வருவனவற்றின் அடிப்படையில் விதிக்கலாம் என **ஷரத்து 19(4)** கூறுகிறது. அவை, 1. பொது அமைதி அல்லது அறநெறியின் நலனுக்குட்பட்டு; 2. இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையின் நலனுக்கு உட்பட்டு.

4. ஷரத்து 19(1)(d)-படியான, இந்தியா முழுவதும் சென்று வருவதற்குண்டான சுதந்திரத்தின் மீதான நியாயமான கட்டுப் பாடுகளை பின்வருவனவற்றின் அடிப்படையில் விதிக்கலாம் என **ஷரத்து 19(5)** கூறுகிறது. மேலும் ஷரத்து 19(5) -இன் கட்டுப் பாடுகள் **ஷரத்து 19(1)(e)**-ன் சுதந்திரத்திற்கும் பொருந்தும். அவை, 1. பொது மக்களின் நலனுக்குட்பட்டு; 2. பழங்குடியினரின் நலனை பாதுகாக்கும் பொருட்டு.

5. ஷரத்து 19(1)(g)-படியான தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபாரத்தை செய்யும் சுதந்திரத்தின் மீதான நியாயமான கட்டுப்பாடுகளைப் பற்றி **ஷரத்து 19(6)** கூறுகிறது. அவை, 1. நியாயமான தடையாக இருக்க வேண்டும்; 2. பொது மக்களின் நலனிற்குட்பட்டதாக இருக்க வேண்டும்.

ஷரத்து 19(1)(f)-ஆனது, சொத்துரிமையைப் பற்றிக் கூறியது. ஆனால் இது 44-வது சட்டத்திருத்தத்திற்குப் பின்னர் அடிப்படை உரிமை என்ற நிலையிலிருந்து நீக்கப்பட்டு, ஷரத்து 300-இல் சாதாரண உரிமையாகச் சேர்க்கப்பட்டது.

சுதந்திரங்களின் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் நியாயமானவையா என்பதைக் கண்டறியும் சோதனை (Test of Reasonableness):

ஒரு சுதந்திரத்தின் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் மேற்கண்ட 19(2) முதல் 19(6) வரையிலான ஷரத்துகளின் அடிப் படையில் மட்டும் இருக்க வேண்டுமேயொழிய, ஆட்சியாளர் களின் விருப்பு-வெறுப்புக்குட்பட்டும், ஏதேச்சதிகார போக்கு கொண்டவையாகவும், நிலைத்தன்மையற்றவையாகவும் இருத்தல் கூடாது. அவ்வாறு விதிக்கப்படும் கட்டுப்பாடுகள் நியாய மானவையா, இல்லையா என்பதை நீதிமன்றம்தான் கண்டறிய

வேண்டுமே தவிர, சட்டமன்றம் அல்ல[1] . எனவே ஒரு கட்டுப்பாடு நியாயமற்றதாக இருப்பின், அதை செல்லாது என்று அறிவிக்க நீதி மன்றம் அதிகாரம் கொண்டுள்ளது. அக்கட்டுப்பாடு, நியாய மானதா என்பதை அந்தந்த வழக்கின் சூழலைக் கருத்தில் கொண்டே நீதிமன்றங்கள் விளம்ப வேண்டும்;[2] அக்கட்டுப்பாடு எழுத்தால் மட்டுமல்லாமல் நடைமுறையிலும் நியாயமானதாக இருக்க வேண்டும்.[3] ஒரு கட்டுப்பாடு அரசியலமைப்பின் IV-வது பகுதியில் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளின் நோக் கங்களை நிறைவேற்றுவதன் பொருட்டும் இருப்பின், அது நியாய மானதாகவே கருதப்படும்.

முடிவுரை :

சுதந்திரங்களின் மீதான கட்டுப்பாடுகளை நாம் முன்கண்ட ஷரத்து 12-இன் கீழ் 'அரசு' (State) எனும் பதத்தின் கீழ் வரும் அத்தனை அதிகாரஅமைப்புகளுக்கும் விதிக்கலாம். மேலும் அவை மட்டுமே விதிக்க முடியும். அவ்வாறு விதிக்கப்படும் கட்டுப் பாடுகள் நியாயமற்றவையாக இருக்கும்பட்சத்திலோ அல்லது அந்த சுதந்திர உரிமைகள் மறுக்கப்படும்பட்சத்திலோ, பாதிக்கப் பட்ட குடிமகன் அரசின் மீது உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தில் நீதிப்பேராணை (Writ) பிறப்பிக்க வேண்டி மனு தாக்கல் செய்து, இழந்த சுதந்திரத்தை திரும்பப் பெறலாம்.

46. (a) Discuss the nature and scope of the right to freedom of speech and expression as guaranteed in the Indian Constitution.

(b) On what basis are these rights restricted?

(அ) இந்திய அரசியல் சட்டத்தில் பேச்சுரிமை மற்றும் கருத்து வெளியிடும் உரிமை எவ்வாறு பாதுகாக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குக.

(ஆ) எதன் அடிப்படையில் இவ்வுரிமைகள் கட்டுப்படுத் தப்படுகின்றன?

(அல்லது)

1. Chintamani Rao v. State of M.P. (AIR 1951 SC 118)
2. State of Madras v. V.G.Rao (AIR 1952 SC 196)
3. N.B.Khare v. State of Punjab (AIR 1960 SC 211)

Explain to what extent the right to speech and expression are guaranteed by the Indian constitution. (இந்திய அரசமைப்பு சட்டப்படி வழங்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் வெளிப்படுத்தும் சுதந்திரத்தின் எல்லையை விளக்குக.)

(அல்லது)

What is meant by the freedom of speech and expression? State referring to decided cases of the permissible limitation on the freedom of speech and expression. (பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் என்பதின் பொருள் யாது? அச் சுதந்திரத்தின் அனுமதிக்கத்தக்க எல்லை குறித்து தீர்மானிக்கப் பட்ட வழக்குகளுடன் விளக்குக.)

(அல்லது)

Explain the scope of freedom of speech and expression. What are the restrictions that can be imposed on this freedom? (பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் அளவுகையைப் பற்றி விளக்குக. இச்சுதந்திரத்தின் மீது விதிக்கப்படக் கூடிய கட்டுப்பாடுகள் யாவை?)

(அல்லது)

Discuss the extent of freedom of speech by the Constitution. Refer to leading cases. (அரசியலமைப்புச் சட்டம் எவ்வாறு பேச்சுரிமைக்கு உறுதி அளித்துள்ளது என்பதை முக்கிய வழக்குகளை குறிப்பிட்டு விளக்கவும்.)

(அல்லது)

"Right to freedom of speech and expression is not without restrictions". Examine the statement with relevant cases. (பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்தை வெளியிடுவதற்கான உரிமை கட்டுப்பாடற்ற ஒன்றல்ல. இக்கூற்றினை தொடர்புடைய வழக்குகள் கொண்டு ஆராய்க.)

(அல்லது)

What do you understand by the term reasonable restriction? Discuss the same in the context of freedom of speech

and expression as enshrined in Indian Constitution citing relevant cases. ("நியாயமான கட்டுப்படுத்தல்" என்பதைப் பற்றி நீங்கள் அறிந்து கொண்டவை என்ன? அதனை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறை செய்யப்பட்ட பேச்சு மற்றும் கருத்துரைத்தல் உரிமையோடு தொடர்பான வழக்குகளைக் கொண்டு கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

What is meant by freedom of speech and expression? Explain the freedom of press with cases. State the reasonable restriction on the freedom and discuss the same with decided cases. (பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் என்றால் என்ன? பத்திரிக்கைச் சுதந்திரம் குறித்து வழக்குகளுடன் விளக்குக. இச்சுதந்திரம் மீதான நியாயமான தடைகளைக் கூறி, அவற்றினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவாதி.)

(அல்லது)

Examine the scope of freedom of speech and freedom of assembly under the Indian Constitution, referring to relevant case law. Is pre-censorship valid? (இந்திய அரசியலமைப்பின் கீழ் பேச்சுரிமை மற்றும் கூடும் உரிமை தொடர்பான வழக்குகளை ஆதாரங்காட்டி ஆராய்க. முன்னதாக தணிக்கை செய்வது செல்லுடையதா?)

(அல்லது)

"Freedom of Speech and Expression includes Freedom of Press also". Discuss with case laws. "All the unparliamentary languages used in the Parliament in the Centre or in the State Assemblies by the members thereon are not within the scope". How they are protected? ("பேச்சுரிமை மற்றும் சிந்தனை வெளிப்பாட்டு உரிமை என்பது பத்திரிக்கை உரிமை கூட கொண்டது." தகுந்த வழக்காதாரங்களுடன் விவாதிக்க. "மத்திய நாடாளுமன்றத்திலும், மாநில அரசவைகளிலும் அங்கத்தினர்களால் நாடாளுமன்ற மொழிக்கு தரங்குறைவாகும் கீழ்த்தரமானதாக இருந்தாலும் அவை மேற்கூறிய பேச்சுரிமையில் வராது". அவை எவ்வாறு காக்கப்படுகின்றன?)

(அல்லது)

Freedom of Press - Write short notes. (பத்திரிக்கைச் சுதந்திரம் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Freedom of Press is the back-bone of democracy - Write short notes. ("பத்திரிக்கைச் சுதந்திரம் ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும் - குறுகிய விடை தருக.)

(அ) பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் (Freedom of Speech and Expression):

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19(1)(a)-ஆனது இந்தியக் குடிமக்களுக்கு பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்திற்கு உத்திரவாதம் அளிக்கிறது. எவையெல்லாம் மேற் படி சுதந்திரத்தில் வரும் என்பதற்கு உச்ச நீதிமன்றம் பல வழக்கு களில் பொருள் விளக்கமளித்துள்ளது. அவ்வழக்குகள் வருமாறு:-

சில வழக்குகள்:

Lowell v. Griffin[1]

இந்த மிகப் பழைய அமெரிக்க வழக்கில் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் என்பது ஒருவர் தனது கருத்துகளை வாய்ச் சொற்களால், எழுத்தால், அச்சினால், படங்களால் அல்லது வேறு முறையால் சுதந்திரமாக வெளியிடுவதாகும்; எனவே இது சைகைகள், அடையாளக் குறிகள் போன்று பார்வைக்கு புலனாகக் கூடிய விதத்தில் அல்லது தகவல் தொடர்பு சாதனங்களின் வழியாக ஒருவர் தனது கருத்துகளை வெளியிடுவதையும் உள்ளடக்கும் என்று கூறப்பட்டது.

Romesh Thapper v. State of Madras[2]

இது ஒரு மிக முக்கியமான வழக்கு. இது பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தின் பெருமையை கூறுகிறது. இவ்வழக்கில் மனுதாரராகிய ரோமேஷ் தாப்பர் என்பவர், பம்பாயில் பதிப்பு செய்யப்படும் 'கிராஸ் ரோடு' எனும் ஆங்கில

1. (1939) 303 US 444
2. AIR 1950 SC 124

வார இதழின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர் ஆவார். இந்த இதழை, சென்னை அரசாங்கமானது, 1949-ஆம் ஆண்டின் பொது அமைதி பராமரிப்புச் சட்டத்தின் 9(1-A) பிரிவின் கீழ், சென்னை மாநிலத்தில் சுற்றுக்கு விடுவதை (அதாவது மக்களுக்கு பரப்பி விற்பதை) தடை செய்தது. மேற்படி சட்டம், ஷரத்து 19(1)(a)-ன் கீழான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்திற்கு முரணானது என்றும், அரசியலமைப் பற்றது என்றும், எனவே இல்லா நிலையது என்றும் அறிவிக்கக் கோரி ரோமேஷ் தாப்பர் உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டார். உச்ச நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பளித்தது. அதன்படி, பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரமென்பது கருத்துக்களை பரப்புவதற்குரிய சுதந்திரத்தையும் (Freedom of Propagation of ideas) உள்ளடக்கியதாகும். இது பத்திரிக்கையை சுற்றுக்கு விடுவதற்கு (பரப்புவதற்கு) உள்ள சுதந்திரத்தினால் (Freedom of Circulation) உறுதி செய்யப்படுகிறது. பதிப்பு செய்வதற்கு உள்ள சுதந்திரம் (Freedom of Press), கருத்துக்களை பரப்புவதற்குரிய சுதந்திரத்திற்கு முக்கியத்துவமாக உள்ளது. அதைப் போலவே பத்திரிக்கைகளை பரப்புவதற்கு உள்ள சுதந்திரத்திற்கும் முக்கியத்துவமாக விளங்குகிறது. உண்மையில் பத்திரிக்கைகளை பரப்ப வகையில்லாமல், அவற்றை பதிப்பு செய்வதென்பது பொருளற்றதாகும். பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தின் மீது ஷரத்து 19(2)-இன்படி மட்டுமே கட்டுப்பாடுகளை விதிக்கலாம். **"பொதுப் பாதுகாப்பு" (public safety)** அல்லது "பொது அமைதிப் பராமரிப்பு" **(maintenance of public order)** ஆகியவற்றின் மீது கட்டுப்பாடுகளை அல்லது தடைகளை விதிக்க எச்சட்டமாவது அதிகாரமளித்தால், அது ஷரத்து 19 (2)-ன் கீழான நியாயமான கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாகிவிடும். இதனால் அச்சட்டம் அரசியலமைப்பற்றதாகி இல்லாநிலையதாக ஆகி விடும். எனவே மேற்படி வார இதழின் மீது விதிக்கப்பட்ட தடை செல்லாது.

பேசாமல் இருக்கும் சுதந்திரமும் உள்ளடங்கியது (Freedom of Silence also included):

National Anthem Case (or) Bijoe Emmanuel v. State of Kerala[1]

"தேசிய கீத வழக்கு" என்று பிரபலமாக அழைக்கப்படும் இவ்வழக்கு ஷரத்து 19(1)(a) குறித்த ஒரு புதிய பரிமாணத்தைத் தந்தது. இதில் ஒரு பள்ளியில் பயிலும் மூன்று குழந்தைகள் தேசிய

1. (1986) 3 SCC 615

கீதம் பாடப்படும் பொழுது, தாங்கள் மட்டும் பாடாமல் வெறுமனே எழுந்து நின்றனர். இதற்காக அவர்கள் மூவரும் பள்ளியிலிருந்து விலக்கப்பட்டனர். ஆனால் அவ்வாறு விலக்கியது செல்லாது என்றும், ஏனெனில் அவர்களின் மத நம்பிக்கைக்கு எதிராக தேசிய கீதம் இருந்த காரணத்தால், அவர்கள் தேசிய கீதத்தை பாடவில்லையென்றும், இருப்பினும் தேசிய கீதம் பாடப் படும் பொழுது, எழுந்து நின்று மரியாதை செலுத்தினர் என்றும், மேலும் ஷரத்து 19(1)(a)-இன் கீழான கருத்துச் சுதந்திரம் மீறப் பட்டுள்ளது என்றும் அக்குழந்தைகள் சார்பாக வாதிடப்பட்டது. உச்ச நீதிமன்றமும் அக்குழந்தைகள், 1971-ஆம் ஆண்டு தேச மரியாதை அவமதிப்புச் சட்டத்தின்படி எக்குற்றத்தையும் செய்ய வில்லை என்றும், ஏனெனில் அவர்கள் தேசிய கீதம் பாடப்படும் பொழுது எழுந்து நின்று மரியாதை தெரிவித்தனர் என்றும், அக்குழந்தைகளை பள்ளியிலிருந்து விலக்கியது ஷரத்து 19(1)(a)-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை மீறுவதாக உள்ளது என்றும், மேற்படி ஷரத்து 19(1)(a)-இல் **"பேசாமல் இருப்பதற்கான சுதந்திரமும்" (Freedom of Silence)** உள்ளடங்கியுள்ளது என்றும் தீர்ப்பளித்தது.

பத்திரிக்கைச் சுதந்திரமும் உள்ளடங்கியது (Freedom of Press also included):

பத்திரிக்கைச் சுதந்திரம் ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும். அமெரிக்க அரசியலமைப்பில் பத்திரிக்கைச் சுதந்திரம் (Freedom of Press) பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக அச் சுதந்திரம் தனியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. ஆனால் இந்திய அரசியலமைப் பில் அவ்வாறு தனியாக குறிப்பிடப்படவில்லை. ஆனால் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தில் இப்பத்திரிக்கைச் சுதந்திரமும் அடங்கும் என நமது உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் கூறியுள்ளது.

Romesh Thapper v. State of Madras[1]

நாம் ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ள இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் பேச்சுரிமை என்பது, பத்திரிக்கை வெளியிடும் (Publication) மற்றும் பரப்பும் உரிமையையும் (Circulation) உள்ளடக் கியதாகும் எனக் கூறியது.

---

1. AIR 1950 SC 124

Express News Papers v. Union of India[1]

இவ்வழக்கின் சங்கதிகள்படி மத்திய அரசின் ஒரு சட்ட மானது செய்தித்தாள்களின் மீது 4 விதமான தடைகளை விதித்தது. அதாவது, 1. முன் தணிக்கை (Pre-censorship) செய்த பிறகு செய்தித்தாள்கள் வெளியிட அனுமதித்தல்; 2. செய்தித்தாள்களை மக்களிடையே பரப்புவதை (circulation) குறைத்தல் (எடுத்துக் காட்டாக 50,000 செய்தித்தாள் பிரதிகளை மட்டுமே வெளியிட வேண்டும் என்ற கட்டுப்பாடு); 3. அரசாங்கத்தின் உதவியைப் பெற்ற பிறகே எதையும் செய்ய வேண்டும்; 4. நியூஸ்பிரிண்ட் அச்சினைத் தொடங்குவதற்கு தடை. இவ்வாறான கட்டுப் பாடுகளை விதிக்கும் அரசாங்கத்தின் மேற்படி சட்டமானது, ஷரத்து 19(1)(a)-ஐ மீறுவதாக உள்ளதால், அது செல்லாததாகும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Bennet and Coleman & Co. v. Union of India[2]

இவ்வழக்கை பத்திரிக்கைச் சுதந்திரத்தையும் உள்ளடக்கிய பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் குறித்த மிக முக்கிய மான ஒன்று என்று கூறலாம். இவ்வழக்கில் நியூஸ்பிரிண்ட் கட்டுப்பாடு உத்திரவானது ஒரு செய்தித்தாள் அச்சடிக்கக் கூடிய பக்கங்களின் உச்ச அளவு எண்ணிக்கையை நிர்ணயம் செய்திருப் பது ஷரத்து 19(1)(a) மற்றும் 14-இன் வாயிலாக அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறுவதாக உள்ளது எனக் கூறி, அவ்வுத் திரவின் செல்லுந்தன்மை குறித்து வினவப்பட்டது. சிறிய அளவில் இயங்கும் செய்தித்தாள்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதும், மேலும் பெரிய அளவில் இயங்கும் செய்தித்தாள்களின் ஏகபோக உரிமையை கட்டுப்படுத்த வேண்டும் என்பதே இந்த நியூஸ் பிரிண்ட் காகித கட்டுப்பாட்டுக் கொள்கையின் மூல நோக்கமாகும். ஆனால் இந்த நியூஸ் பிரிண்ட் காகித கொள்கை, ஷரத்து 19 (2)-இன்படி, ஒரு நியாயமான கட்டுப்பாடாகாது என உச்ச நீதிமன்றம் கூறியது. ஏனென்றால், செய்தித்தாள்களின் பக்கங்களின் எண்ணிக்கையை குறைக்க மேற்படி கொள்கையை கட்டாயப்படுத் துவதால், அது பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தின் மீதான நியாயமற்ற கட்டுப்பாடாக அமைகிறது.

1. AIR 1958 SC 578
2. AIR 1973 SC 106

Prabha Dutt v. Union of India[1]

செய்தித்தாள் நிருபர்கள், தூக்குதண்டனை அளிக்கப்பட்ட கைதிகளைக் கண்டு, அவர்கள் விருப்பப்பட்டால், அவர்களை பேட்டி காணலாம். பத்திரிக்கைச் சுதந்திரம் தடுக்கப்படக் கூடாது. ஆனால் மேற்கண்ட வழக்கில் பேட்டி கொடுக்க விருப்பமுள்ள தூக்குதண்டனைக் கைதியினை பேட்டி காணும் சந்தர்ப்பத்தினை எவரேனும் தடுக்கிறாரென்றால், அவர் எழுத்து மூலமாக அவ்வாறு தடுப்பதற்கு தக்க காரணங்களை கொடுக்க வேண்டும் எனக் கூறப் பட்டது.

Odyssy Communication Pvt. Ltd. v. Lokvidayan Sanghatana[2]

தில்லி தொலைக்காட்சியில் 'Honi Anhoni' என்ற தொடர் (Serial) ஒளிப்பரப்பானது. அதில் ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு கதை காண்பிக்கப்பட்டது. அக்கதைகள் யாவும் மறு ஜென்மம், ஞான திருஷ்டி, மெஸ்மரிசம் போன்ற கருத்துக்களையே கொண் டிருந்தன. இது மக்களிடையே கண்மூடித்தனமான மற்றும் தவறான நம்பிக்கைகளை வளர்க்கிறது என்று கூறி அத்தொடரை ஒளிபரப்புவதை தடை செய்யுமாறு சமுதாயத் தொண்டு புரியும் கழகமொன்று நீதிப்பேராணை மனு ஒன்றை தாக்கல் செய்தது. இப்பிரச்சனைக்கு முடிவு கூறுகையில் நீதிமன்றமானது, தொலைக் காட்சி நிலையம் விதிக்கும் நிபந்தனைகளுக்குட்பட்டு தொலைக் காட்சியில் படங்களை காண்பிக்க ஒவ்வொரு குடிமகனுக்கும் உரிமை உண்டு என்றும், அது ஷரத்து 19(1)(a)-இன் கீழான கருத்துச் சுதந்திரத்தில் அடங்கும் என்றும், அதனை ஷரத்து 19(2)-இல் கூறப்பட்டுள்ள நியாயமான கட்டுப்பாடுகளின் வாயிலாகத்தான் தடைப்படுத்த முடியும் என்றும் கூறியது. ஆனால் மேற்படி வழக்கில் எதிர்த்தரப்பினர்களாக உள்ள சமுதாயக் கழகத்தினர், தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்டு வந்த மேற்படி தொடரா னது மக்களுக்கு தவறான எண்ணத்தையூட்டுவதாகவோ அல்லது பொது அமைதிக்கு (Public Order) அபாயம் விளைவிப்பதாகவோ இருக்கின்றது என்று நிரூபிக்கத் தவறிவிட்டனர். ஆகவே மேற்படி சமுதாயக் கழகத்தினர் வாதம் தள்ளுபடி செய்யப்பட்டது. எங்ஙனம் குடிமகன் ஒருவன் தனது கருத்துக்களை செய்தித்தாள் அல்லது பத்திரிக்கைகளின் வாயிலாக அவற்றின் உரிமையாளர்கள்

1. AIR 1982 SC 6
2. (1988) 3 SCC 410

கூறும் நிபந்தனைகளுக்குட்பட்டு வெளியிட உரிமை பெற்றிருக் கின்றானோ, அதே போன்றுதான் மேற்கண்டவாறு தனது கதையை தொலைக்காட்சி நிலையம் கூறும் நிபந்தனைகளுக்குட் பட்டு அதில் ஒளிபரப்பும் உரிமையையும் பெற்றுள்ளான் என மேற்படி வழக்கில் நிலைநிறுத்தப்பட்டது.

R.Rajagopal v. State of Tamil Nadu[1]

மிகப் பிரபலமான இவ்வழக்கு, பல கொலைகளைச் செய்து, இறுதியாக சேலத்தில் தூக்கு தண்டனை நிறைவேற்றப்பட்ட குற்றவாளி 'ஆட்டோ' சங்கர் எழுதிய சுயசரிதையின் பிரசுரம் பற்றியதாகும். குற்றவாளி 'ஆட்டோ' சங்கர் சிறையில் இருந்த போது, தனது சுயசரிதையை எழுதினார். அதைச் சிறைச்சாலை அதிகாரிகளின் அனுமதியுடன் தனது மனைவியிடம் கொடுத்து மேற்படி மனுதாரர் ஆர்.ராஜகோபால் நடத்தும் பத்திரிக்கையில் பிரசுரம் செய்ய ஏற்பாடு செய்தார். அந்த சுயசரிதையில், 'ஆட்டோ' சங்கர் தனக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இடையே இருந்த நெருங்கிய தொடர்பை குறிப்பிட்டிருந்தார். இதைக் கண்டு அச்சமடைந்த அதிகாரிகள், ஆட்டோ சங்கரை வேறு விதங்களில் பலவந்தப்படுத்தி, சிறைச்சாலை தலைமைக் கண்காணிப்பாளருக் கும், மேற்படி பத்திரிக்கையின் பதிப்பாசிரியருக்கும் தனது சுயசரிதையை வெளியிட வேண்டாம் என்று கடிதங்கள் எழுத வைத்தனர். மேலும் அக்கடிதங்களின் அடிப்படையில் சிறைச் சாலை தலைமைக் கண்காணிப்பாளரும், 'ஆட்டோ' சங்கர், தாம் சுயசரிதையை எழுதியதை மறுத்துள்ளார்; எனவே அதை பிரசுரம் செய்யக் கூடாது என மேற்படி பத்திரிக்கையின் பதிப்பாசிரியருக்கு கடிதமொன்றை எழுதினார். ஆனால் உச்ச நீதிமன்றமோ, பொது ஆவணங்கள் (Public records) மற்றும் நீதிமன்ற ஆவணங்கள் (Court records) ஆகியவற்றில் காணப்படும் விபரங்களிலிருந்து 'ஆட்டோ' சங்கரின் சுயசரிதையை அவரது ஒப்புதல் இல்லாம லேயே பிரசுரம் செய்ய மனுதாரருக்கு உரிமை உண்டு என்றும், அதை மாநில அரசு அல்லது அரசு அதிகாரிகள் தங்கள் மீதான அவதூறான பிரசுரம் என்பதின் அடிப்படையில் **முன்னதாக தடுக்க** (Pre-stoppage of publication) கோர முடியாது என்றும் தீர்ப்பளித்தது.

மேலும் ஒரு குடிமகன், தான், தனது குடும்பம், திருமணம்,

1. AIR 1995 SC 264

கல்வி, குழந்தைப் பேறு போன்றவற்றில் அந்தரங்கமாக உள்ள வற்றை பாதுகாத்துக் கொள்ள அவருக்கு உரிமை உண்டு. அவற்றை அக்குடிமகனின் அனுமதியில்லாமல் பிரசுரிக்க முடியாது. ஆனால், அதே அந்தரங்கம் பொது ஆவணங்கள் அல்லது நீதிமன்றங்களின் ஆவணங்களின் வழியாக வெளிச்சத்திற்கு வந்துவிட்டால், அதை சம்பந்தப்பட்டவரின் அனுமதியில்லாமலேயே பிரசுரிக்கலாம்; அங்கு அந்தரங்க உரிமை அடிபட்டுப்போய்விடுகிறது என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

இங்கு, சம்பந்தப்பட்ட விடயங்களை நியாயமான அடிப் படையில் சரிபார்த்துதான் பிரசுரம் செய்ததாக பத்திரிக்கைகள் நிரூபித்தாலே போதுமானது; மாறாக, பிரசுரிக்கப்பட்ட விடயங்கள் உண்மையானதுதான் என்பதை நிரூபிக்க வேண்டிய கடப்பாடு பத்திரிக்கைகளுக்கு இல்லை என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் பாலியல் பலாத்காரத்திற்கு, ஆட்கடத்தலுக்கு அல்லது அது போன்ற குற்றங்களுக்கு ஆளாகும் பெண்களின் பெயர்களை, பொது ஒழுக்கத்தின் நலன் கருதி பிரசுரிக்கக் கூடாது என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

Secretary, Ministry of I & B v. Cricket Association of Bengal (CAB)[1]

இவ்வழக்கில் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திர உரிமையின் எல்லையை உச்ச நீதிமன்றம் கணிசமான அளவில் விரிவுபடுத்தியது எனலாம். அதாவது மின்னணு ஒளிபரப்பு ஊடகத்தின் மீது அரசுக்கு சர்வாதீன முற்றுரிமை பெற்றதல்ல (Government has no monopoly on electronic media) என்றும், ஷரத்து 19(1)(a)-இன் கீழ் ஒவ்வொரு குடிமகனுக்கும் முக்கிய நிகழ்ச்சிகள் பற்றி தொலைக்காட்சி அல்லது வானொலி வாயிலாக நேயர்களுக்கு ஒளிபரப்ப உரிமை உண்டு என்றும் அது கூறியது. இதற்கு அரசு தடை விதிக்க வேண்டுமெனில் ஷரத்து 19(2)-இல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகளின் அடிப்படையில் மட்டுமே செய்ய முடியுமே தவிர வேறு அடிப்படையின் கீழ் முடியாது என்றும், மின்னணு ஊடகத்தின் மீது அரசு மட்டுமே முற்றுரிமை கொண்டதாகும் என்ற தடை ஷரத்து 19(2)-இல் வகுத்துரைக்கப் படவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

1. (1995) 2 SCC 161

People's Union for Civil Liverties v. Union of India[1]

இவ்வழக்கு தொலைபேசி உரையாடலை ஒட்டுக் கேட்பது (Telephone Tapping) பற்றியது. ஒருவர் தனது கருத்துக்களை, சிந்தனைகளை வாயால், எழுத்துவடிவில், அச்சு வடிவில், சித்திர மாக அல்லது வேறு வகையில் சுதந்திரமாக வெளியிடுவது ஷரத்து 19(1)(a) கொடுக்கும் உரிமையாகும். ஒருவர் தொலைபேசியில் உரை யாடும் போது அவர் தனது பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் உரிமையை சுதந்திரமாக பயன்படுத்துகிறார். அதை அவருக்குத் தெரியாமல் ஒட்டுக் கேட்பது அல்லது பதிவு செய்வது அவரது அந்தரங்க உரிமையில் தலையிடுவதாகும். அத்துடன் ஷரத்து 19(1)(a) கொடுத்திருக்கும் உரிமையை மீறுவதாகும். எனவே தொலைபேசி ஒட்டுக் கேட்டல் ஷரத்து 19(2) கூறும் நியாயமான கட்டுப்பாடுகளுக்குள் வந்தாலொழிய ஷரத்து 19(1)(a)-இன் இந்திய அரசியலமைப்புச் சட்டம் அளித்திருக்கும் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு உரிமையை மீறுவதாகும் என உச்ச நீதிமன்றம் இவ் வழக்கில் கருத்துரைத்தது.

A.Raja v. P.Srinivasan[2]

இவ்வழக்கு மைய அமைச்சர் ஒருவர் தனது அலுவலகப் பொறுப்பில் நடந்து கொண்ட விதம் பற்றி தமிழகத்தின் ஒரு பிரபல வாரப்பத்திரிக்கை வெளியிட்ட செய்தி தொடர்பான தாகும். இதில் செய்தியை வெளியிடுவதற்கு முன்பாக அது குறித்த சங்கதிகளை உண்மையா என்பதை சரி பார்த்து வெளியிட வேண்டும் என்பது அவசியமில்லை என்றும், ஊடகமோ, பத்திரிக் கையோ ஒரு செய்தியை நியாயமான முறையில் சரி பார்த்த பிறகு வெளியிட்டால் அதுவே போதுமானதாகும் (Prior verification of facts not necessary. Media or Press acted after reasonable verification, sufficient) என்றும் சென்னை உயர் நீதிமன்றம் கூறியது.

முன்னதாக தணிக்கை செய்தல் செல்லுடையதா? (Is pre-censorship valid?):

பேச்சிற்கும், கருத்து வெளியீட்டிற்கும் சுதந்திர முண்டு என ஷரத்து 19(1)(a) கூறுகிறது. ஆனால் அதை அரசு முன்னதாக

1. AIR 1997 SC 568
2. AIR 2010 Mad. 77 (DB)

தணிக்கை செய்ய விரும்பினால், அது செல்லுடையதல்ல. இது பத்திரிக்கைகளைப் பொறுத்தநிலையாகும். ஆனால் திரைப்படங் களைப் பொறுத்தவரை, முன் தணிக்கை செய்வது செல்லத்தக்கதே. இக்கருத்துகளுக்கு அடிப்படையான சில வழக்குகளை பின்வரு மாறு காண்போமா?

Brij Bhushan v. State of Delhi[1]

இவ்வழக்கில் கிழக்கு பஞ்சாப் பாதுகாப்பு சட்டமானது (East Punjab Safety Act) ஒரு ஆங்கில வாரப்பத்திரிக்கையின் நகலை (Duplicate) அது பொது மக்களிடையே வெளியிடப்படு முன்னர் அரசின் தணிக்கைக்கு (Pre-censorship) சமர்ப்பிக்க வேண்டும் என அந்த பத்திரிக்கை ஆசிரியரை கேட்டுக் கொண்டது. இது பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தினை நியாய மற்ற விதத்தில் கட்டுப்படுத்துவதாக உள்ளதால், மேற்படி சட்ட மானது செல்லாதது ஆகும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Virendra v. State of Punjab[2]

இவ்வழக்கில் அன்றாடமும் நிகழும் பரபரப்பான நிகழ்ச்சிகளைப் பற்றி பத்திரிக்கையில் குறிப்பிடக் கூடாது என ஒரு பத்திரிக்கையானது தடுக்கப்பட்டது. இது ஷரத்து 19(1)(a)-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை கடுமையாக பாதிக்கிறது என நீதிமன்றம் தீர்ப்பளித்து, அத்தடையை நீக்கியது.

K.A.Abbas v. Union of India[3]

திரைப்படங்களின் கதையம்சத்தைப் பொறுத்து, அதற்கு **'U'** அல்லது **'A'** சான்றிதழ்களை வழங்குவது குறித்து சினிமாட் டோகிராஃப் சட்டம் கூறுகிறது. இவ்வாறு திரைப்படங்களை **முன்னதாகவே தணிக்கை** (Pre-censorship) செய்து பாகு படுத்துவது, பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தினை மீறுவதாக உள்ளது எனக் கூறி, மேற்படி சட்டத்தின் செல்லுந் தன்மை குறித்து கே.ஏ.அப்பாஸ் என்பவர் நீதிமன்றத்தில் வினா எழுப்பினார். ஆனால் இவ்வாறு முன்னதாகவே தணிக்கை செய்யா மல் திரைப்படங்களை வெளியிட்டால், அதிலுள்ள ஆபாசக்

1. AIR 1950 SC 129
2. AIR 1957 SC 896
3. AIR 1971 SC 481

காட்சிகளைக் கண்டு வயதுக்கு வராதவர்களின் மனம் கெட்டு விடக் கூடும். ஆகவே முன் தணிக்கை என்பது, பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தின் மீதான நியாயமான கட்டுப்பாடாகும் (reasonable restriction) எனக் கூறி, மேற்படி சட்டத்தின் செல்லுந்தன்மையை நீதிமன்றம் அங்கீகரித்தது.

Bobby Art International v. Om Pal Singh Hoon[1]

இவ்வழக்கு **'Bandit Queen Case'** என பிரபலமாக அழைக்கப்பட்ட வழக்காகும். இவ்வழக்கில் **'Bandit Queen'** எனும் திரைப்படத்தை தடை செய்யக் கோரப்பட்டது. மேற்படி திரைப்படம், சில ஆண்டுகளுக்கு முன் சுட்டுக் கொல்லப்பட்ட பூலான்தேவியின் கடந்த கால நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். இதில் 'குஜ்ஜார்' (Gujjar) எனும் சாதியினரால் செய்யப்படும் பல பாலியல் பலாத்கார காட்சிகளும், நிர்வாணக் காட்சிகளும் இருந்தன. இத்திரைப்படம் திரைப்பட தணிக்கைக் குழுவினருக்கு அனுப்பப் பட்ட பொழுது, சில மாற்றங்களுக்குட்பட்டு, 17-08-1994-இல் **'A'** சான்றிதழ் வழங்கப்பட்டது. இதனை எதிர்த்து, மேல் முறையீட்டு தீர்ப்பாயத்தில் (Appellate Tribunal) மேல்முறையீடு செய்யப்பட்டது. அங்கு அத்திரைப்படத்தில் சில மாற்றங்கள் செய்ய உத்திரவிடப்பட்டது. பின்னர் **'A'** சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிலையில் 27-01-1996-இல் மேற்படி திரைப்படத்திற்கு கொடுக்கப்பட்ட சான்றிதழை நீக்கக் கோரியும், அதனை திரையிட தடை விதிக்குமாறு கோரியும், தில்லி உயர் நீதிமன்றத்தில் முதல் எதிர்மனுதாரர் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தார். இதற்குக் காரணம், மேற்படி முதல் எதிர்மனுதாரர், தாம் சார்ந்துள்ள 'குஜ்ஜார்' சாதியும், அதன் மக்களும் அத்திரைப்படத்தில் முன் கண்டவாறு பாலியல் பலாத்காரம் செய்பவர்களாகவும், இழிவாகவும், ஆபாசமாகவும் சித்தரிக்கப்பட்டிருப்பதுதான். மேற்படி மனு தில்லி உயர் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு, அத்திரைப்படத்திற்கு கொடுக்கப்பட்ட சான்றிதழ் இரத்து செய்யப்பட்டது. மேலும் நீதிமன்றம் விதித்துள்ள உத்திரவுகளின்படி அத்திரைப்படங்களில் சில காட்சிகளை மாற்றியமைத்து புதிதாக **'A'** சான்றிதழ் கொடுப்பதை பரிசீலிக்கும்படி தணிக்கை குழுவினருக்கு உத்திரவும் பிறப்பிக்கப்பட்டது. அது வரையில், அத்திரைப்படம்

1. AIR 1996 SC 1846

திரையிடப்படவும் தில்லி உயர் நீதிமன்ற தனி நீதிபதி தடை விதித்தார். இத்தீர்ப்பை தில்லி உயர் நீதிமன்றத்தின் ஆயமும் உறுதி செய்தது. இதை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

அங்கு மேல்முறையீட்டு தீர்ப்பாயம் விதித்துள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் அத்திரைப்படத்திற்கு கொடுக்கப்பட்ட சான்றிதழ் செல்லத்தக்கதே என்றும், அதற்கு முகாந்திரமாக பின்வரும் கருத்துக்களையும் கூறியது. அதன்படி, "ஒரு திரைப்படம் ஒரு சமூகக் கொடுமையின் விளைவுகளை சுட்டிக் காட்டுகின்ற பொழுது, அந்த சமூகக் கொடுமையையும் அவசியம் காண்பித்தாக வேண்டும். சமூகக் கொடுமையை ஊக்குவிக்கும் திரைப்படம் அனுமதிக்கத்தகாதது. ஆனால் அச்சமூகக் கொடுமையானது, ஒரு கொடுமை என்ற செய்தியை வெளிப்படுத்தும் வண்ணம் ஒரு திரைப்படம் இருந்தால், அது அனுமதிக்கத்தக்கது. எனினும், சமூகக் கொடுமையை படமாக்கியுள்ள விதம், அத்திரைப்படத்திற்கு நியாயமானதாகவும், போதுமானதாகவும் இருக்க வேண்டும். அதே சமயத்தில் ஒரு வரம்பு வகுக்கப்பட வேண்டும். அது பலவித உறுப்பினர்களைக் கொண்ட ஒரு அமைப்பான தீர்ப்பாயத்தின் உணர்வுகளுக்கு விடப்படுவதே நல்லது', என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஆ) மேற்படி சுதந்திரத்தின் மீதான நியாயமான கட்டுப்பாடுகள் (Reasonable Restrictions):

இந்தியக் குடிமக்களுக்கு ஷரத்து 19(1)-இன் வாயிலாக அளிக்கப்பட்டுள்ள சுதந்திர உரிமைகள், நியாயமான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும். ஷரத்து 19(1)(a)-இன் கீழான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தை அனுபவிக்கும் உரிமையை தடை செய்யுமாறு **'நியாயமான கட்டுப்பாடுகளை' (Reasonable Restrictions)** விதிக்கக் கூடிய சட்டத்தினை பின்வரும் நலன்களின் அடிப்படையில் இயற்றலாம், என ஷரத்து 19(2) கூறுகிறது. அவை,

1. அரசின் பாதுகாப்பு (Security of the State): அரசின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் அமைந்தால், அதன் மீது நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

2. அண்டை நாட்டுடன் நட்புறவு (Friendly relations with foreign State): இந்த அடிப்படையானது (Ground) 1951-ஆம் ஆண்டின் முதல் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் சேர்க்கப் பட்டது. இந்தியாவுக்கும் மற்ற நாட்டிற்கும் இடையேயுள்ள நட்புறவை பாதிக்கும் வகையில் தீங்கெண்ணத்துடன் செய்யக் கூடிய பிரச்சாரத்தின் மீது தடை விதிக்கலாம். இது நியாயமான கட்டுப்பாடாக கருதப்படும்.

3. பொது அமைதி (Public Order): பொது அமைதி, பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தினால் பாதிக்கப்படுவதாக இருப்பின், இதன் அடிப்படையில் அச்சுதந்திரத்தின் மீது தடை விதிக்கலாம். ஒரு செயல், சட்டம் மற்றும் ஒழுங்கை அல்லது பொது அமைதியை பாதிக்கின்றதா எனத் தீர்மானிக்க வேண்டு மெனில், அச்செயல் சமுதாயத்தின் நடைமுறை வாழ்க்கையை பாதித்து, பொது அமைதியை குலைக்கின்றதா அல்லது ஒரு தனி மனிதனை மட்டும் பாதித்துவிட்டு சமுதாயத்தின் அமைதியை பாதிக்காமல் விட்டுவிடுகிறதா என்று கவனிக்க வேண்டும், என உச்ச நீதிமன்றம் **Kamee Biswas v. State of W.B.**[1] என்ற வழக்கில் கூறியது.

4. ஒழுக்கம் அல்லது அறநெறி (Decency or Morality): ஒழுக்கம் மற்றும் அறநெறியின் நலனிற்காக கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடிய சந்தர்ப்பங்களைப் பற்றி இந்திய தண்டனைச் சட்டத்தின் 292 முதல் 294 வரை உள்ள பிரிவுகள் குறிப்பிடுகின்றன. இப்பிரிவுகள் ஆபாசமான (Obscene) விடயங்களை விற்பனை செய்வது, விநியோகிப்பது, காட்சிக்கு வைப்பது மற்றும் ஆபாச மான பாடலைப் பாடுவது அல்லது ஆபாசமான வார்த்தைகளால் திட்டுவது போன்றவற்றை தடை செய்கிறது.

5. இந்தியாவின் இறைமை மற்றும் ஒருமைப்பாடு (Sovereignty and Integrity of India): இந்த அடிப்படையானது, 1963-ஆம் ஆண்டில் கொணரப்பட்ட 16-வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தால் சேர்க்கப்பட்டது. பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தினால் இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப் பாடு பாதிக்கப்படுவதாக இருப்பின் அதன் மீது கட்டுப்பாடுகளை விதிக்கலாம்.

---

1. AIR 1972 SC 1656

6. நீதிமன்ற அவமதிப்பு தொடர்பாக (In relation to Contempt of Court): ஒருவரின் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் நியாயமான வரம்புகளைக் கடந்து, நீதிமன்றத்தை அவமதிப்பதாக இருப்பின், அதன் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப் படலாம்.

7. அவதூறு கூறல் (Defamation): அவதூறுக்கு எதிரான நலனின் அடிப்படையில் மேற்படி சுதந்திரத்தின் மீது நியாயமான கட்டுப்பாடுகளை விதிக்கலாம். ஒருவரை ஏளனஞ் செய்வது, அவமதிப்பது போன்றவை அவதூறாக கருதப்படும்.

8. குற்றம் புரியத் தூண்டுதல் (Incitement to an offence): இந்த அடிப்படையானது 1951-ஆம் ஆண்டில் கொணரப்பட்ட முதல் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் சேர்க்கப்பட்டது. ஒரு குற்றத்தினை புரியத் தூண்டுமாறு ஒருவரின் பேச்சு மற்றும் கருத்து வெளியீடு அமைந்திருப்பின், அதன் மீது கட்டுப்பாடு விதிக்கலாம்.

மத்தியில் நாடாளுமன்றத்திலும், மாநில அரசவைகளிலும் அங்கத்தினர்களால் நாடாளுமன்ற மொழிக்கு தரங்குறைவாகவும் கீழ்த்தரமானதாக இருந்தாலும் அவை ஷரத்து 19(1)(a)-ன் கீழான பேச்சுரிமையில் வராது - விளக்கம்:

மேற்கண்ட கூற்று உண்மைதான். ஷரத்து 19(1)(a) இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் பேச்சு மற்றும் சிந்தனை (கருத்து) வெளிப்பாட்டு உரிமையை அளிக்கிறது. அதே சமயத்தில் பொது நலனை முன்னிட்டு, அவ்வுரிமையின் மீது சில நியாயமான தடைகளை ஷரத்து 19(2) விதித்துள்ளது. இவற்றை நாம் முன்னரே கண்டோம். இதுபோல் பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சில சிறப்புரிமைகளை (privileges) முறையே இந்திய அரசியலமைப்பானது ஷரத்து 105-இன் வாயிலாகவும், ஷரத்து 194-இன் வாயிலாகவும் அளித்துள்ளது.

அதாவது ஒரு பாராளுமன்ற பணியின் போது ஒருவரைப் பற்றி அவதூறாக பழிச்சாட்டி பேசுவதற்கு முழு உரிமை அளிக்கப் பட்டுள்ளார். அவர் பாராளுமன்றத்தில் பேசியதை அடிப்படையாகக் கொண்டு அவர் மீது எந்நீதிமன்றமும் எந்நடவடிக்கையும் எடுக்க முடியாது என ஷரத்து 105(1) கூறுகிறது. இது மாநில சட்டமன்ற உறுப்பினருக்கும் ஷரத்து 194(1)-இன் கீழ் பொருந்தக் கூடியதே. ஆனால் பாராளுமன்ற உறுப்பினர், பாராளுமன்ற

அவையினுள் கூறிய அவதூறான கூற்று எதனையும், அவைக்கு வெளியே கூறினால், அவர் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 500-இன் கீழ் அவதூறு (defamation) புரிந்த குற்றத்திற்காக நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் இச்சிறப்பான பேச்சுரிமையின் மீதும் ஒரு சிறு கட்டுப்பாடு இருக்கவே செய்கின்றது. அக்கட்டுப்பாடு மிக வெளிப்படையாக ஷரத்து 105(1)-இல் கூறப்பட்டுள்ளது. அஃதாவது, பாராளுமன்ற பேச்சுரிமையானது, இந்திய அரசியலமைப்பின் சட்ட வகைமுறைகளுக்கும், பாராளுமன்ற நடைமுறைகளை நெறிப்படுத்தும் விதிகளுக்கும் மற்றும் நிலையாணைகளுக்கும் (standing orders) உட்பட்டு இருக்க வேண்டும், என்பதே அக்கட்டுப்பாடு ஆகும்.

ஆகவே பாராளுமன்ற மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களின் பேச்சுரிமையானது, ஷரத்து 19(1)(a)-இன் கீழான பேச்சு மற்றும் கருத்து வெளிப்பாடு சுதந்திரத்தின் மீது வராது என்பதையும், ஷரத்து 19(2)-இன் கீழான நியாயமான கட்டுப்பாடுகள் அதற்குப் பொருந்தாது என்பதையும் நாம் தெளிவாக அறியலாம். இதற்கு உதாரணமாக, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உச்ச நீதிமன்ற அல்லது உயர் நீதிமன்ற நீதிபதியின் நடத்தையைப் (conduct) பற்றி பாராளுமன்றத்தில் விமர்சிக்கக் கூடாது. இது அரசியலமைப்பின் 121-வது ஷரத்தில் மிகத் தெளிவாக உள்ளது.

இவ்வாறு பாராளுமன்ற அல்லது சட்டமன்ற உறுப்பினர் ஒருவரின் பேச்சுரிமையானது மேற்படி ஷரத்து 19(1)(a)-இன் கீழான பேச்சுரிமை மற்றும் சிந்தனை (கருத்து) வெளிப்பாட்டு உரிமையில் வராத காரணத்தால், அவர்களால் பாராளுமன்றத்தில் அல்லது சட்டமன்றத்தில், பாராளுமன்ற மொழிக்கும் தரம் குறைவாகும் வண்ணம் கீழ்த்தரமாக பயன்படுத்தப்பட்ட மொழியானது மேற்படி ஷரத்து 19(1)(a) கூறும் பேச்சுரிமையில் வராது. ஆனால் அத்தகு மொழிகளும் (Unparliamentary languages) மற்றும் பாராளுமன்ற நடத்தைக்கும் கீழான தரங்குறைவான நடத்தைகளும் (Unparliamentary conduct) மக்களவையின் (Lok Sabha) 349 மற்றும் 356-வது விதிகளின் கீழ் தடை விதிக்கப்பட்ட ஒன்றாகும்.

எனவே, பாராளுமன்ற உறுப்பினர்களின் தரங்குறைந்த மொழி, அரசியலமைப்பின் ஷரத்து 19(2) கூறும் தடைகளிலிருந்து காக்கப்பட்டாலும், பாராளுமன்ற நடைமுறையை நெறிப்படுத்தும்

விதிகளால் மேற்கண்டவாறு தடுக்கப்படுகின்றன. நேராக மூக்கைத் தொடாமல், ஏதோ ஒரு சிறப்புரிமை அளிப்பதாகக் கூறி, சுற்றி வளைத்து மூக்கைத் தொடும் வேலைதான் இது. எது எப்படியிருப் பினும், சுதந்திர உரிமைகளின் மீது கட்டுப்பாடு விதிக்கப்படுவதன் அடிப்படை நோக்கமே, சமூக நலனைப் பேணிக் காப்பதேயாகும்.

47. Right to Information - Write short notes. (தகவல் அறியும் உரிமை - குறுகிய விடை தருக.)

மக்களால், மக்களுக்காக, மக்கள் பிரதிநிதிகளைக் கொண்டு நடத்தப் பெறும் மக்களாட்சியில் அரசால் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன, மக்களுக்காக என்ன செய்யப்படுகின் றன, எத்தகு திட்டங்கள் வகுக்கப் பெறுகின்றன என்பதை மக்கள் அறிந்து கொள்ள வழிவகை செய்யப்பட வேண்டும். அப்போது தான் அங்கு உண்மையான மக்களாட்சி நிலவுவதாகப் பொருளா கும். இதற்கு, அரசாங்க (பொது) அதிகார அமைப்பு ஒவ்வொன்றின் இயக்கத்திலும் ஒளிவுமறைவற்ற நிலையை கொணர வேண்டும். அவ்வதிகார அமைப்புகள் (Public Authorities) மக்களுக்கு பொறுப்புடையனவாக செயல்படச் செய்தல் வேண்டும். இதற்கு அரசாங்கத்திடமிருந்து தங்களுக்குரிய தகவலை அணுகிப் பெறும் உரிமை மக்களாட்சியின் நாயகர்களான மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அந்த வகையில் மக்களாட்சி நிலவும் நமது நாட்டில், அரசாங்கத்திடமிருந்து தகவலை அணுகிப் பெறுவதற்கான பெரும் உரிமையை மக்களுக்கு வழங்கி, **2005-ஆம் ஆண்டின் 'தகவல் அறியும் உரிமைச் சட்டம்' (The Right to Information Act, 2005)** எனும் பெயரில் நமது நாடாளுமன்றம் இயற்றியுள்ளது.

இவ்வாறு தகவல் அறியும் உரிமைக்கான சட்டம் பற்றிய கருத்து நமது நாட்டிற்கு ஒன்றும் புதிதல்ல. இந்த உரிமை, நமது நாட்டில் 1950-இல் இயற்றப்பட்ட இந்திய அரசமைப்பு சட்டத்தின் ஷரத்து 19(1)-லும், மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனத்தின் ஷரத்து 19-லும் கூறப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திர உரிமையின்பாற்பட்டதாக உள்ளது. நமது உச்ச நீதிமன்றமும் தன் முன் எழுந்த பல வழக்குகளில், தகவல் அறியும் உரிமை என்பது, பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திர உரிமையில் உட்கிடை யாக பொதிந்துள்ளது என்று கருத்துரைத்துள்ளது.

மேற்படி 2005-இன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் நாம் கோரும் தகவலை அளிக்க மைய அரசாங்கம் அளவில், **'மைய**

பொதுத் தகவல் அலுவலரும்' (Central Public Information Officer), மாநில அரசாங்கம் அளவில், **'மாநில பொதுத் தகவல் அலுவலரும்' (Public Information Officer)** நியமிக்கப்பட வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதுபோல் மையத்தில், **'மைய தகவல் ஆணையம்' (Central Information Commission)** ஒன்றும், மாநிலங்களில் **'மாநில தகவல் ஆணையமும்' (State Information Commission)** நிறுவப்பட வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், கோரியும் தகவல் அளிக்கப்படவில்லையானால், சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலருக்கு நாளொன்றுக்கு ரூ.250/- வீதம் அபராதம் விதிக்கவும் வகைமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

நமது இந்திய அரசமைப்பின் ஷரத்து 19(1)(a)-இன்படி குடிமக்களுக்கு **பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம்** வழங்கப்பட்டுள்ளது. இதன் பொருள்விளக்கம் பற்றி கர்நாடக உயர் நீதிமன்றம் **K.Ravikumar v. Banglore University**[1] எனும் வழக்கில் கூறும் போது, ஷரத்து 19(1)(a)-ஆனது, கருத்து வெளியீட்டு சுதந்திரத்திற்கு வகை செய்கிறது. ஏனெனில், அரசாங்கப் பணிகள் வெளிப்படையானதாக இருத்தல் வேண்டும் மற்றும் நாட்டின் மூன்று அங்கங்கள் மக்களை வஞ்சிப்பதிலிருந்து தடுக்கப்படுதல் வேண்டும்.

அந்த வகையில் நமது உச்ச நீதிமன்றம் ஏற்கனவே **Secretary, Ministry of Information and Broadcasting, Govt. of India v. Cricket Association of Bengal**[2] -எனும் வழக்கில் தகவலை அளிப்பதற்கும் பெறுவதற்கும் உள்ள உரிமை, ஷரத்து 19(1) (a)-இன்படியான பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரத்தின் ஒரு வகையினமே என்று விளக்கமளித்துள்ளது. **S.P.Gupta v. Union of India**[3] -எனும் வழக்கில் தகவல் அறியும் உரிமை என்பது, பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திர உரிமையில் உட்கிடையாக உள்ளது என்றும், அரசாங்கப் பணிகள் தொடர்பான தகவலை வெளியிடுவது என்பது ஒரு விதியாக இருக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

மேலும் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தில், பொது நலன் சார்ந்த விஷயங்களின் தகவலை அறியும் உரிமையும் உள்ளடங்கும் என்று **Hamdard Dawakhana v. Union of India**[4] -எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் முன்பே தெளிவுபடுத்தியுள்ளது.

1. **AIR 2005 Karn 21.**
2. **(1995) 2 SCC 161.**
3. **(1981) Supp SCC 87.**
4. (1960) 2 SCR 671.

மற்றொரு முக்கிய வழக்கான **Peoples Union for Civil Liberties v. Union of India**[1] என்பதில், நாட்டின் கொள்கை குறித்த விவகாரங்களில் பங்கேற்க மக்களும் உரிமை ஒன்றைக் கொண்டிருந்தாலன்றி, உண்மையான சனநாயகம் மலராது என்றும், இதற்கு அவர்களுக்கு தகவல் அளிக்கப்படுதல் அவசியம் என்றும் கூறியுள்ளது.

48. Explain the scope of the following fundamental rights.

(a) Right to assemble peaceably and without arms.
(b) Right to form associations or unions.

கீழ்க்கண்ட அடிப்படை உரிமைகளின் நோக்கெல்லையை விளக்குக.

(அ) அமைதியாக ஆயுதம் ஏதுமின்றி கூடும் உரிமை.
(ஆ) கழகங்கள் அல்லது சங்கங்கள் அமைப்பதற்குரிய உரிமை.

(அல்லது)

Discuss the scope of the fundamental right to form associations and unions as guaranteed by the constitution of India. (இந்திய அரசியலமைப்பில் கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்கள்அமைக்கும் அடிப்படை உரிமையின் நோக்கெல் லையை விவாதிக்க.)

(அ) கூடும் உரிமை (Freedom of Assembly):

ஆயுதங்களின்றி அமைதியாகக் கூடும் சுதந்திர உரிமையை, இந்திய அரசியலமைப்பானது தனது குடிமக்கள் ஒவ்வொருவருக்கும், **ஷரத்து 19(1)(b)**-யின் வாயிலாக அளித்துள்ளது. அவ்வாறு கூடும் உரிமையில், பொதுக் கூட்டங்களை நடத்துதல், ஊர்வலங்கள் செல்லுதல் ஆகியவையும் அடங்கும். எனினும், இச்சுதந்திர உரிமை பின்வரும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டது. அஃதாவது. 1. இவ்வாறு கூடுவது அமைதியான முறையில் இருக்க வேண்டும்; 2. கூட்ட நபர்களில் யாரிடமும் ஆயுதங்கள் இருக்கக் கூடாது; 3. **ஷரத்து 19(3)**-இன் கீழான நியாயமான கட்டுப்பாடுகளின் கீழ் அக்கூட்டத்தின் நோக்கமானது, இந்தியாவின் ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மையின் நலனுக்கெதிராகவோ அல்லது

1. AIR 2003 SC 2363

பொது அமைதியின் நலனுக்கெதிராகவோ இருத்தல் கூடாது. இவ்வாறு கூடும் கூட்டம் வன்முறையைக் கையாண்டாலோ அல்லது பொது அமைதிக்கு பங்கம் விளைவித்தாலோ அது ஷரத்து 19(1)(b)-இன் பாதுகாப்பைப் பெற இயலாது. ஒரு குற்ற வியல் துறை நடுவரிடமிருந்து அனுமதி பெறாமல் எவ்வித பொது ஊர்வலத்தையும் நடத்தக் கூடாது என தடை விதித்து ஒரு சட்டம் இயற்றப்பட்டால், அது செல்லத்தக்கதொரு சட்டமாகும் என **Dassappa v. Dy. Additional Commissioner**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

(ஆ) கழகங்கள் அல்லது சங்கங்கள் அமைப்பதற்குரிய உரிமை (Right to form associations or unions):

கழகங்கள் அல்லது சங்கங்கள் அமைக்கும் சுதந்திர உரிமையை **ஷரத்து 19(1)(c)**- வழங்குகிறது. இவ்வாறு அமைக்கும் உரிமை **ஷரத்து 19(4)**-இல் கூறப்பட்டுள்ள நியாயமான கட்டுப் பாடுகளுக்கு உட்பட்டதாகும். அவற்றின்படி, இந்தியாவின் இறையாண்மைக்கு அல்லது ஒருமைப்பாட்டிற்கு ஊறு ஏதும் விளையக் கூடாது. பொது அமைதி அல்லது அறநெறி பாதிப்பிற் குள்ளாகக் கூடாது. இவற்றின் அடிப்படையில் அரசு சட்டமியற்றி மேற்படி சுதந்திர உரிமையை கட்டுப்படுத்தலாம். நிறுவனங்கள் (Companies) அமைப்பதும் மேற்படி சுதந்திர உரிமையில் சேர்ந்ததே என **All India Bank Employees' Association v. N.I.Tribunal**[2] எனும் வழக்கில் கூறப்பட்டது. அதுபோல், தொழிற் சங்கங்கள் அமைப்பதும் மேற்படி உரிமையின்பாற்பட்டதே என **Kulkarni v. State of Bombay**[3] எனும் வழக்கில் கூறப்பட்டது.

49. Freedom of Movement - Write short notes. (சுதந்திரமாக சென்று வரும் உரிமை - குறுகிய விடை தருக.)

அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 19(1)(d)** ஒரு முக்கிய உரிமையை இந்தியக் குடிமக்களுக்கு அளித்துள்ளது. அஃதாவது, **"இந்திய எல்லை முழுவதும் சென்று வரும் சுதந்திர உரிமை இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் உண்டு" (Right to move freely throught the territory of India)** என்பதாகும். இச்சுதந்திரத் தின் மீது நியாயமான கட்டுப்பாடுகளை ஷரத்து 19(5) விதிக்கிறது.

1. AIR 1960 Mys. 57
2. AIR 1962 SC 171
3. AIR 1931 Bom. 105

அதாவது, (1) பொது மக்களின் நலன்களை முன்னிட்டும், (2) அட்டவணை பழங்குடியினரின் நலனைப் பாதுகாப்பதற்காகவும் இச்சுதந்திரத்தின் நியாயமான கட்டுப்பாடுகளை அரசு விதிக்கலாம்.

இந்திய எல்லைக்குள் உள்ள ஒரு மாநிலத்தில் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு செல்வதற்கு மட்டுமல்லாமல் ஒரு மாநிலம் விட்டு மற்றொரு மாநிலம் செல்லவும் இந்தியக் குடிமக்களுக்கு சுதந்திர உரிமை உண்டு என்று **ஷரத்து 19(1)(d)** கூறுகிறது. இதற்கு மேற்கண்ட இரண்டு நியாயமான கட்டுப்பாடுகளைத் தவிர வேறு எந்த தடையும் கிடையாது. இது இந்தியா முழுவதும் நம் தேசம் என்ற தேசிய உணர்வை இந்திய மக்களுக்கு தருகிறது.

N.B.Khare v. State of Delhi[1] என்ற வழக்கில் மனுதாரர் உடனடியாக தில்லியை விட்டு வெளியேற வேண்டும் (Order of Externment) என்றும், அவர் மூன்று மாத காலத்திற்கு தில்லி திரும்பக் கூடாது என்றும் தில்லி மாவட்ட குற்றவியல் நடுவர் ஆணை பிறப்பித்தார். இந்த ஆணை கிழக்கு பஞ்சாப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் பிறப்பிக்கப்பட்டதாகும். இது தான் சுதந்திரமாக நடமாடும் உரிமையின் மீது நியாயமற்ற கட்டுப்பாட்டை விதிப்பதாக உள்ளது என்று கூறி மனுதாரர் வழக்கிட்டார். ஆனால் இதை உச்ச நீதிமன்றம் ஏற்கவில்லை. மேற்படி ஆணை நெருக்கடி நிலையின் போது பிறப்பிக்கப்பட்டது. மேலும் குறுகிய காலத்திற்கானதாகும். எனவே இச்சூழல்களில் மாவட்ட குற்றவியல் நடுவர் பிறப்பித்த ஆணை செல்லத்தக்கதே என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

State of Uttar Pradesh v. Kaushalya[2] என்ற வழக்கில் பொது மக்களின் ஒழுக்க நலன் மற்றும் அவர்களது உடல் நலனில் அக்கறை கொண்டு பரத்தையர்களின் (prostitutes) சுதந்திரமான நடமாட்டத்தின் மீது கட்டுப்பாட்டை விதித்தது செல்லத்தக்கதே என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Rajneesh Kapoor v. Union of India[3] என்ற வழக்கில் இரு சக்கர வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிந்து வாகனம் ஓட்ட வேண்டும் என்று விதிக்கப்பட்ட கட்டுப்பாடு செல்லத்தக்கதே

1. AIR 1950 SC 211
2. AIR 1964 SC 416
3. AIR 2007 SC 204

என்றும், இது குடிமக்களின் சுதந்திரமான நடமாட்டத்தின் மீது விதிக்கப்படும் கட்டுப்பாடு அல்ல என்றும், சாலை விபத்திலிருந்து அவர்களது உயிரைக் காப்பாற்றுவதற்காக இப்படிப்பட்ட கட்டுப் பாடு விதிக்கப்பட்டுள்ளது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

50. Freedom of Residence - Write short notes. (சுதந்திரமாக தங்கி வாழும் உரிமை - குறுகிய விடை தருக.)

அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 19(1)**(e) -இன்படி, **"இந்திய நில எல்லையின் எந்தப் பகுதியிலும் தங்கி வாழ இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் சுதந்திரமான உரிமை உண்டு" (Right to reside and settle in any part of the territory of India)**. இதன் மீது நியாயமான கட்டுப்பாடுகளை ஷரத்து 19(5) விதிக்கிறது. அதாவது, (1) பொது மக்களின் நலன்களை முன்னிட் டும், (2) அட்டவணை பழங்குடியினரின் நலனைப் பாதுகாப்பதற் காகவும் இச்சுதந்திரத்தின் நியாயமான கட்டுப்பாடுகளை அரசு விதிக்கலாம்.

இச்சுதந்திரம் இந்தியக் குடிமக்களுக்கு வழங்கப்பட்டதன் நோக்கம் யாதெனில், இந்தியாவிற்குள் அல்லது அதன் நிலப்பகுதி எதிலும் உட்புற குடியிருப்பு தடைகள் குடிமக்களுக்கு ஏற்படக் கூடாது என்பதுதான்.

எனினும் வழக்கமான குற்றவாளிகளின் நடமாட்டத்தின் மீது கட்டுப்பாடு விதிப்பதும், தங்கும் இடங்கள் பற்றி நிபந் தனைகள் விதிப்பதும் செல்லும். அதுபோல் பரத்தைமை தொழில் செய்பவர்களைக் குறிப்பிட்ட இடங்களிலேயே தங்கச் சொல்வதும் அல்லது குறிப்பிட்ட இடத்தை விட்டுச் செல்லக் கூறுவதும் முறை யானது. ஒரு நோயாளியோ அல்லது அயல்நாட்டவரோ பழங்குடி யினர் பகுதியில் தங்கக் கூடாது என்று விதிக்கப்படும் கட்டுப்பாடும் செல்லத்தக்கதே.

51. Discuss the freedom to practice any profession, or to carry on any occupation, trade or business with decided cases. (வியாபாரம் மற்றும் வணிகம் செய்யும் சுதந்திரம் குறித்து அரசியலமைப்புச் சட்டம் கூறுவதை முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்கவும்.)

அரசியலமைப்புச் சட்டம் **ஷரத்து 19(1)**(g) வியாபாரம் மற்றும் வணிகம் செய்யும் சுதந்திரம் குறித்து கூறுவதாவது, **"எந்த**

தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபாரத்தை செய்ய எல்லா குடிமக்களுக்கும் உரிமை உண்டு"(Right to practice any profession, or to carry on any occupation, trade or business) என்கிறது. இச்ஷரத்தின்படி, இந்தியாவில் வசிக்கும் குடிமக்கள் யாவரும் தங்கள் விரும்பிய தொழிலைச் செய்யவோ அல்லது வணிகத்தைச் செய்யவோ சர்வ சுதந்திர உரிமை படைத்துள்ளார்கள். ஆனால் அவர்களின் இச்சுதந்திர உரிமைக்கு சில நியாயமான கட்டுப்பாடுகளை (reasonable restriction) **ஷரத்து 19(6)** விதிக்கிறது. அதாவது பொது மக்களின் நலன்களை முன்னிட்டு, அவற்றின் அடிப்படையில் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. அதாவது தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபாரம் செய்வதற்குண்டான தகுதிகளை ஒரு சட்டம் நிர்ணயித்தால் அதுவும் நியாயமான கட்டுப்பாடுகளாகவே கருதப்படும். மேலும் அரசாலோ அல்லது அரசின் கட்டுப்பாட்டின் கீழ் மட்டுமோ ஏதேனும் வணிகம் அல்லது தொழில் செய்யப்பட வேண்டும் என ஒரு சட்டம் இயற்றப்பட்டால் அதுவும் நியாயமான கட்டுப்பாட்டின் கீழ் வரும்.

M.H.Quareshi v. State of Bihar[1]

இவ்வழக்கில், பல மாநிலச் சட்டங்கள் விலங்கினங்களைக் கொல்லக் கூடாது என தடை விதித்திருப்பது இறைச்சி வியாபாரம் செய்பவர்களின் வியாபாரம் செய்யும் உரிமையை பாதிப்பதாக உள்ளது எனக் கூறப்பட்டது. இதற்காக உச்ச நீதிமன்றம் ஒரு பொருளாதார அணுகுமுறை (economic approach) மேற் கொண்டது. அதாவது, உபயோகமாக உள்ள விலங்கினங்களை கொல்வதின் மீது தடை விதிக்கப்படலாம். ஆனால் அதே சமயத்தில் சமுதாயத்திற்கு பொருளாதாரரீதியில் உதவாத விலங்கினங்களை கொல்வதின் மீது எவ்வித தடையும் விதிக்கப்படக் கூடாது. எனவே பசு, பசுக்கன்றுகள் அல்லது எருதுக்கன்றுகளை கொல்வதன் மீதான தடை நியாயமான தாகும். ஆனால் 15 வயதிற்கு மேற்பட்ட காளை, ஆண் எருது மற்றும் பெண் எருது இவற்றினை கொல்வதின் மீதான தடை, இறைச்சி வியாபாரம் செய்பவர்களின் மீது விதிக்கப்பட்ட நியாயமற்ற கட்டுப்பாடாக கருதப்படும். ஏனெனில் மேற்கண்ட அவ்விலங்கினங்கள் 15 வயது முடிந்தவுடன் தனது உபயோகத்தை இழக்கின்றன.

1. AIR 1958 SC 731

Chintaman Rao v. State of M.P.[1]

ஒரு மாநிலச்சட்டம் வேளாண்மைக்குகந்த பருவத்தில், கிராமங்களின் பீடி செய்யும் தொழிலை எவரும் செய்யக் கூடாது என தடை விதித்தது. அதன்படி அக்கிராமங்களில் வசிக்கும் எவரும் வேளாண்மைக்குகந்த பருவத்தில் பீடி செய்யும் தொழிலை செய்யவோ அல்லது பீடி செய்யும் தொழிலில் மற்றவரை ஈடுபடுத்தவோ கூடாது. இச்சட்டமானது, ஷரத்து 19(1)(g)-இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள தொழில் செய்யும் அடிப்படை சுதந்திர உரிமையை பறிப்பதாக உள்ளது என வாதிடப்பட்டது. வேளாண்மையில் ஈடுபட முடியாதவர்கள், ஊனமுற்றவர்கள், பெண்கள் யாவரையும் கட்டாயமாக வேளாண்மைக்குகந்த பருவத்தில் பீடி செய்யும் தொழிலில் ஈடுபடுத்தக் கூடாதென்று தடை விதிக்கப்படுவதால் அந்தத் தடை, ஷரத்து 19(6)-இல் கூறப்பட்ட நியாயமான கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதென கூறப்பட்டது. வேளாண்மைத் தொழிலில் ஈடுபட முடியாதவர்கள் கூட பீடி செய்யும் தொழிலில் ஈடுபடக் கூடாது எனத் தடை விதிப்பது அவர்களுடைய வாழ்க்கையையே, ஏன் உயிர் வாழ்வதையே பாதிக்குமென விளக்கிக் கூறப்பட்டது. உச்ச நீதிமன்றம் இவ்வாதத்தை ஏற்றுக் கொண்டு பீடி செய்யும் தொழிலைத் தடை செய்யும் சட்டத்தை செல்லத்தக்கதல்ல என அறிவித்தது.

R.C.Cooper v. Union of India[2]

இவ்வழக்கில் 1969-ஆம் ஆண்டின் வங்கிகள் ஈட்டுதல் மற்றும் தொழில் மாற்றுச் சட்டமானது (The Banking Companies Acquisition and Transfer of Undertaking Act, 1969) குறிப்பிடப்பட்ட 14 வங்கிகள் மீது மட்டும் வங்கித் தொழிலில் ஈடுபடுவதை பாகுபாடு காட்டித் தடை செய்கிறது என்றும், தொழில் செய்யும் உரிமையையும், சொத்துரிமையையும் பாதிக்கிறதென்றும் கூறி உச்ச நீதிமன்றம் அச்சட்டத்தை செல்லுபடியற்றது என அறிவித்தது.

Nashirwan v. State of M.P.[3]

இவ்வழக்கில் மதுபானம் விற்பனை செய்வது அடிப்படை

1. AIR 1961 SC 118
2. AIR 1970 SC 564
3. AIR 1975 SC 360

உரிமை எனக் கூற முடியாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. வியாபாரத் தன்மையைக் கொண்ட வியாபாரத்திற்கு மட்டுமே ஷரத்து 19(1)(g) பாதுகாப்பு அளிக்கிறது. மதுபான விற்பனை எனப்படுவது வியாபாரத் தன்மைகளை பெற்றிருக்க வில்லை என உச்ச நீதிமன்றம் கூறியது. ஏனெனில் இவ்வியாபாரத் தினால் பொது ஒழுக்கமும் (Public Morality), பொது நலனும் (Public Interest) பாதிக்கப்படுகிறது. மேலும் மதுபானம் தீங்கான மற்றும் அபாயம் விளைவிக்கக் கூடிய தன்மைகளைக் கொண்டதாகும்.

Excel Wear v. Union of India[1]

ஒரு தொழிற்சாலையினை நடத்தும் தொழிலதிபர் ஒருவர் தன்னுடைய தொழிற்சாலையினை மூட வேண்டுமெனில், தொழிற்சாலை தகராறுகள் சட்டத்தில் (Industrial Disputes Act) கூறப்பட்டுள்ள நடைமுறைகளை பின்பற்றவில்லையென்றால், தொழிற்சாலையை மூட அரசு அனுமதிக்காது. மேலும் தொழிலதிபருக்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும், என்று அச்சட்டம் கூறுகிறது. இவ்வழக்கில் தொழிற்சாலை தகராறுகள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நடைமுறைகள் அரசியலமைப்பற்றது என உச்ச நீதிமன்றம் அறிவித்தது. ஏனென்றால் எப்படி ஒரு தொழிற்சாலையைத் துவங்க ஒரு தொழிலதிபருக்கு உரிமை உள்ளதோ, அங்ஙனமே அதனை மூடவும் உரிமை உண்டு. மேலும் தொழிற்சாலையினை இலாபகரமாக நடத்த இயலவில்லை என்றால், அதனை மூடுவதற்குண்டான உரிமையையும் தொழிலதிபர் பெற்றுள்ளார், என முக்கியத்துவம் வாய்ந்த இவ்வழக்கில் கூறப்பட்டது.

P.K.Subramanian v. Secretary to Govt. of Tamil Nadu[2]

அரசு நிலத்தில் குழாய்கள் பதித்து அதன் வழியாக விவசாயத்திற்கு நீர் கொண்டு செல்லும் உரிமையை ஒருவர் பெற்றிருந்தார். அவர் பல ஆண்டுகளாக தனது விவசாயத்திற்கு அக்குழாய்கள் வழியாக நீர் எடுத்து சென்று கொண்டிருந்தார். இந்த உரிமையின் மீது அரசு தடை விதித்து, அதை திரும்பப் பெற்றுக் கொண்டது. இந்நிலையில் நீர் எடுத்துச் செல்லும் உரிமையை அரசு திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டதால், அவரால் தனது விவசாயத் தொழிலை செய்ய முடியவில்லை என்று கூறி அவர்

1. AIR 1979 SC 25
2. AIR 2010 (NOC) 434 (Mad.)

சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கிட்டார். அப்போது நீர் எடுத்துச் செல்வதற்காக கொடுக்கப்பட்டுள்ள உரிமையை அவர் ஏதேனும் வழிகளில் மீறியிருந்தால் மட்டுமே அரசு அதிகாரிகள் அவ்வுரிமையை இரத்து செய்ய முடியும். அதுவும் அவருக்கு முறைப்படி அறிவிப்பு கொடுத்து, அவரது ஆட்சேபணைகளைக் கேட்டு, அதன் பிறகு உரிய சட்டமுறைப்படி அவ்வுரிமையை இரத்து செய்வதா, வேண்டாமா என்பது குறித்து முடிவெடுக்க முடியும். இவ்வாறு செய்யாமல் நீர் எடுத்துச் செல்லும் உரிமையின் மீது அரசு தடை விதித்தது, அவரது தொழிலுக்கான அடிப்படை உரிமையை பாதிக்கக் கூடியதாகும் என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறி, முடிவில் அத்தடையை நீக்க ஆணையிட்டது.

(ஆ) குற்றங்களுக்கான குற்றத் தீர்ப்பளித்தல் குறித்த பாதுகாப்பு

(ஷரத்து 20)

[B] Protection in respect of Conviction for Offences

(Article 20)

52. Expost facto law - Write short notes. (பின்நோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டம் - குறுகிய விடை தருக.)

அரசியலமைப்புச் சட்டத்தின் 20-வது ஷரத்து குற்றஞ் சாட்டப்பட்ட நபர்களுக்கு சில பாதுகாப்புகளை அளிக்கிறது. அதில் **ஷரத்து 20(1)** பின்நோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்தி தண்டனையளிப்பதை எதிர்த்து சில பாதுகாப்புகளை அளிக்கிறது.

முதலில் 'பின்நோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டம்' **[(அல்லது) நிகழ்ச்சிக்குப் பின் வந்த சட்டம்]** என்பதனை புரிந்து கொள்ளல் அவசியம். ஒரு நபர் குற்றம் புரிந்தால் அவரை அப்பொழுது இருக்கும் சட்டத்தின்படிதான் தண்டிக்கவோ அல்லது அபராதம் விதிக்கவோ செய்ய வேண்டும். அதற்கு மாறாக, குற்றம் நிகழ்த்தப்பட்ட காலத்திற்கு முன் இருந்த சட்டத்தினை கருத்தில் கொண்டு, அதன்படி குற்றஞ்சாட்டப்பட்ட நபரை தண்டித்தலாகாது.

ஷரத்து 20(1), சட்டமன்றத்தின் சட்டமியற்றும் அதிகாரத்

திற்கு ஒரு வரம்பினை விதிக்கிறது. பொதுவாக ஒரு சட்டமன்றம் வருநிகழ்வு (Prospective) மற்றும் முன்மேவு (Retrospective) சட்டங்களை இயற்றும். ஆனால் ஷரத்து 20(1), குற்றவியல் சட்டங்களை பொறுத்தவரை முன்மேவு சட்டங்களை இயற்றத் தடை செய்கிறது. எனினும், உரிமையியல் சட்டங்களில் முன்மேவு சட்டத்தினை இயற்றத் தடை செய்யவில்லை. அதாவது, பின் நோக்கி சென்ற காலத்திலிருந்து அச்சட்டம் தன் வலிமையை உடையதாகியிருக் கும்.

இதைத்தான் ஷரத்து 20(1) பின்வருமாறு கூறுகிறது. ஒரு குற்றமென குற்றஞ்சாட்டப்பட்ட செயல் செய்யப்பட்ட காலத்தில் அமலில் இருந்த சட்டத்தினை மீறியதற்கு தவிர, வேறு எந்த குற்றத்திற்காகவும் ஒரு நபர் தண்டிக்கப்படலாகாது மற்றும் குற்றம் நடந்த காலத்தில் அமலில் இருந்த சட்டத்தின் கீழ் எது தண்டத் தொகையாக விதிக்கப்பட்டிருக்குமோ, அதற்கு மேற்பட்ட தண்டத் தொகைக்கு ஒரு உட்படுத்தக் கூடாது.

மேற்படி ஷரத்து 20(1) இரண்டு பகுதிகளைக் கொண்டுள் ளது. **"குற்றமென குற்றஞ்சாட்டப்பட்ட செயல் ஒன்று செய்யப் பட்ட காலத்தில் அமலில் இருந்த சட்டத்தினை மீறியதைத் தவிர வேறு எந்த குற்றத்திற்காகவும் ஒரு நபர் தண்டிக்கப்படலாகாது,"** என்று முதல் பகுதி கூறுகிறது. இதன் உட்பொருள் யாதெனில் ஒரு செயல், அது நிகழ்ந்த தேதியில் குற்றமாக இல்லையெனில், அச் செயல் நிகழ்ந்த அடுத்த தேதியிலிருந்து, அது ஒரு குற்றம் ஆகாது என **Chief Inspector of Mines v. K.C.Thapper**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

மேற்படி ஷரத்தின் இரண்டாவது பகுதி, **"குற்றம் நடந்த காலத்தில் அமலில் இருந்த சட்டத்தின் கீழ் எது தண்டத் தொகையாக விதிக்கப்பட்டிருக்குமோ அதற்கு மேற்பட்ட தண்டத் தொகைக்கு ஒரு நபரை உட்படுத்தக் கூடாது"** என்று கூறுகிறது.

Kedar Nath v. State of West Bengal[2]

இவ்வழக்கில் ஷரத்து 20(1)-இன் இரண்டாவது பகுதி பற்றி கூறப்பட்டது. இதில் குற்றம் சாட்டப்பட்டவர் 1947-ஆம் ஆண்டு ஒரு குற்றத்தினைப் புரிந்தார். அக்குற்றம் அப்பொழுது அமலில்

1. AIR 1961 SC 883
2. AIR 1953 SC 404

இருந்த சட்டத்தின்படி, சிறைத்தண்டனை மற்றும் அபராதத்திற்கு உட்படக் கூடியது. ஆனால் அச்சட்டம் 1949-ஆம் ஆண்டில் திருத்தப்பட்டது. குற்றஞ்சாட்டப்பட்டவர் செய்த அதே குற்றத்திற்கு கூடுதல் அபராதத்தினை விதித்தது. எனினும் உச்ச நீதிமன்றம் 1947-இல் குற்றஞ்சாட்டப்பட்ட நபரால் செய்யப்பட்ட குற்றத்திற்கு 1949-ஆம் ஆண்டின் திருத்தத்தினால் அதே குற்றத்திற்காக விதிக்கப்பட்ட கூடுதல் அபராதம் பொருந்தாது; ஆகவே அக்கூடுதல் அபராதம் இரத்து செய்யப்படுகிறது என்று தீர்ப்பளித்தது.

இங்கு மற்றுமொரு அனுகூலமும் கிடைக்கிறது. அதாவது, குற்றம் சாட்டப்பட்டவன் பின்னோக்கிச் சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டத்தின் மூலம் நன்மைகளையும் பெறலாம். குற்றம் செய்யப்பட்ட காலத்தில் இருந்த சட்டத்தால் வழங்கப்பட்ட தண்டனை, பிறகு இயற்றப்பட்ட ஒரு சட்டத்தால் அதே குற்றத்திற்கு முன்பு விதித்திருந்த தண்டனையை விட குறைந்த அளவு தண்டனை விதிக்கப்பட்டிருப்பின், குற்றஞ்சாட்டப்பட்டவன் அதனை தனக்குச் சார்பாக பயன்படுத்திக் கொள்ளலாம்.

T.Baral v. Henry An Hoe[1]

இவ்வழக்கில் எதிர்மனுதாரருக்கு எதிராக 1975-ஆம் ஆண்டின் உணவு கலப்படத் தடைச் சட்டத்தின் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. எதிர்மனுதாரரால் செய்யப்பட்டதாகக் கருதப்படும் அக்குற்றத்திற்கு அச்சட்டம், ஆயுள் தண்டனையை விதித்திருந்தது. ஆனால் 1976-ஆம் ஆண்டில் "உணவு கலப்படத் தடைச் சட்டம்" திருத்தப்பட்டது. இதன்படி மேற்கண்ட குற்றத்திற்கு உண்டான தண்டனை, 3 ஆண்டு சிறைக் காவல் தண்டனையாக குறைக்கப்பட்டிருந்தது. ஆகவே மனுதாரர் இழைத்த குற்றத்திற்கு, 3 ஆண்டு சிறைக்காவல் தண்டனைதான் பொருந்தும். ஆயுள் தண்டனை பொருந்தாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. இதிலிருந்து இது, வரு நிகழ்வு விளைவை கொண்டது என்பதும் புரியும்.

Ratanlal v. State of Punjab[2]

இவ்வழக்கில் 16 வயதுடைய சிறுவன் 7 வயது சிறுமியின் பெண்மையை அவமதித்ததாகவும், வீட்டினுள் அத்துமீறி

1. (1983) 1 SCC 177
2. AIR 1965 SC 444

நுழைந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு அவனுக்கு 6 மாத கடுஞ் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது. ஆனால் அதன் பின் 1958-ஆம் ஆண்டில் இளங்குற்றவாளிகள் சட்டம் இயற்றப்பட்டது. அதில் 21 வயதிற்குட்பட்ட நபர் ஒருவருக்கு சாதாரணமாக சிறைத்தண்டனை விதிக்கப்படக் கூடாது எனக் கூறப்பட்டிருந்தது. இதற்கு "பின்னோக்கிச் சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டம்" பொருந்தும். இதன்படி அக்குற்றவாளியின் தண்டனை குறைக்கப்படும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதிலிருந்து, குற்றம் நடந்த காலத்தில் இருந்த தண்டனையை விட அதிகமான தண்டனையை அல்லது அபராதத்தை விதிக்க முடியாது. ஆனால் தண்டனையைக் குறைக்க பயன்படுத்திக் கொள்ளலாம் என்பது புலனாகிறது.

53. Double Jeopardy - Write short notes. (இரட்டை இடர் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Examine the scope of the protection against double jeopardy under Art. 20(2) of the Constitution. (அரசியலமைப்பின் ஷரத்து 20(2)-இன் கீழ் இரட்டை இடருக்கு எதிராக வழங்கப்படும் பாதுகாப்பின் பரவெல்லை குறித்து ஆராய்க.)

இரட்டை இடர் குறித்து அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 20(2) விளக்குகிறது. அதன்படி, "எந்த நபரும் ஒரே குற்றத்திற்கு ஒரு தடவைக்கு மேல் குற்ற வழக்கு இடப்பட்டு தண்டிக்கப்படக் கூடாது", என ஷரத்து 20(2) கூறுகிறது. அதாவது, ஒரே குற்றத்திற்காக ஒருவர் இரு முறை தண்டிக்கப்பட்டு விடக் கூடாது என்று கூறி அப்படி தண்டிக்கப்படுவதிலிருந்து ஷரத்து 20(2) பாதுகாப்பளிக்கிறது. இது ***'Nemo debt vis vexari'*** எனும் சட்ட முதுமொழியின்படி வளர்ந்த ஒரு கருத்துரு ஆகும். இதன் பொருள் மேற்கண்டதுதான். இதுவே இரட்டை இடருக்கெதிரான பாதுகாப்பு எனப்படுகிறது.

அமெரிக்க அரசியலமைப்பின் அய்ந்தாவது திருத்தத்தில் இது குறித்து கூறப்பட்டுள்ளது. ஆனால் இந்திய அரசியலமைப்பு படியான இரட்டை இடர், அமெரிக்க இரட்டை இடரைக் காட்டிலும் மிகக் குறுகிய பொருளை உடையதாகும். எவ்வாறெனில், அமெரிக்க இரட்டை இடர், ஒருவர் மீது ஒரு குற்றம் குறித்து குற்ற

வழக்கு இடப்பட்டு விட்டாலே, அவர் மீது மீண்டும் அக்குற்றத் திற்காக குற்ற வழக்கு இடப்படக் கூடாது. முதல் குற்ற வழக்கில் அவர் தண்டிக்கப்பட்டாரா அல்லது விடுதலை செய்யப்பட்டாரா என்பதைப் பற்றி கவலை இல்லை என்று கூறுகிறது. ஆனால் இந்திய இரட்டை இடர், முதலில் ஒருவர் மீது ஒரு குற்றத்திற்காக குற்ற வழக்கு இடப்பட்டு, அவர் அக்குற்றத்திற்காக **தண்டிக்கப் பட்டிருக்க** வேண்டும். அப்பொழுதுதான் அவர் அதே குற்றத்திற் காக இரண்டாம் முறை தண்டிக்கப்படுவதிலிருந்து பாதுகாப்பு பெற இயலும், என்று கூறுகிறது. அதாவது அமெரிக்க இரட்டை இடரில், அவர் மீது குற்ற வழக்கு இடப்பட்டிருந்தாலே போதும்.. ஆனால் இந்திய இரட்டை இடரில், அவர் மீது குற்ற வழக்கு இடப்பட்டு, தண்டனைக்குள்ளாகி இருக்க வேண்டும்.

Magbhool Husain v. State of Bombay[1]

ஒரு குற்றத்திற்காக நீதிமன்றமோ அல்லது தீர்ப்பாயமோ விதிக்கும் தண்டனைகளுக்கு எதிராகத்தான் இரட்டை இடரி லிருந்து பாதுகாப்பு பெற இயலும். மாறாக நீதிமுறையல்லாத ஆயங்கள் அக்குற்றத்திற்காக விதிக்கும் தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெற இயலாது என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

Leo Roy v. Superintendent, District Jail[2]

இவ்வழக்கில் ஒரு நபர் கடல் சுங்கச் சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டார். அதன் பிறகு அவர் மீது குற்றமுறு சதிக்காக இந்திய தண்டனைச் சட்டத்தின்படி குற்ற வழக்கிடப்பட்டது. இதில் குற்றமுறு சதிக்காக இடப்பட்ட இரண்டாவது வழக்கு இரத்து செய்யப்பட முடியாது. ஏனெனில் அது ஒரே குற்றத்திற்காக வழக்கிடப்படவில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

A.A.Mulla v. State of Maharashtra[3]

இவ்வழக்கில் காவல் அதிகாரிகள் சிலர் குற்றவாளியிட மிருந்து 99 தங்கக் கட்டிகளை கைப்பற்றினர் என்றும், ஆனால் 90 தங்கக் கட்டிகளை மட்டுமே கைப்பற்றியதாக கணக்கில் காட்டி அறிக்கை (பஞ்சநாமா) தயார் செய்துள்ளனர் என்றும், மீதமுள்ள 9 தங்கக் கட்டிகளை அவ்வதிகாரிகளே வைத்துக் கொண்டுள்ளனர்

1. AIR 1953 SC 325
2. AIR 1958 SC 119
3. AIR 1997 SC 1441

என்றும், எனவே அவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 409 மற்றும் ஊழல் தடுப்புச் சட்டம் பிரிவு 5-இன் கீழ் தண்டனைக்குரிய குற்றம் புரிந்துள்ளனர் என்றும் அவர்கள் மீது குற்றம் சாட்டப் பட்டது. இது தொடர்பாக தனி நீதிபதியின் முன் நடந்த வழக்கு விசாரணையின் முடிவில் அவர்களுக்கு எதிரான கையாடல் குற்றம் அரசு தரப்பில் மெய்ப்பிக்கப்படவில்லை என்ற காரணத்தால் அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இந்நிலையில் அவர்கள் மீது இக்குற்றம் தொடர்பாக சுங்கச் சட்டம் மற்றும் அன்னிய செலாவணி ஒழுங்குமுறைச் சட்டத்தின் (ஃ பெரா) கீழ் இரண்டா வதாக ஒரு விசாரணை நடைபெற்றது. இந்த இரண்டாவது வழக்கு விசாரணை ஷரத்து 20(2)-இன் கீழான உரிமையை மீறுவதாகும் என்றும், எனவே அதை இரத்து செய்யக் கோரியும் அவர்கள் முறையிட்டனர். இதை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் இரண்டாவது வழக்கு விசாரணையை இரத்து செய்ய இயலாது என்றும், ஏனெனில் இரண்டு வழக்கு விசாரணைகளுக்கான குற்றத்தின் உட் கூறுகள் வேறுபட்டவை என்றும், அதுபோல் ஏற்கனவே நடந்த முதல் வழக்கு விசாரணைக்குரிய குற்றத்திற்கான சங்கதிகளின் நிலையானது இரண்டாவது வழக்கு விசாரணைக்குரியதிலிருந்து வேறுபட்டது என்றும் கூறியது.

Jitendra Panchal v. Intelligence Officer, N.C.B.[1]

'ஹாசிஸ்' (Hashish) என்ற போதைப் பொருளை விற்பனைக்கு வைத்திருப்பது அமெரிக்க நாட்டில் குற்றமாகும். இவ்வாறு வைத்திருந்த ஒருவருக்கு வழக்கு விசாரணையின் முடிவில் அமெரிக்காவில் தண்டனை விதிக்கப்பட்டது. இது தொடர்பாக அவர் மீது நமது இந்திய நாட்டில் ஒரு வழக்கிடப் பட்டது. அதாவது மேற்படி போதைப் பொருளை நேபாள் நாட்டி லிருந்து இந்தியா கடத்தி வந்து பின் அதை விற்பனைக்காக அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்தார் என்பதற்காக அவர் மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 3 மற்றும் 4 மற்றும் பொது வகையங்கள் விளக்கச் சட்டம் பிரிவு 3(38)-இன்படி குற்றம் சாட்டப்பட்டது. இந்த இரண்டாவது வழக்கு ஷரத்து 20(2)-இன் படி செல்லாது என்று அவர் வழக்கிட்டார். இதை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம் அமெரிக்காவில் வழக்கு விசாரணையின் முடிவில் அவருக்கு தண்டனை விதிக்கப்பட்டதற்கான குற்றமும், தற்போது இந்தியாவில் அவர் மீது சாட்டப்பட்டுள்ள குற்றமும் வேறுபட்ட

1. AIR 2009 SC 1938

தாகும் என்றும், இரண்டும் தனித்தனியான குற்றங்களாகும் என்றும், எனவே ஷரத்து 20(2)-இன் வகைமுறைகள் இந்தியாவில் நடைபெறும் குற்ற வழக்கிற்கு பொருந்தாது என்றும் தீர்ப்புரைத்தது.

54. Examine the scope of right against self-incrimination under the Constitution. (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி தன்னைத்தானே குற்றஞ்சாட்டிக் கொள்ளுதலுக்கு எதிராக உள்ள உரிமைகளின் நோக்கெல்லையை ஆராய்க.)

(அல்லது)

Can an accused compelled to give him thumb impression? Explain the relevant provisions of Constitution. (குற்றஞ் சாட்டப்பட்டுள்ள நபர் ஒருவரை, அவரது கைரேகையை கொடுக்கும்படி கட்டாயப்படுத்தலாமா? அரசியலமைப்பின் தொடர்பான வகைமுறைகளை விளக்குக.)

(அல்லது)

Self - incrimination - Write short notes. (தன்னைத்தானே குற்றஞ்சாட்டல் - குறுகிய விடை தருக.)

தன்னைத்தானே குற்றஞ்சாட்டிக் கொள்ள வற்புறுத்தப் படுவதிலிருந்து ஒருவரை அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 20(3) பாதுகாப்பு அளிக்கிறது. **"ஒரு குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒரு நபர் தனக்கே எதிராக ஒரு சாட்சியமாக ஆக்கப்படுவதற்கு வற்புறுத்தப்படக் கூடாது"**, என **ஷரத்து 20(3)** கூறுகிறது.

ஆங்கில மற்றும் அமெரிக்க சட்டவியல் கொள்கைகளின் படி இது உருவாக்கப்பட்டது. தன் மீதே குற்ற வழக்கு தொடரப் படுமாறு, அதற்கு உண்டான விபரங்களை தருமாறு யாரும் வற்புறுத்தப்படக் கூடாது என்பதே அக்கொள்கை ஆகும். குற்றம் நிரூபிக்கப்படும் வரை, அவன் நிரபராதியே. குற்றத்தை நிரூபிக்க வேண்டியது, அரசு தரப்பின் கடமையாகும். தன்னுடைய விருப்பத்திற்கு விரோதமாக, குற்றஞ்சாட்டப்பட்டவன், எவ் விதமான ஏற்புரை வாக்குமூலங்களையும் அளிக்கத் தேவையில்லை.

M.P.Sharma v. Satish Chandra[1]

இவ்வழக்கில் இப்பாதுகாப்புரிமை பின்வரும் மூன்று முக்கிய கூறுகளை உள்ளடக்கியுள்ளதென உச்ச நீதிமன்றம் கூறியது. அவை, 1. 'குற்றஞ்சாட்டப்பட்டதாக உள்ள' ஒரு நபருக்கு இது ஓர் உரிமையாகும்; 2. ஒரு சாட்சியமாக ஆக்கப்படும் வற்புறுத்தலுக்கு எதிராக பாதுகாப்பு அளிக்கிறது. 3. அப்படிப்பட்ட வற்புறுத்தலின் காரணமாக 'தனக்கே எதிராக' சான்றளிப்பதில் இருந்து பாதுகாப்பளிக்கிறது.

Yusufalli v. State of Maharashtra[2]

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவனின் அறிவுக்கு எட்டாமல், ஆனால் வற்புறுத்தலில்லாமல் அவன் வாக்குமூலத்தை ஒலிப்பதிவு நாடாவில் பதிவு செய்ததற்கு எதிராக ஷரத்து 20(3)-இன் கீழ் நிவாரணம் தேட முடியாது என்றும், அது ஒரு சாட்சியாக ஏற்கப்படும் என்றும் கூறப்பட்டது. ஏனெனில் அங்கு 'வற்புறுத்தல்' கிடையாது.

Nandini Satpathi v. P.L.Dhani[3]

இவ்வழக்கில் 'கட்டாய வாக்குமூலம்' (Compelled Testimony) என்பது உடல் உபாதை மூலம் பெற்றுக் கொள்ளும் வாக்குமூலமே என்றில்லாமல் இடைவிடாது எரிச்சல் மூட்டும் கேள்விகள், மனக் குழப்பமூட்டுதல் முதலியவற்றை பயன்படுத்தி வலுக்கட்டாயம் என்று சொல்லத்தக்க அளவுக்கு ஒரு நபர் உந்தப்படுவார் என்றால் அதனையும் கட்டாய வாக்குமூலம் எனலாம், என்று கூறப்பட்டது.

Amrit Singh v. State of Punjab[4]

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவரின் தலைமுடியை அடையாளம் காண்பதற்காக கொடுக்கும்படி கேட்கப்பட்டது. இது 'கட்டாயமாக வாக்குமூலம்' பெறுவதற்கு ஒப்பாகும் என்றும், குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது தலைமுடியின் மாதிரியை கொடுக்க மறுக்கலாம் என்றும், ஷரத்து 20(3)-இன்படி அவரையே

1. AIR 1954 SC 300
2. AIR 1968 SC 147
3. AIR 1977 SC 1025
4. AIR 2008 SC 368

அவருக்கெதிரான ஒரு சாட்சியாக ஆக்க முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

குற்றஞ்சாட்டப்பட்ட நபர் தனது கைரேகையை கொடுக்கும்படி வற்புறுத்தப்படல்:

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள நபர் ஒருவர், தன் மீது சாட்டப் பட்டுள்ள குற்றங்கள் குறித்து தன்னுடைய சொந்த அறிவுக்கு எட்டிய விடயங்களை கூறுமாறு கட்டாயப்படுத்துவதைத்தான் ஷரத்து 20(3) தடுக்கிறது (What is forbidden under Article 20(3) is to compel an accused to say something from his personal knowledge relating to the change agaisnt him). ஆகவே, குற்றஞ்சாட்டப்பட்ட நபர், தனது கைரேகையை கொடுக்கும்படி வற்புறுத்தப்படல், 'தன்னைத்தானே குற்றஞ்சாட்டிக் கொள்ளல்' என்ற தலைப்பின் கீழ் வராது. ஏனெனில், இங்கே மேற்படி குற்றஞ் சாட்டப்பட்ட நபர் தனது சொந்த அறிவினைப் பயன்படுத்தி எதனையும் வாய்வழியாக தனக்கெதிராக சாட்சியமளிக்கக் கட்டாயப்படுத்தப்படவில்லை. மேலும், தனக்கெதிராக உள்ள ஆவணங்களை ஆஜர்படுத்த வற்புறுத்தல் அல்லது பொருள்களை கொடுக்க கட்டாயப்படுத்தல் அல்லது கையெழுத்திடும்படி மிரட்டுதல் ஆகிய இவையெல்லாம் 'தன்னைத்தானே குற்றஞ் சாட்டல்' என்ற பதத்தின் எல்லைக்குள் வராது.

State v. M.Krishna Mohan[1]

இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவரிடமிருந்து மாதிரி கைவிரல் ரேகை மற்றும் கையெழுத்து பெறுவதை ஷரத்து 20(3)-இன் கீழ் 'தனக்கு எதிராக தானே ஒரு சாட்சியாதல்' என்று கூறி தடை செய்ய இயலாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

55. What are the various safeguards available to accused persons under the Constitution. (அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் குற்றவாளிகளுக்கு இருக்கின்ற பல்வேறு பாதுகாப்புகள் யாவை?)

(அல்லது)

What are the Fundamental rights under the Constitution

1. AIR 2008 SC 368

providing safeguards in the administration of Criminal Justice. (இந்திய அரசமைப்பு சட்டத்தில், எந்த அடிப்படை உரிமைகள், குற்றவியல் நிருவாகத்தில் இடர்காப்புகளாக வழங்கப்பட்டுள்ளது? அவைகளின் அளாவுகையை விளக்குக.)

(முன் சென்ற வினா எண்கள் 51, 52, 53 ஆகியவற்றை தொகுத்து எழுதுக.)

(இ) வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான பாதுகாப்பு

(ஷரத்து 21)

[C] Protection of Life and Personal Liberty

(Article 21)

56. How far is right to life and personal liberty protected under the Indian Constitution? (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் ஒருவனின் வாழ்க்கையும், தனி நபர் சுதந்திரமும் எந்த அளவுக்கு பாதுகாக்கப்படுகிறது?)

(அல்லது)

Examine the nature and scope of the right to personal liberty under Art. 21 of the Constitution of India. (இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 21-இல் குறிப்பிட்டுள்ள தனி நபர் சுதந்திரத்தின் இயல்பு மற்றும் அளாவுகை பற்றி விளக்குக.)

(அல்லது)

Explain how the decision in Meneka Gandhi's case and the subsequent decisions have expanded the scope of Article 21 of the Constitution. (மேனகா காந்தி வழக்கும் அதற்குப் பின்னர் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளும் எவ்வகையில் அரசமைப்பு சட்ட 21-வது பிரிவின் நோக்கெல்லையை விரிவு படுத்தின என்பதை விவரி.)

(அல்லது)

"No person shall be deprived of his life or personal liberty except according to procedures established by law" - Ex-

plain with cases. ("சட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளின்படியின்றி எந்த ஒரு நபரின் உயிரையோ, தன்னுரிமையையோ பறித்தல் இயலாது." - வழக்குகளுடன் விளக்குக.)

(அல்லது)

Examine how the Supreme Court has expanded the ambit of the protection of one's life and personal liberty under Art. 21 referring to relevant case - laws. (ஷரத்து 21-இன் கீழ் ஒருவனுடைய வாழ்க்கைக்கும், தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பின் எல்லையை உச்ச நீதிமன்றம் எங்ஙனம் விரிவாக்கியுள்ளது என்பதை தொடர்பான வழக்குச் சட்டங்களை சுட்டிக்காட்டி ஆராய்க.)

(அல்லது)

Discuss how far Article 21 protects the right to livelihood. (எந்த அளவுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 21 உயிர் வாழும் உரிமையை பாதுகாக்கிறது? விவாதிக்க.)

(அல்லது)

Due process of law - Write short notes. (சட்டத்தின் உரிய செயல்முறையில் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Procedure established by law - Write short notes. (சட்டத்தால் அமைக்கப்பட்ட வழி வகைகள் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Comment
Meneka Gandhi v. Union of India (AIR 1978 SC 597)
விமர்சிக்க
மேனகா காந்தி -எதிர்- இந்திய அரசு (ஏ.ஐ.ஆர். 1978 எஸ்.சி. 597)

ஷரத்து 21 என்ன கூறுகிறது?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 21-இன்படி, **"எந்த நபரின் வாழ்க்கையையும் அல்லது தனி நபர் சுதந்திரத்தையும் சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளில் தவிர பிற**

வழிகளில் மீறக் கூடாது".

ஷரத்து 19-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை, இந்தியக் குடிமக்கள் மட்டுமே அனுபவிக்க முடியும். ஆனால் ஷரத்து 20, 21 மற்றும் 22-இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை இந்தியக் குடிமக்கள் மட்டுமல்லாமல் குடிமக்கள் அல்லாதவரும் (non-citizens) அனுபவிக்கலாம். இங்கு சில முக்கிய வழக்குகளைக் காண வேண்டியுள்ளது.

A.K.Gopalan v. State of Madras[1]

இவ்வழக்கில் ஷரத்து 21-க்கு உச்ச நீதிமன்றம் **குறுகிய பொருள் விளக்கத்தைக்** (narrower interpretation) கொடுத்தது. ஏ.கே.கோபாலன் என்பவர் ஒரு கம்யூனிசக் கட்சியின் தலைவர். அவர் 1950-ஆம் ஆண்டின் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்டார். இவ்வாறு சிறை வைக்கப்பட்டது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19 மற்றும் 21-வது ஷரத்தின் கீழ் தனக்களிக்கப்பட்டுள்ள சுதந்திர உரிமைக்கு முரணானது என்று கூறி பின்வரும் அடிப்படைகளின் கீழ் மேற்படி சட்டம் செல்லத் தக்க ஒன்றல்ல என்று விளம்பக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தார்.

அவை, (1) மேற்படி சட்டம், தன்னை சிறை வைத்திருப்பது, ஷரத்து 19 (1)(d)-இன் கீழ் தனக்களிக்கப்பட்டுள்ள சுதந்திரமான, இந்தியா முழுமைக்கும் சென்று வர உள்ள அடிப்படை உரிமையை பறிப்பதாக உள்ளது. மேற்படி சிறை வைப்பு ஷரத்து 19(5)-இன் கீழான ஒரு நியாயமான கட்டுப்பாடாகாது (reasonable restriction). எனவே, இதனடிப்படையில் மேற்படி சட்டம் ஷரத்து 13-இன் கீழ் இல்லாநிலையதாகும்; (2) ஷரத்து 21-இல் கூறப்பட்டுள்ள 'சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளின்படி'யல்லாமல் தனிப்பட்ட சுதந்திரத்தைப் பறிக்கும் மேற்படி சட்டம், மேற்படி ஷரத்து 21-க்கு முரணானது. இங்கு ஷரத்து 21-இல் கூறப்பட்டுள்ள சட்டம் (law) எனும் சொல்லில், இயற்கை நீதியும் (natural justice) உள்ளடங்கும். இயற்கை நீதியை உள்ளடக்காத எந்தச் சட்டமும் செல்லத்தக்கதல்ல. மேற்படி தடுப்புக் காவல் சட்டத்தில் இயற்கை நீதி பின்பற்றப்படவில்லை. எனவே அச்சட்டம் செல்லாது என ஏ.கே.கோபாலனால் வாதிடப்பட்டது. (3) ஷரத்து 21-இல் உள்ள **'சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை' (Proce-**

1. AIR 1950 SC 27

dure established by law) என்பது, அமெரிக்க அரசியலமைப்பில் உள்ள **'சட்டத்தின் உரிய செயல்முறை' (Due process of law)** என்பதை ஒத்ததாகும். அமெரிக்காவின், 'சட்டத்தின் உரிய செயல்முறை' என்பதில் நிலைமுறை மற்றும் நடைமுறைச் சட்டங்கள் உள்ளடங்கியது. எனவே அங்கு இயற்கை நீதிக் கோட்பாடுகளும் (Principles of natural justice) ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. இதன் விளைவாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 21-இல் உள்ள 'சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகள்' என்பதில் இயற்கை நீதியும் உள்ளடங்கும். எனவே, தடுப்புக் காவல் சட்டத்தில் உள்ள நடைமுறைகள் இயற்கை நீதிக் கோட்பாடுகளின் படி நியாயமாக இருக்க வேண்டும். ஆனால் மேற்படி தடுப்புக் காவல் சட்டம் அவ்வாறு இல்லாததால் செல்லத்தக்கதல்ல என்றும் ஏ.கே.கோபாலன் வாதம் புரிந்தார்.

ஆனால் உச்ச நீதிமன்றமோ, ஏ.கே.கோபாலனின் மேற்படி வாதங்களையெல்லாம் நிராகரித்துவிட்டது. அவற்றிற்கு பதிலளிக்கும் முகமாக பின்வருமாறு கூறியது.

முதற்கண், ஷரத்து 19(1)(d)-இன் கீழ் இந்தியா முழுமைக்கும் சுதந்திரமாக சென்று வரும் உரிமையை, மற்றொரு சட்டத்தின் வாயிலாக கட்டுப்படுத்தலாம். ஷரத்து 19-ம், ஷரத்து 21-ம் தனித் தனியாக இயங்கக் கூடியவை. எனவே, ஒரு மனிதனின் வாழ்க்கையும், தனிப்பட்ட சுதந்திரமும் ஒரு சட்டத்தால் பாதிப்பிற்குள்ளானால், அதற்கு ஷரத்து 19 பொருந்தாது. எனவே தடுப்புக் காவல் சட்டமானது, ஷரத்து 19-இல் கூறப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டியதில்லை. அது, தடுப்புக் காவலுக்குரிய ஷரத்து 22-இன் நிபந்தனையைப் பூர்த்தி செய்தாலே போதுமானதாகும். எனவே தடுப்புக் காவல் சட்டம் செல்லும்.

இரண்டாவதாக, ஷரத்து 21-இல் குறிப்பிடப்பட்டுள்ள 'சட்டம்' எனும் பதம் சட்டமன்றத்தால் இயற்றப்பட்ட சட்டத்தைக் குறிப்பிடுகிறதே தவிர, 'இயற்கை நீதிக் கோட்பாடுகளை' குறிப்பதாகப் பொருள் கொள்ளக் கூடாது. எனவே தடுப்புக் காவல் சட்டத்தின்படி சிறை வைக்கப்பட்டதற்கு, இயற்கை நீதிக் கோட்பாடுகள் பின்பற்றப்படவில்லை என்று வாதிட முடியாது. அதாவது சிறை வைக்கப்பட்ட நபருக்கு அவரது வாதத்தை எடுத்துக் கூற நியாயமான சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை என்னும் இயற்கை நீதிக் கோட்பாடு பின்பற்றப்படவில்லை, என்று கூறவியலாது. எனவே ஷரத்து 21-க்கு இயற்கை நீதி பொருந்தாது

இதனாலும், மேற்படி தடுப்புக் காவல் சட்டம் செல்லத்தக்கதே.

மூன்றாவதாக, ஷரத்து 21-இன்படியிலான 'சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை' என்பதும், அமெரிக்க அரசியலமைப்பின் 'சட்டத்தின் உரிய செயல்முறையில்' (Due process of law) என்பதும் ஒரே மாதிரியான பொருளைத் தருவதல்ல. இரண்டும் வெவ்வேறானவை. ஒருவரது வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை அரசு மீற நினைத்தால், அங்கு அதற்கு சட்டத்தால் (ஏதேனும் ஒரு செல்லத்தக்க சட்டம்) அதற்கென உண்டாக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதாகக் காண்பித்தாலே போதுமானதாகும். அமெரிக்காவின் 'சட்டத்தின் உரிய செயல்முறை' என்பது, இந்தியாவின் 'சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை' என்பதைக் காட்டிலும் மிகப் பரந்ததாகும். 'சட்டத்தின் உரிய செயல்முறை' என்பதில் இயற்கை நீதிக் கோட்பாடுகள் அடங்கியுள்ளன. அதை மறுக்கவியலாது. ஆனால் இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்கள், அமெரிக்காவின் 'சட்டத்தின் உரிய செயல்முறை' என்பதில் உள்ள **'உரிய' (due)** எனும் சொல்லை தெரிந்தே இந்திய அரசியலமைப்பில் தவிர்த்துள்ளனர். இதிலிருந்து இயற்கை நீதிக் கோட்பாடுகளின்படி அமைந்த அமெரிக்க அரசியலமைப்பின் 'சட்டத்தின் உரிய செயல்முறை' என்பதை இந்திய அரசியலமைப்பில் அவர்கள் அறிமுகப்படுத்த விரும்பவில்லை, என்பது தெள்ளத் தெளிவாகிறது. எனவே ஷரத்து 21-இன் கீழ், சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளின்படி ஒருவரது வாழ்க்கையோ அல்லது தனிப்பட்ட சுதந்திரமோ மீறப்படும் பொழுது, அங்கு இயற்கை நீதிக்கோட்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும் என்ற கட்டாயமில்லை. எனவே, ஏ.கே.கோபாலனை சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளின்படி சிறை வைத்த தடுப்புக் காவல் சட்டம் செல்லத்தக்கதே என்றும் உச்ச நீதிமன்றம் ஏ..கே.கோபாலனுக்கு விரோதமாகத் தீர்ப்பளித்தது.

மேற்படி தீர்ப்பில் கூறப்பட்ட கோட்பாடுகள் அனைத்தும் பின்வரும் மேனகா காந்தி வழக்கில் மாறுபட்ட தீர்ப்பு கொடுக்கப்படும் வரையிலும் பல வழக்குகளிலும் பின்பற்றப்பட்டது.

Menaka Gandhi v. Union of India[1]

மிகமிகப் பிரபலமான இந்த வழக்கில் **'வாழ்க்கை உரிமை' (Right to live)** மற்றும் **'தனிப்பட்ட சுதந்திரம்' (Personal Lib-**

1. AIR 1978 SC 597

erty) ஆகிய பதங்களின் பொருள் விளக்கம் குறித்து உச்ச நீதி மன்றத்தால் விவாதிக்கப்பட்டது. இவ்வழக்கில் ஏ.கே.கோபாலன் வழக்கில் ஷரத்து 21-க்கு கொடுக்கப்பட்ட பொருள் விளக்கம் உச்ச நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. மேலும் உச்ச நீதிமன்றம் **'வாழ்க்கை உரிமை', 'தனிப்பட்ட சுதந்திரம்'** ஆகிய சொற்களுக்கு **பரந்த மற்றும் சாத்தியமாகக் கூடிய (widest possible interpretation)** பொருள் விளக்கத்தை கொடுத்தது.

வழக்கின் பொருண்மைகள் வருமாறு :

இவ்வழக்கின் மனுதாரர் மேனகாகாந்தியின் பாஸ்போர்ட்டை (Passport - கடவுச்சீட்டு), 1967 ஆம் ஆண்டின் பாஸ்போர்ட் சட்டத்தின் 10(3)(c) என்ற பிரிவின் கீழ் மத்திய அரசு பறிக்க உத்திர விட்டது (impounded). **'பொது மக்களின் நலனை' (in the interest of general public)**-க் கருதி மேற்கண்டவாறு ஒருவருடைய பாஸ்போர்ட்டை பறிமுதல் செய்யலாம் என மேற்படி சட்டம் மத்திய அரசுக்கு அதிகாரம் அளித்துள்ளது. ஆனால் மத்திய அரசு தனது, மேற்படி உத்திரவிற்குண்டான காரணங்களை அதே பொது மக்களின் நலனைக் கருதி வெளியிட மறுத்து விட்டது.

இவ்வாறு தன்னுடைய பாஸ்போர்ட்டை பறித்ததற்காக மேற்படி பிரிவு 10(3)(c)-யானது, அரசியலமைப்பிற்குட்படாதது; செல்லாதது என்று பின்வரும் அடிப்படைகளின் கீழ் மேனகாகாந்தி உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தார்.

1. ஒரு நபரின் பாஸ்போர்ட்டை பறிப்பதற்கு முன், அவருக்கு, அவருடைய வாதத்தினை எடுத்துச் சொல்ல ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும். ஆனால் அவ்வாறு அளிக்காமல், மேற்படி பிரிவு 10(3)(c) யானது, ஏதேச்சதிகாரப் போக்குடன் செயல்படுவதால், அது அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 14ஐ மீறுவதாக உள்ளது. **(ஷரத்து 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் சட்டத்தின் சம பாதுகாப்பு)**

2. ஒரு நபரின் பாஸ்போர்ட்டை பறிப்பது, அவர் சுதந்திரமாக வேறு எங்கும் செல்லும் (வெளிநாடு) அடிப்படை உரிமையை பறிப்பதாகும். **ஷரத்து 21, சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளில் தவிர, எந்த நபரின் வாழ்க்கையையும் அல்லது தனி நபர் சுதந்திரத்தையும் பறித்தல் கூடாது,** என்று கூறுகிறது. ஆனால் மேற்படி பிரிவு 10(3)(c) ஆனது, அவ்வாறு தனிநபர் ஒருவரின்

பாஸ்போர்ட்டை பறிப்பதற்கு 'சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகள்' (procedures established by law) குறித்து எதையும் கூறவில்லை. எனவே மேற்படி பிரிவு 10(3)(c), ஷரத்து 21-ஐயும் மீறுவதாக உள்ளது.

3. மேலும், மேற்படி பிரிவு 10(3)(c) ஆனது, ஷரத்துக்கள் 19(1)(a) மற்றும் (g)யை மீறுவதாக உள்ளது. மேற்படி ஷரத்துக்கள் 19(1)(a) பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தைக் கூறுகிறது. அதுபோல் ஷரத்து 19(1)(g), ஒருவர் எந்தத் தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபாரத்தைச் செய்யும் சுதந்திரத்தைக் குறிப்பிடுகிறது. ஷரத்து 19(1)(a)-யின் மீதான நியாயமான தடைகளை ஷரத்து 19(2)-ம், ஷரத்து 19(1)(g)-யின் மீதான நியாயமான தடைகளை ஷரத்து 19(6)-ம் விதிக்கிறது. ஆனால் பிரிவு 10(3)(c)-யில் மேற்படி ஷரத்து 19(2) அல்லது 19(6)-ல் கூறப்பட்டுள்ள நியாயமான தடைகளைத் தவிர, வேறு சில தடைகளும் உள்ளது. இவை அரசியலமைப்பால் அனுமதிக்கப்படாத தடைகள். எனவே, பிரிவு 10(3)(c)-யானது, ஷரத்துகள் 19(1)(a) மற்றும் 19(1)(g) ஆகியவற்றை மீறுவதாக உள்ளது.

முன்கண்டவாறு, மேனகாகாந்தியின் பாஸ்போர்ட்டை பறித்து உத்திரவிட்டதற்கு, மத்திய அரசு சரியான காரணம் காட்டவில்லை. எனினும், வழக்கு நடவடிக்கைகளின் பொழுது மத்திய அரசு சார்பாக ஒரு ஆணையுறுதியாவணம்(Affidavit) தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'ஒரு விசாரணைக் கமிஷனின் முன்னிலையில் நடைபெறும் விசாரணையில் மேனகாகாந்தி ஆஜராவது அவசியமாக இருப்பதால், அவரது பாஸ்போர்ட் பறிக்கப்பட்டதாக' காரணம் காட்டப்பட்டிருந்தது. மேலும், மேனகாகாந்தி தனது தரப்பு வாதத்தை எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்பு குறித்து, அரசின் தலைமை வழக்குரைஞர் (Attorney - General) உரை (Statement) ஒன்றையும் தாக்கல் செய்தார். அதில், மேனகா காந்தி, பாஸ்போர்ட் பறிக்கப்பட்டது தொடர்பாக தனது தரப்பு வாதங்களை எடுத்துச் சொல்லலாம் என்றும், அவ்வாதங்கள் சட்டப்படியான முறையில் விரைவாக கேட்கப்படும், என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இங்குதான் ஷரத்து 21-க்குண்டான பொருள் விளக்கத்தின் பணி ஆரம்பமானது. மேனகாகாந்தியிடமிருந்து பாஸ்போர்ட் பறிக்கப்பட்டதற்கான காரணங்களை, அவரிடம் முன்னதாகவே கூறாமல் நிறுத்தி வைத்தது அரசின் நியாயமற்ற செயலாகும், என உச்ச நீதிமன்றம் கூறியது. இதற்காக, ஷரத்து 21-ன் படி, சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நியாயமான நடைமுறை ஏதும் கடைப்பிடிக்கப்

படவில்லை. இதனால், ஷரத்து 14-ன் கீழான, ஒருவருக்கு 'சட்டத்தின் முன் சமம்; சட்டத்தின் சம பாதுகாப்பு' என்பது மறுக்கப்படுகிறது.

அதாவது, ஒருவர் வெளிநாடு செல்லும் உரிமையை, அது குறித்து அவரது வாதத்தை கூறுவதற்கென சந்தர்ப்பம் ஏதும் அளிக்காமலேயே பறிக்கும் நடைமுறை, சட்டத்தால் உண்டாக்கப் பட்ட நடைமுறை ஆகாது; மேலும் அது நியாயமற்றதாகும், எனப் பட்டது. காரணங்கள் ஏதும் காட்டாமலேயே பாஸ்போர்ட்டை பறிமுதல் செய்யப் பிறப்பிக்கப்பட்ட உத்திரவு, சட்ட வகை முறைகளை (பாஸ்போர்ட் சட்டம்) மீறுவதோடு மட்டுமல்லாமல், **'எவரது வாதமும் கேட்கப்படாமல் விட்டு விடப்படக் கூடாது' (*audi alterm partem* - no one shall be left unheared)** என்ற இயற்கை நீதியையும் (Natural Justice) மீறுவதாக உள்ளது. எனவே, பாஸ்போர்ட் சட்டத்தில் ஒருவரது வாதத்தை கேட்ட பின்னரே முடிவெடுக்க வேண்டும், என்பதற்குண்டான வாசகங்கள் ஏதும் இல்லையென்றாலும், அங்கே 'இயற்றாச் சட்டம்' (Common Law) கூறும் இயற்கை நீதியினைப் பின்பற்ற வேண்டும். சட்டமன்றம் சொல்லாமல் விட்டுவிட்டதை இயற்றாச் சட்டம், இயற்கை நீதியின் வாயிலாக நிரப்பக் கூடியது. ஏனெனில், பாஸ்போர்ட்டை பறிக்க வகை செய்யும் பிரிவு 10(3)(c)-யின் கீழான அதிகாரம், நீதிப்போல்வு அதிகாரமாகும் (quasi-judicial power). எனவே, அதற்கு இயற்கை நீதிக் கொள்கைகள் நன்கு பொருந்தி வரும். ஒரு செயல் நியாய மானது என்று சொல்லப்பட வேண்டுமெனில், பாதிக்கப்பட்ட நபருக்கு, அவரது வாதத்தினை கூற ஒரு வாய்ப்பளிக்கப்பட வேண்டும்; கேட்காமல் விட்டுவிடக் கூடாது. எனவே, மேற்படி பாஸ்போர்ட் சட்டத்தில் அவ்வாறு கேட்பதற்குண்டான அதிகாரம் உட்கிடையாக உள்ளது என்றே கருத வேண்டும். மேற்கண்ட நடை முறைகள் குறித்த சட்ட வகைமுறைகள், தேவையான உட்குறிப்பின் மூலம் (necessary implication) மேற்படி பாஸ்போர்ட் சட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தால், ஒரு பாஸ்போர்ட்டை பறிப்பதற்காக உண்டாக்கப்பட்ட நடைமுறையானது, சரியானதாகவும், நியாய மானதாகவும் ஆகிவிடும். மேலும் ஏதேச்சதிகாரப் போக்கு மற்றும் நியாயமற்ற தன்மை போன்றவைகளை முன்னிறுத்தி எவ்வித வினாவையும் எழுப்ப முடியாது, என **விரிவான மற்றும் பரந்த பொருள் விளக்கம் கொடுக்கப்பட்டது.**

இறுதியாக, இந்தியத் தலைமை வழக்குரைஞர் சமர்ப்பித்த உரையின்படி, மேனகா காந்தியின் வாதத்தைக் கேட்பதற்கு மத்திய

அரசு ஒப்புக் கொண்டது. இதனால், மேற்படி 10(3)(c)-யின் கீழான உத்திரவில் இருந்த குறைபாடு நீக்கப்பட்டு விட்டது என்றும், அவ்வுத் திரவு தற்பொழுது சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை களின்படி உள்ளதென்றும், உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதியரசர்கள் தீர்ப்பு கூறினர்.

மேற்படி வழக்கு விறுவிறுப்பாக ஆரம்பித்தது. சுறுசுறுப் பாக நடந்தது. பரபரப்பான பொருள் விளக்கங்கள் அளிக்கப்பட் டன. ஆனால் இறுதியில் பொசுக்கென்று முடிந்தது. ஏனெனில், **"எனது வாதம் கேட்கப்படவில்லை ! எனது வாதம் கேட்கப்பட வில்லை !!"** என மேனகா காந்தி திரும்பத் திரும்பக் கூறியதையடுத்து, மத்திய அரசு அவரது வாதத்தை கேட்க முன்வந்ததுதான். இதனால், சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறை, ஷரத்து 21-ன் படி ஏற்பட்டு விடுகிறது; இவ்வாறு ஏற்பட்டு விடுவதால், ஷரத்து 14-ன் கீழான சட்டத்தின் சம பாதுகாப்பும் கிட்டி விடுகிறது; இவற்றின் காரணமாக, ஷரத்து 19(1)(a) மற்றும் ஷரத்து 19(1)(g) மீது, முறையே ஷரத்து 19(2) மற்றும் ஷரத்து 19(6) விதிக்கும் தடைகள் குறித்து பேச்சு எழுவதில்லை. எனவே, இவற்றின் அடிப்படையில், குறை நீக்கப் பட்ட பிரிவு 10(3) (c)-யின் கீழான மேற்படி பாஸ்போர்ட் பறிமுதலுக் குண்டான உத்திரவு, மேற்கண்ட ஷரத்துக்கள் எவற்றையும் மீறுவதாக இல்லை என்று தீர்ப்பு கூறப்பட்டது.

எனினும் இவ்வழக்கில்தான், **'வாழ்வுரிமை'** (right to live) என்பது வெறுமனே உடல் ரீதியாக மட்டுமல்ல; அது மனித மாண்புடனும், மரியாதையுடன் (human dignity) வாழ்வதையும் உள்ளடக்கும், என 'வாழ்வுரிமைக்கு' புதிய வடிவத்தை உச்ச நீதிமன்றம் கொடுத்தது. மேலும் ஷரத்து 19-ம் ஷரத்து 21-ம் ஒன்றுடன் ஒன்று இணைந்து செயல்படக் கூடியன என்றும், சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறையில் 'இயற்கை நீதியும்' அடங்கும் என்றும், ஏ.கே.கோபாலன் வழக்கில் அளிக்கப்பட்ட பொருள் விளக்கத்திற்கு மாறுபாடாக ஆனால் சரியாக உச்ச நீதிமன்றம் கூறியது. இவையெல்லாம் பின்னர் எழுந்த வழக்குகளுக்கு உதவின.

மேலும் சில முக்கிய வழக்குகள்:

Francis Coralie v. Union Territory of Delhi[1]

இவ்வழக்கில், 'வாழ்வுரிமை' என்பது உடலளவு உயிர்

1. AIR 1981 SC 746

வாழ்வது மட்டுமல்ல, மனித மாண்புடனும் வாழ்வது, என்ற மேற்படி மேனகாகாந்தியின் வழக்கில் கூறப்பட்டே கருத்தே மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

Olga Tellis v. Bombay Municipal Corporation[1]

இப்பிரபலமான வழக்கு **'நடைபாதை வசிப்பாளர்கள் வழக்கு' (Pavement Dweller's Case)** எனப்படுகிறது. இதில், ஷரத்து 21-ல் கூறப்பட்டுள்ள வாழ்வு (live) என்பதில் 'வாழ்க்கைத் தொழில்' (livlihood - பிழைப்பு) செய்யும் உரிமையும் உள்ளடங்கும், என உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கம் கொடுத்தது.

Kharak Singh v. State of Madhya Pradesh[2]

இவ்வழக்கில், கஹரக்சிங் என்பவர் கூட்டுக் கொள்ளையில் ஈடுபட்டார் என கைது செய்யப்பட்டபின், போதிய சான்றுகள் இல்லை என்ற அடிப்படையில் நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது. ஆனால் தினமும் இரவு நேரங்களில், அவர், வீட்டில் இருக்கின்றாரா என காவல் துறையினர், அவர் வீட்டை இரகசியமாக கண்காணித்தது மற்றும் கதவைத் தட்டி அவரின் தூக்கத்தை கலைத்தது போன்றவை அடிப்படை உரிமையான தனிநபர் சுதந்திரத்தை (personal liberty) மீறிய செயல் என உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது.

Vincent Parikurlangara v. Union of India[3]

இவ்வழக்கில் மக்கள் தங்களது ஆரோக்கியத்தை பேணிக் காத்து முன்னேற்றிக் கொள்ளும் உரிமையானது, ஷரத்து 21-இன் கீழான வாழ்வுரிமையில் சேர்க்கப்பட்டது. மனிதனுடைய அனைத்து நடவடிக்கைகளும் ஆரோக்கியமான உடல் தேவை. ஆகவே நல் ஆரோக்கியத்தை தருவதற்குண்டான சூழல்களை ஏற்படுத்துவது அரசின் கடமையாகும் என மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

Bandu Mukti Morcha v. Union of India[4]

இவ்வழக்கில் சுரண்டலுக்கெதிராக மனித மாண்புடன் வாழும் உரிமையும் 'வாழ்க்கை உரிமையில்' (right to life) அடங்கும்

1. AIR 1986 SC 180 : (1985) 3 SCC 545
2. AIR 1963 SC 1295
3. (1987) 2 SCC 165
4. AIR 1984 SC 802

எனப்பட்டது.

P.Rathinam v. Union of India[1]

இவ்வழக்கில் வாழ்க்கை உரிமையில், வாழாமல் இருக்கும் உரிமையும் (இறக்கும் உரிமை) அடங்கும் என்று கூறப்பட்டது. ஆனால் அதன் பின் எழுந்த **Gian Kaur v. State of Punjab**[2] எனும் வழக்கில் 'வாழ்க்கை உரிமையில்' 'சாகும் உரிமை' அடங்காது எனப்பட்டது. அதாவது வாழாமல் சாகும் உரிமை, ஷரத்து 21-இல் அடங்காது.

M.C.Metha v. Union of India[3]

இந்த பொது நல வழக்கில் சுகாதாரமான மற்றும் மாசற்ற சூழலை மக்களுக்கு அளிக்கத்தக்க வகையில், கங்கை நதியில் தொழிற்சாலை கழிவுகள் கலப்பதை கான்பூர் மாநகராட்சி தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

Chameli Singh v. State of U.P.[4]

இவ்வழக்கில் **'உறைவிட உரிமையும்' (Right to Shelter)** ஷரத்து 21-இன் கீழான ஓர் அடிப்படை உரிமையாகும் என்பது உச்ச நீதிமன்றத்தால் நிலை நிறுத்தப்பட்டது. சற்று விளங்கச் சொன்னால், மனிதனும் வாழ்கிறான்; விலங்குகளும் வாழ்கின்றன. இதைக் கொண்டு விலங்கின வாழ்விற்கு தேவையானது மனிதனுக்கும் இருந்துவிட்டால் அதுவே போதுமானதாகும். அவனும் வாழ்ந்து கொண்டிருப்பதாக பொருளாகும் என்று கருதுதல் இயலாது. சீரமைந்த ஒரு சமுதாயத்தில் ஒரு மனிதனாக வாழும் உரிமை என்பது அவனுக்கான உணவு, நீர், மாசற்ற சுற்றுப்புற சூழல், கல்வி, மருத்துவ வசதி, உறைவிடம் ஆகியன எல்லாமும் அடங்கியதாகும். இது நாகரிகமடைந்த ஒரு சமுதாயத்தில் அரசு மக்களுக்கு கட்டாயம் உத்தரவாதமளிக்க வேண்டிய அடிப்படை மனித உரிமைகளாகும். இந்த அடிப்படை மனித உரிமைகளின்றி இதர குடிமையியல், அரசியல், சமூக மற்றும் கலாச்சார உரிமைகளாலோ, இந்திய அரசியலமைப்பு தந்துள்ள பிற உரிமைகளாலோ யாதொரு பயனும்

1. (1994) 3 SCC 394
2. AIR 1996 SC 946
3. (1988) 1 SCC 471
4. (1996) 2 SCC 549

இல்லை. எனவே உறைவிட உரிமை வெறுமனே அவனது உயிர் மற்றும் உடல் உறுப்புகளை பாதுகாத்துக் கொள்ளும் உரிமை மட்டுமன்று. அது அவன் உடல்ரீதியாக, உளரீதியாக, அறிவுபூர்வ மாக, ஆன்மிகரீதியாக தன்னை வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பை நல்கக்கூடிய இடமாகவும் உள்ளது. மேலும் போதுமான இட வசதி, பாதுகாப்பான மற்றும் சீரமைவான சுட்டடம், சுத்தமான மற்றும் ஒழுக்கமான சுற்றுப்புறம், போதுமான வெளிச்சம், தூய்மையான காற்று மற்றும் நீர், மின்சாரம், கழிப்பிட வசதி மற்றும் மனிதன் தன்னுடைய அன்றாடத் தொழிலை செய்வதற்கு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எளிதாகச் செல்ல சாலை போக்குவரத்து போன்ற இதர வசதிகளையும் உள்ளடக்கியதே 'உறைவிட உரிமை' ஆகும். சுருங்கச் சொன்னால் தலைக்கு மேல் ஒரு கூரை இருந்து, அதன் கீழ் வாழ்வது மட்டுமே உறைவிட உரிமை ஆகி விடாது. அது ஒருவன், தான் ஒரு மனித வாழினமாக வாழ்வதற்கும், தன்னை மேம் படுத்திக் கொள்வதற்கும் அவசியமான அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு உரிமைகளையும் கொண்டதாகும். இவ்வாறு உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கின் போது கருத்துரைத்தது.

Surjit Singh Thind v. Kanwaljit Kaur[1]

இவ்வழக்கில் ஒரு பெண்ணுக்கு **'கன்னித்தன்மை கண்டறியும் சோதனை' (Virginity Test)** செய்வது ஷரத்து 21-இன் கீழான தனிப்பட்ட சுதந்திர மற்றும் அந்தரங்க உரிமையை **(Right to Privacy)** மீறுவதாகும் என்று பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் கூறியது. வழக்கின் சங்கதிகள்படி, ஒரு பெண் தனக்கு திருமணமாகியும் கணவனின் ஆண்மையற்ற தன்மையின் காரணமாக தங்களுக்குள் உடலுறவு ஏதும் நடக்கவில்லை என்றும், எனவே தனது திருமணத்தை செல்லா நிலையது என்று விளம்பக் கோரியும் மனுச் செய்தார். இம்மனுவிற்கு பதிலளிக்கையில் தங்களுக்குள் உடலுறவு நடந்து திருமண பந்தம் தொடங்கியது என்றும், தான் ஆண்மை யுடையர்தான் என்றும் கணவர் கூறினார். மேலும் தங்களுக்குள் உடலுறவு நடந்தது என்பதை மெய்ப்பிக்க அப்பெண் கன்னித் தன்மை கெண்டவள் அல்ல என்பதைக் கண்டறிய வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இதற்காக அப்பெண்ணை கன்னித் தன்மை கண்டறியும் சோதனைக்கு உட்படுத்த வேண்டியுள்ளது என்றும் அக்கணவன் மனுச் செய்தார். இதை கூர்ந்தராய்ந்த பஞ்சாப் மற்றும் ஹரியானா உயர் நீதிமன்றம் ஒரு பெண்ணை கன்னித் தன்மை

1. AIR 2003 P & H 353

கண்டறியும் சோதனைக்கு உட்படுத்துவது என்பது, அவளுக்கு இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 21 அளித்திருக்கும் அந்தரங்க உரிமையை மீறுவதாகும் என்றும், அவ்வாறு ஒரு நீதிமன்றம் ஆணையிட்டால் அவளது கன்னித்தன்மை குறித்து மேலும் பல விதங்களில் தேவையற்ற விசாரணை நடத்த வேண்டி வரும் என்றும், இது அப்பெண்ணை புண்படுத்துவதாக அமையும் என்றும், திருமணம் செய்து கொண்ட பின் உடலுறவு நடந்ததா, இல்லையா என்பதைக் கண்டறிய கன்னித்தன்மை சோதனை ஒன்று மட்டுமே அடிப்படையாக அமைய முடியாது என்றும் கூறியது.

Paramanada Katara v. Union of India[1]

இவ்வழக்கில் **உடல் ஆரோக்கியம் மற்றும் மருத்துவ உதவி பெறுவதற்கான உரிமையும் (Right to health and Medical Assistance)** அரசியலமைப்பின் ஷரத்து 21-இன்பாற்பட்டதே என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது. இதில் விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி வழங்க வேண்டியது மருத்துவர் ஒவ்வொருவரின் தொழிற்முறை கடப்பாடு ஆகும் என்றும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி காவல் துறையினர் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரை மருத்துவர்கள் காத்திருத்தல் கூடாது என்றும், காயம் அடைந்தவர்களின் உயிரை உடனடியாகக் காப்பாற்ற வேண்டும் என்று ஷரத்து 21 ஒரு கடப்பாட்டை மருத்துவர்களின் மீது விதிக்கிறது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. ஒரு மருத்துவர் அவர் அரசுப் பணியில் இருந்தாலும் அல்லது தனியாக மருத்துவத் தொழில் செய்து கொண்டு வந்திருந்தாலும் விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு, காவல் துறையினர் வந்து விசாரிக்கும் வரை காத்திராமல் உடனடியாக சிகிச்சை அளித்து அவர்களது இன்னுயிரைக் காப்பாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை ஷரத்து 21-இன் வாயிலாக இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் உணர்த்தியுள்ளது.

Vishaka v. State of Rajasthan[2]

இவ்வழக்கில் **பணியிடங்களில் பணியாற்றும் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வது தடுக்கப்பட வேண்டும் (Prevention of sexual harassment of working women)** என்ற கருத்தும், அதற்கென தனியாக ஒரு சட்டமியற்றப்பட வேண்டியதன் தேவை

1. AIR 1989 SC 2039
2. AIR 1997 SC 3011

யும் உச்ச நீதிமன்றத்தால் வலியுறுத்தப்பட்டது. அவ்வாறு சட்ட மியற்றப்படும் வரை பெண்கள் பணியாற்றும் பணியிடங்களில் பின்பற்றப்பட வேண்டிய வழிகாட்டு நெறிகளை இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் வகுத்துரைத்தது. இதன்படி அரசு அல்லது தனியார் பணியிடத்தின் உரிமையாளர் அல்லது பொறுப்பான நபர், அங்கு பணியாற்றும் பெண்களுக்கு பாலியல் தொந்தரவு ஏதும் ஏற்படா வண்ணம் பாதுகாக்க வேண்டும். பணியிடத்தில் மதிப்புடன் பணி யாற்றுவது என்பதும் ஷரத்து 21-இன் கீழான உரிமையில் அடங்கத் தக்கதே என்பது இவ்வழக்கில் நிலைநாட்டப்பட்டது.

Swapan Kumar Saha v. South Point Montessory High School and others[1]

இவ்வழக்கில் குழந்தைகள் பள்ளிக்கு பாதுகாப்பாக பயணம் செய்து வருவதற்கான ஏற்பாட்டை செய்ய வேண்டியது பள்ளி நிருவாகத்தின் கடப்பாடு ஆகும் என்றும், பள்ளி வாகனங்களில் அதிகமான குழந்தைகளை ஏற்றுவது, ஷரத்து 21-இன் கீழ் அவர்கள் பாதுகாப்பாக பயணம் செய்து பள்ளிக்கு வருவதற்கு உள்ள உரிமையை மீறுவதாகும் என்றும் கவுஹாத்தி உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

M.K.Acharaya v. C.M.D.W.B.S.E. Distribution Co. Ltd.,[2]

இவ்வழக்கில் **மின்சாரத்திற்கான உரிமை (Right to Electricity)** என்பது ஷரத்து 21-இன் கீழான வாழ்க்கை மற்றும் சுதந்திர உரிமையாகும் என்றும், இந்த நவீன காலத்தில் மின்சாரம் இல்லாமல் ஒருவர் உயிர் வாழ இயலாது என்றும் கல்கத்தா உயர் நீதிமன்றம் கருத்துரைத்தது.

Naval v. Union of India[3]

இவ்வழக்கில் ஒரு பெண்ணுக்கு கருத்தடை அறுவை செய்த பிறகும் அவர் கர்ப்பமுற்று, குழந்தை ஈன்றார். இது அவருக்கு அந்த அறுவை செய்த மருத்துவரின் கவனக்குறைவை வெளிப்படையாக காட்டுகிறது. எனவே அப்பெண் இழப்பீடு பெற உரிமை பெற்றவர் என்று இராஜஸ்தான் உயர் நீதிமன்றம் கூறியது. மேலும் அப்பெண்

1. AIR 2008 (NOC) 236 (Gau.)
2. AIR 2008 Cal. 47
3. AIR 2009 Raj. 63

பொருளாதாரத்திலும், வேறு வகையிலும் பலவீனமாக இருந்த காரணத்தால் அறுவைக்கு சம்மதம் கொடுத்திருந்தார். ஆனால் இதைக் கொண்டு மருத்துவரோ, அரசோ அவருக்கு இழப்பீடு கொடுக்க பொறுப்புடையவர் அல்ல என்று கூறிவிட இயலாது என்றும் உயர் நீதிமன்றம் கூறியது. இங்கு இவ்வாறு இழப்பீடு பெறும் உரிமையும் ஷரத்து 21-இன் கீழான உரிமையில் அடங்கும்.

முடிவுரை:

ஏ.கே.கோபாலன் வழக்கில் ஷரத்து 21-க்கு உச்ச நீதிமன்றம் குறுகிய பொருள் விளக்கத்தையே அளித்தது. ஆனால் அதே உச்ச நீதிமன்றம் மேனகாகாந்தி வழக்கில் பரந்த பொருள் விளக்கத்தை கொடுத்து, 'குடிமக்களின் வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை' காப்பாற்றியது என்றே கூற வேண்டும். மேனகாகாந்தி வழக்கிற்கு பின்னிட்டு எழுந்த பல வழக்குகளில் இதன் பொருள் மேலும் விரிவாக்கப்பட்டதை நாம் மேற்கண்டவாறு விரிவாகக் கண்டோம்.

57. Right to Privacy - Write short notes. (தனித்திருப்பு உரிமை - குறுகிய விடை தருக.)

ஷரத்து 21-ன் கீழான 'தனிப்பட்ட சுதந்திரத்தில்' தனித்திருப்பு உரிமையும் அடங்கும்.[1] தனித்திருப்பு என்பது, ஒருவர் தான் அந்தரங்கமாக கருதும் தனது விடயங்களை பாதுகாத்துக் கொள்ள உள்ள உரிமையாகும். அதனை சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளின்படியல்லாமல், வேறு விதத்தில் பறிக்கவோ அல்லது தடைப்படுத்தவோ முடியாது. பெரும்பாலும் ஒருவரது அந்தரங்க விடயங்கள் செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்படுவதுண்டு. எனவே, அந்தரங்க உரிமை மற்றும் பத்திரிக்கை சுதந்திர உரிமை ஆகிய இரண்டிற்குமிடையே துல்லியமான சமநிலை இருக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.[2]

தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்பது கூட, அந்தரங்க உரிமைகளை மீறிய செயலாகும். எனவே, ஷரத்து 21 மற்றும் ஷரத்து 19(1)(a)-இன் கீழான பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரம் பாதிக்கப்படுகிறது, என்று **People's Union**

1. R.Rajagopal v. State of T.N. ('ஆட்டோ' சங்கர் சுயசரிதை வழக்கு) (1994) 6 SCC 632 (ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ளோம்).
2. மேற்கண்டதே.

for Civil Liberties v. Union of India[1] **(Phone Tapping Case)** என்ற வழக்கில் கூறப்பட்டது. எனினும், இந்த அந்தரங்க உரிமையின் மீதும் கட்டுப்பாடுகளை சட்டப்படி விதித்து, தடுக்கலாம். ஆனால் அது குற்றம் மற்றும் அமைதிக்குலைவை தடுப்பதற்காக, மற்றவர்களின் உடல் ஆரோக்கியம், ஒழுக்கம் ஆகியவற்றை பேணிக்காப்பதன் பொருட்டு இருக்க வேண்டும்.

Mr. 'X' v. Hospital 'Z'[1]

இந்த முக்கியமான வழக்கின் பொருண்மைகளின்படி **Mr. 'X'** என்பவருக்கு எய்ட்ஸ் நோய் இருந்தது கண்டறியப்பட்டது. இந்த உண்மை **'Z'** எனும் மருத்துவமனையால் வெளியிடப்பட்டுவிட்டது. இதனால் **Mr. 'X'**- க்கு நடக்கவிருந்த திருமணம் நின்றுவிட்டது. எனவே **Mr. 'X'** நஷ்டஈடு கோரி மருத்துவமனை நிர்வாகத்தின் மீது வழக்குத் தொடர்ந்தார். அதில் தனது அந்தரங்க விடயத்தை, மருத்துவமனை வெளியிட்டுவிட்டதால், தனது திருமணம் நின்று விட்டதாக குற்றஞ்சாட்டியிருந்தார். ஆனால் உச்ச நீதிமன்றமோ, **Mr. 'X'** யாரையாவது திருமணம் செய்து கொண்டிருந்தால், அவருக்கும் எய்ட்ஸ் நோய் வந்திருக்கும். மற்றவர்களின் ஆரோக்கியத்தை பேணிக்காக்க, மருத்துவமனை நிர்வாகம் அவருக்கு இருந்த எய்ட்ஸ் நோயை வெளிப்படுத்தியதில் தவறொன்றுமில்லை; அது நியாயமானதே, என்று **Mr. 'X'**-இன் வழக்கை தள்ளுபடி செய்தது.

58. Right to Education - Write short notes. (கல்விக்கான உரிமை - குறுகிய விடை தருக.)

2002-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட அரசியலமைப்பு (86-வது திருத்த) சட்டமானது நமது இந்திய அரசியலமைப்பில் ஷரத்து 21-க்குப் பிறகு **21-A** என்ற ஒரு புதிய ஷரத்தை சேர்த்தது. இது 6 முதல் 14 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளும் கல்வி பெறுவதை அடிப்படை உரிமையாக்கியுள்ளது. இதன்படி, 'அரசு, சட்டத்தின் வாயிலாக, தீர்மானிக்கலாகும் அத்தகு முறையில் 6 முதல் 14 வயது வரையுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் அது இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளித்திடல் வேண்டும்' (the State shall provide free and compulsory education to all children of the age of 6 to 14 years in such manner as the State may, by law, determine) என்று கூறுகிறது.

1. AIR 1997 SC 568
2. AIR 1999 SC 495

கல்வி என்பது யாவருக்கும் தேவையான அடிப்படை மனித உரிமை. மக்களாட்சி முறை வெற்றி பெற மக்கள் கல்வி கற்றிருக்க வேண்டியது இன்றியமையாததாகும். அரசை வழி நடத்திச் செல்லும் தகுதியான அரசியல் பிரதிநிதிகளை கல்வியறிவு பெற்ற குடிமக்கள் தேர்ந்தெடுத்தால், அங்கு மக்களாட்சி நன்முறையில் நடக்கும். கல்வி யறிவு பெற்றவர் தன்னைத்தானே மேம்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல் தனது நாட்டின் மேம்பாட்டிற்கும் பங்களிக்கிறார். இந்திய அரசியலமைப்பை உருவாக்கியவர்கள் இவ்வாறு கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, ஒரு ஷரத்தை அரசு நெறிமுறையுறுத் தும் கொள்கையாக அரசியலமைப்பில் சேர்த்தனர். அதாவது ஷரத்து 45-இன்படி அரசியலமைப்பு அமலுக்கு வந்த 10 ஆண்டுகளுக்குள் எல்லாக் குழந்தைகளுக்கும் அரசு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும், இது அவர்கள் தங்கள் 14 வயதை அடையும் வரை தொடர வேண்டும். இதன் நோக்கம் நாட்டில் கல்லாமையை ஒழிக்க வேண்டும் என்பதாகும்.

மக்கள் தேர்ந்தெடுத்து ஆட்சியில் அமரும் அரசு ஏட்டளவில் உள்ள இந்நெறிமுறையுறுத்தும் கொள்கையை உள்ளபடியான செயலுக்கு கொண்டு வர வேண்டும் என்று ஒவ்வொரு முறையும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அரசியலமைப்பு அமலுக்கு வந்து 60 ஆண்டுகள் கடந்த பிறகும் இது நடைமுறைக்கு வரவில்லை. நாட்டில் 40 சதவீத மக்கள் கல்வியறிவு இல்லாமல் இருக்கும் நிலையில், இக்கொள்கையை செயலாக்கத்திற்கு கொண்டு வர அரசுகள் எவ்வித முனைப்பையும் காட்டவில்லை.

இதற்கிடையில் **Unni Krishnan v. State of A.P.**[1] என்ற வழக்கில் 6 முதல் 14 வரையுள்ள குழந்தைகள் கல்வியறிவு பெறுவது அவர்களது அடிப்படை உரிமையாகும் என்று உச்ச நீதிமன்றம் விளம்பியது. ஆனால் இதற்குப் பின்னிட்டும் இதில் எவ்வித முன் னேற்றமும் ஏற்படவில்லை. எனவே கல்வி கற்பதற்கான உரிமையை அரசியலமைப்பின் கீழ் ஓர் அடிப்படையாக உரிமையாக சேர்க்க வேண்டும் என்று நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் கோரிக்கை எழும்பியது. இதன் விளைவாக, அரசானது அரசியலமைப்பு (86-வது திருத்த) சட்டத்தை 2002-ஆம் ஆண்டில் இயற்றியது. இது கல்வி உரிமையை ஷரத்து **21-A**ன் கீழ் ஓர் அடிப்படையாக உரிமையாக ஆக்கியது.

1. (1993) 1 SCC 645

(ஈ) சில சூழ்நிலைகளில் கைது செய்தல் மற்றும் சிறை வைத்தலுக்கு எதிரான பாதுகாப்பு

(ஷரத்து 22)

[D] Protection against Arrest and Detention in certain cases

(Article 22)

59. Discuss the rights available to a person detained under a law relating to preventive detention. (தடுப்புக் காவல் சட்டத்தின்படி சிறை வைக்கப்பட்ட நபருக்குள்ள உரிமைகளை விவாதிக்க.)

(அல்லது)

What are the constitutional safeguards available to a person who is preventively detained? (தடுப்புக் காவல் கைதிக்கு பயன்படத்தக்க வகையில் உள்ள அரசமைப்பு சட்டப் பாதுகாப்புகள் யாவை?)

(அல்லது)

Enumerate the Constitutional provisions relating to preventive detention and state to what extent these provisions curtail the fundamental right to personal liberty. (தடுப்பு சிறை வைப்பு சார்ந்த அரசியல் அமைப்புச் சட்டத்தின் வழிவகைகளை ஆராய்க. அவ்வழிவகைகள் எந்த அளவில் ஒரு நபரின் தனிப் பட்ட சுதந்திரத்தின் அடிப்படை உரிமையைக் கட்டுப்படுத்தியுள் ளது என்பதை விளக்குக.)

(அல்லது)

Discuss the adequacy of the safeguards provided by the Constitution to a person preventively detained. (தடுப்புக் காவலின் கீழ் ஒரு நபர் வைக்கப்படும் பொழுது அந்த நபருக்கு அரசியலமைப்பு அளிக்கும் பாதுகாப்பின் நிறைவுத் தன்மையை விவாதிக்க.)

(அல்லது)

Explain the safeguards against arbitrary arrest and detention under Article 22. Refer to the decision of the Supreme Court in D.K.Basu v. State of West Bengal. (அரசமைப்பின் 22-வது பிரிவின் கீழ் கைது மற்றும் காவலில் வைப்பதில் தன்னிச்சையான செயல்பாட்டிற்கு எதிரான பாதுகாப்புகளை டி.கே.பாசு எதிர் மேற்கு வங்காள அரசு என்ற வழக்கில் உச்ச நீதிமன்ற தீர்ப்பை குறிப்பிட்டு விளக்குக.)

(அல்லது)

Preventive detention - Write short notes. (தடுப்புக் காவல் சிறைவைப்பு - குறுகிய விடை தருக.)

ஷரத்து 22 அளிக்கும் பாதுகாப்பு:

சில சூழ்நிலைகளில் கைது செய்தல் மற்றும் சிறை வைத்தலுக்கு எதிராக ஷரத்து 22 பாதுகாப்பளிக்கிறது. இது மேற்கண்ட செயல்களைச் செய்யும் பொழுது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைத் தேவைகளை கூறுகிறது. இதனைப் பின்பற்றாமல் கைது செய்யப்பட்டாலோ அல்லது சிறை வைத்தாலோ, அது தனிப்பட்ட நபரின் சுதந்திரத்தினை பறித்ததாகும். மேலும் ஷரத்து 21ஐ மீறியதாகவும் ஆகும். ஆகவே ஷரத்து 22 இரண்டு தனிப்பட்ட விவகாரங்களைப் பற்றிக் கூறுகிறது. அஃதாவது. 1. சாதாரண குற்ற வியல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்கள். 2. தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்பட்ட நபர்கள்.

1. சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்கள்:

ஷரத்து 22-இன் உட்கூறுகள் (1)-ம் (2)-ம், சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட நபர்களுக்கு பின்வரும் உரிமைகளை அளிக்கிறது. அவை,

(1) அவரை கைது செய்வதற்குண்டான காரணங்களை, எவ்வளவு விரைவாக இயலுமோ அவ்வளவு விரைவாக அவருக்கு தெரிவிக்க வேண்டும். அப்பொழுதுதான், அவர் தன்னுடைய தரப்பு வாதத்தினை தயாரிக்க முடியும்.

(2) தன் சார்பாக வாதாட ஒரு வழக்கறிஞரை தன் விருப்பப் படி கைது செய்யப்பட்டவர் அமர்த்திக் கொள்ளலாம். கைது செய்யப்பட்டவர் வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள முடியாத வகையில் ஏழ்மை நிலையில் இருந்தால், அவருக்காக வாதாட,

அதே ஒரு வழக்குரைஞரை அமர்த்தும். ஆனால் ஒருவன் ஏற்கனவே தக்க நீதிமன்றத்தால் தண்டனை அளிக்கப்பட்டு சிறைப்படுத்தப் பட்டிருந்தால், அவனுக்கு இவ்வுரிமை கிடைக்காது.

(3) கைது செய்யப்பட்ட நபரை, அவர் கைதான நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள் குற்றவியல் நடுவர் (மாஜிஸ்டிரேட்) முன் முன்னிலைப் (ஆஜர்) படுத்த வேண்டும்.

(4) அவ்வாறு கைது செய்யப்பட்டது நியாயமற்றதாக இருக்கும் சூழல் தவிர, கைது செய்யப்பட்ட நபர் 24 மணி நேரத்திற்கு மேல், சிறைப்படுத்தப்படக் கூடாது. ஆனால் ஷரத்து 22(3)-இன் படி, ஒரு அயல்நாட்டு எதிரி சிறை வைக்கப்பட்டால் அவருக்கு மேற்படி உரிமைகள் கிடையா.

2. தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறைப்படுத்தப்பட்ட நபர்கள்:

'தடுப்புக்காவல்' என்பதற்கு சரியான பொருள் இந்தியச் சட்டத்தில் தரப்படவில்லை. தடுப்புக் காவல் என்பது, தண்டனை இயல்புடையது (punitive) அல்ல. மாறாக, இது ஒரு தடுக்கக் கூடிய முறையாகும். 'தண்டனை இயல்புடையது' என்பது ஒரு குற்றம் நடைபெறப்பட்டு அதற்கு தண்டனை வழங்கப்படுகிறது. ஆனால் தடுப்புக் காவல் என்பதில் ஒரு குற்றம் ஒரு நபரால் செய்யப்படாமல் இருக்க அந்நபரை அக்குற்றம் செய்வதற்கு முன்பே காவலில் வைப்பதாகும். சுருங்கக் கூறின், தடுப்புக் காவல் சட்டம் என்பது ஒரு நபரால் ஒரு குற்றம் செய்யப்படுவதற்கு முன்பே அவரை விசாரணை செய்யாமல் காவலில் வைப்பதாகும். அப்படிக் காவலில் வைப்பதற்கு ஒரே நிபந்தனை யாதெனில், அவரால் சமுதாயத்திற்கு தீங்கோ அல்லது அரசியல் பாதுகாப்பிற்கு அபாயமோ விளைவிக்கப்படலாம் என்று நம்புவதற்கு தகுந்த மற்றும் நியாயமான காரணங்கள் அடிப்படையாக இருக்க வேண்டும். குற்றம் ஏதும் புரியாத ஒரு நபரை இத்தடுப்புக் காவல் சட்டங்கள் சிறை வைக்க முற்படுகின்றது. ஆகவே, அச்சட்டங்களின் நடைமுறைகள் அரசியலமைப்புச் சட்டத்தின் 14, 19, 21 ஆகிய ஷரத்துகளை மீறாத வண்ணம் நியாயமானதாக இருத்தல் மிகமிக அவசியமாகும்.

தடுப்புக் காவல் சட்டத்தின் தேவை:

இத்தடுப்புக் காவல் சட்டம் மக்களாட்சி மற்றும் அரசியலமைப்பிற்கு முரண்பட்டதாகும். உலகில் இந்தியாவைத் தவிர மற்ற

மக்களாட்சி நாடுகள், இந்த தடுப்புக் காவல் சட்டத்தை அரசியல மைப்பின் ஒரு பகுதியாக அமைக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு சட்டம் அமெரிக்க அய்க்கிய நாடுகளில் இல்லை. இங்கிலாந்தில் போர்க்காலங்களில் மட்டுமே இச்சட்டம் வலியுறுத்திச் செயல் படுத்தப்படும். ஆனால் இந்தியாவில் தடுப்புக் காவலை போர்க் காலத்தைத் தவிர சாதாரணமான காலங்களில் கூட செயல்படுத்த லாம். இதற்கு காரணங்கள் இல்லாமல் இல்லை. சுதந்திரத்திற்குப் பின் நாட்டில் ஒழுங்கு சீர்குலைவு, அமைதியின்மை போன்ற காரணங்களினால் தடுப்புக் காவல் சட்டம் இந்தியாவில் தவிர்க்க முடியாத, தேவையான ஒன்றாகிவிட்டது.

தடுப்புக் காவல் சிறை வைத்தலுக்கு எதிராக அரசியலமைப்பு அளிக்கும் பாதுகாப்புகள் (Constitutional safeguards):

தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் சிறை வைக்கப்படும் நபர்களுக்கு ஷரத்து 22(1) மற்றும் (2)-இல் கூறப்பட்டுள்ள உரிமைகள் கிடைக்காது. எனினும், அவர்களுக்கு வேறு சில பாது காப்புகளை 22(4) மற்றும் (5) ஆகிய ஷரத்துகள் அளிக்கின்றன. அவை வருமாறு:

1. ஆலோசனைக் குழுவினால் மறு ஆய்வு (Review by Advisory Board) [ஷரத்து 22 உட்கூறு (4)] :

(a) 1978-ஆம் ஆண்டின் 44-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு முன்:

மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு ஒருவர் தடுப்புக் காவலில் சிறைப்படுத்தப்பட்டிருக்கக் கூடாது. அப்படி மூன்று மாதங் களுக்கு மேல் ஒருவரை சிறைப்படுத்த வேண்டும் எனில் அச்சிறைப் படுத்தும் உத்திரவு, ஆலோசனைக் குழுவிடம் சுட்டியனுப்பப்பட (referring) வேண்டும். எவ்வாறு இருப்பினும், ஒருவரை தடுப்புக் காவலில் சிறைப்படுத்தக் கூடிய காலத்தின் உச்ச அளவு, வரம்பற்றதாக இருக்கக் கூடாது. இது பாராளுமன்றம் இயற்றும் சட்டத்தினை பொறுத்ததாகும். ஒரு நபரை தடுப்புக் காவலில் வைத்தது நியாயமற்றது என ஆலோசனைக் குழு தீர்ப்பளித்தால், அரசு தடுப்புக் காவலில் உள்ள நபரை உடனே விடுவிக்க வேண்டும்.

(b) 1978-ஆம் ஆண்டின் 44-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்திற்கு பிறகு:

44-வது திருத்தச் சட்டத்திற்கு பிறகு ஒருவரை ஆலோ

சனைக் குழுவின் கருத்தினைக் கேட்காமல் தடுப்புக் காவலில் சிறைப்படுத்தும் காலத்தின் உச்ச அளவு 2 மாதங்களாக்கப்பட்டது. (முன்பு இது 3 மாதங்களாக இருந்தது). ஆகவே ஒரு நபர் 2 மாதங்களுக்கு மேற்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட வேண்டுமெனில், ஆலோசனைக் குழுவின் கருத்து தேவை. ஆலோசனைக் குழு, அவ்வாறு சிறைப்படுத்தியது நியாயமற்றது என அறிவித்தால், சிறைப்படுத்தப்பட்ட நபர் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும். ஆனால் அது நியாயமற்றது என அறிவித்தால், சிறைப்படுத்தும் அதிகார அமைப்பு, அவரை சிறையில் வைப்பதற்கான கால அளவை நிர்ணயிக்கும். (ஆனால் மேற்படி திருத்தம் இதுவரை அமலாக்கப்படவில்லை.)

2. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதற்குண்டான காரணங்களைத் தெரிவித்தல் (Communication of grounds of detention) [ஷரத்து 22 உட்கூறு (5)] :

ஒருவரை தடுப்புக் காவலில் வைக்க உத்திரவிடும் அதிகாரம் உடையவர், அவர் அவ்வாறு கைது செய்யப்பட்டதற்குண்டான காரணங்களை எந்த அளவிற்கு விரைவாகவோ அந்த அளவிற்கு விரைவாக அவருக்கு தெரியப்படுத்திவிட வேண்டும் என்று ஷரத்து 22(5)-இன் முதற்பகுதி கூறுகிறது.

3. முறையீடு செய்ய உரிமை (Right of representation) [ஷரத்து 22 உட்கூறு (5)] :

ஒருவரை தடுப்புக் காவலில் வைக்க உத்திரவிடும் அதிகாரம் உடையவர், அவ்வாறு காவலில் வைக்கப்பட்டதை எதிர்த்து முறையீடு செய்து கொள்ள (தன் வாதத்தினை எடுத்துக் கூற) கால தாமதம் செய்யாமல் அவருக்கு ஒரு வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்று ஷரத்து 22(5)-இன் இரண்டாவது பகுதி கூறுகிறது.

Balchand Chorasia v. Union of India[1]

இவ்வழக்கில் காவலில் வைக்கப்பட்ட நபர் தன்னுடைய முறையீட்டினை, தன் வழக்கறிஞர் வாயிலாக நீதிமன்றத்தின் முன் சமர்ப்பித்தார். அம்முறையீடு காவலில் வைக்கப்பட்ட நபரால் செய்யப்படவில்லை என்பதை காரணமாகக் காட்டி, அரசாங்கம் அவரின் முறையீட்டை பரிசீலிக்கவில்லை. மேலும் அக்காவலை

1. AIR 1978 SC 297

அங்கீகரித்துவிட்டது. ஆனால் காவலில் வைக்கப்பட்ட நபர் அளித்த கூற்றின் பேரில்தான், வழக்குறிஞர் முறையீட்டினை சமர்ப் பித்து உள்ளதால் அரசாங்கம் முறையீட்டினை பரிசீலிக்காமல் விட்டது தவறானதாகும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

தற்போதைய நிலை:

தற்பொழுது அமலில் இருக்கும் தடுப்புக் காவல் சட்டம், முன்பிருந்த இச்சட்டத்தின் கடுமையான பிடிகளை சற்றே தளர்த்தியுள்ளது. நாம் முன்பே பார்த்தது போல், தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபர் நீதிமன்றத்திற்கு சென்று தன் வழக்கினை எடுத்துரைக்க தடை எதுவும் விதிக்கப்படவில்லை. மேலும் வேறு சில பாதுகாப்புகளையும் நல்கி உள்ளது. பின்வரும் வழக்கு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவருக்கு உள்ள உரிமைகள் பற்றி சிறப்பாகக் கூறுகிறது.

A.K.Roy v. Union of India[2]

இவ்வழக்கு **NSA Case** என்று அழைக்கப்படுகிறது. இதில் தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் **[National Security Act (NSA)]** அரசியலமைப்புப்படியான செல்லுந்தன்மை நிலைநாட்டப்பட்டது. இச்சட்டம், இந்திய பாதுகாப்பிற்கு அல்லது மாநிலங்களின் பாதுகாப்பிற்கு பங்கம் விளைவிக்கக் கூடிய வகையில் எந்த நபரும் செயல்படுவதற்கு முன்னர் அவரைக் காவலில் வைப்பது குறித்துக் கூறுவதால் மேற்படி சட்டம் தேவையற்றதோ அல்லது ஏதேச்சதி காரமானதோ அல்ல எனக் கூறப்பட்டது. தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் அவசியத்தை உணர்த்தும் வகையிலும், ஆனால் அதே சமயத்தில் உச்ச நீதிமன்றம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவரின் நலனைப் பாதுகாக்கவும் சில உத்திரவுகளைப் பிறப்பித்தது. அவை,

1. தடுப்புக் காவலில் ஒரு நபர் வைக்கப்பட்டது குறித்து அந்நபரின் உறவினர்களுக்கு அது குறித்தும், தடுப்புக் காவலில் இருக்கும் இடத்தைக் குறித்தும் அஞ்சல் மூலமாக அறிவிக்க வேண்டும். 2. ஒரு நபர் வழக்கமாக வசிக்கும் இடத்திலேயே அவரைத் தடுப்புக் காவலில் வைக்க வேண்டும். 3. தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட நபரை உறவினர்கள் வந்து பார்த்துச் செல்லவும், தன்னுடைய உணவைப் பெறவும், புத்தகங்களைப் பெறவும் அவருக்கு உரிமை உண்டு. 4. குற்றம் புரிந்ததற்காக கைது செய்யப்

1. AIR 1982 SC 710

பட்டவர்களிடமிருந்து அவரைத் தனித்து வைக்க வேண்டும். 5. அவரைத் தண்டிக்கும் விதத்தில் நடத்தக் கூடாது. 6. அவர் மனித நேயத்தின் சகலவித நெறிகளுக்கும் உட்படுத்தப்பட்டு மாண்புடன் நடத்தப்பட வேண்டும்.

தடுப்புக் காவலைப் போன்று ஒரு நபரைக் கைது செய்யும்போது காவல்துறையினர் பின்பற்ற வேண்டிய சில நெறி முறைகளை உச்ச நீதிமன்றம் பின்வரும் இரண்டு முக்கிய வழக்குகளில் வகுத்துக் கொடுத்துள்ளது. அவை வருமாறு.

Jogindar Kumar v. State of U.P.[1]

ஒரு நபரைக் கைது செய்கையில் அங்கு காவல்துறையின் சட்டப் படியான தேவையும் பூர்த்தியாக வேண்டும். அதே வேளையில் அவர்களால் குடிமக்கள் மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கும் பங்கம் வருதல் கூடாது. எனவே இவை இரண்டிற்கும் இடையே ஒரு சமநிலையை உருவாக்கும் நோக்குடன் உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில், புலன் விசாரணையின் போது ஒரு நபரைக் கைது செய்தலுக்குத் தேவையான நெறிமுறைகளை வகுத்தது. ஒருவர் ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருந்திருப்பாரோ எனும் வெறும் சந்தேகத்தின் அடிப்படையில் மட்டுமே அவர் கைது செய்யப்படுவதற்குரியரல்லர். அவரைக் கைது செய்வது அவசியமானது மற்றும் நியாயமானது என்பதற்கு அவரைக் கைது செய்யும் காவல் அதிகாரியின் கருத்தில் சரியான காரணம் இருத்தல் வேண்டும்.

மேற்படி வழக்கில் வழக்குரைஞர் ஒருவர் 07-01-1994-ஆம் தேதியில் வழக்கொன்றின் தொடர்பாக விசாரணைக்காக காவல் நிலையத்திற்கு அழைக்கப்பட்டார். அவரும் சென்றார். ஆனால் பின்னிட்டு அவர் எங்குள்ளார் என்பது குறித்து திருப்திகரமான எத்தகவலும் கிடைக்கப் பெறாததால், அவரது குடும்ப உறுப்பினர் ஒருவர் உச்ச நீதிமன்றத்தில் 'ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணைக் காக' (Writ of Habeas Corpus) மனு ஒன்றைத் தாக்கல் செய்தார். அதில் உச்ச நீதிமன்றம் அறிவிப்பு அனுப்ப ஆணையிட்டது. அதன் விளைவாக அவ்வழக்குரைஞர் உச்ச நீதிமன்றத்தில் காவல்துறையினரால் 14-01-1994-ஆம் தேதியில் ஆஜர்படுத்தப்பட்டார்.

உச்ச நீதிமன்றத்தில் சம்பந்தப்பட்ட காவல்துறையினர், தாங்கள் மேற்படி வழக்குரைஞரை சிறையில் வைத்திருக்கவில்லை

1. (1994) 4 SCC 260

என்றும், அவர் சில வழக்குளை கண்டுபிடிப்பதில் தங்களுக்கு உதவி புரிந்து கொண்டிருந்தார் என்றும் பதில் அளித்தனர். இப்பதிலால் கடும் அதிருப்தி அடைந்த உச்ச நீதிமன்றம், ஒரு நபரைக் கைது செய்கையில் காவல்துறையினர் பின்பற்ற வேண்டிய சில நெறி முறைகளை வகுத்துரைத்தது. அவை வருமாறு:-

(1) கைது செய்யப்பட்ட நபர் காவல்துறையினரின் பாதுகாப் புப் பொறுப்பில் (custody) உள்ளபோது, அவர் வேண்டு கோள் செய்தால் ஒரு நண்பரிடம், உறவினரிடம் அல்லது அவரை அறிந்த அல்லது அவரது நலனில் அக்கறை கொண்டிருக்கிற வேறு எவரிடமும் தான் கைது செய்யப் பட்டுள்ளதையும், சிறை வைக்கப் பட்டுள்ள இடத்தையும் எவ்வாறு இயலுமோ அவ்வாறு சொல்லப் படுவதற்கு உரிமை பெற்றவர். (அதாவது தான் கைது செய்யப் பட்டுள்ள விவரத்தையும் மற்றும் சிறை வைக்கப்பட்டுள்ள இடம் குறித்த தகவலையும் தனது நண்பருக்கு அல்லது உறவினருக்கு அல்லது தன்னை அறிந்தவருக்கு தெரிவிக்க உரிமை படைத்தவர்).

(2) இந்த உரிமை அவருக்கிருப்பதை, அவர் காவல் நிலையத் திற்கு அழைத்து வரப்படும்போது காவல் அதிகாரி அவரிடம் தெரிவித்தல் வேண்டும்.

(3) அவர் கைது செய்யப்பட்ட விவரம் குறித்து மேற்கண்ட வகையில் யாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது என்பது காவல் குறிப்பேட்டில் பதிந்து கொள்ளப்பட வேண்டும்.

அதிகாரதுஷ்பிரயோகத்திற்கு எதிரான இத்தகு பாதுகாப்பு கள் இந்திய அரசிலமைப்பின் ஷரத்துகள் 21 மற்றும் 22-லிருந்து பிறக்கின்றன. எனவே அவை மிகக் கடுமையாக காவல்துறையினரால் பின்பற்றப்படுதல் வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

D.K.Basu v. State of West Bengal[1]

கைது செய்தல் மற்றும் சிறை வைத்தலில் காவல்துறையினர் பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிகள், மிக விரிவான வகையில் மிக முக்கியமான இவ்வழக்கில்தான் வகுக்கப் பெற்றன எனில் அது மிகையன்று.

1. AIR 1997 SC 610

டி.கே.பாசு என்பவர், மேற்கு வங்கத்தில் உள்ள ஒரு அரசியல் சாரா அமைப்பான 'சட்ட உதவி சேவைகள்' (Legal Aid Services) என்பதின் நிருவாகத் தலைவர் ஆவார். இவர் காவல்துறை சிறை வைப்பு மற்றும் பாதுகாப்பில் ஏற்படும் மரணம் தொடர்பாக ஆங்கில நாளிதழ்களான 'டெலிகிராஃப்', 'ஸ்டேட்ஸ்மேன்', 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆகியவற்றில் வெளியிடப்பட்டிருந்த சில செய்திகளுக்கு உச்ச நீதிமன்றத்தின் கவனத்தை ஈர்த்து, தலைமை நீதிபதிக்கு கடிதம் ஒன்றை வரைந்தார். இதனை ஒரு பொது நல வழக்கிற்கான ஒரு நீதிப்பேராணை மனுவாக உச்ச நீதிமன்றம் பாவித்து, பரிசீலனைக்கு ஏற்றுக் கொண்டது.

இவ்வழக்கின்போது, நீதியரசர்கள் மாண்பமை குல்தீப் சிங் மற்றும் டாக்டர் ஏ.எஸ்.ஆனந்த் அவர்கள், 'காவல்துறை பாதுகாப்பில் இருக்கும் போது ஏற்படும் மரணம் என்பது, சட்டத்தின் ஆட்சியால் வழி நடத்தப்படும் நாகரிகமடைந்த ஒரு சமுதாயத்தில் உள்ள மிகக் கொடுமையான குற்றங்களில் ஒன்றாகும்' என்று கருத்துரைத்தனர்.

உச்ச நீதிமன்றத்தின் சார்பாக தீர்ப்புரையை வழங்குகையில் மாண்பமை நீதியரசர் ஏ.எஸ்.ஆனந்த் அவர்கள், 'புலனாய்வு செய்தல், கைதானவரை கேள்விகள் கேட்டு விசாரித்தல் அல்லது வேறு எதன் போதும் எந்த வடிவிலேனும் சித்ரவதை செய்தல் அல்லது, கொடூரமாக, மனிதாபிமானமற்ற முறையில் அல்லது கேவலமாக நடத்துதல் ஆகியன இந்திய அரசியலமைப்பின் 21-ஆவது ஷரத்து விதித்துள்ள தடைக்குட்பட்டதாகும் ("சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறைகளின்படியல்லாமல் எந்தபரின் வாழ்வுரிமையும் அல்லது தனிப்பட்ட சுதந்திரமும் பறிக்கப்படல் ஆகாது" - ஷரத்து 21), என்று கூறினார்.

மேலும் ஷரத்து 21-ஆல் உத்தரவாதமளிக்கப்பட்டுள்ள மேற் கண்ட முக்கியமான உரிமையானது தண்டனை விதிக்கப்பட்டவர் களுக்கு, விசாரணைக் கைதிகளுக்கு, சிறையில் உள்ளவர்களுக்கு அல்லது பாதுகாப்பில் உள்ள மற்ற கைதிகளுக்கு, சட்டத்தால் நிறுவப்பட்ட நடைமுறைகளின்படியல்லாமல் வேறு வகையில் மறுக்கப்படல் ஆகாது என்றும் மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

எனவே கைது மற்றும் காவலில் இருக்கும் எல்லா நேர்வுகளிலும், அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் சட்டமாக்கப்படும்வரை, பின்வரும் வழிகாட்டு நெறிகள் பின்பற்றப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கின்போது ஆணித்தரமாக

விளம்பியது. அவை,

(1) கைது செய்கின்ற அல்லது விசாரணை நடத்துகின்ற காவல் துறை அதிகாரிகள் தங்களது மிகச்சரியான, தெளிவான மற்றும் கண்களுக்குத் தெரிகின்ற அடையாளத்தையும், தங்கள் பெயரைக் கொண்ட சீட்டை தங்கள் பதவியுடனும் பொருத்திக் கொண்டிருத்தல் வேண்டும் (should bear accurate, visible and clear identification and name-tags with their designation). கைது செய்யப்பட்டவரை கையாளும் அல்லது அவரிடம் கேள்விகள் கேட்டு விசாரிக்கும் காவல் அதிகாரிகள் எல்லோரின் விபரங்களும் பதிவேடு ஒன்றில் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(2) ஒரு நபரைக் கைது செய்யும் காவல் அதிகாரி, அவ்வாறு கைது செய்யும் சமயத்தில் **'கைது குறிப்பு'** (Memo of arrest) ஒன்றைத் தயாரித்தல் வேண்டும். அதில் குறைந்தது ஒரு சாட்சியாவது கையொப்பம் செய்தல் வேண்டும். அச்சாட்சி, கைது செய்யப்பட்டவரின் குடும்ப உறுப்பினராக இருக்கலாம் அல்லது எங்கு கைது செய்யப்பட்டதோ அந்த வட்டாரத்தில் வசிக்கின்ற மதிப்பிற்குரிய ஒரு நபராக இருக்கலாம்.

(3) கைது குறிப்பில் கையெழுத்திடுகின்ற சாட்சியானவர், கைதானவரின் நண்பராகவோ, உறவினராகவோ இல்லாதபோது, கைது செய்யப்பட்டு அல்லது சிறையில், விசாரணை மையம் அல்லது வேறுவகையான அடைப்புக்குள் வைக்கப்பட்டிருக்கும் நபர், தான் கைது செய்யப்பட்டு, குறிப்பிட்டதொரு இடத்தில் வைக்கப்பட்டிருக்கும் விவரத்தை கூடிய விரையில் தனது உறவினர், நண்பர், அறிந்தவர் அல்லது தனது நலனில் அக்கறை கொண்ட ஒருவருக்கு தெரிவிக்க உரிமை பெற்றவர்.

(4) கைது செய்யப்பட்டவரின் உறவினர் அல்லது நண்பர் வேறு மாவட்டத்தில் அல்லது நகரத்தில் இருந்தால் அங்குள்ள சட்ட உதவி அமைப்பின் மூலமாகவும், அங்குள்ள காவல் நிலையத்திற்குத் தொலைவரிச் செய்தி கொடுப்பதன் மூலமும், கைது செய்ததிலிருந்து 8 அல்லது 12 மணி நேர அவகாசத்திற்குள், கைது செய்யப்பட்ட நேரம், இடம், காவலில் வைக்கப்பட்டுள்ள இடம் குறித்த விவரங்களைத் தெரிவிக்க வேண்டும்.

(5) ஒருவரைக் கைது செய்யும்போது அல்லது காவலில் வைக்கும் போது, அது குறித்த தகவலைத் தான் விரும்பும்

ஒருவருக்குத் தெரிவிக்க உரிமை உண்டு என்ற விவரத்தைக் கைது செய்யப்பட்டவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(6) காவலில் வைக்கப்பட்டுள்ள இடத்தில், அதற்கென உள்ள பதிவேட்டில், கைது செய்யப்பட்ட விவரத்தையும், அந்தக் கைது குறித்து யாருக்குத் தெரிவிக்கப்பட்டது என்பதையும், கைது செய்யப் பட்டவர் எந்த காவல் அதிகாரிகளின் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ளாரோ அந்த காவல் அதிகாரிகளின் பெயர்கள் மற்றும் விவரங்களையும் குறிக்க வேண்டும்.

(7) கைது செய்யப்பட்டவர் வேண்டிக் கேட்டால், அவரை ஆய்வு செய்து, கைது செய்யப்பட்ட நேரத்தில் அவரது உடலில் சிறிய அல்லது பெரிய காயங்கள் இருப்பின், அவற்றைப் பற்றி அப்போதே பதிவு செய்தல் வேண்டும். அந்த 'ஆய்வுக் குறிப்பு' (inspection memo) கைது செய்யப்பட்டவர் மற்றும் கைது செய்த காவல் அதிகாரி இருவராலும் கையொப்பமிடப்பட வேண்டும். கைதான வருக்கு அதன் நகல் வழங்கப்பட வேண்டும்.

(8) கைது செய்யப்பட்ட நபர், அவர் காவலில் வைக்கப்பட்ட 48 மணி நேரங்களுக்குள் பயிற்சிபெற்ற மருத்துவர் ஒருவரால் அல்லது சம்பந்தப்பட்ட மாநிலத்தின் அல்லது ஒன்றியத்து நிலவரை ஆட்சிப்பரப்பு நலப் பணிகளின் இயக்குநரால் (Director, Health Services of the concerned State or Union Territory) நியமனம் செய்யப் பட்ட அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர் குழாமில் (panel of approved doctors) உள்ள மருத்துவரால் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத் தப்பட வேண்டும். நலப் பணிகளின் இயக்குநரானவர், அத்தகு ஒரு மருத்துவர் குழாம் ஒன்றை மாவட்டங்கள் மற்றும் வட்டங்கள் எல்லாவற்றிற்காகவும் தயாரித்தல் வேண்டும்.

(9) கைது குறிப்பு உள்ளிட்ட மேற்கண்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தையும், நிருவாகத்துறை குற்றவியல் நடுவருக்கு அவரது பதிவேட்டிற்காக அனுப்பப்படல் வேண்டும்.

(10) கைது செய்யப்பட்டவரை காவல் அதிகாரி கேள்வி கேட்டு விசாரிக்கின்றபோது, அந்த விசாரணை முழுவதும் இல்லாவிடினும், விசாரணையின்போது அவர் வழக்குரைஞரை சந்திக்க அனுமதிக்கப் படலாம்.

(11) எல்லா மாவட்ட மற்றும் மாநில தலைமையிடங்களில் காவல் துறை கட்டுப்பாட்டு அறை ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஒருவரைக் கைது செய்து காவலில் வைக்கின்றபோது, அவரைக் கைது செய்த அதிகாரி, கைது செய்த விவரம் மற்றும் காவலில் வைத்துள்ள இடம் குறித்து, கைது செய்ததிலிருந்து 12 மணி நேரத்திற்குள் மேற்படி காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அவ்விவரங்கள் எல்லோருக்கும் தெரியும் வகையில் காவல்துறை கட்டுப்பாட்டு அறையின் விளம்பரப் பலகையில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும்.

மேற்குறித்த வழிகாட்டு நெறிமுறைகளை கடைப்பிடிக்காத போது, சம்பந்தப்பட்ட அதிகாரி துறைசார்ந்த நடவடிக்கைக்கு உள்ளாவதோடு, நீதிமன்றத்தை அவமதித்த குற்றத்திற்கும் உள்ளாகிறார். நீதிமன்ற அவமதிப்பிற்கான வழக்கை, அந்த விடயத்தின் மீது அதிகாரவரம்புடைய உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

இந்த நெறிகளை வருவாய் நுண்ணறிவு இயக்ககம் (Directorate of Revenue Intelligence), அமலாக்க இயக்ககம் (Directorate of Enforcement), கடலோர காவற்படை, மத்திய இருப்புக் காவற்படை, எல்லைக் காவல் படை, மத்திய தொழிற் பாதுகாப்புப் படை, மாநில ஆயுதப் படை, நுண்ணறிவுப் பிரிவு, ஆய்வு மற்றும் அலசல் பிரிவு, மத்திய புலனாய்வுப் பிரிவு (CBI), மத்திய நுண்ணறிவு துறை, போக்குவரத்துக் காவல், இந்திய-திபேத்திய எல்லைப் படை ஆகியவையும் கடைப்பிடித்தாக வேண்டும்.

(உ) சுரண்டப்படுதலுக்கெதிரான உரிமை

(ஷரத்துகள் 23 மற்றும் 24)

[E] Right against Exploitation

(Articles 23 and 24)

60. Right against exploitation - Write short notes. (சுரண்டப் படுதலுக்கெதிரான உரிமை - குறுகிய விடை தருக.)

சுரண்டலுக்கெதிரான பாதுகாப்பை இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 23 மற்றும் 24-வது ஷரத்துகள் அளிக்கின்றன. ஷரத்து 23-இன்படி மனித இழிதொழில் வாணிகமும் (traffic in human beings), ஊதியமற்ற கட்டாய உழைப்பு முறை (பேகார்) (begar) மற்றும் இது போன்ற பிற வலுக்கட்டாய உழைப்பு முறைகளும் தடை செய்யப்பட்டுள்ளன. இத்தடையை மீறி அவ்வாறு ஏதேனும் செய்யப்படுமானால், அது தண்டிக்கத்தக்க

குற்றச் செயலாகும்.

'மனித இழி தொழில் வாணிகம்' (traffic in human beings) என்பது பெண்களை மற்றும் குழந்தைகளை ஒழுக்கக் கேடான வாணிகத்தில் ஈடுபடுத்துவதாகும், என **Nihal v. Rambai**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது. 'பேகார்' முறை என்பது, ஊதியம் ஏதும் கொடுக்காமல் வேலை வாங்குவதாகும், என **Basudev v. Mittal**[2] என்ற வழக்கில் கூறப்பட்டது. ஷரத்து 24-இன்படி 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் யாரும், தொழிற்சாலையிலோ அல்லது சுரங்கத்திலோ பணிக்கு அமர்த்தப்படக் கூடாது. மேலும் பிற அபாயகரமான பணியில் ஈடுபடுத்தப்படக் கூடாது.

(ஊ) சமய (அல்லது) மத சுதந்திர உரிமை

(ஷரத்துகள் 25 முதல் 28)

[F] Right to Freedom of Religion

(Articles 25 to 28)

61. Examine how far the Indian Constitution protects the rights to religious freedom. (சமய தனியுரிமைக்கு எம்மட்டில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் பாதுகாப்பளிக்கிறது என்பதை ஆய்க.)

(அல்லது)

Examine the scope of the freedom of religion guaranteed in Article 25. (ஷரத்து 25ல் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள சமய தனியுரிமையின் பரவெல்லையை ஆராய்க.)

(அல்லது)

"India is a Secular State" - Comment. ("இந்தியா ஒரு சமயச் சார்பற்ற அரசு" - விமர்சிக்க)

(அல்லது)

Discuss how far the Constitution protects practices followed by relitions. (இந்திய அரசியமைப்புச் சட்டம் எந்த அளவுக்கு

1. AIR 1987 M.P. 126
2. AIR 1962 Bom. 53

மதங்கள் கடைப்பிடிக்கின்ற பழக்கங்களை பாதுகாக்கிறது?)

(அல்லது)

Freedom of Religion - Write short notes. (மத சுதந்திரம் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Right to Freedom of Religion - Write short notes. (சமய சுதந்திரம் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Examine the scope of freedom of religion guaranteed to individuals and religious denominations under the Constitution of India - Refer to leading decisions. (தனி நபர்களுக்கும் சமயங்களுக்கும் இந்திய அரசியலமைப்பின் கீழ் உத்திரவாதம் அளிக்கப்பட்டுள்ள மத சுதந்திரத்தின் பரவெல்லையை ஆராய்க.)

(அல்லது)

Explain the religious rights provided by the constitution. (அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள மத உரிமைகளை விளக்கவும்.)

(அல்லது)

"A secular State maintains neutrality in matters of religion and provides equal protection to all religions subject to regulation" - Elucidate. ("அரசின் ஒழுங்குமுறை விதிகளுக்குட்பட்டு அரசு மத சம்பந்தமான விவகாரங்களில் நடுநிலைமை வகிப்பதோடு எல்லா மதங்களுக்கும் சம பாதுகாப்பு அளிக்கிறது" - விளக்கவுரை தருக.)

(அல்லது)

What aspects of freedom of religion and the right to religious practice can be regulated by the State under Article 25 of the Constitution? Can the State regulate by law the appointment of archakas in Hindu Temples and prescribe qualifications for them? (அரசமைப்புச் சட்டத்தின் 25-ம் பிரிவின் கீழ் மத உரிமையையும், மதச் சடங்குகள் செய்யும்

உரிமையையும் ஒரு அரசு எவ்வாறு கட்டுப்பாட்டுக்குட்படுத்து கிறது? இந்துக் கோவில்களில் அர்ச்சகர்கள் அமர்த்துவதை சட்டத்தால் கட்டுப்படுத்த இயலுமா, மற்றும் அவர்களுடைய தகுதியை வழிமுறை செய்ய இயலுமா?)

(அல்லது)

Explain the right of religious freedom as provided by the Constitution with the aid of decided cases. (அரசமைப்புச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்ட மத சுதந்திர உரிமையை முடிவான வழக்குகள் துணையோடு விளக்கவும்.)

(அல்லது)

Examine how the Indian Constitution has harmonised the concepts of secularism and freedom of religion. (சமய உரிமை மற்றும் சமய சார்பின்மை கருத்துப்படிவங்கள் ஒத்திசைந்து இருக்கும்படி இந்திய அரசியலமைப்பு எவ்வாறு செய்துள்ளது என்பதை ஆராய்க.)

(அல்லது)

"Right to freedom of religion is not absolute" Elucidate. ('மதச் சுதந்திர உரிமையானது முழுமையானது அல்ல' தெளிவு படுத்துக.)

(அல்லது)

Explain 'Secularism' and discuss how far freedom of religion is guaranteed under the Indian Constitution. (மத சார்பின்மையை விவரித்து, இந்திய அரசியலமைப்பின் கீழ் எந்த அளவிற்கு மத சுதந்திரம் உறுதியளிக்கப்பட்டிருக்கிறது என்பதனை குறித்து விவாதிக்கவும்.)

(அல்லது)

Secularism - Write short notes. (சமயச் சார்பின்மை - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

இந்தியாவில் வாழும் அனைத்து மக்களுக்கும் அரசிய லமைப்பு சட்டத்தின் 25, 26, 27, 28 ஆகிய ஷரத்துகள், தங்கள்

மனதிற்கு உகந்த சமயங்களைச் சார்ந்து வாழவும், அவற்றின் நெறிமுறைகளைக் கடைப்பிடிக்கவும், பரப்பவும் சுதந்திரம் அளிக்கின்றன. இச்சுதந்திரம் தனிப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாமல் சமயக் குழுக்களுக்கும், சமயப் பேரவைகளுக்கும் அளிக்கப் படுமாறு அரசியலமைப்பு சட்டம் வகை செய்துள்ளது.

ஷரத்து 25 கூறும் சமய (அல்லது) மத சுதந்திர உரிமை:

ஷரத்து 25-இன்படி, பொது அமைதி, ஒழுங்கு, சுகாதாரம், அறநெறி ஆகியவற்றுக்கும், அடிப்படை உரிமைகளுக்கும் உட்பட்டு எல்லோரும் தங்கள் உளநெறிக்கு உகந்ததாகப்படும் சமய நம்பிக்கையைக் கொள்ளவும், சுதந்திரமாக அதனைப் பின்பற்றவும், மற்றவர்களுக்கு அதன் உண்மையை உணர்த்திப் பரப்பவும், அரசியல் சட்ட உரிமையைப் பெற்றிருக்கின்றார்கள். **[ஷரத்து 25 (1)].**

ஷரத்து 25-இன் கீழான சமய உரிமையின் மீது கட்டுப்பாடுகள் (Regulations and Restrictions):

இவ்வாறு சமய சுதந்திர உரிமை கொடுக்கப்பட்டிருந்தாலும், பொருளாதாரம், சமய நடைமுறையுடன் கூடிய நீதி, அரசியல் அல்லது மற்ற சமயச் சார்பற்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவோ (regulating), கட்டுப்படுத்தவோ (restricting) அரசு சட்டமியற்ற அதிகாரம் பெற்றுள்ளது. **[ஷரத்து 25 (2) (a)].**

இத்துடன் சமூக நலன்களுக்கும் சீர்திருத்தத்திற்கும் இந்து சமய பொதுக் கோவில்களை எல்லா மக்களுக்கும் திறந்து, அனுமதிக்கக் கூடிய சட்டங்களை இயற்றி, அவ்வாறே செயல்பட அரசிற்கு அரசியலமைப்புச் சட்டம் அதிகாரம் அளித்துள்ளது. **[ஷரத்து 25 (2) (b)].**

இச்சமயச் சுதந்திரத்தைப் பின்பற்றுவதில் சீக்கியர்கள் தங்கள் 'கிருபன்' (Kripans) அணிந்து கொள்வதையும் இணைத்தே அளிக்கப்படுவதாக அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. **[ஷரத்து 25, I-வது விளக்கம்].**

இவ்வகையில் இந்து சமயம் எனக் கூறப்படுவது, சீக்கியர்கள், சைனர்கள், புத்தர்கள் பின்பற்றும் சமயங்கள் உள்ளடங்கியது என அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. **[ஷரத்து 25, II-வது விளக்கம்].**

இந்தியா, ஒரு சமயச் சார்பற்ற நாடு. எனவே அது பொதுவாக சமயத்தையும் அதைச் சார்ந்த சடங்குகளையும் ஒழுங்குபடுத்தவோ, கட்டுப்பாடு செய்யவோ முடியாது என்பது என்னவோ உண்மைதான். ஆனால் மேற்படி ஷரத்து 25 (2) (a)-இன்படி சமயத்தின் இன்றியமையாத சடங்குகளாக அமையாமல் அதனுடன் வெறும் தொடர்பு கொண்டு செய்யப்படுகின்ற அரசியல், பொருளாதார, நிதி அல்லது சமயத்தின் இன்றியமையா தவையெனக் கருதப்படாத செயல்களை ஒழுங்குபடுத்தவும், கட்டுப்பாடு செய்யவும், அரசு அதிகாரம் பெற்றுள்ளது. அதற்குரிய சட்டங்கள், கட்டளைகள் ஆகியவற்றை உருவாக்கிச் செயல்படும் சட்டங்கள் சமய உரிமைக்கு எதிரானவையல்ல என அரசியலமைப் புச் சட்டம் மேற்கண்டவாறு கூறினாலும், சமயத் தொடர்பில்லாத விடயங்கள் எவை என்று விளக்குவதில்லை. சமயச் செயல்கள், சமயச் சார்பற்ற செயல்கள் எவை என்று உச்ச நீதிமன்றம் பல வழக்குகளில் விளக்கமாக கூறியுள்ளது. எடுத்துக்காட்டாக, பசுக்களை வதை செய்வது என்பது இசுலாமியர்களின் சமய நெறி என்று வாதிடப்பட்டாலும் அது சமய நெறியாக கருதப்பட மாட்டாது என்று உச்ச நீதிமன்றம் **M.H.Quarashi v. State of Bihar**[1] என்ற வழக்கில் தீர்ப்பளித்தது.

சமூகச் சீர்திருத்தமும் கோவில்களும் (Social Reforms and Temples): சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் சமய உரிமைகளில் தலையிட்டாலும் அச்சட்டங்கள் செல்லுபடியாகும். தீண்டாமை போன்ற சமூகக் கேட்டை அகற்றுவதற்காக இயற்றப்பட்ட சட்டங்கள் சமய உரிமைகளுக்கும் பொருந்தும். இதன்படி இந்து மதப் பொதுக் கோவில்களெல்லாம் எல்லா வகுப்பினர்களுக்கும் சாதியினருக்கும் திறந்துவிடப்பட்டன. இதனால் தீண்டத்தகாத வர்களாக கருதப்பட்டவர்களுக்கும் சமயச் சுதந்திரம் வழங்கப்படு கிறது. இதனை ஷரத்து 25(2)(b) கூறுகிறது. வணங்குவதற்குக் கோவிலுக்குள் செல்லும் உரிமை அளிப்பினும், இவ்வுரிமையை கோவில்கள் எப்பொழுதும் திறந்து வைக்கப்பட வேண்டும் என்று கோருவதற்கு பயன்படுத்தப்பட முடியாது. நீதிமன்றங்கள் இவ் வகையில் சில கட்டுப்பாடுகளை அங்கீகரித்தன. அதற்குட்பட்டு தான் இவ்வுரிமை பயன்படுத்தப்பட வேண்டுமென்று **Venkata Ramana Devaru v. State of Mysore**[2] வழக்கில் கூறப்பட்டது.

1. AIR 1958 SC 731
2. AIR 1958 SC 255

சமயம் பற்றிய விவரங்களை மேலாண்மை செய்து கொள்ளும் உரிமைகள் (Freedom to Manage Religious Affairs):

அரசியலமைப்புச் சட்டத்தின் **26-வது ஷரத்து** பொது அமைதி, ஒழுங்கு, அறநெறி (Morality), சுகாதாரம் ஆகியவற்றின் நலனுக்குட்பட்டு,

(a) ஒவ்வொரு சமயமும் (every religious denomination) அதற்குரிய அற நோக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கின்றது.

(b) சமய சம்பந்தமான விடயங்களில் தனது சொந்த விவகாரங்களை தானே மேலாண்மை செய்து கொள்ளும் உரிமையைப் பெற்றிருக்கின்றது.

(c) அசையும் சொத்துக்களையும் அசையாச் சொத்துக்களையும் சேர்த்துக் கொள்ளவும், உரிமையாக்கிக் கொள்ளவும் உரிமை பெற்றுள்ளது:

(d) அவ்வாறு சேர்ந்து சமயக் கூடங்களுக்கு உரிமையாக்கிக் கொண்ட சொத்துக்களைச் சட்டங்கள் கூறும் முறையில் நிருவகித்துக் கொள்ளவும் உரிமை பெற்றிருக்கின்றது என்று அரசியலமைப்புச் சட்டம் விளம்புகிறது.

இந்து மதத்தில் பல உட்பிரிவுகள் இருப்பினும், அவையும் சமயக் குழுக்களாகவே கருதப்பட்டு அவற்றுக்கும் ஷரத்து 26-இன் படி பாதுகாப்பு கிடைக்கும்.

ஒத்திசைந்த பொருள் விளக்கம் (Harmonious Construction): அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 26(b)-இல் கூறப்பட்ட 'சமய சம்பந்தமான விவரங்களில்' (In matters of religion) என்பதும், ஷரத்து 25(1)-இல் கூறப்பட்டுள்ள 'சமயம்' என்ற சொல்லின் விளக்கமும் ஒன்றேதான். இவ்வகையில் சமுதாயத்தில் இருந்து விலக்கி வைக்கும் முறை (ex-communication) சமயத்தின் விவகாரமாகும். சமய ஒழுங்கு நிமித்தங்களை கடைப்பிடிக்காத காரணத்திற்காக சமூக விலக்குச் செய்யும் முறையைத் தடுக்கும் சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 26(b)-க்கு எதிரானதாகும். இச்சட்டம், ஷரத்து 25(2)(b)-யை ஒரு கேடயமாக காண்பித்து தப்பித்துக் கொள்ள முடியாது. சுருங்கக் கூறின், சமுதாய சீர்திருத்தம் காரணமாகச் சமயக் குழுமத்தின் சமூக விலக்கைத்

தடுக்க முடியாது. அஃதாவது சமயத்தினால் செய்யப்படும் சமூக விலக்கைச் சட்டம் மூலம் தடை செய்தால் அரசியலமைப்புச் சட்டம் அளிக்கும் சமயச் சுதந்திரம் பாதிக்கப்படுகின்றது என **Saifuddin Sahib v. State of Bombay**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது. வேற்று வழிகளில் சமூக விலக்குச் செய்யப்பட்டால் மட்டுமே சமுதாய சீர்திருத்தத்தின் பேரில் அவ்விலக்கு முறையைத் தடை செய்ய முடியும் என உச்ச நீதிமன்றம் பகர்ந்துள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 26(b)-யானது, "சமய சம்பந்தமான விடயங்களில் தனது சொந்த விவகாரங்களை தானே மேலாண்மை செய்து கொள்ளும் உரிமையை ஒவ்வொரு சமயமும் பெற்றிருக்கிறது" என்று கூறுகிறது. இங்கு "சொந்த விவகாரங்கள்" எனப்படுவது கோவில் சடங்குகளை யார் செய்வது, கர்பக்கிருகத்தில் யார் சென்று பூஜை செய்வது, எப்படி செய்வது, எப்பொழுது செய்வது என்பனவற்றை உள்ளடக்கியதாகும். இவ்விஷயத்தில் சமயமும், கிளைச் சமயக் கோவில் பொறுப்பாளர்களும் சமய நெறியின்படி கோவில் நடவடிக்கையிலிருந்து யார் யாரை விலக்குவது, விலக்க நடவடிக்கைகளில் யார் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாடுகளை விதிக்கும் உரிமையை மேற்கண்ட ஷரத்தின்படி பெற்றுள்ளார்கள்.

ஆனால் மேற்படி ஷரத்து 26(b)-இன் கூற்றுக்கு முரணாக, ஷரத்து 25(2)(b)-இன்படி பொதுக் கோவில்களும் சமயக் கிளைக் கோவில்களும் சமூக சீர்திருத்தம் காரணமாக எல்லோருக்கும் திறந்து வைக்கப்பட்டு எல்லோரும் சென்று வணங்கும் உரிமையை அளித்திருக்கிறது.

மேற்படி இந்த இரண்டு ஷரத்துகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக உள்ளது. ஆனாலும் ஷரத்து 25(2)(b) -இன் உரிமைக்கு கட்டுப்பட்டேதான் ஷரத்து 26(b)-இன் கீழான உரிமை செயல்படுத்தப்பட வேண்டும்.

ஷரத்து 25(2)(b) அளிக்கும் உரிமை உறுதியானது மட்டுமல்லாமல் தெளிவானதும் கூட என்றும், சமயக் கிளைக் கோவில்களின் சிறப்புப் பூஜை வழிபாடுகளின் போதும், விசேடப் பூஜை நேரங்களின் போதும் மட்டுமே அந்நியர்களைத் தடுக்கலாம் என்றும், சமூக நெறியின் உயர் நோக்கத்திற்கும், சமய நெறியின்

1. AIR 1962 SC 853

போக்கிற்கும் இடையே இசைவு காணும் ஒரு தீர்ப்பை **(Doctrine of Harmonious Construction) Venkataramana Devaru v. State of Mysore**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கியுள்ளது.

அர்ச்சகர்கள் அமர்த்துவதை கட்டுப்படுத்தும் சட்டம் : கோவில் அர்ச்சகர்கள் அமர்த்தப்படுவதை கட்டுப்படுத்தி அல்லது அவர்களது தகுதியை நிர்ணயித்து சட்டங்கள் ஏதேனும் இயற்றப் பட்டால், அவை மேற்படி ஷரத்து 26(b)-க்கு முரணான ஒன்றாகி செல்லாததாகிவிடும். ஏனெனில் மேற்படி ஷரத்து 26(b), "சமய சம்பந்தமான விவரங்களில் தனது சொந்த விவகாரங்களை தானே மேலாண்மை செய்து கொள்ளும் உரிமையை ஒவ்வொரு சமயமும் பெற்றிருக்கிறது என்று கூறுகிறது" (to manage its own affairs in matters of religion). இங்கு 'சொந்த விவகாரங்கள்' என்பதில் கோவில் சடங்குகளை யார் செய்வது, கர்பக் கிருகத்தில் யார் நுழைந்து பூஜை செய்வது, எப்படி செய்வது, எப்பொழுது செய்வது என்பனவற்றை உள்ளடக்கும். எனவே மேற்கண்டதில், "கோவில் சடங்குகளை கர்பக்கிருகத்தில் நுழைந்து யார் செய்வது?" என்ற வினாவின் எல்லைக்குள் அர்ச்சகர்கள் அமர்த்தப் படுவதும், அவர்களுடைய தகுதியை நிர்ணயிப்பதும் வந்து விடு கிறது. இதைக் கட்டுப்படுத்தும் உரிமை கோவில் பொறுப்பாளர் களைச் சார்ந்தது. இவ்வுரிமையில் அரசு தலையிட்டால், அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதாகும்.

வரி விதிப்பும் சமய வளர்ச்சியும் (Taxation and Promotion of Religion) (ஷரத்து 27):

இந்திய அரசு, சமயச் சார்பற்ற அரசு (Secular State) எனப்படுகிறது. இவ்வரசிற்குத் தனியாக சமயம் ஏதும் கிடையாது. எம்மதமும் சம்மதம் என்ற உயர் நோக்குக் கொண்டு செயல்படும் அரசாகும். அரசியலமைப்புச் சட்டம் **ஷரத்து 27**-இன்படி, எச்சமயத்திற்கும் அல்லது அதன் உட்பிரிவிற்கும் வரி விதித்து, அவ்வரியின் வருவாயைச் சமய வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் செலவு செய்யும் நோக்கத்துடன் எந்த ஒரு குடிமகனும் வரிப்பணம் கட்ட வேண்டுமென்று வற்புறுத்தக் கூடாது என்று கூறுகின்றது. மேலும் இன்றைய நாளில் பல அறக்கட்டளைகள், அறக் கொடைகள் அரசின் அதிகாரிகளால் மேற்பார்வையிடப்பட்டு, அவற்றின் நோக்கங்கள் சரியான முறையில் நிறைவேற்றப்படுகின்

1. AIR 1958 SC 255

றனவா என்பதைக் கண்காணிக்க வேண்டியுள்ளது. இக்கண் காணிப்புக்காக அரசு வரிவிதிப்புச் செய்து பெறுமாயின் அஃது அரசியலமைப்புச் சட்டம் 27-வது ஷரத்துக்கு எதிரானதாகிவிடும். ஆனால் இந்த நிருவாகச் செலவுகளுக்காக அரசு, கோவில்களில் **கட்டணம் (Fee)** விதித்துப் பெற்றுக் கொண்டால், அஃது அரசியலமைப்புச் சட்டத்தை மீறியதாகக் கருதப்படமாட்டாது. ஏனெனில் அரசியலமைப்புச் சட்டம் **வரிதான் (Tax)** விதித்து பெறக் கூடாது என்று கூறுகின்றதேயொழிய கட்டணம் பெற்று நிருவாகச் செலவைச் சரிகட்டிக் கொள்ளக் கூடாது என்று கூற வில்லை. உச்ச நீதிமன்றமும் அவ்வாறு கட்டணங்கள் வசூலித்துப் பெறுவது வரியாகாது; அரசியலமைப்புச் சட்டத்திற்கும் புறம்பா காது என **Commissioner, Hindu Religious Endowment v. L.T.Swamiar**[1] என்ற வழக்கில் கூறியுள்ளது.

கல்விக்கூடங்களில் சமய போதனைகளின் மீதான கட்டுப்பாடு (Restriction on Religious Institutions and Educational Institutions) (ஷரத்து 28):

அரசியலமைப்புச் சட்டத்தின் **28-வது ஷரத்து** சமயச் சார்பற்ற அரசு என்பதற்கு மற்றொரு உதாரணமாக விளங்குகிறது எனலாம். அரசின் நிதி உதவியைப் முழுமையாகப் பெற்றுக் கல்விப் பணிபுரியும் நிறுவனங்களில் சமய போதனை செய்வது 28-வது ஷரத்தின் கீழ் தடுக்கப்படுகிறது.

முடிவுரை:

'சமயச் சார்பின்மை' என்பது எந்த ஒரு சமயத்தையும் சாராது இருத்தல் ஆகும். **'இந்தியா ஒரு சமயச் சார்பற்ற அரசு'** என்று இந்திய அரசியலமைப்பின் **முகப்புரை** கூறுகிறது. இதன் பொருள் யாதெனில், இந்திய அரசு எந்த ஒரு சமயத்தையும் பின் பற்றுவதில்லை என்பதாகும். இதனால் மக்கள் தங்கள் பாரம்பரியப் படியோ, தங்களது மனதிற்கு பிடித்தவாறோ ஒரு சமயத்தை பின்பற்றுவதற்கு நமது அரசியலமைப்பு சர்வ சுதந்திர உரிமை அளித்துள்ளது. இந்தியா ஒரு சமயச் சார்பற்ற நாடாக இருப்பதால், சமயம் தொடர்பாக எழும் சண்டைகள், பூசல்கள் முதலானவற்றில் **நடுநிலை (neutrality)** வகித்து செயல்படும். சட்டத்தின் முன் எல்லோரும் சமம். அதுபோல சமயங்களும் சமம். அனைத்து சமயங்களையும் மதங்களையும் பாதுகாப்பதே சட்டத்தின் நோக்க

1. AIR 1954 SC 282

மாகும். எனவே ஒருவர் இன்ன சமயத்தினர் என்பதால் அவருக்கு தனி மதிப்பை அரசியலமைப்பு அளிப்பது இல்லை. இதனைக் காரணம் காட்டி, இந்தியா சமயத்திற்கு எதிரான அரசு என்று கூறி வாதாடக் கூடாது. இந்திய அரசின் நோக்கமே, மக்கள் தங்கள் சமயங்களைப் பின்பற்றுவதில் தலையிடக் கூடாது என்பதுதான். இங்ஙனம் குடிமக்களுக்கு உள்ள சமய உரிமைகளை காப்பதற் காகவே 25 முதல் 28 வரையுள்ள ஷரத்துகள், இந்திய அரசியல மைப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆக, இந்திய நாடு தன்னை எந்த ஒரு சமயத்துடன் இணைத்துக் கொள்வதோ அல்லது பிணைத்துக் கொள்வதோ கிடையாது. இந்தியா ஒரு சமயச் சார்பற்ற அரசு என்பது மேற்கண்ட கூற்றுகளிலிருந்து தெளிவாகும்.

(எ) கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமைகள்

(ஷரத்துகள் 29 மற்றும் 30)

[G] Cultural and Educational Rights

(Articles 29 and 30)

62. Explain the rights guaranteed to minorities under the Constitution. (அரசியலமைப்பின் கீழ் சிறுபான்மையருக்கு உத்திரவாதம் அளிக்கும் உரிமைகளை விளக்குக.)

(அல்லது)

Elucidate the special provisions in the Constitution to safe-guard the interest of minorities. (அரசமைப்பு சட்டத்தில் சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாக்கும் சிறப்பான வழிவகைகளை எடுத்துரைக்கவும்.)

(அல்லது)

What are the rights guaranteed to cultural and linguistic minorities by the Constitution? (கலாச்சாரம் மற்றும் மொழி ரீதியான சிறுபான்மையினருக்கு அரசியலமைப்பால் உத்திர வாதமளிக்கப்பட்டுள்ள உரிமைகள் யாவை?)

(அல்லது)

Write an essay on the rights of minorities to establish and administer educational institutions. (கல்வி நிறுவனங்களை

அமைக்கவும் அவைகளை செயலாட்சி செய்யவும் சிறுபான்மை யோரின் உரிமைகள் குறித்து ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

To what extent minority rights are protected under the Indian Constitution? (சிறுபான்மையினரின் உரிமைகள் எந்த அளவிற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தால் பாதுகாக்கப் பட்டுள்ளன?)

(அல்லது)

Minorities rights - Write short notes. (சிறுபான்மையினர்களின் உரிமைகள் - குறுகிய விடை தருக.)

முடிவுரை:

அரசியலமைப்புச் சட்டத்தின் 29, 30 ஆகிய ஷரத்துகள் சமயம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றில் சிறுபான்மையினராக இருக்கும் மக்களுக்குச் சில உரிமைகளை அளிக்கிறது.

ஷரத்து 29-இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள்:

இந்தியாவில் எப்பகுதியில் வாழ்பவராக இருப்பினும் தனி மொழி ஒன்றை அல்லது எழுத்து முறையை அல்லது தனிக் கலாச் சாரம் ஒன்றை பெற்றிருக்கும் சமூகத்தினர் அம்மொழி, எழுத்து, கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளும் அரசியல மைப்பு சட்ட உரிமையைப் பெற்றுள்ளார்கள் என்று **ஷரத்து 29(1)** கூறுகிறது.

அரசு அதன் கல்விக் கூடங்களிலும், அல்லது அரசின் உதவி பெற்று நடத்தப்படுகின்ற கல்விச் சாலைகளிலும் எந்தவொரு குடிமகனும் சமயம், இனம், சாதி, மொழி அல்லது அவற்றில் ஏதேனும் ஒன்றினால் கல்வி பெறும் வாய்ப்பை இழக்க முடியாத படி அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 29(2) வகை செய்கிறது. இது அவர்களின் கல்வி மற்றும் கலாச்சார உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கிறது. இவ்வுரிமைகளைத் தனிப்பட்ட ஒருவருக்கு அவர் இந்த நாட்டின் குடிமகன் என்ற அடிப்படையில் அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவ்வுரிமை அக்குடிமகன் எந்தச் சமு தாயத்தைச் சார்ந்தவனாக இருப்பினும் அவனுக்குரிய உரிமையே யாகும்.

சில முக்கிய வழக்குகள்:

State of Madras v. Chenpakam Durairajan[1]

இவ்வழக்கில் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 29(2) பற்றிய விளக்கம் எழுந்தது. பொறியியற் கல்லூரிகளில் மாணவர் களுக்கு இட ஒதுக்கீடு செய்யும் உத்திரவு ஒன்றை சென்னை அரசாங்கம் பிறப்பித்தது. செண்பகம் துரைராஜன் என்பவர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். அவர் தேர்வில் அதிக மதிப் பெண்கள் பெற்றிருந்தும், மேற்படி இட ஒதுக்கீடு உத்திரவின் காரணமாக அவருக்கு கல்லூரியில் இடம் கிடைக்கவில்லை. எனவே, சாதி மற்றும் சமய அடிப்படையில் இட ஒதுக்கீடு செய்துள்ள மேற்படி உத்திரவை செல்லாது என்று அறிவிக்கக் கோரி மனுச் செய்தார். உச்ச நீதிமன்றம் மேற்படி உத்திரவு, ஷரத்து 29(2)-இன் கீழ் சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையை மீறுவதாக உள்ளதால், அதைச் செல்லாது என்று அறிவித்தது.

இவ்வழக்கிற்குப் பிறகு, சமுதாயத்தில் மற்றும் கல்வியில் பின்தங்கியுள்ள குடிமக்களை முன்னேற்றும் பொருட்டு சிறப்புச் சட்ட முறைகளை செய்ய அரசுக்கு அதிகாரமளிக்கும் வண்ணம் ஷரத்து 15(2), 1954-ஆம் ஆண்டின் முதல் அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் திருத்தப்பட்டது. இதன்படி, தற்பொழுது பின்தங்கிய வகுப்பினருக்காக அரசு இட ஒதுக்கீடு செய்வதில் தடையில்லை.

State of Bombay v. Bombay Educational Society[2]

ஆங்கில மொழி பேசாத மாணவர்களை, ஆங்கில வழியில் கல்வி கற்பிக்கும் (English Medium) பள்ளிக் கூடங்களில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என பம்பாய் அரசு ஒரு சட்டம் மூலம் தடை விதித்தது. இச்சட்டம் மொழியின் அடிப்படையில், ஆங்கில மொழி பேசாத மாணவர்களின் கல்வி பெறும் உரிமையைப் பறிப்ப தாக உள்ளதால், இது ஷரத்து 29(2)-ஐ மீறுவதாக உள்ளது. ஆகவே, மேற்படி சட்டமானது செல்லாது என நீதிமன்றம் அறிவித்தது.

Nageshwara Rao v. Principal, Medical College[3]

இவ்வழக்கில் தேவையான கல்வித் தகுதி பெறாத காரணத்

1. AIR 1951 SC 226
2. AIR 1954 SC 561
3. AIR 1962 AP 212

தால், கல்லூரியில் இட ஒதுக்கீடு மறுக்கப்பட்டால் அதற்கு ஷரத்து 29(2) உதவிக்கு வராது, எனப்பட்டது.

St. Stephen's College, etc. v. University of Delhi[1]

இவ்வழக்கில் சிறுபான்மையினரால் நடத்தப்படும் கல்விக் கூடங்களில் குறைந்தபட்சம் 50 சதவீத இடங்களாவது, சிறு பான்மையினர் அல்லாத பிற சமூகத்தினருக்கு ஒதுக்கீடு செய்யப் பட வேண்டும் எனப்பட்டது.

ஷரத்து 30-இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள உரிமைகள்:

ஷரத்து 30-ஆனது, சிறுபான்மையினருக்கு இரண்டு அரசியலமைப்புச் சட்ட உரிமைகளை வழங்கியுள்ளது.

அதன்படி, **ஷரத்து 30(1)**-ஆனது, மொழி, சமயம் ஆகிய வற்றின் அடிப்படையில் சிறுபான்மையினராக உள்ள எல்லோரும் தங்கள் இச்சைப்படி கல்விக் கூடங்களை ஏற்படுத்தி அவற்றை நிர்வகித்துக் கொள்ளக் கூடிய முதல் உரிமையை வழங்குகிறது. [All minorities, whether based on religion or language shall have the right to establish and administer Educational Institutions of their choice - Art. 30(1)]. **ஷரத்து 30(2)**-ஆனது அவ் வாறு தோற்றுவித்து நிர்வகிக்கப்பட்டு வரும் கல்விக் கூடங்களை சிறுபான்மையினர் கல்விக் கூடங்களென வேறுபாடு காட்டி, அரசு நிதி உதவி வழங்குவதில் பாரபட்சம் ஏதும் காட்டக் கூடாது என்பது இரண்டாவது உரிமையாகும்.

சில முக்கிய வழக்குகள்:

In re Kerala Education Bill[2]

இவ்வழக்கில் சிறுபான்மையினரின் கல்விக் கூடங்களில் ஆரம்பப் பள்ளிகளில் கட்டணம் வசூலிக்காமலிருந்தால் மட்டும் அக்கல்விக் கூடங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்படும் என்ற நிபந் தனை, ஆரம்பப் பள்ளி வகுப்பிலுள்ள ஏராளமான மாணவர்கள் மூலம் பள்ளிக்குக் கிடைக்கும் நிதி கிடைக்காமல் போகும்படி செய்து விடுகின்றது. மேலும் அவ்வாறு ஏற்பட்ட இழப்புக்கு வேறு ஈடு ஏதும் அளிப்பதற்கு வழிவகைகள் கூறப்படவில்லை. இம்மாதிரி

1. AIR 1992 SC 1630
2. AIR 1958 SC 956

யான நிபந்தனைகள் அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 30(1)-இன் நோக்கத்தையே பாதித்துவிடுவதால், செல்லாது என்று கூறப்பட்டது.

Sidhrajbhai v. State of Gujarat[1]

இவ்வழக்கில் குஜராத் மாநிலம் நடத்தும் தனியார் பயிற்சிக் கல்லூரிகளில் 80 சதவீத இடங்கள் அரசாங்கத்தின் சார்பில் அனுப்பப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் என்றும், அரசு தேர்ந்தெடுத்து அனுப்பும் ஆசிரியர்களை பணியிலமர்த்த வேண்டும் என்றும், அரசு ஆணை பிறப்பித்தது. இவ்வாணைக்கு கீழ்ப்படிந்து நடக்கவில்லையென்றால், அக்கல்லூரிக்கு அரசு வழங்கும் உதவித் தொகையும் அங்கீகாரமும் நிறுத்தப்படும் என பயமுறுத்தப்பட்டது. இது தொடர்பாக எழுந்த வழக்கில் உச்ச நீதிமன்றமானது, மேற்கண்ட ஆணை, ஷரத்து 30(1)ஐ மீறி, அதன்படி உள்ள சிறுபான்மை மக்கள் கல்விக் கூடங்களை நிர்வகிக்கும் உரிமையை பாதிக்கிறது என்றும், மேலும் இவ்வாணையின் மூலம் செய்யப்பட்ட ஒழுங்குப்பாடானது கல்விக்கூடம் திறமையாகச் செயல்படுவதற்கோ, அல்லது பொது நலனை முன்னிட்டோ செய்யப்படவில்லை என்றும், இக்கட்டுப்பாடு ஷரத்து 30(1)-இன் கீழான நியாயமான உரிமையை பாதிக்கிறது என்றும் தீர்ப்பளித்தது.

St. Xavier's College v. State of Gujarat[2]

இவ்வழக்கில் ஷரத்து 30(1)-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமையின் எல்லை குறித்து ஆராயப்பட்டது. இவ்வழக்கில் வாதிகள், அகமதாபாத்தில் சிறுபான்மையினர் கல்லூரி ஒன்றினை நடத்தி வந்தனர். அதன் பெயர் St. Xavier's College of Arts and Commerce. கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு உயர் கல்வி அளிப்பதுதான் இக்கல்லூரியின் நோக்கமாகும். இக்கல்லூரி குஜராத் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளது (affiliated). மேற்படி வாதிகள் குஜராத் பல்கலைக்கழகத்தின் விதிகள், ஷரத்து 30-இன் கீழ் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மீறுவதாக உள்ளது எனக் கூறி, நீதிமன்றத்தில் வழக்கிட்டனர். அதாவது, கல்லூரிக்கே உரித்தான கல்லூரி நிருவாகம், ஆசிரியர்கள் நியமனம்

1. AIR 1963 SC 540
2. AIR 1974 SC 1389

போன்ற அனைத்து விடயங்களிலும் அரசானது மேற்படி விதி களின் துணைக் கொண்டு தனது மூக்கை நுழைத்து, வாதிகளின் உரிமைகளுக்கு இன்னல் விளைவித்தது. சிறுபான்மையினர்கள் தங்கள் விருப்பப்படி கல்விக்கூடங்களை நிறுவி, அதனை தாங்களே நிர்வகிக்க ஷரத்து 30(1)-ஆல் பெற்ற உரிமைகளை, பல்கலைக் கழகத்தின் மேற்படி விதிகள் பறிப்பதாக உள்ளது, என நீதிமன்றம் கூறியது. மேலும் இவ்விதிகள் சிறுபான்மையினர் கல்விக் கூடங் களுக்குப் பொருந்தாது எனத் தீர்ப்பளித்தது.

Frank Anthony Public School Employees Association v. Union of India[1]

இவ்வழக்கில் கல்வித்தரத்தையும், மேன்மையையும் பரா மரிப்பதற்காக, சிறுபான்மையினர் கல்விக் கூடங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களின் பணியை ஒழுங்குபடுத்த தக்க சட்ட நடிவடிக்கைகளை எடுத்து நிபந்தனைகளை விதிப்பது, ஷரத்து 30(1)-இன் கீழ் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையை மீறியதாகாது எனப்பட்டது.

Christian Medical College Hospital Employees Union v. Christian Medical College Vellore Association[2]

இவ்வழக்கில் ஒரு முக்கியமான கருத்தை உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது. அதனை இவ்வழக்கின் பொருண்மைகளை கண்டால் புரியும். என்ற **Christian Medical College Vellore Association** அமைப்பானது, ஒரு பெரிய மருத்துவக் கல்லூரியையும், அதனுடன் இணைந்த மருத்துவமனையையும் நடத்தி வந்தது. இதில் ஆசிரியர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் பல்வேறுபட்ட பணியாளர்கள் பணிபுரிந்து வந்தனர். 1978-ஆம் ஆண்டுவாக்கில், எழுத்தர் (Clerk), மூட்டை கட்டுபவர் (Pater) மற்றும் சமைப்பவர் (Cook) ஆகிய மூன்று பணியாட்கள் நிர்வாகத் தினால் பணியிலிருந்து நீக்கப்பட்டனர். கல்லூரி-மருத்துவமனை பணியாட்கள் சங்கம் (College - Hospital Employees Union) இதனை ஒரு தொழிற்தகராறாக (Industrial Dispute) மாநில அரசிடம் கொண்டு சென்றது. மாநில அரசும், தீர்விற்காக இதனை தொழிலாளர் நீதிமன்றத்திடம் (Labour Court) ஒப்படைத்தது. இவ்வழக்கின் எதிர்மனுதாரரான Christian Medical College

1. (1986) 4 SCC 707
2. AIR 1988 SC 37

Association-ஆனது, கிறிஸ்துவ மருத்துவக் கல்லூரியின் ஒரு பகுதியாக மேற்படி மருத்துவமனை செயல்பட்டு வருகிறது என்றும், இம்மருத்துவக் கல்லூரி சிறுபான்மையினரால் நிறுவப் பட்டதால், தொழிற்தகராறுகள் சட்டத்தின் (Industrial Disputes Act) பிரிவுகள் தங்களுக்குப் பொருந்தாது என்றும் வாதிட்டது. அதாவது, சிறுபான்மையினர் நடத்தி வரும் மருத்துவக் கல்லூரி யின் கட்டுப்பாட்டில் மருத்துவமனை இயங்குவதால் அங்கு ஏற்படும் பிரச்சனைகளில் சட்டப்பிரிவுகள் தலையிட முடியாது என்பது மேற்படி Association-னின் வாதமாகும். ஆனால் தொழிற் தகராறுகள் சட்டத்தின் பிரிவுகள், சிறுபான்மையினர் என்றும், பெரும்பான்மையினர் என்றும் பாரபட்சம் காட்டக் கூடிய சட்டமல்ல என்றும், அது தொழிற்துறை சார்ந்த பிரச்சனைகளை ஒழுங்குபடுத்தக் கூடிய சட்டமாகும் என்றும், எனவே அதன் பிரிவுகள் சிறுபான்மையினருக்கும் பொருந்தும் என்றும் நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. சிறுபான்மையினர் தங்களுக்கு அளிக் கப்பட்ட உரிமைகளை ஒரு கேடயமாக பயன்படுத்தாமல் வாளாக பயன்படுத்தியிருப்பதையும், அதனை உச்ச நீதிமன்றம் தடுத்திருப் பதையும் இவ்வழக்கில் காணலாம்.

All Bihar Christian School Association v. State of Bihar[1]

இவ்வழக்கில் சிறுபான்மையினர் கல்விக்கூடங்களின் தரம் மற்றும் மேன்மையை ஒழுங்குபடுத்தும் சட்ட வகைமுறைகள், ஷரத்து 30(1)-ஆல் சிறுபான்மையினருக்கு கொடுக்கப்பட்டுள்ள உரிமைகளை மீறியதாகாது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

T.M.A. Pai Foundation v. State of Karnataka[2]

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் மாண்பமை தலைமை நீதியரசர் பி.என்.கிர்பால் தலைமையில் அமைந்த 11 நீதிபதிகள் அடங்கிய அரசியலமைப்பு ஆயம் ஒரு முக்கியத் தீர்ப்பை நல்கியது. அதில், மொழி மற்றும் மத சிறுபான்மையினர் நடத்தும் சுய நிதி கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கை கொள்கையை மாநில அரசுகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஒழுங்குபடுத்த இயலாது என்றும், ஆனால் மாநில அரசுகளும் பல்கலைக்கழகங்களும் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கைக் கான கல்வித் தகுதிகளை குறித்துரைக்கலாம் என்றும், அவை

1. AIR 1988 SC 305
2. AIR 2003 SC 355

தங்கள் கல்வித் தரத்தை பராமரித்துக் கொள்வதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மாநில அரசுகளும் பல்கலைக்கழகங்களும் வகுத்துரைக்கலாம் என்றும் கூறப்பட்டது. இதே கொள்கை ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாட்கள் நியமனத்திற்கும் பொருந்தும் என்றும் அத்தீர்ப்பில் கூறப்பட்டது. சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் தங்களுக்கான அங்கீகாரம் அல்லது இணைப்பைப் பெற பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி வாரியங்கள் விதிக்கும் நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டது.

சுருங்கக் கூறின் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் தங்கள் விருப்பப்படி மாணவர்களை சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களை தேர்ந்தெடுப்பதில் நியாயமான நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். அது வெளிப்படையானதாக இருக்க வேண்டும். அதுபோல சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை அளித்து சேர்த்துக் கொள்ள வகுக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகளை சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் நிறைவு செய்ய வேண்டும்.

சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் ஒருக்கால் அரசிடமிருந்து நிதியுதவி பெற்று இயங்கினால், அதை மட்டும் காரணமாகக் கொண்டு அவை சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் அல்ல என்று கூறிவிட இயலாது. ஆனால் அதே சமயம் சிறுபான்மையினர் அல்லாத மாணவர்களையும் அவை சேர்த்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் அம்மாணவர்களுக்கு ஷரத்து 29(2) அளித்துள்ள அரசியலமைப்பு உரிமை மீறப்படுதல் ஆகாது.

மற்றொரு உரிமை - ஷரத்து 30(1A):

1978-ஆம் ஆண்டின் 44-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் மேற்படி உட்கூறு (1A) என்பது ஷரத்து 30-இல் புகுத்தப்பட்டது. அதன்படி சிறுபான்மையினர் ஒருவரால் அமைக்கப்பட்டு நிர்வாகம் செய்யப்பட்டு வரும் கல்விக் கூடத்தின் சொத்து ஏதேனும், அரசால் கட்டாயமாக கையகப்படுத்தப்பட்டால் (Compulsory acquisition) அதற்குண்டான நஷ்டஈட்டை வழங்க வேண்டும். ஆனால் அது அரசின் சட்டத்தால் நிர்ணயம் செய்யப்படும். அவ்விழப்பீட்டுத் தொகை, ஷரத்து 30(1)-ஆல் சிறுபான்மையினருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமையை வரம்பிடுவதாகவோ அல்லது குறைப்பதாகவோ இருக்கக் கூடாது.

63. "All Minorities whether based on religion or language shall have the right to establish and administer educational institutions of their choice" - Discuss. ("மொழியின் அடிப்படையிலாயினும் சரி, மதத்தின் அடிப்படையிலாயினும் சரி, எல்லா வகையான சிறுபான்மையினருக்கும் அவர்கள் விருப்பப் படி கல்விக்கூடங்கள் ஏற்படுத்துவதற்கும் பராமரிப்பதற்கும் உரிமை உண்டு" - விளக்குக.)

(ஷரத்து 30-இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளையும் வழக்குகளையும் எழுதுக.)

64. Discuss whether an educational institution established by a minority religious community exempted from payment of salary to teachers at the rate fixed by the State Government (மாநில அரசாங்கம் நிர்ணயம் செய்த விகிதத்தில் ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதிலிருந்து சமய சிறுபான்மை சமூகம் நிறுவிய கல்விக்கூடம் விலக்கு பெற முடியுமா என்பதை விவாதிக்க.)

மாநில அரசாங்கம் நிர்ணயம் செய்த விகிதத்தில் ஆசிரியர் களுக்கு சம்பளம் வழங்குவதிலிருந்து சமய சிறுபான்மை சமூகம் நிறுவிய கல்விக்கூடமானது இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 30(1)-இன் விலக்கு பெற முடியும். இங்கே மேற்படி ஷரத்து 30(1)ஐ சற்றே கண்ணோக்கல் அவசியம். அது கூறுவது யாதெனில், "மொழி, சமயம் ஆகியவற்றின் அடிப்படையில் சிறுபான்மையின ராக உள்ள எல்லோரும் தங்கள் இச்சைப்படி கல்விக்கூடங்களை ஏற்படுத்தி, அவற்றை நிர்வகித்துக் கொள்ளலாம்".

ஆகவே, மேற்கண்ட வகையில் நிறுவப்பட்ட சமய சிறு பான்மைக் கல்விக் கூடத்தின் ஆசிரியர் நியமன விடயத்திலோ அல்லது சம்பள நிர்ணய விடயத்திலோ மாநில அரசு தலையிடல் கூடாது. அவை ஷரத்து 30(1)-இன் கீழ் விலக்கு பெற்றதாகும். (முந்தைய வினாவில் கண்ட **Sidhrajbhai v. State of Gujarat, St. Xavier's College v. State of Gujarat** ஆகிய வழக்குகளையும் இங்கு குறிப்பிடவும்.) ஆனால் சிறுபான்மை கல்வி நிறுவனங் களுக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமை முழுமையானதல்ல என்பதை யும், அவற்றின் நிர்வாகத்தை ஒழுங்குபடுத்த அரசுக்கு அதிகார முண்டு (Power of Government to regulate minority to run educational institutions) என்பதையும் நாம் இங்கு மறத்தலா

காது. (எடுத்துக்காட்டிற்கு, நாம் முன்பு கண்ட **Frank Anthony Public School Employees Association v. Union of India, All Bihar Christian School Association v. State of Bihar** ஆகிய வழக்குகளையும் இந்த இடத்தில் குறிப்பிடலாம்.

(ஏ) சில சட்டங்களுக்கு விலக்குகள்

(இந்திய அரசியலமைப்பின் கீழ் சொத்துரிமையின் வரலாறு – 44 –வது அரசியலமைப்பு சட்ட திருத்தம் – சொத்துரிமையின் தடங்கள்)

(ஷரத்துகள் 31-A, 31-B, 31-C மற்றும் 300-A)

[H] Saving to Certain Laws

(History of Right to Property under the Constitution of India - The 44th Amendment, 1978 - Vestiges of the Right to Property)

(Articles 31-A, 31-B, 31-C and 300-A)

65. Right to Property - Write short notes. (சொத்துரிமை- குறுகிய விடை தருக.)

(அல்லது)

"No person shall be deprived of his property save by authority of law" - Explain. ("சட்டத்தின் அனுமதியோடன்றி யாருடைய சொத்தையும் பறிமுதல் செய்தல் கூடாது" - விளக்குக.)

முன்னுரை:

ஒரு சொத்தை அடைந்து, அதை மற்றவர்கள் இடையூறின்றி அனுபவிப்பது என்பது குடிமக்களுக்கு உள்ள முக்கிய உரிமைகளுள் ஒன்றாகும். இச்சொத்துரிமை இந்தியா விடுதலை பெற்ற காலத்திலிருந்து விவாதத்திற்குரிய ஒரு விடயமாகவே இருந்து வந்துள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் நோக்கங்களை அடைவதற்காக சொத்துரிமையை ஒழுங்குபடுத்த அடுத்தடுத்து வந்த அரசுகள் முயன்று வந்துள்ளன. "சட்டத்தின் அதிகாரத்தினாலன்றி எவரும் தனது சொத்திற்கான உரிமையை இழத்தலாகாது" என தொடக்கத்தில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 31-இன் கீழ் குறிப்பிடப்பட்டு இருந்தது. அப்போது அது அரசியலமைப்புச் சட்டத்தின் பகுதி III-இல் ஷரத்து 19(1)(f) மற்றும் 31-இன் கீழ் ஒரு அடிப்படை உரிமையாக

வீற்றிருந்தது. ஆனால், 1978-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட 44-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமானது, அவ்விரண்டு ஷரத்துகளையும் நீக்கிவிட்டு, பகுதி XII-இல் சொத்துரிமை என்பதை 300-A எனும் புதியதொரு ஷரத்தின் கீழ் ஒரு சாதாரண உரிமையாக நுழைத்தது. எனவே சொத்துரிமை என்பது 'அடிப்படை உரிமை' (Fundamental Right) எனும் தகுதியிலிருந்து கீழிறக்கப்பட்டு ஒரு 'சாதாரண அரசியலமைப்பு உரிமையாக' (Ordinary Constitutional Right) அல்லது 'சட்ட உரிமையாக' (Legal Right) ஆக்கப்பட்டது.

இந்திய அரசியலமைப்பின் கீழ் சொத்துரிமையின் வரலாறு:

நமது இந்திய நாடு விடுதலை பெற்றவுடன், வேளாண் சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல், மைய மற்றும் மாநில அரசுகளின் திட்டமிடலில் முக்கிய நோக்கமாக இருந்தது. எனவே பொது நலனுக்கு உதவவும், வேளாண் விளைச்சலை அதிகப்படுத்தவும் மற்றும் சமூக, பொருளாதார நீதியை மேம்படுத்துவதற்கும் தொடர்ச்சியாக சட்டங்களை இயற்ற அவை முனைந்தன. நில இருப்பின் மேல் உச்சவரம்பு விதித்தல், ஜமீன்தாரி முறையை ஒழித்தல், குத்தகைதார்ரை பாதுகாத்தல், குடியிருப்பு உரிமைகளை வழங்குதல் ஆகியன நிலச் சீர்திருத்தங்களாக இருந்தன. இது மட்டுமன்றி நிலமற்றவர்களுக்கு உபரி நிலங்களை வழங்கவும் அரசு விரும்பியது. எனவே இதன் தொடர்பாக மாநில அரசுகள் சட்டங்களை இயற்ற முன் வந்தன. உதாரணத்திற்கு சுட்டிக் காட்ட வேண்டுமென்றால், 1961-ஆம் ஆண்டின் தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு நிர்ணயச்) சட்டத்தின் முகப்புரையில், இச்சட்டம் அரசியலமைப்புச் சட்டத்தின் 39வது ஷரத்தில் கூறப்பட்டுள்ள அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கையை செயல்படுத்த இயற்றப்படுகிறது எனக் கூறப்பட்டுள்ளது. உச்ச வரம்பை நிர்ணயம் செய்தலும், உபரி நிலங்களை பெறுதலும், கிராமப்புற மக்களுக்கு அவற்றைப் பகிர்ந்தளித்தலும் முதன்மையான நோக்கங்களாக இச்சட்டம் கொண்டுள்ளது.

வேளாண் பொருளாதாரத்தை முறைப்படுத்தல் மட்டுமன்றி, நகர்ப்புறங்களில் வீட்டு வசதியை ஏற்படுத்துதல், குடிசைப் பகுதிகளை அகற்றுதல், வாடகையைக் கட்டுப்படுத்தல், நகர்ப்புற நில உரிமையின் மீது உச்சவரம்பு விதித்தல் ஆகியவையும் அரசின் கவனத்தை ஈர்த்தன. அந்த வகையில் நியாய வாடகையை நிர்ணயித்தல், வீடுகளை அரசு தன் வசம் எடுத்தல், முறையற்ற வெளி

யேற்றத்திலிருந்து வாடகைதாரரை பாதுகாத்தல் ஆகியவற்றிற்காக 1960-ஆம் ஆண்டில் தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டம் இயற்றப்பட்டிருப்பது இதற்கு ஒரு கண்கூடான எடுத்துக்காட்டாகும்.

இதைத்தவிர தனியார் நிறுவனங்களை ஒழுங்குபடுத்தல், தனியார் வர்த்தக நிறுவனங்களை தேசியமயமாக்குதல் ஆகியவற்றையும் மேற்கொள்ள அரசுகள் திட்டமிட்டன. சமதர்ம கட்டமைப்புக் கொண்ட சமூகத்தை அமைத்திட தனி மனிதரின் சொத்திற்கான உரிமையைப் பல்வேறு வழிகளிலும் ஒழுங்குபடுத்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளத் தொடங்கியது. இம்முயற்சிகளின் உச்சகட்டம், அடிப்படை உரிமையாக இருந்த சொத்திற்கான உரிமையை நீக்கி அதனை சாதாரண சட்ட உரிமையாக்குவதில் முடிந்தது. எனவே 1978-ஆம் ஆண்டில் 44-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் வாயிலாக ஷரத்து 31 நீக்கப்பட்டது. ஷரத்து 300-A புதிதாகச் சேர்க்கப்பட்டது.

நிலச் சீர்திருத்தங்களின் முக்கிய அம்சம், போதுமான அளவிற்கு இழப்பீடு வழங்குவதாகும். பறிமுதல் செய்யப்பட்ட நிலத்தின் மதிப்பிற்கு ஏற்ப இழப்பீடு வழங்க அரசினால் இயலவில்லை. விருப்பமும் கொள்ளவில்லை. சொற்பமான அளவிற்கே இழப்பீடு வழங்க அரசு முன் வந்தது. எனவே பாதிக்கப்பட்டவர்கள் நிலச் சீர்திருத்தச் சட்டங்களை எதிர்த்து வழக்குத் தொடுத்தனர். நில மதிப்பிற்கு ஏற்ப இழப்பீடு வழங்கக் கோரினர். இதில் நீதிமன்றங்கள் நியாயமான, போதுமான இழப்பீடு வழங்குவதை ஆதரித்தன. எனவே இதன் விளைவாக இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் நிறைய சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. ஷரத்து 31-இல் பல்வேறு திருத்தங்கள் படிப்படியாகச் செய்யப்பட்டன.

ஷரத்து 300-A என்ன கூறுகிறது?

ஷரத்து 300-A, "சட்டத்தின் அதிகாரமின்றி யாருடைய சொத்தையும் பறிமுதல் செய்தல் கூடாது" என்று விதிக்கிறது. எனவே ஒரு நபரின் சொத்தை பறிமுதல் செய்ய வேண்டுமெனில் அதற்கான ஒரு சட்டம், சட்டமன்றத்தால் இயற்றப்பட்டிருக்க வேண்டும். அச்சட்டம் செல்லத்தக்க ஒன்றாக இருக்க வேண்டும். மேலும் அச்சொத்து பறிக்கப்படுவதன் நோக்கம் என்னவென்பதையும், அச்சொத்து பறிக்கப்படுவதால் பாதிக்கப்பட்டவருக்கு

இழப்பீடு அளிக்கப்படுவது குறித்தும் அச்சட்டத்தில் கூறப் பட்டிருக்க வேண்டும். இவ்வாறு சொத்து பறிமுதல் செய்வது சட்டப்படி, சட்டத்தின் அனுமதியோடு செய்யப்பட வேண்டும். இவ்வாறு இல்லாவிட்டால், சொத்து பறிமுதல் செல்லாது போய் விடக் கூடும்.

சில வழக்குகள்:

R.Gandhi v. Union of India[1]

இவ்வழக்கின் சங்கதிகள்படி திருமதி. இந்திராகாந்தி சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து நடந்த வன்முறையில் சிக்கிய இனத்தவர்களின் சொத்துக்களுக்கு சேதமுண்டாக்கப்பட்டன. இது சட்டத்தின் அனுமதியின்றி சொத்தினைப் பறித்ததாகும் என்றும், பாதிக்கப்பட்டவர்களுக்கு மாநில அரசு இழப்பீடு கொடுக்க வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

Bishambhar Dayal Chandra Mohan v. State of U.P.[2]

இவ்வழக்கில் வெறுமனே நிர்வாகத்துறையின் ஒரு உத்தரவால் ஒருவனது சொத்து பறிக்கப்படக் கூடாது; அங்கு சட்டமியற்றுத் துறையால் இயற்றப்பட்ட சட்டம் தேவை எனப் பட்டது.

Menaka Gandhi v. Union of India[3]

ஒரு தனியார் சொத்தானது பொது நோக்கத்திற்கு (Public Purpose) இல்லாமலும், நியாயமான இழப்பீட்டைக் கொடுக்காம லும் பறிக்கப்பட்டால், அதனை ஷரத்து 300-A -இன் கீழ் வினவ முடியும் எனக் கூறப்பட்டது. ஆகவே சொத்துப் பறிமுதலுக்காக இயற்றப்பட்ட சட்டமும் அதற்கான நடைமுறைகளும் நியாயமாக வும், நீதியின்பாற்பட்டதாகவும் இருக்க வேண்டும் என மேற்படி வழக்கில் வலியுறுத்தப்பட்டது.

சொத்துரிமை பற்றி தற்போதுள்ள சட்ட வகைமுறைகள்:

இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் சொத்துரிமை பற்றி தற்போது பேசும் ஷரத்துகள் 31-A,31-B, 31-C மற்றும் 300-A ஆகும்.

1. AIR 1989 Mad. 205
2. AIR 1982 SC 39
3. AIR 1985 SC 597

ஷரத்து 300-A குறித்து நாம் ஏற்கனவே மேலே சென்றவாறு கண்டுள்ளோம்.

ஷரத்து 31-A-ஆனது, எந்தவொரு நிலத்தையும் (எஸ்டேட்) எடுத்துக் கொள்வதற்காக அல்லது அதற்கான உரிமையை நீக்குவதற்காக அல்லது மாற்றியமைப்பதற்காக இயற்றப்படும் சட்டம், அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகள் 14 அல்லது 19 ஆகிய வற்றில் வழங்கப்பட்டிருக்கும் உரிமையை நீக்குவதாக அல்லது அதனுடன் முரண்படுவதாக அல்லது அதனைச் சுருக்குவதாக இருப்பதாக காரணம் கூறி அது இல்லாநிலையதாகும் (Void) எனக் கருதப்படக் கூடாது, என்று கூறுகிறது.

ஷரத்து 31-B-ஆனது, ஒன்பதாவது அட்டவணையில் குறிப் பிடப்படும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் அரசியலமைப்பு சட்டத்தின் III-ஆவது பகுதியில் வழங்கப்பட்டிருக்கும் உரிமை களுடன் முரண்படுகின்றன என்ற காரணத்தினால் இல்லாநிலை யது எனக் கருதப்படக் கூடாது என்று கூறுகிறது.

ஷரத்து 31-C-ஆனது, பாராளுமன்றத்திற்கும், மாநில சட்ட மன்றங்களுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 39(b) மற்றும் (c)-இல் குறிப்பிடப்பட்ட வழிகாட்டு நெறிகளை உத்தர வாதம் செய்வதற்கான சட்டங்களை இயற்ற அதிகாரமளிக்கிறது. மேலும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகள் 14 மற்றும் 19 ஆகியவற்றை அவை மீறுகின்றன என எவரும் வழக்கிடக் கூடாது என்றும் கூறுகிறது.

முடிவுரை:

"சொத்துரிமையை அடிப்படை உரிமை என்ற தகுநிலை யில் இருந்து நீக்கிவிட்டது, அரசியலமைப்பில் கூறப்பட்டுள்ள மற்ற உரிமைகளையும் அழிப்பதாக உள்ளது," என அறிஞர் எச்.எம்.சீர்வாய் கூறுகிறார்.

66. Eminent Domine - Write short notes. (சொத்தெடுப்பு முறை - குறுகிய விடை தருக.)

பொதுப் பயனுக்காகத் தனியார் சொத்தை எடுப்பதற்கு எல்லா அரசுகளும் இறையாண்மை கொண்டுள்ளன. இவ் வதிகாரம் அரசு சொத்தெடுப்பு அதிகாரம் என்றழைக்கப்படுகிறது. இது அரசின் தேவைக்காக எழும் வரிவிதிப்பு அதிகாரம் போன்றது.

சொத்தெடுப்பு உரிமை என்பது நியாயமான மற்றும் சரியான இழப்பீடு வழங்கி அச்சொத்திற்கு உரிமை மற்றும் உடைமை யாளரின் இசைவின்றி பொதுப் பயனுக்காகச் அதனை எடுக்கும் அரசின் இறையாண்மை அதிகாரமாகும். இவ்வாறு ஒரு சொத்து எடுப்பது, நியாயமான இழப்பீடு கொடுப்பதற்கு உட்பட்டதாகும். இந்தியஅரசியலமைப்புச் சட்டத்தின் பட்டியலில் உள்ள நுழைவு 42 (எண்ட்ரி), சொத்தினை எடுத்தல் மற்றும் கொடுக்கக் கோருதல் பற்றிக் கூறுகிறது.

இந்தியாவில் நியாயமான மற்றும் சரியான இழப்பீட்டின் பேரில் சொத்து எடுப்பது என்பது ஒரு வழக்கிடு பொருளாகவே இருந்து வந்துள்ளது. எப்போதுமே நியாயமான இழப்பீடு வழங்குவற்கு ஆதரவாகவே நீதிமன்றங்கள் செயல்பட்டு வந்துள்ளன. வழங்கப்படும் இழப்பீடு நியாயமானதாக அல்லது சரியானதாக இல்லையென்றால், அதற்காக வழக்கிடும் உரிமை சொத்து எடுக்கப்படுபவருக்கு எப்போதுமே உண்டு.

(ஒ) அரசியலமைப்புரீதியான தீர்வழிகளுக்கு உரிமை

(முக்கியத்துவம் – நீதிப்பேராணை அதிகாரவரம்பு – வரையறை – தன்மை – அளாவுகை மற்றும் பணிகள் – பல்வேறு வகையான நீதிப்பேராணைகள் – உச்ச நீதிமன்றம் மற்றும் ஷரத்து 226 –இன் கீழ் உயர் நீதிமன்றம் ஆகியவற்றின் அதிகாரவரம்பு – முன்தீர்ப்புத் தடையின் பொருத்தம்)

(ஷரத்துகள் 32 முதல் 35 வரை மற்றும் ஷரத்து 226)

[I] Right to Constitutional Remedies

(Significance - Writ jurisdiction - Definition, nature, scope and functions - Various Writs - Writ Jurisdiction of Supreme Court and High Court (Art. 226) - Application of *Res judicata*)

(Articles 32 to 35 and Article 226)

67. The declaration of fundamental rights by the Constitution of India would become meaningless if the Articles 32 and 226 been repealed. Examine. (ஷரத்து 32 மற்றும் 226ஐ நீக்கிவிட்டால் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் அளிக்கப் பட்டுள்ள அடிப்படை உரிமைகள் பொருளற்றதாகிவிடும் எனபதை திறனாய்வு செய்க.)

(அல்லது)

Discuss the nature and scope of the right to judicial remedies under Art. 32 of the Constitution. (அரசியல் சட்டப் பிரிவு 32-இன் கீழ் அளிக்கப்பட்டுள்ள நீதிமன்ற தீர்வு உரிமைகள் குறித்து விளக்குக.)

முனைவர் அம்பேத்கர் அவர்களின் கூற்று:

"இந்த அரசியலமைப்பில் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என ஏதாவது ஒரு குறிப்பிட்ட ஷரத்தின் பெயரைக் கூறும்படி என்னிடம் கேட்கப்பட்டால், இச்ஷரத்து இல்லாமல் இருப்பின் அரசியலமைப்பே செல்லாத ஒன்றாகக்கூடிய ஷரத்தினைத் தவிர வேறு எந்த ஷரத்தையும் நான் குறிப்பிட மாட்டேன். இது அரசியலமைப்பின் இருதயம் ஆகும்"என **முனைவர் அம்பேத்கர்** ஷரத்து 32-க்கு புகழாரம் சூட்டுவதிலிருந்து அச்ஷரத்தின் முக்கியத்துவம் புலனாகும்.

ஷரத்து 32 மற்றும் 226-இன் முக்கியத்துவம் (Significance) :

அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதியில் பல அடிப்படை உரிமைகள் கொடுக்கப்பட்டிருப்பினும் அவற்றை முழுமையாக அனுபவிக்கவும், உரிமை மீறலை தடுக்கவும், உரிமையை நிலைநாட்டவும் ஷரத்துகள் 32 மற்றும் 226 வகை செய்கிறது. எனவே இவ்விரண்டு ஷரத்துகளும் நீக்கப்படின் அவ்வுரிமைகள் பொருளற்றதாகிவிடும் என்பது மெய்யே. ஒரு குடிமகனின் அடிப்படை உரிமை அரசால் மீறப்படின், அவர் நேராக உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லலாம் என்பதே ஷரத்து 32-இன்படி ஒரு அடிப்படை உரிமையாகும். மேலும் அவர் ஷரத்து 226-இன்படி உயர் நீதிமன்றத்திலும் மனுச் செய்து கொள்ளலாம். இவ்வாறு அவர் ஷரத்து 32-இன்படியோ அல்லது ஷரத்து 226-இன்படியோ மனுச் செய்யும் பொழுது உச்ச நீதிமன்றமோ அல்லது உயர் நீதிமன்றமோ வழக்கின் சூழலை ஆராய்ந்து, அடிப்படை உரிமை மீறப்பட்டதா என்பதை அறிந்து, அவ்வாறு மீறப்பட்டிருப்பின் அதை நிலைநிறுத்த நீதிப்பேராணைகள் பிறப்பிக்கும்.

உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பு (Writ jurisdiction of Supreme Court) :

இந்திய அரசியலமைப்பின் 32-வது ஷரத்து, உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பினைப் பற்றி பின்வருமாறு கூறுகிறது.

1. நீதிப்பேராணை வேண்டும் மனுவை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல், ஒரு நபர் நேரடியாக உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம்.

2. அரசியலமைப்பின் மூன்றாவது பகுதியில் உத்திரவாத மளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்படும் பொழுது, உச்ச நீதிமன்றம் நீதிப்பேராணை வெளியிட அதிகாரம் படைத்துள்ளது. ஆகவே உச்ச நீதிமன்றத்தினை **'அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன்'** (Guardian of fundamental rights) என்று சிறப்பாக அழைக்கின்றோம்.

3. மீறப்பட்ட அடிப்படை உரிமைகளை செயல்படுத்துவதற்கு ஏவுரை (Direction) அல்லது ஆணை (Order) அல்லது நீதிப் பேராணை (Writ) பிறப்பிக்க உச்ச நீதிமன்றம் அதிகாரம் பெற்றுள்ளது.

4. ஷரத்து 32ஐ ஒரு போதும் செயலிழக்கச் செய்யவோ அல்லது நிறுத்தி வைக்கவோ முடியாது. (ஆனால் ஒரு அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால் நிறுத்தி வைக்க முடியும்). சுருங்கக் கூறின், உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பானது நிலையானதாகும்.

மேற்கண்ட அதிகாரவரம்பினை ஷரத்து 32 எவ்வாறு கூறுகிறது?

அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதியில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை (அடிப்படை உரிமைகள்) செயல்படுத்த தக்க நடவடிக்கைகள் மூலம் (by appropriate proceedings) உச்ச நீதிமன்றத்திற்கு செல்லும் உரிமைக்கு ஷரத்து 32(1) உத்திரவாதம் (guaranteed) அளிக்கிறது.

அவ்வுரிமைகளை வலியுறுத்த உச்ச நீதிமன்றம் தக்க ஏவுரைகள் அல்லது ஆணைகள் அல்லது ஆட்கொணர்விக்கும், செயலுறுத்தும், தடையுறுத்தும், தகுதிமுறைவினவும் மற்றும் நேரி முறையுறுத்தும் தன்மையிலான நீதிப்பேராணைகள் பிறப்பிக்க உச்ச நீதிமன்றத்திற்கு ஷரத்து 32(2) அதிகாரமளிக்கிறது.

ஷரத்து 32(2)-இன்படி, உச்ச நீதிமன்றத்திற்கு உள்ள எல்லா அல்லது எந்த அதிகாரத்தையாவது மற்ற எந்த நீதிமன்றங்களும் தங்களுடைய அதிகாரவரம்பின் வட்டார எல்லைக்குட்பட்டு செயல்பட, பாராளுமன்றம், சட்டத்தின் மூலமாக அதிகாரமளிக்

கலாம் என ஷரத்து 32(3) கூறுகிறது. இந்த ஷரத்து உச்ச நீதிமன்றம் தனது நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரத்தை மற்ற கீழ்நிலை நீதிமன்றங்களுக்கு அளிக்க வழிவகுக்கிறது.

ஷரத்து 32-ஆல் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள உரிமை யானது அரசியலமைப்பில் கூறப்பட்ட வழிகளில் தவிர மற்ற விதத்தில் மீறப்படக் கூடாது என ஷரத்து 32(4) கூறுகிறது.

ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டு அம்மீறலைத் தடுக்க மாற்று தீர்வழி இருப்பினும் அவர் ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடலாம். ஷரத்து 32-இன்படி, நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டி உச்ச நீதிமன்றத்திற்கு செல்வதே ஒரு அடிப்படை உரிமையாகும் என **K.K.Kochuni v. State of Madras**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை வெளியிடும் அதிகாரவரம்பு:

ஒருவரின் அடிப்படை உரிமைகள் மீறப்படின் உச்ச நீதிமன்றம் எவ்வகையான நீதிப்பேராணைகள் அல்லது ஆணைகளை பிறப்பிக்குமோ அவற்றை ஷரத்து 226-இன்படி உயர் நீதிமன்றமும் பிறப்பிக்கலாம். எனினும் உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரமானது உச்ச நீதிமன்றத்தின் அதிகாரத்தை விட பரந்தது என ஷரத்து 226 கூறுகிறது. ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டால்தான் ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கும். ஆனால் அடிப்படை உரிமை யின்றி சாதாரண உரிமைகள் மீறப்பட்டாலும் உயர் நீதிமன்றம் அவ்வாணை பிறப்பிக்கும்.

முடிவுரை:

அடிப்படை உரிமைகள் உடல் என்றால் ஷரத்து 32 மற்றும் 226 உயிர் ஆகும். எனவே அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட 32 மற்றும் 226-வது ஷரத்து அவசியமாகும்.

68. Explain the wirt jurisdiction of High Court and compare it with the jurisdiction of Supreme Court (உயர் நீதிமன்றங்களுடைய நீதிப்பேராணை அதிகாரவரம்பினை விளக்கி, அதை உச்ச நீதிமன்றத்தின் அதிகாரவரம்போடு ஒப்பிடுக.)

1. AIR 1960 SC 1080

அரசியலமைப்பின் மூன்றாவது பகுதி இந்தியக் குடிமக்களுக்கு 'அடிப்படை உரிமைகளை' அளிக்கிறது. இவ்வுரிமைகள் மத்திய அல்லது மாநில சட்டமன்றங்களாலோ அல்லது ஆட்சி முறைச் செயல்களாலோ பாதிப்பிற்குள்ளாக்கப்பட்டால், பாதிப்படைந்த குடிமகன், அவ்வுரிமைகளை வலியுறுத்திச் செயல்படுத்த ஷரத்து 226-இன் வாயிலாக உயர் நீதிமன்றத்தை நாடலாம். உயர் நீதிமன்றம் தனது அய்ந்து வகை நீதிப்பேராணைகளின் வாயிலாக ஷரத்து 226-இன்படி தீர்வழிகளை வழங்கும்.

1. ஆட்கொணர்விக்கும் நீதிப்போரணை (Writ of Habeas Corpus) : சட்டத்திற்கு புறம்பான முறையில் சிறைப்பிடித்து வைக்கப்பட்டவரை விடுவிக்கச் செய்ய இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

2. செயலுறுத்தும் நீதிப்போரணை (Writ of Mandamus): பொதுக் கடமையான ஒரு செயலை ஓர் அரசு அலுவலர் அல்லது ஒரு அரசு அமைப்பு அல்லது கீழமை நீதிமன்றம் செய்யத் தவறினால் அக்கடமையைச் செய்ய இவ்வாணை இடப்படுகிறது.

3. தடையுறுத்தும் நீதிப்போரணை (Writ of Prohibition): கீழமை நீதிமன்றமோ, அரசு அலுவலரோ தம் அதிகாரவரம்பை மீறி அல்லது சட்ட முரணாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தால், அதை மேற்கொண்டு நடத்தாமல் தடை செய்ய, இவ்வாணை பிறப்பிக்கப்படுகிறது.

4. நெறிமுறையுறுத்தும் நீதிப்போரணை (Writ of Certiorari): நீதிமுறை சார்ந்த அலுவல்களைச் செய்யும் தீர்ப்பாயங்கள், அலுவலர்கள் தம் அதிகாரவரம்பை மீறிச் செயல்பட்டாலோ அறமுறைக்கு மாறாக நடவடிக்கை எடுத்தாலோ அவற்றை மறு ஆய்வு செய்து நீக்கம் செய்வதற்கென அவை சம்பந்தமான ஆவணங்களைத் தமக்கு அனுப்புமாறு நீதிமன்றம் ஆணையிடுவது தான் நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை ஆகும்.

5. தகுதிமுறை வினவும் நீதிப்போரணை (Writ of Quo warranto): பொது அதிகாரப்பதவியில் உள்ளவரை அவர் எத் தகுதியில் அப்பதவி வகிக்கிறார் என்று வினவி பிறப்பிக்கப்படும் ஆணைதான் தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை ஆகும்.

அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கு மட்டுமல்லாமல் இதர உரிமைகள் மீறப்படும் பொழுதும் இந்நீதிப்பேராணைகள்

பிறப்பிக்கப்படும். உயர் நீதிமன்றங்களின் நீதிப்பேராணைகள் பிறப்பிக்கும் அதிகாரவரம்பில் உச்ச நீதிமன்றத்தின் நீதிப் பேராணை வெளியிடும் அதிகாரவரம்பு எவ்விதத்திலும் தலையிடாது.

அளாவுகை:

நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கும் அதிகாரம் உயர் நீதிமன்றத்திற்கு தன்விருப்புரிமை அதிகாரமாக (discretionary power) அளிக்கப்பட்டு உள்ளது. தன்விருப்புரிமை அதிகாரமாக இருப்பினும், அது நீதிமுறை வழுவாத முறையிலும், சட்டக் கோட்பாடுகளுக்கு ஏற்புடைய வகையிலும், உயர் நீதிமன்றத்தால் பயன்படுத்தப்பட வேண்டும். அடிப்படை உரிமைகள் தொடர்பான வழக்குகளில் உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரம், தன் விருப்புரிமை அதிகாரமாக கருதப்பட முடியாது. (உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை அதிகாரவரம்பு தன்விருப்புரிமைக்குட்பட்டதல்ல.)

போதுமான மாற்று வகை தீர்வழி (Adequate alternative remedy) இருக்கும் பொழுது, உயர் நீதிமன்றம் ஷரத்து 226-இன் கீழ் வழக்கினை ஏற்றுக் கொள்ள மறுக்கலாம். ஆனால் இது எல்லா வழக்குகளுக்கும் பொருந்தும் என்று கூறுவதற்கில்லை. அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக கூறப்படும் வழக்குகளுக்கும், சட்டப்படி நடவடிக்கைகள் அமையவில்லை என்று கூறப்படும் வழக்குகளுக்கும் பொதுவாக இது பொருந்தாது. மேலும் இது நெறிமுறையுறுத்தும் (Certiorari) மற்றும் தடையுறுத்தும் நீதிப் பேராணைகளை (Prohibition) பிறப்பிக்கக் கோரும் வழக்குகளுக்கும் பொருந்தாது. இத்தகைய வழக்குகளில் போதுமான மாற்று வகையான தீர்வழிகள் இருப்பினும் உயர் நீதிமன்றம் ஷரத்து 226-இன் கீழ் வழக்கினைப் பொதுவாக ஏற்கும். ஏனென்றால் மேற்கண்டவாறு வழக்கினை ஏற்றுக் கொள்ள மறுப்பது, தன்விருப்புரிமை அதிகாரத்தின்படி அமைந்ததாகுமே தவிர, சட்ட விதியின்படி அமைந்ததல்ல.

உரிமை பாதிக்கப்பட்ட பின் அதிக காலம் கடந்து ஷரத்து 226-இன் கீழ் வழக்கு தொடரப்பட்டால் உயர் நீதிமன்றம் அவ் வழக்கினை ஏற்று நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்க மறுக்கலாம். **'காலம் கடத்தல் நேர்மை நடப்பொழிக்கும்' (Delay defeats equity)** என்பது பொது விதியாகும். எனினும் இது பற்றிச் சிறப்புச்

சட்டவிதி ஒன்றும் கிடையாது. எனவே உயர் நீதிமன்றம் தன்விருப்புரிமை அதிகாரத்தைப் பயன்படுத்தி காலம் தாழ்ந்து வரும் வழக்குகளை ஏற்கலாம் அல்லது மறுக்கலாம்.

நீதிப்பேராணை கோரும் வழக்கில் சட்டப்பிரச்சனை மற்றும் பொருண்மைப் பிரச்சனையை தீர்மானிக்க உயர் நீதிமன்றத்திற்கு அதிகாரம் இருந்தாலும், வழக்குகளில் பொருண்மைகளை சான்றுகள் மூலமாகத்தான் மெய்ப்பிக்க முடியும் என்ற நிலை எழுமானால் வழக்கினை ஷரத்து 226-இன் கீழ் ஏற்று தீர்வழி தர உயர் நீதிமன்றம் மறுக்கலாம்.

வழக்கில் தீர்வழி கோருபவரது நடத்தை தீர்வழி நடத்தை தீர்வழி கொடுக்கத் தகுதியற்ற முறையில் இருக்குமானால் உயர் நீதிமன்றம் ஷரத்து 226-இன் கீழ் நீதிப்பேராணை பிறப்பிக்க மறுக்கும்.

நீதிப்பேராணைகள் கொடுக்கப்படுவதால் எவ்வித பயனும் விளையாது என்று தோன்றும் வழக்குகளில் நீதிப் பேராணைகளைப் பிறப்பிக்க உயர் நீதிமன்றம் மறுக்கலாம்.

நீதிப்பேராணை குறித்த வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றம், ஷரத்து 226-இன்படி அவ்வழக்கை விசாரித்து தீர்மானித்துவிட்டால், அதை மீண்டும் ஷரத்து 32-இன் கீழ் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடாக கொண்டு செல்ல முடியாது. இது **முன்தீர்ப்புத் தடை (Res judicata)** எனும் சட்டவிதியின்படி செயலுறுத்தப் படுகிறது. ஆனால் **Gulam Sarvar v. Union of India**[1] என்ற வழக்கில் ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணையைப் பொறுத்த வரையில் முன்தீர்ப்புத் தடை விதி பயனாகாது என்றும், அவ் வழக்கை மேல்முறையீடாக உச்ச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லலாம் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

ஷரத்து 226-இன்படி உயர் நீதிமன்றத்திற்கு உள்ள நீதிப்பேராணை அதிகாரத்திற்கும், ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றத்திற்கு உள்ள நீதிப்பேராணை அதிகாரத்திற்கும் உள்ள ஒப்புமை:

1. ஷரத்து 226-இன்படி உயர் நீதிமன்றம் நீதிப்பேராணையை பிறப்பிக்கும். ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றம் நீதிப் பேராணையைப் பிறப்பிக்கும்.

1. AIR 1967 SC 1335

2. உயர் நீதிமன்றத்தில் வழக்கிடுவது அடிப்படை உரிமை அல்ல; ஒரு சாதாரண உரிமையேயாகும். ஆனால் நீதிப்பேராணை வேண்டி உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடச் செல்வதே ஒரு அடிப் படை உரிமையாகும்.

3. ஷரத்து 226-இல் தீர்வழி கேட்கும் உரிமையை நெருக்கடி நிலைமை பிரகடனப்படுத்தப்படும் பொழுது நிறுத்தி வைக்கப்பட முடியாது. ஆனால் ஷரத்து 32-இல் நிறுத்தி வைக்கப்படும்.

4. அடிப்படை உரிமை மீறப்பட்டதற்கு மாற்றுத் தீர்வழி இருப்பின், ஒரு உயர் நீதிமன்றம் நீதிப்பேராணையை பிறப்பிக்காது. அடிப்படை உரிமை மீறப்பட்டதற்கு மாற்றுத் தீர்வழி இருப்பினும், உச்ச நீதிமன்றம் நீதிப்பேராணையைப் பிறப்பிக்கும். ஏனெனில் இது ஒரு அடிப்படை உரிமையாகும்.

5. அடிப்படை உரிமையைத் தவிர சாதாரண உரிமைகள் மீறப்பட்டாலும் உயர் நீதிமன்றம் நீதிப்பேராணையை பிறப்பிக் கும். ஆனால் உச்ச நீதிமன்றமோ அடிப்படை உரிமைகள் மீறப் படும் பொழுதுதான் நீதிப்பேராணைகளைப் பிறப்பிக்கும்.

69. Explain the relation between the Supreme Court jurisdiction under Article 32 and High Court jurisdiction under Article 226. (ஷரத்து 32ன் கீழ் உச்ச நீதிமன்றத்தினுடைய அதிகாரவரம்பிற்கும், ஷரத்து 226ன் கீழ் உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்கும் இடையே உள்ள தொடர்பினை விளக்குக.)

(முந்தைய இரண்டு வினாக்களின் விடைகளையும் சேர்த்து எழுதுக.)

70. The right to move the Supreme Court by appropriate proceedings for the enforcement of rights conferred by this part is guaranteed? Discuss. Do you have a similar right to move a High Court? If not, what is the jurisdiction of the High Court on Fundamental Rights? (இப்பகுதியில் வழங்கப் பட்டுள்ள உரிமைகளை செயல்படுத்துவதற்கு தகுந்த நடவடிக்கைகள் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகுவதற்கான உரிமைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. விவாதி. உயர் நீதிமன்றத்தை அணுகுவதற்கு இதேபோல் உரிமை உங்களுக்கு உள்ளதா? இல்லையென்றால் அடிப்படை உரிமைகள் மீது உயர் நீதிமன்றத்தின் அதிகாரவரம்பு என்ன?)

(அல்லது)

"The right to enforce a fundamental right is itself a fundamental right under the Indian Constitution" - Elucidate. ("இந்திய அரசியலமைப்பின் கீழ் அடிப்படை உரிமையை செயல்படுத்துவதே ஒரு அடிப்படை உரிமையாக உள்ளது" - விளக்குக.)

இந்திய அரசியலமைப்பின் மூன்றாவது பகுதியானது இந்தியக் குடிமக்களுக்கு பல்வேறு வகையான அடிப்படை உரிமைகளை அளித்துள்ளது. இவ்வுரிமைகள் அரசால் மீறப்பட்டால், பாதிக்கப்பட்ட நபருக்கு என்ன தீர்வழி கிடைக்கின்றது?

பாதிக்கப்பட்ட நபர் நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரி, ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றத்தையோ அல்லது ஷரத்து 226-இன்படி உயர் நீதிமன்றத்தையோ அணுகலாம். மேற்படி நீதிமன்றங்களும் அடிப்படை உரிமையை செயல்படுத்த, நீதிப் பேராணைகளைப் பிறப்பிக்கலாம்.

இவற்றில் ஷரத்து 32-இன்படி, தீர்வழி கோரி உச்ச நீதிமன்றத்தை அணுகுவதே ஒரு அடிப்படை உரிமையாகும். அதாவது, அடிப்படை உரிமையை செயல்படுத்தும்படி உச்ச நீதிமன்றத்தை கோருவதே ஒரு அடிப்படை உரிமையாகும். இதைத்தான் ஷரத்து 32(1)-ஆனது, அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதியில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளை (அடிப்படை உரிமைகளை) செயல்படுத்துவதற்கு தக்க நடவடிக்கைகள் மூலம் உச்ச நீதிமன்றத்தை அணுகுவதற்கான உரிமைக்கு உத்திரவாதமளிக்கப்பட்டுள்ளது என்று கூறுகிறது. (The right to move the Supreme Court by appropriate proceedings for the enforcement of this rights conferred by this Part[1] is guaranteed).

இது போன்ற உரிமை உயர் நீதிமன்றத்தை அணுகுவதற்கு உள்ளதா?

இல்லை என்றுதான் கூற வேண்டும். அடிப்படை உரிமைகளை செயற்படுத்தக் கோரி உயர் நீதிமன்றத்தை அணுகுவதே ஒரு அடிப்படை உரிமையாகாது. ஏனெனில் இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் குறித்து 12 முதல் 35 வரையிலான ஷரத்துகள் விளக்குகின்றன. இவற்றில் ஷரத்து 32,

1. அடிப்படை உரிமைகளை விளக்கும் மூன்றாவது பகுதி

உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகார வரம்பைக் கூறுகிறது. எனவே நீதிப்பேராணைகளை பிறப்பிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்திற்கு செல்வதே ஒரு அடிப்படை உரிமை யாக விளங்குகிறது. ஆனால் மாநில உயர் நீதிமன்றங்களின் நீதிப் பேராணை பிறப்பிக்கும் அதிகாரவரம்பு குறித்து 'மாநிலங்கள்' எனும் பகுதியின் கீழ் வரும் 226-வது ஷரத்து குறிப்பிடுகிறது. எனவே அடிப்படை உரிமைகளை செயல்படுத்த ஷரத்து 226-இன்படி நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரி உயர் நீதிமன்றத்திற்குச் செல்வதற்கு, பாதிக்கப்பட்ட குடிமகனுக்கு உள்ள உரிமை அடிப் படை உரிமையாகாது; ஒரு சாதாரண உரிமையேயாகும். இதனால் தான், மாநில உயர் நீதிமன்றங்கள், நீதிப்பேராணைகளைப் பிறப் பிப்பதில் சில வரம்புமுறைகளை வகுத்துக் கொண்டுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரவரம்பு உயர் நீதிமன்றத்தின் அத்தகு அதிகாரவரம்பை விட எந்த அளவிற்குப் பரந்தது (wider) என்பதற்கு பின்வரும் விவரங்களே சான்றாகும்.

1. ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்பட்டு, அம்மீறலைத் தடுக்க மாற்றுத் தீர்வழி இருப்பினும், அவர் ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடலாம். ஆனால் உயர் நீதிமன்றங் களைப் பொறுத்தவரை அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதற்கு வேறு மாற்றுத் தீர்வழி ஏதேனும் இருப்பின், அது ஷரத்து 226-இன் கீழ் தீர்வழி வழங்காது.

2. அடிப்படை உரிமை மீறப்பட்டதற்காக ஒருவர் ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றத்திற்கு தனது வழக்கினை கொண்டு செல்வதே, ஒரு அடிப்படை உரிமையானதால், அதனைத் தடுக்க இயலாது. **(K.K.Kochuni v. State of Madras[1]).**

3. உயர் நீதிமன்றங்களின் நீதிப்பேராணை பிறப்பிக்கும் அதிகாரம் **தன்விருப்புரிமையின் (Discretionary power)** பாற் பட்டதாகும். எனவே சில தருணங்களில் ஷரத்து 226-இன்படி தீர்வழி வழங்காமலும் இருக்கலாம். ஆனால் உச்ச நீதிமன்றத்தின் நீதிப்பேராணை அதிகாரம் தன்விருப்புரிமையின்பாற்பட்டதல்ல. ஷரத்து 32-இன் கீழ் தீர்வழி வேண்டி யார் தன்னை அணுகினாலும், அவர்களுக்கு தக்க பதில் கூறியே தீர வேண்டும். ஏனெனில், மேற் கண்டவாறு உச்ச நீதிமன்றத்தில் அடிப்படை உரிமையை செயல் படுத்த கோருவதே ஒரு அடிப்படை உரிமையாகும்.

1. AIR 1960 SC 1080

4. உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமையை செயல் படுத்த கோரி வழக்கிடுவது ஒரு சாதாரண உரிமையாகும். உச்ச நீதிமன்றத்தைப் போல அடிப்படை உரிமையல்ல. இதனால்தான் உச்ச நீதிமன்றத்தை **'அடிப்படை உரிமைகளின் பாதுகாவலன்'** என சிறப்பாக அழைக்கின்றோம்.

அடிப்படை உரிமையை செயல்படுத்துவதற்காக உச்ச நீதி மன்றம் அய்ந்து வகையான நீதிப்பேராணைகளில் தக்கதொன்றை பிறப்பிக்கின்றது.

71. (a) Explain the writ jurisdiction of the Supreme Court under Article 32 of the Constitution.

(b) Examine how the doctrine of res judicata is applicable in relation to the writ jurisdiction of the Supreme Court.

(அ) அரசியலமைப்பின் ஷரத்து 32-இன் கீழ் உச்ச நீதி மன்றத்தின் நீதிப்பேராணை அதிகாரவரம்பை விளக்குக.

(ஆ) உயர் நீதிமன்றத்தின் நீதிப்பேராணை அதிகாரங்கள் குறித்து, முன்தீர்ப்புத் தடை கோட்பாடு எப்படி பொருந்துகிறது என்பதை ஆராய்க.

(அ) வினா எண். 67-க்கான விடையை எழுதவும்.

(ஆ) அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்டால், இந்தியக் குடிமகன் ஒருவர் தீர்வழி பெற வேண்டி ஷரத்து 226-இன்படி உயர் நீதிமன்றத்திற்கு செல்லலாம். அதே போன்று ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றத்தையும் வேண்டலாம்.

ஆனால் நீதிப்பேராணை குறித்த வழக்கொன்றை உயர் நீதிமன்றம் ஷரத்து 226-இன்படி விசாரித்து தீர்மானித்துவிட்டால், அது மீண்டும் உச்ச நீதிமன்றத்திற்கு ஷரத்து 32-இன் கீழ் மேல் முறையீடாக எடுத்துச் செல்லப்பட முடியாது. இது முன்தீர்ப்புத் தடை கோட்பாட்டினால் (Doctrine of Res judicata) செயலுறுத் தப்படுகின்றது. அதாவது ஒரே தரப்பினர்களையும், ஒரே வழக்கு மூலத்தையும் கொண்ட வழக்கொன்றை ஒரு நீதிமன்றம் விசாரித்து தீர்ப்பு வழங்கிவிட்டால், மீண்டும் அதே தரப்பினர்களுடன், அதே வழக்கு மூலத்தைக் கொண்டு அதே அதிகாரவரம்புடைய வேறு நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல முடியாது. இது முன்தீர்ப்புத்

தடைக் கோட்பாட்டின் பொருளாகும். இக்கோட்பாடு நீதிப் பேராணை பிறப்பிப்பதிலும் மேற்கண்டவாறு பொருந்துகிறது.

எனினும் இதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு. அதாவது ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையை (Writ of Habeas Corpus) பிறப்பிக்கக் கோரும் வழக்கினைப் பொறுத்தவரை, முன் தீர்ப்புத் தடை விதி பொருந்தாது. அவ்வழக்கை உயர் நீதிமன்றத் திலிருந்து உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடாக கொண்டு செல்லலாம். இவ்வாறு **Gulam Sarvar v. Union of India**[1] வழக் கில் கூறப்பட்டது.

72. What do you mean by writs and what are the various writs available? Discuss the writ jurisdiction of Supreme Court and the High Courts in India. (நீதிப்பேராணைகள் என்றால் என்ன? பலவகைப்பட்ட நீதிப்பேராணைகள் யாவை? உச்ச நீதிமன்றத்திற்கும் உயர் நீதிமன்றத்திற்கும் நீதிப்பேராணை களை அளிப்பதற்குள்ள அதிகாரத்தினை விவரிக்கவும்.)

(அல்லது)

Examine when the writ of Habeas Corpus will be issued by the High Courts of India. (ஆட்கொணர்விக்கும் நீதிப் பேராணையை உயர் நீதிமன்றங்கள் வழங்கும் சூழ்நிலைகளை ஆராய்க.)

(அல்லது)

Habeas Corpus case - Write short notes. (ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை வழக்கு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Writ of Mandamus - Write short notes. (செயலுறுத்தும் நீதிப்பேராணை - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Writ of Quo warranto - Write short notes. (தகுதி முறை வினவும் நீதிப்பேராணை - குறுகிய விடை தருக.)

---

1. AIR 1967 SC 1335

நீதிப்பேராணைகள் (Writs) - விளக்கம்:

அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதி, 'அடிப்படை உரிமைகள்' என்னென்ன என்பது பற்றியும், அவற்றைப் பாதுகாக்கும் வழிமுறை பற்றியும் விளக்குகிறது. இப்படிப்பட்ட அடிப்படை உரிமைகளை பறிக்கும் வகையிலோ அல்லது மீறும் முறையிலோ சட்டங்கள் ஏதும் இயற்றக் கூடாது என அரசியலமைப்புச் சட்டம் தடை விதிக்கின்றது. இந்த தடையை மீறி பாராளுமன்றமோ அல்லது சட்டமன்றங்களோ சட்டங்கள் இயற்றினால் என்ன செய்வது? அரசின் **நிர்வாக ஆட்சிமுறை செயல்கள் (Administrative action)** அடிப்படை உரிமைகளை குலைக்கும் வகையில் இருந்தால் அச்செயல்களை மாற்றுவற்கான வழி என்ன? இதற்குரிய தீர்வழிகளை (remedies) அரசியலமைப்புச் சட்டம் பகர்கின்றது.

மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது அவர்கள் அவ்வுரிமைகளை நிலைநாட்டிக் கொள்ள உச்ச நீதிமன்றத்தையோ அல்லது உயர் நீதிமன்றத்தையோ நாடலாம். அதற்கு தக்க வகையில் அந்நீதிமன்றங்கள் ஆணைகள் பிறப்பிக்க வேண்டுமெனவும், அந்த ஆணைகளின் வகைகள் என்னென்ன என்பதையும் அரசியலமைப்புச் சட்டம் கூறுகிறது. இப்படிப்பட்ட ஆணைகள்தாம் நீதிப்பேராணை (Writ) எனப்படுகிறது. அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்ட ஒரு குடிமகன் ஷரத்து 226-இன் வாயிலாக உயர் நீதிமன்றத்தை அணுகியோ அல்லது ஷரத்து 32-ன் வாயிலாக உச்ச நீதிமன்றத்தை அணுகியோ நீதிப்பேராணையை தனக்குரிய தீர்வழியாக பெறலாம். **நீதிப்பேராணையின் வகைகள்** பின்வருமாறு:

1. ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை (Writ of Habeas Corpus):

எவரையும் சட்டமுறைப்படியின்றி சிறைப்படுத்தல் கூடாது. அப்படி ஒருவர் சட்டமுறைக்கு மாறாக அரசினால் காவலில் வைக்கப்பட்டாலோ அல்லது தடுத்து நிறுத்தி வைக்கப்பட்டாலோ அவர் இவ்வாணையைப் பிறப்பித்து தன்னை விடுவிக்குமாறு உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தை வேண்டிக் கொள்ளலாம். அதன்படி, சிறைப்படுத்தியது சட்ட முறையானதா, அல்லது சட்ட முறையற்றதா என நீதிமன்றம் ஆராய்ந்து அவ்வாறு சிறைப்படுத்தியதற்குண்டான காரணத்தை விளக்குமாறு சிறைப்படுத்தியவருக்கு மேற்படி நீதிமன்றம் ஆணையிடுகிறது. தனி மனித

சுதந்திரத்தின் மீதான தடை பற்றிய அரசின் உரிமையைக் களைந்து அவரின் சுதந்திரத்தை உடனே தீர்மானம் செய்கின்றது என்பதே இவ்வாணையின் சிறப்பம்சமாகும். தடுப்புக்காவல் சட்டமும், காவல் அதிகாரிகளின் அளவுக்கு மீறிய அதிகாரப்போக்குமே இவ்வாணை பிறப்பிக்கப்பட வேண்டியதற்கு முக்கியத்துவமாக அமைகின்றது.

யார் இந்த நீதிப்பேராணையை வேண்டிப் பெற முடியும்?

பொதுவாக இவ்வாணை பிறப்பிக்க வேண்டி பாதிக்கப் பட்டவரே உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தில் விண்ணப்பித்துக் கொள்ளலாம். அவரால் முடியாதபட்சத்தில் அவரது நெருங்கிய உறவினர்கள் ஆணைக்காக விண்ணப்பிக்கலாம். (ஒருவர் கைது செய்யப்பட்டால் அவர் 24 மணி நேரத்திற்குள் அருகிலுள்ள குற்றவியல் நடுவர் (மாஜிஸ்டிரேட்) முன் அழைத்துச் செல்லப்பட வேண்டும். இல்லையென்றால் அது முறையின்றி சிறைவைப்பு அல்லது முறையின்றித் தடுப்பு என்று கூறப்பட வாய்ப்புகள் உருவாகக் கூடும். 24 மணி நேரத்திற்குள் அவ்வாறு கைது செய்யப் பட்டவர் அழைத்துச் செல்லப்படவில்லையென்றால், அவர் இந்த நீதிப்பேராணையைப் பெற விண்ணப்பிக்கலாம்.

எப்பொழுது இந்நீதிப்பேராணை பிறப்பிக்கப்படும்?

1. சிறைப்படுத்துவதற்குண்டான சட்டம் அரசியலமைப் பினை மீறும் போது; 2. அவ்வாறு சிறைப்படுத்திய சட்டம், ஷரத்துகள் 14, 19, 22(1), 22(2), 22(5) ஆகியவற்றை மீறும் போது; 3. சிறைப்படுத்த ஆணையிடும் அதிகாரத்திற்கு அதிகாரவரம்பு இல்லாத போது; அந்த அதிகாரத்தின் ஆணையானது தடுப்புக் காவல் சட்டத்தின் வகைமுறைகளை மீறும் போது. இவற்றில் ஏதேனும் ஒன்றின் காரணமாக இந்நீதிப்பேராணை பிறப்பிக்கப் படும்.

சில முக்கிய வழக்குகள்:

Sheela Bose v. State of Maharashtra[1]

இவ்வழக்கில் சட்டமுரணாக சிறை வைக்கப்பட்டவர்தான் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை வேண்டி மனுவை தாக்கல்

1. AIR 1983 SC 378

செய்ய வேண்டுமென்பதில்லை. அவரது சார்பாக எவர் வேண்டுமானலும் தாக்கல் செய்யலாம் எனப்பட்டது.

Kamaladevi v. State of Punjab[1]

இவ்வழக்கில் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை மனுவை பாதிக்கப்பட்டவர் சார்பாக ஒரு அயலவர் (Stranger) அல்லது சமூக சேவகர் (Social Worker) கூட தாக்கல் செய்யலாம் எனப்பட்டது.

ஆனால் சிறை வைத்திருப்பது சட்ட முரணாக இல்லாமல் இருந்தால் (அதாவது சட்டப்படி இருப்பின்),. அங்கு ஆட்கொணர்விக்கும் மனு நிலைக்கத்தக்கதல்ல; தள்ளுபடி செய்யத்தக்கது, எனவே **Batul Chand v. State of W.B.**[2] என்ற வழக்கில் கூறப்பட்டது.

A.D.M., Jabalpur v. Shivakant Shukla[3]

இவ்வழக்கு **'Habeas Corpus Case'** என சிறப்பாக அழைக்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்படி குடியரசுத் தலைவர் ஷரத்து 359(1)-இன் கீழ் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் வாயிலாக உத்திரவொன்றைப் பிறப்பித்து, அவ்வுத்திரவில் கண்டுள்ள அடிப்படை உரிமைகளை செயற்படுத்த ஷரத்து 226-இன் கீழ் நீதிப்பேராணை கோரி தாக்கல் செய்யப்படும் எந்த மனுவும் நிலைக்கத்தக்கதல்ல, என்று கூறலாம். இவ்வழக்கில் ஷரத்து 359(1)-இன் கீழ் குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவில், சிறை வைக்கப்பட்டவரின், ஷரத்து 21-இன் கீழான சுதந்திர உரிமை நிறுத்தி வைக்கப்படுகிறது. அப்பொழுது அவர் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையை பிறப்பிக்க வேண்டி, ஷரத்து 226-இன் கீழ் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்ய முடியாது. மேலும் உச்ச நீதிமன்றத்தையும் அணுக முடியாது; அவ்வுத்திரவின் செல்லுந்தன்மையை எதிர்க்கவும் முடியாது; அவ்வுத்திரவு அமலில் உள்ளவரை சிறைவைப்பும் தொடரும், எனப்பட்டது.

2. செயலுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Mandamus):

இவ்வாணை அரசாட்சியமைப்புக்கும், அரசின் பொதுக்

1. (1985) 1 SCC 41
2. AIR 1974 SC 2285
3. AIR 1976 SC 1207

கூட்டமைப்பிற்கும் (அரசுக் கூட்டுருு அல்லது அமைப்பு) (Corporation) எதிராக உயர் அல்லது உச்ச நீதிமன்றத்தால் பிறப்பிக்கப் படக் கூடியதாகும். இவ்வமைப்புகள் பொது மக்களுக்கு செய்யக் கூடிய பொதுக் கடமைகளிலிருந்து தவறினால் அக்கடமைகளை அவர்களுக்குச் செய்யும்படி உயர் அல்லது உச்ச நீதிமன்றம் இவ் வாணையை அனுப்பலாம். மேலும் தீர்ப்பாயம் (Tribunal) ஒன்று, தான் தீர்மானித்துச் செய்ய வேண்டிய கடமை ஒன்றைச் செய்யத் தவறினால் அதைச் செய்யுமாறு உயர் நீதிமன்றம் அத்தீர்ப்பாயத் திற்கு இவ்வாணையை அனுப்பும். சுருங்கக் கூறின், பொதுக் கடமை யான ஒரு செயலை ஓர் அதிகாரி, நிர்வாக அமைப்பு, தீர்ப்பாயம், கூட்டமைப்பு அல்லது கீழமை நீதிமன்றம் செய்யத் தவறினால் அக் கடமையைச் செய்யுமாறு உயர் அல்லது உச்ச நீதிமன்றம் இடும் ஆணை 'செயலுறுத்தும் நீதிப்பேராணை' எனப்படுகிறது.

செயலுறுத்தும் நீதிப்பேராணையை எப்படி பெறுவது?

இவ்வாணையை பெற விழைவோர் முதலில் தொடர் புடைய அமைப்பு அல்லது தீர்ப்பாயம் (Body or Tribunal) தனக்கு, சட்ட அடிப்படையில் சில கடமைகளைச் செய்ய வேண்டிய பொறுப்பு உள்ளது. அக்கடமைகளைச் செய்யத் தவறிவிட்டது. அதைச் செய்யுமாறு பணிக்க தனக்கு சட்டப்படி உரிமை உண்டு என்பதனை நீதிமன்றத்தின் மனநிறைவுக்கு ஒப்ப எடுத்துக்காட்ட வேண்டும். மேலும் அவ்வமைப்புகள் செய்ய வேண்டிய கடமைகள் சட்ட அடிப்படையில் கட்டாயமானவையாக இருக்க வேண்டும். அவற்றின் தன்விருப்புரிமை (Discretion of the Body or Tribunal) அடிப்படையில் செய்யக் கூடியவைகளாக இருக்கக் கூடாது.

சில முக்கிய வழக்குகள்:

State of M.P. v. Mandawara[1]

இவ்வழக்கில் மத்தியப் பிரதேச அரசு தனது அலுவலர் களுக்கு பஞ்சப்படி மற்றும் உதவித் தொகை வழங்க வேண்டுமென் றும் அஃது அரசின் தன்விருப்புரிமைப்படியே வழங்க வேண்டு மென்றும் விதிகள் செய்யப்பட்டன. இங்கு ஒன்றைக் கவனித்தல் அவசியம். அரசின் தன்விருப்புரிமைப்படிதான் பஞ்சப்படி வழங்கப்படும். பஞ்சப்படியை வேண்டிக் கேட்க அலுவலர்களுக்கு எவ்வித சட்ட உரிமையும் அளிக்கப்படவில்லை; அரசிற்கும் பஞ்சப்

1. AIR 1954 SC 493

படியை கொடுத்தே தீர வேண்டும் என்ற எவ்வித கடப்பாடும் கிடையாது. எனவே பஞ்சப்படி அளிக்கக் கோரி மேற்படி நீதிப் பேராணையைப் பெற அலுவலர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்று தீர்மானிக்கப்பட்டது.

Vidadala Hari - Nadhaababu v. N.T.Rama Rao[1]

இம்முக்கிய வழக்கில், அரசால் உருவாக்கப்பட்டுள்ள அமைச்சர்களின் நடத்தை விதிகளின்படி (Code of Conduct of Ministers) அப்பொழுதைய ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் என்.டி.ராமராவ் அவர்கள் திரைப்படத்தில் நடிப்பதை (அச்சமயத் தில் அவர் ஒரு திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருந்தார்) தடுக்கும் பொருட்டு, செயலுறுத்தும் நீதிப்பேராணை வெளியிடப் பட வேண்டும் என்று மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால் ஆந்திரப்பிரதேச உயர் நீதிமன்றமோ, மேற்படி நடத்தை விதிகள், சட்டத்தன்மை கொண்டவை அல்ல என்றும், அவை வெறும் வழிகாட்டு நெறிகளே ஆகும் என்றும், அவற்றுக்கு அரசியலப்பு ரீதியான தகுநிலை ஏதுமில்லை என்றும், எனவே நீதிமன்றத்தால் வலியுறுத்தப்பட முடியாததாகும் என்றும், சட்டப்படி வலியுறுத் தப்பட முடியாத நடத்தை விதிகளை அடிப்படையாகக் கொண்டு அவற்றை மீறியதற்காக செயலுறுத்தும் நீதிப்பேராணை வெளியிடப்பட முடியாது என்றும் கூறியது. மேலும் முதலமைச்சர் என்பவர் ஒரு பொது ஊழியர்; எனவே, அவரது காலம் முழுவதை யும் அவர் தனது அலுவலகப் பணிகளில்தான் செலவழிக்க வேண்டும்; திரைப்படங்களில் நடித்தல் கூடாது என்று மனுதாரர் கூறிய வாதத்தை, அவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அதிகாரியே தவிர, முதலாளி-தொழிலாளி உறவிற்குட்பட்டவரல் லர் என்பதின் அடிப்படையில் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

3. தடையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Prohibition):

இவ்வாணை கீழமை நீதிமன்றங்கள் தங்களுடைய அதிகார வரம்பை மீறிச் செயல்படுவதைத் தடுப்பதற்காக பிறப்பிக்கப்படும். இவ்வாணை கீழமை நீதிமன்றங்கள் தவறு ஒன்றைச் செய்து விட்டதற்காக அனுப்பப்படமாட்டாது. ஆனால் அத்தவறு அதன் அதிகாரவரம்பு கடந்து செயல்படுவதற்கு காரணமாக அமைந் திருந்தால் இவ்வாணையை அனுப்பலாம். இயற்கை நீதியை (Natu-

1. AIR 1990 AP 20

ral Justice) மீறிச் செயல்படுவதையும் இது தடுக்கின்றது. உதாரண மாக ஒரு குறிப்பிட்ட வழக்கில் தீர்ப்பு அளிக்கின்ற நீதிபதிக்கு அக்கறையும், ஆதாயமும் தனிப்பட்ட முறையில் உண்டு என்றால் அந்த நீதிபதியை நீதி வழங்குவதிலிருந்து தடுக்கும் வகையில் இவ்வாணையை உயர் நீதிமன்றம் பிறப்பிக்கும். இவ்வாணை நீதி வழங்கும் அமைப்புகளுக்கும், அவை போன்ற ஏனைய தீர்ப்பாய அமைப்புகளுக்கும் (Judicial and Quasi Judicial bodies) எதிராக மட்டுமே உச்ச அல்லது உயர் நீதிமன்றத்தால் அனுப்பப்படும். சுருங்கக்கூறின், கீழமை நீதிமன்றமோ, ஆட்சி அதிகாரியோ தம் அதிகாரவரம்பை மீறி அல்லது சட்ட முறைக்கு முரணாக ஏதேனும் நடவடிக்கை எடுத்தால் அதை மேற்கொண்டு நடத்தாமல் தடை செய்யும் ஆணை 'தடையுறுத்தும் நீதிப்பேராணை' எனப்படும்.

4. நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை (Writ of Certiorari):

இவ்வாணை நிர்வாக அதிகாரஅமைப்புக்கெதிராக அனுப் பப்பட மாட்டாது. இது நீதி வழங்குகின்ற அல்லது அது போன்ற அதிகாரஅமைப்புகளுக்கு எதிராகப் பிறப்பிக்கப்படும். இந்த ஆணை கீழமை நீதிமன்றத்தில் விசாரணையிலிருக்கிற வழக்கை அதன் எல்லா பதிவேடுகளுடனும் மேல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கும்படி ஆணை பிறப்பிப்பதாக அமையும். கீழமை நீதி மன்றங்கள் தங்களின் அதிகாரவரம்பை மீறித் தவறான வழிகளில் ஆதிக்கம் செலுத்தாமலிருப்பதற்காக இவ்வாணை பிறப்பிக்கப்படு கிறது. இவ்வாணையை, தவறாக வழங்கிய தீர்ப்பை இரத்து செய் வதற்காக பிறப்பிக்கும்படி உச்ச நீதிமன்றத்தைக் கோர முடியாது.

சுருங்கக் கூறின் நீதிமுறை சார்ந்த அலுவல்களைச் செய்யும் தீர்ப்பாயங்கள், அதிகாரிகள் தம் அதிகாரவரம்பை மீறிச் செயல் பட்டாலோ, இயற்கை நீதிக்கு மாறாக நடவடிக்கை எடுத்தாலோ, அவற்றை மறுஆய்வு செய்து நீக்கம் செய்வதற்காக அவை தொடர் பான பதிவேடுகளைத் தமக்கு அனுப்புமாறு நீதிமன்றம் ஆணை யிடுவதுதான் 'நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை' ஆகும்.

5. தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை (Writ of Quo-warranto):

பொது அதிகாரப் பதவியில் உள்ளவர் அல்லது பொது உரிமை பெற்றவர் அதற்கான தகுதி பெற்றவராக இருத்தல் வேண்டும். சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள தகுதிகள் உடையவரே பொது அதிகாரப்பதவியில் இருக்க முடியும். அப்பதவியில் உள்ள ஒருவர் அத்தகைய தகுதி இல்லாதவரென்று முறையிடப்பட்டால்

அவர் எந்தத் தகுதியில் அப்பொதுப் பதவியை வகிக்கிறார் என்று வினவி உயர் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்கலாம். இவ்வகையான ஆணை 'தகுதிமுறை வினவும் நீதிப்பேராணை' எனப்படுகிறது.

முடிவுரை:

இவ்வாறாக, மக்களின் அடிப்படை உரிமைகளை நிலை நிறுத்துவதற்கும், ஆட்சித்துறை அனைத்திலும் இயற்கை நீதி நிலவச் செய்வதற்குமான அதிகாரமும், பொறுப்பும் உச்ச நீதிமன்றத்தையும், உயர் நீதிமன்றங்களையும் சார்ந்துள்ளன. மேற் கூறப்பட்ட நீதிப்பேராணைகளைப் பிறப்பித்து இந்நீதிமன்றங்கள் புனிதமான இக்கடமைகளை ஆற்றுகின்றன.

73. (a) Explain the conditions to be satisfied before th Writ of Certiorari could be issued.

(b) Compare the Writ of Certiorari with the Writ of Prohibition.

(அ) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை வெளியிடப் படும் முன்னர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளை விளக்குக.

(ஆ) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை தடையுறுத் தும் நீதிப்பேராணையுடன் ஒப்பிடுக.

(அல்லது)

What are the grounds for which the Writ of Certiorari is considered as a remedy? Explain with relevant cases. (நெறி முறையுறுத்தும் நீதிப்பேராணை எவ்வகையான காரணங்களுக்கு நிவாரணமாகக் கருதப்படுகிறது? தக்க வழக்குகளுடன் விவரி.)

(அல்லது)

Principles of Natural Justice - Write short notes. (இயற்கை நீதிக் கொள்கைகள் - குறுகிய விடை தருக.)

(அ) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையைப் பெற பூர்த்தி செய்ய வேண்டிய நிபந்தனைகள்:

1. கீழமை நீதிமன்றம் தனது அதிகாரவரம்பை மீறி செயல்

பட்டிருக்கிறது (excess of jurisdiction) என்பதையோ அல்லது தனது அதிகாரவரம்பை தவறான வழிகளில் பயன்படுத்தியிருக் கிறது (abuse of jurisdiction) என்பதையோ மேலமை நீதிமன்றத் (Superior Court) எடுத்துக்காட்ட வேண்டும்;

2. இயற்கை நீதியை மீறி கீழ் நிலை நீதிமன்றம் செயல் பட்டுள்ளது என்பதை, மேலமை நீதிமன்றத்திற்கு காண்பிக்க வேண்டும்;

3. இந்நீதிப்பேராணை நீதிமுறை சார்ந்த அமைப்புகளுக்கு (Judicial body) எதிராக மட்டுமே பிறப்பிக்கப்படும்;

4. கீழமை நீதிமன்றம், தனது அதிகாரவரம்பை மீறிச் செயல் பட அதிகாரவரம்பு கொண்டிருக்கக் கூடாது.

5. கீழமை நீதிமன்றம் செயற்படுத்திய அதிகாரவரம்பு, அதன் அதிகாரத்திற்கு அப்பாற்பட்டதாக இருக்க வேண்டும். அதாவது கீழமை நீதிமன்றம் வரம்பு மீறிய நிலையில் (Ultra vires) செயல் பட்டிருக்க வேண்டும்.

இயற்கை நீதிக் கொள்கைகள் (Principles of Natural Justice):

மேற்கண்டவை தவிர இயற்கை நீதியின் பின்வரும் கொள்கைகளும் பின்பற்றப்பட வேண்டும்.

1. எந்நபரையும் விசாரணை செய்யாமல் தண்டிக்கக் கூடாது (*Audi alterm partem* - No man shall be punished unheard): வழக்கில் தொடர்புடைய இரு நரப்பினருக்கும் தங்களு டைய வாதத்தினை எடுத்துச் சொல்ல நியாயமான சந்தர்ப்பம் (reasonable opportunity) தரப்பட்டிருக்க வேண்டும். இப்படிப்பட்ட சந்தர்ப்பம் வழக்கின் ஒரு தரப்பினருக்கு தரப்படவில்லை என்றால், இந்நீதிப்பேராணை பிறப்பிக்க வேண்டி பாதிக்கப்பட்டவர் மனு தாக்கல் செய்யலாம்.

2. தனது வழக்கு மூலத்திற்கு தானே நீதிபதியாக இருக்கக் கூடாது (*Nemo debet ease judex non propria cause* - No man shall be a Judge of his own cause): வழக்கில் தொடர்புடைய ஒரு நபர், தன்னுடைய வழக்கினை தானே தீர்மானிக்கும் சூழலுக் குட்பட்டவராக இருக்கக் கூடாது. அதாவது, வழக்கு நடவடிக்கை ஒன்றில் ஒரு தரப்பினருக்கு ஆதரவாக உள்ள நபர், அதே வழக்கை தீர்மானிப்பவராகவும் இருக்கக் கூடாது.

3. மனச்சாய்வுடன் இருத்தல் கூடாது (Doctrine of Bias): நீதிபதி, வழக்கில் ஒரு தரப்பினருக்கு சார்பாக பாரபட்சமுடன் (மனச்சாய்வுடன்) நடந்து கொண்டிருக்கக் கூடாது. இவ்வாறு நீதிபதி நடந்து கொண்டதாக தரப்பினர் அறிந்தால், நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை வேண்டிப் பெறலாம். மனச்சாய்வினை, தனிப்பட்ட மனச்சாய்வு (Personal bias) என்றும், பணஞ்சார்ந்த மனச் சாய்வு (Pecuniary bias) என்றும் பிரிக்கலாம்.

A.K.Kraipak v. Union of India[1]

I.P.S. (Indian Police Service) நேர்முகத் தேர்வின் போது நேர்முகத் தேர்வு போது, நேர்முகத் தேர்வு செய்யும் அதிகாரியாக இருந்த மாமனார், தனது மருமகனையே I.P.S. அதிகாரியாக தேர்ந்தெடுத்துவிட்டார். இது தனிப்பட்ட மனச்சாய்வின் அடிப்படையில் அமைந்ததாகக் கூறி கரைபாச் என்பவர் நீதிமன்றத்தில் நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை வேண்டி மனுச் செய்தார். உச்ச நீதிமன்றம் I.P.S. அதிகாரியாக தேர்வு செய்த உத்தரவு செல்லாது என்று ஆணையிட்டது. மேலும் இவ்வாறு தேர்ந்தெடுத்தது நீதிமுறை சார்ந்த அதிகாரத்தின்பாற்பட்டது என்பதால் இதற்கு நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை பிறப்பிக்கப்பட்டது சரியே என்றும், மேற்படி நீதிப்பேராணை நிர்வாகச் செயல்களுக்கு (Administrative acts) எதிராகத்தான் பிறப்பிக்க முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

(ஆ) நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணையை (Writ of Certiorari) தடையுறுத்தும் நீதிப்பேராணையுடன் (Writ of Prohibition) ஒப்பிடல்:

மேற்கண்ட இரு நீதிப்பேராணைகளும் அதன் பரவெல்லை மற்றும் விதிகளில் பொதுவான தன்மைகளைக் கொண்டிருக்கின்றன. இவ்விரண்டு நீதிப்பேராணைகளும் நீதி வழங்கும் அமைப்புகளுக்கும், அவை போன்ற ஏனைய தீர்ப்பு மன்ற அமைப்புகளுக்கும் எதிராக பிறப்பிக்கப்படுகிறது. இந்த நீதிப்பேராணைகளின் நோக்கம், கீழமை நீதிமன்றங்கள் அல்லது தீர்ப்பாயங்கள் தங்களுடைய அதிகாரவரம்பிலிருந்து மீறுவதை தடுத்து நிறுத்துவதுதான்.

இவை போன்ற ஒற்றுமைகள் இவ்விரண்டு நீதிப்பேராணைகளுக்கு இடையே காணப்படினும், சில வேற்றுமைகளும் உள்ளன.

1. AIR 1970 SC 150

அவை,

1. நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை, கீழமை நீதிமன்றங்கள் தங்களது அதிகாரவரம்பு மீறி நிறைவேற்றிய உத்தரவினை நசித்து (Quash) (செல்லாது) போகும்படி செய்கிறது. ஆனால் தடையுறுத்தும் நீதிப்பேராணை ஒரு கீழமை நீதிமன்றத்தின் வழக்கு நடவடிக்கை, மேலும் தொடர்வதை (to stop further proceedings) தடுக்க பிறப்பிக்கப்படுகின்றது.

2. இந்த நீதிப்பேராணைகள் பெறுவதில் படிநிலைகளில் வேறுபாடு உள்ளது. அதாவது நெறிமுறையுறுத்தும் நீதிப் பேராணையை வழக்கு நடந்து, அதற்கு இறுதித் தீர்ப்பு கொடுக்கப் பட்ட பின்னர்தான் வேண்டிப் பெறலாம். ஆனால் தடையுறுத்தும் நீதிப்பேராணையை வழக்கின் நடைமுறைகள் ஒரு கீழமை நீதிமன்றத்தில் நடந்து கொண்டிருக்கும் பொழுதே, அதனை தடுத்து நிறுத்த நீதிமன்றத்தை வேண்டிப் பெறலாம்.

3. நெறிமுறையுறுத்தும் நீதிப்பேராணை நீதிவழியிலான குறைகளை குறைந்த அளவில்தான் சார்ந்துள்ளது. ஆனால் தடையுறுத்தும் நீதிப்பேராணை நீதிவழியிலான குறைகளையே முற்றிலும் சார்ந்துள்ளது.

74. Awarding compensation in Writ proceedings - Write short notes. (நீதிப்பேராணை நடவடிக்கைகளில் வஞ்சிக்கப் பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குதல் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

"The recent trend in Judicial review is to award compensation to victims in writ proceedings" - Discuss the same with the help of leading cases. ("நீதிப்பேராணை வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது நீதி பரிபாலன முறையில் சமீப கால வழக்கமாக உள்ளது" - முக்கிய வழக்குகளைக் கொண்டு விவாதிக்கவும்.)

நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரும் மனுக்களில் சில சூழ் நிலைகளில் பாதிக்கப்பட்டவருக்கு இழப்பீடு வழங்கும் அதிகாரத் தையும் உச்ச நீதிமன்றம் பெற்றுள்ளது. இந்த அதிகாரமும் ஷரத்து 32-இல் உள்ளடங்கியதே என்று **M.C.Metha v. Union of India**[1]

1. AIR 1987 SC 1086

வழக்கில் கூறப்பட்டது. ஆனால் அனைத்து நீதிப்பேராணை மனுக்களிலும் இழப்பீடு வழங்கப்படுவதில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். பெருவாரியான மக்களின் அடிப்படை உரிமைகள் பெருமளவில் மீறப்படும் பொழுதும், உரிமையியல் நீதிமன்றங்களில் வழக்கிட முடியாதபடி பாதிக்கப்பட்டவர்களின் சூழ்நிலையும், இயலாமையும் இருந்து, அவர்கள நியாயமற்ற விதத்தில் நசுக்கப்படுவதாக தெரியும் பொழுது மட்டுமே, இழப்பீட்டிற்காக உத்திரவு பிறப்பிக்கப்பட முடியும். எனவே அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்பதற்காக இழப்பிடு மட்டும் கோரி தாக்கல் செய்யப்படும் மனுக்களை, ஷரத்து 32-ன் கீழ் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்வதில்லை. விதிவிலக்கான சூழ்நிலைகளில் மட்டுமே இழப்பீடு வழங்கப்படும்.

Rudal Shah v. State of Bihar[1]

இவ்வழக்கில் மனுதாரர், தகுதி வாய்ந்த நீதிமன்றம் ஒன்றினால் விடுதலை செய்யப்பட்டும் 14 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவருக்கு இழப்பீடாக அரசு ரூ.30000/- அளிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Arvindar Singh Bagga v. State of U.P.[2]

இவ்வழக்கில் காவல்துறையினரின் சித்ரவதையால் பாதிக்கப்பட்டவருக்கு ரூ.30,000/- இழப்பீடு வழங்க வேண்டுமென உத்திரவிடப்பட்டது.

People's Union for Civil Liberties v. Union of India[3]

காவல்துறையினரின் சூழ்ச்சியான எதிர்த்தாக்குதலின் (fake encounter) விளைவாக நடந்த துப்பாக்கிச் சூட்டில் பலியான இருவருக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

75. Public Interest Litigation - Write short notes. (பொது நலனுக்கான வழக்கு - குறுகிய விடை தருக.)

(அல்லது)

1. AIR 1983 SC 1086
2. (1994) 4 SCC 602
3. AIR 1997 SC 568

"The object of Public Interest Litigation is to render social justice" - Explain. ("பொது நல வழக்கின் நோக்கம் சமூக நீதியே" - விளக்குக.)

பொதுவாக பாதிக்கப்பட்டவர் மட்டுமே நீதிமன்றத்தில் வழக்கிட முடியும். ஆனால் பாதிக்கப்படாதவர் கூட பொது நலன் கருதி அடிப்படை உரிமைகள் மீறலுக்காக நீதிப்பேராணைகளை பிறப்பிக்கக் கோரி ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் வழக்கே, பொது நலனுக்கான வழக்கு எனப்படுகிறது. நீதிமன்றத்தை அணுக முடியாதவர்கள், வறுமை, பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தில் குன்றியவர்கள் ஆகியோர்களின் அடிப்படை உரிமைகளை செயலாக்க, நன்னம்பிக்கையின் அடிப்படையில் பொது நல உணர்வு கொண்ட எவரொருவரும், நீதிப் பேராணைகள் பிறப்பிக்க வேண்டி, உச்ச நீதிமன்றத்தை ஷரத்து 32-இன் வாயிலாக அணுகலாம். இம்மாதிரியான வழக்குகளை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக் கொள்ளும். இவ்வளவு ஏன், ஷரத்து 226-இன்படி உயர் நீதிமன்றத்திலும் பொது நல வழக்குகளை தாக்கல் செய்யலாம். வேறு வகையில் சொன்னால் பொது நல வழக்கிடுதலின் நோக்கமே சமூக நீதியை நிலை நிறுத்துவதாகும்.

எனினும் தற்சமயம் சிலர் தங்கள் சுய விளம்பரத்திற்காக அல்லது மிரட்டி பணம் செய்வதற்காக பொது நல வழக்குகளை (Personal Interest Litigation or Paise Interest Litigation) தாக்கல் செய்கின் றனர். இதை உச்ச மற்றும் உயர் நீதிமன்றங்கள் அவ்வப்போது கண்டித்து, அவ்வாறு பொது நல வழக்கிட்டவருக்கு அபராதமும் விதித்துள்ளன. மேலும் பொது நல வழக்கிடுவதற்கு சில நெறிமுறைகளையும் சில வழக்குகளில் வகுத்துரைத்துள்ளன.

Bandhu Mukti Morcha v. Union of India[1]

இவ்வழக்கில் கொத்தடிமைகளை விடுவிக்கும் நோக்கம் கொண்டு செயலாற்றும் ஒரு தொண்டு நிறுவனம், ஃபரிதாபாத் மாவட்டத்தில் கொத்தடிமைகள் உள்ளதாகவும் அவர்களை விடுவிக்க நீதிப்பேராணை பிறப்பிக்கக் கோரியும், உச்ச நீதிமன்றத்திற்கு கடிதமொன்றை அனுப்பினர். அக்கடிதத்தையே உச்ச நீதிமன்றம் நீதிப்பேராணை மனுவாக பாவித்து, குழு ஒன்றை அமைத்து அங்கு கொத்தடிமைகள் அவ்வாறு உள்ளனரா என்பது

1. AIR 1984 SC 802

குறித்து ஆராய்ந்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க உத்தரவிட்டது. இங்கு மேற்படி தொண்டு நிறுவனம் எடுத்த முயற்சி, பொது நல வழக்கேயாகும்.

M.C.Metha v. Union of India[1]

இப்பொது நல வழக்கில் தொழிற்சாலை ஒன்றிலிருந்து வாயு கசிந்து மாண்டவர்களுக்காக இழப்பீடு வழங்கும்படி உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

அதே **M.C.Metha**[2] கொடுத்த மற்றொரு வழக்கில், கங்கை நதியில் தொழிற்சாலை மாசுக்கள் கலப்பதை தடுக்கக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை, உச்ச நீதிமன்றம் ஒரு பொது நல வழக்காக ஏற்று, அவ்வாறு கலப்பதை சட்டப்படி தடுக்கும்படி கான்பூர் மாநகராட்சிக்கு ஆணையிட்டது.

பொது நல வழக்கிட்டு தீர்வழி பெற்றுத் தருவதில் அளவில்லா அக்கறை கொண்ட மேற்படி **M.C.Metha**[3] தாக்கல் செய்த பிறிதொரு பொது நல வழக்கில், சுற்றுச் சூழல் குறித்த தகவலை ஒலி-ஒளி காட்சிகளின் மூலம் பரப்ப அரசுக்கு உச்ச நீதிமன்றம் ஆணையிட்டது.

சில ஆண்டுகளுக்கு[4] முன்பு பொது நலனை முன்னிறுத்தி உச்ச நீதிமன்றம் அளித்த ஒரு அதிரடித் தீர்ப்பையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. பொது இடங்களில் புகை பிடிக்கத் தடை விதிக்க வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினர் முரளி தியோரா உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பொது நல வழக்கொன்றில், பொது மக்களின் சுகாதார நலனுக்காக இந்திய நாடு முழுவதும், மருத்துவமனைகள், பேருந்து மற்றும் இரயில் நிலையங்கள் உள்பட அனைத்து பொது இடங்களிலும் புகை பிடிப்பதற்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்தது. இத்தீர்ப்பை உடனடியாக அமல் படுத்த அனைத்து மாநில மற்றும் மத்திய அரசின் ஆட்சி எல்லை களுக்கும் நீதியரசர்கள் உத்தரவிட்டனர். அதன்படி, தற்போது இத்தடை முழு வீச்சில் அமலில் உள்ளது.

---

1. AIR 1983 SC 1086
2. M.C.Metha v. Union of India AIR 1988 SC 2217
3. M.C.Metha v. Union of India AIR 1992 SC 382
4. *2001-ஆம் ஆண்டில்*

76. Judicial Activism - Write short notes. (நீதிமன்றம் விறுவிறுப்பாக செயலாற்றும் முறை - குறுகிய விடை தருக.)

இந்திய உச்ச நீதிமன்றம் அரசியலமைப்பு மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் பாதுகாவலனாய் பல்வேறு வகைகளில் விளங்குவதைத்தான், நீதிமன்றம் விறுவிறுப்பாக செயலாற்றும் முறை என்று கூறுகிறோம்.

அடிப்படை உரிமைகளை மீறுமாறு சட்டங்கள் இயற்றப்படும் பொழுதெல்லாம், அச்சட்டத்தை மறுஆய்வு (Review) செய்து, அதனை இல்லாநிலையதென அறிவிக்கும் உயர்ந்த அதிகாரத்தை ஷரத்து 13-இன் வாயிலாகப் பெற்றுள்ளது. நீதிமன்றத்தின் விறுவிறுப்பான செயல்முறையானது, நிர்வாகத்துறை மற்றும் சட்டமியற்றுத்துறையின் செயல்பாடுகளைக் கண்காணிக்கிறது. அவற்றின் கடமைகளை இந்திய அரசியலமைப்புபடி சரிவர செய்யுமாறு கட்டாயப்படுத்துகிறது. நாட்டில் சட்டத்தின் ஆட்சியை (Rule of Law) நிலவச் செய்கிறது.

அரசால் குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படும் பொழுதெல்லாம், ஷரத்து 32-இன் வழியாக உச்ச நீதிமன்றம் அந்த அடிப்படை உரிமைகளைச் செயல்படுத்த நீதிப்பேராணைகளைப் (Writs) பிறப்பிக்கிறது. அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி, பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமல்லாது, அவர்களது சார்பாக பொது நலன் கருதி மற்றவர்களால் தொடுக்கப்படும் வழக்குகளையும் (PIL) உச்ச நீதமன்றம் பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்கிறது. மனித உரிமைகள் மீறலைத் தடுக்கிறது. கொத்தடிமைகளின் மறுவாழ்வு, குழந்தைகள் மற்றும் பெண்டிரின் நலன், பாதுகாப்பு இல்லங்களின் மேம்பாடு, சிறைவாசிகளின் பாதுகாப்பு, சித்ரவதை, காவல் பாதுகாப்பில் மரணம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீதிமன்ற அவமதிப்பு ஆகியவற்றிற்காக பல வழக்குகளில் நீதிமன்றம் விறுவிறுப்பாக செயலாற்றி தீர்வழி வழங்குகிறது. இவ்வாறு நீதிமன்றம் விறுவிறுப்பாக செயலாற்றும் முறையைச் சொல்ல இன்னொரு நூல் கூட எழுதலாம்!

-o0o-

அத்தியாயம் 9

அரசு நெறிமுறையறுத்தும் கொள்கைகள்
(ஷரத்துகள் 36 மற்றும் 51 வரை)
[Directive Principles of State Policy]
(Articles 36 to 51)

(i) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளின் நோக்கம் – பரவெல்லை – அவற்றை அடிப்படை உரிமைகளுடன் ஒப்பிடல் – நீதிமுறை விசாரணைக்கு உட்படாத தன்மை – அடிப்படை உரிமைகளுடன் கொண்டுள்ள முரண்பாடு
[Object of the Directive - Scope of the Directive - Directive compared with Fundamental Rights - Non-justiciability - Conflict between Fundamental Rights and Directive Principles]

77. "The directive principles constitute the conscience of the Constitution" - Elucidate. ("அரசமைப்பின் உளச்சான்றாக வழிச் செலுத்தும் நெறிகள் அமைந்துள்ளன" - விளக்குக.)

(அல்லது)

Explain the significant role of Directive Principles of State Policy in the Indian Constitution. How do they differ from fundamental rights? (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில்

உள்ள அரசின் கொள்கையை வழிச் செலுத்தும் நெறிகளின் முக்கியத்துவத்தை விளக்குக. அவை எவ்வாறு அடிப்படை உரிமைகளிலிருந்து மாறுபட்டிருக்கிறது?)

(அல்லது)

Examine in the light of relevant cases and amendments ofthe Constitution, the relation between Fundamental Rights and Directive Principles of State Policy in the Indian Constitution. (இந்திய அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும் இடையே உள்ள உறவினை, தொடர்புடைய வழக்குகளின் மற்றும் அரசியலமைப்பு திருத்தங்களின் உதவியைக் கொண்டு ஆராய்க.)

(அல்லது)

Explain the manner in which the Supreme Court of India has tried to strike a balance between Fundamental Rights and Directive Principles. (அடிப்படை உரிமைகளுக்கும் வழிச் செலுத்தும் நெறிகளுக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்த இந்திய உச்ச நீதிமன்றம் முயற்சி செய்த வழிகளை விளக்குக.)

(அல்லது)

Explain the true relationship between the Fundamental Rights and the Directive Principles in the context of the Indian Constitution. (இந்திய அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமை களுக்கும் வழி செலுத்து நெறிகளுக்கும் உள்ள உறவினைப் பற்றி ஆராய்க.)

(அல்லது)

"The sanctions behind the Directive Principles of State Policy is political and not judicial" - Explain. ("அரசு நெறிமுறையுறுத் தும் கொள்கைகளுக்கு பின்னணியில் உள்ள உறுதியுரைகள் அரசியலமைப்புப்படியானதாகும். நீதி வழியானதல்ல" - விளக்குக.)

(அல்லது)

"The Constitution of India is based on the bedrock of balance between the Directive Principles and Fundamental

Rights". Elucidate. ("இந்திய அரசமைப்புச் சட்டம் வழி செலுத்து நெறிகளுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் இடையே வசதியான அடித்தள சம அமைப்பின் அடிப்படையில் அமைந் துள்ளது" - தெளிவாக்குக.)

(அல்லது)

Briefly discuss how the Directive Principles of State Policy are different from Fundamental Rights tracing their relationship upto date. (அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கையானது, அடிப்படை உரிமைகளிலிருந்து எப்படி வேறுபடுகின்றது என்பதை அவற்றின் நாளது தேதி வரையிலான உறவுகளை கண்டறிந்து சுருக்கமாக விவாதிக்க.)

(அல்லது)

Is is said that a harmonious relationship between Fundamental Rights and Directive Principles of State Policy is required for the proper functioning of the Constitution. Examine how far this is achieved in India. (அரசியலமைப்புச் சட்டம் சரியாக செயலாற்ற, அடிப்படை உரிமைகளுக்கும் அரசை நெறிப்படுத்தும் நியதிகளுக்கும் இடையே நட்பான தொடர்பு தேவை என்று சொல்லப்படுகிறது. இது இந்தியாவில் எந்த அளவுக்கு சாதிக்கப்பட்டிருக்கிறது?)

(அல்லது)

Examine the relations between Fundamental Rights and Directive Principles of State Policy. When the repugnancy arises between these two, which will prevail? (அடிப்படை உரிமைகளுக்கும் அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக் கும் இடையே உள்ள உறவுகளை ஆராய்க. இவை இரண்டிற்கும் இடையே முரண்பாடு தோன்றும் போது, எது மேலோங்கி நிற்கும்?)

(அல்லது)

Explain the ways of resolving the conflict between fundamental right and directive principles. (அடிப்படை உரிமைகளுக்கும், வழிகாட்டும் நெறிமுறைகளுக்கும் இடையே உள்ள முரண்பாட்டினை தீர்ப்பதற்கான வழிகளை விளக்குக.)

(அல்லது)

Examine the inter-relationship between Fundamental Rights and Directive Principles of State Policy in the light of decided cases and Constitutional amendments. (அடிப்படை உரிமைகளுக்கும் மற்றும் அரசின் வழிகாட்டு நெறிகளுக்கும் இடையேயான தொடர்பைத் தீர்மானிக்கப்பட்ட வழக்குத் தீர்ப்புகள் மற்றும் அரசியல் சட்டத் திருத்தங்களின் துணையோடு ஆராய்க.)

(அல்லது)

In the case of conflict between a fundamental right and a directive principle which shall prevail and why? Illustrate your answer with Constitutional provisions, amendments and leading cases. (அடிப்படை உரிமைகளுக்கும் அரசை வழி நடத்திச் செல்லும் நெறிகளுக்கும் இடையே முரண்பாடு எழுங்கால் எது மேலோங்கி நிலவும்? அது ஏன்? உங்களுடைய பதிலுரையை அரசமைப்பு சட்ட வகைமுறைகளைக் கொண்டும், திருத்தங்களைக் கொண்டும் மற்றும் முதன்மையான வழக்குத் தீர்ப்புகளைக் கொண்டும் மேற்கோள் காட்டி விளக்குக.)

(அல்லது)

Directive principle of State Policies - Write short notes. (அரசுக்கு அறிவுறுத்தும் வழிகாட்டு நெறிமுறைகள் - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் IV- வது பகுதியில் (Part IV), இந்திய அரசு, எந்த நோக்கங்களை அடைவதற்காக அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்பதற்கு வழிகாட்டும் நெறிகளாக பல கொள்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. இவையே அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் எனப்படுகின்றன. இக்கொள்கைகள் 38-வது ஷரத்திலிருந்து 51-வது ஷரத்து வரை கூறப்பட்டுள்ளன. இந்த நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் அயர்லாந்து நாட்டின் அரசியலமைப்பு சட்டத்தை பின்பற்றி அமைந்தவையாகும்.

விளக்கம்:

ஒரு நாட்டிற்கு அரசியல் சுதந்திரம் மட்டும் போதாது. சமூகப் பொருளாதார நிலையில் மக்கள் சுதந்திரம் பெற்றாக வேண்டும். இல்லையென்றால், மக்களாட்சியின் கொள்கைகள், நோக்கங்கள் நிறைவேறாமல் போய் அரசியல் சுதந்திரம் கூடப் பொய்த்துப் போகும். எனவே சமூகப் பொருளாதார வளர்ச்சிகள், மக்களுக்கு சமமாகப் போய்ச் சேரும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் சில கொள்கைகளை கூறியுள்ளது. இக் கொள்கைகள் அரசியலமைப்பு சட்ட **முகப்புரையில் (Preamble)** கொடுக்கப்பட்ட நோக்கங்களை அரசுக்கு நினைவூட்டும் வகையில் அமைந்துள்ளன. அஃதாவது, இந்திய மக்களுக்கு சமூகப் பொருளாதார அரசியல் நியாயம் கிட்டும் வகையில் இந்திய அரசு தனது வழியினை வகுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறே செயல்பட வேண்டும் என்று இக்கொள்கைகள் அரசுக்கு அறிவுறுத்துகின்றன. இக்கொள்கைகள் சமூக மற்றும் பொருளாதார மறுமலர்ச்சி ஏற்பட வழிவகுக்கின்றன. **அரசியலமைப்பின் உளச்சான்றாக (Conscience of the Constitution)** உள்ளன. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை மூன்று தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

(a) சமூகம் மற்றும் பொருளாதாரம் (Social and Economic Charter) :

1. நீதியை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பை உருவாக்கி, அதைப் பாதுகாக்க வேண்டுமென ஷரத்து 38 அரசுக்கு அறிவுறுத்துகிறது.

2. பொருளாதார நீதியினைக் காக்க அரசினால் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் குறித்து ஷரத்து 39 கூறுகிறது. ஷரத்து 39-A, சம நீதி மற்றும் இலவச சட்ட உதவியை (Equal justice and free legal aid) அரசு அளிக்க வேண்டுமெனக் கூறுகிறது.

(b) சமூகப் பாதுகாப்பு (Social Security Charter) :

சமூகப் பாதுகாப்பிற்கு என்னென்ன நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்க வேண்டும் மற்றும் எவற்றிற்கு பாதுகாப்பு தர வேண்டுமென ஷரத்துகள் 40 முதல் 43-A வரையிலும் மற்றும் 45 முதல் 47 வரையிலும் குறிப்பிடுகின்றன.

(c) சமூக நலம் (Community Welfare Charter) :

சமூக நலனை மேம்படுத்த அரசு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு 44, 48 முதல் 51 வரையில் உள்ள ஷரத்துகள் வழிகாட்டுகின்றன.

மேற்கூறப்பட்ட நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் ஒரு புதிய சனநாயக சமுதாயத்தைத் தோற்றுவிக்கும் அஸ்திவாரமாகவும், ஆதார அடிப்படையாகவும் விளங்குகிறது. தேசத் தலைவர்களுக்கு அறிவுரை கூறும் பொன்னேடாக இவை விளங்குகின்றன. 'சாதாரண பாதுகாப்பு அரசு' என்பதிலிருந்து 'முழு பாதுகாப்பு அரசு' என்ற நிலைக்கு இந்தியாவை அழைத்துச் செல்ல இக் கொள்கைகளை நடைமுறையில் பயன்படுத்த வேண்டுமென்பதே இந்நெறிமுறையின் இலட்சியமாகும்.

(மேற்கண்ட மூன்று வகைப்பாடுகளை ஒரு தனி வினாவின் கீழ் பின்னர் விரிவாகக் காண உள்ளோம்.)

அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும் இடையே உள்ள வேறுபாடு அல்லது உறவு:

1. அடிப்படை உரிமைகளுக்கும், அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும் இடையே உள்ள ஒரு முக்கிய மாறுபாடு யாதெனில், அடிப்படை உரிமைகள், **நீதிமன்ற விசாரணைக்குட்பட்டதாகும் (Justiciable)**. ஆனால் அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கைகள், **நீதிமன்ற விசாரணைக்குட்பட்டதல்ல (Non-justiciable)**. ஏனெனில் அரசுக் கொள்கைகள் அறநெறிகளாக கருதப்படுகின்றன. சட்ட நெறிகளாக கருதப்பட முடியாது.

2. அடிப்படை உரிமைகளுக்கு முரணாக இயற்றப்படும் சட்டங்களை இல்லாநிலையதென அறிவிக்கக் கோரி நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ளலாம். அதன்படி நீதிமன்றம் முரணான அச்சட்டத்தை இல்லாநிலையதென அறிவிக்கும் **[ஷரத்து 13(1)]**. ஆனால் அரசு நெறிக் கொள்கைகளுக்கு முரணாக இயற்றப்படும் சட்டத்தினை இல்லாநிலையதென அறிவிக்கக் கோரி நீதிமன்றத்தைக் கேட்டுக் கொள்ள இயலாது (ஷரத்து 37). சுருங்கக் கூறின், அடிப்படை உரிமைகளை நீதிமன்றத்தால் வலியுறுத்திச் செயல்படுத்தலாம். ஆனால் அரசு நெறிக்கொள்கைகளை அவ்வாறு நீதிமன்றத்தால் வலியுறுத்திச் செயல்படுத்த முடியாது. எடுத்துக்

காட்டாக, ஒருவர் சட்ட முரணாக தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார் என்றால், அவர் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையின் வாயிலாக தனது அடிப்படை உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளலாம். ஆனால் அரசு நெறி முறையுறுத்தும் கொள்கைகளின் 45-வது ஷரத்துப்படி அரசாங்கம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி முறையினை அமல்படுத்தவில்லை என்ற காரணத்திற்காக, பாதிக்கப்பட்ட நபர், அரசு தனக்குரிய மேற்படி நெறிமுறையுறுத்தும் கொள்கையினை பின்பற்றவில்லை எனக் கூறி நிவாரணம் தேட இயலாது.

அரசின் சட்டங்கள் இக்கொள்கைகளை மதித்து, அவற்றை நடைமுறைப்படுத்த உதவும் வழிகாட்டியாக மட்டுமே இவை அமைகின்றன. இது குறித்து **State of Madras v. Chenpakam Durairajan**[1] என்ற வழக்கில் பின்வருமாறு கூறப்பட்டது. இவ் வழக்கில், சாதி சமய அடிப்படையில் கல்லூரிகளுக்கு இடம் பிரித்து அளிக்கும் சென்னை அரசின் உத்தரவு ஒன்று, ஷரத்து 29(2)-க்கு (அடிப்படை உரிமை) முரணானது என்று சொல்லப் பட்டது. [ஷரத்து 29(2) - அரசால் இயக்கப்படும் எந்த கல்வி நிறுவனங்களிலும் சேருவதற்கு எந்தக் குடிமகனுக்கும் சமயம், இனம், சாதி மற்றும் மொழி அடிப்படையில் அனுமதி மறுக்கப் படக் கூடாது]. ஆனால், பின்தங்கிய வகுப்பினரின் கல்வி மற்றும் பொருளாதார நலன்களைப் பாதுகாக்க இப்படிப்பட்ட பாகுபாடு அவசியம்தான் என்று அரசின் நெறிமுறையுறுத்தும் கொள்கையின் 46-வது ஷரத்தை ஆதாரமாகக் காட்டி அரசு வாதிட்டது. ஆனால் நீதிமன்றம் அதனை நிராகரித்துவிட்டு அடிப்படை உரிமைகள் நீதிமன்ற விசாரணைக்குட்பட்டதாகும். ஆகவே அவற்றை நிறைவேற்றி வைக்கும் பொறுப்பு அரசையும், நீதிமன்றங்களையும் சார்ந்ததாகும் என்றும், அரசு நெறிக் கொள்கைகள் நீதிமன்ற விசாரணைக்குட்பட்டதல்ல என அரசியலமைப்புச் சட்டம் குறிப் பிடுவதாகவும் கூறிவிட்டு, சென்னை அரசின் உத்தரவை இரத்து செய்தது.

3. அடிப்படை உரிமைகள் **எதிர்மறைத் தன்மையை (Negative)** கொண்டு விளங்குகிறது. அதாவது, இதில் அரசு இவ்வாறு இருக்கக் கூடாது, அவ்வாறு இருக்கக் கூடாது என கூறப் பட்டுள்ளது. ஆனால் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் **நேர்மறைத் தன்மையைக் (Positive)** கொண்டுள்ளது. அஃதாவது,

1. AIR 1951 SC 228

சில செயல்களை அரசு செய்ய வேண்டும் என்று அதற்குண்டான வழிமுறைகளைக் கூறுகிறது.

4. அடிப்படை உரிமைகள், ஷரத்து 32 மற்றும் 226-ஆல் பாதுகாக்கப்படுகிறது. அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது, உச்ச அல்லது உயர் நீதிமன்றமானது நீதிப்பேராணை அல்லது ஆணைகளை பிறப்பித்து பாதிக்கப்பட்டவருக்கு தீர்வழி தருகிறது. ஆனால் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கு எவ்வித மான சட்டப்பாதுகாப்போ அல்லது சட்டத் தீர்வழியோ கிடையாது.

5. அடிப்படை உரிமைகளை வலியுறுத்திச் செயலாக்க, சட்டமியற்ற அவசியமில்லை. ஆனால் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை வலியுறுத்திச் செயலாக்க தகுதியான சட்டமன்றம் சட்டமியற்ற வேண்டும்.

அடிப்படை உரிமைகளா? அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளா? - முரண்பாடு எழுந்தால் எது மேலோங்கி நிற்கும்?

மேற்கண்ட இரண்டிற்குமிடையே முரண்பாடு தோன்றின், எது மேலோங்கி நிற்கும் என்ற வினாவின் விடை தொடர்ந்து ஏற்பட்ட வழக்குகளில் படிப்படியாக மாற்றத்தினை அடைந்தது.

"அடிப்படை உரிமைகளுக்கும், அரசின் நெறிமுறையுறுத் தும் கொள்கைகளுக்கும் இடையே முரண்பாடு தோன்றினால், அடிப்படை உரிமைகள்தாம் மேலோங்கி நிற்கும். அரசு நெறிக் கொள்கைகள் வலுவிழந்து செல்லுபடியாகாமல் போய்விடும்" என்று நாம் ஏற்கனவே கண்ட **State of Madras v. Chenpakam Durairajan**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

ஆனால் ஒரு ஆண்டு கழித்து, ஜமீன்தாரி ஒழிப்பு வழக்குகளை நீதிமன்றம் கவனிக்கும் போது, மேற்கூறப்பட்ட வழக்கின் முடிவானது, கணிசமான அளவில் மாற்றப்பட்டது.

State of Bihar v. Kameshwar Singh[2] என்ற வழக்கில் ஷரத்து 31-இன் (சொத்துரிமை) பொருளுக்குட்பட்டு, பொது நலனிற்காக இயற்றப்பட்ட ஜமீன்தாரி ஒழிப்புச் சட்டம் அடிப்படை உரிமைகளுக்கு முரண்பட்டதாக அமைந்தாலும், 39-

1. AIR 1951 SC 228
2. AIR 1952 SC 352

வது ஷரத்தில் உள்ள நெறிமுறையுறுத்தும் கொள்கைகளின்படி பொது நல முன்னேற்ற நோக்கங்களுக்காக மேற்படி சட்டம் இயற்றப்பட்டதால், அது செல்லுபடியாகும் என்று தீர்ப்பளிக்கப் பட்டது. இவ்வழக்கில் அடிப்படை உரிமையானது, அரசின் நெறி முறையுறுத்தும் கொள்கையைச் சார்ந்து செயல்பட வேண்டும் என இலைமறை காயாக கூறப்பட்டுள்ளது. இவ்வழக்கு அரசு நெறி முறையுறுத்தும் கொள்கைகளுக்கு சிறப்பிடம் ஏற்பட வழி வகுத்தது.

அதன் பிறகு **In Re Kerala Education Bill**[1] என்ற வழக்கில் அரசுக் கொள்கைகளுக்கும், அடிப்படை உரிமைகளுடன் சம அந்தஸ்து வழங்கப்பட்டது. இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது: "நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் அடிப்படை உரிமைகளை மீற முடியாதென்றும், அடிப்படை உரிமைகளின் நோக்கம் மற்றும் எல்லையினை தீர்மானிக்கும் போது, நெறிமுறையுறுத்தும் கொள்கைகளையும் அரசு அறவே புறக்கணித்தலாகாது என்றும், மாறாக இந்த இரண்டினையும் சேர்ந்து **இசைவமைந்த (இணக்கமுடன் கூடிய) பொருள் விளக்க விதியினைப்** பின்பற்றி **(Harmonious Construction)** இயன்ற அளவு இரண்டிற்கும், அதற்குண்டான விளைவைக் கொடுக்க நீதிமன்றம் முயல வேண்டும் என்றும்" உச்ச நீதிமன்றம் கூறியது.

M.H.Quareshi v. State of Bihar[2] எனும் வழக்கில், "பசு, எருது ஆகியவற்றை வதை செய்தல் கூடாது" என்ற சட்டம், ஷரத்து 19(1)(g)-ஆல் தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமையான வியாபார உரிமையை பாதிப்பதாக உள்ளதெனக் கூறி இறைச்சி வியாபாரம் செய்பவர்கள் வழக்குத் தொடுத்தனர். இவ் வழக்கினைத் தீர்க்கையில், உச்ச நீதிமன்றம் மேற்படி சட்டத்தினை ஷரத்து 48ஐக் கருத்தினில் கொண்டு பார்கையில், ஷரத்து 19(1)(g)-இன் கீழ் வியாபாரம் செய்யும் சுதந்திரத்தின் மீதான நியாயமான கட்டுப்பாடாகக் கருதப்படும், என்று கூறியது. **(ஷரத்து 48-கால்நடை பராமரிப்பு மற்றும் அதை வதை செய்தல் கூடாது.)**

அரசியலமைப்பு திருத்தச் சட்டங்களுக்குப் பிறகு:

1972-ஆம் ஆண்டிற்குப் பிறகு, அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை உயர்த்திக் காட்டும் வகையில், மாறுதல்

1. AIR 1957 SC 956
2. AIR 1980 SC 731

ஏற்பட்டது. முதற்படியாக, 25-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின்படி, 31-C என்ற புதிய ஷரத்து சேர்க்கப்பட்டது. இது 39(b), (c) எனும் மக்கள் நலனை முன்னேற்றும் ஷரத்துக்களை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்ட சட்டம் என்றும், ஷரத்துகள் 14 மற்றும் 19 ஆகியவற்றை மீறுவதாக இருப்பினும், அச்சட்டம் செல்லத்தக்கதே ஆகும் என்று **Waman Rao v. Union of India**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

இதற்குப்பின், மேற்படி ஷரத்து 31-C ஆனது 1976-இல் இயற்றப்பட்ட 42-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தால், மேலும் திருத்தப்பட்டது. இது மேற்கூறியதை மேலும் விரிவாக்கியது. அதன்படி அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கு செயல்வடிவம் கொடுக்கும் எச்சட்டமாவது அடிப்படை உரிமைகளான ஷரத்துகள் 14, 19, 31ஐ மீறுவதாக இருந்தாலும், அச்சட்டம் செல்லத்தக்கதே ஆகும் எனக் கூறியது.

ஆனால் **Minerva Mills v. Union of India**[2] என்ற வழக்கில் 42-வது திருத்தச் சட்டத்தால் கூறப்பட்ட மேற்படி கூற்றை அரசியலமைப்பற்றது, என உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே 42-வது திருத்தச் சட்டத்திற்கு முன்பிருந்த நிலையே தொடர்ந்து அமலில் இருக்கிறது. மேலும் இவ்வழக்கில் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கும், அடிப்படை உரிமைகளுக்கும் இடையே உள்ள சமநிலையை (balance) அடிப்படையாகக் கொண்டுதான் நமது அரசியலமைப்பே அமைந்திருக்கிறதென்றும், அவற்றில் **ஒன்றுக்கு மட்டும் முழுமையான மேலாதிக்கம் (absolute primacy) கொடுப்பது, அச்சமநிலையைக் குலைப்பதாகும்** என்றும் உச்ச நீதிமன்றம் முத்தாய்ப்பாகக் கூறியது.

(ii) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளின் வகைப்பாடு – சமூகப் பொருளாதாரம் – சமூகப் பாதுகாப்பு – சமூக நலம்
[Classification of the Directives - Social and Economic Charter - Social Security Charter - Community Welfare Charter]

1. AIR 1980 SC 173
2. AIR 1980 SC 1789

78. Classify the Directive principles of State Policy. Explain them in detail. (அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை வகைப்படுத்தி அவற்றை விரிவாக விளக்குக.)

முன்னுரை:

ஒரு அரசு எவற்றை அடைவதற்காக செயல்பட வேண்டும் என்று கூறுவது அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் ஆகும். அக்கொள்கைகளில் கூறப்பட்டுள்ளவற்றிற்கு செயல்வடிவம் கொடுக்க சட்டமியற்றுத் துறையும், நிறைவேற்றுத் துறையும் முனைய வேண்டும். ஒரு அரசியல்வாதியிடம், "நீங்கள் எதற்காக ஆட்சிக்கு வர வேண்டும் என்று விரும்புகிறீர்கள்" என்று வினா எழுப்பினால், அதற்கு அவர், "இந்திய அரசியலமைப்பில் கூறப் பட்டுள்ள அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளுக்கு செயல் வடிவம் கொடுக்க" என்று விடையளித்தால், அந்த அரசியல்வாதி மக்களாட்சியும், அரசியலும் நன்கு தெரிந்தவர் என்று உடனடியாக தீர்மானித்து விடலாம். எனவே ஒரு அரசு அவ்வப்போது கிடைக் கும் வழிமுறைகளைக் கொண்டு எந்தெந்த இலக்குகளை தனது ஆட்சியின் மூலம் எட்ட வேண்டும் என்று உரைப்பதே அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் ஆகும். அக்கொள்கைகளை பின்வரும் மூன்று தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவை,

(a) சமூகம் மற்றும் பொருளாதாரம் (Social and Economic Charter) :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 38(1)-ஆனது அரசு ஒரு சமுதாய ஒழுங்கமைதியைக் கொண்டு வருவதன் மூலம் மக்களின் நலனைப் பாதுகாத்து, மேம்படுத்த வேண்டும் என்றும், அந்த ஒழுங்கமைவு என்பது சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியலில் நீதி நிலவச் செய்வதைக் குறிக்கும் என்றும் கூறுகிறது. அதாவது இந்நெறிமுறை நமது அரசியலமைப்பின் முகப்புரையில் கண்ட நோக்கத்தை பிரதிபலிப்பதாக உள்ளது. அதன்படி மக்கள் குடியரசின் பணியே அதன் குடிமக்களுக்கு சமூக, பொருளாதார மற்றும் அரசியல் நீதியைப் பெற்றுத் தருவதாகும்.

1978-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பு 44-வது திருத்தச் சட்டமானது 38(2) என்ற ஒரு புதிய ஷரத்தை அரசு நெறிமுறையுத்தும் கொள்கைகளில் சேர்த்தது. அதன்படி, அரசு, மக்களின் வருமானத்தில் நிலவும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்து,

அவர்களின் தகுநிலை, வசதிகள் மற்றும் வாய்ப்புகளில் நிலவும் சமமின்மையை களைய முற்பட வேண்டும் என்று கூறுகிறது. இதை தனிப்பட்ட நபர்களிடையே மட்டுமல்லாமல், பல்வேறு பகுதி களில் வசிக்கும் அல்லது பல்வேறு பணிகளைச் செய்து வரும் மக்கள் குழுக்களிலும் கொண்டு வர அரசு முயல வேண்டும் என்றும் மேற்படி ஷரத்து கூறுகிறது.

இதையடுத்து பொருளாதார நீதியினைக் காக்க அரசினால் பின்பற்றப்பட வேண்டிய கொள்கைகள் குறித்து ஷரத்து 39 கூறுகிறது. அஃதாவது, (1) போதுமான வாழ்க்கைப் பிழைப்பிற்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் சம உரிமை உண்டு; (2) சமூகத்தின் முக்கிய மூல வளங்களின் உடைமையும், கட்டுப்பாடும் பொது நன்மையைச் சார்ந்து சிறந்த முறையில் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்; (3) பொருளதார முறையானது செல்வக் குவிப்பிற்கும், உற்பத்தி முறையானது மக்களுக்கு இழப்பாகும்படியும் அமைதல் கூடாது; (4) ஆண் பெண் இருவருக்கும் சம வேலைக்கு சம ஊதியம் கிடைக்க வேண்டும்; (5) பணியாட்கள் மற்றும் இளம் குழந்தை களின் ஆரோக்கியம் மற்றும் உடல் வலிமையை பாதுகாக்க வேண்டும். அவர்கள் தங்கள் வயது மற்றும் உடல் வலிமைக்கு பொருந்தாத பணிக்குச் செல்லும்படியான ஒரு பொருளாதார தேவைக்கு ஆளாக்கப்படக் கூடாது; (6) குழந்தைகள் தங்களை ஆரோக்கியமான முறையில் மேம்படுத்திக் கொள்ளவதற்கான மற்றும் குழந்தைப் பருவத்திற்கான சுதந்திரம் மற்றும் மாண்பிற் குரிய சூழலுக்குண்டான வாய்ப்புகளும் வசதிகளும் செய்து தரப் பட வேண்டும் மற்றும் இளைஞர்கள் சுரண்டலுக்கு எதிராகவும், ஒழுக்கத்திலிருந்து வழுவச் செய்வதற்கு எதிராகவும் பாதுகாக்கப் பட வேண்டும்.

(b) சமூகப் பாதுகாப்பு (Social Security Charter) :

சமூகப் பாதுகாப்பிற்கு என்னென்ன நடவடிக்கைகளை இந்திய அரசு எடுக்க வேண்டும் மற்றும் எவற்றிற்கு பாதுகாப்பு தர வேண்டுமென ஷரத்துகள் 40 முதல் 43-A வரையிலும் மற்றும் 45 முதல் 47 வரையிலும் குறிப்பிடுகின்றன.

அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 43-A தொழிற்சாலை மேலாண்மையில் தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொள்வதற்கு வழிவகை செய்யும் சட்ட திட்டங்களை இயற்ற அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

ஷரத்து 41-ஆனது வேலையின்மை, முதுமை, நோய், இயலாமை ஆகிய சூழல்களில் அரசு தனது பொருளாதார தகுநிலை மற்றும் மேம்பாட்டின் வரம்பிற்குள் வேலைவாய்ப்பு, கல்வி, அரசு உதவி ஆகியன மக்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.

ஷரத்து 42-ஆனது நியாயமான மனித வாழ் நிலைகளை உறுதி செய்யவும், பேறுகால நிவாரணம் வழங்கவும் அரசு உரிய வகைமுறைகளை இயற்ற வேண்டும் என்று கூறுகிறது.

ஷரத்து 43-ஆனது பணியாளர்களுக்கு வாழ்க்கைக்கான ஊதியம் (Living Wage) கிடைத்தலை அரசு உறுதி செய்ய வேண்டும் என்று கூறுகிறது.

ஷரத்து 45-ஆனது குழந்தைகள் 6 வயது முடியும் வரை அவர்களுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளிக்க அரசு வழி வகை செய்ய வேண்டும் என்று கூறுகிறது.

ஷரத்து 47-ஆனது ஒரு முக்கியக் கடமையை அரசின் மீது சுமத்துகிறது. அதாவது, அரசு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தவும் கடமை கொண்டுள்ளதாக அச்ஷரத்து கூறுகிறது.

ஷரத்து 46-ஆனது சமுதாயத்தில் நலிவடைந்த பிரிவினரின் கல்வி மற்றும் பொருளாதார நலனை அரசு மேம்படுத்த வேண்டும் என்று கூறுகிறது.

ஷரத்து 39-A ஆனது பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினருக்கு சம நீதி கிடைப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும், அரசு அவர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்க வேண்டும் என்றும் கூறுகிறது.

ஷரத்து 40-ஆனது கிராம ஊராட்சிகளை நிறுவி, அதற்கான அதிகாரங்களை வழங்கி அவை கிராமங்களில் தன்னாட்சி பெற்ற அமைப்புகளாக செயல்பட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறுகிறது. இது ஜனநாயகத்தை சமூகத்தின் அடி மட்டத்திலும் நிலவ வழிவகை செய்கிறது.

(c) சமூக நலம் (Community Welfare Charter) :

சமூக நலனை மேம்படுத்த அரசு என்ன நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு 44, 48 முதல் 51 வரையில் உள்ள ஷரத்துகள் வழிகாட்டுகின்றன.

ஷரத்து 44-ஆனது இந்திய எல்லை முழுவதும் பொருந்தக் கூடிய **ஒரே சீர்மையான உரிமையியல் சட்டத்தை (Uniform Civil Code)** குடிமக்களுக்கு அரசு ஏற்படுத்தித் தர வேண்டும் என்று கூறுகிறது.

ஷரத்து 48-ஆனது அரசு வேளாண்மை மற்றும் கால் நடைப் பராமரிப்பை நவீனமாக அமைக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று கூறுகிறது. குறிப்பாக கால்நடைத் தீவனங்களை பாதுகாக்கவும், அவற்றின் தரத்தை மேம்படுத்தவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், பசு மற்றும் இதர கறவை இனங்களை வதை செய்வதை அரசு தடுக்க வேண்டும் என்றும் மேற்படி ஷரத்து 48 கூறுகிறது.

ஷரத்து 48-A ஆனது காடுகள் மற்றும் வன வாழ் விலங்குகளை பாதுகாத்து மேம்படுத்த அரசு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று விதிக்கிறது.

ஷரத்து 49-ஆனது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சின்னங்கள், இடங்கள் மற்றும் பொருட்களை பாதுகாக்க அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது.

ஷரத்து 50-ஆனது அரசின் பொதுச் சேவைகளில் நீதித் துறையை நிறைவேற்றுத்துறையிலிருந்து பிரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இது நாட்டில் சட்டத்தின் ஆட்சி நடைபெற இன்றியமையாத ஒன்றாகும்.

ஷரத்து 51-ஆனது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த அரசு பாடுபட வேண்டும் என்று கூறுகிறது.

முடிவுரை:

இந்நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை நோக்கங்களாக கொண்டு இந்திய அரசு செயல்பட வேண்டும். இவற்றை நிறை வேற்றும் முகமாக இந்திய அரசு அவ்வப்போது பல்வேறு சட்டங்களை இயற்றியுள்ளது, திட்டங்களை வகுத்துள்ளது குறிப் பிடத்தக்கது.

(iii) அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை செயற்படுத்தல் [Implementation of Directives]

78A. Implementation of the directive principles - Write short notes. (வழிகாட்டும் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்தல் - குறுகிய விடை தருக.)

முன்னுரை:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் காட்டும் வழியில் சென்று அவற்றில் பலவற்றை செயற்படுத்த (அதாவது நடைமுறைப்படுத்த) மைய மற்றும் மாநில அரசுகள் தங்களுக்கிருக்கும் வளங்களைக் கொண்டு இயன்ற அளவு முயன்றுள்ளன.

ஷரத்து 39(b)-யின் கீழ் நிலங்களுக்கு பரம்பரை உரிமை கொண்டாடும் பழைய முறையை அதாவது ஜமீன்தார், ஜாகீர்தார் ஆகியவற்றை அரசுகள் ஒழித்தன. உழுபவர்களுக்கே நிலத்தை சொந்தமாக்கின. இந்த சீர்திருத்தம் காலப்போக்கில் இந்தியா முழுவதும் கொண்டு வரப்பட்டது. அதே நேரத்தில் விவசாயிகளின் நிலைகளை மேம்படுத்த பல மாநிலங்களில் சட்டங்கள் இயற்றப் பட்டன. ஒருவரே பெரும் பரப்பளவு கொண்ட நிலத்திற்கு உரிமை யாளராக இருக்கக் கூடாது என்பதற்காக நில உச்ச வரம்பு சட்டங்கள் இயற்றப்பட்டன. இவை ஒரு தனியாள் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் நிலத்தைக் கொண்டிருத்தல் கூடாது என்று வரம்பிட்டன.

இந்திய சமுதாயத்திற்கு ஒரு சாபக்கேடாக இருந்த தீண்டாமை ஒழிக்கப்பட்டு, அது தற்போது தண்டனைக்குரிய ஒரு குற்றமாக ஆக்கப்பட்டது. பணியாட்களுக்கு குறைந்தபட்ச ஊதியத்தை அரசு நிர்ணயம் செய்தது. தொழிலாளர் சட்டங்களை நவீனமாக்கி, தொழிலாளர்களின் நிலையை மேம்படுத்தியது. கிராமங்களில் ஊராட்சி (பஞ்சாயத்து) முறை கொண்டு வரப் பட்டது. இந்த ஊராட்சிகளுக்கு மக்கள் நிர்வாகத்திற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அதாவது கிராம மக்களுக்கு மருத்துவ நிவாரணம் அளித்தல், கிராமச் சாலைகள், தெருக்கள், தொட்டிகள், கிணறுகள் ஆகியவற்றைப் பராமரித்துக் கொள்ளு

தல், ஆரம்பக் கல்வி வழங்குவதற்கான வழிவகைகள், சுகாதாரம் பேணுதல், இன்னும் இது போன்ற மக்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் அதிகாரங்கள் ஊராட்சிகளுக்கு வழங்கப் பட்டன. குடிசைத் தொழிலை மேம்படுத்த அரசு பல்வேறு வாரியங்களை நிறுவியது.

ஷரத்து 40-இல் கூறப்பட்ட கொள்கையை செயலாக்க பல்வேறு சட்டங்கள் இயற்றப்பட்டன. குறிப்பாக 1992-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட 73 மற்றும் 74-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் வாயிலாக 'பஞ்சாயத்து ராஜ் மற்றும் நகர்பாலிகா' முறை கொண்டு வரப்பட்டது. அதாவது ஊராட்சி மற்றும் நகராட்சி முறை ஏற்படுத்தப்பட்டது. சமூகப் பொருளா தார சீர்திருத்த நடவடிக்கையாக 1971-ஆம் ஆண்டில் 14 முக்கிய வங்கிகள் தேசியமயமாக்கப்பட்டன.

ஒரு புறம் நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை செயலாக்க அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அதே நேரத்தில் உச்ச நீதிமன்றமும் தன் பங்குக்கு அக்கொள்கை களை தன் முன் எழும் வழக்குகளில் செயலாக்கி வருகின்றன. குறிப்பாக உச்ச நீதிமன்றம் தனது அண்மைக் கால தீர்ப்புகளில் மேற்கண்ட நெறிமுறையுறுத்தும் கொள்கைகளை செயலாக்கும் வகையில் (Implementation of Directives) அவற்றை அடிப்படை உரிமைகளாக நிலை நிறுத்தியுள்ளது. எடுத்துக்காட்டாக (1) சம வேலைக்கு சம ஊதியம், (2) சுரண்டலிலிருந்து குழந்தைகளை பாது காத்தல், (3) அபாயகரமான பணிகளில் குழந்தைகளை பணிக்கமர்த் துவதை ஒழித்தல், (4) 14 வயதிற்கும் கீழுள்ள குழந்தைகளுக்கு இலவச மற்றும் கட்டாயக் கல்வி அளித்தல் (ஷரத்து 39, 41, 45 மற்றும் 47-இன் கீழ்), (5) பாலியல் தொந்தரவுகளிலிருந்து பணியாற்றும் பெண்களை பாதுகாத்தல், (6) ஏழைகளுக்கு இலவச சட்ட உதவி, (7) விசாரணைக் கைதிகளுக்கு விரைவான விசாரணை (ஷரத்து 39-A), (8) பணியாளர்களுக்கு பணியாற்றும் உரிமை மற்றும் மருத்துவ உதவி (ஷரத்து 41), (9) சுற்றுச்சூழல் மாசடை வதைத் தடுத்தல் (ஷரத்து 48-A). இவ்வாறு அரசு செல்ல வேண்டிய மக்களாட்சியின் பாதையை வழிகாட்டும் நெறிகளாக இக் கொள்கைகள் உள்ளன.

-oOo-

அத்தியாயம் 10

அடிப்படைக் கடமைகள்
(ஷரத்து 51–A)
[Fundamental Duties]
(Article 51-A)

அடிப்படைக் கடமைகளின் தேவை – மூலம் – நிறைவேற்றுதல்
[Need for Fundamental Duties - Source of Fundamental Duties - Enforcement of Fundamental Duties]

79 . Fundamental Duties - Write short notes. (அடிப்படைக் கடமைகள் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Source of Fundamental Duties - Write short notes. (அடிப்படைக் கடமைகளின் மூலம் - குறுகிய விடை தருக.)

(அல்லது)

Enforcement of Fundamental Duties - Write short notes. (அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுதல் - குறுகிய விடை தருக.)

அடிப்படைக் கடமைகள்:

1976-ஆம் ஆண்டின் அரசியலமைப்பு திருத்தச்(42-வது திருத்தம்) சட்டமானது, இந்தியக் குடிமக்களுக்கு பத்து அடிப்

படைக் கடமைகளின் தொகுப்பினை அறிமுகப்படுத்தி உள்ளது. இதற்காக 51-A எனும் ஒரேயொரு ஷரத்தைக் கொண்ட IV-A எனும் பகுதி (Part IV-A) புதிதாக அரசியலமைப்புச் சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. இச்ஷரத்தின் கீழ் அப்பத்து அடிப்படைக் கடமைகள் பின்வருமாறு கூறப்படுகிறது. ஷரத்து 51-A, இந்தியக் குடிமகன் ஒவ்வொருவருக்கும் பின்வருவனவற்றைக் கடமை எனக் கூறுகிறது.

(a) அரசியலமைப்பினை பின்பற்றுதல், மற்றும் அதன் குறிக்கோள்கள், அமைப்புகள், தேசியக் கொடி மற்றும் இவற்றுக்கு மரியாதை செலுத்துதல்;

(b) நமது நாட்டு விடுதலைப் போராட்டத்தை தூண்டிய உயர்ந்த குறிக்கோள்களை பின்பற்றுதல் மற்றும் போற்றி வளர்த்தல்;

(c) இந்தியாவின் இறையாண்மை, ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டை நிலைநிறுத்தல் மற்றும் பாதுகாத்தல்;

(d) நாட்டினைப் பாதுகாத்தல் மற்றும் அழைக்கப்படும் போது தேசியப் பணி புரிதல்;

(e) சமயம், மொழி மற்றும் வட்டாரம் அல்லது பிரிவு வேறுபாடுகளைக் கடந்து இந்திய மக்களுக்குள் பொது சகோதரத்துவ உணர்வு மற்றும் இணக்கத்தினை மேம்படுத்துதல்; பெண்களின் மேன்மையை தாழ்த்துகின்ற பழக்கங்களை துறத்தல்;

(f) நமது பல்வகையான கலாச்சாரத்தின் உயர்ந்த பாரம்பரியத்திற்கு மதிப்பளித்தல் மற்றும் பேணுதல்;

(g) காடுகள், ஏரிகள், ஆறுகள் மற்றும் வன வாழ்க்கை உள்ளிட்ட இயற்கை சுற்றுப்புற சூழலை பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துதல் மற்றும் வாழும் உயிரினங்களுக்காக இரக்கம் கொள்ளுதல்;

(h) ஆய்வறிவு விளைவு நிலை, மனித நலம் மற்றும் விசாரணை உணர்வு மற்றும் சீர்திருத்தங்களை மேம்படுத்தல்;

(i) பொதுச் சொத்துக்கு பாதுகாப்பு அளித்தல்;

(j) எல்லாத் துறைகளிலும், தனிமனிதன் மற்றும் கூட்டுச் செயல்பாடுகளில் முதன்மை நிலையை நோக்கி முயலுதல்.

இதனால், நாடு முயற்சியின் உயர்படி நிலை சாதனைகளை நோக்கி நிலையாக உயருகிறது;

2002-ஆம் ஆண்டில் கொண்டுவரப்பட்ட 86-வது அரசியலமைப்பு திருத்தச் சட்டமானது மேற்படி ஷரத்து 51-A இல் (k) என்றொரு புதிய உட்கூறை சேர்த்தது. அது, "6 மற்றும் 14 வயதுக்கு இடைப்பட்ட வயதில் உள்ள தனது குழந்தை அல்லது காப்பிலுள்ள குழந்தைக்கு நேர்விற்கேற்ப அதன் பெற்றோர் அல்லது காப்பாளர் கல்விக்கான வாய்ப்புகளை வழங்க வேண்டும் (who is parent or guardian to provide opportunities for education to his child or as the case be, ward between the age of six and fourteen years)," என்று ஒரு முக்கியக் கடமையை வலியுறுத்துகிறது.

அடிப்படைக் கடமைகளின் தேவை (Need for Fundamental Duties):

உரிமைகளும் கடமைகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன. நமது இந்திய அரசியலமைப்புச் சட்டம் குடிமக்களுக்கு சில அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளதை நாம் கண்டுள்ளோம். இதை அடிக்கடி நினைவூட்டும் வகையில் அக்குடிமக்களுக்கு சில அடிப்படைக் கடமைகளையும் விதிக்க வேண்டியது தேவையாக உள்ளது. மேலும் குடிமக்கள் மக்களாட்சி உறவின் மற்றும் மக்களாட்சி நடத்தையின் சில நெறிகளை பின்பற்ற வேண்டியதும் அவசியமாக உள்ளது. எனவே அரசியலமைப்பை இயற்றும் போது அப்போதைய அரசு செய்யத் தவறியதை, பின் வந்த அரசு, 1976-ஆம் ஆண்டில் கொண்டு வந்த திருத்தச் சட்டத்தின் வாயிலாக 'அடிப்படைக் கடமைகள்' என்ற தலைப்பில் தனியொரு அத்தியாயத்தின் வாயிலாக அரசியலமைப்புச் சட்டத்தில் சேர்த்தது.

அடிப்படைக் கடமைகளின் மூலம் (Source of Fundamental Duties):

மேற்கத்திய நாடுகளின் அரசியலமைப்புகள் எவையும் குடிமக்களின் கடமைகளையோ, கடப்பாடுகளையோ குறிப்பிட்ட வகையில் எடுத்துரைக்கவில்லை. உலகின் ஜனநாயாக நாடுகளில், குடிமக்கள் ஆற்ற வேண்டிய சில கடமைகள் குறித்து ஜப்பான் அரசியலமைப்பு கூறுகிறது. பிரிட்டன், கனடா மற்றும் ஆஸ்திரேலியாவில் குடிமக்களின் உரிமைகள் மற்றும் கடமைகளானவை பெரிதும் அந்நாட்டின் பொதுச் சட்டத்காலும்,

நீதிமன்றத் தீர்ப்பு நெறிகளாலும் வழிநடத்தப்படுகின்றன. ஃபிரான்ஸ் அரசியலமைப்பில் குடிமக்களின் கடமைகள் பற்றி ஒரு சிறு குறிப்பு மட்டுமே உள்ளது. அமெரிக்க அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகள் பற்றி மட்டுமே கூறப்பட்டுள்ளதே தவிர, குடிமக்களின் கடமைகள் பற்றிய குறிப்பு ஏதுமில்லை. எனினும் இதைக் கொண்டு இந்நாடுகளின் மக்கள் பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்வர் என்று பொருள் கொண்டுவிடக் கூடாது. இந்த நாடுகளில் எல்லாம் மக்கள் குடியுரிமையின் சில சிறு கடமைகள் மற்றும் கடப்பாடுகள் தொடர்பாக பெற்ற கல்வி மற்றும் பயிற்சியின் விளைவாக எழுந்த தேசப்பற்று உணர்வை தன்னகத்தே கொண்டவர்களாக உள்ளனர்.

அதே நேரத்தில் சோசலீச நாடுகளின் அரசியலமைப்பில் குடிமக்களின் கடமைகள் பற்றி பெரும் முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. சோசலீச நாடுகளில், சோவியத் அரசியலமைப்பில் நடிமக்களின் கடமைகள் பற்றி விரிவான அத்தியாயமே உள்ளது. அதன் அத்தியாயம் 7-ஆனது குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை விரிவாகக் கூறுகின்றது. அது போல சீனக் குடியரசு அரசியலமைப்பின் அத்தியாயம் 2-ஆனது மக்களின் மீது திட்டவட்டமான சில கடமைகளை விதிக்கிறது.

அந்த வகையில் நமது இந்திய அரசியலமைப்பு அடிப்படை உரிமைகளுக்கென ஒரு தனி அத்தியாயத்தை ஒதுக்கி விளக்குகிறது. அதுபோல் அடிப்படை கடமைகளுக்கும் IV-A எனும் ஒரு தனி அத்தியாயத்தை ஒதுக்கியுள்ளது.

அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுதல் (Enforcement of Fundamental Duties):

அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுதல் என்பதை நாம் இங்கு வலியுறுத்திச் செயற்படுத்தல் என்று கொள்ளலாம். இந்திய அரசியலமைப்பில் 42-ஆம் திருத்தச் சட்டத்தின் வாயிலாக சேர்க்கப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகள் சட்டப்படியான கடமைகள் (Statutory Duties) ஆகும். எனவே அவற்றை சட்டத்தின் மூலம் வலியுறுத்திச் செயற்படுத்த முடியும். அந்த கடமைகளை கடைப்பிடிக்கத் தவறினால் அதற்கு அபராதம் விதிக்க பாராளுமன்றம் சட்டத்தின் மூலம் வகை செய்யலாம். எனினும், இது வெற்றி பெறுவது என்பது எந்த முறையில் மற்றும் யாருக்கு எதிராக இந்த அடிப்படைக் கடமைகள் வலியுறுத்திச்

செயல்படுத்தப்பட வேண்டும் என்பதைச் சார்ந்தே உள்ளது.

இக்கடமைகளை சரியான முறையில் வலியுறுத்த வேண்டுமெனில், இவை குறித்து எல்லோரும் அறியப்படுத்த வேண்டும். இது விளம்பரம் அல்லது கல்விப் பாடத் திட்டத்தில் ஒரு அங்கமாக கொண்டு வருவதன் மூலமே மக்களுக்கு எடுத்துச் செல்ல முடியும். இந்நாட்டு மக்களில் பெரும்பான்மையோர், கல்வியறிவற்றவர்களாக உள்ளனர். மேலும் அவர்கள் சமுகத்திற்கும் நாட்டுக்கும் என்னென்ன கடமை கொண்டவர்களாக உள்ளனர் என்ற அரசியல் உணர்ச்சியின்று அற்றவர்களாக உள்ளனர்.

M.C.Mehta (2) v. Union of India[1] என்ற வழக்கில் வரலாறு 51-A (g)-இன் கீழ் இயற்கைச் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு பற்றி வாரத்திற்கு குறைந்தபட்சம் ஒரு மணி நேரமாவது கட்டாயமாக பாடம் கற்பிப்பதை நாட்டின் அனைத்து கல்வி நிலையங்களிலும் அறிமுகப்படுத்த வேண்டியது மைய அரசின் கடமையாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் அப்பாடம் சம்பந்தப்பட்ட புத்தகங்களை மைய அரசு எழுதப் பெற்று, அவற்றை எல்லா கல்வி நிலையங்களுக்கும் இலவசமாக விநியோகிக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஏவுரைத்தது. சுற்றுச் சூழல் சுகாதார உணர்வு குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த ஒவ்வொரு பெரு நகரத்திலும், நகரத்திலும், கிராமத்திலும் ஆண்டிற்கொரு முறையாவது சுகாதார வாரம் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது.

அடிப்படைக் கடமைகளில் சில ஏற்கனவே சாதாரண சட்டத்தின் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக இந்தியாவின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டை பாதிக்கக் கூடிய எச்செயலும் சட்ட விரோதமானதாகும் மற்றும் தண்டிக்கப் படத்தக்கதுமாகும் என சட்டங்கள் முன்னரே இயற்றப்பட்டுள்ளன. அடிப்படைக் கடமைகள் தனிப்பட்ட குடிமகனின் கடமைகளாக (duties of individual citizen) கருதப்படுவதால், இவற்றை செயலுறுத்தும் நீதிப்பேராணை (mandamus) மூலம் வலியுறுத்த முடியாது. சுருங்கக் கூறின், இவை பொதுக் கடமைகள் (Public duties) அல்ல. அடிப்படைக் கடமைகளை குடிமக்கள் அனைவரும் பின்பற்றினால், அது இந்திய மக்களாட்சிக்கு மேலும் பெருமை சேர்க்கும்.

---

1. (1983) I SCC 471

பகுதி 2

பிரச்சனைகளும் தீர்வுகளும் [Problems and Solutions]

பிரச்சனை 1 :

A bill was introduced in Parliament on the recommendation of the President and after obtaining an opinion from the concerned State legislature regarding division of the State. Contrary to the opinion expressed by the concerned State legislature, Parliament passed the law. Decide on the constitutional validity of the law passed by Parliament.

மாநிலத்தை பிரிப்பது தொடர்பாக அந்த மாநிலத்தின் சட்டமன்றத்தின் கருத்தைப் பெற்ற பிறகு மற்றும் குடியரசுத் தலைவரின் பரிந்துரைப்படி ஒரு சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்றது. அந்த மாநில சட்டமன்றம் தெரிவித்த கருத்திற்கு எதிராக, நாடாளுமன்றம் சட்டத்தை நிறைவேற்றுகிறது. நாடாளுமன்றம் நிறைவேற்றிய அச்சட்டத்தின் அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்க நிலையை முடிவு செய்க.

தீர்வு :

மேற்படி பிரச்சனையின்படி, ஒரு மாநிலத்தைப் பிரிக்க ஷரத்து 3-இன்படி குடியரசுத் தலைவர், அம்மாநில சட்டமன்றத்தின் கருத்துகளைப் பெற வேண்டும். எனினும் அவர் அக்கருத்துகளுக்கு உட்பட்டுதான் செயல்பட வேண்டுமென்பதில்லை. அவர் அதற்கு எதிராகவும் செயல்பட்டு, மாநிலத்தைப் பிரிப்பதற்கான மசோதாவை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்த தனது பரிந்துரைகளை வழங்கி விடலாம். எனவே இச்சூழலில், பாராளுமன்றம் அம்மசோதாவை சட்டமாக்கிவிட்டாலும், அது செல்லத்தக்கதே. (மேலும் விரிவாக பக்கம் எண். 116-இல் காண்க.)

பிரச்சனை 2 :

Without obtaining the consent of the particular state,

the union parliament passed a law under Article 3 bifurcating the State into two states. Discuss its validity.

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் சம்மதத்தை பெறாமலேயே அம்மாநிலத்தை இரண்டு மாநிலங்களாக பிரிக்க வகை செய்யும் சட்டத்தை மத்தியப் பாராளுமன்றம் அரசமைப்பின் 3-ஆம் பிரிவின் கீழ் இயற்றியது. இதன் செல்லும் தன்மையை விவாதிக்க.

தீர்வு :

முன் சென்ற பிரச்சனைக்கு கொடுக்கப்பட்ட தீர்வே இப் பிரச்சனைக்கும் பொருந்தக் கூடியதாகும். பாராளுமன்றம் இயற்றிய சட்டம் செல்லத்தக்கதே. ஒரு மாநிலத்தைப் பிரிக்க ஷரத்து 3-இன்படி குடியரசுத் தலைவர், அம்மாநில சட்டமன்றத்தின் கருத்துகளைப் பெற வேண்டும். எனினும் அவர் அக்கருத்துகளுக்கு உட்பட்டுதான் செயல்பட வேண்டுமென்பதில்லை. அவர் அதற்கு எதிராகவும் செயல் பட்டு, மாநிலத்தைப் பிரிப்பதற்கான மசோதாவை பாராளுமன்றத் தில் அறிமுகப்படுத்த தனது பரிந்துரைகளை வழங்கி விடலாம். எனவே இச்சூழலில், பாராளுமன்றம் அம்மசோதாவை சட்டமாக்கி விட்டாலும், அது செல்லக்கூடியதே. ஒரு மாநிலத்தை இரண்டாகப் பிரிக்கும் சட்ட முன்வடிவை அம்மாநிலத்தின் சம்மதத்திற்காக (கருத்துகளுக்காக) அதற்கு அனுப்ப வேண்டும் என்பது அரசியல மைப்புச் சட்டம் கூறும் ஒரு நடைமுறை. அது சம்மதம் தந்தாலும், தராவிட்டாலும் பாராளுமன்றம் அச்சட்டமுன்வடிவை சட்டமாக இயற்றி விடலாம். ஒரு மாநிலத்தைப் பிரிப்பது, இரண்டு மாநிலங் களைச் சேர்ப்பது, புதிய மாநிலங்களை உருவாக்குவது ஆகியன யாவும் மையஅரசின் இன்விருப்பத்தைப் பொறுத்ததாகும் (The very existence of a State depends upon the sweet will of the central government). (மேலும் விரிவாக பக்கம் எண். 116-இல் காண்க.)

பிரச்சனை 3 :

The parliament passed a Bill empowering the union government to bifurcate a State. It was strongly protested by the State. In spite of the protest the State was divided into two States. A case was filed by the State before the Supreme Court. Decide.

ஒரு மாநிலத்தை இரண்டாகப் பிரித்திட மத்திய அரசிற்கு அதிகாரம் வழங்கி பாராளுமன்றத்தில் ஒரு சட்டம் இயற்றப்பட்டது.

இதனை அம்மாநிலம் கடுமையாக எதிர்த்தது. இந்த எதிர்ப்பையும் மீறி அம்மாநிலம் இரண்டாகப் பிரிக்கப்பட்டது. இதை எதிர்த்து அம்மாநிலம் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடர்ந்தது. முடிவு செய்க.

முன் சென்ற பிரச்சனைகளுக்கு அளிக்கப்பட்ட தீர்வுகளே இப்பிச்சனைக்கும் பொருந்தும். இங்கு மாநிலத்தின் எதிர்ப்பு முக்கியமல்ல. பாராளுமன்றத்தின் சட்டம் செல்லும். அம்மாநிலம் உச்ச நீதிமன்றத்தில் தொடுக்கும் வழக்கு தோற்றுப் போகும்.

பிரச்சனை 4 :

The Central Government entered into an agreement with a neighbouring country for the exchange of certain state territories. The Union parliament passed a law under Article 3 to give effect to the agreement and to transfer the Indian territory to the neighbouring country. Discuss its validity.

மத்திய அரசு ஒரு அண்டை நாட்டுடன் சில நிலப் பரப்புகளை பரிமாற்றம் செய்து கொள்ளும் ஒப்பந்தம் செய்து கொண்டது. அந்த ஒப்பந்தத்தை செயல்படுத்தவும், நிலப்பரப்பை அந்த அண்டை நாட்டிற்கு உரிமை மாற்றம் செய்யவும் மத்தியப் பாராளுமன்றம் அரசமைப்பின் 3-வது பிரிவின் கீழ் ஒரு சட்டம் இயற்றியது. இதன் செல்லும் தன்மையை விவாதிக்க.

தீர்வு :

முந்தைய இரண்டு பிரச்சனைகளுக்கு அளிக்கப்பட்ட தீர்வுகளின் அடிப்படையில் நமது இப்போதைய பிரச்சனைக்கும் தீர்வளிக்கலாம். அதன்படி, ஒரு அண்டை நாட்டுடன் இந்தியாவின் சில நிலப்பரப்புகளை பரிமாற்றம் செய்து கொள்வதற்காக மத்தியப் பாராளுமன்றம் ஷரத்து 3-இன் கீழ் இயற்றும் சட்டம் செல்லத் தக்கதே. **In Re Berubari Case (or) In Re Berubari Union and Exchange of Enclaves Case**[1] வழக்கை இங்கு குறிப்பிடலாம். *(மேலும் விரிவாக பக்கம் எண். 117-இல் காண்க.)*

பிரச்சனை 5 :

Mr. Ravi, his wife Selvi and his daughter Nirupa were

1. AIR 1960 SC 845

citizens of India. In march 1948, Selvi and Nirupa left for Pakistan and stayed there for six months and there was no explanation for such a stay. However Mr. Ravi continued to live in India. Discuss whether Selvi and Nirupa would be considered as citizens of India.

திரு. ரவி அவர் மனைவி செல்வி மற்றும் அவருடைய மகள் நிருபா ஆகியோர் இந்திய குடிமக்களாக இருந்தனர். 1948-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் செல்வியும், நிருபாவும் பாகிஸ்தானுக்கு சென்று அங்கேயே ஆறு மாதங்களுக்கு மேலாக தங்கி இருந்தனர். இவ்விதம் தங்கியதற்கு எந்த விதமான விளக்கமும் தரப்படவில்லை. ஆனால் திரு. ரவி தொடர்ந்து இந்தியாவிலேயே தங்கியிருந்தார். செல்வியும், நிருபாவும் இந்தியாவின் குடிமக்களாக முடியுமா என்பதை ஆராய்க.

தீர்வு :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகள் 6 மற்றும் 7 குடிபெயர்தல் மூலம் குடியுரிமையைப் பெறல் (Citizenship by Migration) பற்றி கூறுகிறது. இவற்றில் ஷரத்து 7-ஆனது இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து சென்றவர்கள் (Migration from India tc Pakistan) இந்தியக் குடிமக்களாக கருதப்படமாட்டார்கள் என்று கூறுகிறது. அதாவது, இச்ஷரத்தின்படி, 01-03-1947-ஆம் தேதிக்கு பின்னர், இந்தியாவிலிருந்து பாகிஸ்தானுக்கு குடி பெயர்ந்து சென்றவர்கள், இந்தியக் குடிமக்களாக கருதப்படமாட்டார்கள். எனினும், அவ்வாறு பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து சென்றவர்கள், சட்டம் எதனின் அதிகாரவுரிமையின் வாயிலாகவோ அல்லது கீழாகவோ மறு குடியமர்விற்காக அல்லது நிலையாகத் திரும்பி விடுவதற்காக வழங்கப்பட்ட ஓர் அனுமதிச் சீட்டின் கீழ் இந்தியாவிற்கு திரும்பி வந்து விட்டால், அவர்கள், 19-07-1948-ஆம் தேதிக்கு பிறகு பாகிஸ்தானிலிருந்து இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்தவர்களாகவும், இந்தியக் குடிமக்களாகவும் கருதப்படுவர். ஆனால், அவர்கள் மேற்படி ஷரத்து 6 (b) (ii)-ல் குறிப்பிட்டபடி இந்தியக் குடிமக்களாக ஆவதற்குரிய பதிவைச் செய்து கொண்டிருத்தல் வேண்டும்.

State of Bihar v. Amar Singh[1] எனும் வழக்கில், மணமான ஒரு பெண்மணி, 01-03-1947-க்குப் பின்னர் இந்தியாவில் தனது

1. AIR 1955 SC 282

கணவனை விட்டு விட்டு பாகிஸ்தானுக்கு சென்றார். இதனால் தனது இந்தியக் குடியுரிமையை இழந்தார். வழக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்றது. அங்கு, அப்பெண்மணி, தான் இந்தியாவில் பிறந்த தாகவும், தனது உறைவிடம் (Domicile), தனது கணவனின் உறைவிட மான இந்தியாவே ஆகும் என்றும், எனவேதான் ஒரு இந்திய குடி மகள்தான் என்றும் வாதம் புரிந்தார். ஆனால், அவரது வாதத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக, ஷரத்து 7-ஆனது, ஷரத்து 5-ஐ புறக்கணித்து செல்லக்கூடியது என்றும் [ஷரத்து 5 - உறைவிடம் மூலம் குடியுரிமையைப் பெறுதல் (Citizenship by Domicile)], அச்ஷரத்து 7, தனது கணவனை இந்தியாவில் விட்டுவிட்டு பாகிஸ்தானுக்கு குடிபெயர்ந்து செல்லும் மனைவிக்கு எந்த விதிவிலக்கையும் அளிக்காது என்றும் விளக்கமளித்தது.

மேலும், ஷரத்து 7-ன் கீழான **'குடிபெயர்தல்'** எனும் பதத்தின் பொருள் விளக்கத்தில், மணமான பெண்மணி ஒருவரின் உறைவிடம் அவரது கணவனது உறைவிடத்தையே சாரும் என்பது வராது, என **Abdul Samad v. State of West Bengal**[1] என்ற வழக்கிலும் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

எனவே நமது மேற்படி பிரச்சனையில் வரும் செல்வியை யும், நிருபாவையும் இந்தியக் குடிமக்களாக கருத முடியாது. அவர்கள் பாகிஸ்தான் குடிமக்கள் ஆவர்.

பிரச்சனை 6 :

A State Electricity Board constituted under Electricity (Supply Act) 1948 has taken action against its employees. They have approached the High Court for certain remedies for violation of Fundamental Rights. It was contested by the Board that the Board is not 'State' and hence not amenable to Fundamental Rights. Decide.

ஒரு மாநில மின்வாரியம், மின்சாரம் (விநியோகம்) சட்டம், 1948ன் கீழ் அமைக்கப்பட்ட ஒன்றாக உள்ளது. அவ்வாரியம் அதனுடைய பணியாளர்கள் மீது சில நடவடிக்கைகளை எடுத்தது. அதனை எதிர்த்து மாநில உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டதாக அவர்கள் வழக்கு தொடுத்தனர். ஆனால் மின் வாரியமானது "அரசு" அல்ல. ஆகையால் அடிப்படை உரிமையின்

1. AIR 1973 SC 505

கட்டுப்பாட்டிற்குள் வராது என அது எதிர்வாதம் செய்தது. தீர்வு செய்க.

தீர்வு:

மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காண, நாம் முதற்கண் பின்வரும் சட்ட நிலைப்பாடுகளை அறிய வேண்டியது அவசியமாக உள்ளது. அதாவது, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மூன்றாவது பகுதி (Part III) அடிப்படை உரிமைகள் குறித்து கூறுகிறது. பெரும்பாலான அடிப்படை உரிமைகளை அரசிற்கெதிராக மட்டுமே வலியுறுத்திப் பெற இயலும். எனவே, ஒருவரது அடிப்படை உரிமையை மீறியது, அரசா இல்லையா என்பதை அறிந்து கொள்வதற்கு ஏதுவாக, ஷரத்து 12-ஆனது, **"அரசு" (State)** என்பதில் எவையெல்லாம் அடக்கம் என்பதற்குண்டான வரையறையைக் கொடுக்கிறது.

ஷரத்து 12-ன்படி, "அரசு" என்ற சொல்லில் பின்வருவன அடங்கும் (1) இந்திய அரசாங்கம் மற்றும் பாராளுமன்றம்; மற்றும் (2) ஒவ்வொரு மாநிலத்தினுடைய அரசாங்கம் மற்றும் சட்டமன்றம்; மற்றும் (3) இந்திய ஆட்சி எல்லைக்குள் உள்ள அனைத்து **உள்ளூர் அதிகார அமைப்புகள் (Local Authorites)** அல்லது **பிற அதிகார அமைப்புகள் (Other Authorites);** அல்லது (4) இந்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள அனைத்து உள்ளூர் அல்லது பிற அதிகார அமைப்புகள்.

மேற்கண்ட வரையறையிலிருந்து நிர்வாகத்துறை (Executive) மற்றும் சட்டத்துறையை (Legislative) எதிர்த்து அடிப்படை உரிமைகள் மீறலுக்காக வழக்கிடலாம் என்பது தெளிவாகிறது. ஆனால் இவ்வரையறையில் உள்ள **"உள்ளூர் அதிகார அமைப்புகள்" (Local Authorites)** என்பதற்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் விளக்கம் ஏதும் கொடுக்கப்படாததால், அதற்காக நாம் பொதுச் சொல் பொருள் விளக்கச் சட்டத்தின் 3(31)-வது பிரிவை கவனிக்க வேண்டியுள்ளது. அதன்படி, உள்ளூர் அதிகார அமைப்புகள் என்பதில் நகராட்சிகள், மாவட்ட வாரியங்கள், ஊராட்சிகள் ஆகியவை அடங்கும். அடுத்ததாக, **பிற அதிகார அமைப்புகள் (Other Authorites)** எனும் பதத்திற்கு விளக்கம் காண்கையில் அதில் வரும் "பிற" எனும் பதத்தில் எவையெல்லாம் அடங்கும் என்பற்கு தெளிவான விளக்கத்தை இந்திய அரசியலமைப்பு சட்டம் உள்ளிட்ட வேறு எந்த சட்டத்திலும் விளக்கம் கொடுக்கப்படாத

தால், பல்வேறு முக்கிய வழக்குகளின் முடிவிலிருந்து நாம் அதற்கான விளக்கத்தை பெற்றுள்ளோம்.

அந்த வகையில் **Electricity Board, Rajasthan v. Mohan Lal**[1] எனும் வழக்கில் "பிற அதிகார அமைப்புகள்" எனும் சொற் றொடருக்கு பரந்த பொருள் விளக்கத்தை நமது உச்ச நீதிமன்றம் அளித்தது. அதன்படி, அரசியலமைப்பால் அல்லது சட்டத்தால் உருவாக்கப்பட்டதும், சட்டத்தால் அதிகாரம் அளிக்கப்பட்டதுமான அனைத்து அதிகார அமைப்புகளுமே, பிற அதிகார அமைப்புகள் என்பதில் அடங்கும் என்றும், அவ்வாறு சட்டப்படி உருவாக்கப் பட்ட அதிகார அமைப்புகள், அரசு அல்லது இறைமை தன்மை யுடைய பணிகளைச் செய்ய வேண்டும் எனும் அவசியம் ஏதுமில்லை என்றும் உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்தது. இதன்படி, சட்டத்தால் உருவாக்கப்பட்ட இராஜஸ்தான் மின்சார வாரியமும் **(Electricity Board, Rajasthan)** 'பிற அதிகார அமைப்புகள்' என்பதில் அடங்கும். இவ்வழக்கின் மூலம் சட்டத்தால் உருவாக்கப் பட்டதும் மற்றும் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டதுமான அனைத்து அதிகார அமைப்புகளும் 'பிற அதிகார அமைப்புகள்' என்பதில் அடங்கும், என்பது தெளிவானது.

நமது மேற்படி பிரச்சனையில் வரும் **மாநில மின் வாரிய மானது, 1948-ஆம் ஆண்டின் மின்சார (விநியோகம்) சட்டத்தினால் அமைக்கப் பட்டது.** எனவே இதனை சட்டத்தால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு எனலாம். மேற்கண்ட **Electricity Board, Rajasthan v. Mohan Lal**[1] வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் கொடுக்கப்பட்ட பொருள் விளக்கத்தின்படி, மேற்படி மின் வாரியம் "பிற அதிகார அமைப்புகள்" என்பதில் அடங்கும். இதனால் அம்மின் வாரியம் ஷரத்து 12-ன்படி "அரசு" ஆகும். எனவே அம்மின் வாரியத்தின் நடவடிக்கையால் தங்கள் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்பட்ட தாக கூறும் பணியாளர்கள் அதற்கு எதிராக வழக்கு தொடுத்து வெற்றி பெறலாம். தாம் "அரசு" அல்ல என்று அம்மின் வாரியம் கூறும் வாதம் செல்லாது.

பிரச்சனை 7 :

The President after the issue of Proclamation of Emergency under Article 352, suspended the enforcement

1. AIR 1967 SC 1857

of Fundamental Rights under Article 359. Authorities under the preventive detention law issued orders of detention against the Petitioner. The petitioner challenged the order of his detention and the Presidential order for violation of his fundamental rights. Discuss the validity of the Presidential order.

பிரிவு 352-இன் கீழ் குடியரசுத் தலைவர் அவசரநிலை பிரகடனம் செய்த பின்பு, பிரிவு 359-இன் கீழ் அடிப்படை உரிமைகளை செயல்படுத்துவதை தற்காலிகமாக நிறுத்தி வைக்கிறார். தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அதிகாரிகள் மனுதாரருக்கு எதிராக தடுப்புக் காவல் உத்தரவுகளைப் பிறப்பிக்கின்றார். தனது அடிப்படை உரிமைகளை மீறுவதாக, மனுதாரர் தன் மீது உள்ள தடுப்புக் காவல் உத்திரவையும், குடியரசுத் தலைவர் உத்திரவையும் எதிர்த்து நீதிமன்றத்தில் மனு செய்கிறார். குடியரசுத் தலைவர் உத்திரவு செல்லத்தக்கதா என்பதினை விவாதிக்கவும்.

தீர்வு :

நெருக்கடி நிலையின்போது, ஷரத்து 359-இன் கீழ் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி செயல்படுத்தும் உரிமையும் குடியரசுத் தலைவரால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட உத்திரவிடப்படுகிறது. இவ்வாறு குடியரசுத் தலைவரால் பிறப்பிக்கப் படும் உத்திரவு, ஷரத்து 13(2)-இன் கீழான 'சட்டம்' எனும் பதத்தில் அடங்காது. இதனால் அவ்வுத்திரவு, ஷரத்து 13(2)-இன்படி, ஒரு சட்டமாகாது. எனவே சட்டமாகாத உத்திரவு ஒன்று அடிப்படை உரிமைகளை மீறிவிட்டதாக எவரும் வாதிட முடியாது, என்று **Mohd. Yakub v. State of J & K**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியுள்ளது. எனவே, மேற்படி பிரச்சனையில் கூறப் பட்டுள்ள குடியரசுத் தலைவரின் உத்திரவு செல்லத்தக்க ஒன்றே. எனினும் இவ்வுத்திரவு ஷரத்து 20 மற்றும் 21-இன் கீழான அடிப்படை உரிமைகளைக் கட்டுப்படுத்தாது.

பிரச்சனை 8 :

Owing to mismanagement The Sharadha Spinning Mills was taken over under the Tamil Nadu Sharadha Spinning Mills Acquisition Act. The Act was challenged by a share holder of

1. AIR 1968 SC 765

the company on the ground that a single company and its share holder was being discriminated and so it is violative of the right of equality. - Decide.

நிர்வாக சீர்கேடு காரணமாக சாரதா நூற்பு ஆலையானது, தமிழ்நாடு சாரதா நூற்பு ஆலை (கையகப்படுத்தல்) சட்டம் மூலமாக அரசால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. நூற்பாலை நிறுவனத்தின் பங்குதாரர் ஒருவர் இச்சட்டமானது தனிப்பட்ட ஒரு நிறுவனத்தை யும் அதன் பங்குதாரரையும், வேற்றுமைபாராட்டும் தன்மையான தாகவும் அதனால் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிற சட்டக் கொள்கையை மீறுகிறதாக உள்ளது என்றும் வாதிடுகிறார். தீர்மானிக்கவும்.

தீர்வு :

இந்திய அரசியலமைப்பின் 14-வது ஷரத்து நாட்டில் சமத்துவம் நிலவ, "இந்திய எல்லைக்குள் சட்டத்தின் முன்பான சமத்துவத்தையோ அல்லது சட்டங்களின் சம பாதுகாப்பையோ அரசு எவருக்கும் மறுத்தல் கூடாது", என்று கூறுகிறது. இதன்படி அனைவரும் சமம். ஆனால் அனைவரையும் அனைத்துச் சூழ்நிலைகளிலும் சமமாக கருத முடியாது. எடுத்துக்காட்டாக, ஆணும் பெண்ணும் சமம் என்று கொண்டு, பெண்களுக்கென தனிப்பாதுகாப்பு கொடுக்க, சட்டமேதும் இயற்றக் கூடாது என்றால், அங்கு சமத்துவத்திற்கு பதிலாக சமமின்மையே தோன்றும். எனவே பல்வேறு பிரிவிலுள்ளோர்களின் பல்வேறு விதமான தேவைகளைப் பூர்த்தி செய்ய அவர்களை நியாயமான அடிப்படையில் வகைப்பாடு (reasonable classification) செய்து, அவர்களுகேற்ற சட்டத்தை இயற்ற வேண்டும், என்று ஷரத்து 14 வலியுறுத்துகிறது. ஆனால் ஒரு பிரிவினரில் உள்ளோர்களை (சம நிலையில் இருப்பவர்களை) நியாயமற்ற விதத்தில் வகைப்படுத்தி, அவர்களுக்கென தனித்தனியாக சட்டமியற்றலை (class legislation) ஷரத்து 14 அனுமதிப்பதில்லை.

இதைத்தான் **Chiranjit Lal v. Union of India**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றமானது, "ஷரத்து 14, ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்காக சட்டமியற்றுவதை தடுக்கிறதேயொழிய, அவர்களை நியாயமான வேறுபாடுகளின் கீழ் வகைப்பாடு செய்து சட்டமியற்றுவதை தடுக்கவில்லை" என்று கூறுகிறது. இவ்வழக்கின்

1. AIR 1951 SC 41

பொருண்மைகளின்படி, இந்திய அரசு 1950-ஆம் ஆண்டு, தவறான மேலாண்மையின் கீழ் இயங்கி வந்த சோலப்பூர் ஆலை (நூல் நெசவு) நிறுவனத்தை, அவசரக் காலச் சட்டம் ஒன்றைப் பிறப்பித்து, அதன் நிர்வாக மேலாண்மையை தன் வசப்படுத்தியது. இந்த ஒரு தனிப் பட்ட நிறுவனத்தை மட்டும் அரசு தன்வசப்படுத்தியது, ஷரத்து 14ஐ மீறுவதாக உள்ளது என்று கூறி, அச்சட்டத்தை இல்லா நிலையதென அறிவிக்குமாறு சிரஞ்சித்லால் வழக்குத் தொடுத்தார். ஆனால் உச்ச நீதிமன்றம் நிறுவனத்தின் சூழ்நிலைகளை, உதாரணமாக நிறுவனத் தின் தொழிலாளர்கள் அதிக எண்ணிக்கையில் வேலை வாய்ப்பை இழக்கக் கூடிய அபாயம், நிறுவனத்தின் நிருவாக சீர்கேடுகள் ஆகியவற்றையெல்லாம் கவனிக்கும் பொழுது, அந்த நிறுவனமே ஒரு தனி வகுப்பாக கருதப்படலாம் (a class by itself) என்று கூறியது. மேலும் மனுதாரராகிய சிரஞ்சித்லால், மற்ற நிறுவனங்களும் இதே மாதிரியான சூழ்நிலைகளில் இயங்குகின்றன என்று நிரூபிக்க வில்லை. ஆகவே, மேற்படி சட்டத்தின் செல்லும் தன்மையானது நிலைநிறுத்தப்பட்டு ஷரத்து 14, அதனால் பாதிப்படையவில்லை என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

மேற்படி பிரச்சனையில் நிர்வாக சீர்கேடு காரணமாக சட்டமொன்றால் சாரதா நூற்பு ஆலையானது அரசால் எடுத்துக் கொள்ளப்படுகிறது. இங்கு இவ்வாறு ஒரேயொரு தனிப்பட்ட நிறுவனத்தை அரசு எடுத்துக் கொள்ள சட்டமியற்றியதால், அது பாகுபாடு (வேற்றுமை) காட்டக் கூடியதாகவும், இதனால் சட்டத்தின் முன் அனைவரும் சமம் எனும் கொள்கை மீறப்பட்டுள் ளதாகவும் அதன் பங்குதாரர் ஒருவர் வாதிடுகிறார். ஆனால் மேற்படி வழக்கின் தீர்ப்பின்படி, அந்நிறுவனத்தின் நிர்வாக சீர்கேட்டைக் கருத்தில் கொண்டு, அதனை ஒரு தனி வகுப்பாக கருதி, அதற்கென தனியாகவே ஒரு சட்டமியற்ற தடையேதுமில்லை. எனவே மாநில அரசின் அச்சட்டம் செல்லத்தக்கதே என்பதுதான் மேற்படி பிரச்சனைக்கு தீர்வாகும்.

பிரச்சனை 9 :

A State government passed a law imposing a uniform 2% local sales tax on sugar sold directly from sugar factories. However the sugar sold by the Government Sugar Factories was exempted from the tax. Babulal, a private sugar factory owner challenges this as discriminatory and violative of Art. 14 of the constitution. Decide.

சர்க்கரை ஆலைகள் நேரடியாக விற்கும் சர்க்கரையின் மீது ஒரே மாதியான 2% உள்ளூர் வரி விதித்து சட்டமொன்றை ஒரு மாநில அரசு நிறைவேற்றியது. ஆனால் அரசு சர்க்கரை ஆலைகள் விற்கும் சர்க்கரைக்கு இவ்வரி விதிப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தது. பாபுலால் என்கிற தனியார் சர்க்கரை ஆலை உரிமையாளர், இவ்வரி விதிப்பானது, வகைப்படுத்தி சலுகை வழங்குகிறதாகவும், அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 14 யை மீறுகிறதாகவும் இருப்பதால் செல்லுபடி ஆகாது என வாதிடுகிறார் - தீர்மானிக்கவும்.

தீர்வு :

இதற்கு முன் சென்ற பிரச்சனையில் அளிக்கப்பட்ட தீர்வே இப்பிரச்சனைக்கும் பொருந்தும். இப்பிரச்சனையில் தனியார் சர்க்கரை ஆலைகள் நேரடியாக விற்கும் சர்க்கரைக்கு 2% உள்ளூர் வரி விதித்தும், அரசு சர்க்கரை ஆலைகள் விற்கும் சர்க்கரைக்கு மட்டும் அவ்வரியிலிருந்து விலக்கு அளித்தும் மாநில அரசு இயற்றிய சட்டம், அரசியலமைப்புச் சட்டத்தின் 14-வது ஷரத்து அளித்துள்ள சமத்துவ சுதந்திரத்திற்கு எதிராக உள்ளது என்று தனியார் சர்க்கரை ஆலை உரிமையாளர் பாபுலால் வாதிடுகிறார். ஆனால் அரசு சர்க்கரை ஆலைகள் சர்க்கரை உற்பத்தி செய்வதே, அதனை பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நியாய விலைக் கடைகளின் (Ration shops) வாயிலாக குறைந்த விலைக்கு பொது மக்களுக்கு விற்பதற்கு ஆகும். தனியார் சர்க்கரை ஆலைகள் உற்பத்தி செய்யும் சர்க்கரை நேரடியாக பொதுச் சந்தைக்கு விற்கப்படுகிறது. அவற்றை பொது மக்கள் மட்டுமல்லாமல், உணவகங்கள், இனிப்புப் பண்டங்கள் விற்கும் கடைகள் போன்ற வணிகப் பயன்பாடு கொண்ட அமைப்புகளும் வாங்கிக் கொள்கின்றன. எனவே இதைக் கருத்தில் கொண்டு, அரசு சர்க்கரை ஆலைகளை தனியொரு வகுப்பாக வகைப்படுத்தி, அவை விற்கும் சர்க்கரைக்கு வரி விதிப்பிலிருந்து சலுகை அளித்து சட்டமியற்ற தடையேதுமில்லை. இதனால் ஷரத்து 14-ன் கீழான சமத்துவ கோட்பாடு எவ்வித பாதிப்பிற்கும் ஆளாவதில்லை. எனவே மாநில அரசின் அச் சட்டம் செல்லத்தக்கதே.

பிரச்சனை 10 :

A commission of enquiry was ordered in respect of the affairs of petitioner's companies under commission of Inquiries Act, 1952. Petitioner challenges the action on the ground that it violates Article 14. Decide.

1952-ஆம் வருட விசாரணைக் கமிஷன் சட்டத்தின் கீழ் மனுதாரர் கம்பெனிகள் விஷயத்தில் ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க உத்திரவு இடப்பட்டது. இதை மனுதாரர் உறுப்பு 14ஐ மீறுவதாக உள்ளது என வழக்கிடுகிறார். தீர்வு செய்க.

தீர்வு :

இப்பிரச்சனை நாம் ஏற்கனவே கண்ட **Chiranjit Lal v. Union of India**[1] எனும் வழக்கின் சாயலில் அமைந்ததாகும். ஷரத்து 14, வகுப்புச் சட்டத்தைத் தடுக்கிறதே தவிர வகைப்பாடு செய்வதைத் தடுக்கவில்லை. எனவே, ஒரு நிறுவனத்தின் விஷயங்களை அல்லது சூழல்களை ஆராயும் பொழுது, அதை மற்ற நிறுவனங்களிலிருந்து பிரிக்கும் வண்ணம் தனியாக ஒரு வகைப்பாடு செய்ய முடியுமென்றால், அதற்கெனத் தனியாக சட்டமியற்றலாம். விசாரணைக் கமிஷன் அமைக்கலாம். அப்பொழுது மற்ற நிறுவனங்களைப் போல தனது நிறுவனத்தையும் சமமாக நடத்த வேண்டும் என்று ஷரத்து 14-இன் கீழ் கோர வழியில்லை. மேற்படி பிரச்சனையின்படி, ஒரு நிறுவனத்தின் விஷயங்களை ஆராய, அந்நிறுவனத்திற்கென ஒரு விசாரணைக் கமிஷன் அமைக்க உத்திரவிடப்பட்டது. ஷரத்து 14-ஐ மீறிய செயல் அல்ல. இங்கு அந்நிறுவனத்தையே, ஒரு தனி வகைப்பாட்டு இனமாக (a class by itself) கருதலாம். மனுதாரரின் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்க ஒன்றாகும். (மேலும் விரிவாக முன் சென்ற பிரச்சனையில் கண்ட **Chiranjit Lal** வழக்கில் காணவும்.)

பிரச்சனை 11 :

A regulation was passed by the managing director of the Air India stipulates that the Air hostess will be terminated from service on attaining the age of 35 or on marriage. This was challenged by an Air hostess. Discuss the validity of the regulation.

இந்திய விமான நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் ஒரு சீரமைப்புச் சட்டத்தை உருவாக்கினார். அதன்படி முப்பதைந்து வயதை அடைந்த அல்லது திருமணம் ஆன விமான பணிப் பெண்கள் பணியிலிருந்து விலக்கப்படுவர். இதனை எதிர்த்து ஒரு விமான பணிப்பெண் வழக்குத் தொடர்ந்தார். இச்சட்டத்தின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

1. AIR 1951 SC 41

தீர்வு :

இப்பிரச்சனை **Air India v. Nargesh Meerza**[1] எனும் வழக்கின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். அதில் கூறப்பட்ட தீர்ப்பின் படி, விமான நிறுவன நிர்வாக இயக்குனரின் சீரமைப்புச் சட்டம் ஷரத்து 14-ஐ மீறியதாகும். எனவே செல்லாது. (வழக்கின் சங்கதி களுக்கு இந்நூலின் பக்கம் எண். 190-இல் காண்க.)

பிரச்சனை 12 :

The wine merchants of Andhra Pradesh challenged the order of the Andhra Pradesh Government not to renew the licences granted to the retail vendors for selling liquor in Bars as violative of the right to equality. The Government defended its order on the ground that consumption of liquor in Bars resulted in law and order problems and hence the Government took the policy decision. Decide.

ஆந்திரப் பிரதேச அரசாங்கமானது, மதுபான சில்லறை விற்பனையாளர்கள், மதுபானங்கள் அனுமதிக்கப்பட்ட மது அருந்துமிடங்களில் விற்பதற்கு வழங்கிய உரிமங்களை நீட்டிக்க மறுத்தது, சமத்துவ உரிமைக்கு எதிரானது என ஆந்திரப்பிரதேச மதுபான வியாபாரிகள் வழக்கிட்டனர். ஆனால் அரசாங்கமானது அனுமதிக்கப்பட்ட மது அருந்துமிடங்களில் எழக்கூடிய சட்டம் ஒழுங்கு பிரச்சனைகள் காரணமாக உரிமங்களை நீட்டிப்பது இல்லை என தாம் கொள்கை முடிவு எடுத்ததாக எதிர்வாதம் செய்தது. தீர்மானிக்க.

தீர்வு :

இப்பிரச்சனை **Madras City Wine Merchants Assn. v. State of T.N.**[2] என்ற வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும். இவ்வழக் கின் சங்கதிகள்படி, தமிழ்நாடு மதுவிலக்கு சட்டம், 1937-இன் கீழ் இயற்றப்பட்ட தமிழ்நாடு மதுபானம் (மதுக்கூடங்களில் விற்பனை செய்தல்) விதிகள், 1992-ஐ தமிழக அரசு இரத்து செய்து விட்டது. இதனால், மதுபானங்களை மதுக்கூடங்களில் (பார்) விற்பனை செய்வதற்காக மதுபான சில்லறை விற்பனையாளர்களுக்கு வழங்கப்

1. AIR 1981 SC 1829
2. (1994) 5 SCC 509

பட்டிருந்த உரிமங்களை புதுப்பிக்க தமிழக அரசு மறுத்து ஆணை பிறப்பித்தது. இந்த ஆணையை எதிர்த்து மதுபான விற்பனை யாளர்கள் உச்ச நீதிமன்றத்தில் வழக்கிட்டனர். அதில் தமிழக அரசு திடீரென தனது கொள்கை முடிவை மாற்றிக் கொண்டு, உரிமங் களைப் புதுப்பிக்க மறுத்தது ஏதேச்சதிகாரமானதாகும் என்றும், ஷரத்து 14-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள சமத்துவ உரிமையை மீறியதாகும் என்றும் மதுபான விற்பனையாளர்கள் வாதிட்டனர். மேலும் அரசு கொள்கை முடிவுகளை எடுக்கும் பொழுது, தங்கள் கருத்துகளை பரிசீலித்திருக்க வேண்டும் என்றும், கொள்கை முடிவுகளை மாற்றிக் கொள்வது ஏதேச்சதிகாரமானதாக இருக்கக் கூடாது என்றும் அவர்கள் வாதிட்டனர்.

ஆனால் உச்ச நீதிமன்றமானது, தமிழக அரசின் மேற்படி ஆணையில் எவ்வித ஏதேச்சதிகாரமும் இல்லை என்றும், எனவே அது ஷரத்து 14-ஐ மீறவில்லை இல்லை என்றும், மதுக்கூடங்களில் மதுவருந்துவதால் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படுவதாகவும், பெண்களுக்கு தொந்தரவுகளுக்கு ஆளாகின்றனர் என்றும் அரசுக்கு புகார்கள் வந்த காரணத்தாலேயே அரசு உரிமங்களை வழங்க மறுத்து ஆணை பிறப்பித்துள்ளது என்றும், பொது நலன் கருதியே அரசு தனது கொள்கை முடிவை மாற்றிக் கொண்டது என்றும், எனவே அந்த ஆணை செல்லத்தக்கதே என்றும், தமிழ்நாடு மதுபானம் (மதுக்கூடங்களில் விற்பனை செய்தல்) விதிகள், 1992 நீக்கியது சரியே என்றும் தீர்ப்பளித்தது. இங்கு நிலைநிறுத்தப்பட்ட நெறி யாதெனில், அரசின் சட்டமியற்றுத் துறையின் நடவடிக்கை ஒன்று அது முதன்மையானதாகவோ, துணை நிலையானதாகவோ எவ்வாறு இருப்பினும், இயற்கை நீதி விதிகளுக்கு உட்பட்டதன்று (Legislative action plenary or subordinate is not subject to natural justice rules).

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின்படி மேற்படி பிரச்சனையில் ஆந்திரப் பிரதேச அரசு எடுத்த கொள்கை முடிவு சரியானதேயாகும்.

பிரச்சனை 13 :

The State Government issued notification for admission to Medical and Engineering Colleges. In the notification it was stated that those whose residence is not in Kundagrama had to pay capitation fee. X, a candidate for medical admission, whose residence is not in Kundagrama challenged the notification be-

fore the Supreme Court - Decide.

மாநில அரசு மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரி சேர்க்கைக்கான அறிவிப்பை வெளியிட்டது. அதில் குண்ட கிராமத்தில் குடியிருப்பில்லாதோர் கட்டாய நன்கொடை செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. 'X' என்பவர் மருத்துவ படிப்பிற்கு விண்ணப்பம் செய்துள்ளார். அவரது குடியிருப்பு குண்ட கிராமத்தில் இல்லை. எனவே இந்த அறிவிப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்கிறார். தீர்மானிக்க.

தீர்வு :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 15(1)-இன்படி, "அரசு எந்தக் குடிமகனையும் அவனுடைய மதம், இனம், சாதி, பால், பிறப்பிடம் ஆகியவற்றில் எதனையாவது காரணமாகக் காண்பித்து அவனை பாகுபாட்டுடன் நடத்தக் கூடாது." எனவே மேற்கண்ட வற்றின் அடிப்படையில் யாரொருவருக்கும் பாகுபாடு காட்டக் கூடாது என்பது தெளிவு.

இந்நிலையில் மேற்படி பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம் **D.P.Joshi v. State of M.P.**[1] எனும் வழக்கை மேற்கோள் காட்ட வேண்டியுள்ளது. இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் மேற்படி ஷரத்து 15(1)-ஐப் பொறுத்து ஒரு முக்கிய வேறுபாட்டை சுட்டிக்காட்டியது. அதாவது 'குடியிருப்பு' (residence) என்ற காரணத்தின் அடிப்படை யில் பாகுபாடு காட்டப்படுவது ஷரத்து 15-ஐ மீறுவதாகாது என்றும், 'பிறப்பிடம்' (place of birth) என்பது குடியிருப்பு என்பதிலிருந்து வேறுபட்டது என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. வழக்கின் சங்கதிகள்படி, மாநில மருத்துவக் கல்லூரிக்கான சேர்க்கைக்காக கட்டாய நன்கொடை பெறப்படுவதில் மத்திய பாரத் (மத்தியப் பிரதேஷ்) மாநிலத்தை குடியிருப்பாகக் கொண்டவருக்கு விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால் மற்றவர்கள் இதைச் செலுத்த வேண்டும் என்றும் கூறப்பட்டது. இது பிறப்பிடத்தைக் காரணமாகக் கொள்ளாததால் செல்லும் என உச்ச நீதிமன்றம் கூறியது.

மேற்படி பிரச்சனையில் 'X' என்பவரின் குடியிருப்பு குண்ட கிராமத்தில் இல்லாத காரணத்தால் அவர் கட்டாய நன்கொடை செலுத்த வேண்டிய நிலையில் உள்ளார். ஷரத்து 15(1)-இல் பிறப்பிடத்தைக் காரணமாகக் காட்டி பாகுபாடு செய்தலாகாது எனக்

1. AIR 1955 SC 334

கண்டுள்ளது. அதே நேரத்தில் மேற்படி வழக்கில் குடியிருப்பு என்பது வேறு, பிறப்பிடம் என்பது வேறு என்று உச்ச நீதிமன்றம் தெளிவு படுத்தியுள்ளது. எனவே மாநில அரசு குடியிருப்பை மையமாகக் கொண்டு மாணவர் சேர்க்கைக்காக வெளியிட்ட அறிவிப்பு செல்லத் தக்கதே. அம்மாணவர் தொடரும் வழக்கு வெற்றி பெறாது என்பதே இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 14 :

A state government has made domicile or residence in the state as a mandatory requirement for admission to medical colleges, thereby excluding candidates, from outside, though they may be meritorious candidates. Discuss the constitutionality of the rule.

ஒரு மாநில அரசானது அம்மாநிலத்தை உறைவிடமாகக் கொண்டவர்கள் அல்லது குடியிருப்பவர்கள் மட்டுமே மருத்துவக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள், மற்ற வெளி மாணவர்கள் எவ்வளவு அதிக தகுதி பெற்றிருப்பினும் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என விதி ஒன்றை வெளியிட்டது. இவ்விதி அரசமைப்புச் சட்டத்திற்கு பொருத்தமானதா? விவாதிக்க.

தீர்வு :

இதற்கு முந்தைய பிரச்சனைக்கு அளிக்கப்பட்ட அதே தீர்வே இப்பிரச்சனைக்கும் பொருந்தக் கூடியதாகும். அதன்படி உறைவிடம் அல்லது குடியிருப்பைக் காரணமாகக் காட்டி பாகுபடுத்துவது செல்லத்தக்கதே. ஷரத்து 15(1)-இன்படி பிறப்பிடத்தின் அடிப்படையில் பாகுபாடு செய்வதுதான் அனுமதிக்கப்படுவதில்லை. எனவே மேற்படி பிரச்சனையில் மாநில அரசு வகுத்த விதி அரசியலமைப்புச் சட்டத்திற்கு பொருந்தக் கூடியதே.

பிரச்சனை 15 :

The Parliament enacted a law providing 27% reservation to the other backward classes in the central institutions of Higher Education. It was challenged before the Supreme Court. Decide the constitutional validity of the enactment.

மைய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள உயர் கல்வி நிறுவனங்களில் பிற பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27

விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து பாராளுமன்றம் ஒரு சட்டம் இயற்றியது. இதன் செல்லும் தன்மை குறித்து உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதன் செல்லும் தன்மையினை தீர்மானிக்கவும்.

தீர்வு :

Ashok Kumar Thakur v. Union of India[1] *வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பின்படி இட ஒதுக்கீடு செய்து பாராளுமன்றம் இயற்றிய சட்டம் செல்லக் கூடியதே. (வழக்கின் விவரங்களுக்கு இந்நூலின் பக்கம் எண். 204-இல் காண்க.)*

பிரச்சனை 16 :

25. The Central Government enacted a legislation to prevent advertisements of speedy remedial drugs. Niscotic, a speedy remedial drug manufacturing company challenged the legislation enacted by the Central Govt. as it violates its fundamental right - Decide.

மத்திய அரசு உடனடி நிவாரண மருந்துகளின் விளம்பரங்களை தடை செய்யும் சட்டம் கொண்டு வந்தது. 'நிஸ்கோடிக்' என்ற உடனடி நிவாரண மருந்து தயாரிக்கும் கம்பெனி இந்த சட்டம் தனது அடிப்படை உரிமைக்கு புறம்பானது எனக் கூறி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்கிறது. தீர்மானிக்க.

தீர்வு :

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் யாருக்குக் கிடைக்கும் என்பதைக் கவனிக்க வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19-இன் கீழான அடிப்படை உரிமைகள் இந்தியக் குடிமக்களுக்கு மட்டுமே கிடைக்கத்தக்கதாகும். அது ஒரு அயலவருக்கோ, அயல்நாட்டினருக்கோ கிடைக்காது. ஒரு அயல்நாட்டவர் இந்தியக் குடிமகன் அல்ல. எனவே அவருக்கு ஷரத்து 19-இன் கீழான அடிப்படை உரிமைகள் கிடைக்காது. அவ்வாறே ஒரு நிறுவனமோ, கூட்டுருவோ ஷரத்து 19-இன்

1. AIR 2008 SCW 2899

கீழான அடிப்படை உரிமைகளை துய்க்க முடியாது. ஏனெனில் அவை இயற்கை நபர்கள் (Natural persons) அல்ல. ஷரத்து 19-இல் கூறப்படும் 'குடிமக்கள்' என்ற பதம் இயற்கை நபர்களை மட்டுமே குறிப்பிடுகிறதே தவிர, நிறுவனம், கூட்டுரு, கழகம் போன்ற சட்டப் படியான நபர்களை (legal persons) அல்ல, என்று **Tata Engineering and Locomotive Co. v. State of Bihar**[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் பொருள் விளக்கமளித்துள்ளது. எனவே, மேற்படி பிரச்சனையில் வரும் 'நிஸ்கோடிக்' என்பது ஒரு நிறுவனம். அது இயற்கை நபர் அல்ல. நிறுவனச்சட்டத்தால் கட்டமைக்கப்பட்ட ஒரு சட்டப்படியான நபர். எனவே அது ஒரு சட்டம் தனது அடிப்படை உரிமை மீறுகிறது என்று கூறி நீதிமன்றத்தில் வழக்கிட இயலாது.

எனினும் அண்மைக்காலத்தில் இந்த விடயம் தொடர்பாக நீதிமன்றத்தின் கண்ணோட்டம் சற்றே மாறியுள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். **Bank Nationalisation Case**[2] மற்றும் **Bennett Coleman and Co. v. Union of India**[3] ஆகிய வழக்குகளில், ஒரு நிறுவனம் ஷரத்து 19-இன் கீழான அடிப்படை உரிமையை கோரிப் பெற முடியாது என்றிருந்தாலும், அரசின் ஒரு நடவடிக்கை அந்நிறுவனத்தின் உரிமையை மட்டுல்லாது அதன் பங்குதாரர்களின் உரிமையையும் மீறுவதாக இருப்பின், அப்பங்குதாரர்கள் அவ்வடிப்படை உரிமையை செயல்படுத்தக் கோரி நீதிமன்றத்தில் வழக்கிடலாம். பங்குதாரர்களின் அடிப்படை உரிமையானது, அவர்கள் அனைவரும் ஒரு நிறுவனமாக கூட்டு சேர்ந்த போதிலும் இழந்து விடுவதில்லை. பங்குதாரர்கள் தங்கள் அடிப்படை உரிமைகளை குடிமக்களாக நின்று நீதிமன்றத்தின் வாயிலாகப் பெற முடியும்.

எனவே மேற்படி பிரச்சனையில் உடனடி நிவாரண மருந்துகளின் விளம்பரங்களைத் தடை செய்யுமாறு மத்திய அரசு கொண்டு வரும் சட்டமானது நிஸ்கோடிக் நிறுவனப் பங்குதாரர் களின் அடிப்படை உரிமைகளை எவ்வகையில் மீறுகிறது என்பதை நீதிமன்றத்தில் நிலைநிறுத்தி, அவர்கள் வழக்கு தொடர்ந்தால் வெற்றி பெற வாய்ப்புண்டு! (விரிவாக இந்நூலின் பக்கம் எண். 133-இல் காண்க.)

1. AIR 1965 SC 40
2. AIR 1970 SC 564
3. AIR 1973 SC 106

பிரச்சனை 17 :

Students of a particular religious sect studying in a school were suspended from the school for refusing to sing National Anthem. It was found that they stood silently when the National Anthem was sung by every other student. Parents moved the court complaining that such compulsion and action violated their religious freedom - Decide.

ஒரு குறிப்பிட்ட மத உட்பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் தாம் படிக்கும் பள்ளியிலிருந்து நாட்டுப்பண் பாட மறுத்தமைக்காக தற்காலிகமாக நீக்கப்பட்டனர். மற்ற மாணவர்கள் நாட்டுப்பண் பாடும் போது இவர்கள் மட்டும் மௌனமாக எழுந்து நிற்பார்கள் என்று தெரிகிறது. இவர்களின் பெற்றோர்கள் நீதிமன்றத்தை அணுகி, நாட்டுப்பண் பாட வேண்டும் என்று வற்புறுத்தப்படுவது மத உரிமைகளை மீறுவதாக உள்ள செயல் என்று முறையிட்டனர். தீர்மானிக்க.

தீர்வு :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19(1)(a)-இன் கீழான பேச்சுரிமை மற்றும் கருத்துக்களை வெளியிடுவதற்கான சுதந்திரத்தில் பேசாமல் இருக்கும் சுதந்திரமும் உள்ளடங்கியது என்று உச்ச நீதிமன்றம் **Bijoe Emmanuel v. State of Kerala[1] (National Anthem Case)** என்ற வழக்கில் பொருள் விளக்கமளித்தது. அதன்படி மேற்படி பிரச்சனையில் மாணவர்களின் பெற்றோர்கள் தொடுக்கும் வழக்கு வெற்றி பெறும். (இவ்வழக்கை பக்கம் எண். 230-இல் காண்க.)

பிரச்சனை 18 :

'X' has been sentenced to death for having committed several murders. He writes his autobiography in jail and hands over the same to his wife for publication. The autobiography depicts a close nexus between 'X' and some top governmental officials, some of whom had been partners in these murders. 'Z' a publisher accepts the autobiography for publication. The Inspector General, Prisons asks 'Z' to stop publication of 'X's autobiography as it contains defamatory material against State Officials and is false. 'Z' contends that the Inspector General

1. AIR 1982 SC 710

prison has no authority to impose a prior restraint upon the publication of the autobiography. Provide legal advise to 'X'.

'X' என்பவர் பல்வேறு கொலைக்குற்றம் புரிந்ததற்காக மரண தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. அவர் சிறைத் தண்டனையில் இருக்கும்போது தனது சுய சரிதை ஒன்றினை எழுதி அதனைத் தனது மனைவியிடம் வெளியிடுவதற்குக் கொடுத்தார். 'X' என்பவர் செய்த கொலைகளில் அரசின் சில உயர் அதிகாரிகள் கூட்டு நபராக இருந்ததாகவும், மற்றும் இக்கொலைகளில் அவர்களது நெருங்கிய தொடர்பினையும் தனது சுய சரிதையில் குறிப்பிட்டிருந்தார். 'Z' என்பவராகிய புத்தக வெளியீட்டாளர் 'X' என்பவர் எழுதிய சுய சரிதையை வெளியிட ஒப்புக் கொண்டார். சிறைத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் 'Z' என்பவரிடம் 'X' என்பவர் எழுதிய சுயசரிதை அவர் உயர் அதிகாரிகளுக்கு எதிராக பொய்யான மற்றும் அவதூறு குறிப்புகள் அடங்கியவை எனத் தெரிவித்தும் அந்த சுயசரிதையை 'Z' என்பவர் வெளியிட வேண்டாம் எனக் கேட்டுக் கொண்டார். சிறைத் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள் 'X' என்பவர் எழுதிய சுய சரிதையினை 'Z' என்பவர் வெளியிடக் கூடாது என்று முன்தடுப்பு கட்டுப்பாடுகள் விதிப்பதற்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என 'Z' என்பவர் வாதிட்டார். 'Z' என்பவருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு :

மேற்படி பிரச்சனை **R.Rajagopal v. State of Tamil Nadu**[1] ஐ (ஆட்டோ சங்கர் சுயசரிதை வழக்கு) அப்படியே அடியொற்றி அமைந்ததாகும். அதில் கொடுக்கப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில், சிறைத்துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் அவர்கள், 'X' என்பவர் எழுதிய சுயசரிதையினை 'Z' என்பவர் வெளியிடக் கூடாது என்று முன்தடுப்பு கட்டுப்பாடுகள் எதையும் விதிக்க முடியாது. இவ்வாறு கூறும் 'Z'-இன் வாதம் ஏற்றுக் கொள்ளத்தக்கதே. *(எவ்வாறு ஏற்றுக் கொள்ளத்தக்கதாகிறது என்தற்கு இந்நூலின் பக்கம் 234-இல் காண்க.)*

பிரச்சனை 19 :

A citizen who was in preventive detention under Defence of India Rules wrote a book on scientic interest with the permission of Government but he was denied permission to send the

1. AIR 1995 SC 264

same out of the prison for publication. He has filed a writ under Article 226 challenging the denial. Decide.

இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப் பட்டிருந்த ஒரு இந்திய குடிமகன் அரசின் அனுமதியோடு ஒரு அறிவியல் புத்தகம் எழுதினார். பின்பு அதை வெளியீடு செய்ய சிறைக்கு வெளியே அனுப்பிட அரசு அனுமதி மறுத்தது. இதைத் தொடர்ந்து அவர் பிரிவு 226ன் கீழ் நீதிப்பேராணை கோரி வழக்கு தொடுத்தார். தீர்வு செய்க.

தீர்வு :

இதற்கு முன் சென்ற பிரச்சனையில் கூறப்பட்ட தீர்வே, இப்பிரச்சனைக்கும் தீர்வாகும். அதனடிப்படையில் புத்தகத்தை வெளியிட அனுமதி மறுக்கப்பட்டது செல்லாது.

பிரச்சனை 20 :

The Gujarat Government proposed a law imposing sales tax on large newspapers stating that newspaper houses are running in Gujarat like industries. The printers association objected to this on the ground that it would amount to violation of freedom of press. Decide.

குஜராத் மாநிலத்தில் பெரும் செய்தித்தாள் நிறுவனங்கள் தொழிற்சாலைகள் போன்று இயங்குவதால் செய்தித்தாள் மீது விற்பனை வரி சுமத்தி குஜராத் மாநில அரசு ஒரு சட்டமியற்றிட உத்தேசித்தது. தங்களது பத்திரிக்கை சுதந்திரம் இதனால் பாதிக்கப்படும் என்று பிரசுரிப்போர் சங்கம் இச்சட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்தது. தீர்மானிக்க.

தீர்வு :

Printers (Mysore) Ltd. v. Asst. Commercial Tax Officer[1] என்ற வழக்கில் நமது நாட்டில் செய்தித்தாள் விற்பனையின் மீது விற்பனை வரி விதிக்கப்படுதல் ஆகாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்துள்ளது. எனினும் இதைக் கொண்டு செய்தித்தாள் நிறுவனங்கள் வரி விதிப்புச்சட்டத்திலிருந்து அல்லது தொழிற் சாலை உறவுகள் தொடர்பான பொதுச் சட்டத்திலிருந்து அல்லது

1. (1994) 2 SCC 434

அந்நிறுவன பணியாளர்களின் நிலை தொடர்பாக அரசு வகுக்கும் ஒழுங்குமுறைவிதிகளிலிருந்து முற்றிலும் விலக்கு பெற்றது என்று பொருள் கொண்டு விடக் கூடாது என்றும், செய்திகளை பரப்புதல் மற்றும் செய்தித்தாள்களை மக்களிடையே சுற்றுக்கு விடுதல் (சர்குலேசன்) மீது தடை ஏதும் விதிக்கப்பட்டால்தான் அது பத்திரிக்கைச் சுதந்திரத்தின் மீதான தடையாகும் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

இவ்வழக்கின் தீர்ப்புப்படி மேற்படி பிரச்சனையில் செய்தித்தாள் நிறுவனங்கள மீது குஜராத் மாநில அரசு விற்பனை வரி விதித்து சட்டமியற்றிட உத்தேசித்ததற்கு அம்மாநில பிரசுரிப்போர் சங்கம் தெரிவித்த எதிர்ப்பு நிலைக்கத்தக்கதே. விற்பனை வரி விதித்தால் அது நிச்சயம் செய்தித்தாள் வெளியிடுதலுக்கு ஒரு முட்டுக்கட்டையாக அமையும். பத்திரிக்கை தொடங்கவே தயக்கம் ஏற்படும். இதனால் செய்திகளின் வாயிலாக மக்களுக்கு கருத்துகள் போய்ச் சேராது. பத்திரிக்கைச் சுதந்திரம் பறிக்கப்பட்டதாக ஆகும். எனவே அச் சங்கத்தின் வழக்கு வெல்லும்.

பிரச்சனை 21 :

A State Govt. issued an order fo quarantine against 'X' and his family members since 'X' is suspected to have SARS desease. 'X' wants to challenge the order as violative of his freedom of movement under Article 19(1)(d). Provide legal advise to 'X'.

'X' என்பவருக்கு SARS நோய் தொற்றியுள்ளதாக சந்தேகப்படுவதால் அவர் மற்றும் அவரது குடும்பத்திற்கு எதிராக தொற்றுத் தடை ஒதுக்கி வைப்பு ஆணை அரசால் பிறப்பிக்கப் பட்டது. இது அரசமைப்பின் 19(1) பிரிவின் (d) கீழ் தனது நடமாடும் உரிமையை பாதிப்பதாகக் கூறி 'X' அதனை மறுதலிக்க விரும்புகிறார். 'X' என்பவருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு :

இப்பிரச்சனையில் அரசின் ஆணை செல்லும். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19(1)(d)-ஆனது ஒரு முக்கிய உரிமையை இந்தியக் குடிமக்களுக்கு அளித்துள்ளது. அஃதாவது, **"இந்திய எல்லை முழுவதும் சென்று வரும் சுதந்திர உரிமை இந்தியக் குடிமக்கள் அனைவருக்கும் உண்டு" (Right to move**

freely throught the territory of India) என்பதாகும். இச் சுதந்திரத்தின் மீது நியாயமான கட்டுப்பாடுகளை ஷரத்து 19(5) விதிக்கிறது. அதாவது, (1) பொது மக்களின் நலன்களை முன்னிட் டும், (2) அட்டவணை பழங்குடியினரின் நலனைப் பாதுகாப்பதற்காகவும் இச்சுதந்திரத்தின் நியாயமான கட்டுப்பாடுகளை அரசு விதிக்கலாம்.

மேற்படி பிரச்சனையில் SARS நோய் தொற்றியுள்ள X மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக தொற்றுத் தடை ஒதுக்கி வைப்பு ஆணையை அரசு பிறப்பித்தது சரியே. இதனால் X மற்றும் அவரது குடும்பத்தினரின் 19(1)(d)-இன் கீழான நடமாடும் உரிமை பறிக்கப்பட்டதாக அவர் கூறவியலாது. ஏனெனில் ஷரத்து 19(5)-இன்படி பொது மக்களின் நலனை முன்னிட்டு இச்சுதந்திர உரிமையின் மீது அரசு கட்டுப்பாடு விதிக்கலாம். X மற்றும் அவரது குடும்பத்தினரை அந்நோய் குணமாகும் வரை ஒதுக்கி வைக்காவிட்டால் மற்ற பொது மக்களுக்கும் அது பரவிவிடக் கூடிய அபாயம் உள்ளது. எனவே பொது நலன் கருதிய அத்தடை செல்லத் தக்கதே. அவர் இந்த எதிர்த்து வழக்கிட்டால் வெற்றி பெற வழியில்லை.

பிரச்சனை 22 :

A State government passed an order making it compulsory on every cinema theatre to show scientific and educational documentary films before every film show. This was challenged as violative of their freedom of occupation by the Cinema Theatre Association. - Decide.

திரை அரங்கின் ஒவ்வொரு காட்சிக்கும் முன்னரும் அறிவியல் மற்றும் கல்வி சார்ந்த மெய் விளக்கப்படங்களை காண்பிப்பதை கட்டாயமாக்கி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்த அரசாணை தங்களது செய்தொழில் உரிமையைப் பாதிப்பதாக திரை அரங்கு உரிமையாளர்களின் கூட்டமைப்பு வாதிடுகிறது. - தீர்வழி காண்க.

தீர்வு :

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19(1)(g)-ஆனது, குடிமக்களுக்கு முக்கியமானதொரு அடிப்படை உரிமையை வழங்குகிறது. அதாவது, தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது

வியாபாரம் எதையும் செய்யும் சுதந்திரத்தை அச்ஷரத்து இந்தியக் குடிமக்களுக்கு வழங்கியுள்ளது. இச்சுதந்திரத்தின் மீது சில கட்டுப்பாடுகளை விதிக்க அரசுக்கு ஷரத்து 19(6) விதித்துள்ளது. அக்கட்டுப்பாடுகள் (1) நியாயமானதாக இருக்க வேண்டும் (reasonable). (2) பொது மக்களின் நலனுக்குட்பட்டதாக இருக்க வேண்டும் (in the interest of general public).

இந்நிலையில் மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காண நாம் **Minarva Talkis Banglore v. State of Karnataka**[1] எனும் வழக்கின் முடிவை காண வேண்டியுள்ளது. அதில் திரையரங்குகள் நாள் ஒன்றுக்கு நான்கு காட்சிகளுக்கு மேலாக திரைப்படம் காட்டுவதற்கு உரிமம் வழங்குதல் கூடாது என்று கட்டுப்பாடு விதித்து மாநில அரசு விதியொன்றை இயற்றி இருந்தது. ஆனால், இவ்விதி தனது அரசியலமைப்புப்படியான தனது தொழில் செய்யும் சுதந்திரத்தை பறிப்பதாக உள்ளதால், அதை செல்லாது என்று அறிவிக்கும்படியும், அய்ந்து காட்சிகள் காட்ட தனது திரையரங்கிற்கு உரிமம் வழங்கும் படியும் விண்ணப்பம் செய்தார். ஆனால் மேற்படி கட்டுப்பாடுகள் பொது மக்கள் நலனின் அடிப்படையில் மேற்படி தொழில், பணி மற்றும் வணிகம் அல்லது வியாபார சுதந்திரத்தின் மீது விதிக்கப் பட்டுள்ளதால் அவை நியாயமானவையே என்றும், ஒரே நாளில் அய்ந்து காட்சிகள் காட்டினால் அது திரைப்படம் பார்க்க வரும் இரசிகர்களின் சுகாதாரத்தை பாதிக்கக் கூடும் என்றும், ஒவ்வொரு காட்சி முடிந்ததும் திரையரங்கை சுத்தப்படுத்தி, துப்புரவு மற்றும் பாதுகாப்புடன் வைக்க நேரம் போதாது என்றும், **இவற்றின் அடிப்படையில் மேற்கண்டவாறான கட்டுப்பாடுகள் எதையும் விதிக்க அரசிற்கு அதிகாரம் உள்ளது** என்றும் உச்ச நீதிமன்றம் கூறி, அவருக்கு உரிமம் வழங்க உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது.

எனவே மேற்கண்ட வழக்கின் அடிப்படையில் நமது மேற்படி பிரச்சனையில் திரை அரங்கின் ஒவ்வொரு காட்சிக்கும் முன்னரும் அறிவியல் மற்றும் கல்வி சார்ந்த மெய் விளக்கப்படங்களை காண்பிப்பதை கட்டாயமாக்கி அரசு ஆணை பிறப்பிக்கப்பட்டது செல்லும். அறிவியலையும், கல்வியையும் மக்களுக்கு போதிக்க வேண்டியது அரசின் கடமை. எனவே **பொது மக்களின் நலனின் அடிப்படையில்** தொழில் சுதந்திரத்தின் மீது மேற்கண்ட கட்டுப் பாட்டை அரசு விதித்துள்ளது. திரைப்படக் காட்சிக்கு முன்னதாக மேற்கண்ட மெய் விளக்கப்படங்கள் சில நிமிடங்கள் மட்டுமே

1. AIR 1988 SC 526

காட்டப்படுவதால், இது நியாயமானதே. இதனால் தங்கள் தொழில் பாதிக்கப்பட்டதாக திரையரங்கு உரிமையாளர்களின் கூட்டமைப்பு வாதிடுவது ஏற்புடையதல்ல.

பிரச்சனை 23 :

A boy of 16 years was convicted for the offence of house trespass and sentenced to 6 month imprisonment. Later the probation of offenders Act was passed under which persons below 21 years should not ordinarily be sentenced to imprisonment. The boy claimed the beneficial interpretation in his favour. Decide.

16 வயதுடைய ஒரு சிறுவன் வீட்டில் அத்துமீறி நுழைந்ததற்காக தண்டிக்கப்பட்டு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. பின்பு குற்றமிழைத்தோர் நன்னடத்தைச் சட்டம் இயற்றப்பட்டது. இதன்படி பொதுவாக 21 வயதுக்கு குறைவான வர்களுக்கு சிறை தண்டனை விதிக்கப்படக் கூடாது. தனக்கு சாதகமாக இச்சட்டத்திற்கு விளக்கம் காணுமாறு சிறுவன் கோருகிறான். தீர்மானிக்க.

தீர்வு :

இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாம் அரசியலமைப்புச் சட்டத்தின் வகைமுறை ஒன்றையும், ஏற்கனவே இதையொத்த வழக்கு ஒன்றில் வழங்கப்பட்ட ஓர் தீர்ப்பையும் காணுதல் அவசியம்.

அதாவது, அரசியலமைப்புச் சட்டத்தின் 20(1)-வது ஷரத்து குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட நபர்களுக்கு சில பாதுகாப்புகளை அளிக்கிறது. அச்சரத்து இரண்டு பகுதிகளைக் கொண்டதாகும். அதன் இரண்டாவது பகுதி, **"குற்றம் நடந்த காலத்தில் அமலில் இருந்த சட்டத்தின் கீழ் எது தண்டத் தொகையாக விதிக்கப் பட்டிருக்குமோ அதற்கு மேற்பட்ட தண்டத் தொகைக்கு ஒரு நபரை உட்படுத்தக் கூடாது"** என்று கூறுகிறது.

Ratanlal v. State of Punjab[1] என்ற வழக்கில் 16 வயது டைய சிறுவன் 7 வயது சிறுமியின் பெண்மையை அவமதித்ததாகவும், வீட்டினுள் அத்துமீறி நுழைந்ததாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு

1. AIR 1965 SC 444

அவனுக்கு 6 மாத கடுஞ் சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்பட்டது. ஆனால் அதன் பின் 1958-ஆம் ஆண்டில் இளங் குற்ற வாளிகள் சட்டம் இயற்றப்பட்டது. அதில் 21 வயதிற்குட்பட்ட நபர் ஒருவருக்கு சாதாரணமாக சிறைத்தண்டனை விதிக்கப்படக் கூடாது எனக் கூறப்பட்டிருந்தது. மேற்படி ஷரத்து 20(1)-இன்படி அக்குற்ற வாளியின் தண்டனை குறைக்கப்படும் என உச்ச நீதிமன்றம் தீர்ப் பளித்தது.

இதிலிருந்து, குற்றம் நடந்த காலத்தில் இருந்த தண்டனையை விட அதிகமான தண்டனையை அல்லது அபராதத்தை விதிக்க முடியாது. ஆனால் தண்டனையைக் குறைக்கப் ப்யன்படுத்திக் கொள்ளலாம் என்பது புலனாகிறது. எனவே மேற்படி பிரச்சனையில் அச்சிறுவன் குற்றமிழைத் தோர் நன்னடத்தைச் சட்டத்தை தனக்குச் சாதமாகப் பொருள் கொள்ளும்படி கோருவது நிலைக்கத்தக்கதே. அவனுக்கு விடுதலை கிடைக்கும்.

பிரச்சனை 24 :

A government servant was charged for misappropriation of funds in the department. An enquiry was conducted and punishment was imposed. He was also proceeded against under criminal law. The Government servant pleaded protection under 'double jeopardy'. Decide.

ஒரு அரசுப் பணியாளர் துறைப்பணத்தை கையாடல் செய்ததாக குற்றம் சாட்டப்படுகிறார். துறைசார்ந்த விசாரணையின் மூலமாக அவருக்கு தண்டனை அளிக்கப்படுகிறது. அவர் மீது, தண்டனைச் சட்ட மூலமாக வழக்குத் தொடருகையில் அவர் ஒரே வழக்கிற்காக இருமுறை தண்டிக்க முனைவதாக நீதிமன்றத்தில் வாதிடுகிறார். இதனைத் தீர்க்க.

தீர்வு :

ஷரத்து 20(2)-இன்படி, **"எந்த நபரும் ஒரே குற்றத்திற்காக ஒரு தடவைக்கு மேல் குற்ற வழக்கிடப்பட்டு தண்டிக்கப்படக் கூடாது"** என்று கூறுகிறது. அதாவது இரட்டை இடரை (Double Jeopardy) ஏற்படுத்தக் கூடாது. ஆனால் ஒரு குற்றத்திற்காக நீதிமன்றமோ அல்லது தீர்ப்பாயமோ விதிக்கும் தண்டனைகளுக்கு எதிராகத்தான் மேற்படி பாதுகாப்பு கிடைக்கும். நீதிமன்றமல்லாத பிற ஆயங்கள் விதிக்கும்

தண்டனைகளிலிருந்து பாதுகாப்பு பெற இயலாது என **Maqbool Hussain v. State of Bombay**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

எனவே துறை சார்ந்த விசாரணையில் தண்டனை அளிக்கப் பட்ட அரசு ஊழியர் மீது மீண்டும் குற்றவியல் சட்டப்படி குற்ற வழக்கு தொடர்வதை மேற்படி ஷரத்து 20(2) தடுக்காது. அவருக்கு இரட்டை இடரிலிருந்து பாதுகாப்பு பெற வழியில்லை. மேற்படி பிரச்சனையின்படியிலான அவரது வாதம் நிலைக்கத்தக்கதல்ல.

மேற்படி பிரச்சனை **Venkataraman v. Union of India**[2] எனும் வழக்கை அடியொற்றியதாகும். இதிலும் துறை சார்ந்த நடவடிக்கை யில் தண்டனையடைந்த அரசு ஊழியர் ஷரத்து 20(2)-இன் கீழ் குற்றவியல் வழக்கு நடவடிக்கையிலிருந்து எவ்வித பாதுகாப்பையும் பெறவியலாது, என்று கூறப்பட்டது. ஏனெனில் துறை சார்ந்த விசாரணை (Departmental Enquiry), நீதிமன்ற அல்லது தீர்ப்பாய விசாரணைக்கு ஒப்பாகாது.

பிரச்சனை 25 :

Raman was dismissed from Government service as a result of an inquiry under Public Service Enquiry Act 1969. On the same grounds lateron he was prosecuted for having committed offences under the Indian Penal code and prevention of Corruption Act. Raman challenges his prosecution as violative of his fundamental right. - Decide.

ராமன் என்பவர், பொதுப் பணி விசாரணைச் சட்டம் 1960 கீழ் நடத்தப்பட்ட விசாரணையின் விளைவாக அரசு பணியிலி ருந்து நீக்கப்படுகிறார். பின்னர் அவர் மீது அதே காரணங்களுக்காக இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் புரிந்ததாக வழக்கு தொடரப்படுகிறது. இப்படி குற்ற வழக்கு தொடருவது தனது அடிப்படை உரிமையினை மீறுகிறதாக உள்ளது என ராமன் வாதிடுகிறார். - தீர்மானிக்கவும்.

தீர்வு :

இப்பிரச்சனை முன் சென்ற பிரச்சனையும் ஒரே மாதிரியானதே. மேலும் இப்பிரச்சனை **Venkataraman v. Union of**

1. AIR 1953 SC 325
2. AIR 1954 SC 375

India[1] எனும் வழக்கை அப்படியே அடியொற்றியதாகும். எனவே அப்பிரச்சனையில் கூறப்பட்ட தீர்வின்படி, இராமனின் வாதம் நிலைக்கத்தக்கதல்ல.

பிரச்சனை 26 :

'B' was prosecuted for an offence without being punished. After some times 'B' was again charged for the same offence and prosecuted. 'B' challenges his prosecution for the second time as it is violative of his fundamental rights. Decide.

'B' மீது குற்றம் செய்ததாக வழக்கு தொடரப்பட்டது ஆனால் 'B' தண்டிக்கப் படவில்லை. சில காலம் கழித்து அந்த குற்றத்திற்காக 'B' மீது மீண்டும் வழக்கு தொடரப்பட்டு 'B' தண்டிக்கப்படுகிறார். 'B' தான் இரண்டாம் முறையாக அதே குற்றத்திற்கு வழக்கில் ஈடுபடுத்தப்படுவது தன் அடிப்படை உரிமைகளை பாதிப்பதாக இருக்கிறது என வாதிடுகிறார் - தீர்வு தருக.

தீர்வு :

இப்பிரச்சனையும், "இரட்டை இடருக்கு" தொடர்புடையதேயாகும். மேலும் இப்பிரச்சனை **A.A.Mulla v. State of Maharashtra**[2] எனும் வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும்.

இவ்வழக்கின்படி, மேல்முறையீட்டாளராகிய சுங்க அதிகாரி ஒருவர் தாம் 90 தங்கக் கட்டிகளை மட்டுமே சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து பறிமுதல் செய்ததாக பொய்யாக கணக்கு காண்பித்தற்காக அவர் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் 409-வது பிரிவின்படியும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் 5-வது பிரிவின்படியும் குற்றஞ் சுமத்தப் பட்டது. உண்மையில் அவர் 99 தங்கக் கட்டிகளை பறிமுதல் செய்திருந்தார்; ஆனால் மேற்சொன்னபடி 90 தங்கக் கட்டிகளுக்கு மட்டுமே பொய்யாக கணக்கு காட்டியிருந்தார். எனவே மீதமுள்ள 9 தங்கக் கட்டிகளை தம்மிடமே இருத்தி வைத்துக் கொண்டதற்காக அவர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது. ஆனால் அவர் மீது குற்றம் நிரூபிக்கப்படாததால், அவர் விடுதலை செய்யப்பட்டார்.

1. AIR 1954 SC 375
2. AIR 1997 SC 1441

எனினும் அவர் மீது சுங்கச் சட்டம் மற்றும் அன்னியச் செலாவணிச் சட்டத்தின் (FERA) கீழ் அரசு மீண்டும் குற்ற வழக்கு தொடர்ந்தது. இவ்வாறு ஒரே குற்றத்திற்காக இரண்டாவதாக வழக்கு தொடர்ந்தது ஷரத்து 20(2)-ன் அடிப்படையில் செல்லாது என்று அவர் வாதிட்டார். ஆனால் இதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், இரண்டு குற்ற வழக்குகளுக்கும் தொடர்புடைய குற்றங்களின் உட்கூறுகள் மாறுபட்டவை என்றும், அத்தோடு மட்டுமல்லாமல் இரண்டு குற்றங்களின் நிகழ்வுச் சூழ்நிலைகளும் (factual situations) வேறுபட்டவை என்றும், எனவே இரண்டாவது வழக்கு நிலைக்கத்தக்கதே என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

எனவே இவ்வழக்கின் அடிப்படையில், மேற்படி பிரச்சனையில் தாம் இரண்டாம் முறையாக அதே குற்றத்திற்காக வழக்கிடப்பட்டிருப்பது தன்னுடைய அடிப்படை உரிமைகளை பாதிப்பதாக உள்ளது என்று 'B' செய்யும் வாதம் செல்லாது என்பதே இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 27 :

The Collector of customs ordered the confiscation of unlicensed arms and ammunition and undeclared Indian and foreign curency and also imposed penalty on the Foreigners under the Sea Customs Act. Later they were prosecuted under the Indian Penal Code and Foreign Exchange Regulation Act. Examine the constitutional validity of the prosecution.

கடல் சுங்க வரிச் சட்டத்தின் கீழ் வெளிநாட்டவரிடமிருந்து உரிமம் பெறாத ஆயுதங்களையும், அறிவிக்கப்படாத இந்திய மற்றும் வெளிநாட்டு ரூபாய் நோட்களையும் சுங்கவரி ஆட்சியர் பறிமுதல் செய்தும் மற்றும் தண்ட தொகையையும் விதித்து உத்தரவிடுகிறார். பின்பு இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் மற்றும் அன்னிய செலாவணி ஒழுங்கு முறை சட்டத்தின் கீழும், குற்ற வழக்கு தொடரப்படுகிறது. இந்த குற்ற வழக்கு அரசமைப்பு சட்டப்படி செல்லத்தக்கதா என்பதை ஆராய்க.

தீர்வு :

முன் சென்ற மூன்று பிரச்சனைகளில் கண்டவாறு, இப்பிரச்சனையும் "இரட்டை இடருக்கு" தொடர்புடைதேயாகும். ஷரத்து

20(2)-இன்படி, "எந்த நபரும் ஒரே குற்றத்திற்காக ஒரு தடவைக்கு மேல் குற்ற வழக்கிடப்பட்டு தண்டிக்கப்படக் கூடாது" என்று கூறுகிறது. அதாவது ஒருவருக்கு இரட்டை இடரை (Double Jeopardy) ஏற்படுத்தக் கூடாது.

இதையொட்டிய முக்கிய வழக்கான **Maqbool Hussain v. State of Bombay**[1] என்பதன் பொருண்மைகளின்படி மேல் முறையீட்டாளர் வெளிநாட்டிலிருந்து தங்கத்தை இந்தியாவிற்கு கொண்டு வந்தார். அவர் தன்னுடன் தங்கம் கொண்டு வந்துள்ள சங்கதியை விமான நிலையத்தில் உள்ள சுங்க வரி அதிகாரிகளிடம் தெரிவிக்கவில்லை. அந்த அதிகாரிகள் அந்த தங்கத்தை கடல் சுங்க வரிச் சட்டத்தின் (Sea Customs Act) கீழ் கைப்பற்றினர். அவர் மீது தங்கத்தை இறக்குமதி செய்வது தொடர்பான அரசுக் கட்டுபாட்டு அறிவிக்கையை மீறிய (for importing gold in contravention of Government Notification) குற்றத்திற்காக குற்ற வழக்கு தொடரப்பட்டு, முடிவில் அத்தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது. அவருக்கு தண்டத் தொகை விதித்து தண்டனை வழங்கப்பட்டது. இது இவ்வாறு இருக்க, அதே குற்றத்திற்காக பின்னிட்டு அன்னியச் செலாவணி ஒழுங்கு முறை சட்டத்தின் (Foreign Exchange Regulations Act) கீழ் அவர் மீது மற்றொரு குற்ற வழக்கு தொடரப்பட்டது. இவ்வாறு ஒரே குற்றத்திற்காக இரண்டாதாக தொடரப்பட்ட குற்ற வழக்கு, தனக்கு இரட்டை இடரை விளைவிப்பதாகவும், எனவே ஷரத்து 20(2) மீறப்பட்டுள்ளதாகவும், இதனால் இரண்டாவதாக தொடரப்பட்ட வழக்கை தடை செய்ய வேண்டும் என்றும் மேல்முறையீட்டாளர் வாதிட்டார். ஆனால் அவருக்கு முன்னதாக தண்டனை வழங்கிய கடல் சுங்க வரி அதிகார அமைப்பு (Sea Customs Authorities) என்பது ஒரு நீதிமன்றமோ அல்லது தீர்ப்பாயமோ அல்ல என்றும், அதன் தீர்மானிப்பு "இரட்டை இடர்" எனும் எதிர்வாதத்தை எடுப்பதற்கு வகை செய்யுமளவிற்கு ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்ல என்றும், எனவே அன்னியச் செலாவணி ஒழுங்குமுறை சட்டத்தின் கீழ் தொடரப்பட்ட வழக்கை தடை செய்ய முடியாது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் மேற்படி பிரச்சனையில் வரும் அந்த வெளிநாட்டவர் மீது இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழும், அன்னிய செலாவணி ஒழுங்கு முறை சட்டத்தின் கீழும் பின்னிட்டு

1. AIR 1953 SC 325

தொடரப்பட்டுள்ள குற்ற வழக்கு அரசமைப்பு சட்டப்படி செல்லத்தக்கதே என்பதுதான் இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 28 :

'A' went to the house of a Police Officer and offered him bribe in a closed cover. The Police Officer threw it at the face of 'A'. But later he asked 'A' to hand over the cover. 'A' handed over the cover which was seized by the Police Officer. In a bribery case apart 'A', it was centented by 'A' that the cover containing the currency notes should not be produced in evidence as it was compelled by the Police Officer to produce the notes and it is violation of his fundamental rights. Will 'A' succeed in his contention?

'அ' என்பவர் ஒரு காவல் அதிகாரியின் வீட்டிற்கு சென்று அவருக்கு ஒட்டிய சுவரில் கையூட்டு கொடுக்க முயலுகிறார். முதலில் கவரை விசிறியடித்த காவல் அதிகாரி பின்பு அதனை ஒப்படைக்கும் படி 'அ' வைக் கேட்க அவரும் அதை கொடுக்க காவல் அதிகாரி அதனை கைப்பற்றுகிறார். பின்னர் 'அ' க்கு எதிரான கையூட்டு குற்றச்சாட்டில், லஞ்சப்பணமானது தன்னிடத்திலிருந்து வற்புறுத்தி பெறப்பட்டதால் அது தனக்கு எதிரான சான்றாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடாது என்றும் அது தனது அடிப்படை உரிமையை மீறுகிறதாகவும் உள்ளது என 'அ' வாதிடுகிறார். 'அ' தன் வாதத்தில் வெற்றி பெறுவாரா?

தீர்வு :

தன்னைத்தானே குற்றஞ்சாட்டிக் கொள்ள வற்புறுத்தப் படுவதில் இருந்து ஒருவரை அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 20(3) பாதுகாப்பு அளிக்கிறது. **"ஒரு குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒரு நபர் தனக்கே எதிராக ஒரு சாட்சியமாக ஆக்கப்படுவதற்கு வற்புறுத்தப்படக் கூடாது"** என்று **ஷரத்து 20(3)** கூறுகிறது.

மேற்படி பிரச்சனை **Mohd. Dastgir v. State of Madras**[1] எனும் வழக்கை அப்படியே பின்பற்றி அமைந்ததாகும். இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, காவல்துறை துணை கண்காணிப்பாளர்

1. AIR 1960 SC 756

ஒருவருக்கு மூடிய உறை ஒன்றில் கையூட்டு வைத்து கொடுப்பதற் காக மேல்முறையீட்டாளர் சென்றார். அந்த அதிகாரி அவ்வுறையை திறந்து பார்த்து அதில் ரூபாய் நோட்டுகள் இருந்ததைக் கண்டார். உடனே அவர் அதை வீசியடித்தார். மேல்முறையீட்டாளர் அதை எடுத்துக் கொண்டார். பின்னிட்டு அந்த அதிகாரி ரூபாய் நோட்டுகள் அடங்கிய அந்த உறையை தன்னிடம் கொடுக்கும்படி மேல்முறையீட் டாளரை கேட்டுக் கொண்டார். மேல்முறையீட்டாளர் தன்னுடைய சட்டைப்பையிலிருந்து சில ரூபாய் நோட்டுகளை எடுத்து, அந்த காவல் அதிகாரியின் மேஜை மீது வைத்தார். உடனே அந்த ரூபாய் நோட்டுகளை அக்காவல் அதிகாரி கைப்பற்றி, தனக்கு கையூட்டு கொடுக்க முனைந்த குற்றத்திற்காக மேல்முறையீட்டாளர் மீது குற்ற வழக்கு தொடர்ந்தார். அக்குற்ற வழக்கின் மேல்முறையீட்டின் பொழுது, தன்னிடமிருந்து கைப்பற்றப்பட்ட அந்த கையூட்டு ரூபாய் நோட்டுகளை ஒரு சாட்சியமாக ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றும், ஏனெனில் அவற்றை கொடுக்கும்படி தன்னை காவல் அதிகாரி வற்புறுத்தியதால்தான் தாம் கொடுத்ததாகவும் அவர் வாதிட்டார். ஆனால் அக்காவல் அதிகாரி அந்த ரூபாய் நோட்டுகளை தன்னிடம் கொடுக்கும்படி மேல்முறையீட்டாளரை வற்புறுத்தவில்லை என்றும், அதற்காக எவ்வித வலுக்கட்டாயத்தையும் மேல்முறையீட் டாளருக்கு செய்யவில்லை என்றும் கூறி, அவருக்கு ஷரத்து 20(3)-ன் கீழான பாதுகாப்பை அளிக்கவியலாது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. மேலும், மேல்முறையீட்டாளரிடமிருந்து ரூபாய் நோட்டுகள் கைப்பற்றப்பட்ட பொழுது, ஷரத்து 20(3)-ல் கூறப்பட்டுள்ளபடி, அவர் எந்த குற்றத்திற்காகவும் குற்றம் சாட்டப் பட்டிருக்கவில்லை (not an accused of any offence) என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

எனவே இவ்வழக்கின் அடிப்படையில் மேற்படி பிரச்சனை யில் "அ"-வின் அடிப்படை உரிமை எதுவும் மீறப்படவில்லை. எனவே அவர் தனது வழக்கில் வெற்றி பெற வாய்ப்பில்லை என்பதே தீர்வு.

பிரச்சனை 29 :

'A' who had been chargesheeted for committing offences against State was arrested. But he was released as there was no evidence against him proved in the court. But he was kept under police surveillance which included secret picketing of his

house by the police, domiciliary visits at nights and verification of his movements. He was also disturbed during his deep sleep at night. 'A' contended the activities of the police in this regard violated his personal liberty. Decide.

தேசத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்தார் என குற்ற அறிக்கையின் கீழ் 'ஆ' என்பவர் கைது செய்யப்பட்டார். போதிய சான்றுகள் இல்லை என பின்னர் அவரை நீதிமன்றம் விடுவித்தது. ஆனால் அவர் காவல் துறையின் கண்காணிப்பில் இருந்தார். அவர் வாழ்விடத்திற்கு ரகசியமாக காவல் துறையினர் இரவு நேரங்களில் சென்று அவரது நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்தனர். மேலும் 'ஆ' என்பவரின் வீட்டுக் கதவை அடிக்கடி தட்டி அவரின் ஆழ்ந்த தூக்கத்தைக் கலைத்தது போன்றவை அவரது தனி நபர் சுதந்திரத்தை மீறிய செயல் என 'ஆ' வாதிட்டார். தீர்வு காண்க.

தீர்வு :

மேற்படி பிரச்சனை **Kharak Singh v. State of U.P.**[1] எனும் வழக்கின் பொருண்மைகளின் அடிப்படையில் அமைந்ததாகும். மேற்படி வழக்கில் கூறப்பட்டபடி மேற்கண்டவாறு காவல் துறையினர் செய்தது, 'A'-யின் தனி நபர் சுதந்திரத்தில் தலையிடுவ தாகும். "எந்த நபரின் வாழ்வும் தனிப்பட்ட சுதந்திரமும் சட்டத்தால் அமைக்கப்பட்ட நடைமுறைகளில் தவிர, பிற வழிகளில் மீறப்படக் கூடாது," என்று ஷரத்து 21 கூறுகிறது. இங்கு 'வாழ்வு' (life) என்பது வெறுமனே உடல்ரீதியாக வாழ்ந்து கொண்டிருப்பது மட்டுமல்ல; அதற்கும் மேற்பட்டது. எனவே, எவ்வித அதிகாரமும் இல்லாமல், ஒருவரது வீட்டில் ஊடுறுவதோ அல்லது அவருக்கு தொல்லைகள் (தூக்கத்தைக் கலைத்தல்) கொடுப்பதோ, தனி நபர் சுதந்திரத்தை மீறிய செயலாகும், என்று உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் கூறியது.

எனவே, இது ஷரத்து 21-ஐ மீறிய செயலாகும். இதனடிப் படையில் வாதிடும், மேற்படி 'A', தனது வழக்கில் நிச்சயமாக வெற்றி பெறுவார். அதில் அய்யப்பாடு ஏதுமில்லை.

பிரச்சனை 30 :

'X' was sentenced to death but his death sentence was

1. AIR 1963 SC 1295

not executed for 12 years and therefore he demands quashing of his death sentence under Art.21 of the Constitution. Examine the validity of his contention.

X என்பவருக்கு தூக்குத் தண்டனை வழங்கப்பட்டு 12 ஆண்டுகளாகியும் அத்தண்டனை நிறைவேற்றப்படவில்லை. ஆகவே, X என்பவர் தனக்கு விதிக்கப்பட்ட தூக்கு அரசியல் சாசன பிரிவு 21-ன் கீழ் செல்லுபடியாகாது எனவும் மற்றும் அதனை ரத்து செய்ய வேண்டும் எனவும் வாதிடுகிறார். அவரது வாதம் செல்லும் தன்மையுடையதா என்பதை ஆராய்க.

தீர்வு :

மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்ப்பளிக்க, நாம் பின்வரும் சில வழக்குகளை ஆராய வேண்டியுள்ளது.

T.V.Vatheeswaran v. State of Tamil Nadu[1] எனும் வழக்கில், தூக்கு தண்டனை வழங்கப்பட்டு, இரண்டு ஆண்டுகளாகியும், அதனை அரசு நிறைவேற்றாமல் கால தாமதம் செய்தால், அதனை ஆயுள் தண்டனையாக குறைக்கக் கோர, அத்தூக்கு தண்டனைக் கைதி உரிமை படைத்தவராவார் எனப்பட்டது.

ஆனால், இத்தீர்ப்பை **Sher Singh v. State of Pubjab**[2] வழக்கில் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக தூக்குத் தண்டனை நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதத்தால், அதை ஆயுள் தண்டனையாக மாற்றுவது குறித்த பிரச்சனையை, ஒவ்வொரு வழக்கின் தனிப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு ஆராய வேண்டுமே தவிர மேற்படி **Vatheeswaran** வழக்கில் கூறப்பட்டபடி, இரண்டு ஆண்டுகள் கால தாமதம் ஏற்பட்டுவிட்டால், தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்றிவிடலாம் என்னும் விதியை அனைத்து வழக்குகளுக்கும் பொதுவாக ஏற்றுக் கொள்ளக் கூடாது, என்று கூறியது. அதன்படி தூக்கு தண்டனை நிறைவேற்றத்தின் கால தாமதம் காரணமாக அதனை ஆயுள் தண்டனையாக மாற்றலாமா, வேண்டாமா எனபதை பின்வரும் கூறுகளைக் கொண்டுதான் முடிவெடுக்க வேண்டும். அவை, எடுத்துக்காட்டாக, அக்கால தாமதத்திற்குண்டான காரணம் (Cause of delay), அக்கால தாமதத்திற்கு யார் காரணம் (அதாவது அரசா அல்லது அக்கைதியா),

1. AIR 1981 SC 643
2. AIR 1983 SC 465

கால தாமதத்தின் அளவு (extent of delay), கைதியின் சிறை நடத்தை (Conduct of Convict) ஆகிய இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ள வேண்டும், என்று உச்ச நீதிமன்றம் வலியுறுத்தியது. இதனடிப்படையில் தூக்கு தண்டனைக் கைதியான Sher Singh-இன் நடத்தை (செயல்பாடு) காரணமாகவே, தூக்கு தண்டனையை நிறைவேற்றுவதில் கால தாமதம் ஏற்பட்டுள்ளதால், அதனை ஆயுள் தண்டனையாக மாற்றவியலாது, என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

எனினும், **Javed v. State of Maharashtra**[1] எனும் வழக்கில் தூக்கு தண்டனையானது, இரண்டு ஆண்டு காலமாகியும் நிறைவேற்றப்படவில்லை. சிறையில் Javed நன்னடத்தையுடன் (good conduct) நடந்து கொண்டான். தனது குற்றச் செயலுக்காக மனம் வருந்தினான். எனவே இதனடிப்படையில் உச்ச நீதிமன்றம் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற உத்திரவிட்டது.

Tribeniben v. State of Gujarat[2] எனும் வழக்கில், முறையற்ற நீண்ட காலதாமதம், தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வழிவகுக்கும் என்றும், ஒரு கால தாமதம் முறையானதா இல்லையா என்பதை, அந்த வழக்கின் அனைத்து சூழலையும் கருத்தில் கொண்டு ஆராய வேண்டும் என்றும், இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டால் தூக்கு தண்டனையை ஆயுள் தண்டனையாக மாற்ற வேண்டும் என்று **Vatheeswaran** வழக்கில் கூறப்பட்ட விதி பொருந்தாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

தூக்குதண்டனை இன்றா, நாளையா என்று அனுதினமும் பயந்து வாழ்வது, ஷரத்து 21-இன் கீழான வாழ்வு மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை மீறுவதாக உள்ளது, என்று மேற்படி பிரச்சனையில் வாதிடும் 'X' என்பவர், 12 ஆண்டுகளாகியும் தூக்குதண்டனை நிறைவேற்றப்படாத காரணத்தால், இதை இரத்து செய்யக் கோருவது செல்லத்தக்கதே. ஆனால், இதற்கு நாம் முன் கண்ட கூறுகள் அவருக்கு சாதகமாக அமைய வேண்டும். அதாவது அக்காலதாமதம் 'X'-ஆல் ஏற்பட்டிருக்கக் கூடாது; மாறாக அரசால் ஏற்பட்டிருக்க வேண்டும். அதுபோல், 'X', சிறையில் நன்னடத்தையுடன் நடந்து தனது குற்றத்திற்காக வருந்தியிருக்க வேண்டும். அப்பொழுதுதான் 'X'-இன் வாதம் எடுபடும். அப்பொழுதும், தூக்கு தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்படுமே தவிர, முற்றிலும் இரத்தாகிவிடாது.

1. AIR 1985 SC 231
2. AIR 1989 SC 1335

பிரச்சனை 31 :

'B' is employed in the police department. He goes on hunger strike in protest against some injustice pertaining to his services. He is prosecuted under Section 309 of the Indian Penal Code for attempt to commit suicide by going on hunger strike. The accused person claims freedom to commit suicide as part of protection to life and personal liberty guaranteed by Art.21 of the Indian Constitution. Provide legal advice to 'B' referring to relevant court decisions.

காவல் துறையில் பணிபுரிந்து வரும் 'B' என்பவர், பணி தொடர்பாக அவருக்கு அநீதி இழைக்கப்பட்டதாக கருதி சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டார். அவர் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 309ன் கீழ் உண்ணாவிரதப் போராட்டத்தின் மூலம் தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார் என்று அவர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டு சட்ட நடவடிக்கை தொடரப்பட்டது. இந்திய அரசமைப்பு சட்டம் பிரிவு 21ன் கீழ் தன் வாழ்க்கைக்கும், தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் அளிக்கப் பட்டுள்ள பாதுகாப்பானது தற்கொலை செய்து கொள்வதற்கான உரிமையையும் உள்ளடக்கியதாகும் என வாதிடுகிறார். தொடர்புடைய நீதிமன்ற தீர்ப்புகளை குறிப்பிட்டு 'B' என்பவருக்கு சட்ட ஆலோசனை வழங்கவும்.

தீர்வு :

P.Rathinam v. Union of India[1] எனும் வழக்கில், ஷரத்து 21-இன் கீழான வாழ்வுரிமையில், வாழாமல் இருக்கும் உரிமையும், அதாவது சாகும் உரிமையும் அடங்கும் எனப்பட்டது. எனவே, தற்கொலை முயற்சியை தண்டிக்கும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 309-வது பிரிவு, ஷரத்து 21-ஐ மீறுவதாக உள்ளது. எனவே, அப்பிரிவு 309 இல்லாநிலையது என்றும் கூறப்பட்டது. ஆனால், **Gian Kaur v. State of Punjab**[2] எனும் வழக்கில் மேற்படி P.Rathinam வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தால் ஒதுக்கித் தள்ளப்பட்டு, ஷரத்து 21-இன் கீழான வாழ்வுரிமையில், வாழாமல் சாகும் உரிமை அடங்காது எனப்பட்டது. வாழ்விற்கும், தனிப்பட்ட சுதந்திரத்திற் கும் உத்திரவாதம் அளிக்கும் ஷரத்து 21, அவ்வாழ்வை இயற்கைக்கு

1. (1994) 3 SCC 394
2. AIR 1996 SC 946

முரணாக தற்கொலை மூலம் முடித்துக் கொள்ளவும் உரிமை அளிக்கும் ஒன்றாக கற்பனையிலும் எண்ணிப்பார்க்க இயலாது என உச்ச நீதிமன்றம் கூறியது. எனவே, மேற்படி பிரச்சனையில் 'B' வாதம் செல்லத்தக்கதல்ல. ஷரத்து 21-இன் கீழான வாழ்வுரிமையில் தற்கொலை செய்து கொள்ளும் உரிமை அடங்காது.

பிரச்சனை 32 :

A woman challenges the constitutional validity of S. 9 of the Hindu Marriage Act, 1955 which deals with restitution of conjugal rights, on the ground that the provision which a woman to live with her husband, against her will would be a violation of her right to personal liberty under Art. 21. Decide.

அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் மண வாழ்க்கைக்குரிய உரிமைகளை மீட்டளிப்பதை வகுத்தளிக்கும் 1955-ஆம் ஆண்டு இந்துத் திருமணச் சட்டத்தின் 9-வது பிரிவின் செல்லுந்தன்மையை எடுத்துரைத்தும், அவ்வழிவகை ஒரு பெண்ணை அவளுடைய கணவனுடன் சேர்ந்து வாழும்படி கட்டாயப்படுத்துவதினால், அது அரசியலமைப்பின் 21-வது பிரிவின் கீழ் அவளுடைய தனி நபர் சிறப்புரிமை மீறப்படுகிறது என்று காரணம் காட்டியும், ஒரு பெண்மணி வாதாடுகிறார். தீர்மானிக்க.

தீர்வு :

தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளித்து தருவதற்கு வகை செய்யும் இந்து திருமணச் சட்டத்தின் 9-வது பிரிவு, இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதா என்பது குறித்து 1983 மற்றும் 1984-ஆம் ஆண்டுகளில் எழுந்த பின்வரும் முக்கிய வழக்குகளில் பெரும் சர்ச்சைக்கு உள்ளானது. அச்சர்ச்சை இறுதி யாக உச்ச நீதிமன்றத்தால் தீர்த்து வைக்கப்பட்டது. அவ்வழக்கு களும், அவற்றில் கூறப்பட்ட கருத்துரைகளும் நமது மேற்படி பிரச்சனைக்கு தீர்வழி தருவதாகும்.

Sareetha v. Venkata Subbaiah[1] - இது ஒரு மிகப் பிரபல மான வழக்காகும். ஒரு காலகட்டத்தில் திரையுலகின் முன்னணி நடிகையாக திகழ்ந்தவர் நடிகை சரிதா ஆவார். அவர் திரையுலகில் நுழைவதற்கு முன்னரே, வெங்கட சுப்பையா என்பவரைத்

1. AIR 1983 AP 356

திருமணம் செய்து கொண்டார். அவர் தமிழ்த் திரையுலகில் மெல்ல மெல்ல பிரபலமடையத் தொடங்கியவுடன், நெல்லூரில் வசிக்கும் தனது கணவரையும், அவருடனான தாம்பத்திய உறவையும், அதன் விளைவான குழந்தைப் பிறப்பையும் புறக்கணிக்க ஆரம்பித்தார். இதனால் மன மொடிந்து போன வெங்கட சுப்பையா, சரிதாவுடனான தனது தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரி நெல்லூர் மாவட்ட நீதிமன்றத்தில் மனுச் செய்தார். வழக்கை விசாரித்த அந்நீதிமன்றமும், அவர் கோரியபடி சரிதாவுடனான தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கான தீர்ப்பாணையை பிறப்பித்தது. இத்தீர்ப்பாணையை எதிர்த்து சரிதா ஹைதராபாத்தில் உள்ள உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார்.

அம்மேல்முறையீட்டில் தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிப்பதற்கு வகை செய்யும் இந்து திருமணச் சட்டத்தின் 9-வது பிரிவு, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 21-வது ஷரத்தின் கீழான சுதந்திரத்தையும் (அந்தரங்க உரிமையை உள்ளிடக்கிய தனிநபர் சுதந்திர உரிமை) (Right to liberty which includes right to privacy) மற்றும் 14-வது ஷரத்தின் கீழான சமத்துவ உரிமையையும் (Right to equlity) மீறுவதாக உள்ளது என்றும், எனவே மேற்படி 9-வது பிரிவு அரசியலமைப்பற்றது என்றும் வாதம் புரிந்தார். இதற்கு அடிப்படையாக பின்வரும் காரணங்களை எடுத்தியம்பினார்.

(1) "குழந்தைப் பிறப்பிற்காக தனது உடல் எங்கே, எவ்வாறு பயன் படுத்தப்பட வேண்டும் அல்லது பயன்படுத்தப்படக் கூடாது என்பதை சுதந்திரமாகத் தேர்ந்தெடுக்கும் உரிமையும், தனது உடலின் பல்வேறு பகுதிகள் எப்பொழுது, யாரால் உணர்வூட்டப்பட வேண்டும் (தொடப்பட வேண்டும்) என்பதை தேர்ந்தெடுக்கும் உரிமையும்" அந்தரங்க உரிமையின்பாற்பட்டது. (Right to privacy confers on a woman, "a right of free choice as to whether, where and how her body is to be used for the procreation of children and also the choice of when and by whom the various parts of her body are to be sensed."). இந்த அந்தரங்க உரிமை, 21-வது ஷரத்தின் கீழான சுதந்திர உரிமையின் ஒரு பகுதியாக உள்ளது. தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கும் தீர்வழியை, இந்து திருமணச் சட்டத்தின் 9-வது பிரிவின் வாயிலாக அங்கீகரிப்பதன் வாயிலாக, அரசு இந்திய அரசியலமைப்பின் 21-வது ஷரத்தின் வாயிலாக ஒரு பெண்ணிற்கு அளிக்கப்பட்டுள்ள அடிப்படை சுதந்திர உரிமையை மீறுகிறது.

(2) 14-வது ஷரத்து, சமத்துவ உரிமையைக் கூறுகிறது. அதாவது சமநிலையில் உள்ளவர்கள் சமமாக பாவிக்கப்பட வேண்டும் என்பது சமத்துவ உரிமையின் அடிப்படை தத்துவ மாகும். ஆனால் மேற்படி 9-வது பிரிவின் கீழ் வழங்கப்படும் தீர்வழி, திருமணமான ஆண் மற்றும் திருமணமான பெண் ஆகிய இரு பாலருக்கும் பொதுவாக உள்ளது. இது சமநிலையில் இல்லாத இரு பாலரை சமமாக பாவிப்பதாக உள்ளது. எனவே மேற்படி 9-வது பிரிவு, 14-வது ஷரத்தை மீறுவதாக உள்ள்து.

இவ்வாறாக மேற்கண்ட இரண்டு காரணங்களின் அடிப் படையில், 9-வது பிரிவு அரசியலமைப்பற்றது (Sec. 9 of Hindu Marriages Act is unconstitutional) என்று சரிதாவின் தரப்பில் வாதம் புரியப்பட்டது. மேல்முறையீட்டில் மேற்படி வழக்கை ஆராய்ந்த **நீதியரசர் திரு.பி.ஏ.சௌத்ரி** அவர்கள் சரிதாவின் மேற்கண்ட வாதங்களை ஏற்றுக் கொண்டு, குழந்தைப் பேற்றிற்காக ஒரு மனைவியை அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாக கணவனு டன் உடலுறவு வைத்துக் கொள்ள வற்புறுத்துவதன் வாயிலாக, பிரிவு 9-ஆனது அம்மனைவியின் அந்தரங்க உரிமையை மீறுவதாக உள்ளது என்று கூறி, அப்பிரிவை நீக்கறவு (struck down) செய்தார். இதன் விளைவாக, தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரி வெங்கட சுப்பையா தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்து தீர்ப்புரைத்தார்.

Smt. Harvinder Kaur v. Harmander Singh[1] - இவ் வழக்கிலும் தனது தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்கக் கோரி இந்து திருமணச் சட்டம் 9-வது பிரிவின் கீழ் மனுச் செய்பவர், கணவரே ஆவார். மேற்படி சரிதா வழக்கில் மேற்கண்ட 9-வது பிரிவானது அரசியலமைப்பற்றது; செல்லாதது என்று ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் கூறிய தீர்ப்பைச் சுட்டிக்காட்டி மேற்படி மனுவை, அவரது மனைவி எதிர்க்கிறார்.

ஆனால் சரிதா வழக்கில் ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம் கூறிய கருத்தை, இவ்வழக்கில் டெல்லி உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளிக்க வகை செய்யும், இந்து திருமணச் சட்டத்தின் 9-வது பிரிவு, ஷரத்து 21 மற்றும் 14-ன் கீழான சுதந்திரங்களை எவ்வகையிலும் மீறவில்லை யென்றும், எனவே அப்பிரிவு அரசியலமைப்பிற்குட்பட்டதே,

1. AIR 1984 Del. 66

என்றும் டெல்லி உயர் நீதிமன்றம் நிலைநிறுத்தியது.

இதற்கு அடிப்படையாக அவ்வுயர் நீதிமன்றத்தின் நீதியரசர் திரு. அவத் பிஹாரி ரோஹாட்கி **(Mr. Justice Avadh Behari Rohatgi)** கூறிய கருத்துரைகள் வருமாறு. திருமணம் எனும் கருத்துருவில் பாலின உடலுறவு (sexual intercourse) என்பது ஒரு கூறு மட்டுமே. தாம்பத்திய உறவு உரிமைகளை மீட்டளித்து தீர்வழி வழங்குவதன் நோக்கமே, தம்பதிகள் உடனுறைந்து ஒன்றாக வாழ வேண்டும் என்பதும், திருமண உறவு பந்தத்துடன் வாழ்வைத் தொடர வேண்டும் என்பதும், திருமணம் எனும் அமைப்பை நிலைநிறுத்த வேண்டும் என்பதுமே ஆகும். மேற்கண்ட தீர்வழி வழங்கப்பட்ட பிறகும், தம்பதியினர் ஓராண்டு காலம் வரை சேர்ந்து வாழ முயற்சிக்கவில்லையானால் அல்லது இயலவில்லை யானால், இந்து திருமணச் சட்டத்தின் 13 (1-A)(ii)-ன் கீழ் மணமுறிவு பெற விண்ணப்பிக்கலாம். எனவே மேற்படி பிரிவு 13 (1-A)(ii)-ன் கீழ் இவ்வாறு வகை செய்யப்பட்டிருக்கும் பொழுது, அதைக் கருத்தில் கொள்ளாமல், பிரிவு 9-ஐ அரசியலமைப்பற்றது என விளம்பக் கோருவது, ஒரு குறுகிய கண்ணோட்டத்தின்பாற்பட்டதாகும் என்று கூறி, பிரிவு 9 அரசியலமைப்பிற்குட்பட்டதே என்று கருத்துரைத்தார். இதனடிப்படையில், கணவனின் தாம்பத்திய உறவு உரிமையிலிருந்து விலகி இருப்பதற்கு வலுவான காரணங்கள் எதையும் மனைவி காட்டத் தவறும் பொழுது, அக்கணவனுக்கு அவ்வுரிமைகள் வழங்கப்படும் என்று இறுதியாக தீர்ப்புரைத்தார்.

Saroj Rani v. Sudarshan Kumar[1] - இந்து திருமணச் சட்டத்தின் 9-வது பிரிவு அரசியலமைப்பிற்குட்பட்டதா இல்லையா என்பது குறித்து மேற்கண்டவாறு உயர் நீதிமன்றங்களுக்கிடையே இருந்து வந்த கருத்து வேற்றுமையை மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் நீக்கி, அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம், 9-வது பிரிவானது அரசியலமைப்பிற் குட்பட்டதே என்று தீர்ப்புரைத்தது. அதாவது டெல்லி உயர் நீதிமன்றம் கூறிய கருத்தை ஏற்றுக் கொண்டு, முன்னதாக சரிதா வழக்கில் ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் கூறிய கருத்தை ஒதுக்கித் தள்ளிவிட்டது.

மேற்சென்ற வழக்குகளின் தீர்ப்புப்படி நமது மேற்படி பிரச்சனையில் வரும் பெண்மணி செய்யும் வாதம் நிலைக்கத்

1. AIR 1984 SC 1562

தக்கதல்ல. ஷரத்து 21-இன் கீழான அவளது தனிநபர் சுதந்திர உரிமை எவ்வகையிலும் மீறப்படவில்லை. இந்து திருமணச் சட்டத்தின் பிரிவு 9 அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதே.

பிரச்சனை 33 :

A person injured in an accident was taken to the private hospital for treatment. The doctor refused to provide treatment without procedural formalities to be completed. As a result of this the injured person died of profused bleeding. Decide.

விபத்தில் காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு எடுததுச் செல்லப்பட்டார். சட்ட நடைமுறை சம்பிரதாயங்கள் முழுமை பெறாமல் சிகிச்சை கொடுக்க டாக்டர் மறுத்துவிட்டார். காயமடைந்தவர் தொடர் இரத்த ஒழுக்கின் காரணமாக இறந்து போகிறார். தீர்மானிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனை ஷரத்து 21-ஐ மையமாகக் கொண்டதாகும். இதற்குத் தீர்வளிக்க நாம் பின்வரும் வழக்கை காண வேண்டும்.

Paramanada Katara v. Union of India[1] - இவ்வழக்கில் **உடல் ஆரோக்கியம் மற்றும் மருத்துவ உதவி பெறுவதற்கான உரிமையும் (Right to health and Medical Assistance)** அரசியலமைப்பின் ஷரத்து 21-இன்பாற்பட்டதே என்று உச்ச நீதிமன்றம் கருத்துரைத்தது. இதில் விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு உடனடியாக மருத்துவ உதவி வழங்க வேண்டியது மருத்துவர் ஒவ்வொருவரின் தொழிற்முறை கடப்பாடு ஆகும் என்றும், குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி காவல் துறையினர் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வரை மருத்துவர்கள் காத்திருத்தல் கூடாது என்றும், காயம் அடைந்தவர்களின் உயிரை உடனடியாகக் காப்பாற்ற வேண்டும் என்று ஷரத்து 21 ஒரு கடப்பாட்டை மருத்துவர்களின் மீது விதிக்கிறது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. ஒரு மருத்துவர் அவர் அரசுப் பணியில் இருந்தாலும் அல்லது தனியாக மருத்துவத் தொழில் செய்து கொண்டு வந்திருந்தாலும் விபத்தில் காயம்

1. AIR 1989 SC 2039

அனைந்தவர்களுக்கு, காவல் துறையினர் வந்து விசாரிக்கும் வரை காத்திராமல் உடனடியாக சிகிச்சை அளித்து அவர்களது இன்னுயிரைக் காப்பாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தை, ஏற்று 21-இன் வாயிலாக இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் உணர்த்தியுள்ளது.

எனவே இவ்வழக்கின்படி, விபத்தில் காயமடைந்தவருக்கு சட்ட நடைமுறைகளைக் காட்டி, மருத்துவர் சிகிச்சை அளிக்க மறுத்தது ஏற்று 21-இன் கீழான அவரது அடிப்படை உரிமையை மீறியதாகும். எனவே இழப்பீடு கோரலாம்.

பிரச்சனை 34 :

The passport of Mr. Abhisheik was cancelled by a passport officer without assigning any reason for his action under section 10(c) of the Passport Act. Mr. Abhishiek challenged the action as unconstitutional and violative of his fundamental right under Article 21. Decide.

பிரிவு 10(c) கடவுச்சீட்டு சட்டப்படி, கடவுச்சீட்டு அதிகாரியால் எந்த காரணமும் கூறாமல் திரு.அபிஷேக் என்பவரது கடவுச்சீட்டு நீக்கம் செய்யப்படுகிறது. அரசமைப்பின் 21-வது உறுப்பின் கீழ் தனது அடிப்படை உரிமை பாதிக்கப்படுவதால் இது செல்லாது என திரு.அபிஷேக் வழக்கிடுகிறார். தீர்மானிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனை **Menaka Gandhi v. Union of India**[1] - என்ற வழக்கை அப்படியே பின்பற்றி அமைந்ததாகும். திரு.அபிஷேக் தனது வழக்கில் வெற்றி பெற முடியும். (மேற்கோள் எண். 265-இல் காண்க.)

பிரச்சனை 35 :

Sunil, detained under National Security Act was put in Jail along with other convicted persons. Sunil challenges that since he is a detenue, he should not be put along with other convicted persons - Decide.

சுனில் என்பவர் தேசிய பாதுகாப்பு சட்டப்படி தடுப்புக்

1. AIR 1978 SC 597

காவலில் வைக்கப்பட்டு பிற குற்றவாளிகளோடு சிறையில் அடைக்கப்பட்டார். சுனில் தான் தடுப்பு காவலில் வைக்கப்படும் போது தன்னை பிற குற்றவாளிகளோடு சிறையில் அடைக்கப் படுவதை எதிர்த்து வழக்கு தொடர்கிறார் - தீர்மானிக்க.

தீர்வு:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் **ஷரத்து 22** குற்றவியல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களுக்கும், தடுப்புக் காவலில் சிறை வைக்கப்பட்டவர்களுக்கும் சில பாதுகாப்புகளை வழங்குகிறது. இப்பாதுகாப்பின் எல்லையானது பல்வேறு வழக்குகளில் கூறப்பட்ட தீர்ப்புகளின் வாயிலாக விரிவாக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் பின்வரும் வழக்கு இப்பிரச்சனைக்குத் தீர்வு பகர்வதாகும்.

A.K.Roy v. Union of India[1] என்ற வழக்கு 'தேசிய பாதுகாப்புச் சட்டம்' தொடர்பானதாகும். இதில் தீர்ப்புரைக்கும் போது உச்ச நீதிமன்றம், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவரின் நலனைப் பாதுகாக்கவும் சில ஆணைகளைப் பிறப்பித்தது. அவை,

1. தடுப்புக் காவலில் ஒரு நபர் வைக்கப்பட்டது குறித்து அந்நபரின் உறவினர்களுக்கு அது குறித்தும், தடுப்புக் காவலில் இருக்கும் இடத்தைக் குறித்தும் அஞ்சல் மூலமாக அறிவிக்க வேண்டும்; 2. ஒரு நபர் வழக்கமாக வசிக்கும் இடத்திலேயே அவரைத் தடுப்புக் காவலில் வைக்க வேண்டும்; 3. தடுப்புக் காவலில் வைக்கப் பட்ட நபரை உறவினர்கள் வந்து பார்த்துச் செல்லவும், தன்னுடைய உணவைப் பெறவும், புத்தகங்களைப் பெறவும் அவருக்கு உரிமை உண்டு; **4. தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவரை, குற்றம் புரிந்ததற்காக கைது செய்யப்பட்ட பிற குற்றவாளிடமிருந்து தனித்து வைக்க வேண்டும்;** 5. அவரைத் தண்டிக்கும் விதத்தில் நடத்தக் கூடாது; 6. அவர் மனித நேயத்தின் சகலவித நெறிகளுக்கும் உட்படுத்தப்பட்டு மாண்புடன் நடத்தப்பட வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் வருபவரும், தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவருமான சுனில் என்பவர் தன்னை பிற குற்றவாளிகளோடு சிறையில் அடைக்கக் கூடாது என்று தொடுக்கும் வழக்கு, முன்சென்ற ஏ.கே.ராய் வழக்கில் உச்ச நீதிமன்றம் பிறப்பித்த ஆணைகளில் ஒன்றின்படி வெற்றி பெறத்தக்கதாகும்.

---

1. AIR 1982 SC 710

பிரச்சனை 36 :

The request of 'A' who is under preventive detention to make his representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'A' contends that it is violative of his fundamental rights, Decide.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 'அ' என்பவர் தடுப்புக் காவல் அறிவுரை வாரியத்தின் முன் தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது தடுப்புக் காவலுக்கு எதிரான முறை வேண்டுதலை எடுத்துரைக்க கோருகிறார். இக்கோரிக்கை மறுக்கப்பட்ட போது அது தனது அடிப்படை உரிமையை பாதிப்பதாக வாதிடுகிறார். முடிவு செய்க.

தீர்வு:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்துகள் 22(4) மற்றும் (5) தடுப்புக் காவலில் சிறை வைக்கப்பட்டவர்களுக்கு சில பாதுகாப்புகளை அளிக்கின்றன. அவற்றில் ஷரத்து 22(5)-இன்படி, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டவர் அறிவுரை வாரியத்தில் முறையீடு செய்ய உரிமையுண்டு. அதாவது ஒருவரை தடுப்புக் காவலில் வைக்க உத்திரவிடும் அதிகாரமுடையவர், அவர் அவ்வாறு காவலில் வைக்கப்பட்டதை எதிர்த்து முறையீடு செய்து கொள்ள (தன் வாதத்தினை எடுத்துக் கூற) காலதாமதம் செய்யாமல் அவருக்கு ஒரு வாய்ப்பினை அளிக்க வேண்டும் என்று ஷரத்து 22(5)-இன் இரண்டாவது பகுதி கூறுகிறது.

Balchand Choarasia v. Union of India[1] என்ற வழக்கில் காவலில் வைக்கப்பட்ட நபர் தன்னுடைய முறையீட்டினை, தன் வழக்குரைஞர் வாயிலாக நீதிமன்றத்தின் முன் சமர்ப்பித்தார். அம்முறையீடு காவலில் வைக்கப்பட்ட நபரால் செய்யப்படவில்லை என்பதைக் காரணமாகக் காட்டி, அரசாங்கம் அவரின் முறையீட்டை பரிசீலிக்கவில்லை. மேலும் அக்காவலை அங்கீகரித்துவிட்டது. ஆனால் காவலில் வைக்கப்பட்ட நபர் அளித்த கூற்றின் பேரில்தான், அவரது வழக்கறிஞர் முறையீட்டினை சமர்ப்பித்து உள்ளதால் அரசாங்கம் அதனை பரிசீலிக்காமல் விட்டது தவறானதாகும் என உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

1. AIR 1978 SC 297

மேற்படி ஷரத்து மற்றும் வழக்கின் தீர்ப்பின்படி, தடுப்புக் காவலில் உள்ள 'அ' என்பவர் அதற்கு எதிரான முறையீட்டை தனது வழக்குரைஞர் வாயிலாகச் செய்யலாம். இதற்கான கோரிக்கை மறுக்கப்பட்டால், அது அவரது அடிப்படை உரிமையை மறுத்ததாகும். எனவே அவரது வாதம் ஏற்புடையதே.

பிரச்சனை 37 :

The members of "Ananda Margam" - a Hindu religious group want to take procession in which Tandava Dance with lethal weapons and human skulls will be held. The State police by an order prohibits such procession. The order has been challenged by the members of Ananda Margam as violative of their religious freedom. - Decide.

"ஆனந்த மார்கம்" என்ற இந்து மத அமைப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் கைகளில் கொடிய கொலைக் கருவிகள் மற்றும் மனித மண்டையோடுகளை ஏந்திய வண்ணம் ஆடும் தாண்டவ நடனத்தோடு தெருவில் ஊர்வலம் போக விரும்புகிறார்கள். மாநில காவல் துறை இந்த ஊர்வலத்தை தடை செய்து உத்தரவிடுகிறது. இந்த உத்தரவு ஆணையானது, தங்களின் மத சுதந்திரத்தை மீறுகிறதாக உள்ளது என்று "ஆனந்த மார்கம்" உறுப்பினர்கள் வாதிடுகிறார்கள். - தீர்மானிக்க.

தீர்வு :

இப்பிரச்சனை **Acharya Jagdishwaranand Avadhuta v. Commissioner of Police, Calcutta**[1] எனும் வழக்கை அப்படியே பின்பற்றி அமைந்ததாகும். இவ்வழக்கு **"ஆனந்த மார்க்கா வழக்கு" (Anand Marga Case)** என்று பிரபலமாக அழைக்கப்படுகிறது.

இந்திய அரசியலமைப்பின் 25 மற்றும் 26-வது ஷரத்துகள் மக்கள் தங்கள் மனதிற்கு உகந்த சமயங்களைச் சார்ந்து வாழவும், அவற்றின் நெறிமுறைகளை கடைப்பிடிக்கவும் சுதந்திரம் வழங்குகின்றன. இச்சுதந்திரம் தனிப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாமல் சமயக் குழுக்களுக்கும், சமயப் பேரவைகளுக்கும் அளிக்கப்படுமாறு அரசியலமைப்பு சட்டம் வகை செய்துள்ளது. எனினும் பொருளாதாரம், சமய நடைமுறையுடன் கூடிய நீதி, அரசியல் அல்லது மற்ற சமயச்

1. (1984) 4 SCC 522

சார்பற்ற நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தவோ (regulate), கட்டுப் படுத்தவோ (restrict) அரசு சட்டமியற்ற அதிகாரம் பெற்றுள்ளது என்று **ஷரத்து 25(2)(a)** கூறுகிறது. அதுபோல், பொது நலன், ஒழுங்கு, அறநெறி, சுகாதாரம் ஆகியவற்றிற்கு உட்பட்டுத்தான் சமயம் பற்றிய விவகாரங்களை மேலாண்மை செய்து கொள்ளும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன **ஷரத்து 26(b)** கூறுகிறது. எனவே சமய சுதந்திரம் என்பது கட்டுப்பாடுகளற்றதல்ல என்பதும், அவற்றின் மீது உரிய கட்டுப்பாடுகளை விதிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது என்பதும் தெளிவு.

நாம் மேலே கண்ட வழக்கின் பொருண்மைகளின்படி, "ஆனந்த மார்கம்" என்ற இந்து மத அமைப்பைச் சார்ந்த ஆனந்த மார்கிகள் (அதாவது உறுப்பினர்கள்) கைகளில் கொடிய கொலைக் கருவிகள் மற்றும் மனித மண்டையோடுகளை ஏந்திய வண்ணம் ஆடும் தாண்டவ நடனத்தோடு தெருவில் ஊர்வலம் போக விரும்புகிறார்கள். ஆனால் இது ஆனந்த மார்க்கத்தைச் சார்ந் தோர்கள் பின்பற்றும் ஒரு சமயச் சடங்கு அல்ல. எனவே பொது ஒழுங்கு மற்றும் அறநெறியின் நலன் கருதி, அவ்வூர்வலத்திற்கு குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 144-வது பிரிவின் கீழ் தடை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. இத்தடை தங்களின் சமய (மத) சுதந்திரத்தை மீறுவதாக உள்ளது என்று ஆனந்த மார்க்க உறுப்பினர்கள் வழக்கிடுகிறார்கள்.

ஆனால் இத்தடை நியாயமானதே என்று உச்ச நீதிமன்றம் பின்வரும் அடிப்படைகளின் கீழ் தீர்ப்புரைத்தது. அவற்றின்படி, (1)ஆனந்த மார்க்கம் என்பது ஒரு தனிப்பட்ட சமயம் அல்ல. அது இந்து மத தத்துவத்தின் அடிப்படை கோட்பாடுகளை தன்னகத்தே கொண்டது; (2) ஆனந்த மார்க்கம் என்பதே அண்மைக் காலத்தில் ஏற்பட்டதொரு சமய அமைப்பாகும். அதிலும் மேற்கண்ட தாண்டவ நடனம் என்பது மிகச் சமீபத்தில் எழுந்த ஒரு நிலைப்பாடாகும். இதற்கு தொன்மைக் கால பாரம்பரியம் ஏதுமில்லை. அப்படியே அத்தாண்டவ நடனம் ஆனந்த மார்க்கத்தின் ஒரு சமயச் சடங்கு என்று ஏற்றுக் கொண்டாலும். அதை பொது இடங்களில் ஆட அதன் உறுப்பினர்களுக்கு உரிமை உள்ளது என்று கருத முடியாது. (3) மேலும் மேற்படி பிரிவு 144, ஆனந்த மார்க்க உறுப்பினர்கள் உள்ளிட்ட எவரும் பொது இடங்களில் கூடுவதை அல்லது ஊர்வலம் செல்வதை தடை செய்யவில்லை. மாறாக கொலைக் கருவிகளை யும், திரிசூலங்களையும், மண்டையோடுகளையும் எடுத்துக் கொண்டு

ஊர்வலம் செல்வதைத்தான் தடை செய்கிறது. ஏனெனில் அவ்வாறு செல்வது பொது ஒழுங்கிற்கு அபாயம் விளைவிக்க வாய்ப்பு உள்ளது என்பதோடு மட்டுமல்லாமல், அறநெறிக்கும், சுகாதாரத் திற்கும் எதிரானதாக உள்ளது. எனவே ஆனந்த மார்க்கிகள் தங்கள் சமய சுதந்திரம் பறிக்கப்பட்டுவிட்டதாக வாதிடுவது ஏற்புடைய தல்ல. அவர்களது தாண்டவ நடன ஊர்வலத்திற்கு பிரிவு 144-ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தடை ஆணை செல்லத்தக்கதே என்று உச்ச நீதிமன்றம் முத்தாய்ப்பாக கூறியது. இதுவே நமது மேற்படி பிரச்சனைக்கும் தீர்வாகும்.

பிரச்சனை 38 :

A non-Brahmin was appointed by the government in a famous temple as pujari to perform pooja. This was challenged before the Supreme Court as he is not competent. Decide the constitutional validity of the appointment.

பிராமணர் அல்லாத ஒருவர் புகழ் பெற்ற கோவில் ஒன்றில் பூசை செய்திட பூசாரியாக நியமிக்கப்பட்டார். அவர் தகுதி அற்றவர் என உச்ச நீதிமன்றத்தில் வழக்கிடப்பட்டது. இந்த நியமனத்தின் அரசமைப்பு செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

தீர்வு :

கோவில் அர்ச்சகர்கள் அமர்த்தப்படுவதை கட்டுப்படுத்தி அல்லது அவர்களது தகுதியை நிர்ணயித்து சட்டங்கள் ஏதேனும் இயற்றப்பட்டால், அவை அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 26(b)-க்கு முரணான ஒன்றாகி செல்லாததாகிவிடும். ஏனெனில் மேற்படி ஷரத்து 26(b), "சமய சம்பந்தமான விவரங்களில் தனது சொந்த விவகாரங்களை தானே மேலாண்மை செய்து கொள்ளும் உரிமையை ஒவ்வொரு சமயமும் பெற்றிருக்கிறது என்று கூறு கிறது" (to manage its own affairs in matters of religion). இங்கு 'சொந்த விவகாரங்கள்' என்பதில் கோவில் சடங்குகளை யார் செய்வது, கர்பக் கிருகத்தில் யார் நுழைந்து பூஜை செய்வது. எப்படி செய்வது, எப்பொழுது செய்வது என்பனவற்றை உள்ளடக் கும். எனவே மேற்கண்டதில், "கோவில் சடங்குகளை கர்பக்கிருகத் தில் நுழைந்து யார் செய்வது?" என்ற வினாவின் எல்லைக்குள் அர்ச் சகர்கள் அமர்த்தப்படுவதும், அவர்களுடைய தகுதியை நிர்ணயிப்

பதும் வந்து விடுகிறது. இதைக் கட்டுப்படுத்தும் உரிமை கோவில் பொறுப்பாளர்களைச் சார்ந்தது. இவ்வுரிமையில் அரசு தலை யிட்டால், அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணானதாகும்.

எனவே மேற்படி பிரச்சனையில் பிராமணர் அல்லாத ஒருவரை பூசாரியாக அரசு நியமனம் செய்தது செல்லாத ஒன்றாகும் என்று கூறலாம். ஆனால் அதே நேரத்தில் பின்வரும் வழக்கொன்றில் உச்ச நீதிமன்றம் கூறிய கருத்துக்களை இங்கு கவனிக்க வேண்டும். அதாவது **N.Aditya v. Travancore Dewaswom Board**[1] என்ற வழக்கில், கோவிலில் பிராமணர்கள் மட்டுமே பூசைகளை செய்ய முற்றுரிமை பெற்றவர்கள் அல்ல என்றும், பிராமணர் அல்லாத ஒருவர் வேத மந்திரங்களைக் கற்று, ஒரு கடவுளுக்கு எந்த முறையில் முறையில் பூசைகள் செய்வது என்பது பற்றி நன்கு தெரிந்து வைத்திருந்தால், அவரை பூசாரியாக நியமனம் செய்யலாம் என்றும் கூறியது. எனவே மேற்படி பிரச்சனையில் பிராமணர் அல்லாத ஒருவரை பூசாரியாக நியமனம் செய்யலாம். அதே நேரத்தில் அவர் வேத மந்திரங்களைக் கற்றவராகவும், பூசைகளை முறைப்படி செய்யத் தெரிந்தவராகவும் இருக்க வேண்டும். இந்தத் தகுதிகள் இல்லையெனில் அவரை பூசாரியாக நியமனம் செய்ய இயலாது. அவரது நியமனம் அரசியலமைப்புச் சட்டப்படி செல்லாது.

பிரச்சனை 39 :

English was the medium of instruction in a minority educational institution. But the university ordered that Hindi should be the sole medium of instruction in the affiliated colleges. Examine the validity of the order of the University.

ஒரு சிறுபான்மை கல்வி நிலையத்தில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருந்து வந்தது. ஆனால் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் அனைத்து கல்லூரிகளிலும் இந்தி மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என பல்கலைக்கழகம் ஆணை பிறப்பித்தது. பல்கலைக்கழக ஆணையின் செல்லுந் தன்மையை விளக்குக.

தீர்வு :

1. 2nd (Supp) NSC 35, 38

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 29(2)-இன் படியும், பின்வரும் வழக்கொன்றில் உச்ச நீதிமன்றம் கூறிய தீர்ப்பின் படியும் பல்கலைக்கழகத்தின் ஆணை செல்லாத ஒன்றாகும்.

State of Bombay v. Bombay Educational Society[1] - என்ற வழக்கின் சங்கதிகள்படி ஆங்கில மொழி பேசாத மாணவர்களை, ஆங்கில வழியில் கல்வி கற்பிக்கும் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொள்ளக் கூடாது என, பம்பாய் அரசு ஒரு சட்டம் மூலம் தடை விதித்தது. இச்சட்டம் மொழியின் அடிப்படையில் ஆங்கில மொழி பேசாத மாணவர்களின் கல்வி பெறும் உரிமையை பறிப்பதாக உள்ளதால், இது ஷரத்து 29(2)ஐ மீறுவதாக உள்ளது. எனவே மேற்படி சட்டம் செல்லாது என்றுஉச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

D.A.V. College, Bhatinda v. State of Punjab[2] - என்ற வழக்கில் தன்னுடன் இணைந்துள்ள கல்லூரிகளில் 'பஞ்சாபி' மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று பல்கலைக்கழகம் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியது. இதை சிறு பான்மை கல்வி நிறுவனமான மனுதாரர் கல்லூரி எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் முறையிட்டது. அப்போது, சிறுபான்மை கல்வி நிறுவனங்கள் தங்கள் விருப்பப்படி கல்வி நிலையங்களை அமைத்து நிருவகிக்கும் உரிமையை அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 30-இன் வாயிலாகப் பெற்றுள்ளன என்றும், அந்த உரிமையில் எந்த மொழியில் கல்வி கற்பிப்பது என்பதை தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையும் அடங்கும் என்றும், எனவே 'பஞ்சாபி' மொழியில் கல்வி கற்பிக்க வேண்டும் என்று பல்கலைக்கழகம் அனுப்பிய சுற்றறிக்கை அச்சிறுபான்மை கல்வி நிறுவனத்தின் ஷரத்து 30(1)-இன் கீழான உரிமையை மீறுகிறது என்றும், இதனால் அச்சுற்றறிக்கை செல்லாது என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

மேற்படி பிரச்சனையில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருக்கும் ஒரு சிறுபான்மை கல்வி நிலையத்தில் இந்தி மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று பல்கலைக் கழகம் பிறப்பிக்கும் ஆணை, இந்தி மொழி பேசாத அல்லது தெரியாத மாணவர்களின் கல்வி உரிமையை பறிப்பதாக அமைகிறது. எனவே அவ்வாணை ஷரத்து 29(2) மற்றும் 30(1)-இன்படி செல்லாத ஒன்றா கும்.

1. AIR 1954 SC 561
2. AIR 1971 SC 1731

பிரச்சனை 40 :

The Madhya Pradesh Government issued a Government order stating the rules to be followed in admitting students to minority run unaided educational institutions. The management of the institutions challenged the Government order on the ground that it violated their right under Article 30. Decide.

சிறுபான்மையினர் நடத்தும் அரசு நிதி உதவி பெறாத கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையில் பின்பற்றிட வேண்டிய விதிகளை மத்தியப் பிரதேச அரசு ஒரு அரசு ஆணை மூலம் வெளியிட்டது. இந்த அரசு ஆணையானது சரத்து 30-இன் கீழ் தங்களது அடிப்படை உரிமையினை மீறுவதாக உள்ளது என இந்நிறுவனங்களின் நிர்வாகம் வாதிட்டது. தீர்மானிக்க.

தீர்வு :

இப்பிரச்சனைக்கு தீர்வு காண ஷரத்து 30 எத்தகு உரிமைகளை சிறுபான்மையினருக்கு அளித்துள்ளது என்பதைக் கவனிக்க வேண்டும். ஷரத்து 30-ஆனது, சிறுபான்மையினருக்கு இரண்டு அரசியலமைப்புச் சட்ட உரிமைகளை வழங்கியுள்ளது.

அதன்படி, ஷரத்து 30(1)-ஆனது, மொழி, சமயம் ஆகிய வற்றின் அடிப்படையில் சிறுபான்மையினராக உள்ள எல்லோரும் தங்கள் இச்சைப்படி கல்விக் கூடங்களை ஏற்படுத்தி அவற்றை நிர்வகித்துக் கொள்ளக் கூடிய முதல் உரிமையை வழங்குகிறது. [All minorities, whether based on religion or language shall have the right to establish and administer Educational Institutions of their choice - Art. 30(1)]. ஷரத்து 30(2)-ஆனது அவ்வாறு தோற்றுவித்து நிர்வகிக்கப்பட்டு வரும் கல்விக் கூடங்களை சிறுபான்மையினர் கல்விக் கூடங்களென வேறுபாடு காட்டி, அரசு நிதி உதவி வழங்குவதில் பாரபட்சம் ஏதும் காட்டக் கூடாது என்பது இரண்டாவது உரிமையாகும்.

St. Xavier s College v. State of Gujarat[1] - இவ்வழக்கில் ஷரத்து 30(1)-இன் கீழ் வழங்கப்பட்டுள்ள உரிமையின் எல்லை குறித்து ஆராயப்பட்டது. இவ்வழக்கில் வாதிகள், அகமதாபாத்தில் சிறுபான்மையினர் கல்லூரி ஒன்றினை நடத்தி வந்தனர். அதன் பெயர் St. Xavier's College of Arts and Commerce. கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்த மாணவர்களுக்கு உயர் கல்வி அளிப்பதுதான்

1. AIR 1974 SC 1389

இக்கல்லூரியின் நோக்கமாகும். இக்கல்லூரி குஜராத் பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ளது (affiliated). மேற்படி வாதிகள் குஜராத் பல்கலைக்கழகத்தின் விதிகள், ஷரத்து 30-இன் கீழ் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளை மீறுவதாக உள்ளது எனக் கூறி, நீதிமன்றத்தில் வழக்கிட்டனர். அதாவது, கல்லூரிக்கே உரித்தான கல்லூரி நிருவாகம், ஆசிரியர்கள் நியமனம் போன்ற அனைத்து விடயங்களிலும் அரசானது மேற்படி விதி களின் துணைக் கொண்டு தனது மூக்கை நுழைத்து, வாதிகளின் உரிமைகளுக்கு இன்னல் விளைவித்தது. சிறுபான்மையினர்கள் தங்கள் விருப்பப்படி கல்விக்கூடங்களை நிறுவி, அதனை தாங்களே நிர்வகிக்க ஷரத்து 30(1)-ஆல் பெற்ற உரிமைகளை, பல்கலைக் கழகத்தின் மேற்படி விதிகள் பறிப்பதாக உள்ளது, என நீதிமன்றம் கூறியது. மேலும் இவ்விதிகள் சிறுபான்மையினர் கல்விக் கூடங் களுக்குப் பொருந்தாது எனத் தீர்ப்பளித்தது.

T.M.A. Pai Foundation v. State of Karnataka[1] - இவ்வழக் கில் உச்ச நீதிமன்றத்தின் மாண்பமை தலைமை நீதியரசர் பி.என்.கிர்பால் தலைமையில் அமைந்த 11 நீதிபதிகள் அடங்கிய அரசியலமைப்பு ஆயம் ஒரு முக்கியத் தீர்ப்பை நல்கியது. அதில், மொழி மற்றும் மத சிறுபான்மையினர் நடத்தும் சுய நிதி கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கை கொள்கையை மாநில அரசுகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் ஒழுங்குபடுத்த இயலாது என்றும், ஆனால் மாநில அரசுகளும் பல்கலைக்கழகங்களும் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கைக் கான கல்வித் தகுதிகளை குறித்துரைக்கலாம் என்றும், அவை தங்கள் கல்வித் தரத்தை பராமரித்துக் கொள்வதற்கான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை மாநில அரசுகளும் பல்கலைக்கழகங் களும் வகுத்துரைக்கலாம் என்றும் கூறப்பட்டது. இதே கொள்கை ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாட்கள் நியமனத்திற்கும் பொருந்தும் என்றும் அத்தீர்ப்பில் கூறப்பட்டது. சிறுபான்மை யினர் கல்வி நிறுவனங்கள் தங்களுக்கான அங்கீகாரம் அல்லது இணைப்பைப் பெற பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்வி வாரியங்கள் விதிக்கும் நிபந்தனைகளை நிறைவு செய்ய வேண்டும் என்றும் கூறப்பட்டது. சுருங்கக் கூறின் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்கள் தங்கள் விருப்பப்படி மாணவர்களை சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அவர்களை தேர்ந்தெடுப்பதில் நியாயமான

1. AIR 2003 SC 355

நடைமுறை பின்பற்றப்பட வேண்டும். அது வெளிப்படையானதாக இருக்க வேண்டும்.

எனவே ஷரத்து 30-இன்படியும், மேற்கண்ட இரண்டு முக்கிய வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளின்படியும், நமது மேற்படி பிரச்சனையில் சிறுபான்மையினர் நடத்தும் அரசு நிதி உதவி பெறாத கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையில் பின்பற்ற வேண்டிய விதிகளை வகுத்து மத்தியப் பிரதேச அரசு வெளியிட்ட அரசு ஆணையானது செல்லாது. அது அச்சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களின் ஷரத்து 30-இன் கீழான உரிமையை மீறுவதாகும். எனவே இந்நிறுவனங்களின் வாதம் வெற்றி பெறும்.

பிரச்சனை 41 :

A was arrested and detained in a detention center of the police station for over 24 hours. His relatives have not been informed about the detention. When a complaint was made at the police station, no intimation about his whereabouts was informed. Advice his family members of the remedy available under constitutien.

'அ' என்பவர் கைது செய்யப்பட்டு காவல் நிலைய சிறையில் 24 மணிநேரத்திற்கு மேலாக அடைத்து வைக்கப்படுகிறார். அவர்களுடைய உறவினர்க்கு அவர் காவலில் வைக்கப்பட்ட விவரத்தை கைதானவர் குறித்த விவரங்கள் தெரியாததாக உறவினர் புகார் அளித்த பின்னரும் அவர்களுக்குத் தெரியப்படுத்தப் படவில்லை. காவலில் உள்ளவரின் உறவினர்க்கு அரசமைப்புச் சட்டத்தின்கீழ் பெறப்படும் தீர்வு யாது?

தீர்வு :

காவலில் வைக்கப்பட்டவரின் சார்பாக, அவரது உறவினர்கள் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணையை (Writ of Habeas Corpus) பிறப்பிக்கக் கோரி ஷரத்து 226-இன்படி, உயர் நீதிமன்றத்தில் அல்லது ஷரத்து 32-இன்படி உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்யலாம். (மேலும் விரிவாக பக்கம் எண். 325-இல் மேற்படி நீதிப்பேராணை தலைப்பின் கீழ் காண்க.)

பிரச்சனை 42 :

An unregistered workers union in a government undertaking filed a writ petition under Art. 32 of the constitution against the reservation policy of the government. The state objects to this on the ground that only the aggrieved party should file the writ petition, a workers union that too unregistered cannot file the writ petition. - Decide.

ஒரு மாநில அரசின் இட ஒதுக்கீடு கொள்கைக்கு எதிராக அரசு நிறுவனத்தின் ஒரு பதிவு செய்யப்படாத தொழிலாளர் சங்கம் அரசமைப்புச் சட்டம் பிரிவு 32-ன் கீழ் உச்ச நீதிமன்றத்தில் ரிட் மனு தாக்கல் செய்கிறது. ஆனால் பாதிக்கப்பட்ட நபர்தான் ரிட் மனு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் ஒரு தொழிலாளர் சங்கம் அதுவும் பதிவு செய்யப்படாத ஒன்று இந்த ரிட் மனுவை தாக்கல் செய்ய முடியாது என மாநில அரசு ஆட்சேபணை தெரிவிக்கிறது. தீர்மானிக்கவும்.

தீர்வு :

இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாம் **A.B.S.K.Sangh (Rly.) v. Union of India**[1] எனும் வழக்கை காணுறுதல் வேண்டும். இவ்வழக்கில் "அகில் பாரதிய சோஸ்ஹிட் கரம்சாரி சங்க் (இரயில்)" [Akhil Bhartiya Soshit Karamchari Sangh (Railway)] எனும் சங்கம், தனது சொந்தப் பிரச்சனைக்காக அல்லாமல் பொதுப் பிரச்சனை ஒன்றிற்காக ஷரத்து 226-ன் கீழ் நீதிப்பேராணை ஒன்றை தாக்கல் செய்து தீர்வு காண விழைந்தது. இது சட்டப்படி பதிவு செய்யப் படாத ஒரு சங்கம். எனினும், இப்படிப்பட்ட பதிவு செய்யப்படாத சங்கங்கள் பொது நல வழக்குகள் (Public Interest Litigations), பிரதிநிதித்துவ நிலையிலான வழக்குகள் (representative proceedings) ஆகியவற்றிற்காக நீதிப் பேராணை கோரி மனு தாக்கல் செய்யலாம் என்று மாண்பமை நீதியரசர் கிருஷ்ணா அய்யர் அவர்கள் கருத்துரைத்தார். இதன் அடிப்படையில் மேற்படி பிரச்சனையில் பதிவு செய்யப்படாத ஒரு தொழிலாளர் சங்கமானது மாநில அரசின் இட ஒதுக்கீட்டுக் கொள்கைக்கு (பொதுப் பிரச்சனை) எதிராக தாக்கல் செய்த நீதிப்பேராணை மனு நிலைக்கத்தக்கதே; மாநில அரசின் ஆட்சேபணை எடுபடாது.

1. AIR 1981 SC 298

பிரச்சனை 43 :

A Pakistani national was gang raped by the employees of a railway co under inebriated condition. When a law student filed a public interest litigation for compensation for the victim against the railway co., it was pleaded that railway co. was not liable to pay compensation as the victim was not an Indian National. Decide.

ஒரு ரெயில்வே நிறுவன தொழிலாளர்கள் குடிபோதையில் ஒரு பாகிஸ்தானிய பெண்ணை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கினார். பாதிக்கப்பட்ட பெண் சார்பாக இழப்பீடு கோரி ஒரு சட்ட மாணவர் ரெயில்வே நிறுவனத்தின் மீது பொது நல வழக்கிட்டார். இதற்கு பெண் ஒரு இந்திய தேசத்தை சார்ந்தவரல்ல. எனவே தாம் இழப்பீடு வழங்கத் தேவையில்லை என வாதிட்டது. தீர்மானிக்க.

தீர்வு :

இப்பிரச்சனையில் வன்புணர்வுக்கு ஆளான அப்பெண் இந்திய நாட்டைச் சாராதவராக இருந்தாலும், அவர் இந்திய இரயில்வே நிறுவனத்திடமிருந்து இழப்பீடு பெற உரிமையுடையவரே என்பதே இங்கு தீர்வாகும். இதற்கு மேற்கோளாக பின்வரும் ஒத்த வழக்கு ஒன்றில் வழங்கப்பட்ட தீர்ப்பு ஒன்றைக் காணுவது இங்கு பொருத்தமானதாக இருக்கும்.

Chairman, Railway Board v. Chandrima Das[1] எனும் வழக்கின் சங்கதிகள்படி வங்கதேசத்தைச் சேர்ந்த ஹனுஃபா கஹாட்டூன் என்ற ஓர் அயல்நாட்டுப் பெண்மணியை கிழக்கு இரயில்வேக்கு உட்பட்ட ஹவுரா இரயில் நிலையத்தில் உள்ள தங்கும் அறையில் வைத்து இரயில் ஊழியர்கள் பலர் கூட்டாக வன்புணர்வு செய்து விட்டனர். இதற்காக இழப்பீடு கோரி கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் தொழிலாற்றும் வழக்குரைஞர் ஒருவர் இந்திய அரசியலமைப்பின் ஷரத்து 226-இன் கீழ் இரயில் நிருவாகத்திற்கு எதிராக பொது நல வழக்கிட்டார். இதன் முடிவில் உயர் நீதிமன்றம் அப்பெண்மணிக்கு ரூ.10 இலட்சம் இழப்பீடு வழங்க ஆணையிட்டது. இதை எதிர்த்து அரசு தரப்பில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அங்கு சம்பந்தப்பட்ட அப்பெண் ஒரு இந்தியர் அல்ல என்றும், அவர் ஒரு அயல்நாட்டைச் சேர்ந்தவர் என்றும், எனவே அவருக்கு

1. AIR 2000 SC 998

இழப்பீடு தர இரயில்வே நிர்வாகம் பொறுப்புடையதல்ல என்றும் அரசு தரப்பில் வாதிடப்பட்டது. மேலும் பாதிக்கப்பட்ட அப்பெண் மணிக்காக இழப்பீடு கோர தனிமுறைச் சட்டத்தில்தான் (Private Law) தீர்வழி தேட வேண்டுமேயொழிய, பொது முறைச் சட்டத்தின் (Public Law) கீழ் வழக்கிட இயலாது என்றும், எனவே இந்திய அரசியலமைப் புச் (பொதுச் சட்டம்) சட்டத்தின் ஷரத்து 226-இன் கீழ் உயர் நீதிமன்றம் இழப்பீடு வழங்கியிருக்கக் கூடாது என்றும், குறிப்பாக அப்பெண்மணியுடன் எவ்வித தொடர்பும் இல்லாத ஒரு வழக்குரைஞர் தாக்கல் செய்த மனுவில் அவ்வாறு இழப்பீடு வழங்கும் ஆணையை உயர் நீதிமன்றம் பிறப்பித்திருக்கக் கூடாது என்றும் அரசு தரப்பில் வாதிடப்பட்டது. சுருங்கச் சொன்னால், அப்பெண் இழப்பீடு கோரி உரிமையியல் நீதிமன்றத்தை அணுகி இருக்க வேண்டுமே தவிர, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 226-இன் கீழ் உயர் நீதிமன்றத்தை அணுகியிருக்கக் கூடாது என்பது இங்கு அரசு தரப்பின் வாதமாகும்.

ஆனால் அரசு தரப்பின் மேற்கண்ட வாதங்களை இந்திய உச்ச நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. இரயில்வேக்கு சொந்தமான ஒரு கட்டடத்தில் ஒரு பெண்ணை இரயில்வே ஊழியர்கள் பலர் வன்புணர்வு செய்ததற்கு இழப்பீடு கோரி அரசுக்கு எதிராக ஷரத்து 226-இன் கீழ் நீதிப்பேராணை மனு செய்தால் அது நிலைக்கத்தக்கதே என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும், ஒரு விடயத்தில் பொது அலுவலர்கள் ஈடுபட்டிருந்து அவ்விடயம் அடிப்படை உரிமைகளை மீறியதாக அல்லது பொதுக் கடமைகளை வலியுறுத்துவதாக இருப்பின், அங்கு ஏற்பட்ட பாதிப்பிற்காக தனிமுறைச் சட்டத்தின் கீழ் இழப்பீடு கோரி உரிமையியல் வழக்கிட முடியும் என்ற நிலை இருந்தாலுமே கூட, பொதுச் சட்டத்தின் (அரசியலமைப்புச் சட்டம்) கீழும் தீர்வழி பெற உரிமையுண்டு என்றும், இது வெறுமனே ஒரு நபரின் சாதாரண உரிமையை மீறியது மட்டுமல்ல, இது அந்நபரின் அடிப்படை உரிமைகளை மீறியதுமாகும் என்றும், ஏனெனில் இங்கு மனுதாரராகிய அப்பெண்மணி வன்புணர்வுக்கு ஆளாக்கப்பட்டுள்ளார் என்றும், இது ஷரத்து 21 வழங்கியுள்ள அடிப்படை உரிமையை மீறியதாகும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

இது ஒரு புறமிருக்க இவ்வழக்கில் எழுந்த மற்றொரு முக்கிய வினா யாதெனில், ஒரு அயல்நாட்டவருக்கு இந்திய அரசியலமைப்பின் கீழான அடிப்படை உரிமைகள் கிடைக்கத்தக்கதா, இல்லையா என்பதாகும். இதற்கு விளக்கமளிக்கையில் உச்ச நீதிமன்றமானது, ஒரு

அயல்நாட்டைச் சேர்ந்த அப்பெண்மணிக்கு இரண்டு காரணங்களின் அடிப்படையில் நீதிமன்றம் தீர்வழி அளிக்கலாம் என்று கூறியது. அதாவது, முதற்கண் அரசியலமைப்புச் சட்ட வகைமுறைகளின் கீழான உள்நாட்டு நீதிவரம்பின் கீழும் (firstly on ground of Domestic Jurisprudence based on constitutional provisions), இண்டா வதாக 1948-ஆம் ஆண்டின் மனித உரிமைகளின் உலகளாவிய விளம்புகையின் கீழான மனித உரிமைகள் நீதிவரம்பின் கீழும் (secondly, on the ground of Human Rights Jurisprudence based on the Universal Declaration of Human Rights) அப்பெண்மணி இந்திய நீதிமன்றத்தின் வாயிலாக இழப்பீடு பெற உரிமை படைத்தவர் என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

அடிப்படை உரிமைகள் என்பது இந்தியக் "குடிமக்களுக்கு" மட்டுமே உரியதாக இருக்கும் போது, எவ்வாறு ஒரு "அயல் நாட்டவர்" அவ்வுரிமைகளைக் கோர முடியும் என்ற வாதத்தைப் பொறுத்து உச்ச நீதிமன்றம் விளக்கமளிக்கையில், ஷரத்து 21-இல் 'வாழ்க்கை' (life) என்ற பதம் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், மேலும் அது அதே பொருளில் 1948-ஆம் ஆண்டின் மனித உரிமைகளின் உலகளாவிய விளம்புகையின் கீழும் புரிந்து கொள்ளப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாலும், அதற்கு ஒரு குறுகிய பொருளை தர வேண்டியதில்லை என்று கூறியது. ஷரத்து 21-இல் பயன்படுத்தப் பட்டுள்ள மொழி நடையின்படி, அதன் கீழான உரிமையானது இந்திய நாட்டின் ஒவ்வொரு குடிமகனுக்கும் மட்டுமல்லாது, அது இந்திய நாட்டின் குடிமகன் அல்லாத ஒரு 'நபருக்கும்' கூட கிடைக்கத்தக்கதாகும் என்றும், எனவே இந்நாட்டின் குடிமகன் அல்லாத ஒருவர், நமது நாட்டிற்கு ஒரு சுற்றுலா பயணியாகவோ, வேறு காரணங்களுக்காகவோ வருகை தந்திருந்தாலும், அவர் நமது அரசியலமைப்பின் கீழ் தனது வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்தை பாதுகாத்துக் கொள்ள உரிமை படைத்தவரே என்றும், அவர் இந்நாட்டில் தங்கி இருக்கும் வரை அவர் மனித மாண்புடன் கூடிய 'வாழ்க்கைக்கான' உரிமை அவருக்கு உண்டு என்றும், அரசு என்பது தனது குடிமக்களை பாதுகாக்கும் கடமை கொண்டிருப்பதைப் போல, குடிமக்கள் அல்லாதவர்களையும் காக்கும் கடப்பாடு கொண்டதாகும் என்றும் உச்ச நீதிமன்றம் நிலைநிறுத்தியது. முடிவில் அரசின் மேல்முறையீடு தள்ளுபடி.

மேற்கண்ட வழக்கின்படி ஷரத்து 21-இன் கீழான 'வாழ்க்கை' உரிமையானது இந்தியக் குடிகளுக்கு மட்டுமல்லாது, இந்தியக்

குடிமக்கள் அல்லாதவர்களுக்கும் கிடைக்கத்தக்கதேயாகும். அயல் நாட்டவர் இந்தியாவிற்கு வந்திருக்கும் போது ஷரத்து 21-இன் கீழான அடிப்படை உரிமை ஏதும் பாதிப்படைந்தால், அவர் இழப்பீடு கோரி அரசுக்கு எதிராக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்து தீர்வழி பெறலாம்.

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறிய கருத்துகள் மற்றும் தீர்ப்பின்படி, அயல்நாட்டவரான பாகிஸ்தான் பெண்ணை இரயில்வே தொழிலாளர்கள் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கியதற்காக அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட பொது நல வழக்கில் அவர் இழப்பீடு பெற உரிமையுடையவர். அப்பெண் இந்திய நாட்டைச் சார்ந்தவர் அல்ல என்ற வாதம் ஏற்புடையதல்ல என்பதே நமது மேற்படி பிரச்சனைக்கு முடிவான தீர்வாகும்.

பிரச்சனை 44 :

Rajaram even after his acquittal had been kept illegally in jail for 20 years and now released. Explore the constitutional remedies available tc him.

இராஜராம் என்பவர் விடுதலை செய்யப்பட்ட பின்னரும் 20 வருட காலம் முறையற் சிறையிலேயே வைக்கப்படுகிறார். விடுதலை யாக்கப்பட்ட அவருக்கு கிடைக்கக் கூடிய அரசமைப்பு சார்ந்த தீர்வழிகளை ஆராயவும்.

தீர்வு:

Rudal Shah v. State of Bihar[1] என்ற வழக்கில் மனுதாரர், தகுதி வாய்ந்த நீதமன்றம் ஒன்றினால் விடுதலை செய்யப்பட்டும் 14 ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவருக்கு இழப்பீ டாக அரசு ரூ.30000 அளிக்க வேண்டுமென உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இத்தீர்ப்பின்படி மேற்படி பிரச்சனையில் வரும் இராஜராம் என்பவர் அரசுக்கு எதிராக நீதிப்பேராணை வழக்கு தாக்கல் செய்து, அதில் இழப்பீடு கோரலாம். (விரிவாக பக்கம் எண். 334 மற்றும் 335-இல் காண்க.)

பிரச்சனை 45 :

More than 500 children below the age of 14 years were

1. A!R 1983 SC 1086

employed in a Match factory at Sivakasi. A public interest litigation was filed before the Supreme Court against this. Decide the constitutional validity.

500க்கு மேற்பட்ட 14 வயதிற்கு குறைவான குழந்தைகள் சிவகாசியில் உள்ள ஒரு தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கு தொடரப்பட்டது. இதன் அரசமைப்புச் சட்ட செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

தீர்வு:

14 வயதிற்குட்பட்ட குழந்தைகளை தொழிற்சாலையிலோ, சுரங்கத்திலோ பணியில் அமர்த்தப்படக் கூடாது என்றும், மேலும் பிற அபாயகரமான பணியில் ஈடுபடுத்தப்படக் கூடாது என்றும் அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 24 கூறுகிறது. மேலும் மேற்படி பிரச்சனையில் கண்டவாறு குழந்தைகளை வேலைக்கு அமர்த்துவது "1938-ஆம் ஆண்டின் குழந்தைகளை வேலைக்கு அமர்த்துதல் சட்டம்"-இன்படி தவறானதாகும். இச்சமூகக் கொடுமையை எதிர்த்து தொடுக்கப்படும் பொது நல வழக்கு அரசியலமைப்புச் சட்டப்படி நிலைக்கத்தக்கதாகும்.

M.C.Mehta v. State of Tamil Nadu[1] *என்ற பொது நல வழக்கில் தீப்பெட்டி தொழிற்சாலைகளில் தீச்குச்சி தயாரிக்கும் பணி என்பது "1938-ஆம் ஆண்டின் குழந்தைகளை வேலைக்கு அமர்த்து தல் சட்டத்தின்படி" அபாயகரமான பணியாகும். எனவே அப்பணி யில் குழந்தைகளை நேரடியாக ஈடுபடுத்துதல் கூடாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. அதே நேரத்தில் அத்தீக்குச்சிகளை பெட்டியில் இடும் பணியில் குழந்தைகளை ஈடுபடுத்தலாம் என்றும், ஆனால் அப்பணி செய்யும் இடமானது தீக்குச்சி தயாரிக்கும் இடத்திலிருந்து தள்ளி இருக்க வேண்டும் என்றும், இது அவர்களை விபத்திலிருந்து காக்கும் என்றும், அத்தொழிற்சாலையின் உரிமையாளர் ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ5000/- க்கு காப்பீடு செய்ய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் மேலும் கூறியது.*

எனவே மேற்படி பிரச்சனைக்காக தொடுக்கப்படும் பொது நல வழக்கு நிச்சயம் வெற்றி பெறும்.

-o0o-

1. AIR 1982 SC 710

பகுதி 3

வினாத்தாள்கள்
[Question Papers]

மூன்றாண்டு சட்டக்கல்வி

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

B.L. DEGREE EXAMINATIONS, MAY 2018

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Examine to what extent the doctrine of Rule of law has been applied in the Constitution of India.

சட்டத்தின் ஆட்சி கோட்பாடு எந்த அளவிற்கு இந்திய அரசமைப்பு சட்டத்தில் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை ஆராய்க.

2. Discuss the scope of Article 15 of the Indian Constitution with judicial decisions.

இந்திய அரசமைப்பு சட்டம் 15–வது உறுப்பின் அளாவுகையை நீதிமன்ற தீர்ப்புகளோடு விளக்குக.

3. "Right to freedom of speech and expression is not without restrictions". Examine the statement with relevant cases.

"பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்தை வெளியிடுவதற்கான உரிமை கட்டுப்பாடற்றதல்ல". இக்கூற்றினை தொடர்புடைய வழக்குகளுடன் ஆராய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. In the light of decided cases examine the nature and scope of 'right to life' envisaged under Article 21 of the Indian Constitution.

இந்திய அரசமைப்பு சட்டத்தின் 21வது உறுப்பில் வழங்கப்பட்ட் வாழும் உரிமையின் தன்மையையும் நோக்கெல்லையையும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் துணையோடு ஆராய்க.

5. Examine the inter-relationship between fundamental rights and Directive Principles of State Policy in the light of decided cases and constitutional amendments.

அடிப்படை உரிமைகளுக்கும் மற்றும் அரசின் வழிகாட்டும் நெறிகளுக்குமிடையேயான தொடர்பைத் தீர்மானிக்கப்பட்ட வழக்குத் தீர்ப்புகள் மற்றும் அரசமைப்பு சட்டத்திருத்தங்களின் துணையோடு ஆராய்க.

6. Examine the rights guaranteed to minorities under the Constitution. Refer to the Supreme Court decision T.M.A.Pai Vs. State of Karnataka.

அரசமைப்பின் கீழ் சிறுபான்மையோருக்கு பொறுப்புறுதி அளிக்கும் உரிமைகளை விளக்குக. டி.எம்.ஏ.பாய் எதிர் கர்நாடக மாநில அரசு என்ற வழக்கில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை குறிப்பிடுக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Preamble

முகப்புரை

(b) Judicial Review

நீதிமன்ற ஆய்வு

(c) Maneka Gandhi V.Union of India

மேனகா காந்தி எதிர் இந்திய யூனியன்

(d) Protection against self incrimination

குற்றச்சாட்டிற்குத் தன்னையே உள்ளாக்குதலில் இருந்து பாதுகாப்பு

(e) 'Other authority' under Art.12.

உறுப்பு 12ன் படி பிற அதிகார அமைவுகள்

(f) Formation of new states.

புதிய மாநிலங்களை ஆக்குதல்

(g) Fundamental Duties

அடிப்படை கடமைகள்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions

of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. On charges of corruption after departmental enquiry a government servant was first dismissed from service. Later, on the same grounds a criminal prosecution was initiated against him. Discuss the validity of this second proceedings.

ஒரு அரசுப் பணியாளர் கையூட்டு பெற்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் துறை நடவடிக்கையில் கீழ் முதலில் பணிநீக்கம் செய்யப்பட்டார். பின்னர் அதே காரணத்திற்காக அவர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது. இந்த இரண்டாவது நடவடிக்கையின் செல்லும் தன்மையை ஆராய்க.

9. The request of 'A' who is under preventive detention to make his representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'A' contends that it is violative of his fundamental rights. Decide.

தடுப்புக் காவலிலி வைக்கப்பட்டுள்ள 'A' என்பவர் தடுப்புக் காவல் ஆலோசனை குழுமம் முன்பு தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது முறையீட்டுரையினை சமர்ப்பிக்க கோருகிறார். அவரது கோரிக்கை மறுக்கப்பட்டது. அச்செயல்முறை தனது அடிப்படை உரிமைக்கு எதிரானதென வாதிடுகிறார். முடிவு செய்க.

10. Without obtaining the consent of the particular state, the Union Parliament passed a law under Article 3 bifurcating the state into two states. Discuss its validity.

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் இசைவின்றி அம்மாநிலத்தை இரண்டு மாநிலங்களாக பிரிக்க வகை செய்யும் சட்டத்தை நாடாளுமன்றம் அரசமைப்பின் 3–ம் உறுப்பின் கீழ் இயற்றியது. இதன் செல்லும் தன்மையை விவாதிக்க.

B.L. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Enumerate the outstanding feature of the Indian Constitution.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தலைசிறந்த இயல்புகளை எடுத்தியம்புக.

2. Explain the modes of acquiring Indian Citizenship under the Citizenship Act, 1955.

1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழ் இந்தியக் குடியுரிமையைப் பெறுவதற்கான வழிமுறைகளை விளக்குக.

3. Discuss the meaning and basis of judicial review under the Indian constitution.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் நீதித்துறை மறுஆய்வு என்பதன் பொருள் மற்றும் அடிப்படை குறித்து விவாதிக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. "Right to freedom of religion is not absolute" - Elucidate.

"மதச் சுதந்திர உரிமை முழுமையுடைத்ததல்ல" – தெளிவுபடுத்துக.

5. Explain the ways of resolving the conflict between fundamental right and directive principles.

அடிப்படை உரிமைகளுக்கும் வழிகாட்டும் நெறிமுறைகளுக்கும் இடையே உள்ள முரண்பாட்டினைத் தீர்ப்பதற்கான வழிகளை விளக்குக.

6. Examine the rights guaranteed to minorities under the Constitution.

அரசமைப்பின் கீழ் சிறுபான்மையோருக்கு பொறுப்புறுதி அளிக்கும் உரிமைகளை விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Definition of 'state'

அரசின் வரையறை

(b) Public interest litigation

பொதுநல வழக்கு

(c) Preamble

முகப்புரை

(d) Right to property

சொத்து குறித்த அடிப்படை உரிமை

(e) Enforcement of fundamental duties

அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுதல்

(f) Double jeopardy

ஈரிடர்

(g) Secularism

சமயச் சார்பின்மை

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Madhya Pradesh Government issued a government order stating the rules to be followed in admitting students to minority run unaided educational institutions. The management of the institutions challenged the government order or the ground that it violated their right under Article 30. Decide.

சிறுபான்மையினர் நடத்தும் அரசு நிதி உதவி பெறாத கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையில் பின்பற்ற வேண்டிய விதிகளை மத்திய பிரதேச மாநில அரசு ஒரு அரசு ஆணை வாயிலாக வெளியிட்டது. இந்த அரசு ஆணையானது உறுப்பு 30ன் கீழ் தங்களது அடிப்படை உரிமையினை மீறுவதாக உள்ளது என இந்நிறுவனங்களின் மேலாண்மை வாதிட்டது. தீர்மானிக்க.

9. A Pakistani national was gang raped by the employees of a railway company under inebriated condition. When a law student filed a public interest litigation for compensation for the victim against the railway company it was pleaded that railway company was not liable to pay compensation as the victim was not an Indian National. Decide.

ஒரு இருப்பூர்தி நிறும தொழிலாளர்கள் குடிபோதையில் ஒரு பாகிஸ்தானிய பெண்ணை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கினார். பாதிக்கப்பட்டப் பெண் சார்பாக இழப்பீடு கோரி ஒரு சட்ட மாணவர் இருப்பூர்தி நிறுமத்தின் மீது பொதுநல வழக்கிட்டார். இருப்பூர்தி நிறுமம் வாதிடுகையில் அந்தப் பெண் இந்திய நாட்டினர் அல்லர். எனவே இழப்பீடு எதும் வழங்கத் தேவையில்லை என வாதிட்டது. தீர்மானிக்க.

10. On the basis of caste, employments were allotted to certain differently abled and women. It was challenged before the Supreme Court. Decide the constitutional validity.

சாதியின் அடிப்படையில், மாற்றுதிறனாளிகளுக்கும், பெண்களுக்கும் சில வேலை வாய்ப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் செல்லும் தன்மை குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதன் அரசமைப்புச் சட்டச் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

B.L. DEGREE EXAMINATIONS, MAY 2019

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the protection of certain rights including Freedom of Speech.
   பேச்சு சுதந்திரம் உள்ளிட்ட சில உரிமைகளுக்கான பாதுகாப்பு பற்றி விளக்குக.
2. Discuss the right to protection against arrest and detention with decided cases.
   கைது செய்தல், அடைத்து வைத்தலுக்கு எதிரான பாதுகாப்பு உரிமையை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு விவாதிக்கவும்.
3. Examine the right of minorities to establish and administer educational institutions.
   சிறுபான்மையினர் கல்வி நிலையங்களை நிறுவவும், நிருவகிக்கவும் உரிய உரிமை பற்றி ஆராய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Define Equal Justice and Free Legal Aid.
   சமநீதி மற்றும் இலவச சட்ட உதவி பற்றி வரையறுக்கவும்.
5. Discuss the Fundamental Duties.
   அடிப்படை கடமைகள் பற்றி விவாதிக்கவும்.
6. "Certain principles of policy to be followed by the State" - Examine.
   "சில கொள்கைகளை, அரசு பின்பற்றுதல் வேண்டும்" – ஆராய்க.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

   பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

   (a) Mode of acquisition of citizenship
   குடியுரிமையை பெறும் முறைகள்

   (b) Doctrine of Eclipse.
   உருமறைவுக் கோட்பாடு

   (c) Abolition of Titles
   பட்டங்களை ஒழித்தல்

   (d) Writ of Habeas Corpus under Article 32.
   உறுப்பு 32–ன் கீழ் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை.

(e) Can Preamble be amended?

முகப்புரையை திருத்த முடியுமா?

(f) Right to fair trial

நேர்மையான விசாரணைக்கன உரிமை

(g) Right against Exploitation

சுரண்டலுக்கு எதிரான உரிமை

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' concealed a large amount of income in order to escape tax under the Income Tax Act. As a settlement he agreed to pay rupees three lakshs by way of tax and penalty. In 1955, the Supreme Court held that taxation under Income tax held as invalid. So 'A' claimed the recovery of the amount of rupees three lakshs. Will 'A' succeed?

இந்திய வருமான வரிச் சட்டத்தின் கீழ் வரிச்செலுத்தாமல் இருப்பதற்கு தன் அதிகப்படியான வருமானத்தை 'A' என்பவர் மறைக்க நினைக்கிறார். ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூபாய் மூன்று இலட்சம் வரியாகவும் மற்றும் அபராதமாகவும் செலுத்த அவர் ஒப்புக்கொள்கிறார். 1955 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அந்த வரிவிதிப்பு வருமான வரி சட்டத்தின் படி செல்லாது என்று தீர்ப்பளித்தது. A ரூபாய் மூன்று லட்சத்தை திரும்ப கோருகிறார். 'A' அந்தத் தொகையை திரும்பப் பெறுவதில் வெற்றி அடைவாரா?

9. The petitioner's husband, a "Major" in Army died while in service in mysterious circumstances. No proper investigation was made regarding the cause of his death. His case was handled with culpable negligence and cynical indifference by the authorities concerned. Whether the widow can claim for compensation? Explain.

மனுதாரரின் கணவர் இராணுவத்தில் பணியிலிருந்த போது மர்மமான முறையில் இறக்கிறார். இறப்பிற்கான காரணத்தை முறையாக விசாரணை செய்யவில்லை. அதிகாரிகளின் வேறுபாட்டின் அடிப்படையிலும் மற்றும் குற்றமனதுடன் கூடிய கவனமின்மை அடிப்படையிலும் வழக்கு கையாளப்பட்டது. அந்த விதவை நஷ்ட ஈடு கோர முடியுமா? விளக்குக.

10. The evidence of the accused was tape recorded without his knowledge. The evidence was made by the accused without any force or compulsion from others. Is the denial of the accused as to the tape recorded evidence is admissible or not? Explain under which Article of the Indian Constitution he can claim his right?

குற்றம் சாட்டப்பட்டவரின் வாக்குமூலம் அவருக்குத் தெரியாமலேயே ஒலி நாடாபதிவு சாட்சியாக பதிவு செய்யப்பட்டது. எந்தவொரு தாக்குதலும், ஒடுக்குதலும் இல்லாமல் அச்சாட்சி

பதிவு செய்யப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவரின் ஒலி நாடாபதிவு சாட்சியத்தை குற்றம் சாட்டப்பட்டவர் மறுத்தால் அது ஏற்புடையதா அல்லது இல்லையா? இந்திய அரசமைப்பின் எவ்வுறுப்பின் கீழ் அவர் உரிமை கோர இயலும் விளக்குக.

B.L. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the salient features of the Indian Constitution.

இந்திய அரசமைப்பின் சிறப்பியல்புகள் பற்றி விவரிக்க.

2. Discuss the equality of opportunity in matters relating to public employment with relevant cases.

அரசுப் பணி நியமனத்தில் சமவாய்ப்பிற்கான உரிமை குறித்து தொடர்புடைய வழக்குகளுடன் விவாதிக்க.

3. Examine the provisions relating to protection in respect of conviction for offences, with decided case laws.

குற்றத் தீர்ப்பிலிருந்து பாதுகாத்தல் பற்றிய வகையங்கள் குறித்து தீர்மானிக்கப்பட்ட வழக்குகளின் மூலம் ஆராய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. "Articla 15(4) does not speak of castes, but only speaks of classes" - Elucidate.

"உறுப்பு 15(4) சாதிகள் பற்றி பேசவில்லை வகுப்புகள் பற்றியே பேசுகிறது" – தெளிவாக்கு.

5. Explain the "Right to freedom of Religion" with illustrations and judicial decisions.

சமய சுதந்திரத்திற்கான உரிமையைப் பற்றி எடுத்துக்காட்டுகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்புகளுடனும் விளக்குக.

6. Discuss the scope of Article 32 of the Indian Constitution with decided

cases.

இந்திய அரசமைப்பு சட்டம் 32–வது உறுப்பின் அளாவுகையை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்க.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Doctrine of severability

பிரிக்கும் தன்மைக் கோட்பாடு

(b) "Locus standi"

வழக்கிடு உரிமை

(c) Right against exploitation

சுரண்டலுக்கு எதிரான உரிமை

(d) Define the term "Secular"

"மதச்சார்பின்மை" என்ற சொல்லினை வரையறுக்க.

(e) Equality before law

சட்டத்தின் முன் சமத்துவம்

(f) Right to education

கல்விக்கான உரிமை

(g) Other authorities under Article 12

உறுப்பு 12–ன் படி பிற அதிகார அமைப்புகள்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' was born in Maharashtra and his parents were also born in Maharashtra. Later 'A' went to Bihar to start his business and started to reside for 4 years. Further to develop the business 'A' went to foreign country and extended his business and lived permanently in foreign country. Whether 'A' is a citizen of India or not? Explain.

'A' என்பவர் மஹராஷ்டிர மாநிலத்தில் பிறந்தவர். அவரின் பெற்றோரும் மஹராஷ்டிர மாநிலத்தில் பிறந்தவர்கள். பின்னர் 'A' பீஹார் மாநிலத்தில் தொழில் தொடங்குவதற்காக சென்று அங்கு 4 வருடங்களாக வசிக்கிறார். மேலும் தன் தொழிலை விரிவுபடுத்த வெளிநாட்டிற்கு சென்று அங்கேயே தங்கி விடுகிறார். இங்கு 'A' ஒரு இந்திய குடிமகனா? இல்லையா? என்பதனை விவரிக்கவும்.

9. The magazine named "Storm clouds" was circulated in Madras and it was ordered to stop the process of circulation. Is it violation of Article 19(1) (a) of the Constitution of Indian?

'புயல் மேகங்கள்' எனும் பத்திரிக்கை சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வந்தது. அந்தப் பத்திரிக்கையின் பிரசுரத்தை நிறுத்தக்கோரி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இது உறுப்பு 19(1) (a) யிலுள்ள இந்திய அரசமைப்பு சட்டத்தினை மீறுவதாக உள்ளதா?

10. The workers who are registered, entered into voluntary agreement to do extra work. The employers just pay the wages for 8 hours and did not pay for extra work. The workers contended that they are performing forced labour. Justify.

பதிவு செய்யப்பட்ட தொழிலாளர்கள் கூடுதலான வேலை புரிய தன்னிச்சையான உடன்படிக்கையில் ஈடுபடுகிறார்கள். ஆனால் முதலாளியோ, கூடுதல் வேலைக்கான ஊதியம் தரமறுத்து அவர்களின் 8 மணி நேர வேலைக்கான ஊதியத்தை மட்டும் வழங்குகிறார். தங்களை கட்டாயப்படுத்தி வேலைபுரிய பணிக்கிறார்கள் என்று தொழிலாளர்கள் கருதுகிறார்கள். அவர்களின் கருத்தை நியாயப்படுத்துக.

B.L. DEGREE EXAMINATIONS, JANUARY 2021

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. "Right to freedom of speech and expression is not without restriction". Examine the statement with relevant cases.

"பேச்சு மற்றும் கருத்து சுதந்திரம் கட்டுப்பாடற்ற ஒன்றல்ல" – இக்கூற்றினை தொடர்புடைய வழக்குகள் கொண்டு ஆராய்க.

2. Explain the modes of acquiring Indian citizenship under the citizenship Act, 1955.

1955 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டத்தின் கீழ் இந்தியக் குடியுரிமையைப் பெறுவதற்கான வழிமுறைகளை விளக்குக.

3. Examine to what extent the doctrine of Rule of Law has been applied in the Constitution of India.

சட்டத்தின் ஆட்சி கோட்பாடு எந்த அளவிற்கு இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் பின்பற்றப்பட்டுள்ளது என்பதை ஆராய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the rights guaranteed to minorities under the Constitution and examine the Supreme Court's decision in T.M.A.Pai vs State Karnataka.

அரசமைப்பின் கீழ் சிறுபான்மையோருக்கு பொறுப்புறுதி அளிக்கும் உரிமைகளை விளக்கி டி.எம்.ஏ.பாய் எதிர் கர்நாடக மாநில அரசு என்ற வழக்கில் வழங்கப்பட்ட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்க.

5. Discuss the merits and demerits of Federal Constitution.

கூட்டாட்சி அரசியலமைப்பின் நலன்களையும் நலனின்மைகளையும் விவாதிக்கவும்.

6. Discuss the Fundamental Duties.

அடிப்படை கடமைகள் பற்றி விவாதிக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Definition of State.

அரசின் வரையறை

(b) Writ of Habeas Corpus under Article 32.

உறுப்பு 32ன் கீழ் ஆட்கொணர்விக்கும் நீதிப்பேராணை.

(c) Judicial Review

நீதிமுறை மறு ஆய்வு

(d) Double jeopardy

இரட்டை இடர்பாடு

(e) Maneka Gandhi v.Union of India

மேனகா காந்தி எதிர் இந்திய யூனியன்

(f) Right to Fair trial

நேர்மையான விசாரணைக்கான உரிமை

(g) Protection against self incrimination

குற்றச்சாட்டிற்கு தன்னையே உள்ளாக்குதலில் இருந்து பாதுகாப்பு

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The request of 'A; who is under preventive detention to make his

representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'A' contends that it is violative of his fundamental rights. Decide.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 'A' என்பவர் தடுப்புக் காவல் ஆலோசனை குழுமம் முன்பு தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது முறையீட்டுரையினை சமர்ப்பிக்க கோருகிறார். அவரது கோரிக்கை மறுக்கப்பட்டது. அச்செயல்முறை தனது அடிப்படை உரிமைக்கு எதிரானதென வாதிடுகிறார். முடிவு.

9. 'A' concealed a large amount of income in order to escape from payment of tax under the Income Tax Act. As a settlement he agreed to pay rupees three lakshs by way of tax and penalty. In 1955, the Supreme Court held that taxation under Income tax held as invalid. So 'A' claimed the recovery of the amount of rupees three lakhe. Will 'A' succeed?

இந்திய வருமானவரிச் சட்டத்தின் கீழ் வரிச் செலுத்தாமல் இருப்பதற்கு தன் அதிகப்படியான வருமானத்தை 'A' என்பவர் மறைக்க நினைக்கிறார். ஒப்பந்தத்தின் அடிப்படையில் ரூபாய் மூன்று இலட்சம் வரியாகவும் மற்றும் அபராதமாகவும் செலுத்த அவர் ஒப்புக் கொள்கிறார். 1955 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றம் அந்த வரிவிதிப்பு வருமானவரி சட்டத்தின் படி செல்லாது என்று தீர்ப்பளித்தது. 'A' ரூபாய் மூன்று லட்சத்தை திரும்ப கோருகிறார். 'A' அந்தத் தொகையை திரும்பப் பெறுவதில் வெற்றி அடைவரா.

10. A foreign national woman was ganglaped by the employees of a railway company under inebriated condition. When a law student filed a public interest litigation for compensation for the victim against the railway company, it was pleaded that the railway company was not liable to pay compensation as the victim was not an Indian National. Decide.

ஒரு இருப்பூர்தி நிறும தொழிலாளர்கள் குடிபோதையில் ஒரு வெளிநாட்டு பெண்ணை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கினார். பாதிக்கப்பட்ட பெண் சார்பாக இழப்பீடு கோரி ஒரு சட்ட மாணவர் இருப்பூர்தி நிறுமத்தின் மீது பொதுநல வழக்கிட்டார். இருப்பூர்தி நிறுமம் வாதிரகையில் அந்தப் பெண் இந்திய நாட்டினர் அல்லர், எனவே இழப்பீடு ஏதும் வழங்கத் தேவையில்லை என வாதிட்டது. தீர்மானிக்க.

B.L. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்

ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the constitutional position of Right to equality of opportunity in public employment in India.

இந்தியாவில் பொது வேலை வாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் அரசமைப்பு சட்ட நிலையினை விளக்குக.

2. "Freedom of Press is the back-bone of Democracy" - Explain.

"பத்திரிக்கை சுதந்திரம் ஜனநாயகத்தின் முதுகெலும்பாகும்" – விளக்குக.

3. The expression 'personal liberty' in Article 21 is of wider amplitude and it covers a variety of rights - Elucidate.

சரத்து 21–ன் கீழ் "தனிமனித சுதந்திரம்" என்ற வாசகமம் பரந்த வீச்சினை உடையது மட்டுமின்றி அது பல உரிமைகளை உள்ளடக்கியதாகும்" – தெளிவுபடுத்துக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Examine the nature and extent of the rights of minorities to establish and administer educational institutions.

கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி நிர்வகித்தல் குறித்த சிறுபான்மையினரின் உரிமைகளின் தன்மை மற்றும் அளாவுகையினை ஆராய்க.

5. Examine the interrelationship between Fundamental Rights and Directive Principles of State Policy. Refer to Constitutional provisions and decided cases.

அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிகாட்டிக் கொள்கைகளுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குக. அதற்குரிய அரசமைப்புச் சட்டத்தின் உறுபுகளையும், வழக்குத் தீர்ப்புகளையும் குறிப்பிடுக.

6. Enumerate the object and importance of Fundamental Duties. Explain the ways for the enforcement of Fundamental Duties.

அடிப்படைக் கடமைகளின் நோக்கத்தையும், முக்கியத்துவத்தையும் எடுத்து விளம்புக. அடிப்படைக் கடமைகளை எவ்வாறு செயலுறுத்த முடியும் என்பதை விளக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Protective discrimination

பாதுகாப்புடைய வேறுபாடு

(b) Protection against ex post facto laws.

பின்னுறுத்துச் சட்டத்திலிருந்து பாதுகாப்பு

(c) Preventive detention Laws

தடுப்புக்காவல் சட்டங்கள்

(d) Secularism
மதச்சார்பின்மை

(e) Formation of new states
புதிய மாநிலங்களை ஏற்படுத்துதல்

(f) Other authorities
இதர அதிகார அமைப்புகள்

(g) Freedom of profession
தொழிற் சுதந்திரம்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. When some children were employed in match factories at Sivakasi, X filed a writ petition before the High Court under Art.226 demanding action against the match factories. The match factories pleaded the right to carry on any trade as a part of fundamental rights. Decide.

சிவகாசியில் அமைந்துள்ள தீப்பெட்டி தொழிற்சாலைகளில் சில சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்ட பொழுது X என்பவர் ஷரத்து 226–ன் கீழ் உயர்நீதிமன்றத்தை அணுகி தீப்பெட்டி தொழிற்சாலைகள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரினார். தீப்பெட்டி தொழிற்சாலைகளோ தங்களுக்கு எந்த தொழிலும் செய்திட அடிப்படை உரிமை உள்ளது என வாதிட்டன. தீர்மானிக்க.

9. The working conditions in a stone quarry in Himachal Pradesh was inhuman. When a voluntary organization challenged the same before the High Court, the quarry owner questioned the locus standi of the voluntary organization. Decide.

ஹிமாச்சல் பிரதேசத்தில் அமைந்துள்ள ஒரு கற் சுரங்கத்தில் பணிசெய்யும் சூழ்நிலையானது மனிதத் தன்மையற்றதாக இருந்தது. இதற்கு எதிராக ஒரு தன்னார்வ நிறுவனம் உயர்நீதிமன்றத்தில் வழக்கிட்ட பொழுது, தன்னார்வ நிறுவனத்திற்கு வழக்கிட தகுதி இல்லை என கற் சுரங்க உரிமையாளர் வாதிட்டார். தீர்மானிக்க.

10. The Tamil Nadu Public Service Commission issued a notification for recruitment of Assistant Professors in a higher educational institution established and maintained by the Tamil Nadu Hindu Religious and charitable Endowments Department and prescribed that only Hindus are eligible to apply. X, who belongs to another religion challenged the notification on the ground that it violated his right not to be discriminated on the ground of religion. Decide.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வு ஆணையமானது தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறைக்கு சொந்தமான உயர்கல்வி நிறுவனத்தில் பணிபுரிய உதவி பேராசிரியர் பணிக்கு ஒரு விளம்புகையை வெளியிட்டது. அதில் இந்துக்கள் மட்டுமே விண்ணப்பிக்கத் தகுதி உடையவர்கள்

என அறிவிக்கப்பட்டிருந்தது. X, என்ற மாற்று மதத்தைச் சேர்ந்தவர் இதற்கு எதிராக வழக்கிட்டு மதத்தின் அடிப்படையில் பாகுபாடு செய்திடல் கூடாது என்னும் சமத்துவ உரிமை பாதிக்கப்பட்டதாக வாதிட்டார். தீர்மானிக்க.

B.L. DEGREE EXAMINATIONS, JUNE 2022

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Fundamental rights are not only the rights of the citizens, but also the obligations imposed upon the state. Evaluate the meaning of the term "State" referring to decided cases.

அடிப்படை உரிமைகளானவை குடிமக்களின் உரிமைகள் மட்டுமல்ல அவை அரசுக்கு சுமத்தப்பட்ட கட்டுப்பாடுகளும் ஆகும். "அரசு" என்ற பொருளினை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் எடுத்துரைக்க.

2. "Equality clause forbids class legislation but does not forbid classification" Examine the statement referring to decided case laws.

இன வகுப்பு சட்டத்தை சமத்துவ விதிக்கூறு தடுக்கிறது ஆனால் பாகுபாடு செய்வதை அது தடுக்கவில்லை. இக்கூற்றை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி விவரிக்கவும்.

3. Explain the theory of separation of power. Analyse how far this is applied in the Constitution of India.

அதிகாரப் பிரிவினைக் கோட்பாடு என்பதை விளக்குக. இந்திய அரசமைப்பு சட்டத்தில் எவ்வாறு செயல்முறைப்படுத்தப்பட்டுள்ளது என்பதை பகுப்பாய்வு செய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the nature and scope of the rights guaranteed to the religious minorities.

சிறுபான்மையினருக்கு வழங்கப்பட்டுள்ள உரிமைகளின் தன்மையையும் மற்றும் அளாவுகையையும் விவரிக்கவும்.

5. Explain the nature and scope of the protection of life and personal liberty

with decided cases.

வாழ்வுரிமை பாதுகாப்பு மற்றும் தனிநபர் சுதந்திரம் என்ற கூற்றின் தன்மை மற்றும் நோக்குகெல்லையை விவரிக்கவும்.

6. "Laws inconsistent with or in derogation of the fundamental rights are void" - Comment.

"அடிப்படை உரிமைகளுக்கு முரணாகவோ அல்லது அவற்றை குலைக்கின்ற வகையிலோ உள்ள சட்டங்கள் இல்லா நிலையன" – கருத்துரைக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Quasi federal

கூட்டாட்சி அமைப்பு

(b) Doctrine of Eclipse

மறைதல் கோட்பாடு

(c) Double Jeopardy

இரட்டை இடர்

(d) Constitutional conventions

அரசமைப்பு மரபுகள்

(e) Right against exploitation

சுரண்டப்படுதலுக்கெதிரான உரிமை

(f) Preventive detention

தடுப்புக்காவல்

(g) Fundamental duties

அடிப்படைக் கடமைகள்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr.Navana was sentenced to death, but his death sentence was not executed for 10 years and he demands for quashing of his death sentence under Article 21 of the Constitution of India. Is his claim sustainable? Decide.

திரு.நவனா என்பவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டு 10 ஆண்டுகளாகியும் அத்தண்டனை நிறைவேற்றப்படவில்லை. மேலும் தனக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனை அரசமைப்பு சட்ட உறுப்பு 21–க்கு எதிரானது என்று கூறி அதனை இரத்து செய்ய கோருகிறார். அவரது கோரிக்கை நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்கவும்.

9. The State Legislature enacted "Prevention of Cow Slaughter Act". Mr.Nushathan, a fourth year law college student challenged the Act on the ground that cow slaughter is an essential rite of Bakrid celebration. Decide.

மாநில அரசு பசுவதை தடுப்புச் சட்டம் இயற்றியது. திரு.நுஜாதான் என்ற நான்காம் ஆண்டு சட்ட மாணவன் பசுவதை என்பது பக்ரீத் பண்டிகையின் முக்கிய சமய சடங்காக இருப்பதால் இச்சட்டம் தமது உரிமைக்கு புறம்பானது என வழக்காடுகிறார்.தீர்மானிக்கவும்.

10. Mr.Ramasamy a government servant, was dismissed from the service on charges of corruption after departmental enquiry. Later, on the same grounds, a criminal prosecutions was intiated against him. Is it sustainable? Decide.

திரு.இராமசாமி என்ற ஒரு அரசு ஊழியர் கையூட்டு பெற்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் துறை நடவடிக்கையின் கீழ் முதலில் பணி நீக்கம் செய்யப்படுகிறார். பின்னர் அதே காரணத்திற்காக அவர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது. இந்த இரண்டாவது நடவடிக்கை செல்லத்தக்கதா? தீர்மானிக்கவும்.

B.L. DEGREE EXAMINATIONS, DECEMBER 2022

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the scope of freedom of speech and expression with its limitations in India.

இந்தியாவில் பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தின் அளாவுகையை அதன் மீதான கட்டுப்பாடுகளுடன் விளக்குக.

2. "Fundametal Freedom of Religion is not absolute". Elucidate.

"மதச்சுதந்திர அடிப்படை உரிமையானது முழுமையானது அல்ல". எடுத்துரைக்க.

3. Explain the ways of resolving the conflict between fundamental rights and Directive Principles of State Policy.

அடிப்படை உரிமைகளுக்கும் மற்றும் அரசின் வழிகாட்டும் நெறிமுறைகளுக்கிடையேயான முரண்பாட்டினை தீர்ப்பதற்கான வழிகளை விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்

ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Evaluate "Double Jeopardy" with decided case laws.

"இரட்டை இடரை" தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் மதிப்பிடுக.

5. The Indian Constitution is neither federal nor unitary but Quasi-federal. Explain.

இந்திய அரசமைப்புச் சட்டம் ஒரு கூட்டாட்சியுமில்லை ஒற்றையாட்சியுமில்லை. ஆனால் கூட்டாட்சி போல்வு. விவரிக்கவும்.

6. "Exaplain the constitutional position of equality of opportunity in public employment in India.

இந்தியாவில் பொது வேலை வாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் அரசமைப்புச் சட்ட நிலையினை விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Preamble

முகப்புரை

(b) Right against Exploitation

சுரண்டலுக்கு எதிரான உரிமை

(c) Self-incrimination

தன் குற்றமேற்றல்

(d) Preventive Detention Laws

தடுப்புக் காவல் சட்டங்கள்

(e) Doctrine of Eclipse

மறைதல் கோட்படு

(f) Dual citizenship

இரட்டை குடியுரிமை

(g) Paramanand Katara vs Union of India (1995) 3 SCC 248

பரமானந்த் கதாரா எதிர் இந்திய யூனியன் (1995) 3 SCC 248

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட

வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Mr.Ratsakan, an injured person in an accident was taken to the charitable hospital for first aid. The doctors refused to provide assistance without procedural formalities being completed and the injured person died. Decide.

திரு.இரட்சகன் விபத்தில் காயமடைந்து ஒரு தொண்டு நல மருத்துவமனைக்கு முதலுதவிக்காக எடுத்துச் செல்லப்பட்டார். சட்ட நடைமுறைகள் பின்பற்றப்படாததால் முதலுதவி அளிக்க மருத்துவர்கள் மறுத்து விட்டதால் அவர் இறந்து விடுகிறார். தீர்மானிக்கவும்.

9. A state legislature enacted a law providing 40% reservation for women in public employment. It was challenged before the court on the ground of violating equal opportunity. Is it sustainable? Decide.

ஒரு மாநில அரசானது பொது நிறுவனங்களின் வேலை வாய்ப்புகளில் பெண்களுக்கென 40 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கி சட்டமொன்றை இயற்றியது. இச்சட்டமானது சமமான வாய்ப்புக்கு எதிரானது என்று கூறி இதன் செல்லுந்தன்மை குறித்து நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இது நிலைக்கத்தக்கதா? தீர்மானிக்கவும்.

10. More than 2000 children below the age of 14 years were employed in M/S.Rainbow Colours at Thiruppur. Future Children, an NGO, filed a Public Interest Litigation before the court against this. Is the PIL maintainable? Decide.

திருப்பூரில் உள்ள இரெயின்போ கலர்ஸ் தொழிற்சாலையில் 2000க்கு மேற்பட்ட 14 வயதிற்கு குறைவான குழந்தைகள் வேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இதற்கு எதிராக 'ஃப்யூசர் சில்ட்ரென்' என்னும் அரசு சார்பற்ற அமைப்பு நீதிமன்றத்தில் பொது நல வழக்கு ஒன்று தொடர்ந்தது. இந்த பொது நல வழக்கு செல்லத்தக்கதா? தீர்மானிக்கவும்.

B.L. DEGREE EXAMINATIONS, MAY 2023

(Three year Regular Course)

First Year - Second Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What are the essential features of a federal Constitution? In the light of decided cases and Constitutional provisions discuss, how far the Indian Constitution is federal in nature?

கூட்டாட்சி அரசமைப்பின் இன்றியமையா கூறுகள் யாவை? இந்திய அரசமைப்பு எந்த அளவிற்கு கூட்டாட்சி தன்மையது என்பதை முன் தீர்ப்புகள் மற்றும் அரசமைப்பு சட்ட பிரிவுகளின் படி விவாதிக்க.

2. What do you understand by 'Law' and 'Law in force' under Article 13? Answer with supporting case laws.

அரசமைப்பு சட்டத்தின் 13வது உறுப்பின் கீழ் 'சட்டம்' மற்றும் 'நடைமுறையிலுள்ள சட்டம்' இது குறித்து தாங்கள் புரிந்து கொண்ட கருத்து யாது? தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் பதிலளிக்கவும்.

3. Discuss the scope of fundamental freedom of profession, occupation, trade or business under the Constitution. What are the restrictions that can be imposed on this freedom?

அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தொழில், வணிகம் மற்றும் வியாபாரம் செய்யும் அடிப்படைச் சுதந்திரத்தை விளக்குக. எப்படிப்பட்ட கட்டுப்பாடுகளை அதன் மீது விதிக்க முடியும்?

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. "Right to freedom of speech and expression is not without restriction" - Examine the statement with relevant cases.

பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்தை வெளியிடுவதற்கான உரிமை கட்டுப்பாடற்ற ஒன்றல்ல, இக்கூற்றினை தொடர்புடைய வழக்குகள் கொண்டு ஆராய்க.

5. "The Indian Constitution is unique in protection of the minorities" - Discuss.

"சிறுபான்மையினரை பாதுகாப்பதில் இந்திய அரசமைப்புச் சட்டம் தனித் தன்மையுடன் செயல்படுகிறது" – விவாதிக்கவும்.

6. Examine the scope of Right to freedom of Religion.

சமய உரிமையின் அளாவுகையை விளக்கமாக தருக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Need for fundamental duties

அடிப்படை கடமைகளுக்கான தேவை

(b) Citizenship by Domicile

வசிப்பதன் மூலம் குடியுரிமை

(c) Right against exploitation

சுரண்டலுக்கெதிரான உரிமை

(d) Protective discrimination

பாதுகாக்கும் நோக்கில் வேறுபடுத்துதல்

(e) Mandal Commission case.

மண்டல் கமிஷன் வழக்கு

(f) Preventive detention

தடுப்புக் காவல்

(g) Doctrine of Severability

பிரிக்கத்தக்க கோட்பாடு

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A state Electricity Board constituted under Electricity (Supply Act), 1948 had taken action against its employees. They approached the High court for certain remedies for violation of Fundamental Rights. Its was contested by the Board that the Board is not "state" and hence not amenable to fundamental rights. Decide.

மின்சாரம் (விநியோக சட்டம்) 1948 இன் கீழ் அமைக்கப்பட்ட மாநில மின் வாரியம் அதனுடைய பணியாளர்கள் மீது சில நடவடிக்கைகளை எடுத்தது. அதனை எதிர்த்து மாநில உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டதாக அவர்கள் வழக்கு தொடுத்தனர். ஆனால் மின்வாரியமானது தான் 'அரசு' அல்ல ஆகையால் அடிப்படைய உரிமையின் கட்டுப்பாட்டிற்குள் வராது என எதிர்வாதம் செய்தது. தீர்மானிக்கவும்.

9. Without obtaining the consent of the particular state, parliament passed a law under Art. 3 bifurcating the state into two states. Discuss.

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் சம்மதத்தை பெறாமலேயே அம்மாநிலத்தை இரண்டு மாநிலங்களாகப் பிரிக்க வகை செய்யும் சட்டத்தை பாராளுமன்றம் அரசமைப்பின் 3ஆம் பிரிவின் கீழ் இயற்றியது. இதன் தன்மையை விவாதி.

10. A Non-Brahmin was appointed by the government in a famous temple as pujari to perform pooja. This was challenged before the Supreme Court as he is not competent. Decide the Constitutional validity of the appointment.

பிராமணர் அல்லாத ஒருவர் புகழ்பெற்ற கோயில் ஒன்றில் வழிபாடு செய்திட நியமிக்கப்பட்டார். அவர் தகுதி அற்றவர் என உச்சநீதிமன்றத்தில் வழக்கிடப்பட்டது. இந்த நியமனத்தின் அரசமைப்பு செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

ஐந்தாண்டு சட்டக்கல்வி

B.A., B.L./B.A., LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2018

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்க.

1. "The state shall not deny to any person equality before law and equal protection of Laws within the territory of India". Comment.

"இந்திய எல்லைப் பகுதிக்குள் எவருக்கும் சட்டத்தின் முன்னிலையில் சமன்மையையோ, சட்டத்தின் சமன்மையான காப்பளிப்பையோ மறுத்தல் ஆகாது" – கருத்தாய்வு செய்க.

2. Right to freedom of religion is not absolute - Explain.

"மதச் சுதந்திர உரிமையானது முழுமையானத அல்ல" – விளக்குக.

3. Bring out the meaning of the term other Authorities in Art. 12 citing decided cases.

முடிவுற்ற வழக்குகளை எடுத்துரைத்து உறுப்பு 12ல் கூறப்பட்டுள்ள இதர அதிகார அமைப்புகள் என்பதன் பொருளை வெளிக்கொணர்க.

4. Explain the freedom of speech and expression guaranteed under our Constitution.

பேச்சு மற்றும் கருத்துரிமை குறித்து நமது அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள பொறுப்புறுதியை விளக்குக.

5. The Constitution of India is based on the bedrock of Balance between the Directive principles and Fundamental rights. Examine.

இந்திய அரசமைப்புச் சட்டம் அரசை வழி செலுத்தும் நெறிகளுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் இடையே உறுதியான அடித்தள சமனமைப்பினை பின்னணியாகக் கொண்டுள்ளது. விளக்குக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கும் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Auto Sankar case
ஆட்டோ சங்கர் வழக்கு

(b) Doctrine of Severability
பிரிக்கத்தக்க கோட்பாடு

(c) Right against exploitation
சுரண்டலுக்கெதிரான உரிமை

(d) Fundamental Duties
அடிப்படைக் கடமைகள்

(e) Citizenship by Domicile
வாழ்வக வழி குடியுரிமை

(f) Equal pay for equal work
சம வேலைக்கு சம ஊதியம்

(g) Mandal Commission case
மண்டல் கமிஷன் வழக்கு

(h) Doctrine of Eclipse
உருவு மறைதல் கோட்பாடு

(i) A.K.Gopalan vs.Union of India
ஏ.கே.கோபாலன் எதிர் இந்திய ஒன்றியம்

(j) Termination of Citizenship
குடியுரிமையை முடிவுக்குக் கொண்டு வருதல்

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons

பின்வருவனவற்றுள் நான்கிற்கு, (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A regulation was passed by the managing director of the Air India stipulating that the Air Hostess will be terminated from service on attaining the age of 35 or on marriage. This was challenged by an Air Hostess. Discuss the validity of the regulation.

இந்திய விமான நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் ஒரு ஒழுங்குமுறை சட்டத்தினை உருவாக்கினார். அதன் படி முப்பத்தைந்து வயதை அடைந்த அல்லது திருமணம் ஆன விமான பணிப்பெண்கள் பணியிலிருந்து விலக்கப்படுவர். இதனை எதிர்த்து ஒரு விமான பணிப்பெண் வழக்கு தொடர்ந்தார். இச்சட்டத்தின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

8. Two new states were formed by the Parliament from, separating a big state without the consent of the bigh state. Examine the validity of the act of parliament.

ஒரு பெரிய மாநிலத்தை அதன் இசைவின்றி நாடாளுமன்றமானது இரு புது மாநிலங்களாக உருவாக்குகிறது. நாடாளுமன்றத்தின் இச்செயலின் செல்லுந்தன்மையை விளக்குக.

9. The State Government issued notification for admission to medical and engineering colleges. In the notification it was stated that those whose residence is not in Kerala had to pay capitation fee. "A" a candidate for medical admisssion. whose residence is not in Kerala, challenged the notification before the Supreme Court. Decide.

மாநில அரசு மருத்துவ மற்றும் பொறியியல் கல்லூரி சேர்க்கைக்கான அறிவிப்பை வெளியிட்டது. அதில் கேரளத்தில் குடியிருப்பு இல்லாதோர் கட்டாய நன்கொடை செலுத்த வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. "அ" என்னும் மருத்துவ விண்ணப்பதாரருக்கு கேரளத்தில் குடியிருப்பு இல்லை. எனவே இந்த அறிவிப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்கிறார். தீர்மானிக்க.

10. The passport of 'A' was cancelled by a passport officer without assigning any reason for his action under Sec.10(c) of the Passport Act. 'A' challenged the action as unconstitutional and violation of his fundamental right. Decide.

பிரிவு 10(c) கடவுச்சீட்டு சட்டப்படி கடவுச் சீட்டு வழங்கும் அலுவலரால் எவ்வித காரணமும் கூறாமல் 'அ' என்பவரது கடவுச்சீட்டு ரத்து செய்யப்படுகிறது. 'அ' தனது அடிப்படை உரிமை மீறப்படுவதுடன் அரசமைப்புச் சட்டத்தினையும் மீறுதலால் இது செல்லாது என வழக்குத் தாக்கல் செய்கிறார்.

11. 'A' went to the house of a police officer and offered him bribe in a closed cover. The police officer threw it at the face of 'A'. But later he asked 'A' to hand over the cover. "A" handed over the cover which was seized by the police officer. In a bribery case against 'A' it was contended by 'A' that the cover containing the currency notes should be produced in evidence as it was compelled by the police officer to produce the notes and it is violation of his fundamental rights. Will 'A' succeed in his contention?

'அ' என்பவர் ஒரு காவல் அலுவலரின் வீட்டிற்குச் சென்று அவருக்கு மூடப்பட்ட உறையில் கையூட்டு கொடுக்க முயற்சிக்கிறார். முதலில் உறையினை வீசியடித்த காவல் அலுவலர் பின்பு அதனை ஒப்படைக்கும் படி 'அ' வை கேட்க, அவரும் அதை கொடுக்க, காவல் அலுவலர் அதை கைப்பற்றுகிறார். பின்னர் 'அ' க்கு எதிரான கையூட்டு குற்றச்சாட்டில் கையூட்டானது தன்னிடத்திலிருந்து வற்புறுத்திப் பெறப்பட்டதால் அது தனக்கு எதிரான சான்றாக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கக் கூடாது என்றும், அது தனக்கு அடிப்படை உரிமையை மீறுகிறதாகவும் உள்ளது என, 'அ' வாதிடுகிறார். 'அ' தனது வாதத்தில் வெற்றி பெறுவாரா?

12. The State of Kerala invited applications for the post of Assistants in the Hindu Religious and Charitable department. One of the conditions stated that the candidate should belong to Hindu religion. Is the condition valid?

இந்து அற நிலையத் துறையில் உதவியாளர் பணிக்கான விண்ணப்பங்களை கேரள அரசு கோரியுள்ளது. இப்பணிக்கு விண்ணப்பிக்கின்றவர் இந்துவாக இருக்க வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகும். இந்த நிபந்தனை செல்லுந்தன்மையுடையதா?

B.A., B.L. / B.A., LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2018

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்க.

1. 'Equality implies equality among equals and not among unequals'. Explain with decided cases.

சமத்துவம் என்பது சமமானவர்களுக்கிடையில் தானே தவிர சமமான நிலையில் இல்லாதவர்களுக்கிடையில் இல்லை. முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் தெளிவுபடுத்துக.

2. Bring out the meaning of the term 'other authorities' in Art.12 citing decided cases.

முடிவுற்ற வழக்குகளை எடுத்துரைத்து உறுப்பு 12ல் கூறப்பட்டுள்ள இதர அதிகார அமைவுகள் என்பதின் பொருளை எடுத்துக்கூறவும்.

3. Preamble to the Constitution is a key to open the minds of the makers of the Constitution. Discuss.

அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை அதை உருவாக்கியவர்களின் உள்ளத்தைத் திறக்கும் திறவுகோல் – விளக்குக.

4. What are the outstanding features of the Indian Constitution?

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சிறப்பு இயல்புகள் என்ன?

5. Examine the scope of the right to life under the Indian Constitution.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கீழ் வாழும் உரிமையின் அளாவுகையை விளக்குக.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கும் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Protective discrimination

பாதுகாப்பு வேற்றுமை காட்டல்

(b) Doctrine of Severability

பிரிக்கத்தக்க கோட்பாடு

(c) Self incrimination
தன் குற்றப்படுத்துதல்

(d) Ex post facto law.
முன் நடந்த செயல்களைப் பின் சட்டத்திற்குட்படுத்தல்

(e) Suspension of fundamental rights
அடிப்படை உரிமை இடை நிறுத்தம்.

(f) Secularism
மதசார்பின்மை

(g) National Anthem Case.
நாட்டுப்பண் வழக்கு

(h) Preventive detention
தடுப்புக் காவல்

(i) Indra Sawney vs.Union of India
இந்திரா சாவினி எதிர் இந்திய ஒன்றியம்

(j) Termination of Citizenship
குடியுரிமையை முடிவுக்குக் கொண்டு வருதல்

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons

பின்வருவனவற்றுள் நான்கிற்கு, (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. The request of 'A' who is under preventive detention to make his representation before the advisory board on preventive detention by a legal practitioner of his choice was rejected. 'A' contends that it is violative on his fundamental rights. Decide.

தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 'அ' என்பவர் தடுப்புக்காவல் அறிவுரை வாரியத்தின் முன் தான் விரும்பும் வழக்குரைஞரால் தனது தடுப்பு காவலுக்கு எதிரான முறைவேண்டுதலை எடுத்துரைக்க கோருகிறார். இக்கோரிக்கை மறுக்கப்பட்டபோது அது தனது அடிப்படை உரிமையை பாதிப்பதாக வாதிடுகிறார் – முடிவு செய்க.

8. A citizen who was in preventive detention under defence of India rules, wrote a book on science with the permission of government but he was denied permission to send the same out the prison for publication. Decide.

இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு இந்திய குடிஞர் அரசு அனுமதியோடு ஒரு அறிவியல் புத்தகம் எழுதினார். பின் அதை வெளியீடு செய்ய சிறைக்கு வெளியே அனுப்பிட அரசு அனுமதி மறுத்தது. தீர்மானிக்க.

9. Children below 14 years of age were employed in a match factory. The

employer of the factory gave meager wages to the child workers. The Government authorities found out and ordered closure of the factory. Is the Act of the Government valid. Decide.

தீக்குச்சித் தொழிற்சாலையில் 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். தொழிற்சாலையின் உரிமையாளர்கள் மிகக் குறைந்த ஊதியமே வழங்கினர். இது அரசாங்க அதிகாரிகளுக்கு தெரிய வந்து தொழிற்சாலையை இழுத்து மூட உத்தரவிட்டனர். அரசின் இந்த நடவடிக்கை செல்லத்தக்கதா? தீர்மானிக்க.

10. Mr.Ravi his wife Selvi and his daughter Nirupa were citizens of India. In March 1948, Selvi and Nirupa left for Pakistan and stayed there for six months and there was no explanation for such a stay. However Mr.Ravi continued to live in India. Discuss whether Selvi and Nirupa would be considered as citizens of India.

திரு.ரவி அவர் மனைவி செல்வி மற்றும் அவருடைய மகள் நிருபா ஆகியோர் இந்திய குடிமக்களாக இருந்தனர். 1948–ம் ஆண்டு மார்ச் மாதத்தில் செல்வியும், நிருபாவும் பாகிஸ்தானுக்கு சென்று அங்கேயே ஆறு மாதங்களுக்கு மேலாக தங்கி இருந்தனர். இவ்விதம் தங்கியதற்கு எந்த விதமான விளக்கமும் தரப்படவில்லை. ஆனால் திரு.ரவி தொடர்ந்து இந்தியாவிலேயே தங்கியிருந்தார். செல்வியும், நிருபாவும் இந்தியாவின் குடிமக்களாக கருத முடியுமா என்பதை ஆராய்க.

11. A Non Brahmin was appointed by the Govenment in a famous temple as Pujari to perform pooja. This was challenged before the Supreme Court as he is not competent. Decide the constitutional validity of the appointment, with recent cases.

பிராமணர் அல்லாத ஒருவர் புகழ் பெற்ற திருக்கோயில் ஒன்றில் வழிபாடு நடத்திட பூஜாரியாக நியமிக்கப்பட்டார். அவர் தகுதி அற்றவர் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. சமீபத்திய வழக்குகள் மூலம் இந்நியமனத்தின் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

12. A State was divided into two states without the consent of the state, by the Central Government. The State filed a writ before the Supreme Court. Decide.

ஒரு மாநிலத்தை அம்மாநிலத்தின் இசைவின்றி இரண்டு மாநிலங்களாக மத்திய அரசு பிரித்தது. இதை எதிர்த்து அம்மாநிலம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்கிறது – தீர்மானிக்க.

B.A., B.L. / B.A., LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2019

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer any **THREE** of the following not exceeding 6 pages each

ஒவ்வொரு கேள்விக்கும் ஆறு பக்கங்களுக்கு மிகாமல்
பின்வருவனவற்றுள் மூன்றினுக்கு விடையளிக்க.

1. Discuss how the Article 14 has been used to struck down arbitrary exercise of power and to ensure fairness in state action.

அரசின் செயல்பாடுகளில் தன்னிச்சை செயல்களை முறியடித்து நேர்மையை நிலை நாட்டுவதற்கு அரசமைப்பின் 14வது உறுப்பு எந்த அளவிற்கு பயன்படுத்தப்படுகிறது என்பதை விளக்குக.

2. Discuss the Right to life and liberty guaranteed by the Constitution of India.

வாழ்வுரிமைக்கும் கட்டின்மைக்கும் இந்திய அரசமைப்புச் சட்டம் காப்புறுதி அளித்திருப்பதை குறித்து விவரி.

3. Preamble to the Constitution is a key to open the minds of the makers of the Constitution. Discuss.

அரசமைப்புச் சட்டத்தின் முகப்புரை அதை உருவாக்கியவர்களின் உள்ளத்தைத் திறக்கும் திறவுகோல் – விளக்குக.

4. Explain the religious freedom provided by the Indian Constitution.

இந்திய அரசமைப்புச் சட்டம் வழங்கியுள்ள மதச் சுதந்திரங்களை விளக்குக.

5. Examine the definition of 'State' under Art.12 of the Indian constitution. In the wake of liberalisation, privatisation and globalisation.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சரத்து 12 ன் படி அரசு என்பதன் வரையரையை தாராளமயம், தனியார்மயம் மற்றும் உலகமயமாக்கலின் பொருட்டு ஆராய்க.

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கும் மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை எழுதுக.

(a) Cession of Indian Territory

இந்திய நிலப்பரப்பினை விட்டுக் கொடுத்தல்

(b) Constitutional Conventions

அரசமைப்புச் சட்ட மரபுகள்

(c) Protective discrimination

காப்புடை வேறுபாடு

(d) Enforcement of fundamental duties.

அடிப்படை கடமைகள் அமல்லாக்கம்

(e) Implementation of the directive principles

வழிகாட்டும் நெறிமுறைகளை நடைமுறைப்படுத்துதல்

(f) Doctrine of Judicial review
நீதித்துறை மறு ஆய்வு கோட்பாடு

(g) Ex-post facto law
பின்வரு செயல் சட்டம்

(h) Doctrine of severability
பிரித்தல் கோட்பாடு

(i) Modes of acquiring of citizenship
குடியுரிமையை பெறுவதற்கான வழி முறைகள்

(j) Doctrine of Legitimate Expectations
நியாயமான எதிர்பார்ப்புக் கோட்பாடு

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons

பின்வருவனவற்றுள் நான்கிற்கு, (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. A, a person of Indian origin, voluntarily acquires the citizenship of another country and in the country in which he acquired a citizenship, a civil war broke out and 'A' was forced to come back to India. Decide A's citizenship.

'அ' என்ற இந்திய பூர்விக நபர் தன் விருப்பத்தின் பேரில் வேறு ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றார். அவர் குடியுரிமை பெற்ற நாட்டில் உள்நாட்டு போர் மூண்டது. அதனால் 'அ' என்பவரை கட்டாயமாக இந்தியாவிற்கு திரும்பி அனுப்பினர். 'அ' வின் குடியுரிமையைத் தீர்மானிக்கவும்.

8. The Central Government enacted a legislation to prevent advertisements of speedy remedial drugs. Niscotic, a speedy remedial drug manufacturing company challenged the legislation enacted by the Central Government, as it violates its fundamental right - Decide.

மத்திய அரசு விரைவு தீர்வழி மருந்துகளின் விளம்பரங்களை தடை செய்யும் சட்டம் கொண்டு வந்தது. நிஸ்கோடிக் என்ற விரைவு தீர்வழி மருந்து தயாரிக்கும் நிறுமம் இந்த சட்டம் அடிப்படை உரிமைக்கு புறம்பானது என கூறி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்கிறது. தீர்மானிக்க.

9. A person injured in an accident was taken to the private hospital for treatment. The doctor refused to provide treatment without procedural formalities being completed. As a result of this the injured person died to profused bleeding. Decide.

விபத்தில் காயமடைந்த ஒருவர் சிகிச்சைக்காக தனியார் மருத்துவமனைக்கு எடுத்து செல்லப்பட்டார். சட்ட நடைமுறைகள் முழுமை பெறாததால் சிகிச்சை வழங்க மருத்துவர் மறுத்து விடுகிறார். தொடர் இரத்தப் போக்கின் காரணமாக காயமடைந்தவர் மரணிக்கிறார். தீர்மானிக்கவும்.

10. A person belonging to backward class and whose father happens to be an IPS officer applies for a Government post under the reserved quota for backward class. Can his application be entertained under the backward class quota?

பிற்படுத்தப்பட்ட வகுப்புக்காக ஒதுக்கப்பட்ட ஒரு அரசு பணி இடத்திற்கு ஒரு பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த இந்திய காவல்துறை (IPS) ருஅதிகாரியின் மகன் விண்ணப்பிக்கிறார். பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்காக ஒதுக்கப்பட்டுள்ள இடத்திற்காக இவரின் விண்ணப்பம் செல்லுபடியாகுமா?

11. Two new states were formed by the Parliament from separating a big state without the consent of the big state. Examine the validity of the net of Parliament.

ஒரு பெரிய மாநிலத்தை அப்பெரிய மாநிலத்தின் இசைவின்றி நாடாளுமன்றம் அப்பெருமாநிலத்திலிருந்து இரு புது மாநிலங்களை பிரித்து உருவாக்குகிறது. நாடாளுமன்றத்தின் இச்செயலின் செல்லுந்தன்மையை விளக்குக.

12. A State passed a law reducing the retirement age of the Government servants from 58 to 55. An affected Government employee challenges the law as violative of his fundamental right. Discuss.

ஒரு மாநில அரசு, அரசு ஊழியர்களின் பணி ஓய்வு அகவையினை 58லிருந்து 55 ஆக குறைத்து சட்டம் ஒன்றை இயற்றியது. இதனால் பாதிக்கப்பட்ட ஒரு அரசு ஊழியர் தன்னுடைய அடிப்படை உரிமை பாதிக்கப்பட்டதாகக் கூறி இச்சட்டத்தை எதிர்த்தார். தீர்மானிக்க.

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

B.A., B.L. / B.A., LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the effect of Pre-Constitution statutes and post constitution statutes on Fundamental Rights.

அரசமைப்புச் சட்டத்திற்கு முன்னால் இயற்றப்பட்ட சட்டங்கள் மற்றும் பின்னால் இயற்றப்பட்ட சட்டங்கள் இவைகளின் அடிப்படை உரிமைகள் மீதான விளைவை விளக்குக.

2. Examine the scope of the right to equality of opportunity in matters of public employment.

அரசு வேலை சம்பந்தப்பட்டவைகளில் சமவாய்ப்பு உரிமையின் நோக்கு எல்லையை ஆராய்க.

3. One of the first tasks undertaken by independent India was 'framing of a new Constitution' - Examine this statement.

சுதந்திர இந்தியாவில் எடுத்துக் கொள்ளப்பட்ட முதல் பணிகளுள் ஒன்று. 'புதிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்குவதாகும்' – இக்கூற்றினை ஆய்வு செய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. What are the tests to determine the social and educational backwardness? Cite the decisions of the Supreme Court.

சமூக மற்றும் கல்வி நிலையில் பின்தங்கிய நிலையை நிர்ணயிக்க உதவும் தேர்வு அளவுகள் யாவை? உச்ச நீதிமன்ற வழக்குகளை மேற்கோள் காட்டவும்.

5. Define 'State'. How will you decide the meaning of 'other, authorities' under Article 12?

'அரசு' என்பதனை வரையறு. அரசமைப்பின் 12 வது உறுப்பின் கீழ் 'ஏனைய அதிகார அமைப்புகள்' என்பதை எவ்வாறு பொருள் கொள்வீர்கள்?

6. Write an essay on the aims and objectives directed towards the states under Directive Principles of State Policy.

அரசு நெறி கோட்பாடுகளின் கீழ் கூறப்பட்டுள்ள அரசிற்கான இலட்சியங்கள் மற்றும் நோக்கினைப் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Constitutional Convention

அரசமைப்பு சட்ட மரபு

(b) Right to die

இறப்பதற்கான உரிமை

(c) Secularism

முகப்புரை

(d) Right to property

சொத்து குறித்த அடிப்படை உரிமை

(e) Enforcement of fundamental duties

அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுதல்

(f) Double jeopardy

ஈரிடர்

(g) Secularism

சமயச் சார்பின்மை

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Madhya Pradesh Government issued a government order stating the rules to be followed in admitting students to minority run unaided educational institutions. The management of the institutions challenged the government order or the ground that it violated their right under Article 30. Decide.

சிறுபான்மையினர் நடத்தும் அரசு நிதி உதவி பெறாத கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையில் பின்பற்ற வேண்டிய விதிகளை மத்திய பிரதேச மாநில அரசு ஒரு அரசு ஆணை வாயிலாக வெளியிட்டது. இந்த அரசு ஆணையானது உறுப்பு 30ன் கீழ் தங்களது அடிப்படை உரிமையினை மீறுவதாக உள்ளது என இந்நிறுவனங்களின் மேலாண்மை வாதிட்டது. தீர்மானிக்க.

9. A Pakistani national was gang raped by the employees of a railway company under inebriated condition. When a law student filed a public interest litigation for compensation for the victim against the railway company it was pleaded that railway company was not liable to pay compensation as the victim was not an Indian National. Decide.

ஒரு இருப்பூர்தி நிறும தொழிலாளர்கள் குடிபோதையில் ஒரு பாகிஸ்தானிய பெண்ணை வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கினார். பாதிக்கப்பட்டப் பெண் சார்பாக இழப்பீடு கோரி ஒரு சட்ட மாணவர் இருப்பூர்தி நிறுமத்தின் மீது பொதுநல வழக்கிட்டார். இருப்பூர்தி நிறுமம் வாதிடுகையில் அந்தப் பெண் இந்திய நாட்டினர் அல்லர். எனவே இழப்பீடு எதும் வழங்கத் தேவையில்லை என வாதிட்டது. தீர்மானிக்க.

10. On the basis of caste, employments were allotted to certain differently abled and women. It was challenged before the Supreme Court. Decide the constitutional validity.

சாதியின் அடிப்படையில், மாற்றுதிறனாளிகளுக்கும், பெண்களுக்கும் சில வேலை வாய்ப்புகள் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதன் செல்லும் தன்மை குறித்து உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இதன் அரசமைப்புச் சட்டச் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

B.A., B.L. / B.A., LL.B. DEGREE EXAMINATIONS, JANUARY 2021

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the principle of Natural Justice in the context of the decision laid down in Menaka Gandhi vs Union of India.

இயற்கை நீதி கோட்பாட்டினை மேனகா காந்தி எதிர் இந்திய ஒன்றியம் என்ற வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பின் மூலமாக விளக்குக.

2. Examine the contents of the Preamble of the Indian Constitution. Can preamble be altered or amended?

இந்திய அரசமைப்பு சட்ட முகப்புரையின் உட்கருத்துகளை ஆராய்க. முகப்புரையை மாற்றவோ திருத்தவோ முடியுமா?

3. "The right to enforce fundamental right itself is fundamental right under the Indian Constitution" - Elucidate.

"இந்திய அரசமைப்பு சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமையை செயல்படுத்துவதே ஒரு அடிப்படை உரிமையாக உள்ளது" – தெளிவாக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the ways of resolving the conflict between fundamental rights and directive principles.

அடிப்படை உரிமைகளுக்கும் வழிகாட்டும் நெறிமுறைகளுக்கும் இடையே உள்ள முரண்பாட்டினை தீர்ப்பதற்கன வழிகளை விளக்குக.

5. Write a note on : Doctrine of Judicial Review.

சிறு குறிப்பு வரைக : நீதி முறை மறு ஆய்வுக் கோட்பாடு.

6. Examine the scope of the protection against 'Double Jeopardy' under Article 20(2) of the Constitution. Can an accused be compelled to give his thumb impression?

அரசியலமைப்புச் சட்டத்தின் 20(2) பிரிவின்படி 'இருமுறைத் தண்டனை'–க்கு எதிரான பாதுகாப்பின் அளவை ஆராய்க. ஒரு குற்றம் சாட்டப்பட்டவரை தனது கட்டை விரல் சுவட்டின் பதிப்பை அளிக்குபடி வற்புறுத்தப்படலாமா?

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Termination of Citizenship

குடியுரிமையை முடிவுக்கு கொண்டு வருதல்

(b) Right to Education under Part III, Part IV and Part IV-A

பகுதி III, பகுதி IVமற்றும் பகுதி IV-A–யின் கீழ் கல்வி உரிமை

(c) Difference between Constitutional Law and Administrative Law

அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் நிர்வாகச் சட்டத்திற்கும் இடையேயான வேறுபாடு

(d) Classification of Fundamental Rights

அடிப்படை உரிமைகளின் வகைப்பாடு

(e) 44th Amendment, 1978.

44வது சட்டத்திருத்தம், 1978

(f) Enumerate Fundamental Duties

அடிப்படை கடமைகளை வரிசைப்படுத்திக் குறிப்பிடு.

(g) National Anthem Case

தேசிய கீத வழக்கு

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The Andhra Pradesh Government issued a Government Order stating the rules to be followed in admitting students to minority run unaided educational institutions. The management of the institutions challenged the Government Order on the ground that it violated their right under Article 30. Decide.

சிறுபான்மையினர் நடத்தும் அரசு நிதி உதவி பெறாத கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கையில் பின்பற்றிட வேண்டிய விதிகளை ஆந்திர பிரதேச அரசு ஒரு அரசு ஆணை மூலம் வெளியிட்டது. இந்த அரசு ஆணையானது சரத்து 30–இன் கீழ் அடிப்படை உரிமையினை மீறுவதாக உள்ளது என இந்நிறுவனங்களின் நிர்வாகம் வாதிட்டது. தீர்மானிக்க.

9. The Supreme Court of India passed an order of transferring a long pending case in a special court to the High Court, on the ground that speedy trial is a fundamental right under the Constitution. Decide on the constitutional validity of the order.

வழக்கை விரைவாக முடிக்க வேண்டுமென்பது அடிப்படை உரிமை என்ற காரணத்தைக் கொண்டு, இந்திய உச்ச நீதிமன்றம் சிறப்பு நீதிமன்றத்தில் வெகு காலமாக நிலுவையில் இருக்கும் வழக்கு ஒன்றை உயர் நீதிமன்றத்திற்கு மாற்றி ஆணை பிறப்பிக்கிறது. அரசமைப்புச் சட்டத்தின் படி இந்த ஆணை செல்லத்தக்கவையா என்பதை முடிவு செய்க.

10. More than 600 children, below the age of 14 years, were employed in a crackers factory. A Public Interest Litigation was filed before the Supreme Court against this. Decide the constitutional validity.

600க்கு மேற்பட்ட 14 வயதிற்கு குறைவான குழந்தைகள் ஒரு பட்டாசு தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொதுநல வழக்கு தொடரப்பட்டது. இதன் அரசமைப்புச் சட்ட செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

B.A., B.L. / B.A., LL.B. DEGREE EXAMINATIONS, FEBRUARY 2022

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. "Article 14 forbids class legislation but does not forbid classification". - Explain.

"உறுப்பு 14 இன வகுப்புச் சட்டத்தை தடுக்கிறதே தவிர வகைப்பாடு செய்வதைத் தடுக்கவில்லை" – தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்கவும்.

2. 'Solitary confinement' is a violation of Article 21. Discuss with decided cases.

'தனிமைச் சிறை' ஷரத்து 21–ஐ மீறுவதாகும் – தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்கவும்.

3. Explain the constitutional provisions relating to the formation of new states by citing recent examples.

சமீபத்திய உதாரணங்களை சுட்டிக்காட்டி புதிய மாநிலங்களை ஏற்படுத்துவதற்கான அரசியல் சட்ட விதிமுறைகளை விவாதிக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Discuss the rights of Religious and Linguistic Minorities to establish and manage educational institutions of their choice.

மதரீதியன மற்றும் மொழிரீதியான சிறுபான்மையினர் தங்களுடைய விருப்பப்படி கல்வி நிறுவனங்களை உருவாக்கி நிர்வகிக்கும் உரிமைகளைப் பற்றி விவாதிக்கவும்.

5. Write a note on : Doctrine of Judicial Review.

சிறு குறிப்பு வரைக : நீதி முறை மறு ஆய்வுக் கோட்பாடு.

6. The Constitution of India under Article 19 guarantees six fundamental freedoms. However they are not absolute. Explain.

இந்திய அரசமைப்புச் சட்டம் சரத்து 19இன் கீழ் ஆறு அடிப்படை சுதந்திரத்திற்கான உரிமைகளை வழங்குகிறது. ஆனால் இவை முழுமையானவை அல்ல – விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Enforcement of fundamental duties

அடிப்படை கடமைகளை நிறைவேற்றுல்

(b) Definition of the term 'State'

அரசு என்ற சொல்லின் வரையறை

(c) Right to Education

அடிப்படை கல்வி உரிமை

(d) Right against Exploitation

சுரண்டப்படுதலுக்கெதிரான உரிமை

(e) Doctrine of Eclipse

தற்கால ஆற்றல் மறைத்தல் கோட்பாடு

(f) Preamble

முகப்புரை

(g) Preventive detention

தடுப்புக் காவல்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' a person of Indian origin, voluntarily acquires the citizenship of another country and in the country in which he acquired a citizenship, a civil war broke out and 'A' was forced to come back to India. Decide A's citizenship.

'அ' என்ற இந்திய பூர்விக நபர் தன் விருப்பத்தின் பேரில் வேறு ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றார். அவர் குடியுரிமை பெற்ற நாட்டில் உள்நாட்டுப் போர் மூண்டது. அதனால் 'அ' என்பவரை கட்டாயமாக இந்தியாவிற்கு திருப்பி அனுப்பினர். 'அ' –வின் குடியுரிமையை தீர்மானிக்கவும்.

9. A non - brahmin was appointed by the government in a famous temple to perform pooja. This was challenged before the Supreme Court as he is not competent. Decide the constitutional validity of the appointment.

பிராமணர் அல்லாத ஒருவர் புகழ் பெற்ற கோயில் ஒன்றில் வழிபாடு செய்திட பூசாரியாக அரசால் நியமிக்கப்பட்டார் . அவர் தகுதி அற்றவர் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த நியமனத்தின் அரசமைப்பின் படியான செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

10. When some children were employed in a crackers industry at Sivakasi, a social activist filed a PIL demanding action against the crackers industry. The crackers industry pleaded the right to carry on any trade. Discuss.

சிவகாசியில் அமைந்துள்ள பட்டாசு தொழிற்சாலையில் சில சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இதை எதிர்த்து ஒரு சமூக ஆர்வலர் பட்டாசு தொழிற்சாலை மீது நடவடிக்கை எடுக்க கோரி பொது நல வழக்கு ஒன்றை தொடுத்தார். பட்டாசு தொழிற்சாலையோ தங்களுக்கு எந்த தொழிலும் செய்திட உரிமை உள்ளது என வாதிட்டது. தீர்மானிக்க.

B.A., B.L. / B.A., LL.B. DEGREE EXAMINATIONS, JUNE 2022

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. "The Constitution of India is federal in nature with unitary features" - Comment.

"ஒற்றையாட்சி தன்மை கொண்ட கூட்டாட்சி தான் இந்திய அரசமைப்புச் சட்டம்" – விமர்சிக்க

2. Discuss the rights guaranteed under Article 15 of the Indian Constitution with decided cases.

தீர்மானிக்கப்பட்ட வழக்குகளோடு இந்திய அரசமைப்பு ஷரத்து 15–ல் உறுதியளிக்கப்பட்ட உரிமைகளை விவாதிக்க.

3. Explain the safeguards against arbitrary arrest and detention under Article 22 of the Constitution of India with reference to the decision of the Supreme

Court in D.K.Basu vs. State of West Bengal.

இந்திய அரசமைப்புச் சட்டம் ஷரத்து 22–ன் கீழ் தன்னிச்சையன கைது மற்றும் காவலில் வைக்கப்படுதல் செயல்பாட்டிற்கு எதிரான பாதுகாப்புகளை டி.கே.பாசு எதிர் மேற்கு வங்காள அரசு என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத் தீர்ப்பை குறிப்பிட்டு விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the provisions for free and compulsory education under our Constitution.

நமது அரசமைப்புச் சட்டத்தின் கீழ் இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான விதிமுறைகளை விளக்கவும்.

5. The Constitution of India, under Article 19, guarantees six fundamental freedoms. However they are not absolute, Explain.

இந்திய அரசமைப்புச் சட்டம் ஷரத்து 19–ன் கீழ் ஆறு அடிப்படை சுதந்திரத்திற்கான உரிமைகளை வழங்குகின்றது. ஆனால் அவை முழுமையானவை அல்ல. விளக்குக.

6. The preamble is the key to open the minds of the makers of the Constitution. Explain.

முகப்புரை இந்திய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்கியவர்களின் உள்ளத்தை திறந்திடும் திறவுகோல். விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Writ of Mandamus

செயலுறுத்தும் நீதிப்பேராணை

(b) Definition of the term 'State'

அரசு என்ற சொல்லின் வரையறை

(c) Right to Education

அடிப்படை கல்வி உரிமை

(d) Right against Exploitation

சுரண்டப்படுதலுக்கெதிரான உரிமை

(e) Doctrine of Eclipse

தற்கால ஆற்றல் மறைத்தல் கோட்பாடு

(f) Preamble

முகப்புரை

(g) Preventive detention

தடுப்புக் காவல்

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' a person of Indian origin, voluntarily acquires the citizenship of another country and in the country in which he acquired a citizenship, a civil war broke out and 'A' was forced to come back to India. Decide A's citizenship.

'அ' என்ற இந்திய பூர்விக நபர் தன் விருப்பத்தின் பேரில் வேறு ஒரு நாட்டின் குடியுரிமையைப் பெற்றார். அவர் குடியுரிமை பெற்ற நாட்டில் உள்நாட்டுப் போர் மூண்டது. அதனால் 'அ' என்பவரை கட்டாயமாக இந்தியாவிற்கு திருப்பி அனுப்பினர். 'அ' –வின் குடியுரிமையை தீர்மானிக்கவும்.

9. A non - brahmin was appointed by the government in a famous temple to perform pooja. This was challenged before the Supreme Court as he is not competent. Decide the constitutional validity of the appointment.

பிராமணர் அல்லாத ஒருவர் புகழ் பெற்ற கோயில் ஒன்றில் வழிபாடு செய்திட பூசாரியாக அரசால் நியமிக்கப்பட்டார் . அவர் தகுதி அற்றவர் என உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. இந்த நியமனத்தின் அரசமைப்பின் படியான செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

10. When some children were employed in a crackers industry at Sivakasi, a social activist filed a PIL demanding action against the crackers industry. The crackers industry pleaded the right to carry on any trade. Discuss.

சிவகாசியில் அமைந்துள்ள பட்டாசு தொழிற்சாலையில் சில சிறுவர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டனர். இதை எதிர்த்து ஒரு சமூக ஆர்வலர் பட்டாசு தொழிற்சாலை மீது நடவடிக்கை எடுக்க கோரி பொது நல வழக்கு ஒன்றை தொடுத்தார். பட்டாசு தொழிற்சாலையோ தங்களுக்கு எந்த தொழிலும் செய்திட உரிமை உள்ளது என வாதிட்டது. தீர்மானிக்க.

B.A., B.L. / B.A., LL.B. DEGREE EXAMINATIONS, DECEMBER 2022

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What are the new dimensions of Article 21 of the Indian Constitution?
இந்திய அரசமைப்புச் சட்டம் ஷரத்து 21–ன் புதிய பரிமாணங்கள் யாவை?

2. "Equality implies equality among equals and not among unequals". Elucidate this statement with decided cases.
"சமத்துவம் என்பது சமமானவர்களுக்கிடையில் தானே தவிர சமமான நிலையில இல்லாதவர்களுக்கிடையில் இல்லை". இக்கூற்றை முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் தெளிவுபடுத்துக.

3. What do you understand by "Law" and "Law in force" under Article 13? Explain with supporting case laws.
அரசமைப்புச் சட்டத்தின் ஷரத்து 13–ன் கீழ் "சட்டம்" மற்றும் "நடைமுறையிலுள்ள சட்டம்" குறித்து தாங்கள் புரிந்து கொண்ட கருத்தை தீர்ப்பாதாரங்களுடன் விளக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. How are cultural and educational rights of the minorities protected in the Constitution?
சிறுபான்மையினரின் பண்பாடு மற்றும் கல்வி உரிமைகள் எவ்வாறு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் பாதுகாக்கப்படுகிறது?

5. Examine the interrelationship between Fundamental Rights And Directive Principles of State Policy. Refer to constitutional provisions and decided cases.
அடிப்படை உரிமைகளுக்கும் அரசு நெறிமுறைக் கொள்கைகளுக்கும் இடையே உள்ள தொடர்பை விளக்குக. உரிய அரசமைப்புச் சட்டத்தின் பிரிவுகளையும் வழக்குத் தீர்ப்புகளையும் குறிப்பிடுக.

6. Explain the salient features of the Indian Constitution.
இந்திய அரசமைப்புச் சட்டத்தின் சிறப்பியல்புகளை விவரிக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Preamble.
முகப்புரை

(b) Citizenship
குடியுரிமை

(c) Double Jeopardy

இரட்டை இடர்.

(d) Enforcement of Fundamental Duties.

அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுதல்.

(e) Article 32.

ஷரத்து 32

(f) State

அரசு

(g) Mandal Commission Case

மண்டல் கமிஷன் வழக்கு

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A regulation was passed by the managing director of the Air India stipulating that the Air hostesses will be terminated from service on attaining the age of 35 years or on marriage. This was challenged by an Air hostess. Discuss the validity of the regulation.

இந்திய விமான நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் ஒரு சீரமைப்புச் சட்டத்தை உருவாக்கினார். அதன் படி முப்பத்தைந்து வயதை அடைந்த அல்லது திருமணம் ஆன விமானப் பணிப்பெண்கள் பணியிலிருந்து விலக்கப்படுவர். இதனை எதிர்த்து ஒரு விமானப் பணிப்பெண் வழக்கு தொடர்ந்தார். இச்சட்டத்தின் செல்லும் தன்மையை முடிவு செய்க.

9. The Government of India thought of bifurcating a state into two, without fair hearing given to the affected state. Discuss its validity in the context of co-operative federalism.

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் நியாயமான ஒப்புதலை பெறாமலேயே ஒரு மாநிலத்தை இரண்டாகப் பிரிக்க இந்திய அரசு முடிவு செய்தது. இந்த செயல்பாட்டின் நிலையை கூட்டுறவு கூட்டாட்சி தத்துவத்தின் கீழ் விவரிக்கவும்.

10. The passport of "A" was cancelled by a passport officer without assigning any reason for his action under section 10(c) of the Passport Act. "A" challenged the action as unconstitutional and violative of A's fundamental rights-Decide.

பிரிவு 10 (c) கடவுச் சீட்டு சட்டப்படி கடவுச்சீட்டு அதிகாரியால் எந்த காரணமும் கூறாமல் "அ" என்பவரது கடவுச்சீட்டு நீக்கம் செய்யப்படுகின்றது. அரசமைப்பு சட்டப்பிரிவின் கீழ் தனது அடிப்படை உரிமை பாதிக்கப்படுவதால் இது செல்லாது என "அ" வழக்கிடுகிறார். தீர்மானிக்க.

B.A., B.L. / B.A., LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2023

(Five year Regular Course)

Third Year - Fifth Semester

CONSTITUTIONAL LAW - I

Time : 2 ½ hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Using the modern and traditional tests, discuss the federal nature of the Indian Constitution.

இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கூட்டாட்சியின் தன்மையை புதிய மற்றும் பழமையானச் சோதனைகளைப் பின்பற்றி விவாதிக்கவும்.

2. Examine the scope of the right to equality of opportunity in matters of public employment.

அரசு வேலை சம்பந்தப்பட்டவைகளில் சமவாய்ப்பு உரிமையின் நோக்கு எல்லையை ஆராய்க.

3. "Procedure established by law has been a subject matter of interpretation in series of cases" - Analyse.

"சட்டத்தினால் ஏற்படுத்தப்படும் நடைமுறையானது அநேக வழக்குகளில் சட்டப் பொருள் கொள்வதில் கருப்பொருளாக உள்ளது" – விமர்சிக்கவும்.

PART B - (2 X 7 = 14 marks)

Answer **TWO** of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும்
ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. How the freedom of press is implicit in the right to freedom of speech and expression?

பேச்சு மற்றும் கருத்துச் சுதந்திரத்தில் எவ்வாறு பத்திரிகைச் சுதந்திரம் உட்கிடையான உரிமையாக இருக்கின்றது?

5. Discuss the restrictions imposed on Freedom of religion.

மதச் சுதந்திரத்தின் மீதுள்ள கட்டுப்பாடுகளை விவாதிக்க.

6. What are the tests to determine the social and educational backwardness? Cite the decisions of the Supreme Court.

சமூக மற்றும் கல்வி நிலையில் பின்தங்கிய நிலையை நிர்ணயிக்க உதவும் தேர்வு அளவுகள் யாவை? உச்ச நீதிமன்ற வழக்குகளை மேற்கோள் காட்டவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on **FIVE** of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Constitutional Convention.

அரசமைப்பு சட்ட மரபு

(b) Uniform Civil Code

பொது சிவில் சட்டம்

(c) Termination of Citizenship

குடியுரிமை ரத்து

(d) Right to Strike

மறியல் உரிமை

(e) Formation of new States

புதிய மாநிலங்களை உருவாக்குதல்

(f) Doctrine of Severability

பிரிக்கத்தக்க கோட்பாடு

(g) In re Berubari Union Case.

பெருபாரி ஒன்றியத்து வழக்கு

PART D - (2 X 6 = 12 marks)

Answer **TWO** of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகைபங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A citizen who was in preventive detention under the Defence of India Rules wrote a book on scientific interest with the permission of Government, but he was denied permission to send the same out of the prison for publication. He challenged the same. Decide.

இந்திய பாதுகாப்பு விதிகளின் கீழ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஒரு இந்திய குடிமகன் அரசின் அனுமதியோடு ஒரு அறிவியல் புத்தகம் எழுதினார். பின்பு அதை வெளியீடு செய்ய சிறைக்கு வெளியே அனுப்பிட அரசு அனுமதி மறுத்தது. இதை எதிர்த்தார். தீர்வு செய்க.

9. A political party in a state called for a 'Bandh. A Public Interest Litigation was filed against this. The political party claimed that the right to call for a 'Bandh' is the fundamental right of a political party. Decide.

ஒரு மாநிலத்திலுள்ள அரசியல் கட்சி பொது வேலை நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்தது. இதை எதிர்த்து ஒரு பொது நல வழக்கு தொடரப்பட்டது. அதற்கு அக்கட்சி பொது வேலை

நிறுத்தத்திற்கு அழைப்பு விடுப்பது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அடிப்படை உரிமையாகும் என்று கூறியது. தீர்மானிக்கவும்.

10. More than 600 children below the age of 14 years were employed in a match factory at Sivakasi. A Public Interest Litigation was filed before the Supreme Court against this. Decide the constitutional validity.

600–க்கு மேற்பட்ட 14 வயதிற்குக் குறைவான குழந்தைகள் சிவகாசியில் உள்ள ஒரு தீப்பெட்டி தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இதற்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் ஒரு பொது நல வழக்கு தொடரப்பட்டது. இதன் அரசமைப்பு சட்ட செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

அரசியலமைப்புச்சட்டம் I தேர்வை எப்படி எழுத வேண்டும்? - சில முக்கிய் குறிப்புகள்

சீரமைக்கப்பட்ட புதிய முறை வினாத்தாளின்படி Part A–ல் நெடு வினாக்களும், Part B–ல் குறு வினாக்களும், Part C–ல் சிறு குறிப்புகள் எழுதுக வினாக் களும், Part D–ல் பிரச்சனை வினாக்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒதுக்கப்பட்டுள்ள மதிப்பெண்களின் விவரம்:

Part A –ல் நெடு வினாக்கள் மூன்றில், நீங்கள் இரண்டிற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 12 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 24 மதிப்பெண்கள் ஆகும். Part B –ல் உள்ள குறு வினாக்கள் மூன்றில், இரண்டிற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 7 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 14 மதிப்பெண்கள் ஆகும். Part C –ல் உள்ள சிறு குறிப்பு வரைக வினாக்கள் ஏழில், ஐந்திற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 4 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 20 மதிப்பெண்கள் ஆகும். இதையடுத்து வரும் Part D–ல் உள்ள பிரச்சனை வினாக்கள் மூன்றில், இரண்டிற்கு விடையளிக்க வேண்டும். இதற்கு தலா 6 மதிப்பெண்கள் வீதம் மொத்தம் 12 மதிப்பெண்கள்.

ஆக மொத்தம் 70 மதிப்பெண்களுக்கு மட்டுமே தேர்வு. 2 1/2 மணி நேரத்திற்குள் விடையளிக்க வேண்டும்.

மேலும் முந்தைய வினாத்தாளின்படி இத்தனை பக்கங்களில் விடையளிக்க வேண்டும் என்ற முறை நீக்கப்பட்டு, தற்போது இத்தனை சொற்களில் விடையளிக்க வேண்டும் என்பது புதிதாக கொண்டு வரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, Part A –ல் வரும் நெடு வினாக்களுக்கான விடையை 500 சொற்களுக்குள்ளும், Part B –ல் வரும் குறு வினாக்களுக்கான விடையை 300 சொற்களுக்குள்ளும் எழுத வேண்டும். எனவே இவ்வரம்பை மீறி உங்கள் விடை செல்லாதிருக்கும் படி பார்த்துக் கொள்ளவும்.

வினாத்தாளை வாங்கியவுடன் என்ன செய்ய வேண்டும்?

தேர்வில் வினாத்தாள் கையில் கொடுக்கப்பட்டவுடன், வினாத்தாளை ஒரு முறை நன்கு படித்துக் கொள்ளவும். மறக்காமல் ஆங்கில மொழி பெயர்ப்பு வினாக் களையும் படித்துக் கொள்ளவும். ஏனெனில் ஒரே ஆங்கில சொல்லுக்கு தமிழில் பல சொல்வடிவங்கள் இருப்பதுண்டு. ஆங்கில வினாவை படிக்கும் பொழுது, அதன் சரியான சொல்வடிவத்தை நாம் இனம் கண்டு கொள்ளலாம். பின்னர் நன்கு விடை தெரிந்த வினாக்களை தேர்வு செய்து கொண்டு அதற்கு விடையளிக்க ஆரம்பிக் கவும். காலத்தை கணக்கில் கொண்டு அதற்கொப்ப விடையை எழுதவும்.

நெடு மற்றும் குறு வினாவிற்கு விடையளிக்கும் விதம்:

ஒரு நெடு வினாவிற்கு விடையளிக்கும் பொழுது முதலில் அந்த வினா குறித்த ஒரு சுருக்கமான முன்னுரை அல்லது அறிமுகம் (Introduction) கொடுக்கவும். பின்னர், அதற்குரிய சட்டப்பிரிவுகள் (Legal Provisions) ஏதேனும் இருப்பின், அவற்றின் விளக்கத்தைக் குறிப்பிடவும். பின்னர், எடுத்துக்காட்டுகள் (Illustrations) ஏதேனும் இருப்பின் அவற்றை அடுத்த பத்தியில் குறிப்பிடலாம். அடுத்து, அது குறித்த முக்கியமான வழக்குகள் (Important Case Laws) இரண்டு

அல்லது மூன்றை குறிப்பிடவும். இதற்கென இந்நூல் முழுவதும் முக்கிய வழக்குகளை தந்துள்ளேன்.

இதற்கடுத்து, வினாவில் ஆய்க (Examine), விவாதிக்க (Discuss), விளக்குக (Explain), திறனாய்வு செய்க (Elucidate) என்று கேட்கப்பட்டிருந்தால், சம்பந்தப்பட்ட அதே தலைப்பின் கீழ் மேலும் சில கருத்துகளை குறிப்பிடலாம்.

நிறைவாக ஒரு சிறிய முடிவுரை (Conclusion) கொடுக்கவும். அது உங்கள் சொந்தக் கருத்தாகவும் இருக்கலாம் அல்லது பரிந்துரையாகவும் இருக்கலாம். தேவைப்படும் இடங்களில் சமீப கால சட்டக்கருத்துக்களையும் குறிப்பிடலாம்.

சிறு குறிப்பு எழுதுக வினாக்களுக்கு விடையளிக்கும் விதம்:

இவற்றுக்கும் மேற்கண்ட முறையிலேயே விடையளிக்கலாம். ஆனால் விரி வான விடை வேண்டியதில்லை. பொதுவாக தேர்வில் எத்தனை வினாக்களுக்கு விடையளிக்க கூறப்பட்டுள் ளதோ, அத்தனை வினாக்களுக்கும் விடையளித்து விட வேண்டும். எந்த வினாவையும் விட்டுவிடக் கூடாது. அதிலும் குறிப்பாக இந்த சிறு குறிப்பு எழுதுக வினாவை விட்டுவிடலாகாது. ஏனெனில் மதிப்பெண்களை கணிசமான அளவில் கூட்டித் தருவது, இவ்வகை வினாக்களே.

பிரச்சனை வினாக்களுக்கு விடையளிக்கும் விதம்:

முதலில் பிரச்சனை வினாக்களை நன்கு ஆழ்ந்து படித்துக் கொள்ளவும். இதையடுத்து பிரச்சனையில் தீர்க்க வேண்டிய சிக்கலை ஒரு வினா வடிவில் எழுதிக் கொண்டு, அதற்கு தீர்வு கூறும் முகமாக விடை எழுதுங்கள். உங்கள் தீர்வுக்கு ஆதரவாக நிற்கும் வழக்கின் தீர்ப்புகளை மேற்கோளாக சுட்டிக்காட்டுங்கள். இறுதியில் "தீர்வு" என்று தலைப்பிட்டு, அதன் கீழ் உங்கள் தீர்வை எழுதவும். பிரச்சனை வினாக்களை எக்காரணம் கொண்டும் விடையளிக்காமல் விட்டுவிட வேண்டாம்.

என்ன செய்யக்கூடாது?

விடையெழுதும் போது வினாவிற்குரிய முக்கிய வழக்கின் பெயர் நினைவிற்கு வரவில்லை என்றால், உடனே கற்பனையாக ஏதோ ஒரு பெயரை இட்டு எழுதுவதையோ, அதுபோல் சட்டப் பிரிவுகளை தவறாக சுட்டிக்காட்டுவதையோ செய்தல் கூடாது. மாறாக, 'ஒரு முக்கிய வழக்கில்' என்று குறிப்பிட்டு எழுதலாம் அல்லது 'தொடர்புடைய சட்டப்பிரிவில்' என்று குறிப்பிட்டு அப்பிரிவின் சாரத்தை சுட்டிக்காட்டலாம். வேறு வகையில் சொன்னால், விடைத்தாளில் திரித்துக்கூறுதல் அல்லது பொய்யான விவரங்களை அளித்தலை கண்டிப்பாக தவிர்த்தல் வேண்டும்.

விடைகளை எழுதிய பின் என்ன செய்ய வேண்டும்?

விடைகளை எழுதிய பின், ஒருமுறை உங்கள் விடைத்தாளை புரட்டிப்பாருங்கள். வினா எண்ணிற்கான விடைதானா என்பதை சரிபாருங்கள். பக்கத்திற்கான எண் இடுங்கள். முடிவாக, "எவ்வளவு படித்தோம்" என்பதை விட, "எப்படி தேர்வு எழுதினோம்" (Way of Presentation) என்பதுதான் முக்கியம். மேற்கண்டவையே வெற்றியின் திறவுகோல். எனவே நம்பிக்கையுடன் படியுங்கள். நன்றாக தேர்வெழுதுங்கள். பிறகென்ன? வெற்றி உங்கள் கையில். வாழ்த்துகளுடன்!

- பி.ஆர்.ஜெ.

அரசியலமைப்புச்சட்டம் I தேர்வில் வினாக்கள் அடிக்கடி கேட்கப்படும் மற்றும் கேட்கப்பட வாய்ப்பு அதிகமுள்ள பாடப்பகுதிகள் - ஒரு கண்ணோட்டம் [Tips for Examination]

அரசியலமைப்புச் சட்டம் படிப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும் மிக எளிமையான பாடமாகும். அரசியலமைப்பு, அரசியலமைப்புச்சட்டம் ஆகிய இரண்டு பதங்களுக்கும் அறிஞர் பெருமக்கள் தந்துள்ள வரையறைகளை நன்கு படித்து வைத்துக் கொள்ளவும். அவற்றை எந்த வினாவிற்கும் விடையளிக்கும் போது முன்னுரையில் ஒரு மேற்கோளாகக் காட்டி எழுதினால், உங்கள் விடைக்கும் அணி சேர்க்கும்.

அடுத்து அரசியலமைப்பின் முக்கிய வகைப்பாடுகளிலிருந்து சிறு குறிப்பு எழுதுக வினாக்களை எதிர் நோக்கலாம். மேலும் இந்திய அரசியலமைப்பின் தன்மையையும், அதன் சிறப்பம்சங்களையும் முக்கியமாகப் படித்துக் கொள்ள வேண்டும். ஒற்றையாட்சி, கூட்டாட்சி, கூட்டாட்சி போல்வு எனும் தலைப்புகளை ஒட்டி நெடுவினா ஒன்றை நிச்சயம் எதிர்பார்க்கலாம். பாராளுமன்ற இறையாண்மை, அரசியலமைப்பின் மேலாண்மை, அதிகாரப்பிரிவினைக் கோட்பாடு ஆகியவற்றை ஒரு முறை படித்து நினைவில் இருத்திக் கொள்ளவும். நீதிமுறை மறுஆய்வு கோட்பாட்டிலிருந்து நெடு வினா அல்லது சிறு குறிப்பு வினா கேட்கப்படலாம். அதுபோல் அரசியலமைப்புகளுக்கு பொருந்தக் கூடிய தனிச் சிறப்பு பொருள் விளக்க விதிகள் எனும் பகுதியிலிருந்து ஒரு நெடுவினா கேட்கப்பட வாய்ப்புள்ளது.

இதுபோக, முகப்புரை, இந்திய எல்லையின் அளாவுகை மற்றும் பரப்பு, குடியுரிமை, அடிப்படை உரிமைகள், 'அரசு' என்பதின் வரையறை, அடிப்படை உரிமைகளை மீறல், அதன் கீழான நான்கு கோட்பாடுகள் [Doctrine of Eclipse, Doctrine of Severability, Doctrine of ultra vires, Doctrine of Waiver] ஆகிய இத்தலைப்புகளிலிருந்து வினாக்களை அவசியம் எதிர்நோக்கலாம்.

இதற்கடுத்து வரும் தலைப்புகள் யாவுமே மிக முக்கியமானவையாகும். காரணம், அவை யாவும் அடிப்படை உரிமைகள் மையமாகக் கொண்டவையாகும். அதாவது, சமத்துவம், சமத்துவ உரிமை, சுதந்திர உரிமைகள், பின்நோக்கி சென்ற காலத்தையும் உட்படுத்துகிற சட்டம் [Ex post facto law], இரட்டை இடர் [Double Jeopardy], தன்னைத்தானே குற்றஞ்சாட்டல் [Self-incrimination], வாழ்க்கை மற்றும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கான பாதுகாப்பு [Protection of Life and Personal Liberty], கலாச்சார மற்றும் கல்வியியல் உரிமைகள் [Cultural and Educational Rights], அரசியலமைப்புரீதியாக தீர்வழிகள் [Constitutional Remedies] ஆகியன ஆழ்ந்து படிக்க வேண்டியவையாகும்.

தொடர்ந்து வரும் அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் [Directive Principles of State Policy] என்ற தலைப்பிலிருந்து வினாக்களை எதிர்பார்க்கலாம். அடிப்படை கடமைகள் [Fundamental Duties] என்ற தலைப்பிலிருந்து சிறு குறிப்பு எழுதுக வினா வரலாம். மேற் சென்ற தலைப்புகள் தொட்டு பிரச்சனை வினாக்களும் கேட்கப்படும். முந்தைய வழக்குகளை பொருத்தமான இடங்களில் சுட்டிக்காட்டுக. வாழ்த்துகளுடன் - **ஆசிரியர்.**

நமது புதிய நாடாளுமன்றக் காட்சிகள்

புது தில்லியில் ராய்சினா ஹில் (Raisina Hill) என்ற இடத்திற்கு அருகே நமது நாட்டிற்கான நிர்வாகப் பணிகளுக்குரிய கட்டிடங்கள் அடங்கிய பகுதி அமைந்துள்ளது. இந்த பகுதியில்தான் குடியரசு தலைவர் மாளிகை (இராஷ்டிரபதி பவன்), குடியரசு துணைத்தலைவர் மாளிகை, நாடாளுமன்றம், சாஸ்திரி பவன், இந்தியா கேட், தேசிய அருங்காட்சியகம் உள்ளிட்ட பல்வேறு மைய அரசு கட்டுமானங்கள் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் 1920–ஆம் ஆண்டு வாக்கில் தொடங்கப்பட்டு நிர்மாணிக்கப்பட்டன. இந்த பகுதிதான் 'மைய விஸ்டா' (Central Vista) என்றழைக்கப்படுகிறது.

3.2 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த மைய விஸ்டா என்ற பெயர் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் King's Way (இராஜ பாட்டை) என்றழைக்கப்பட்டது. இந்தி மொழியில் Rajpath (ராஜ்பாத்) என்றழைக்கப்படுகிறது.

காலத்தின் போக்கில் வலுவிழந்த மேற்படி அரசு கட்டிடங்களை புதுப்பிக்க வேண்டும், புதிதாக கட்ட வேண்டும், வலுவிழந்த கட்டிடங்களை இடிக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு **'மைய விஸ்டா மறு வளர்ச்சி திட்டம்' (Central Vista Free Development Project)** 2020–ம் ஆண்டில் தொடங்கப் பட்டது.

அத்திட்டத்தின் ஒரு பகுதியாக பழைய நாடாளுமன்ற கட்டிடத்திற்கு எதிர்த் திசையில் புதிய வடிவமைப்பில் புதிதாக நாடாளுமன்ற கட்டிடம் ஒன்று கட்ட ஆரம்பிக் கப்பட்டு அது 2023–ம் ஆண்டு மே மாதம் முடிக்கப்பட்டது. அதன் திறப்பு விழாவை நமது பாரத பிரதமர் மாட்சிமைதங்கிய திரு நரேந்திர மோடி அவர்கள் 28.05.2023–ஆம் தேதியன்று திறந்து வைத்தார்கள்.

முக்கோண வடிவில் அமைந்திருக்கும் இந்த புதிய நாடாளுமன்றக்கட்டடம் 150 ஆண்டுகளுக்கும் மேலான ஆயுட்காலம் கொண்டதாக இருக்கும் என்று இதைக் கட்டி முடித்த கட்டடக்கலைஞர் பிமல் பட்டேல் கூறுகிறார். மேலும் இது பூகம்ப பாதிப்பினை தாங்கக்கூடியதாகவும் கட்டப்பட்டுள்ளது.

மக்களவை மற்றும் மாநிலங்களவை கூட்டங்களுக்காக ஏற்கனவே இருந்ததை விட அதிகமான உறுப்பினர்களுக்கு இடமளிக்கும் வகையில் அதிக இருக்கைகளைக் கொண்டதாக இப்புதிய நாடாளுமன்றம் அமைந்துள்ளது. ஏனெனில் இந்தியாவின் வளர்ந்து வரும் மக்கள்தொகைக்கு இணக்கமாக அதனை பிரதிநிதித் துவப்படுத்தும் வகையில் மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை கூடுவதைக் கருத்தில் கொண்டு இது வடிவமைக்கப்பட்டுள்ளது.



முக்கோண வடிவமான புதிய நாடாளுமன்றம் மற்றும் அதன் எதிர்த்திசையில் அமைந்துள்ள வட்ட வடிவமான புதிய நாடாளுமன்றம் அமைந்துள்ள புது தில்லியின் 'மைய விஸ்டா' (Central Vista) பகுதி



முக்கோண வடிவ புதிய நாடாளுமன்றத்தின் முகப்புத் தோற்றம்

புதிய வளாகத்தில் மக்களவையில் 888 இருக்கைகளும், மாநிலங்களவை அரங்கில் 384 இருக்கைகளும் அமைந்துள்ளன.

மேலும் இரு அவைகளும் இணைந்த கூட்டத்தை நடத்துவதற்கும் இந்த புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. இது போக மீதமுள்ள கட்டடத்தில் அமைச்சர்களின் அலுவலகங்கள் மற்றும் நிலைக்குழுக்களின் அறைகள் கொண்ட 4 தளங்கள் இருக்கும்.

இந்த புதிய நாடாளுமன்றக்கட்டடம் 22900 மீ (விட்டம் 170. 7 மீ) அளவுடைய தாக இருக்கும். இது முந்தைய நாடாளுமன்றத்தின் வட்ட கட்டடத்தை (21700 மீ) விட 1200 மீ குறைவாக இருக்கும்.

இதன் திறந்த வெளி முற்றப் பகுதியில் ஆலமரம் ஒன்றிற்கான பரந்த 830 மீ இடை வெளிப்பகுதி காணப்படும். 1.5 ஏக்கர் பரப்பளவானது இதன் திறந்த வெளிப்பகுதி உட்பட, ஒவ்வொரு அரை ஏக்கருக்கும் 3 பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டுள்ளது.



நமது தேசிய மரமான ஆலமரத்தை மையமாக வைத்து கட்டப்பட்ட நாடாளுமன்றத்தின் திறந்தவெளி மைய முற்றப்பகுதி A (Open Central Courtyard)



மக்களவையின் (லோக்சபா) உட்புறம் நமது தேசியப்பறவையான மயில் தனது தோகை விரித்திருத்திருப்பதைப் போன்று காட்சியளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இது பழைய நாடாளுமன்றத்தின் மக்களவை அரங்கைக்காட்டிலும் மும்மடங்கு பெரியதாகும். இதில் 888 இருக்கைகள் அமைந்துள்ளன.

(The Lok Sabha, based on the theme of the national bird 'peacock', will be three times bigger with 888 seats.)





மாநிலங்களவையின் (இராஜ்யசபா) உட்புறம் நமது தேசிய மலரான தாமரை விரிந்திருப்பதைப் போன்று காட்சியளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் 384 இருக்கைகள் அமைந்துள்ளன.
(The Rajya Sabha hall, based on the theme of our national flower 'lotus', has a capacity to seat 384 members)



பழைய நாடாளுமன்றம் புதிய நாடாளுமன்றம்

படங்களுக்கு நன்றி : www.centralvista.gov.in & www.indiatoday.in

எமது சட்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்

சேலம்

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்,

69/42–சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி,
சேலம் 636 007.
தொலைப்பேசி : 0427–2403402; செல்லிடபேசி : 9943025132
இணையதளத்தில் அஞ்சல் செலவு இலவசத்துடன் விரைவாக வாங்க :
www.shripathirajanpublishers.com

சென்னை

சென்னை லா ஹவுஸ்,

223, YMCA பில்டிங்ஸ், பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை 600 001.
தொலைப்பேசி: 044 – 25390210; செல்லிடபேசி : 9940286311.

சி.சீதாராமன் அண்டு கோ. பி.லிட்.,

37, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை 600 014.

பானுஷா லா புக் சென்டர்,

9, பிரான்சிஸ் ஜோசப் தெரு, சென்னை 600 001.
தொலைப்பேசி: 044 – 25360679.

மதுரை

நேஷனல் லா புக் டிரேடர்ஸ்,

இராஜா முத்தையா மன்றம் சாலை,
டாக்டர் தங்கராஜ் சாலை முதல் குறுக்குத்தெரு, வினாயகா நகர்,
ஈகோ பார்க் பின்புற நுழைவாயில் எதிரில், மதுரை 625 020.
செல் பேசி : 9344017798, 9842117798
கிளை : மதுரை உயர் நீதிமன்ற அமர்வாயம் அருகில்,
பெட்ரோல் பங்க் எதிரில், உலகனேரி, மதுரை 625107,

ஓ.பி.ராஜன் லா புக் சென்டர்,

பிளாட் நிர். 540, கே.கே.நகர், மகரிஷி வித்யாமந்திர் பள்ளி அருகில்,
மதுரை 625 020.
செல்லிடபேசி : 9842873176

சுக்லா லா ஹவுஸ்,
12/5, டாக்டர் எஸ்.வி.கே. தங்கராஜ்ரோடு,
அரசு சட்டக் கல்லூரி அருகில், விநாயகா நகர், மதுரை 625 020.
தொலைப்பேசி: 0452 – 2538170 – செல்லிட பேசி : 94430 53817.

கோயம்புத்தூர்

அங்கமுத்து லா புக் ஷாப்,
61, அரசு கலைக்கல்லூரி சாலை, புதிய நீதிமன்ற கட்டடம் எதிரில்,
கோயம்புத்தூர் –18. பேசி: 0422 – 2301136
செல்லிட பேசி: 9443383047
மின்னஞ்சல் : angamuthulawbookshop@gmail.com

திருப்பூர்

அங்கமுத்து லா புக் ஷாப்,
ராகவி காம்ளெக்ஸ், பல்லடம் சாலை, திருப்பூர் 641605
பேசி: 0421 – 4342108 – செல்லிட பேசி: 9003375105

திருச்சி

பி.ஆர்.லா புக்ஸ் சென்டர்,
9, இப்ராஹீம் நகர், ஈவேரா கல்லூரி மற்றும் அரசு சட்டக் கல்லூரி அருகில்,
அண்ணா ஸ்டேடியம் மெயின் ரோடு, காஜா மலை, திருச்சி 620023.
செல்லிட பேசி: 98421–89564.

விழுப்புரம்

புக் பார்க்,
171, ஆர்.கே.எஸ். காம்ளெக்ஸ், நேருஜி சாலை,
காந்தி சிலை அருகில், விழுப்புரம் 605602.
செல்லிட பேசி : 9944412800

திருநெல்வேலி

எம்எஸ்ஆர் லா புக் சென்டர்,
அரசு சட்டக்கல்லூரி எதிரில்,
ரஹாமத் நகர், திருச்செந்தூர் ரோடு, திருநெல்வேலி 627 011.
செல்பேசி : 9443284358

மூத்த வழக்குரைஞர் திரு. பி.ஆர்.ஜெ. எழுதிய பிற நூல்கள்

1.	இந்திய தண்டனைச் சட்டம் (திருத்திய பதினான்காம் பதிப்பு)	570–00
2.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – I (திருத்திய பத்தாம் பதிப்பு)	300–00
3.	குறித்தவகை நிவாரணச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	220–00
4.	இந்திய ஒப்பந்தச் சட்டம் – II (பத்தாம் பதிப்பு)	240–00
5.	நுகர்வோர் உரிமைகளும் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டமும்	300–00
6.	மொழி பெயர்ப்புக்குப் பயனாகும் முக்கிய சட்டத் தமிழ் பதங்களும் விளக்கமும்	185–00
7.	அளவையியல் (அல்லது) தருக்கவியல் (Logic)	155–00
8.	சட்ட மொழியும் சட்டம் வரைதலும்	100–00
9.	சொத்துரிமை மாற்றுச் சட்டம் (வசதியுரிமைச் சட்டத்துடன்)	500–00
10.	சட்டப்பொருள் விளக்கம் (ஏழாம் பதிப்பு)	430–00
11.	வங்கியியல் சட்டம் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	230–00
12.	மாற்று முறையாவணங்கள் சட்டம்	250–00
13.	நிருவாகமுறைச் சட்டம் (ஐந்தாம் பதிப்பு)	395–00
14.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் I (நான்காம் பதிப்பு)	475–00
15.	இந்திய அரசியலமைப்புச் சட்டம் II (நான்காம் பதிப்பு)	380–00
16.	இந்திய சாட்சிய சட்டம் (பத்தாம் பதிப்பு)	460–00
17.	நிறுவனச் சட்டம் (பதினொன்றாம் பதிப்பு)	500–00
18.	இந்திய குடும்பச் சட்டம் I (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	430–00
19.	இந்திய குடும்பச் சட்டம் II (திருத்திய எட்டாம் பதிப்பு)	370–00
20.	பொது நாட்டிடைச் சட்டம் (திருத்திய ஒன்பதாம் பதிப்பு)	320–00
21.	இசைவுத் தீர்ப்பு, சமரசம் மற்றும் மாற்றுவழியில் தகராறுகள் தீர்வு முறை	320–00
22.	உரிமையியல் நடைமுறைச் சட்டம் (பதிமூன்றாம் பதிப்பு)	360–00
23.	குற்றவியல் நடைமுறைச் சட்டம் (திருத்திய பதினொன்றாம் பதிப்பு)	495–00
24.	குற்றவியல் தத்துவம் மற்றும் தண்டனையியல் (திருத்திய எட்டாம் பதிப்பு)	410–00
25.	வாதுரைச் சட்டம் (மாதிரி வரைவுகளுடன்)	165–00
26.	பத்திரமெழுதும் முறையும் மாதிரிப் பத்திரங்களும் (ஒன்பதாம் பதிப்பு)	275–00
27.	நீதிமன்ற விதிகள் (எட்டாம் பதிப்பு)	120–00
28.	Rules of Court	90–00
29.	பொது வகையங்கள் விளக்கச் சட்டம்	100–00
30.	நீதிமன்ற ஆணையர்கள் மற்றும் சொத்துப் பேணுநர்கள் தொடர்பான சட்டம்	165–00
31.	குடியுரிமை தொடர்பான சட்டங்கள்	100–00
32.	வணிக நீதிமன்றங்கள் சட்டம் (திருத்திய இரண்டாம் பதிப்பு)	280–00
33.	ஆதார் சட்டம்	210–00
34.	ஊனங்கள் கொண்ட நபர்களின் உரிமைகள் சட்டம் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்) (இரண்டாம் பதிப்பு)	275–00
35.	மனித உரிமைகளும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமும் (தமிழக அரசு பரிசு பெற்ற நூல்)	240–00
36.	தமிழ்நாடு கட்டட வாடகைச் சட்டம் (இரண்டாம் பதிப்பு)	160–00

எமது சட்ட நூல்களினால்
பயன் பல பெற்று
தொடர்ந்து ஆதரவளித்து வரும்
அனைத்து அன்பு உள்ளங்களுக்கும்
எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகள்!

சட்ட நூல்கள் முதற்கொண்டு
பல்வேறு அரசுப் பதவிகளுக்கான தேர்வு நூல்கள் வரை
இணையதளத்தின் வாயிலாக வாங்க

www.shripathirajanpublishers.com

என்ற எங்கள் வலைதளத்திற்கு
வருகை தருக!

என்றும் அன்புடன்...

– ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்